மோட்சப் பயணம்

ஜாண் பனியன்

மோட்சப் பயணம்

ஜாண் பனியன்

சுவிசேஷ ஊழிய நூல் நிலையம்
95A, வேப்பேரி நெடுஞ்சாலை, சென்னை - 600 007
Tel. 25323231, 26420173, 26420743
E-mail: elshq@elsindia.org, Website: www.elsindia.org
Online Store: www.christianbooksindia.com

Pub. No. 309 M - TAMIL

First ELS Edition : November 1993
Reprint : December 2018

PILGRIM'S PROGRESS

Compiled by E.L.S. Publication Dept.
Written by H.B. Raj Kumar

©EVANGELICAL LITERATURE SERVICE 1993

Printed at

Meipporul Achakam
#278, Konnur High Road, Ayanavaram, Chennai - 23
Ph : 044 - 26741526

முகவுரை

இங்கிலாந்தை இரண்டாம் ஜேம்ஸ் மன்னர் ஆண்டு வந்தபோது ஜாண் பனியன் (1628-1688) தன் விசுவாசத்திற்காக கைது செய்யப்பட்டு 1660ஆம் ஆண்டு பெட்போர்டு சிறையில் அடைக்கப்பட்டார். சுமார் பன்னிரண்டு ஆண்டுகள் அச்சிறைச்சாலையில் இருந்தபோது தன்னுடைய நேரத்தை வேத ஆராய்ச்சிக்காய் செலவிட ஆரம்பித்தார். மேலும் தேவாவியால் ஏவப்பட்டு, தனது குடும்பத்தையும், சபையையும் கவனத்தில் கொண்டவராய் "மோட்சப் பயணம்" என்னும் நூலை எழுதினார்.

ஜாண் பனியன் விடுதலைப்பெற்று வந்தபோது, இவர் எழுதிய காகித பிரதிகளை அச்சிட்டு வெளியிட, சிலர் இவரை உற்சாகப் படுத்தினார்கள். ஆனால் வேறு சிலரோ இதனால் என்ன பயன் இருக்கப் போகிறதென்றும் அச்சிட அவசியமில்லை என்றும் கூறினர்.

ஆனால் இன்று உலகம் முழுவதும் வேதாகமத்திற்கு அடுத்த புத்தகமாக, இப்புத்தகம் மதிக்கப்பட்டும் வாசிக்கப்பட்டும் வருகிறது. இந்தியாவிலும் மற்றும் உலகம் முழுவதும் அநேக மொழிகளில் மொழிபெயர்க்கப்பட்டு வெளியிடப்பட்டுள்ளது.

இந்தத் தமிழ் மொழிபெயர்ப்பு இரண்டு பாகங்களை உள்ளடக்கியுள்ளது. முதல் பாகம் கிறிஸ்தியானுடைய பயணத்தைக் குறித்தும், இரண்டாம் பாகம் கிறிஸ்தியானுடைய மனைவியாகிய கிறிஸ்தீனாள், அவள் குமாரர், நண்பர்கள் ஆகியோர் பயணத்தைக் குறித்தும் விவரிக்கிறது.

—பதிப்பாளர்

பொருளடக்கம்

முதலாம் பாகம்

1. பயணம் புறப்பட ஆர்வம் ... 1
2. நற்செய்தியாளரோடு முதலாம் சந்திப்பு ... 2
3. குறுகிய வாசல் நோக்கிப் பயணம் ... 4
4. இருவரும் உரையாடுதல் ... 7
5. நம்பிக்கையிழப்பு என்ற உளையில் பட்ட துன்பம் ... 9
6. உலகஞானியுடன் சந்திப்பு ... 12
7. நற்செய்தியாளரோடு இரண்டாவது சந்திப்பு ... 16
8. குறுகிய வாசல் கோட்டையை அடைதல் ... 23
9. விளக்கம் கூறுபவரின் வீட்டை அடைதல் ... 26
10. சிலுவையைத் தரிசித்தல் ... 37
11. பயணி கடினமலையை அடைதல் ... 41
12. பயணி சுருளை இழத்தல் ... 43
13. பயணி அலங்கார மாளிகையை அடைதல்... 45
14. அப்பொல்லியோனுடன் சந்திப்பு ... 59
15. கிறிஸ்தியான் மரண இருளின் பள்ளத்தாக்கைக் கடத்தல் ... 65
16. போப்பு இராட்சதனோடு சந்திப்பு ... 70
17. உண்மையானவனைச் சந்தித்தல் ... 71
18. வாயாடியைச் சந்தித்தல் ... 82
19. நற்செய்தியாளரோடு மூன்றாம் சந்திப்பு ... 97
20. மாயாபுரி பட்டணத்தில் பயணிகள் ... 100
21. உலகபக்தனைச் சந்தித்தல் ... 111

22. உலகபக்தன் நண்பர்களோடு சந்திப்பு ... 115
23. பயணிகள் செல்வமலைக்கு வந்து சேருதல் ... 123
24. பயணிகள் ஜீவநதிக்கு அருகே வருதல் ... 127
25. பயணிகள் பக்கத்துப் புல்வெளியில் செல்லுதல் ... 128
26. கடும்பயங்கர அரக்கனின் பிடியில் சிக்குதல் ... 131
27. மகிழ்ச்சி மலையை வந்தடைதல் ... 139
28. பயணிகள் புத்தியீனனைச் சந்தித்தல் ... 145
29. முகத்துதி செய்வோனைச் சந்தித்தல் ... 157
30. நாத்திகனைச் சந்தித்தல் ... 161
31. உறக்க பூமியில் பயணிகள் ... 163
32. புத்தியீனனை மறுபடியும் சந்தித்தல் ... 174
33. குறுகியகாலம் என்பவரைப்பற்றிய செய்தி ... 185
34. ஆனந்த நாட்டில் பயணிகள் ... 189
35. பயணிகள் ஆற்றைக் கடந்து செல்லுதல் ... 192
36. பயணிகள் மோட்ச வாயிலை அடைதல் ... 195
37. பயணிகள் மோட்சம் போய் சேர்ந்தார்கள்! ... 199
38. புத்தியீனனின் அழிவு ... 200

இரண்டாம் பாகம்

1. விவேகியின் வருகை ... 203
2. கிறிஸ்தீனாளின் கனவு ... 206
3. உள்ளான கிரியையோடு சந்திப்பு ... 208
4. பயணம் புறப்படுவதற்கான ஆயத்தம் ... 210
5. கிறிஸ்தீனாள் பயணம் புறப்பட்டாள் ... 216

6. பயணிகள் நம்பிக்கையிழப்பு என்ற உளைக்கு வந்துசேருதல் ... 219
7. குறுகிய வாசலை நெருங்கிச் சேருதல் ... 220
8. குறுகிய வழியில் பயணம் ... 227
9. விளக்கம் கூறுபவரின் வீடு ... 232
10. அலங்கார மாளிகையைச் சென்றடைதல் ... 246
11. பயணிகள் கடினமலைக்கு வந்துசேருதல் ... 253
12. அலங்கார மாளிகையில் பயணிகள் ... 260
13. அலங்கார மாளிகையைவிட்டுப் புறப்படுதல் ... 280
14. தாழ்மை பள்ளத்தாக்கில் பயணிகள் ... 282
15. மரண இருளின் பள்ளத்தாக்கில் பயணிகள் ... 287
16. சங்கார அரக்கனைச் சந்தித்தல் ... 292
17. நேர்மையானவனைச் சந்தித்தல் ... 295
18. சுயவிருப்பம் என்பவனைப்பற்றிய செய்திகள் ... 306
19. காயுவின் விடுதியை அடைதல் ... 311
20. பயணிகள் காயுவின் விடுதியைவிட்டுச் செல்லுதல் ... 326
21. முன்பு பயணம் சென்றவர்களைப்பற்றிய உரையாடல் ... 328
22. மாயாபுரியைச் சேர்ந்து மினாசோனின் வீட்டை அடைதல் ... 330
23. வலுசர்ப்பம் அளித்த தொல்லை! ... 336
24. மாயாபுரியைவிட்டுப் பயணம் செல்லுதல் ... 337
25. பயணிகள் தேவநதியின் அருகில் வந்து சேருதல் ... 338

26. வீண்நம்பிக்கை என்ற அரக்கனோடு போரிடுதல் ... 340
27. மகிழ்ச்சி மலையில் பயணிகள் ... 343
28. பயணிகள் சத்தியவீரனைச் சந்தித்தல் ... 351
29. பயணிகள் உறக்க பூமியைச் சென்றடைதல் ... 359
30. பயணிகள் ஆனந்த நாடு வந்துசேருதல் ... 369
31. கிறிஸ்தீனாள் மோட்சம் சேருதல் ... 370
32. மற்றப் பயணிகளின் முடிவு ... 374

மோட்சப் பயணம்

முதலாம் பாகம்

1. பயணம் புறப்பட ஆர்வம்

இந்தப் பரந்த உலகத்தைச் சுற்றிவரும்போது ஒரு முறை ஒரு மலையடிவாரத்தில் தங்கினேன். அங்கே ஒரு குகை இருந்தது. அதனுள் சென்று படுத்து உறங்கினேன். அப்போது மகிமையான கனவு ஒன்றைக் கண்டேன். இதோ அந்தக் கனவை அப்படியே கூறுகிறேன்.

கந்தை ஆடை அணிந்த ஒரு மனிதன் தனது வீட்டுக்கு முன்னால் எதிர்த்திசையைப் பார்த்தபடியே நிற்பதைக் கண்டேன். அவன் முதுகில் ஒரு பெரிய சுமை அழுத்திக் கொண்டிருந்தது. அவன் தன் கையிலிருந்த புத்தகத்தைத் திறந்து வாசிக்கத் துவங்கினான். அவன் வாசிக்க வாசிக்க கண்களிலிருந்து நீர் தாரைதாரையாக வழிந்தது. உடல் நடுங்கியது. இறுதியில் பொங்கிவரும் அழுகையை அடக்கமுடியாமல் அவன் "ஐயோ, நான் என்ன செய்வேன்?" என்று கத்திப் புலம்பினான்.

பிறகு அவன் தன் வீட்டை நோக்கி மெதுவாக நடந்தான். தன் கவலையை வீட்டிலுள்ளவர்கள் கவனித்துவிடக் கூடாது என்ற எச்சரிக்கையுடன் கண்களைத் துடைத்துக்கொண்டு வீட்டினுள் நுழைந்தான். எப்போதும்போலத் தனது வேலைகளைக் கவனிக்க முயன்றான். ஆனால் அவனால் தனது துக்கத்தை அடக்க முடியவில்லை.

அவனது நெஞ்சம் கனத்தது. தனது அருமை மனைவியையும் அன்புப் பிள்ளைகளையும் அருகே கூப்பிட்டான்.

"என் அன்பு மனைவியே, பிள்ளைகளே இதோ என் முதுகிலுள்ள பாரச் சுமை அதிகமாகிக்கொண்டே போவதால் நான் மிகவும் துன்பப்படுகிறேன். இந்தச் சுமை என்னையே நசுக்கிவிடும்போலிருக்கிறது. அதுமட்டுமின்றி நாம் வசிக்கும் இந்த நகரம் வானத்திலிருந்து வரும் நெருப்பினால் அழிக்கப்பட்டுவிடும் என்பதையும் நான் தெரிந்துகொண்டேன். இதிலிருந்து தப்புவதற்கு எந்த வழியுமே இல்லையே. என்

மனைவியே, அருமைப் பிள்ளைகளே, நீங்களும் என்னோடுகூட இந்த நெருப்பிலே அழிந்துபோவீர்களே, ஐயோ" என்று கூறிப் புலம்பினான்.

இதைக் கேட்ட அவன் மனைவியும், பிள்ளைகளும், உறவினர்களும் வியப்படைந்தார்கள். அவன் சொன்னபடி நிச்சயமாக நடக்கும் என்று எண்ணி அவர்கள் கலங்கவில்லை; அவன் பைத்தியம் பிடித்தவனைப்போலப் பிதற்றுகிறானே என்று எண்ணிக் கவலைப்பட்டார்கள். அவன் இரவு நெருங்கும் வேளையில் இவ்வாறு புலம்பியதால் சரியான உறக்கம் இல்லாமல் மூளை கொதிப்படைந்து இவ்வாறு பேசுகிறான் என்று எண்ணி அவனை உடனே படுக்கைக்கு அனுப்பினார்கள்.

ஆனால் இரவிலும் அவனால் தூங்கமுடியவில்லை. முன்போலவே துக்கப் பெருமூச்சு விட்டுக்கொண்டிருந்தான். அவனைப்பற்றிக் கவலைப்படாமல் மற்றவர்கள் படுத்து நன்றாக உறங்கிவிட்டார்கள். அவனோ இரவு முழுவதும் கண்ணீர்விட்டு அழுதுகொண்டிருந்தான்.

விடிந்தவுடன் அயல்வீட்டார் அவனிடம் வந்து அவன் நன்றாகத் தூங்கினானா என்று கேட்டார்கள். அவனோ இன்னும் அதிகக் கவலையுடன் புலம்பத் தொடங்கிவிட்டான். ஆனால் அவர்கள் அவன் பேச்சுக்குச் செவி கொடுக்காமல் மனதைக் கடினப்படுத்திக் கொண்டார்கள்.

சிலர் அவனைக் கடிந்து பேசினால்தான் இந்தக் கவலைகளை மறப்பான் என்றெண்ணி அவனிடம் கோபத்தோடு பேசினர். சிலர் அவனைக் கேலி செய்தனர். அவனோ இதைப் பொருள் படுத்தாமல் இருப்பதைக் கண்டு அவர்கள் அவனை விட்டுவிட்டுச் சென்று விட்டார்கள்.

அவன் சில வேளைகளில் தனக்காகவும் பிறருக்காகவும் அழுது ஜெபிப்பான். அருகிலுள்ள வயல்வெளிகளில் தனியாக நடந்து சென்று அந்தப் புத்தகத்தை வாசித்துக்கொண்டிருப்பான். சில வேளைகளில் துயர மிகுதியால் அழுது புலம்பினான். இவ்வாறு அவன் தனது நாள்களைக் கழித்து வந்தான்.

2. நற்செய்தியாளரோடு முதலாம் சந்திப்பு

ஒருநாள் அவன் எப்போதும்போலவே வயல்வெளியில் உலாவிக் கொண்டிருந்தான். அந்தப் புத்தகத்தை வாசித்து அழுதுகொண்டிருப்பதை நான் கண்டேன். இறுதியில் துயரமிகுதியால் வாய்விட்டுக் கதறி, "ஐயோ, இரட்சிக்கப்படுவதற்கு நான் என்ன செய்யவேண்டும்?" என்று கத்தினான் *(அப். 16:30,31)*.

எந்தத் திசையில் செல்வது என்று புரியாதவனைப்போல அங்குமிங்கும் பார்த்தபடி அசையாமல் நின்றுகொண்டிருந்தான்.

அப்போது **நற்செய்தியாளர்** என்னும் பெயருடைய ஒருவர் அவ்வழியே வந்தார். அவனது நிலையைக் கண்டவுடன் அருகே சென்று "ஏனப்பா அழுதுகொண்டிருக்கிறாய்?" என்று கேட்டார்.

"ஐயா, இதோ என் கையிலுள்ள இந்தப் புத்தகத்தின் மூலம் எனக்கு மரண தண்டனை விதிக்கப்பட்டிருப்பதையும், மரணத்திற்குப் பின்பு நான் நியாயந்தீர்க்கப்படுவேன் என்பதையும் அறிந்துகொண்டேன், மரண தண்டனையை ஏற்றுக்கொள்ள எனக்கு விருப்பமில்லை. நியாயத்தீர்ப்பைச் சந்திக்கவும் எனக்குப் பயமாக இருக்கிறது" - என்று கூறிப் புலம்பினான் (எபி. 9:27).

"ஏனப்பா மரணத்தைக் கண்டு பயப்படுகிறாய்? இந்த உலகத்தில்தான் நாம் எத்தனையோ பாடுகளைச் சகிக்க வேண்டியதாயிருக்கிறதே!" என்றார் நற்செய்தியாளர்.

"அது உண்மைதான் ஐயா, ஆனால் இதோ எனது முதுகிலுள்ள சுமையைப் பாரும். நான் இறந்தாலும்கூட இந்தச் சுமை என்னைவிட்டுப் போகாது போலிருக்கிறதே. இது என்னை நரகம்வரை இழுத்துக்கொண்டுபோய் நித்திய நெருப்பில் தள்ளிவிடுமோ என்று பயப்படுகிறேன். இந்த உலகத்தின் சிறைச்சாலைத் துன்பங்களையே நம்மால் அனுபவிக்க முடியாதபோது நித்திய காலமாக நரக வேதனையை எவ்வாறு சகிக்க முடியும்? இதை எண்ணித்தான் நான் புலம்புகிறேன்" என்றான் அவன்.

"பிறகு ஏன் இதற்காக ஒன்றும் செய்யாமல் இங்கே நிற்கிறாய்?" என்று கேட்டார் நற்செய்தியாளர்.

"என்ன செய்வது, எங்கே போவது என்று தெரியாமல்தானே ஐயா, இங்கே நின்று அழுதுகொண்டிருக்கிறேன்" என்றான் அவன்.

அப்போது நற்செய்தியாளர் ஒரு சுருளை அவனிடம் கொடுத்து "இதை வாசித்துப் பார்" என்றார். அதை வாங்கிய அவன் மெதுவாக விரித்துப் பார்த்தான். அதில் **"வருங்கோபத்துக்கு பறந்தோடிப்போ"** (மத். 3:7) என்று பெரிய எழுத்துக்களில் எழுதப்பட்டிருப்பதைக் கண்டான்.

உடனே, "நான் எங்கே ஓடிப்போக வேண்டும் ஐயா?" என்று அவரிடம் கேட்டான்.

நற்செய்தியாளர் தனது கையை நீட்டி வெகு தொலைவில்

சுட்டிக் காட்டினார். "அதோ வெகு தொலைவில் இருக்கிற குறுகிய வாசல் உனக்குத் தெரிகிறதா?" என்று கேட்டார்.

"ஒன்றும் தெரியவில்லையே, ஐயா", என்றான் அவன் வருத்தத்துடன்.

உடனே நற்செய்தியாளர் "அதோ வெகு தொலைவில் ஒளிவீசுகிற வெளிச்சமாவது தெரிகிறதா?" என்று கேட்டார்.

"ஆம் ஐயா, ஏதோ வெளிச்சம்போல் தெரிகிறது" என்றான் அவன்.

"அந்த வெளிச்சத்தைப் பார்த்தபடியே நேராக நடந்துபோ, அருகில் சென்றால் குறுகிய வாசல் ஒன்று காணப்படும். அந்தக் கதவைத் தட்டிக் கேட்டால் அடுத்து நீ செய்யவேண்டியது என்னவென்று சொல்லப்படும்," என்றார் நற்செய்தியாளர்.

3. குறுகிய வாசல் நோக்கிப் பயணம்

அவன் குறுகிய வாசல் நோக்கி வேகமாக ஓடுவதை நான் என் கனவில் கண்டேன். அவன் சிறிது தூரம் செல்வதற்குள் அவன் மனைவியும், பிள்ளைகளும் அவன் பின்னே ஓடிவந்தார்கள்.

"அப்பா போகாதீர்கள், போகாதீர்கள். திரும்ப வாருங்கள்" என்று சத்தமிட்டுக் கூப்பிட்டார்கள். அவனோ தனது காதுகளைப் பொத்திக்கொண்டு திரும்பிப் பாராமல் ஓடினான். **"நித்திய ஜீவன், நித்திய ஜீவன்"** என்று கத்தியபடி அவன் ஓடிகொண்டிருப்பதை நான் கண்டேன்.

அவன் இவ்வாறு ஓடுவதை கண்ட ஊரார் கூடி வந்தார்கள். சிலர் இவன் பைத்தியம் பிடித்துள்ளான் என்று ஏசினர்; சிலர் அவனைக் கேலி செய்தனர் அவர்களில் இருவர் மட்டும் அவனை எப்படியாவது திரும்பக் கூட்டிக்கொண்டு வருவோம் என்று சபதம் செய்துவிட்டுப் புறப்பட்டார்கள். அவர்களில் ஒருவன் பெயர் **பிடிவாதக்காரன்,** மற்றவன் பெயர் **விட்டுக் கொடுப்பவன்.**

அவனை எப்படியாவது திரும்பச் செய்வோம் என்று சபதமிட்டிருந்த இருவரும் வெகுவேகமாக ஓடி அவனை வழிமறித்தார்கள்.

"ஏனப்பா இப்படி ஓடிவந்து வழிமறிக்கிறீர்கள்?" என்று அவன் அவர்களிடம் கேட்டான்.

"உன்னைத் திரும்ப ஊருக்குக் கூட்டிச் செல்லத்தான்

வந்தோம் வா எங்களோடு." என்று அவனைக் கட்டாயப்படுத்தி னார்கள். அது மட்டும் முடியவே முடியாது என்று மறுத்து விட்டான் **கிறிஸ்தியான்** என்ற பெயரையுடைய அவன்.

"அண்ணா பிடிவாதக்காரனே, தம்பி விட்டுக்கொடுப்பவனே, நீங்கள் அழியும் நகரத்தில் வசிக்கிறீர்கள். அது நான் பிறந்து வளர்ந்த இடமாக இருந்தாலும்கூட நான் பிறந்து அங்கிருந்த படியே மரித்தால் பூமியிலும் ஆழமான நரக பாதாளத்திலும் எரியும் அக்கினிக்குள்ளும், கந்தகத்திலும்தான் அழிந்துபோக வேண்டும். ஆகையால் என் நண்பர்களே, நீங்களும் இந்த அழியும் நகரத்தைவிட்டு என்னுடனே வந்து குறுகிய வாசலை அடைந்து தப்பித்துக்கொள்ளுங்கள்'' என்று ஆலோசனை கூறினான் கிறிஸ்தியான்.

''நீ என்ன சொல்கிறாய்? குடும்பத்தினரையும், உறவினர்களையும் மற்றும் எல்லா வசதிகளையும் இன்பங்களை யும் விட்டுவிட்டா வரச்சொல்லுகிறாய்?'' என்று கோபத்துடன் கேட்டான் பிடிவாதக்காரன்.

"ஆம் எல்லாவற்றையும் விட்டுவிட்டுத்தான் வரவேண்டும். ஏனென்றால் நாம் பெறப்போகும் நித்திய பாக்கியத்திற்கு இது எள்ளளவுகூட இணையாகாது. நீங்கள் திரும்பச் செல்லாமல் என்கூடவே வந்தால் இந்தப் பாக்கியம் அனைத்தையும் பெற்றுக் கொள்ளலாம். இந்தப் பேரின்ப ஈவு நமக்கு மட்டுமன்றி இனிமேல் வரப்போகிறவர்களுக்கும்கூட போதுமானவையே. நீங்களும் என்னோடு வந்து இது உண்மையா, பொய்யா என்று கண்டுகொள்ளலாமே!" என்றான் கிறிஸ்தியான்.

"ஏதோ பாக்கியங்கள் என்று சொல்லி இந்தப் பூலோக இன்பங்களை ஒதுக்கிவிடுகிறாயே! அப்படி என்ன உயர்ந்த பாக்கியங்கள் அவை?'' என்று கிண்டலாகக் கேட்டான் பிடிவாதக்காரன்.

"என்றுமே அழியாததும், குறைவற்றதும், நித்தியமானதுமான விடுதலையே நான்கூறும் அந்தப் பாக்கியம். அதை வாஞ்சையாகத் தேடுபவர்களுக்காக, அது மோட்சத்தில் வைக்கப் பட்டுள்ளது. நித்திய விடுதலை, நித்திய பேரின்பம்! அதைப்பற்றிய விவரங்களெல்லாம் இதோ இந்தப் புத்தகத்தில் கொடுக்கப்பட்டுள்ளன. நீங்கள் விரும்பினால் படித்துப் பார்க்கலாம்." என்றான் கிறிஸ்தியான்.

"நீயும் உன் புத்தகமும்! உன் புத்தகத்தை அதோ அந்தப் புதரில் வீசியெறிந்துவிட்டு, வீண்பேச்சுப் பேசாமல் எங்களோடு திரும்ப ஊருக்குப் வரப்போகிறாயா, இல்லையா?'' என்று கண்டிப்போடு கேட்டான் பிடிவாதக்காரன்.

“என்ன, திரும்பிச் செல்வதா? அதுமட்டும் முடியாது. நான் கலப்பையைப் பிடித்துவிட்டேன். இனி நீங்கள் அடித்தாலும், உதைத்தாலும் பின்னிட்டுப் பார்க்கமாட்டேன்,'' என்று உறுதியாக மறுத்துவிட்டான் கிறிஸ்தியான்.

“தம்பி விட்டுக்கொடுப்பவனே, திரும்பிப் போகலாம்வா! இவன் ஒரு பைத்தியக்காரக் கூட்டத்தில் சேர்ந்து விட்டான். இனி மெத்தப் படித்தவன் நியாயமாக எடுத்துக் கூறினாலும் இவர்கள் பிடித்த பிடியை விடமாட்டார்கள். இவன் எக்கேடு கெட்டால் நமக்கென்ன? நீ வா, நாம் வீட்டுக்குத் திரும்புவோம்” என்றான் பிடிவாதக்காரன்.

‘‘மாமா, அப்படியெல்லாம் திட்டாதீர்கள். இந்த கிறிஸ்தியான் சொல்வது உண்மையாக இருக்குமோ? அவன் தேடிப்போகும் நித்திய வாழ்வு நாம் பூமியில் அனுபவிப்பதை விட மேலானதாக இருக்குமோ? அவன் கூடப் போகலாமா என்று நினைக்கிறேன்” என்றான் விட்டுக்கொடுப்பவன்.

“என்ன தம்பி, என்ன சொன்னாய்? உனக்கும் பைத்தியம் பிடித்துவிட்டதா? என் பேச்சைக் கேட்டு ஒழுங்காக ஊருக்குத் திரும்பு, புத்தியில்லாதவன்போல இவன்கூடப் போகிறேன் என்று சொல்கிறாயே? இவனை எப்படி நம்பமுடியும்? பாழுங் கிணற்றிலும் படுகுழியிலும் தள்ளிவிடமாட்டான் என்று என்ன நிச்சயம்? நீ பேசாமல் என்னுடன் திரும்பி வந்துவிடு” என்று அதட்டினான் பிடிவாதக்காரன்.

உடனே கிறிஸ்தியான், “தம்பி விட்டுக்கொடுப்பவனே, நீ என்னுடன் வருவதற்குப் பயப்படவேண்டாம். நான் போகும் இடத்தில் இன்னும் அநேகப் பாக்கியங்கள் நமக்குக் கிடைக்கும். அவற்றில் சிலவற்றைத்தான் இப்போது நான் கூறியுள்ளேன். மற்றவைகளைப்பற்றி நீ இந்தப் புத்தகத்தில் வாசித்துப் பார்க்கலாம். இந்தப் புத்தகத்தில் எழுதப்பட்டுள்ளவை அனைத்தும் உண்மை என்பதை நிரூபிக்கும் வகையில் அவைகளை உண்டாக்கியவருடைய திரு இரத்தத்தால் அவை முத்திரை போடப்பட்டுள்ளன” என்று விளக்கினான்.

விட்டுக்கொடுப்பவன் திருப்தியடைந்தவனாக பிடிவாதக் காரனைப் பார்த்து, ‘‘மாமா, இதோ நான் இந்த நல்ல மனிதருடன் செல்வதாக முடிவெடுத்துவிட்டேன். என்ன நடந்தாலும் நடக்கட்டும் இதுவே எனது இறுதியான முடிவு” என்று சொல்லிவிட்டு கிறிஸ்தியானிடம் :

“என் அருமை நண்பரே, நீர் கூறும் இடத்துக்குச் செல்லும் வழி உமக்குத் தெரியுமா?” என்று கேட்டான்.

"நானும் வழி தெரியாமல்தான் தவித்துக் கொண்டிருந்தேன். ஆனால் ஒருநாள் நற்செய்தியாளர் என்னும் ஒரு நல்லவரைச் சந்திக்க நேர்ந்தது. இதே வழியில் தொடர்ந்து நடந்தால் ஒரு குறுகிய வாசல் வரும் என்றும் அங்கே விசாரித்தால் அடுத்து எப்படிச் செல்வது என்று தெரியும் என்றும் அவர்தான் கூறினார். வா, நாமிருவரும் போய் அந்தக் குறுகிய வாசலண்டை விசாரிப்போம்" என்றான் கிறிஸ்தியான்.

"அதுவும் சரிதான் வாரும், வேகமாகப் போகலாம்" என்று கூறிய விட்டுக்கொடுப்பவன் கிறிஸ்தியானோடு சேர்ந்து துரிதமாக நடக்கத் துவங்கினான்.

"நீங்கள் தாராளமாகப் போகலாம். நான் ஒன்றும் உங்களைப்போல முட்டாள் இல்லை. என் குடும்பம்தான் எனக்கு முக்கியம்" என்று கூறிய பிடிவாதக்காரன் தனது ஊரை நோக்கித் திரும்பி நடந்தான்.

4. இருவரும் உரையாடுதல்

கிறிஸ்தியானும் விட்டுக்கொடுப்பவனும் ஒருவரோடொருவர் உரையாடியபடியே வேகமாகச் செல்வதை நான் என் கனவில் கண்டேன்.

"தம்பி விட்டுக்கொடுப்பவனே, நீ என்னுடன் வருவது எனக்கு எவ்வளவு மகிழ்ச்சியாக இருக்கிறது தெரியுமா? பிடிவாதக்காரனுக்கு வரப்போகும் அழிவின் பயங்கரத்தைப்பற்றி ஒன்றுமே தெரியவில்லை! தெரிந்திருந்தால் இவ்வாறு நம்மைவிட்டுத் திரும்பிப்போயிருக்க மாட்டார்" என்றான் கிறிஸ்தியான்.

"அது உண்மைதான். அவருக்கு இதைப்பற்றிய உணர்வே இல்லைதான். சரி சரி அது போகட்டும். நாம் வேகமாக நடப்போம்" என்று துரிதப்படுத்திய விட்டுக்கொடுப்பவன், நாம் போகப்போகும் இடத்திலுள்ள ஈவுகளைப்பற்றி ஒன்றுகூட மறைக்காமல் என்னிடம் சொல்லும். இங்குதான் வேறு யாரும் இல்லையே" என்று கேட்டுக்கொண்டான்.

"அந்த ஈவுகளின் மேன்மையைப்பற்றி அதிகமதிகமாக நான் மனதில் உணர்ந்திருக்கிறேன். ஆனால் அவற்றை அப்படியே நாவினால் எடுத்துக்கூற முடியவில்லையே! ஒன்று செய்யலாம், இந்தப் புத்தகத்தில் அந்தப் பாக்கியங்களைப்பற்றிக் கூறப்பட்டுள்ளவற்றை நான் வாசிக்கிறேன். நீயும் அதைப்பற்றி அறிந்துகொள்ளலாம்" என்று உற்சாகத்துடன் கூறினான் கிறிஸ்தியான்.

"ஆமாம், நீர் இந்தப் புத்தகத்தில் எழுதப்பட்டுள்ளவை எல்லாம் உண்மை என்று நம்புகிறீரா?'' சந்தேகத்துடன் கேட்டான் விட்டுக்கொடுப்பவன்.

"ஏனப்பா இந்தச் சந்தேகம்? இவையனைத்தையும் கூறியது பொய்யே சொல்லாத ஆண்டவர் அல்லவா?" என்று அவனைக் கடிந்துகொண்டான் கிறிஸ்தியான்.

"அப்படியா? கேட்பதற்கு மிகவும் மகிழ்ச்சியாக இருக்கிறது. எங்கே அந்த ஈவுகளைக் கூறும் கேட்கலாம்" என்று கேட்டான் விட்டுக்கொடுப்பவன்.

"சொல்கிறேன், கேள் அங்கே அழிவில்லாத ஓர் அரசு இருக்கிறது; அதில் வசிப்பதற்கேற்றபடி நாமும் முடிவற்ற நித்திய ஜீவனைப் பெறுவோம்."

"சரிதான், அப்புறம்."

"நமக்கு மகிமையின் கிரீடங்கள் சூட்டப்படும், சூரியனைப் போல தகதகவென்று ஒளிவீசக்கூடிய அங்கிகள் நாம் அணிவதற்கென்றே தரப்படும். மேலும் அங்கே அழுகையோ, துக்கமோ, துயரமோ கிடையாது. ஏனென்றால் நமது கண்ணீரையெல்லாம் துடைக்கக்கூடிய வல்லமையுடையவர்தான் அந்த அரசை ஆளும் அதிபதி" என்றான் கிறிஸ்தியான்.

"மெத்த மகிழ்ச்சி! இனிமேல் நம்மைப்போல அங்கே வேறு யாரெல்லாம் இருப்பார்கள் என்று கூறும்'' என்று கேட்டுக்கொண்டான் விட்டுக்கொடுப்பவன்.

"அங்கே நாம் கேருபீன்களோடும், சேராபீன்களோடும் சேர்ந்து உலாவுவோம். நமது கண்ணைக் கவரும் பல உயிரினங்களும் அங்கே காணப்படும். அதுமட்டுமின்றி நமக்கு முன்பே அங்கே சென்றடைந்துள்ள இலட்சக்கணக்கான மனித ஆத்துமாக்களையும் நாம் சந்திக்கலாம். பாவிகளுக்கு அங்கே இடமில்லை! தூய்மையும், அன்பும் உடையவர்களே அங்குக் காணப்படுவர். அங்கே இவர்கள் ஆண்டவருக்கு முன்பாக நடந்து, அவரை முகமுகமாய்த் தரிசித்து நித்திய காலமாய் வாழ்கிறார்கள். இன்னும் கூறப்போனால் தங்கக் கிரீடம் அணிந்த மூப்பர்களையும், தங்கத்தாலான இசைக் கருவிகளை இசைத்துப் பாடும் தூய்மையான கன்னிகளையும் அங்கே காணலாம். அதுமட்டுமின்றி, அந்த நாட்டு அதிபதியின்மீது பற்றுறுதி கொண்டிருந்ததின் காரணமாக வதைக்கப்பட்டவர் களையும் வெட்டிப்போடப்பட்டவர்களையும், நெருப்பிலிட்டுப் பொசுக்கப்பட்டவர்களையும், மிருகங்களுக்கு இரையாகப்

போடப்பட்டவர்களையும், கடலில் தூக்கியெறிந்து கொல்லப் பட்டவர்களையும் அங்கே காணலாம். அவர்கள் நித்திய ஜீவன் என்னும் அங்கியை அணிந்தவர்களாக, மகிமையோடு நித்திய காலமாய் வாழ்வார்கள்," என்று உற்சாகத்தோடு விளக்கினான் கிறிஸ்தியான்.

"அடடா, என்ன மகிழ்ச்சி! என்ன மகிழ்ச்சி! அதைப் பற்றிக் கேள்விப்படுவதே இவ்வளவு மகிழ்ச்சியாக இருக்கிறதென்றால், நேரில் பார்த்து அனுபவிக்கும்போது எவ்வளவு ஆனந்தமாக இருக்கும்! இதில் நமக்கும் பங்கு கிடைக்குமா? எவ்வாறு அந்தப் பங்கைப் பெற்றுக்கொள்வது? என்று ஆவலுடன் கேட்டான் விட்டுக்கொடுப்பவன்.

"அந்த நாட்டின் தலைவராகிய ஆண்டவர் அதைப் பற்றி இந்தப் புத்தகத்தில் தெளிவாகக் குறிப்பிட்டுள்ளார். சுருக்கமாகச் சொல்லப்போனால் நமக்கும் அந்தப் பங்கு வேண்டுமென்று உண்மையாகவே வாஞ்சித்தால், அவர் அதை இலவசமாகவே கொடுக்கச் சித்தமுள்ளவராய் இருக்கிறார்'' என்றான் கிறிஸ்தியான்.

''அன்பு நண்பரே, மிகவும் நல்லதாகப் போய்விட்டது. இனியும் காலதாமதம் பண்ணாமல் வேகமாக நடந்து செல்லலாம்'' என்று துரிதப்படுத்தினான்.

இருவரும் விரைவாக நடந்து சென்றார்கள்.

5. நம்பிக்கையிழப்பு என்ற உளையில் பட்ட துன்பம்

இருவரும் இவ்வாறு வேகமாக நடந்து செல்லும்போது கவனக் குறைவினால் **நம்பிக்கையிழப்பு** என்ற உளையினுள் விழுந்துவிட்டதை நான் கனவில் கண்டேன். இருவரும் அந்தச் சேற்றிலிருந்து எப்படியும் வெளியேறிவிட வேண்டுமென்று தத்தளித்தார்கள். இதனால் அவர்கள் உடலெங்கும் சகதியாகி விட்டது! கிறிஸ்தியானின் முதுகிலிருந்து சுமை அழுத்தவே அவன் சேற்றினுள் இன்னும் அதிகமாக அமிழ்ந்திவிட்டான். நகரவே முடியவில்லை!

பயந்துபோன விட்டுக்கொடுப்பவன் ''ஐயா, ஐயா, கிறிஸ்தியான் ஐயா, நீர் எங்கே இருக்கிறீர்?'' என்று கத்தினான்.

"நான் எங்கே இருக்கிறேன் என்று எனக்கே தெரியவில்லை" என்று பரிதாபமாகக் குரல் கொடுத்தான் கிறிஸ்தியான்.

அதைக் கேட்டவுடன் விட்டுக்கொடுப்பவனுக்கு கோபம் வந்தது.

"ஐயா கிறிஸ்தியானே, நீர் சொன்ன நித்திய வாழ்வு இதுதானா? பயணம் துவங்கும்போதே இப்படியிருந்தால் இன்னும் எத்தனை எத்தனை துன்பங்களைச் சகிக்க வேண்டியிருக்குமோ? நம்மால் இது முடியாது, ஐயா! நான் ஊருக்குத் திரும்பிப்போகிறேன். நீரே சேர்த்து என் பங்கையும் அனுபவித்துக்கொள்ளும்," என்று கத்திவிட்டு தட்டுத் தடுமாறி முழு பலத்தோடு முயன்று தன்னுடைய வீடு இருந்த பக்கமாகச் சேற்றிலிருந்து வெளியேறி, நகரத்தை நோக்கி வேகமாக ஓடத் தொடங்கினான். அதன் பிறகு கிறிஸ்தியான் அவனைப் பார்க்கவே இல்லை!

விட்டுக்கொடுப்பவன் சென்றபின்பு கிறிஸ்தியான் மட்டும் அந்தச் சேற்றில் கிடந்து துன்பப்பட்டான். என்றாலும் அவன் சோர்ந்துபோய்த் தன் வீடு இருந்த பக்கமாகத் திரும்பவில்லை! குறுகிய வாசல் இருக்கும் திசையை நோக்கியே மெல்ல மெல்ல நகர்ந்துசெல்ல முற்பட்டான். என்றாலும் அவன் முதுகிலிருந்து பாரச் சுமை அவனை அழுத்தியதால் அவனால் கரையேற முடியவில்லை. அப்போது அவனுக்கு உதவிசெய்யும் எண்ணத்தோடு அங்கு வந்த ஒரு மனிதரை என் கனவில் கண்டேன். அவர் பெயர் **சகாயர்.**

சகாயர் கிறிஸ்தியானைப் பார்த்து, "இங்கே என்ன செய்கிறாய் அப்பா?" என்று அன்போடு கேட்டார்.

"ஐயா, நற்செய்தியாளர் என்ற ஒருவர் நான் இந்த வழியே சென்றால் குறுகிய வாசலை அடைவேன் என்றும் அங்கே வருங்கோபத்துக்குத் தப்பும் வழி கூறப்படும் என்றும் சொன்னார். அவர் சொன்னபடி செல்லும்பொழுது கவனக் குறைவால் இந்தக் குட்டையினுள் விழுந்துவிட்டேன். இப்போது இங்கிருந்து வெளியேற முடியாமல் தவிக்கிறேன்" என்று பரிதாபமாகக் கூறினான் கிறிஸ்தியான்.

"அது சரிதான். ஆனால் இந்தக் குட்டையைத் தாண்டிச் செல்ல படிகள் இருப்பதை நீ கவனிக்கவில்லையா?" என்று கேட்டார் சகாயர்.

"என் மனதிலிருக்கிற பயத்தின் காரணமாகப் படிகளை நான் கவனிக்கவில்லை, ஐயா!" என்றான் கிறிஸ்தியான்.

உடனே சகாயர் அவனது நீட்டிய கரங்களைப் பிடித்திழுத்து, அவனைக் கரையில் சேர்த்தார்.

"சரி இனிமேல் நேர்வழியில் நடந்துபோ?" என்று கூறி அவனை வழியனுப்பி வைத்தார்.

அப்போது நான் அவனுக்கு உதவி செய்த சகாயரைப் பார்த்து, "ஐயா அழிநகரத்திலிருந்து குறுகிய வாசலுக்கு

போவதற்கு இந்த வழிதானா இருக்கிறது? ஏழைப் பயணிகள் விழுந்து போகாமலிருக்கும்படி இந்தக் குட்டையைச் சரி செய்யக்கூடாதா?" என்று கேட்டேன்.

உடனே அவர், "இது செப்பனிடப்பட முடியாத ஓர் இடம். மனிதனின் பாவ உணர்வால் வெளிப்படும் கசடுகளும், அழுக்குகளும் இங்குதான் ஓடிவந்து தேங்கி நிற்கின்றன; அதனால்தான் இந்த உளைக்கு **நம்பிக்கையிழப்பு** என்ற பெயர். ஒரு பாவி தனது அபாத்திரமான நிலையை உணரும்போது அவன் மனதில் பல சந்தேகங்களும், சோர்வுகளும் தோன்றி அவன் நம்பிக்கையிழந்து போகிறான். சிறுசிறு ஓடைகளாகப் புறப்படும் இவை ஒன்று சேர்ந்து ஒரு பெரிய ஆறாகி, இந்த இடத்தில் வந்து தேங்கிவிடுகிறது. அதனால்தான் இந்த இடம் சேறும் சகதியுமாக இருக்கிறது."

"இந்த இடம் இப்படியே இருக்கவேண்டுமென்பது எங்கள் அரசரின் சித்தம் அல்ல. அரசரின் பணியாளர்கள் அரசு சிற்பக் கலைஞர்களின் ஆலோசனையின்படி இந்தக் குட்டையைச் செப்பனிட்டு, நல்வழியாக்கும்படி கடந்த ஆயிரத்து அறுநூறு வருடங்களாக எவ்வளவோ முயற்சி செய்து வந்திருக்கிறார்கள். கொஞ்சமா, நஞ்சமா கோடிக் கணக்கான வண்டிச் சுமையுடைய நல்ல உபதேசங்களை உலகின் நான்கு திசைகளிலிருந்து கொண்டுவந்து இங்கே கொட்டியிருக்கிறார்கள்! அந்த அருளுரைகளின் கருத்துக்களை அறிந்தவர்கள் இந்தக் குட்டையைச் செப்பனிட இவற்றைவிட மேலானது எதுவுமே இருக்க முடியாது என்று கூறுவார்கள் எவ்வளவு முயற்சி பண்ணியும் இந்த இடம் இன்னும் நம்பிக்கையிழப்பாகவே இருக்கிறது! இன்னும் எவ்வளவு தடவை முயன்றாலும் இந்தக் குட்டை குட்டையாகவே இருக்கும்!"

"ஆனால் அரசரின் சட்டநிருபண அதிகாரியால் கட்டப் பட்டிருக்கிற சில உறுதியான படிகள் இந்தக் குட்டையின் நடுவே உள்ளன என்பது உண்மையே. ஆனால் சில வேளைகளில் உறை பொங்கி, கசடுகள் படிகளை மறைத்து விடுவதால், படிகள் தெளிவாகத் தெரிந்தாலும்கூட சிலர் மனக் குழப்பத்தினால் படிகளில் கால் வைக்காமல் சேற்றில் கால் வைத்து உள்ளே விழுந்து விடுகின்றனர்! நல்ல பாதைதான்." என்றார்.

மீண்டும் என் கனவில் கிறிஸ்தியானை விட்டு விட்டுப் பிரிந்துபோன விட்டுக்கொடுப்பவனைக் கண்டேன். அவன் தன் ஊர் போய்ச் சேர்ந்து தன் வீட்டினுள் நுழைந்தான். அதற்குள் அவன் உறவினர்களும், நண்பர்களும் அங்கே வந்து கூடிவிட்டார்கள்.

அவர்களில் சிலர், "நீ புத்தியுள்ளவன்தான். புத்தியோடு திரும்பிவிட்டாய்" என்று பாராட்டினார்கள். வேறு சிலர் "அந்தப் பைத்தியக்காரன் கிறிஸ்தியானோடு நீயும் போனாயே, உன்னைவிடப் பைத்தியக்காரன் வேறு எவரும் உண்டோ?" என்று கடிந்துகொண்டார்கள்.

இன்னும் சிலர் "சரியான கோழையப்பா நீ, உளையைக் கண்டு ஓடிவந்து விட்டாயே!" என்று கேலி செய்தார்கள். சிறிது நேரம் அமைதியாக இருந்த விட்டுக்கொடுப்பவன் அவர்களுக்குப் பதிலுக்குப் பதில் பேசத் தொடங்கினான். அவர்கள் அவனை விட்டுவிட்டுக் கிறிஸ்தியானைக் கிண்டல் பண்ணத் துவங்கிவிட்டார்கள். கிறிஸ்தியானோடு கொஞ்சம் தூரம் மட்டும் சென்ற விட்டுக்கொடுப்பவனின் காரியம் இதோடு முடிந்து போயிற்று!

6. உலகஞானியுடன் சந்திப்பு

சகாயரால் காப்பாற்றப்பட்ட பிறகு கிறிஸ்தியான் தன்னந்தனியாக காட்டு வழியில் நடந்து சென்றுகொண்டிருந்தான். இவ்வாறு அவன் போகும்போது, அவனை எப்படியாவது சந்தித்துவிட வேண்டும் என்று குறுக்கு வழியாக விரைந்துவரும் ஒரு மனிதனை என் கனவில் கண்டேன். அவன் கிறிஸ்தியானை நேருக்கு நேராகச் சந்தித்தான். அவன் பெயர் **உலகஞானி**. அவன் **மாம்ச இச்சைபுரம்** என்ற நகரத்தைச் சேர்ந்தவன். கிறிஸ்தியானுடைய ஊருக்கு அருகில்தான் இந்தப் பட்டணம் இருந்தது. இவன் கிறிஸ்தியானைப்பற்றிய செய்திகள் ஓரளவு கேட்டிருந்தான், ஏனென்றால் கிறிஸ்தியான் ஊரைவிட்டுப் போன செய்தி அழிநகரத்தில் மட்டுமன்றி நாசதேசமெங்கும் பரவியிருந்தது! கிறிஸ்தியானின் கவலை தோய்ந்த முகத்தையும், பெருமூச்சுவிட்டபடியே நகர்ந்து செல்லுவதையும் கவனித்த உலகஞானி தான் தேடிவந்த கிறிஸ்தியான் அவன்தான் என்று அறிந்துகொண்டு அவனுடன் பேசத் துவங்கினான்.

"ஏனப்பா இந்தப் பாடுபடுகிறாய்? இவ்வளவு பெரிய சுமையைத் தூக்கிக் கொண்டு எந்த ஊருக்குப் போகிறாய்?" என்று போலிக் கவலையுடன் கேட்டான் உலகஞானி.

"ஐயா, இந்தச் சுமை என்னைவிட்டு எளிதில் போய்விடாது இதைத் தொலைப்பதற்காகத்தான் பயணம் செல்கிறேன். தொலைவில் ஒரு வாசல் இருக்கிறதாம். அங்கே போனால் இந்தச் சுமையை ஒழிப்பதற்கு வழி வகைகள் கூறப்படுமாம். அதனால்தான் அங்கே போகிறேன்," என்றான் கிறிஸ்தியான் பெருமூச்சுவிட்டபடியே.

''உனக்கு மனைவி, பிள்ளைகள் உண்டா?'' என்று அக்கறையுடன் கேட்டான் உலகஞானி.

"உண்டு ஐயா, ஆனால் என் முதுகில் இந்தப் பாரச் சுமை அழுத்திக் கொண்டிருப்பதால் அவர்களைப்பற்றி நினைக்கவே என்னால் முடியவில்லை. இப்போது எனக்கு மனைவியும் இல்லை, பிள்ளைகளும் இல்லை என்ற எண்ணத்தோடுதான் புறப்பட்டு விட்டேன்." என்றான் கிறிஸ்தியான்.

"நான் ஒரு யோசனை கூறுகிறேன். அதைக் கேட்பாயா?" என்று உலகஞானி கிறிஸ்தியானை வினவினான்.

"நல்லது ஐயா, சரியான ஆலோசனை கிடைக்காமல்தானே இன்று இந்த நிலையில் இருக்கிறேன். உமது யோசனை நல்ல யோசனையாக இருக்குமானால் உடனே அதை ஏற்றுக் கொள்கிறேன்" என்று உறுதியாகக் கூறினான் கிறிஸ்தியான்.

"உன்னால் முடிந்தவரை சீக்கிரமாக அந்தச் சுமையைக் கீழே தூக்கிப் போட்டுவிடு. அந்தச் சுமை உன் முதுகில் இருக்கும்வரை உனக்கு மன அமைதியே இருக்காது. அதுமட்டுமன்றி, ஆண்டவர் உனக்கு அருளும்படி சித்தமாயிருக்கிற ஆசீர்வாதங்களை நீ பெற்று அனுபவிக்கவும் முடியாது" என்று எச்சரிக்கை செய்தான் உலகஞானி.

"அதற்காகத்தானே இந்தப் பாடுபடுகிறேன். அந்தச் சுமையைத் தூக்கி எறிந்துவிடவும் என்னால் முடியவில்லை. அப்படிச் செய்யக்கூடிய திறமைசாலி யாராவது இந்த நாட்டில் உண்டா? இல்லையே! அதனால்தான் எனது சுமையைத் தூக்கிக் கொண்டு குறுகிய வாசலை நோக்கிச் செல்கிறேன் ஐயா" என்று பரிதாபமாகக் கூறினான் கிறிஸ்தியான்.

''அதுசரி, உன் பாரச் சுமை தொலைய இவ்வழியாகச் செல்லவேண்டும் என்று உனக்குக் கூறியது யார்?'' என்று கிறிஸ்தியானிடம் கேட்டான் உலகஞானி.

"நற்செய்தியாளர் என்ற நல்ல மனிதன்தான் இந்த வழியை எனக்குக் காட்டினார்" என்றான் கிறிஸ்தியான்.

"அவனா நல்ல மனிதன்? அவன் நாசமாகப் போகட்டும். அவன் காட்டிய இந்த வழியைப்போல மோசங்களும், அழிவும் நிறைந்த பாதை உலகத்திலேயே வேறு எதுவும் கிடையாது அப்பா. இதோ பார் உடலெங்கும் சேறு! உன் முகத்திலோ மண்! ஏற்கெனவே நீ அதிக துயரங்களைச் சந்தித்திருக்கிறாய் போலிருக்கிறதே. நம்பிக்கையிழப்பு குட்டையில் விழுந்துதானே சேறு அப்பிக்கொண்டது? இத்தோடு வேதனைகள் முடிந்துவிட

வில்லை; இதுவே சோதனைகளின் துவக்கம்! இன்னும் எத்தனை எத்தனையோ வேதனைகள் துன்பங்கள், சோதனைகள்! நீ நல்லவனைப்போலத் தோற்றமளிக்கிறாயே! உன்னைப் போய் அந்தப் படுபாவி நற்செய்தியாளன் ஏமாற்றியிருக்கிறானே! சரி, போனது போகட்டும். இப்போதாவது நான் சொல்லும் வார்த்தைகளைக் கேள். நான் உன்னைவிட வயதில் முதிர்ந்தவன். பல்வேறு காரியங்களையும் கற்றுத் தேர்ந்த ஞானி. உலகஞானி என்று சொன்னால் இந்த உலகமே நடுங்கும். அவ்வளவு தூரம் இந்தப் பூவுலக ஞானம் முழுவதையும் நான் அறிந்து வைத்திருக்கிறேன். என் பேச்சைக் கேள். நீ இந்த வழியே தொடர்ந்து சென்றால் உடல்வலி, பசி, தாகம், விபத்துக்கள், அம்புகளாலும் வாள்களாலும் ஏற்படும் ஆபத்துக்கள், சிங்கங்களின் சீறல்கள், வலுசர்ப்பங்களின் வலைவிரிப்பு, காரிருள் இவற்றைச் சந்திக்க வேண்டியிருப்பதோடு உன் உயிரைக்கூட இழக்கநேரிடலாம். இவையெல்லாம் நிச்சயம் நடைபெறும் என்பதற்காகப் பல உண்மையான சாட்சிகளும் உண்டு! ஏனப்பா, முன்பின் அறியாத ஒருவரின் பேச்சைக்கேட்டு இத்தகைய துன்பங்களை அனுபவிக்க வேண்டுமா?" என்று கூறி கிறிஸ்தியானின் மனதில் சந்தேக விதையைத் தூவினான் உலக ஞானி.

"நீர் எவ்வளவுதான் துன்பங்களை அடுக்கிக்கொண்டே போனாலும் அவை எல்லாவற்றையும்விட இந்தச் சுமைதான் எனக்குப் பெருந்துன்பமாகத் தோன்றுகிறது ஐயா, இவ்வளவு துன்பங்களைச் சகித்தாலும் முடிவில் இந்தச் சுமை நீங்கக் கூடுமானால் அதுவே எனக்குப் போதும்." என்றான் கிறிஸ்தியான்.

"எப்படியப்பா இந்தப் பாரச் சுமை உன் முதுகில் வந்தது?" என்று கேட்டான் உலகஞானி.

"இதோ இந்தப் புத்தகத்தை வாசிக்க, வாசிக்க என் முதுகில் இந்தப் பாரம் ஏறிவிட்டது, ஐயா" என்றான் கிறிஸ்தியான்.

"நானும் அப்படித்தான் நினைத்தேன். உன்னைப் போலத்தான் இன்னும் அநேகர் தங்களுக்குத் தேவையில்லாத காரியத்தில் தலையிட்டு கழுத்து முறிவுபட்டு இறந்து போயிருக்கிறார்கள் உனக்கும் அதே கதிதான் ஏற்படும். இப்படிப்பட்டவர்களெல்லாம் தங்களுக்கு வரப்போகிற நாசங்களை அறிந்துகொள்ளாமல் அழிந்து போகிறார்கள் என்று அங்கலாய்த்தான் உலகஞானி.

"இந்தப் பாரச் சுமையிலிருந்து விடுதலையாவது ஒன்றைத் தேடித்தான் நான் அலைகிறேன். அதுதான் எனக்கு வாழ்வு" என்றான் கிறிஸ்தியான்.

"அதற்காக இப்படிப்பட்ட அழிவுவலையை நாடலாமா? இவ்வளவு துன்பங்களையும், துயரங்களையும் உன்னால் சகிக்க முடியுமா? உன் சுமையை மிகவும் சுலபமாக இறக்க உனக்கு ஓர் எளிதான வழி நான் கூறுகிறேன். அந்த வழியில் இதைப் போன்ற அபாயங்கள் எதுவும் கிடையவே கிடையாது. போகப் போக உடல்நலமும், நண்பர்களும், மன நிம்மதியும்தான்" என்று விவரித்தான்.

"ஐயா பெரியவரே, அந்த வழியை எனக்குச்சொல்ல மாட்டீரா? தயவுசெய்து கூறும், ஐயா'' என்று கெஞ்சத் துவங்கிவிட்டான் கிறிஸ்தியான்.

"நல்லது, சொல்கிறேன் கேள். அதோ சற்றுத் தொலைவில் ஒரு நகரம் இருக்கிறது. **நற்செய்கைகள்** என்ற அந்த நகரத்தில் **நியாயப்பிரமாணிகன்** என்பவர் வசித்து வருகிறார். அவர் அனைத்தையும் அறிந்த மகா ஞானி, உன்னைப்போலப் பாரச் சுமையைச் சுமக்க முடியாமல் புலம்புகிறவர்களுக்குச் சுமையை நீக்குவதற்கான வழிகளைக் கூறுவதில் வல்லவர் அவர். எனக்குத் தெரிந்தமட்டும் அநேகர் அவரிடம் சென்று தங்கள் சுமை நீங்கித் திரும்பியிருக்கிறார்கள் அதுமட்டுமா? பாரச் சுமை தாங்க முடியாமல் புத்தி பேதலித்துப் போனவர்களையும் திருத்த அவரால் முடியும். அவரண்டை நீ செல்வாயானால் உன் பாரம் உடனடியாக நீங்கிவிடும். நீ அதிக தூரம் செல்லவும் வேண்டிய தில்லை. இதோ அவர் வீடு மிக அருகில்தான் இருக்கிறது. நீ போகும் வேளையில் அவர் இல்லாவிட்டாலும் கலங்காதே. அவர் மகன் **மரியாதை** என்பவனும்கூட உன் பாரச் சுமை அறுந்து விழத்தக்க வழியைக் காட்டுவான். அதன்பிறகு நீ உன் பழைய ஊருக்குப் போவதை நான் விரும்பவில்லை. அந்த நற்கிரியைகள் என்ற ஊரிலேயே பல வீடுகள் காலியாகக் கிடக்கின்றன. குறைந்த வாடகைக்கு ஒரு வீடு எடுத்து உன் மனைவி, பிள்ளைகளையும் அங்கே வரவழைத்துக் குடியேறலாம். அங்கே விலைவாசிகளும் நியாயமானவையே. அங்கேயே வாணிபம் செய்தோ, பயிரிட்டோ வாழலாம்'' என்று ஆசைக் காட்டினான் உலகஞானி.

இதைக் கேட்டவுடன் கிறிஸ்தியானின் மனம் மாறத் துவங்கியது. ஒருவேளை இந்தப் பெரியவர் கூறுவது உண்மையாக இருந்தால் இதுதானே சரியான வழியாகத் தெரிகிறது என்று நினைத்த கிறிஸ்தியான், "ஐயா அந்த நியாயப்பிரமாணிகர் வீட்டுக்கு எப்படிச் செல்வது?" என்று கேட்டான்.

"அதோ இருக்கிறதே, அந்த மலைச் சிகரம் தெரிகிறதா?'' என்று சுட்டிக்காட்டிக் கேட்டான் உலகஞானி.

"ஆம் ஐயா, தெளிவாகத் தெரிகிறது" என்றான் கிறிஸ்தியான்.

"நீ நேராக அந்த மலையை நோக்கிச் செல். மலையடிவாரத்தில் காணப்படும் முதல் வீடு நியாயப்பிரமாணிகர் வீடுதான்" என்று கூறி அவனை வழியனுப்பிவைத்தான் உலகஞானி.

கிறிஸ்தியான் தனது வழியைவிட்டு விலகி, நியாயப் பிரமாணிகரின் வீட்டை நோக்கி நடந்து செல்வதை நான் என் கனவில் கண்டேன்.

மலையடிவாரத்தை அடைந்த கிறிஸ்தியான் மேலே நோக்கினான். மலைச் சிகரம் மிகவும் சாய்ந்து அவன் மேல் விழுவதைப்போலக் காணப்பட்டதால் திடுக்கிட்டுப் பின்வாங்கினான் கிறிஸ்தியான். "ஐயோ, நான் ஒழிந்து போவேனோ!" என்று பயத்தால் புலம்பத் துவங்கிவிட்டான்!

அதுமட்டுமன்றி வழியைவிட்டு விலகி அவன் மலையடிவாரத்தை அடைந்தவுடன் அவன் முதுகிலிருந்த சுமையின் எடை அதிகமாகி அவனை நசுக்கத் துவங்கியது. மலையிலிருந்து இடையிடையே அக்கினிச் சுவாலைகளும் புறப்பட்டு வந்தன! எங்கே அது தன்னைப் பொசுக்கிவிடுமோ என்று பயந்தான் கிறிஸ்தியான். அவன் உடலெங்கும் நடுங்கியது; வியர்வை ஆறாய்ப் பெருகியது. "ஐயோ, உலகஞானியின் பேச்சைக்கேட்டு இங்கே வந்தது எவ்வளவு புத்தியீனம்! அவன் என்னை ஏமாற்றி விட்டானே!" என்று அங்கலாய்த்தான்.

7. நற்செய்தியாளரோடு இரண்டாவது சந்திப்பு

அப்போது கிறிஸ்தியான் தனக்கு முதலில் வழி காட்டிய நற்செய்தியாளர் அவனைச் சந்திக்க அங்கே வருவதைக் கண்டான். ஏற்கெனவே மலைச்சிகரத்தாலும், நெருப்பினாலும் பயந்துபோயிருந்த கிறிஸ்தியான் அவரைக் கண்டவுடன் வெட்கத்தால் தலைகுனிந்து கொண்டான். அவரது ஆலோசனையைக் கேட்காமல் தவறு செய்துவிட்டபடியால் குற்ற உணர்வினால் மனம் பதைத்தான் கிறிஸ்தியான்.

நற்செய்தியாளர் அமைதியாக அவனருகே வந்து அவனை ஏறிட்டுப் பார்த்தார். அவர் முகத்தில் காணப்பட்ட கோபத்தைக் கண்டு நடுநடுங்கினான் கிறிஸ்தியான்.

"கிறிஸ்தியானே, நீ இங்கே என்ன செய்கிறாய்?" என்று அதட்டினார் அவர்.

கிறிஸ்தியானோ ஒன்றும் பேசமுடியாமல் தலை குனிந்தபடியே மௌனமாக நின்றான்.

"அழிநகரத்துக்கு வெளியே அழுதுகொண்டு திரிபவனாக நான் சந்தித்த அதே கிறிஸ்தியான்தானே நீ" என்று மீண்டும் கேட்டார் நற்செய்தியாளர்.

"ஆம். ஐயா, நான்தான் அந்தக் கிறிஸ்தியான்" என்றான் பரிதாபமான குரலில்.

"உனக்குக் குறுகிய வாசலைப்பற்றிக் கூறி அங்கு செல்வதற்கான வழியையும் நான் சுட்டிக்காட்டவில்லையா?" என்று கேட்டார் நற்செய்தியாளர்.

"ஆம் ஐயா, நீங்கள்தான் அதற்கு வழிகாட்டினீர்கள்" என்று ஒத்துக்கொண்டான் கிறிஸ்தியான்.

"பிறகு ஏன் இவ்வளவு சீக்கிரமாக அந்தப் பாதையை விட்டு வழிவிலகி வந்துவிட்டாய்? இது வேறு வழி அல்லவா?" என்று கேட்டார் நற்செய்தியாளர்.

"ஐயா, நான் நம்பிக்கையிழப்புச் சேற்றிலிருந்து வெளியேறி நடந்து வந்தபோது ஒரு பெரியவர் என்னைச் சந்தித்தார். அவர்தான் அதோ முன்னால் தெரியும் ஊரில் ஓர் அறிஞர், இந்தப் பாரச்சுமை நீங்க உடனடியாக வழிசொல்லுவார் என்று கூறி அனுப்பினார். அவர் பேச்சைக் கேட்டுத்தான் இந்த வழியே வந்தேன்." என்றான் கிறிஸ்தியான்.

"அப்படியா? உனக்கு ஆலோசனை கூறியவன் எப்படிப் பட்டவன்?" என்று கேட்டார் நற்செய்தியாளர்.

"அவரைப் பார்த்தாலே ஒரு பெரியவர்போலத்தான் தோன்றியது நீண்ட நேரம் என்னோடு வாதாடி, என்னை இந்த வழியில் திரும்பச் செய்தார். அதனால்தான் இங்கே வந்து மாட்டிக்கொண்டேன். இந்த மலைச் சிகரம் என்மீது விழுந்துவிடுமோ என்று பயந்து ஒண்டிக்கொண்டிருக்கிறேன்" என்றான் கிறிஸ்தியான் தழுதழுத்த குரலில்.

"அந்தப் பெரியவன் உன்னிடத்தில் என்ன கேட்டான்?" என்று தொடர்ந்து கேட்டார் நற்செய்தியாளர்.

"அவர் நிறையக் கேள்விகள் கேட்டார். முதலில் நீ எங்கே போகிறாய் என்று கேட்டார். நான் இன்ன இடத்துக்குப் போகிறேன் என்று சொன்னேன்."

"அதன்பிறகு?"

"உனக்கு மனைவி, பிள்ளைகள் இருக்கிறார்களா என்று கேட்டார். ஆமாம் என்று கூறிய நான், இந்தப் பாரச்சுமையை

ஒழிக்கும் வரையில் எனக்கு அவர்களைப் பற்றிய எண்ணமே கிடையாது என்று கூறிவிட்டேன்" என்றான் கிறிஸ்தியான்.

"அப்புறம் வேறு ஏதாவது சொன்னானா?" மீண்டும் கேட்டார் நற்செய்தியாளர்.

"உன் பாரச் சுமையைச் சீக்கிரம் எறிந்துபோடு என்று ஆலோசனை கூறினார். உடனே நான் அதைத் தொலைப்பதற் காகத்தான் குறுகிய வாசலை நோக்கிப் பயணம் செய்கிறேன். அங்கே நான் செய்ய வேண்டியது என்ன என்று சொல்லப்படும் என்று கூறினேன். ஆனால் அவரோ இந்தச் சுமையை நீக்க சமீபமான, பாடுகள் இல்லாத ஒரு வழியைக் காட்டுகிறேன் என்று சொல்லி இந்தப் பாதையைக் காட்டினார். இந்த வழியாகச் சென்றால் ஓர் அறிஞர் வீடு வருமென்றும் அவர் இந்தச் சுமையை உடனடியாக நீக்க வழிசொல்வார் என்றும் கூறினார். நானும் அவர் பேச்சை நம்பி இந்தப் பாதையில் வந்துவிட்டேன். பாரச் சுமையும் போகவில்லை! ஆபத்துக்கள்தான் அதிகமாகிவிட்டன. என்னைக் காப்பாற்றுங்கள் ஐயா" என்று கெஞ்சினான் கிறிஸ்தியான்.

"அப்படியானால் உனக்கேற்ற கடவுளுடைய வார்த்தைகளைக் கூறுகிறேன், கேள்" என்று நற்செய்தியாளர் கூறியவுடன் கிறிஸ்தியான் மரியாதையோடு கைகட்டி நின்றான்.

"பேசுகிறவருக்கு நீங்கள் செவிகொடுக்கமாட்டோமென்று விலகாதபடி எச்சரிக்கையாயிருங்கள்; ஏனெனில், பூமியிலே பேசினவருக்குச் செவிகொடுக்கமாட்டோமென்று விலகினவர்கள் தப்பிப்போகாமலிருக்க, பரலோகத்திலிருந்துப் பேசுகிறவரை நாம் விட்டுவிலகினால் எப்படித் தப்பிப்போவோம்?" (எபி. 12:25) என்ற வசனத்தை வாசித்த நற்செய்தியாளர் தொடர்ந்து, "விசுவாசத்தினாலே நீதிமான் பிழைப்பான், பின்வாங்கிப் போவானானால் அவன்மேல் என் ஆத்துமா பிரியமாயிராது" (எபி. 10:38) என்ற வசனத்தையும் அவனுக்குப் படித்துக் காட்டினான்.

"நீதான் இந்த வசனங்கள் குறிப்பிடும் மனிதன். அழிவை நாடிப்போகிறவன் நீதான். ஆண்டவருடைய ஆலோசனையை அலட்சியம்பண்ணவும், சமாதானத்தின் பாதையைவிட்டுப் பின்வாங்கி அழிவுப் பாதையில் செல்லவும் நீ துவங்கிவிட்டாய்" என்று கிறிஸ்தியானைக் கடிந்துரைத்தார் நற்செய்தியாளர்.

இந்தச் சொற்கள் கிறிஸ்தியானின் உள்ளத்தில் இடியைப் போலத் தாக்கின. அவன் கண்கள் கலங்கின.

உடனடியாக நற்செய்தியாளரின் காலில் விழுந்து, "ஐயோ, நான் அழியப்போகிறேன், என்னைக் காப்பாற்றும்" என்று கதறினான்.

நற்செய்தியாளர் அவன் வலது கையைப் பிடித்து அவனைத் தூக்கி நிறுத்தி, " 'எந்தப் பாவமும் எந்தத் தூஷணமும் மனுஷருக்கு மன்னிக்கப்படும்' (மத். 12:31); 'அவிசுவாசியாயிராமல் விசுவாசியாயிரு' (யோவான் 20:27)" என்று கூறி கிறிஸ்தியானைத் திடப்படுத்தினார்.

கிறிஸ்தியான் இன்னும் முழு பயமும் தெளியாத நிலையில் நற்செய்தியாளருக்கு முன்பாக நடுங்கியபடியே நிற்பதை என் கனவில் கண்டேன்.

"கிறிஸ்தியானே, நான் கூறும் உண்மைகளைக் கவனமாகக் கேள். உன்னை ஏமாற்றியவன் யாரென்றும், அவன் யாரிடம் உன்னைப் போகச் சொன்னான் என்றும் நான் உனக்குத் தெளிவாகக் கூறுகிறேன். உன்னைச் சந்தித்தவன்தான் உலகஞானி, பெயருக்கேற்றபடி உலகத்தின் ஞான நூல்களைப் படித்து, அவற்றைக் கைக்கொள்ளும் வகையில் நற்செய்கை களிலுள்ள கோயிலுக்குச் செல்லுகிறான். இந்தப் போதனைகள் சிலுவையைப் பற்றிய உபதேசத்திற்கு விரோதமாக இருப்பதால் அவனுக்கு மிகவும் பிடித்தமானவையாக உள்ளன. அவன் மாம்ச இச்சையின்படி நடப்பவன். அதனால்தான் நான் சரியான வழியைக் காட்டினாலும் கூட அவன் அந்தப் பாதையில் செல்லும் ஆள்கள் வழிவிலகிப் போகும்படி தூண்டுகிறான். அவனுடைய போதனையில் நீ வெறுத்து ஒதுக்க வேண்டிய மூன்று காரியங்களைப் பற்றி இப்போது விளக்கமாகக் கூறுகிறேன்" என்று கூறிய நற்செய்தியாளர் தொடர்ந்து பேசினார்.

"உன்னை வழியை விட்டுத்திருப்பினது முதல் குற்றம்; சிலுவையைப்பற்றி உனக்குள் வெறுப்பை உண்டாக்க முயன்றது இரண்டாவது குற்றம்; கடைசிக் குற்றம் அழிவின் பாதையில் உன்னை வழிநடத்தியதுதான்".

"நீ அவன் பேச்சைக் கேட்டு உன் வழியைவிட்டுத் திரும்பியது அருவருக்கத்தக்க செயல். ஏனெனில் இது சர்வ ஞானமுள்ள கடவுளின் ஆலோசனையை அசட்டை செய்து விட்டு, உலகத்திலுள்ள ஒருவனுடைய வார்த்தைகளை ஏற்றுக் கொள்ளுவதைப்போல முட்டாள் தனமான செயல் இது. 'இடுக்கமான வாசல்வழியாய் உட்பிரவேசிக்கப் பிரயாசப்படுங்கள்' (லூக்கா 13:24) என்று ஆண்டவர் சொல்லியிருக்கிறார். அந்தக் குறுகிய வாசலுக்குப் போகவே நான் உனக்கு வழிகாட்டினேன்;

ஏனெனில் ‘ஜீவனுக்குப் போகிற வாசல் இடுக்கமும் வழிநெருக்கமுமாயிருக்கிறது; அதைக் கண்டுபிடிக்கிறவர்கள் சிலர்’ (மத். 7:14). இந்த இடுக்கமான வாசலைவிட்டும், அதற்குச் செல்லும் வழியிலிருந்தும் அந்தப் பாவி உன்னை விலக்கி, அழிவின் பாதையில் உன்னைக் கொண்டுவந்து விட்டுவிட்டான். எனவே உன்னை வழிவிலகும்படி திருப்பின அவனும், அவன் போதனையைக் கேட்டுத் திசை திரும்பின நீயும் ஆண்டவருக்கு விரோதமானவர்களே.

“இரண்டாவதாக நீ சிலுவைமீது வெறுப்புக்கொள்ளும்படி அவன் செய்ததை நீ வெறுக்க வேண்டும். ஏனெனில் எகிப்தின் பொக்கிஷங்களைவிட (எபி. 11:25, 26) நாம் சிலுவையையே நாடவேண்டும். மட்டுமின்றி, ‘தன் ஜீவனைச் சிநேகிக்கிறவன் அதை இழந்துபோவான்’ (யோவான் 1:25) என்றும், ‘யாதொருவன் என்னிடத்தில் வந்து, தன் தகப்பனையும், தாயையும், மனைவியையும், பிள்ளைகளையும், சகோதரரையும், சகோதரிகளையும், தன் ஜீவனையும் வெறுக்காவிட்டால் எனக்குச் சீஷனாயிருக்கமாட்டான் (லூக்கா 14:26) என்றும் ஆண்டவரே கூறியிருக்கிறாரே! அதனால் கிறிஸ்தியானே, சத்தியமான ஆண்டவரின் வழி தவறானது என்று கூறி, அந்த வழியில் அழிவும் மோசங்களும் உண்டென்று ஒருவன் கூறினால் அவன் காட்டும் வேறு வழியில் நீ நித்திய ஜீவனைக் கண்டடைய முடியாது. இந்தப் போதனையையும் நீ ஏற்றுக்கொள்ளக் கூடாது.

“மூன்றாவதாக அவன் மரணத்துக்கேதுவான பாதையில் உன்னை வழிநடத்தியதற்காக நீ அவனை வெறுக்க வேண்டும். அவன் உன்னை யாரிடம் போய் ஆலோசனை கேட்கச் சொன்னான் தெரியுமா? அவன்தான் இப்போதிருக்கிற அடிமைப்பெண்ணின் மகனாகிய நியாயப்பிரமாணிகன் என்பவன். அவனே தன் பிள்ளைகளோடு கூட அடிமைத் தளையில் இருக்கிறான்! எங்கே உன்மேல் விழுந்துவிடுமோ என்று நீ பயந்துகொண்டிருக்கிற இந்த மலை, உள் அர்த்தத்தின்படி, சீனாய் மலையைக் குறிக்கிறது. அடிமைத்தளையில் தானே கட்டுண்டவர்கள் உன்னை விடுதலையாக்க முடியுமா என்று நீ எண்ணிப்பார். அந்த நியாயப்பிரமாணிகனால் நிச்சயமாக உன் சுமையை அகற்றவே முடியாது! உலகம் உண்டானது முதல் அவன் இதுவரை ஒருவனையும் காப்பாற்றியதுமில்லை; இனி காப்பாற்றப் போவதுமில்லை! நியாயப்பிரமாணத்தின் கிரியைகளினால் ஒருவனும் நீதிமான் ஆகிவிடமுடியாது. ஏனெனில் நியாயப்பிரமாணத்தின்படி நடப்பதால் நமது பாரச் சுமை

நம்மைவிட்டு நீங்கிப் போவதுமில்லை! உனக்கு இந்த வழியைக் காட்டிய உலகஞானி உன் எதிரி! நியாயப்பிரமாணிகனோ ஓர் ஏமாற்றுக்காரன்! அவன் மகன் மரியாதையோ, நடிப்பதில் மன்னன், ஆனால் சரியான மாய்மாலக்காரன்! இவர்கள் ஒருவராலும் உனக்கு உதவி கிடைக்கப்போவதில்லை. நான் சொல்லுவதை நம்பு இந்த வெட்டிப் பயல்களால் உனக்கு எந்தவிதப் பயனும் கிடைக்கப்போவதில்லை! மீட்பின் பாதையில் சென்ற உன்னை ஏமாற்றி வழிவிலகச் செய்யவே அவன் முயன்றான்" என்று தெளிவாக விளக்கிக்கூறிய நற்செய்தியாளர் தான் கூறியது அனைத்தும் உண்மை என்பதற்கு ஆதாரமாகப் பல வேத வசனங்களை வாசித்துக் காட்டினார்.

அப்போது அந்த மலையின் அடிவாரத்திலிருந்து குபீரென்று அக்கினி புறப்பட்டது; பலத்த வெடியோசையும் கேட்டது! இதைக் கண்ட கிறிஸ்தியான் பயந்து நடுநடுங்கி நின்றான்!

''நியாயப்பிரமாணத்தின் கிரியைக்காரராகிய யாவரும் சாபத்திற்குட்பட்டிருக்கிறார்கள்; நியாயப்பிரமாண புத்தகத்தில் எழுதப்பட்டவைகளையெல்லாம் செய்யத்தக்கதாக அவைகளில் நிலைத்திராதவன் எவனோ அவன் சபிக்கப்பட்டவன் என்று எழுதியிருக்கிறதே'' (கலா. 3:10) என்ற வார்த்தைகள் மிகவும் தெளிவாகக் கேட்டன!

இதைக் கேட்ட கிறிஸ்தியான் "ஐயோ, இனி எனக்கு வாழ்வு ஏது? மரணம்தான் எனக்குத் தண்டனை" என்று புலம்பியபடி தாரை தாரையாகக் கண்ணீர் சொறிய கதறி அழுதான். "உலக ஞானியின் பேச்சைக் கேட்ட என்னைப்போன்ற முட்டாள் உண்டோ!" என்று தன்னைத்தானே, நொந்து கொண்டான். உலக ஞானியின் ஆலோசனை தனது மாம்ச இச்சைக்கு ஏற்ற வகையில் இருந்ததால்தானே, அவன் பேச்சைக் கேட்டு பாதைமாற நேர்ந்துவிட்டது என்று மனம் பதைத்தான். பிறகு மிகவும் தாழ்மையோடு நற்செய்தியாளரிடம் வேண்டுதல் செய்தான்!

''ஐயா, கருணையுடையவரே, எனக்கு இன்னும் வாழ்வு கிடைக்கும் என்ற நம்பிக்கையுண்டா? நான் மறுபடியும் குறுகிய வாசலை நோக்கிப் பயணம் செய்யலாமா? அப்படி ஒருவேளை நான் அங்கே போய்ச் சேர்ந்தாலும் வழிவிலகினதின் காரணமாக எனக்கு இடமில்லை என்று கூறிவிடுவார்களோ? அந்த மனிதனுடைய பேச்சைக் கேட்டு நடந்ததற்காக நான் முழு மனதோடு வருத்தப்படுகிறேன். பரம ஆண்டவர் எனது தவறுகளை மன்னிப்பாரா? கூறும் ஐயா" என்று நற்செய்தியாளரிடம் கெஞ்சினான் கிறிஸ்தியான்.

"நீ செய்தது மாபெரும் தவறுதான். ஒரு தப்பல்ல, இரண்டு பாவங்களை நீ செய்திருக்கிறாய். ஒன்று விதிக்கப்பட்ட வழியிலிருந்து விலகினாய். இரண்டாவது விலக்கப்பட்ட வழியில் கால் வைத்தாய். ஆனாலும் வாசல் அருகிலுள்ள மனிதர் உன்னை ஏற்றுக்கொள்வார். ஏனெனில் அவர் மனிதர்மேல் பிரியமானவர். நீயோ மீண்டும் செல்லும் வழியில் வழிவிலகிவிடாதபடி, கவனம் சிதறிவிடாதபடி நேராகச் செல். ஏனெனில் இன்னும் கொஞ்சக் காலத்திலே அவருடைய கோபம் பற்றி எரியும்! (சங். 12:2)" என்றார் நற்செய்தியாளர்.

அதன்பின்னர் அவர் கிறிஸ்தியானை முத்தமிட்டு, கடவுள் உன் பயணத்தை வாய்க்கச் செய்வாராக என்று ஆசீர்வதித்து, புன்சிரிப்புடன் அவனை வழியனுப்பி வைத்தார்.

கிறிஸ்தியான் மிகவும் விரைவாக நடந்து சென்றான். எதிரே வரும் எவருடனும் அவன் முகம் கொடுத்துப் பேசவே இல்லை! உலகஞானியைச் சந்தித்த இடத்தை அடைந்த அவன், குறுகிய வாசல் செல்லும் சரியான பாதையில் காலடி எடுத்து வைத்தான்.

சிறிது நேரத்தில் குறுகிய வாசலை அடைந்து விட்டான் கிறிஸ்தியான். அங்கே வாசல் நிலையின்மீது "தட்டுங்கள். அப்பொழுது உங்களுக்குத் திறக்கப்படும்" (மத். 7:7) என்று எழுதப்பட்டிருந்தது.

ஐயையா, பாவி நான்! கதவு திறவும் ஐயா!

அழிநகரப் பாவி இதோ நான்
கிறிஸ்தியான் - பாரம் சுமந்தேன்

பாழான பாரம் நீக்க கதவு திறவும்
பாரம் இறக்குவேன் ஐயா!
பாவி, துரோகி, துஷ்டன் நான்தான்
ஆனாலும் ஐயா-கண்பாருமேன்!

ஆவியில் துதிப்பேன் ஐயா!
கதவு திறவும் ஐயா!

என்று புலம்பிய கிறிஸ்தியான் கதவை மீண்டும் தட்டினான். அப்போது தயாளன் என்ற பெரியவர் கதவண்டை வந்து நின்று, "யாரப்பா அது? எங்கேயிருந்து வருகிறாய், என்ன வேண்டும்?" என்று கேட்டார்.

"அழிநகரத்திலிருந்து பாரம் சுமந்து வருகிறேன், ஐயா. வருங்கோபத்திற்குத் தப்பிப் பிழைக்கும்படி சீயோன் மலை செல்கிறேன். இந்த வாசல் வழியாகத்தான் செல்ல வேண்டு

மென்று கேள்விப்பட்டேன், ஐயா தயவுசெய்து எனக்கு வழிகாட்டுவீரா?" என்று தாழ்மையுடன் கேட்டான் கிறிஸ்தியான்.

"நிச்சயமாக! உள்ளே வா, இதோ கதவைத் திறக்கிறேன்" என்று அன்புடன் கூறிய தயாளன் கதவைத் திறந்தார்.

8. குறுகிய வாசல் கோட்டையை அடைதல்

கதவு திறந்தவுடன் கிறிஸ்தியான் மெதுவாக உள்ளே காலடி எடுத்து வைத்தான். ஆனால் அதற்குள் தயாளன் அவன் கையைப் பிடித்து உள்ளே இழுத்து, கதவைச் சாத்திவிட்டார்.

"ஏனய்யா, இப்படி இழுக்கிறீர்கள்?" என்று கேட்டான் கிறிஸ்தியான்.

"அதுவா? சொல்கிறேன் கேள். இந்தக் கோட்டைக்குச் சற்றுத் தொலைவில் ஒரு பலத்த கோட்டை கட்டப்பட்டிருக்கிறது. **பெயல்செபூல்** என்பவன் அதற்குத் தலைவனாக இருக்கிறான். அவனும் அவனுடைய வீரர்களும் இந்த வாசலண்டை வருகிறவர்கள் உள்ளே நுழையுமுன் அம்பெய்து அவர்களைக் கொன்றுவிடுகிறார்கள். அதனால்தான் அப்படி அவசரமாக உன்னை இழுத்தேன்" என்று விளக்கினார் தயாளன்.

"அப்படியா? என்னுடைய கவலையின் மத்தியிலும் எனக்கு மகிழ்ச்சியாக இருக்கிறது" என்றான் கிறிஸ்தியான்.

"அதுசரி, இங்கே வரும்படி உனக்கு வழிகாட்டியது யார்?" என்று கேட்டார் தயாளன்.

"நற்செய்தியாளர் என்ற நல்ல மனிதர்தான் எனக்கு இந்த வழியைக் காண்பித்து, இந்த வாசலண்டை வந்து கதவைத் தட்டச் சொன்னார். இங்கே நான் அடுத்துச் செய்யவேண்டியது என்னவென்றும் கூறப்படும் என்றும் கூறினார்" என்றான் கிறிஸ்தியான்.

"நீ இனி கவலைப்பட வேண்டியதில்லை, அப்பா, இதோ உனக்குமுன் ஒரு விரிவான வாசல் திறக்கப்பட்டிருக்கிறது. அதை யாரும் பூட்டிவிட முடியாது" என்று அவனை ஆறுதல் படுத்தினார் தயாளன்.

"என் துன்பமெல்லாம் இன்பமாக மாறும் நாள் நெருங்கி விட்டது என்று நினைக்கிறேன்" என்று பெருமூச்சுவிட்டான் கிறிஸ்தியான்.

"நீ ஏன் தனியாக வந்தாய்" என்று கேட்டான் தயாளன்.

“எனக்கு அழிவு நிச்சயம் என்பதை முதலில் நான் உணர்ந்து கொண்டேன், ஐயா. ஆனால் என்னுடைய ஊரார் ஒருவருமே அதை நம்பவில்லை. அதனால்தான் நான் மட்டும் தனியே புறப்பட வேண்டியதாயிற்று” என்றான் கிறிஸ்தியான்.

“நீ புறப்பட்டதாவது அவர்களுக்குத் தெரியுமா?”

“தெரியும், ஐயா என் மனைவியும் பிள்ளைகளும் என்னைத் திரும்பி வரும்படி கூப்பிட்டார்கள். மற்றும் சில அயலாரும் கூவி அழைத்தார்கள். ஆனால் நானோ காதைப் பொத்திக்கொண்டு ஓடி வந்துவிட்டேன்.”

‘‘ஒருவரும் உன்னைப் பின்தொடர்ந்து, திரும்பும்படி வற்புறுத்தவில்லையா?’’

“வந்தார்கள் ஐயா, எங்கள் ஊரைச்சேர்ந்த பிடிவாதக்காரன், விட்டுக்கொடுப்பவன் என்ற இரு இளைஞர்களும் ஓடி வந்தார்கள். என்னைப் பின்வாங்கச் செய்யும்படி எவ்வளவோ முயற்சி செய்தார்கள். நான் திரும்பி வரப்போவதில்லை என்று கண்டவுடன் பிடிவாதக்காரன் விருப்பம்போல் திட்டிவிட்டுத் திரும்பிச் சென்று விட்டான். விட்டுக்கொடுப்பவன் மட்டும் என்னுடன் வந்தான்” என்றான் கிறிஸ்தியான்.

“அப்படியானால் அவனை எங்கே காணோம்?’’ என்று கேட்டார் தயாளன்.

“நாங்கள் இருவருமாகச் சேர்ந்து நம்பிக்கையிழப்பு என்ற குட்டைவரை வந்தோம், ஐயா. ஆனால் கவனக் குறைவினால் சேற்றினுள் விழுந்துவிட்டோம். அதனால் கோபமடைந்த விட்டுக்கொடுப்பவன் ‘நான் இனி வரவில்லை. நீயே போய் என் பங்கையும் சேர்த்து அனுபவித்துக்கொள்’ என்று கத்திவிட்டு ஊருக்குத் திரும்பிவிட்டான். நான் மட்டும் இதோ வந்து சேர்ந்திருக்கிறேன்” என்றான் கிறிஸ்தியான்.

“அடடா, விட்டுக்கொடுப்பவன் மேலோக இன்பங்களைப் பற்றி இழிவாக நினைத்துவிட்டானே! அதற்காகச் சிறுசிறு துன்பங்களைக்கூடச் சகிக்க முடியாதா?” என்று அங்கலாய்த்தார் தயாளன்.

“அவனாவது மனதில் உள்ளதை அப்படியே கூறினானே! நானோ உலகஞானி என்பவனின் பேச்சைக் கேட்டு என் பாதையைவிட்டு விலகிவிட்டேனே’’ என்று குறைவுபட்டுக் கொண்டான் கிறிஸ்தியான்.

‘‘அப்படியா? அவன் உன்னையும் கெடுக்க முயற்சி செய்தானோ? நியாயப்பிரமாணிகன் என்பவரிடம் போனால்

உன் பாரம் நீங்கிவிடும் என்று கூறியிருப்பானே! நீ அவன் பேச்சைக் கேட்டாயா? இருவருமே சரியான ஏமாற்றுப் பேர்வழிகளாயிற்றே" என்றார் தயாளன்.

"ஆமாம் ஐயா, நானும்கூட அவன் பேச்சைக் கேட்டு நியாயப்பிரமாணிகனின் வீட்டுக்குப் போகப் புறப்பட்டு விட்டேன். ஆனால் வழியில் மலையடிவாரத்தை நெருங்கியபோது மலையே என்மேல் விழுந்துவிடும் போலத் தோன்றியது. பயந்து நின்றுவிட்டேன்" என்றான் கிறிஸ்தியான்.

"அம்மலை அநேகரைக் கொன்றிருக்கிறது. நீ தப்பி வந்ததே பெரிய காரியம்" என்றார் தயாளன்.

"மலையைப் பார்த்து நடுங்கிக் கொண்டிருக்கும்போது நல்லவேளையாக நற்செய்தியாளர் அங்கு வந்தார். அவர் வந்தது கடவுளின் கிருபை என்றே நினைக்கிறேன். மலைக்குத் தப்பி இங்கே வந்து உங்களிடம் பேச தயவளித்த ஆண்டவருக்கு எப்படி நன்றி கூறுவது?" என்று உணர்ச்சிவசப்பட்டான் கிறிஸ்தியான்.

"இங்கே வருபவர்கள் முன்பு எப்படியிருந்தாலும் எவ்வளவு பாவிகளாயிருந்தாலும் அதனால் நாங்கள் அவர்கள் இங்கே வருவதைத் தடைசெய்வதில்லை. எந்தக் காரணத்தைக் கொண்டும் அவர்கள் தள்ளிவிடப்படமாட்டார்கள் (யோவான் 6:37). கிறிஸ்தியானே நீ என்னோடுகூட வந்தால் நீ செல்ல வேண்டிய வழியை உனக்குக் காண்பிப்பேன். அதோ முன்னால் தெரிகிறதே இடுக்கமான வழி, அந்த வழியாகத்தான் நீ செல்ல வேண்டும். நமது முன்னோர்கள், தீர்க்கதரிசிகள், இயேசு கிறிஸ்து, அப்போஸ்தலர்கள் அனைவரும் இந்தப் பாதையின் வழியேதான் நடந்துபோயிருக்கிறார்கள். இந்த நேரான வழியில்தான் நீ நடந்து செல்லவேண்டும்" என்றார் தயாளன்.

"புதிதாக இந்த வழியே செல்பவர்கள் வழிதவறிப் போகும் வகையில் ஏதேனும் பாதை பிரிந்து செல்லுகிறதா?" என்று கேட்டான் கிறிஸ்தியான்.

"இடப்புறமும், வலப்புறமும் அநேக கிளைப்பாதைகள் பிரிந்து செல்லும். ஆனால் அவை அகலமாகவும், வளைந்து வளைந்தும் காணப்படுவதால் எளிதில் இனம் கண்டு கொள்ளலாம். இடுக்கமான, நேரான வழியில் நீ தொடர்ந்து சென்றால் போதுமானது" என்று விளக்கினார் தயாளன்.

அப்போது கிறிஸ்தியான் அவரை நோக்கி, "ஐயா, என் முதுகிலிருக்கும் இந்தச் சுமை நீங்கும்படி செய்ய மாட்டீரா?" என்று கெஞ்சிக் கேட்பதை நான் என் கனவில் கண்டேன்.

அவன் இன்னும் அந்தச் சுமையுடன் தான் அவதிப்பட்டுக் கொண்டிருந்தான். தானே அதை எறிந்துபோடவும் அவனால் முடியவில்லை!

"உன் முதுகுச் சுமையை என்னால் இறக்கிவிட முடியாது அப்பா. நீ ஓரிடத்தை அடைந்தவுடன் அந்தச் சுமை தானாகவே விழுந்துவிடும். அதுவரை நீ பொறுமையோடு இதைத் தூக்கிக் கொண்டு செல்லவேண்டியதுதான்'' என்று கூறிவிட்டார் தயாளன்.

அப்போது கிறிஸ்தியான் மீண்டும் பயணம் புறப்பட ஆயத்தமாவதை நான் என் கனவில் கண்டேன்.

"கிறிஸ்தியானே, நீ இன்னும் சிறிது தூரம் சென்றால் **விளக்கம்கூறுபவர்** என்ற ஞானியின் மாளிகையை அடைவாய். அங்கே சென்றவுடன் வாசல் கதவைத் தட்டு. அவர் உனக்கு அநேக மேலானவைகளைக் காட்டுவார்" என்று கூறி அவனை ஆசீர்வதித்து வழியனுப்பி வைத்தார்.

9. விளக்கம்கூறுபவரின் வீட்டை அடைதல்

நடந்துசென்ற கிறிஸ்தியான் விளக்கம் கூறுபவரின் மாளிகையை அடைந்து கதவைத் தட்டினான். பலமுறை தட்டிய பின்னரே ஒருவன் கதவின் அருகே வந்து, "யார் அங்கே?" என்று கேட்டான்.

"ஐயா, நான் மோட்சப் பயணம் செய்யும் ஓர் எளியவன். இந்த மாளிகையின் எசமானுக்குத் தெரிந்த ஒருவர் எனக்கு இங்கே வர வழிகாட்டினார். எசமானரோடு நான் பேசவேண்டும். தயவுசெய்து கதவைத் திறவுங்கள்'' என்று வேண்டினான் கிறிஸ்தியான்.

உடனே அந்த மனிதன் வீட்டு எசமானிடம் சென்று இதுபற்றிக் கூறினான். விளக்கம்கூறுபவர் கிறிஸ்தியானிடம் வந்து, "உனக்கு என்ன வேண்டும், சொல் அப்பனே" என்று கேட்டார்.

"ஐயா, நான் அழிநகரத்திலிருந்து மோட்சத்தை நோக்கிப் பயணம் செல்கிறேன். தயாளன் என்ற ஒருவர் என்னை இங்கு போகச் சொன்னார். இங்கு வந்தால் எனது பயணத்திற்குப் பயனுள்ள பல செய்திகள் கூறப்படும் என்றும் கூறினார். அதனால்தான் இங்கு வந்தேன்" என்றான் கிறிஸ்தியான்.

"அப்படியா? வா என்னுடன்'' என்று கூறிய விளக்கம் கூறுபவர் கிறிஸ்தியானை உள்ளே அழைத்துச் சென்றார். அவருடைய வேலைக்காரன் ஒரு விளக்கை ஏந்தியவனாக அவர்கள் பின்னே சென்றான்.

ஒரு கதவைத் திறந்து உள்ளே நுழைந்தார் விளக்கம் கூறுபவர். அவருடன் நுழைந்த கிறிஸ்தியான் அங்கே சுவற்றில் ஓர் உத்தமரின் படம் மாட்டப்பட்டிருப்பதைக் கண்டான். அவருடைய கண்கள் விண்ணை நோக்கிக் கொண்டிருந்தன. அவர் கையில் மிகவும் மேன்மையான ஒரு நூல் இருந்தது; அந்த நூலில் எழுதப்பட்டிருந்தது அனைத்தும் சத்தியமே. அவருடைய உதடுகளில் சத்திய வார்த்தைகள் காணப்பட்டன. பூமி உருண்டை அவருக்குப் பின்னாகக் காணப்பட்டது. மனிதரோடு பரிந்துபேசுகிறவராக அவர் நின்றுகொண்டிருந்தார். அவர் தலையில் பொற்கிரீடம் அணிந்திருந்தார். இந்தப் படத்தைக் கண்டவுடன் கிறிஸ்தியான் "யார் இவர்?" என்று கேட்டான்.

''இவர் இலட்சம் பேரிலும் சிறந்த ஓர் உத்தமர். 'கிறிஸ்துவுக்குள் பதினாயிரம் உபாத்தியாயர்கள் உங்களுக்கு இருந்தாலும், தகப்பனார் அநேகர் உங்களுக்கு இல்லையே; கிறிஸ்து இயேசுவுக்குள் சுவிசேஷத்தினால் நான் உங்களைப் பெற்றேன்...என் சிறு பிள்ளைகளே, கிறிஸ்து உங்களில் உருவாகு மளவும், உங்களுக்காக மறுபடியும் கர்ப்பவேதனைப்படுகிறேன்' *(1 கொரி. 4:15; கலா. 4:9)* என்று அப்போஸ்தலனைப்போல இவரும் கூறலாம். அவர் கண்கள் விண்ணை நோக்கி யிருப்பதையும், கையில் உன்னதமான நூல் இருப்பதையும், நல்ல சத்தியம் இருப்பதையும் காண்கிறாயே, மறைவான சத்தியங்களைப் பாவிகளுக்கு வெளிப்படுத்துவதே அவருடைய பணி என்று இவை காட்டுகின்றன. இவர் மனிதரோடு தேவ சத்தியங்களைப்பற்றிப் பரிந்து பேசுகிறவராகவும் காணப்படுகிறார். உலகம் அவருக்கு பின்னால் இருப்பது, அவர் தமது பரம எசமானுக்காக உலக சிற்றின்பங்களை ஒதுக்கித்தள்ளுகிறார் என்பதையும், தலையிலுள்ள கிரீடம் அவர் பரலோக நன்மைகளையே விரும்புகிறார் என்பதையும் சுட்டிக் காட்டுகின்றன. நீ நாடிச் செல்லும் நாட்டின் அதிபதி இவரையே உன் வழிகாட்டியாக ஏற்படுத்தியுள்ளார். அதனால்தான் அவர் படத்தை உனக்கு முதலாவதாகக் காட்டினேன். நீ போகும் வழியில் வேறு எவராவது உனக்கு முன்னால் வந்து "நான்தான் வழிகாட்டி" என்று கூறினாலும் அவர்களை நம்பி நீ வழிவிலகிப் போய் விடாதே. நான் உனக்கு காண்பிக்கப்போகும் அநேக காரியங்களை நன்றாகக் கவனித்து அதன்படி செய்தால் அழிவுக்குத் தப்பலாம்' என்று அறிவுரை கூறினார் விளக்கம் கூறுபவர்.

பின்பு அவர் எத்தனையோ ஆண்டுகளாகத் தூசிபடிந்து போயிருந்த ஓர் அறைக்குள் கிறிஸ்தியானை அழைத்துச் சென்றார். ஒரு மனிதனை அழைத்து அந்த அறையைப்

பெருக்குமாறு கட்டளையிட்டார். அவன் ஒரு துடைப்பத்தை எடுத்துப் பெருக்கத் துவங்கினான். மேகம்போல எழுந்த தூசிப் படலத்தினால் கிறிஸ்தியானுக்கு மூச்சுத் திணறியது. இதைக் கண்ட விளக்கம்கூறுபவர் அருகில் நின்றிருந்த ஒரு பெண்ணிடம் தூசியின்மீது தண்ணீர் தெளிக்கும்படி கட்டளையிட்டார். தண்ணீர் தெளித்தவுடன் எளிதாகப் பெருக்க முடிந்தது.

“இதன் பொருள் என்ன ஐயா?” என்று கேட்டான் கிறிஸ்தியான்.

‘சொல்கிறேன் கேள். இந்த அறை நற்செய்தியின் கிருபையினால் ஒருபோதும் சுத்தமாக்கப்படாத ஒரு மனிதனின் இருதயத்தைக் குறிக்கிறது; முழு மனிதனையும் அசுத்தமாக்கி யிருக்கும் ஜென்மப் பாவமே இந்தத் தூசியும், குப்பையும்! முதலில் அதைப் பெருக்கி மூச்சுத் திணரும்படி செய்தவன்தான் **நியாயப்பிரமாணம்**. அதன் மேல் தண்ணீர் தெளித்த பெண்தான் **நற்செய்தி!** முதலாவது துடைப்பத்தைக் கொண்டு சுத்தம்பண்ணும்போது, அவனால் அதைப் பெருக்கவும் முடியவில்லை! உனக்கும் மூச்சுவிட முடியாதபடி மூச்சுத் திணறியதே! நியாயப்பிரமாணமானது மனிதனுடைய இருதயத்தின் பாவங்களைச் சுத்திகரிப்பதற்குப் பதிலாக, பாவத்துக்கு உயிர் கொடுத்து (ரோமர் *7:9*), பலமளித்து (*1* கொரி. *15:56*), அவை பெருகும்படி செய்கிறது; பாவம் என்பது எது என்பதை அறிந்துகொள்ளும் அறிவை அது கொடுத்தாலும், பாவம் செய்யாதே என்று கட்டளையிட்டாலும் பாவத்தை வெற்றிகொள்ளும் பலத்தை நமக்கு அளிப்பதில்லை என்பதையே தூசி புகையாகக் குவிந்து வெளிப்படுத்துகிறது. ஆனால் தண்ணீர் தெளித்தவுடனே தூசு அடங்கிப்போய், பெருக்குவது எளிதாக இருந்ததைக் கண்டாய். நற்செய்தியின் மேன்மையான போதனைகள் இருதயத்தில் ஏற்றுக்கொள்ளப்படும்போது, நாம் அந்த உண்மைகளை விசுவாசிப்பதினால், தண்ணீர் தெளித்ததினால் தூசி அடங்கியதுபோல, பாவம் நம்மை மேற்கொள்ளாமல் அடக்கப்படுகிறது. எளிதாகப் பெருக்க முடிந்ததுபோல பாவம் இருதயத்திலிருந்து அகற்றப்பட்டு, இருதயமாகிய அறை உன்னதமான மகிமையின் இராஜா வசிப்பதற்கேற்ற மாளிகையாகிறது. இதையே இந்த எடுத்துக்காட்டு விளக்குகிறது” என்றார் விளக்கம்கூறுபவர்.

மேலும் எனது கனவில் அவர் கிறிஸ்தியானை ஒரு சிறிய அறைக்குள் அழைத்துச் செல்வதைக் கண்டேன். அங்கே இரண்டு சிறுவர்கள் எதிரெதிராக நாற்காலிகளில் அமர்ந்திருந்தார்கள். **பொறாமை** என்பவன் அவர்களில் மூத்தவன்; இளையவனின் பெயர் **பொறுமை**. பொறாமை பார்ப்பதற்குக் கொடூரமானவன்

போலத் தோற்றமளித்தான்; இளையவனோ சாந்த முகத்தோடு அமர்ந்திருந்தான்.

இதைக் கண்ட கிறிஸ்தியான் விளக்கம்கூறுபவரிடம் திரும்பி, "ஐயா, பொறாமை என்பவன் கொடூரமாகத் தோன்றுகிறான். ஏன் ஐயா?" என்று கேட்டான்.

"அப்பனே, இந்தச் சிறுவர்கள் விரும்பும் பொருள்கள் அனைத்தையும் தருவதாக இவர்கள் காப்பாளர் வாக்களித்திருக்கிறார். ஆனால் ஓராண்டு காலம் கழித்துத்தான் தருவாராம், அதனால்தான் பொறாமை கோபமாக இருக்கிறான்; பொறுமையோ சாந்தமாகக் காத்திருக்கிறான்" என்றார் விளக்கம் கூறுபவர்.

அப்போது நான் என் கனவில் ஒரு மனிதன் ஒரு சாக்கு நிறைய பொன்னையும் பொருளையும் கொண்டு வந்து பொறாமையின் காலடியில் கொட்டுவதைக் கண்டேன். பொறாமை அனைத்தையும் வாரியெடுத்து தன் மடியில் வைத்துக்கொண்டு, பொறுமையைப் பார்த்துக் கேலி பண்ணினான். சிறிது நேரம் கழித்துப் பார்த்தபோதோ பொறாமை அனைத்துப் பொருளையும் செலவழித்துவிட்டு வெறும் கந்தை ஆடை அணிந்தவனாக அமர்ந்திருப்பதைக் கண்டேன்.

"ஐயா விளக்கம்கூறுபவரே, எனக்கு இதன் பொருள் விளங்கவில்லையே!" என்று அங்கலாய்ப்புடன் கேட்டான் கிறிஸ்தியான்.

"இந்த இரண்டு சிறுவர்களும் இரண்டு அடையாளங்களே. பொறாமை இந்த உலகத்து மக்களையும், பொறுமை மறு உலகத்து மக்களையும் குறிப்பாக உணர்த்துகிறார்கள். பொறாமையைப்போல இவ்வுலகத்து மக்களும் தங்களுக்குரிய அனைத்தையும் இப்போதே இந்த உலகத்திலேயே பெறும்படி விரும்புகிறார்கள். மறு உலகத்தில் இவர்களுக்காக வாக்குப் பண்ணப்பட்டுள்ள ஆசீர்வாதங்களை நினையாமல், கண்ணில் கண்டவற்றை அனுபவிப்பதிலேயே ஆர்வம் காட்டுகிறார்கள். பொறாமையிடம் கொடுக்கப்பட்ட பொருள் அனைத்தும் நொடியில் மறைந்ததுபோல இந்த உலகத்து இன்பங்கள் அனைத்தும் மறைந்து, உலக வாழ்க்கையும் முடிவடைந்து வெறுமையாகப் போகும் வேளையில் இவர்கள் கந்தையிலும் மோசமான பரிதாபகரமான நிலையை உணர்ந்துகொள்பவர்கள்" என்று விளக்கினார் விளக்கம்கூறுபவர்.

"அது சரிதான் ஐயா, பொறுமையைப்போலப் புத்திசாலி வேறு எவருமே இருக்க முடியாது என்றுதான் நினைக்கிறேன்.

ஏனென்றால் காலம் கடந்தாலும் பயனுள்ள ஆசீர்வாதங்கள் கிடைக்கும்வரை காத்திருக்கிறான், பொறாமையைப்போல அவன் எல்லாவற்றையும் இழந்துபோகவில்லை" என்றான் கிறிஸ்தியான்.

"அதுமட்டுமல்ல, இன்னொரு முக்கியமான உண்மையையும் இது வெளிப்படுத்துகிறது. பொறாமையின் வாழ்க்கை வெகு சீக்கிரமாக மறைந்துபோகிறது. ஆனால் பொறுமையின் மறுஉலக வாழ்க்கை நித்தியமாக நிலைத்திருக்கிறது. உலக இன்பங்களுக்கு ஆசைப்பட்டுத் தேடுபவர்கள் அவற்றை அனுபவித்த பின்னர் அழிந்து போகிறார்கள். ஆனால் மறு உலக ஆசீர்வாதங்களுக்காக பொறுமையுடன் காத்திருப்பவர்கள் பின்னர் அவற்றைப் பெறும்போது நித்திய காலமாக அனுபவிக்கிறார்கள். எனவே இந்த உலக வாழ்க்கையைவிட மறு உலக வாழ்க்கையையே விரும்பிக் காத்திருக்க வேண்டும். ஏனென்றால் அதற்கு மேலானது ஒன்றுமேயில்லை. நன்மைகளை முதலில் பெறுபவன் குறிப்பிட்ட காலமே செலவழிக்க முடியும். ஆனால் இறுதிவரை காத்திருப்பவன் நிரந்தரமாக அதை அனுபவிப்பான். இதனால்தான் ஐசுவரியவானைப் பார்த்து, 'நீ பூமியிலே உயிரோடிருக்குங் காலத்தில் உன் நன்மைகளை அனுபவித்தாய், லாசருவும் அப்படியே தீமைகளை அனுபவித்தான். அதை நினைத்துக்கொள்; இப்பொழுது அவன் தேற்றப்படுகிறான்; நீயோ வேதனைப்படுகிறாய்' என்று ஆபிரகாம் கூறியதாக (லூக்கா 16:25) எழுதப்பட்டுள்ளது" என்று கூறி விளக்கினார் விளக்கம்கூறுபவர்.

"அப்படியானால் இக்கால இன்பங்களை விரும்பாமல், வருங்கால ஆசீர்வாதங்களை எதிர்பார்த்துக் காத்திருப்பதே ஞானம், அப்படித்தானே?" என்று கேட்டான் கிறிஸ்தியான்.

"ஆமாம் 'ஏனெனில், காணப்படுகிறவைகள் அநித்திய மானவைகள், காணப்படாதவைகளோ நித்தியமானவைகள்' (2 கொரி. 4:18) என்றாலும்கூட இந்த உலகத்து இன்பங்களும், நமது மாம்ச இச்சைகளும் ஒன்றுக்கொன்று அண்டை வீட்டார் போலிருப்பதாலும், மறு உலக வாழ்வும் நமது மாம்ச இச்சைகளும் ஒன்றுக்கொன்று வெகு தொலைவாக இருக்கும் அன்னியரைப் போலிருப்பதாலும், இந்த உலகத்து ஆசைகள் வேண்டாம் என்று வெறுத்து ஒதுக்குவதும், பரலோக வாழ்வு வரும்வரை காத்திருப்பதும் மிகவும் கடினமாகத்தான் இருக்கிறது" என்று ஒத்துக்கொண்டார் விளக்கம்கூறுபவர்.

விளக்கம்கூறுபவர் கிறிஸ்தியானின் கையைப் பிடித்தபடி நெருப்பு பற்றி எரிந்துகொண்டிருந்த ஒரு சுவற்றின் அருகே அவனைக் கூட்டிக்கொண்டு போய் காட்டுவதை நான் என் கனவில் கண்டேன். ஒரு மனிதன் நெருப்பின் மீது நீரை

ஊற்றிக்கொண்டிருந்தான் என்றாலும் நெருப்பு அணையவில்லை! பதிலாக மேலும் அதிக ஒளியுடன் எரிந்துகொண்டிருந்தது!

இதைக் கண்டு வியந்த கிறிஸ்தியான், “இது என்ன ஐயா?” ஆச்சரியமாயிருக்கிறது” என்றான்.

“இந்த நெருப்புதான் நமது இருதயத்தில் செயல்படும் கிருபையின் கிரியை; அதை அழிக்கும்படி நீர் வார்ப்பவன்தான் சாத்தான். அவன் நீரை ஊற்ற ஊற்ற நெருப்பு இன்னும் அதிகமாவதற்கும், வெப்பம் அதிகரிப்பதற்கும் ஒரு காரணம் உண்டு. இங்கே வா, காட்டுகிறேன்” என்று விளக்கம்கூறுபவர் அவனைச் சுவற்றின் மறுபக்கத்துக்குக் கூட்டிச் சென்றார். அங்கே மறைவாக நின்றுகொண்டிருந்த ஒருவர், குடம் குடமாக எண்ணெயை அந்த நெருப்பில் ஊற்றிக்கொண்டிருந்தார்.

“ஐயா, யார் இவர்? ஏன் இப்படி செய்கிறார்?” என்று கேட்டான் கிறிஸ்தியான்.

“இவர்தான் கிறிஸ்து. நமது இருதயத்தில் செயல்படத் துவங்கிய கிருபையின் கிரியை அழிந்துபோகாமலிருக்கும்படி அவர் முயலுகிறார். அவர் இவ்வாறு தொடர்ந்து செய்வதினால் தான், அவரது அன்பர்களின் இருதயத்தில் கிருபையின் கிரியை இன்னும் அழிந்து போகாமலிருக்கிறது *(2 கொரி. 12:8)* அவர் ஏன் மறைந்து நிற்கிறார் என்பதற்கும் ஒரு காரணம் இருக்கிறது. இருதயத்தில் கடவுளின் கிருபையின் கிரியை எவ்வாறு காக்கப்படுகிறது என்று நாம் அறிந்துகொள்ள முயன்றாலும் அது இயலாத காரியம் என்பதை உனக்கு உணர்த்தும்படியாகத்தான் அப்படி நிற்கிறார்” என்று அவர் கூறியபோது இந்த வெளிப் படுத்துதலின் பொருளைக் கிறிஸ்தியான் நன்கு புரிந்து கொண்டான்.

அதன் பின்பு விளக்கம்கூறுபவர் கிறிஸ்தியானை ஓர் அழகிய தோட்டத்தின் நடுவே கட்டப்பட்டிருந்த மகா மேன்மை யான ஓர் அரண்மனையின் அருகே அழைத்துச் செல்வதை நான் என் கனவில் கண்டேன். காணக் கண்கொள்ளாத காட்சியாக அதன் பேரழகு காணப்பட்டது! அதைக் கண்ட கிறிஸ்தியானுக்கு ஒரே மகிழ்ச்சி! அந்த அரண்மனையின் மேல்மாடியில் தங்கச் சரிகையிலான ஆடைகளை அணிந்திருந்த சிலர் உலாவிக்கொண்டிருந்ததைக் கண்டு அவன் வியப்படைந்தான்.

“நாம் இதனுள் சென்று பார்க்கலாமா?” என்று ஆவலுடன் கேட்டான் கிறிஸ்தியான். அரண்மனையின் வாயில் மட்டும் அவனைக் கூட்டிக்கொண்டு சென்றார் விளக்கம்கூறுபவர்.

அங்கே அநேகர் அரண்மனையினுள் நுழைய ஆசைப்பட்டாலும், துணிவின்றி, தயங்கி நின்று கொண்டிருப்பதைக் கண்டார்கள். கதவுக்கு உள்ளே நுழைபவர்களின் பெயர்களை எழுதுவதற்காக ஒருவர் எழுதும் மேசையின் அருகே அமர்ந்திருந்தார். ஆனால் ஒருவரையும் உள்ளே நுழையவிடாதபடி, அப்படி நுழைய முயன்றாலும் அடித்து இம்சைப்படுத்துவதற்காக சில பலவான்கள் ஆயுதங்களைத் தாங்கியபடி நின்று கொண்டிருப் பதைக் கிறிஸ்தியான் கண்டான். அவன் மனம் கலங்கியது.

வாசலருகே செல்லும் ஒவ்வொருவரும் தயங்கி பின்வாங்கினார்கள். என்றாலும் ஆயுதம் தாங்கியவர்களைக் கண்டும் தயங்காமல் பெயர் எழுதுபவனின் அருகே சென்ற ஒருவனை கிறிஸ்தியான் கண்டான். அவன் பெயர் எழுதப்பட்டவுடன் தன் சிரசின்மீது ஒரு தலைச் சீராவை அணிந்துகொண்டான்; பட்டயத்தை உருவிக் கையில் பிடித்தவாறே, பலவான்களைத் தள்ளிக்கொண்டு உள்ளே நுழைந்துவிட்டான். ஆனால் அந்தப் பலவான்களோ அவன்மீது பாய்ந்து அவனை விரட்ட முயன்றார்கள். அவனோ கொஞ்சமும் தயங்காமல், பயப்படாமல் தனது பட்டயத்தை நாலாபுறமும் வீசி எதிர்ப்பட்டவர்களைக் காயப்படுத்திப் பின்வாங்கச் செய்துவிட்டு அரண்மனையினுள் புகுந்துவிட்டான் *(அப். 14:22)*. அவன் உள்ளே நுழைந்தவுடன், அரண்மனையில் இருந்தவர்களும், மேல்மாடியில் உலாவிக்கொண்டிருந்தவர்களும் ஒன்றுகூடி

வருக, வருக, உள்ளே வருக!
நித்திய மகிமை உமக்கே!

என்று பாடி அவனை வரவேற்றார்கள். அவர்கள் அணிந்திருந்த தங்க சரிகையிலான ஆடை அவனுக்கும் கொடுக்கப்பட்டது; அவன் அதை அணிந்துகொண்டான்.

இதைக் கண்ட கிறிஸ்தியான், “இதன் பொருள் எனக்குத் தெரியுமே! வாரும், நாமும் உள்ளே போவோம்” என்று விளக்கம் கூறுபவரை அழைத்தான்.

“பொறு மகனே, அவசரப்படாதே. இன்னும் சில முக்கியமான காரியங்களை நான் உனக்குக்காட்டுகிறேன். அதன்பிறகு நீ போகலாம்” என்று கூறிய விளக்கம்கூறுபவர் அவன் கையைப் பற்றிக்கொண்டார். இருள் நிறைந்த ஓர் அறைக்குள் அவனை அழைத்துச் சென்றார்; அங்கே இரும்புக் கூண்டுக்குள் ஒருவன் சிறைப்பட்டுக் கிடந்தான்.

தாங்கமுடியாத கவலையில் மூழ்கியவனைப்போல அவன் காணப்பட்டான். இரு கைகளினாலும் கவிழ்ந்த தலையைத் தாங்கியபடி, ஆழ்ந்த பெருமூச்சு விட்டுக்கொண்டிருந்தான்.

இதைக் கண்ட கிறிஸ்தியான், "ஐயா இதன் பொருள் எனக்கு விளங்கவில்லையே!" என்று கவலைப்பட்டான்.

"நீயே கேட்டுப் பார்!" என்று கூறினார் விளக்கம்கூறுபவர்

அருகே சென்று அவனருகே குனிந்த கிறிஸ்தியான். "யார் ஐயா நீர்?" என்று கேட்டான்.

"முன்பு இருந்த மதிப்பையெல்லாம் இழந்துவிட்ட மாபாவி நான்" என்று அங்கலாய்த்தான் அவன்.

"அது என்ன ஐயா மதிப்பு?" என்று கேட்டான் கிறிஸ்தியான்.

"ஒரு காலத்தில் நான் எனக்கும் மேலான கிறிஸ்தவனே கிடையாது என்று நினைத்ததும் உண்டு. அவ்வாறு பெயர் பெற்றதும் உண்டு. மோட்சத்தில் எனக்கு இடம் கிடைக்காவிட்டால் வேறு யாருக்குமே இடம் கிடைக்காது என்று பெருமைப்பட்டதும் உண்டு. எல்லாமே போய்விட்டது" என்று பெருமூச்சுவிட்டான் அவன்.

"இப்போது என்னவாகிவிட்டது ஐயா?"

"பார்த்தாயா, இந்த இரும்புக் கூண்டுதான் இப்போது என் வீடு, கவலையே எனக்கு உணவு. பெருமூச்சு விடுவதே என் வேலை. அவநம்பிக்கையே எனக்கு உணவு. இதிலிருந்து தப்பிச் செல்ல என்னால் முடியாமல் புலம்புகிறேன் ஐயா!" என்று கதறினான் அவன்.

"ஏன் ஐயா, எல்லாவற்றையும் இழந்து இவ்வாறு மாட்டிக் கொண்டீர்?"

"விழிப்போடு இருக்கவேண்டிய நான் தவறிவிட்டேன்; தெளிந்த புத்தியையும் கைவிட்டு விட்டேன்; இச்சைப்படி நடக்கத் துவங்கிவிட்டேன்; உலகத்துக்கே ஒளியான வேத வசனத்துக்கும், தேவ கிருபைக்கும் விரோதமாகப் பாவஞ் செய்தேன்; பரிசுத்த ஆவியானவரைத் துக்கப்படுத்தியதினால் அவர் என்னை விட்டு விலகினார்; சாத்தானை நோக்கிக் கதறினேன் அவன் என் உள்ளத்தில் வந்து வாசம்பண்ணத் துவங்கிவிட்டான்; தேவனுக்குக் கோபமூட்டியதால், அவர் என்னைக் கைவிட்டுவிட்டார். இனி ஒருபோதும் மனந்திரும்பக் கூடாதபடிக்கு நான் என் இருதயத்தைக் கடினப்படுத்தியதால் இந்த நிலையை அடைந்துவிட்டேன்" என்று அங்கலாய்த்தான்.

கண்கலங்கிய கிறிஸ்தியான் விளக்கம்கூறுபவரை நோக்கித் திரும்பினான். “ஐயா, இவன் இந்த நிலையிலிருந்து தப்பிச் செல்ல வழியே கிடையாதா?” என்று எதிர்பார்ப்போடு கேட்டான்.

“அதையும் அவனிடமே கேள்” என்று கூறினார் விளக்கம் கூறுபவர்.

கிறிஸ்தியான் மீண்டும் அந்த மனிதனைப் பார்த்து, “நீர் தப்பிச் செல்ல வழிவகைகளே இல்லையா?” என்று கேட்டான்.

“இல்லை, இல்லவே இல்லை!”

“ஏன் ஐயா, அப்படிச் சொல்கிறீர்? துதிக்குப் பாத்திரவானாகிய தேவ குமாரன் மிகுந்த கருணையுள்ளவர் அல்லவா?”

“ஐயோ, நான் அவரை மறுபடியும் சிலுவையில் அறைந்து விட்டேன் (எபி. 6:6), ஐயா! அவரைப் புறக்கணித்துவிட்டேன். நீதிபரரான அவருடைய நீதியையே அவமதித்துவிட்டேன். அவருடைய உடன்படிக்கையின் இரத்தத்தை அசுத்தமென்று எண்ணினேன்; கிருபையின் ஆவியை நிந்தனை செய்தேன் (எபி. 10:28, 29). அவருடைய வாக்குத்தத்தங்களிலிருந்து என்னை நானே விலக்கி கொண்டேன். இவ்வாறு ஆண்டவருக்கே துரோகியாகி விட்ட எனக்கு இனி பட்சிக்கும் நியாயத்தீர்ப்பின் கோபாக்கினையும், அதன் பயங்கரங்களும் தவிர வேறு முடிவே யில்லை என்பதை நானறிவேன். அதுவே என்னைக் கலங்கச் செய்கிறது” என்று அங்கலாய்த்தான் அவன்.

“எப்படி ஐயா, இத்தனை துயரங்களையும் வரவழைத்துக் கொண்டீர்?” என்று ஆறுதலாகக் கேட்டான் கிறிஸ்தியான்.

“எல்லாமே என் மாம்ச இச்சைகள், சிற்றின்ப நாட்டங்கள், உலகப்பிரகாரமான ஆசை இவற்றின் காரணமாகவே எனக்கு இத்தனை துயரங்கள்! சிற்றின்பங்களை அனுபவித்த வேளையில் அவை எனக்குப் பெரு மகிழ்ச்சியை அளித்தன! ஆனால் இப்போதோ அவை ஒவ்வொன்றும் பாம்புகளைப்போல என்னைக் கடித்து, தேள்களைப்போல என்னைத் தீண்டி, புழுக்களைப் போல என்னை அரித்துத் துன்பப்படுத்துகின்றன” என்று புலம்பினான் அவன்.

“இப்பொழுது நீ மனந்திரும்பிக் குணப்பட முடியாதா?” என்று கேட்டான் கிறிஸ்தியான்.

“அப்படிப்பட்ட குணப்படுதலுக்குக் கடவுள் வழிவகை செய்யவில்லையே! இந்த நிலைமையை அடைந்துவிட்ட நான் விசுவாசித்து கிரியை செய்யும்படியான வழியொன்றையும்

அவருடைய வசனம் குறிப்பிடவில்லையே! அவரே என்னை இந்த இரும்புக் கூண்டுக்குள் அடைத்தவர். உலக மக்கள் அனைவரும் ஒன்றுகூடி இதிலிருந்து என்னை விடுவிக்க முயன்றாலும் அது இயலாத காரியம். நித்திய நித்தியமான வேதனையே இனி எனக்கு! இந்த நிரந்தர வேதனையை என்னால் எப்படித் தாங்க முடியும்? ஐயோ!" என்று கதறினான்.

"இந்த மனிதன் அனுபவிக்கும் வேதனைகளைப் பார்த்தாயா? இவை என்றைக்குமே உனக்குப் பாடமாக இருக்கட்டும். மறந்து விடாதே" என்று எச்சரித்தார் விளக்கம்கூறுபவர்.

"அப்படியே செய்வேன், ஐயா. உண்மையிலேயே இந்நிலை பயங்கரமாகவே காணப்படுகிறது! நானும் இவனைப்போல வழிதவறிப் போய்விடாமல், விழிப்பும் தெளிந்த புத்தியும் உடையவனாக நடக்க உதவும்படி கடவுளிடம் வேண்டுகிறேன்" என்று அடக்கத்துடன் கூறிய கிறிஸ்தியான், "ஐயா, விளக்கம் கூறுபவரே! நான் பயணம் புறப்பட நேரமாகிவிட்டதே!" என்று அவசரப்படுத்தினான்.

"பொறு மகனே, பொறு இன்னும் ஒரே ஒரு காரியத்தை மட்டும் காட்டுகிறேன்'' என்று கூறிய விளக்கம்கூறுபவர். கிறிஸ்தியானை மற்றொரு அறைக்கு அழைத்துச் செல்வதை நான் என் கனவில் கண்டேன்.

அங்கே அப்போதுதான் உறங்கியெழுந்து, ஆடைகளை மாற்றிக்கொண்டிருந்த ஒருவனை நான் கண்டேன். ஆடைகளை அணியும்போதே அவன் கை, கால்கள் வெடவெடவென்று நடுங்கின!

''ஐயா, இவன் ஏன் இப்படி நடுங்குகிறான்?'' என்று கிறிஸ்தியான் விளக்கம்கூறுபவரிடம் கேட்டான்.

உடனே அவர் நடுங்கும் மனிதனைப் பார்த்து, "நீ ஏன் இவ்வாறு நடுங்குகிறாய் என்பதை இவனுக்குச் சொல்" என்று கட்டளையிட்டார்.

நடுங்கியபடியே அவன் பேசத் துவங்கினான். ''ஐயா, இன்றிரவு நான் உறங்கும்போது, பயங்கரமான ஒரு கனவைக் கண்டேன். வானங்கள் கருமையான மேகங்களால் மூடப்பட்டன; இடி முழங்கியது; மின்னல் ஒளி வீசியது; இதைக் கண்டவுடன் நான் கலங்கினேன். திடீரென்று மேகங்கள் வேகமாக விலகியோடின! எக்காள சத்தமும் கேட்டது! மேகத்தின்மேல் ஒருவர் அமர்ந்திருப்பதைக் கண்டேன்! சுற்றிலும் திரளான வானசேனைகள் சூழ்ந்து நின்றன. அவர்கள் அனைவரும் நெருப்புச் சுடரைப் போலக் காணப்பட்டார்கள். வானங்கள்

எரிகிற அக்கினியைப் போலப் பிரகாசித்தன! 'மரித்தோரே எழும்புங்கள்; நியாயந்தீர்க்கப்பட வாருங்கள்' என்று இடி முழக்கம்போன்ற சத்தத்தைக் கேட்டேன். அவ்வளவுதான்! மலைகள் இரண்டாகப் பிளந்தன! கல்லறைகள் வெடித்துத் திறந்தன! உள்ளே அடக்கம்பண்ணப்பட்டவர்கள் எழுந்து வந்தவுடன் எனக்கு நடுக்கம் ஏற்பட்டது. அவர்களில் சிலர் மகிழ்ச்சிக் குரல் எழுப்பியபடி நேரே நடந்தார்கள், மற்றவர்களோ பயந்துபோய் ஒளிந்துகொள்ள இடம் தேடினார்கள். மேகத்தில் அமர்ந்திருந்தவர், ஒரு புத்தகத்தைத் திறந்து, உலக மக்கள் அனைவரையும் தம் முன்பு வரும்படி கட்டளையிட்டார். அவரது முகத்துக்கு முன்பாக அக்கினி ஜுவாலை வீசிக்கொண்டிருந்தது. நீதிபதிக்கு முன்னால் நிற்கும் குற்றவாளியைப்போல மக்கள் சற்று ஒதுங்கி நின்றார்கள்.

''மேகத்தில் அமர்ந்திருந்தவர் அவர்களை நோக்கி, 'களைகளையும், பதர்களையும் சேகரித்து அக்கினிக் கடலில் தள்ளுங்கள்' என்று இடிமுழக்கக்குரலில் கட்டளையிட்டதைக் கண்டேன். அவர் அவ்வாறு கூறியவுடனே நான் நின்று கொண்டிருந்த இடத்துக்கு அருகில் பாதாளம் விரிவாகத் திறக்கப்பட்டது! உள்ளேயிருந்து புகையும் நெருப்பும் குபீரெனக் கிளம்பியது! மேகத்தில் வீற்றிருந்தவர் தனது உதவியாளர்களைப் பார்த்து, 'கோதுமையை என் களஞ்சியத்திலே சேருங்கள்' என்று கட்டளை கொடுத்தார். உடனே அவர்கள் அங்குமிங்குமாகச் சென்று அநேகரை அழைத்துக்கொண்டு மேகத்தின் பின்னே சென்றார்கள். ஆனால் என்னை ஒருவரும் கொண்டு போகவில்லை. எங்கேயாவது ஒளிந்துகொள்ளலாம் என்று சுற்று முற்றும் பார்த்தேன். ஆனால் முடியவில்லை. ஏனென்றால் மேகத்தில் அமர்ந்திருந்தவர் என்னையே பார்த்துக் கொண்டிருப்பதுபோலவே தோன்றியது! நான் செய்த பாவங்கள் எல்லாம் என் கண்முன்னே வந்து என்னை வாட்டின! என் மனச்சாட்சி என்னைக் குத்திச் சித்திரவதை செய்தது! இந்தப் பயங்கரமான கனவைக் கண்டு இப்போதுதான் விழித்தேன்'' என்றான் அவன்.

"கனவு எப்படியிருந்தாலும் இப்படியும் நடு நடுங்குவார் உண்டோ?" என்றான் கிறிஸ்தியான்.

"கலங்காமல் வேறு என்ன செய்வது? நியாயத்தீர்ப்பு நாள் வந்துவிட்டதென்றும், நான் அதற்கு ஆயத்தமாக இல்லையென்றும் உணர்ந்து கொண்டேன். தேவ தூதர்கள் அநேகரைத் தெரிந்து கொண்டு கூட்டிச் சென்றார்கள். அவர்கள் என்னை விட்டுவிட்டார்கள் என்பதைக் கண்டவுடன் நான் அடைந்த

கலக்கம் கொஞ்சநஞ்சமல்ல! நான் நின்ற இடத்துக்குச் சமீபமாகவே நரக வாசல் திறந்தது என் பயத்தை இன்னும் அதிகரித்தது. என் மனச்சாட்சியோ என்னை வேதனைப் படுத்தியது. நீதிபதியும் கண்ணிமையாது என்னையே பார்த்துக் கொண்டிருந்தார். என் நடுக்கம் எப்படிக் குறையும்?'' என்று அங்கலாய்த்தான் அவன்.

விளக்கம்கூறுபவர் கிறிஸ்தியானைப் பார்த்து, "மகனே! நீ கண்டவற்றின் பொருளை அறிந்துகொண்டாயா?'' என்று அன்போடு கேட்டார்.

''ஆம் ஐயா, தெரிந்துகொண்டேன். இந்தக் காட்சிகள் நடுக்கத்தை வரவழைக்கின்றன. அதே வேளையில் வெற்றிகொள்ளத்தக்க நம்பிக்கையும் வருவிக்கின்றன" என்றான் கிறிஸ்தியான்.

"நீ கண்ட காட்சியெல்லாம், நீ பயணம் செல்லும்போது உன்னைத் தூண்டிச் சரியான பாதையில் நடத்த உதவட்டும்" என்று வாழ்த்தினார் விளக்கம்கூறுபவர்.

கிறிஸ்தியான் தன் இடுப்புக் கச்சைகளை இறுகக் கட்டிக்கொண்டு புறப்படத் தயாரானான்.

''கிறிஸ்தியானே, தேற்றரவாளன் எப்போதுமே உன்னுடனிருந்து, மோட்ச பாதையில் வழிநடத்திக் காப்பாராக!'' என்று அவனை ஆசீர்வதித்து வழியனுப்பினார் விளக்கம் கூறுபவர்.

பாடிக்கொண்டே நடந்து சென்றான் கிறிஸ்தியான். அவன் சென்ற பாதையின் இருபுறமும் மீட்பு என்ற பெயர் கொண்ட சுவர்கள் எழுப்பப்பட்டிருந்தன. வேகமாக நடக்கத் துவங்கினான் கிறிஸ்தியான். என்றாலும் அவன் முதுகிலிருந்த சுமையின் காரணமாக அவன் வேதனைப்பட்டதை நான் என் கனவில் கண்டேன்.

10. சிலுவையைத் தரிசித்தல்

அதிகக் கடினத்தோடு நடந்துசென்ற கிறிஸ்தியான் ஒரு குன்றின் அடிவாரத்தை அடைந்தான். குன்றின் உச்சியில் ஒரு சிலுவை நிறுத்தப்பட்டிருந்தது. அருகே திறந்திருந்த ஒரு கல்லறையும் காணப்பட்டது. குன்றின் மீதேறிய கிறிஸ்தியான் சிலுவையை நெருங்கி, ஏறிட்டுப் பார்த்தான். அப்போதே அவன் முதுகிலிருந்த பாரச்சுமை அறுந்து விழுந்து, உருண்டுச் சென்று கல்லறையினுள் மறைந்துவிட்டது! அதன்பிறகு அதை நான் என் கனவில் காணவேயில்லை!

நேராக நிமிர்ந்து நின்ற கிறிஸ்தியான் மகிழ்ச்சியோடு புன்னகை பூத்தான். "தமது துயரத்தால் அவர் எனக்கு ஆறுதலை தந்தார்; அவரது மரணத்தால் எனக்கு ஜீவன் கிடைத்தது" என்று பாடித் துதித்தான். தனக்குக் கிடைத்த பாக்கியத்தைக் கண்டு அவன் வியப்படைந்தான். சிலுவையை நெருங்கியதும் அவன் சுமை மறைந்து போனது அவனுக்குப் புரியாத புதிராக இருந்தது. கண்களில் ஆனந்தக் கண்ணீர் வழிந்து கொண்டிருந்தது. அப்போது ஒளிமயமான மூவர் அவனருகே வந்து, "உனக்குச் சமாதானமுண்டாவதாக" என்று அவனை வாழ்த்தினார்கள். முதலாமவர் "உன் பாவங்கள் மன்னிக்கப்பட்டன" என்று கூறினார். இரண்டாமவர் அவனது பழைய ஆடைகளைக் களைந்துவிட்டு, புதிய ஆடைகளை அவனுக்கு அணிவித்தார். மூன்றாமவர் அவனது நெற்றியில் ஓர் அடையாளம் இட்டு, அவன் கையில் முத்திரையிடப்பட்ட சுருள் ஒன்றையும் கொடுத்தார்.

"கிறிஸ்தியானே, நீ செல்லும் வழியில் இந்தச் சுருள் உனக்குப் பயனுள்ளதாக இருக்கும். இறுதியில் மோட்ச வாயிலை அடையும்போது இதைக் காட்டவேண்டும்" என்று கூறினார்.

மூவரும் மறைந்துபோவதை நான் என் கனவில் கண்டேன். கிறிஸ்தியான் ஆடிப்பாடி மகிழ்ந்தான். பாட்டுப் பாடியவாறே தன் பயணத்தைத் தொடர்ந்தான்.

குன்றின் மறுபக்கத்தின் அடிவாரத்தில் மூவர்படுத்துத் தூங்கிக் கொண்டிருப்பதைக் கண்டான் கிறிஸ்தியான். அவர்களின் கால்கள் சங்கிலியால் பிணைக்கப்பட்டிருந்தன! **அறிவிலி, சோம்பேறி, துணிச்சல்காரன்** என்பதே அவர்களின் பெயர்கள்!

அவர்களை நெருங்கித் தட்டியெழுப்பினான் கிறிஸ்தியான்.

தம்பிகளே, இப்படியா உறங்குவீர்கள்? கடலில் சூறாவளிக் காற்று வீசும்போது பாய்மரத்தின் உச்சியிலே படுத்துத் தூங்குகிறவர்களைப்போலல்லவா இருக்கிறீர்கள்? உங்களைச் சுற்றியுள்ள ஆபத்துக்களை நீங்கள் உணரவில்லையா? மரணப்பள்ளத்தாக்கை மறந்துவிட்டீர்களா? எழுந்து வாருங்கள்; அலட்சியமாக இராதேயுங்கள். உங்கள் விலங்குகளை உடைத்தெறிய நான் உதவி செய்வேன். "யாரைப் பிடிக்கலாம் என்று சுற்றித் திரியும் சிங்கத்தின் கண்ணில் பட்டால் அதன் வாய்க்கு இரையாகி விடுவீர்களே" *(1 பேதுரு 5:8)* என்று எச்சரிக்கை செய்தான். அவர்களோ கோபத்தில் அவனைப் பார்த்து முறைத்தார்கள்.

"ஏன் இப்படி மூச்சுவிடாமல் கத்துகிறாய்? இப்போது என்ன மோசம் போய்விட்டது?" என்று அங்கலாய்த்தான் அறிவிலி.

"தொந்தரவுபண்ணாதே, அப்பனே! இன்னும் கொஞ்ச நேரம் தூங்க வேண்டும்" என்று சலித்துக் கொண்டான் சோம்பேறி.

"ஒவ்வொருவரும் அவரவரது காரியங்களைப் பார்த்தால் போதும்; நீ உன் வழியே போ" என்று கடிந்து கொண்டான் துணிச்சல்காரன்.

மூவரும் மறுபடியும் படுத்துக் கொண்டார்கள். கிறிஸ்தியான் "என்ன இவர்கள்? ஆபத்துக்களைப் பற்றிக் கூறினேன். விலங்குகளை அகற்ற உதவுவதாகச் சொல்லியும் பார்த்தேன். சிங்கத்தைப்பற்றியும் எச்சரிக்கை செய்தேன். இவர்கள் ஒன்றையும் கேட்கவில்லையே!" என்று கவலைப்பட்டுக் கொண்டே தன் பயணத்தைத் தொடர்ந்தான்.

சிறிது தூரம் சென்றபின், பாதையின் இடதுபக்கச் சுவரில் ஏறி உள்ளே குதித்து இருவர் கிறிஸ்தியானோடு சேர்ந்து கொண்டார்கள். **வெளிவேஷம், மாய்மாலம்** என்பது அவர்களுடைய பெயர்கள்.

"ஐயா, நீங்கள் எங்கேயிருந்து வருகிறீர்கள்? எங்கே போகிறீர்கள்" என்று அவர்களுடன் பேச்சுக்கொடுத்தான் கிறிஸ்தியான்.

"நாங்கள் வீண்பெருமை என்ற நாட்டைச் சேர்ந்தவர்கள். மோட்சத்துக்குச் சென்று புகழடைய ஆசைப்படுகிறோம்." என்றார்கள் அவர்கள் இருவரும்.

"அப்படியா? ஆனால் நீங்கள் ஏன் வாசல் வழியே வராமல் சுவர் ஏறிக் குதித்து வருகிறீர்கள்? 'ஆட்டுத் தொழுவத்துக்குள் வாசல்வழியாய்ப் பிரவேசியாமல், வேறு வழியாய் ஏறுகிறவன் கள்ளனும் கொள்ளைக்காரனுமாயிருக்கிறான்' (யோவான் 10:1) என்பது உங்களுக்குத் தெரியாதா?" என்று கேட்டான் கிறிஸ்தியான்.

"வாசல்வரை சென்று திரும்பவும் இதே வழியில் வருவது எவ்வளவு தூரம் தெரியுமா? எங்கள் நாட்டினர் எங்களைப் போலவே இந்தப் பாதையில் சேர்ந்துகொள்ளும்படி முடிவெடுத்துள்ளார்கள். நாங்கள் சுவரேறிக் குதித்துதான் வருவோம்" என்று அலட்சியமாகக் கூறினார்கள்.

"எப்படியோ இந்த வழியில் வந்து சேர்ந்துவிட்டீர்கள் என்பது உண்மைதான். ஆனால் இப்படிச் சுவரேறி வழியில்

சேருவது தவறு என்று நாம் செல்லும் நாட்டின் அரசர் அறிவித்திருக்கிறாரே! அதை மீறினால் அது கீழ்ப்படியாமை ஆகிவிடுமல்லவா?" என்று கேட்டான் கிறிஸ்தியான்.

நீதிமன்ற விசாரணையில் நீங்கள் இதைக் கூறி வாதிட முடியுமா?" என்று ஐயம் கிளப்பினான் கிறிஸ்தியான்.

"பாரபட்சமில்லாத ஒரு நீதிபதி விசாரணை செய்தால் நிச்சயமாக நீதி விளங்கும். சட்டம் அதற்கு விரோதமாக இருந்தால் என்ன? கால வழக்கத்தால் அது சரியாகிவிட்டது என்று மூடன்கூடக் கூறுவானே. அது கிடக்கட்டும், எந்த வழியில் வந்தால் என்ன இப்போது சரியான வழியில்தானே இருக்கிறோம். இனி என்ன ஆகிவிடப்போகிறது? நீ குறுகிய வாசல் வழியாக இந்தப் பாதையில் வருகிறாய். நாங்களோ சுவர் ஏறி வந்தாலும் அனைவரும் சேர்ந்து போகும் வழி ஒன்றுதானே? எங்கள் செயலைவிட உன்னுடைய செயல் மேன்மையானது என்று எப்படிக் கூறுகிறாய்? சொல்லு பார்ப்போம்" என்று சவால் விட்டான் **வெளிவேஷம்**.

"நானோ என்னுடைய அரசரின் கட்டளைப்படி இந்த வழியில் வந்து சேர்ந்தேன். நீங்களோ உங்கள் சுய விருப்பப்படி இதில் வந்து சேர்ந்துக் கொண்டீர்கள். எங்கள் அரசர் இவ்வாறு குறுக்கு வழியில் வருபவர்கள் கள்ளர் என்றும் கொள்ளைக்காரர் என்றும் சொல்லியிருக்கிறாரே! அதனால்தான் கடைசியில் அவர் உங்களை உண்மையானவர் என்று ஏற்றுக்கொள்வாரோ என்று ஐயப்படுகிறேன். நீங்கள் அவருடைய கட்டளைப்படி நடக்கவில்லை. உங்கள் சுய விருப்பப்படி நடக்கிறீர்கள். அவர் உங்கள்மீது இரக்கம் காட்டமாட்டார் என்றுதான் நினைக்கிறேன்" என்றான் கிறிஸ்தியான்.

"ஏனப்பா, இவ்வாறு வீணாகத் தொண்டை வரளும்படி பேசிக்கொண்டிருக்கிறாய்? உன் வேலையை நீ பார். எங்கள் பாட்டை நாங்கள் பார்த்துக்கொள்கிறோம், கட்டளைகளையும், கற்பனைகளையும் பற்றி எங்களுக்கு அக்கறை இல்லை என்றா சொல்கிறாய்? உன்னைப்போல் நாங்களும் எங்கள் மனச்சாட்சிப்படிதான் நடந்து வருகிறோம்" என்று கூறிய அவர்கள் சிறிது தூரம் நடந்த பின் மீண்டும் அவனிடம் விவாதத்துக்கு வந்தார்கள்.

"என்னென்னமோ நியாயம் பேசுகிறாயே! உனக்கும் எங்களுக்கும் என்ன வேறுபாடு? யாரோ உனக்கு இந்த அங்கியைக் கொடுத்திருக்கிறார்கள். அதை விட்டால் நமக்குள் என்ன வித்தியாசம் இருக்கிறது? சொல்லுபார்ப்போம்" என்றார்கள் அவர்கள்.

“நீங்கள் வாசல்வழியே வராதவர்கள், ஆகையால் வெறும் கட்டளைகளாலும், கற்பனைகளைக் கைக்கொள்வதாலும் இரட்சிக்கப்படமாட்டீர்கள் (எபே. 2:8, 9). அது போகட்டும். இந்த அங்கியோ என் நிர்வாணத்தை மூடுவதற்காகத்தான் நான் செல்லும் நாட்டின் அரசரால் கொடுக்கப்பட்டுள்ளது. எனக்குக் கந்தை மட்டுமே சொந்தமாக இருந்தது. வேறு ஒன்றுமே இல்லை. எனவே இதை நான் அவர் என்மேல் காட்டும் அன்புக்குச் சாட்சியாக நினைத்துக்கொள்கிறேன். என் கந்தைகள் எடுத்துக் கொள்ளப்பட்ட நாளில் எனக்குக் கிடைத்த அங்கியை நான் போட்டுக் கொண்டிருக்கிறேன். நான் பேரின்ப வாசலை அடையும்போது அரசர் என்னை இனம் கண்டுகொள்வார். அதுமட்டுமா? என் பாரச் சுமை நீங்கிய நாளில், என் ஆண்டவரின் தூதனால் என் நெற்றியில் ஓர் அடையாளமும் போடப்பட்டிருக்கிறது. நீங்கள் அதைக் கவனிக்கவில்லையா? இன்னும் பாருங்கள். செல்லும் வழியில் நான் வாசித்து ஆலோசனைகளைப் பெற்றுக்கொள்ளும்படியாக முத்திரையிடப் பட்ட ஒரு சுருளும் எனக்குக் கொடுக்கப்பட்டுள்ளது. இந்தச் சுருளை மோட்ச வாசலை அடைந்தவுடன் காட்டவேண்டும் என்றும் கூறியிருக்கிறார்கள். உங்களிடம் இவற்றில் ஒன்றுகூட இல்லையென்று நினைக்கிறேன். நீங்கள் குறுகிய வாசல் வழியாக வராதபடியால் இவை ஒன்றுமே உங்களுக்குக் கிடைத்திருக்க மாட்டாது” என்றான் கிறிஸ்தியான்.

கிறிஸ்தியான் கூறியதின் முக்கியத்துவத்தை உணராத அவர்கள் ஒருவரையொருவர் பார்த்துக் கேலியாகச் சிரித்துக் கொள்வதை என் கனவில் கண்டேன்.

அவர்கள் எதுவும் பேசிக்கொள்ளாமல் தங்கள் வழியிலே நடந்து சென்றார்கள். கிறிஸ்தியான் சிந்தனையில் ஆழ்ந்தபடி தனக்குத்தானே பேசிக்கொண்டான். சிலவேளைகளில் தன் கையிலிருந்த சுருளை வாசித்து ஆறுதல் அடைந்தான்.

11. பயணி கடினமலையை அடைதல்

கிறிஸ்தியான் **வெளிவேஷம், மாய்மாலம்** மூவரும் முன்னும் பின்னுமாக நடந்து பாதையின் எதிரேயிருந்த **கடினமலை** அடிவாரம் அடைந்தார்கள். அங்கே ஒரு நீரூற்று இருந்தது. குறுகிய வாசலிலிருந்து வருகிற நேர்வழியைத் தவிர, மலையின் இடப்புறமும், வலப்புறமுமாக இரண்டு பாதைகள் பிரிந்து சென்றன. இடுக்கமான வழியோ மலைச்சிகரத்தை நோக்கிச் சென்றது.

கிறிஸ்தியான் ஊற்றில் நீர் அருந்தி தாகத்தை தணித்துக் கொண்டான். மிகவும் கடினத்தோடு மலைமீது ஏறத்துவங்கினான். களைப்புத் தெரியாமல் இருப்பதற்காகப் பாடிக்கொண்டே சென்றான்.

"மாமலை உயரம்தான்; ஆனாலும் ஏறுவேன்
சிகரம் தூரம்தான்; ஆனாலும் ஏறுவேன்.
இதுவே ஜீவவழி; தளராமல் ஏறுவேன்
நெஞ்சே கலங்காதே; தயங்காமல் ஏறுவேன்
மனமே மயங்காதே! நேர்வழி இதுதான்!"

என்று பாடிக்கொண்டே மலைமீது ஏறினான்.

மற்ற இருவரும் நேர்வழி மலைமீது போவதைக் கண்டு தயங்கினார்கள். அருகில் செல்லும் இரு பாதைகளும் மலையைச் சுற்றி நேர்வழியில் சேரும் என்று அவர்களாகவே நினைத்துக் கொண்டார்கள். **அபாயம், அழிவு** என்பவையே அந்தப் பாதைகளின் பெயர்கள் என்பது அவர்களுக்குத் தெரியாது! இடதுபுறம் அபாயப் பாதையில் சென்றவன் அடர்ந்த காட்டினுள் புகுந்து வழிதெரியாமல் அலைந்து திரிந்தான்! வலதுபுறம் அழிவுப் பாதையில் சென்றவன் ஓர் இருண்ட செங்குத்தான பாதையிலிருந்து கீழே விழுந்து அழிந்துபோனான்!

துவக்கத்தில் வேகமாக மலைமீது ஏறிய கிறிஸ்தியான் விரைவில் சோர்ந்து போனான். மெதுவாக நடந்து செல்வதை நான் என் கனவில் கண்டேன். அப்படியும் முடியாமல் முழங்காலால் நகர்ந்து சென்று கற்பாறைகளையும், செடிகளையும் பிடித்துக்கொண்டு, மெல்ல மெல்ல மலை ஏறினான். பாதி வழி ஏறிய கிறிஸ்தியான் பச்சைப் பசேலென்றிருந்த இளைப்பாறும் தோட்டம் ஒன்றைக் கண்டான். பயணிகள் வழியில் ஓய்வெடுத்துக்கொள்ளும்படி அந்த மலையின் அதிபர் அந்தத் தோட்டத்தை அமைத்திருந்தார்.

தோட்டத்தை அடைந்த கிறிஸ்தியான் அங்கு சற்று நேரம் அமர்ந்து ஓய்வெடுத்தான். தனது மடியிலிருக்கும் சுருளை எடுத்துப் படித்தான். தான் வந்த பாதை, சிலுவையின் அடிவாரத்தில் அவனுக்குக் கொடுக்கப்பட்ட அங்கி இவற்றைப் பற்றி நினைத்துப் பார்த்தவன் அப்படியே கண்ணயர்ந்து உறங்கிவிட்டான். தூங்கும்போது அவன் கையிலிருந்த சுருளும் கீழே விழுந்துவிட்டது! பொழுது சாயும் வேளையில் ஒருவர் அவனைத் தட்டியெழுப்பி, "சோம்பேறியே, நீ எறும்பண்டை போய் அதின் வழிகளைப் பார்த்து ஞானத்தைக் கற்றுக்கொள் (நீதி. 6:6) என்று கூறினார். திடுக்கிட்டு விழித்த கிறிஸ்தியான்

நேரமாகிவிட்டதை உணர்ந்து, வேகமாக ஏறி மலையுச்சியை அடைந்தான்.

கடின மலையின் உச்சியை அடைந்துவிட்டோம் என்று கிறிஸ்தியான் மகிழ்ச்சியோடு அமர்ந்திருக்கும்போது, இரண்டு பேர் பரபரப்போடு ஓடி வந்தார்கள். **கோழை, அவநம்பிக்கை** என்பதே அவர்களின் பெயர்கள்.

"ஐயா, ஏன் இப்படி ஓடி வருகிறீர்கள்? அதுவும் ஏன் எதிர் திசையில் ஓடுகிறீர்கள்" என்று கேட்டான் கிறிஸ்தியான்.

"நாங்கள் சீயோனுக்குப் போகும் வழியில் சென்றோம். அப்பப்பா, இத்தனை சங்கடங்களா? ஒன்றுக்கு மேல் மற்றொன்று பெரிய கஷ்டங்களாக இருக்கின்றனவே! இவற்றை யாரால் சகிக்கமுடியும்? சீயோனும் வேண்டாம், பேரின்பமும் வேண்டாம் என்று திரும்பிப் போகிறோம்'' என்று நடுங்கியபடியே கூறினான் கோழை.

"இதோ இன்னும் கொஞ்சத் தூரத்தில் இரண்டு சிங்கங்கள் படுத்திருக்கின்றன. அவை உறங்குகின்றனவா விழித்திருக்கின்றனவா, யாருக்குத் தெரியும். அதன் கண்ணில் படாமல் தப்பித்து ஓடி வருகிறோம். பிடிப்பட்டிருந்தால் என்ன ஆகியிருக்குமோ!" என்று படபடத்தான் அவநம்பிக்கை.

"ஐயாமார்களே, நீங்கள் என்னைப் பயமுறுத்திவிட்டீர்கள். இப்போது நான் எங்கே ஒளிந்துகொள்வது? ஊருக்குத் திரும்பிச் செல்லலாம் என்றாலும் அந்த ஊர் அக்கினிக்கு இரையாகப் போகிறது என்பதை நானறிவேன். அது அழியும்போது நானும் அழிந்துபோக வேண்டியதுதான்! ஆனால் மோட்சத்துக்குச் சென்றால் அங்கு என்றுமே மகிழ்ச்சிதான்! அதனால் நான் அதை நோக்கிச் செல்வேன். பின்னால் சென்றால் நிச்சயமாக மரணம்தான்! முன்னால் சென்றால் சாவைப் பற்றிய பயம் மட்டுமே! தப்பிச் சென்றால் எனக்கு நித்திய ஜீவன் கிடைக்கும். தொடர்ந்து முன்னே செல்லப்போகிறேன்'' என்று தீர்மானித்தான் கிறிஸ்தியான்.

கோழையும், அவநம்பிக்கையுமோ மலையின் கீழே இறங்கி ஓடிவிட்டார்கள்! மனதைத் திடப்படுத்திக்கொள்ள விரும்பிய கிறிஸ்தியான் சுருளை எடுத்துப் படிக்க நினைத்தான். ஆனால் சுருளைக் காணோம்!

12. பயணி சுருளை இழத்தல்

சுருளைக் காணோம் என்றவுடன் பதறிப்போய் விட்டான் கிறிஸ்தியான். அவன் அடைந்த துக்கத்தை என்னால் எடுத்துக்

கூறவே முடியாது. என்ன செய்வது என்று அறியாமல் திகைத்து நின்றான் கிறிஸ்தியான். சுருள் இல்லாமல் அவன் தொடர்ந்து போகவும் முடியாது. வழியில் அவனுக்கு ஆறுதலை அளித்து வந்ததே அந்தச் சுருள்தான். அதுமட்டுமின்றி அவன் மோட்ச வாயிலை அடையும்போது, அந்தச் சுருளைக் காட்டினால்தான் உள்ளே நுழைய முடியும். இதை எண்ணிக் கலங்கினான் கிறிஸ்தியான். அப்போது இளைப்பாறும் தோட்டத்தில் படுத்திருக்கும்போது, அந்தச் சுருள் ஒருவேளை கீழே விழுந்திருக்கலாம் என்ற நினைவு எழுந்தது. உடனே அவன் முழங்காற்படியிட்டு, தன் கவனக் குறைவுக்காக மன்னிக்கும்படி ஆண்டவரிடம் வேண்டினான்.

சுருளைத் தேடிக் கவலையோடு திரும்பி நடந்தான் கிறிஸ்தியான். அவன் அடைந்த கவலையை நான் எப்படிக் கூறுவது? சில வேளைகளில் புலம்புவான்; பிறகு தலையிலடித்துக் கொள்வான்; பெருமூச்சு விடுவான். இளைப்பாறுவதற்காக அமைக்கப்பட்ட தோட்டத்தைப் பஞ்சுமெத்தையாக நினைத்து உறங்கிவிட்ட தன் மதியீனத்தைத் தானே கடிந்துகொள்வான். வழியிலும் அவன் வெறுமனே செல்லவில்லை. அங்கு மிங்குமாகத் தேடிக் கொண்டே சென்றான்.

இளைப்பாறும் தோட்டத்தைக் கண்டவுடன் அவன் புலம்பல் இன்னும் அதிகரித்தது.

“தூங்காமல் விழித்திருக்க வேண்டிய நான் (1 தெச. 5:6-8) பகல் நேரத்திலே தூங்கிவிட்டேனே! என்னிலும் பெரிய மூடன் உண்டோ எவ்வளவோ கடினங்களைத் தாண்டிச் செல்ல வேண்டியிருக்கிறதே! இந்த வேளையில் உறங்கிவிட்டேனே! நமதாண்டவர் பயணிகள் அமர்ந்து ஓய்வெடுக்க அமைத்திருந்த இடத்தில் மாம்ச பலவீனத்தால் படுத்துத் தூங்கிவிட்டேனே! அதனால் தானே நான் இவ்வளவு தூரம் திரும்ப நடக்க வேண்டியதாயிருக்கிறதோ? இஸ்ரவேலருக்கும் இதே நிலைதானே ஏற்பட்டது. அவர்கள் தங்கள் பாவத்தின் காரணமாக வனாந்திரத்தில் அலைந்து திரிந்தார்களே! நானும் கவனமாக இருந்திருந்தால் இப்போது எவ்வளவு தூரம் சென்றிருக்க முடியும்! எனது மதியீனத்தால் ஒரே தடவையில் கடக்க வேண்டிய இடத்தை மூன்று முறை நடந்து கடக்க வேண்டிய நிலை ஆகிவிட்டதே! நேரமும் இருட்டாகப் போகிறதே! நான் தூங்காமல் இருந்திருந்தால் இந்தக் கடினங்கள் எல்லாம் எனக்கு வந்திருக்குமா?” என்றெல்லாம் புலம்பி அழுதான் கிறிஸ்தியான்.

மனதைத் தேற்றிக் கொண்டு தான் படுத்திருந்த இடத்துக்குச் சென்று சுருளைத் தேடினான். சுருள் கிடைத்துவிட்டது!

பரபரப்போடு அதை எடுத்து மடியில் பத்திரமாக வைத்துக் கொண்டான். அப்போது அவனடைந்த மகிழ்ச்சிக்கு அளவேயில்லை! அவனுடைய நித்திய வாழ்வுக்கும், மோட்சத்தில் சேருவதற்கும் இதுதானே உறுதிச் சீட்டுபோல இருந்தது? தனக்கு மீண்டும் அது கிடைக்கும்படி செய்த ஆண்டவருக்கு நன்றி செலுத்தினான். மீண்டும் தன்வழியே உற்சாகமாக நடந்தான்.

கிறிஸ்தியான் மலையுச்சியை அடைவதற்குள் இருட்டி விட்டது. மீண்டும் அவனது உள்ளத்தில் கவலை எழுந்தது.

"ஐயா, என் தூக்கத்தினால் அல்லவா எனது பயணம் தடைபட்டுப் போய்விட்டது! அது என்னைப் பகலின் ஒளியில் நடவாமல், இரவின் இருளில் நடக்க வைத்துவிட்டதே! என் உறக்கமே உன்னால் அல்லவா நான் நரிகளின் ஊளைச் சத்தத்தையும், சிங்கங்களின் கர்ஜனையையும், புலிகளின் சீற்றத்தையும், இரவு வண்டுகளின் கிறீச்சிடும் குரலையும் கேட்கும்படியாகிவிட்டது! என் தூக்கம் பாவத் தூக்கமே!" என்று பெருமூச்சுவிட்டுப் புலம்பினான்.

அத்துடன் கோழை, அவநம்பிக்கை இவர்கள் கூறிய சிங்கங்களைப் பற்றிய பயமும் எழுந்தது.

"அடடா, சூரியன் மறையுமுன்பே சிங்கங்களைக் கடந்துவிட்டிருந்தால் நலமாயிருந்திருக்குமே! அப்போது அவைகள் ஒருவேளை கண்ணயர்ந்து படுத்திருக்கலாம். ஆனால் இப்போதோ இரை தேடும் வேளை! அவைகளை விரட்ட முடியுமா? வேறு வழி ஏதேனும் உண்டா?" என்றெல்லாம் அங்கலாய்த்த அவன் இறுதியில் ஒரு முடிவுக்கு வந்தான்.

உயிர் பிழைத்தாலும் பிழைக்கட்டும், போனாலும் போகட்டும், ஆனால் நேர் வழியில் செல்வதைவிட்டு விலக மாட்டேன் என்று தீர்மானித்த அவன், மேலே பார்த்து "வானாதி அரசரே நீரே எனக்குத் துணை!" என்றான்.

13. பயணி அலங்கார மாளிகையை அடைதல்

கிறிஸ்தியான் ஏறிட்டுப் பார்க்கும்போது, சற்று முன்னால் ஓர் அழகிய உயரமான அரண்மனையைக் கண்டான். **அலங்கார மாளிகை** என்பது அதன் பெயர்.

'நல்ல இடம்தான். இங்கு இரவு தங்கிவிட்டு செல்லலாம்' என்று நினைத்த கிறிஸ்தியான் அந்த மாளிகையை நோக்கி உற்சாகமாக நடந்து செல்வதை நான் என் கனவில் கண்டேன்.

அந்த அரண்மனைக்குச் செல்லும் பாதை மிகவும் குறுகலாக இருந்தது. கூப்பிடு தூரம் இருந்த அந்தப் பாதையின் மறுபக்கத்தில் வாயிற்காப்போனின் குடிசை இருந்தது.

துடிப்போடு நடந்துசென்ற கிறிஸ்தியான் பாதையின் இருபுறமும் இரண்டு சிங்கங்களைக் கண்டவுடன் திடுக்கிட்டு நின்றுவிட்டான். கோழை, அவநம்பிக்கை என்ற இருவரும் இந்தச் சிங்கங்களைக் கண்டுதான் திரும்பிப்போயிருக்க வேண்டும் என்பதை உணர்ந்தான். பதட்டத்தில் அந்த இரண்டு சிங்கங்களும் சங்கிலியால் பிணைக்கப்பட்டிருப்பதை அவன் கவனிக்கவில்லை!

திரும்பிப் போய்விடலாமா என்று அவன் தயங்கிக் கொண்டிருப்பதைக் கண்ட **விழித்திருப்போன்** என்ற வாயிற்காப்போன்,

''நீ என்ன கோழையா? ஏன் தயங்குகிறாய்? இந்தச் சிங்கங்கள் சங்கிலியால் கட்டப்பட்டிருக்கின்றன. இங்கு வருபவர்களின் விசுவாசத்தைச் சோதிக்கவே இவை கட்டி வைக்கப்பட்டுள்ளன. நீ இங்குமங்கும் வழிபிசகாமல் நடுவிலேயே நடந்துவந்தால் அவைகளைக் கடந்து விடலாம் என்று ஆலோசனை கூறினான்.

அந்த எச்சரிப்புக்குச் செவிசாய்த்த கிறிஸ்தியான் கவனமாக நடந்துசென்றான். சிங்கங்கள் அவனைக் கண்டு கெர்ச்சித்தனவே யொழிய, அவைகளால் வேறு ஒன்றும் செய்ய முடியவில்லை. சிங்கங்களைக் கடந்து சென்ற கிறிஸ்தியான் மகிழ்ச்சியால் துள்ளிக் குதித்தபடியே அரண்மனையை அடைந்தான்.

காவலாளியின் அருகே சென்ற கிறிஸ்தியான், "ஐயா, இது என்ன மாளிகை? நான் இரவு மட்டும் இங்கே தங்கிச் செல்லலாமா?" என்று பணிவுடன் கேட்டான்.

"இதுவா? இது சீயோனுக்குச் செல்லும் பயணிகளுக்காகவே அதன் அரசரால் கட்டிவைக்கப்பட்ட மாளிகை" என்று கூறிய காவலாளி.

"நீ எங்கேயிருந்து வருகிறாய்? எங்கே போகிறாய்?" என்று அவனிடம் கேட்டான்.

"ஐயா, நான் அழிநகரத்திலிருந்து சீயோனுக்குச் செல்லும் பயணி. இரவாகிவிட்டதால் இங்கு தங்கலாமா?" என்று மீண்டும் கேட்டான் கிறிஸ்தியான்.

"உன் பெயர் என்ன?" காவலாளி கேட்டான்.

"இப்போது என் பெயர் கிறிஸ்தியான். முன்பு என் பெயர் **பக்தியில்லாதவன்** என்று இருந்தது. நான் யாப்பேத்தின்

சந்ததியில் பிறந்தவன். கடவுள் சேமுடைய கூடாரங்களில் போய்க் குடியேறும்படி யாப்பேத்துக்குக் கட்டளை (ஆதி. 9:27) கொடுத்துள்ளார் என்று பதில் கூறினான் கிறிஸ்தியான்.

"ஏன் இவ்வாறு இருளடைந்த பிறகு வருகிறாய்?" காவலாளி தொடர்ந்து கேட்டான்.

"ஐயா, நான் இருட்டுவதற்கு முன்பே வந்திருக்க முடியும். ஆனால் பாவி நான் வழியிலிருந்த தோட்டத்தில் படுத்து உறங்கிவிட்டேன். அப்படியும்கூட இன்னும் சீக்கிரமாக வந்திருக்க முடியும். ஆனால் தூங்கும்போது சுருள் கீழே விழுந்துவிட்டதை அறியாமல் வெகுதூரம் வந்துவிட்டேன். மலையுச்சிக்கு வந்தபின் சுருளைக் காணாமல் மீண்டும் அதைத் தேடி, தோட்டத்துக்குச் சென்றேன். அதைக் கண்டெடுத்துக் கொண்டு, மறுபடியும் மலையேறி வருவதற்குள் இவ்வளவு நேரமாகிவிட்டது" என்று விவரிக்கும்போது கிறிஸ்தியானின் கண்கள் கலங்கிவிட்டன.

"அதுபோகட்டும். நான் இந்த மாளிகையில் இருக்கும் கன்னிப் பெண்களில் ஒருத்தியைக் கூப்பிடுகிறேன். அவள் வந்து உன்னிடம் பேசுவாள். உன் பேச்சு உண்மையெனத் தெரிந்தால் அவள் மற்றப் பெண்களுக்கு உன்னைப் பற்றிப் பரிந்துபேசி, நீ தங்க இடம் கொடுப்பாள்" என்று கூறிய காவலாளி ஒரு மணியை அடித்தான். அப்போது **விவேகம்** என்ற அழகிய பெண்மணி கதவைத் திறந்து, "என்ன காரியம்?" என்று கேட்டாள்.

"இந்த எளியவனின் அழிநகரத்திலிருந்து புறப்பட்டு, சீயோன் மலைக்குச் செல்கிறானாம்; களைத்துப் போயிருக்கிறான். அதுவுமில்லாமல் நேரமும் இருட்டிப் போய்விட்டது. அதனால் இங்கு தங்கிச் செல்லலாமா என்று என்னிடம் கேட்டான். இந்த அரண்மனைச் சட்டப்படி உன்னை அழைப்பேன். நீ வந்து நல்லது என்று கண்டால் அதன்படி செய்வாய் என்று கூறினேன்" என்றான் அந்தக் காவலாளி.

விவேகம் கிறிஸ்தியானைப் பார்த்து, "நீ எங்கேயிருந்து வருகிறாய், எங்கே செல்கிறாய்?" என்று கேட்டாள்.

காவலாளியிடம் சொன்ன பதிலையே அவளிடமும் கூறினான் கிறிஸ்தியான்.

"நீ வழியில் என்னென்ன கண்டாய்? ஏதெனும் துன்பங்களை அனுபவித்தாயா?" என்று விவேகம் கேட்டவுடன் கிறிஸ்தியான் அதுவரை நடந்தவற்றை விவரித்தான்.

கடைசியாக அவள் “உன் பெயர் என்ன?” என்று கேட்டாள்.

“என் பெயர் கிறிஸ்தியான், அம்மா. இரவு இங்கே தங்கிச் செல்ல விரும்புகிறேன். சீயோனுக்குச் செல்லும் பயணிகள் ஓய்வெடுக்கவே இந்த அரண்மனை கட்டப்பட்டுள்ளதென்று கேள்விப்பட்டேன்'' என்று கூறும்போது அவன் கண்கள் கலங்கின.

''சரி, இங்கேயே இரும். நான் என் தோழிகளை அழைத்துவருகிறேன்” என்று கூறிய விவேகம் உள்ளறையினுள் சென்று **“முன்யோசனை, பக்தி, கருணை”** என்று அழைத்தாள்.

அவர்கள் மூவரும் வெளியே வந்தார்கள். கிறிஸ்தியானைக் கண்டு மகிழ்ச்சியடைந்த அவர்கள் அவனுடன் சிறிது நேரம் உரையாடினார்கள். பின்பு அவனை உள்ளே அழைத்துச் சென்றார்கள்.

அங்கிருந்த கன்னிப் பெண்கள் “கர்த்தரால் ஆசீர்வதிக்கப் பட்டவரே, உள்ளே வாரும்” என்று அவனை வரவேற்றார்கள். “உம்மைப்போன்ற பயணிகளுக்காகவே இந்த அரண்மனை கட்டப்பட்டுள்ளது” என்று அவர்கள் கூறியவுடன் கிறிஸ்தியான் அவர்களுக்கு தலை வணங்கினான்.

“கிறிஸ்தியானுக்காக இரவு உணவு தயாராகிக்கொண்டிருந்தது. முதலில் அவன் தாகம் தீர பானம் கொடுத்தார்கள். உணவுக்காகக் காத்திருக்கும் வேளையைப் பயனுள்ள வகையில் செலவழிக்க வேண்டும் என்று தீர்மானித்த நான்கு பெண்களும் மீண்டும் கிறிஸ்தியானுடன் உரையாடத் தொடங்கினார்கள்.

“கிறிஸ்தியான் என்னும் நண்பனே, இந்த இரவு வேளையில் நீர் தங்கும்படி இடம்கொடுத்திருக்கிறோமே? நீர் உமது பயண அனுபவங்களைக் கூறினால் நலமாயிருக்கும்” என்று கேட்டாள் பக்தி என்ற பெண்மணி.

“என் பயணத்தைப்பற்றிக் கூறுவதில் எனக்கு மகிழ்ச்சிதான். நீங்கள் அதைப்பற்றிக் கேட்டதற்கு நன்றி” என்று கூறினான் கிறிஸ்தியான்.

“நீர் இவ்வாறு புறப்பட்டு வருவதற்கு காரணம் என்ன?”

“என் காதில் கேட்ட ஒரு குரலே என்னை இவ்வாறு புறப்படும்படி தூண்டியது நான் என்னுடைய ஊரிலேயே இருந்துவிட்டால் அழிந்துபோவது நிச்சயம் என்றும், அதைத் தடுக்க என்னால் முடியாது என்றும் அந்தக் குரல் என்னை எச்சரித்தது” என்றான் கிறிஸ்தியான்.

“ஊரைவிட்டு வெளியேறியது ஏன் என்று தெரிந்துவிட்டது. ஆனால் இந்த வழியை எவ்வாறு கண்டு பிடித்தீர்?” என்று கேட்டாள் பக்தி.

“அது கடவுளுடைய கிருபைதான். அழிவைப் பற்றிய செய்தியைக் கேட்ட நான் கலக்கமுற்று, எங்கே செல்வது என்று தெரியாமல் திகைத்துக் கொண்டிருந்தேன். அப்போது நற்செய்தியாளர் என்ற பெயருடைய ஒருவர் என்னை தற்செயலாகச் சந்தித்தார். அவரே குறுகிய வாசல் வழியை எனக்குச் சுட்டிக் காட்டினார். குறுகிய வாசலை அடைந்தபிறகு இந்த வழி எனக்குக் கூறப்பட்டது” என்றான் கிறிஸ்தியான்.

“நீர் விளக்கம்கூறுபவரின் வீட்டு வழியாக வரவில்லையா?” என்று கேட்டாள் பக்தி.

“அந்த வழியாகத்தான் வந்தேன், அங்கே நான் கண்ட காட்சிகளில் மகிமையைப்பற்றி எவ்வாறு கூற முடியும்? என் வாழ்நாள் முழுவதும் அவற்றை என்னால் மறக்க முடியாது. குறிப்பாக சாத்தானின் செயல்களுக்கு விரோதமாக கிறிஸ்துவானவர் தமது கிருபையின் கிரியையை நடத்திக் கொண்டிருக்கிறார் என்பதை விளக்கும் காட்சியும், பாவத் தளையில் பிடிபட்டு கடவுளின் கருணையைப் பற்றிய நம்பிக்கை யற்றுப்போன ஒருவன் அடைப்பட்டிருந்த இரும்புக் கூண்டுக் காட்சியும், நியாயத்தீர்ப்பின் நாள் வந்துவிட்டதுபோல கனவு கண்டவனின் காட்சியும் என்றுமே என் நினைவைவிட்டு மறையாது” என்று உணர்ச்சிவசப்பட்டுக் கூறினான் கிறிஸ்தியான்.

“அந்தக் கனவு என்னவென்று உமக்குத் தெரியுமா?” பக்தி கேட்டாள்.

“அவன் சொல்லச் சொல்ல நான் கேட்டேன்! என்ன பயங்கரமான கனவு! இப்போது நினைத்தாலும் உடல் நடுங்குகிறது என்றாலும் அதைக் கேட்டது எனக்கு நல்லதுதான் என்று எண்ணி மகிழ்ச்சியடைகிறேன்” என்றான் கிறிஸ்தியான்.

“விளக்கம்கூறுபவரின் வீட்டில் வேறு ஒன்றையும் நீர் காணவில்லையா?” பக்தி தொடர்ந்து கேட்டாள்.

“இன்னும் இருக்கிறதே! அழகான மாளிகை ஒன்றுக்கு என்னை அழைத்துச் சென்று காட்டினார். அதிலிருந்தவர்கள் தங்கமயமான ஆடை அணிந்திருந்தார்கள். ஒரு துணிவுள்ள விசுவாசி அதினுள் நுழைய முற்பட்டான். எதிர்த்து நின்றவர்களைப் போரிட்டு வென்று உள்ளே நுழைந்தான்.

வாரும் நித்திய மகிமையைப் பெற்றுக்கொள்ளும் என்று உள்ளே யிருந்தவர்கள் வாழ்த்தினார்கள். இந்தக் காட்சிகளையெல்லாம் காணும்போது எனக்கு உற்சாகமாக இருந்தது. விளக்கம் கூறுபவரின் வீட்டிலேயே இன்னும் ஓராண்டாவது தங்கிச் செல்லலாமே என்ற ஆசையும் எழுந்தது. ஆனால் பயணம் செல்லவேண்டியிருந்ததால் புறப்பட்டு வந்துவிட்டேன்" என்றான் கிறிஸ்தியான்.

"வழியில் வேறு ஏதேனும் காட்சியைக் கண்டீரா?" பக்தி மேலும் கேட்டாள்.

"தொடர்ந்து நடந்து வரும்போது சிறு குன்றின் உச்சியில் சிலுவையொன்றைக் கண்டேன். என்ன வியப்பு! சிலுவையைக் கண்டவுடன் அத்தனை காலமும் என்னை துன்புறுத்தி வந்த என் முதுகுச் சுமை அறுந்து விழுந்து, மறைந்துவிட்டது! இதோடு அதிசயம் முடிந்துவிடவில்லை! பிரகாசமான ஆடை தரித்த மூவர் என் முன்னே தோன்றினார்கள்! ஒருவர் என் பாவங்கள் மன்னிக்கப்பட்டன என்று சாட்சி பகர்ந்தார். அடுத்தவர் என் பழைய கந்தையாடைகளைக் களைந்துபோட்டு, இதோ நான் இப்போது அணிந்திருக்கும் பொற்சரிகை அங்கியை எனக்கு உடுத்தினார். இன்னொருவர் இதோ என் நெற்றியில் காணப்படுகிறதே இந்த அடையாளத்தைப் போட்டு முத்திரை போடப்பட்ட இந்தச் சுருளையும் கொடுத்தார்" என்று கூறி இடுப்பிலிருந்த அந்தச் சுருளை எடுத்து அவர்களுக்குக் காட்டினான்.

"இன்னும் ஏதேனும் காட்சிகளைச் சொல்லாமல் விட்டுவிட்டீரா?" என்று பக்தி கேட்டாள்.

"நான் கண்டவற்றில் முக்கியமானவைகளையெல்லாம் சொல்லிவிட்டேன், அம்மா. இன்னும் நடந்தவற்றைச் சுருக்கமாகக் கூறிவிடுகிறேன், கேளுங்கள். வழியில் சங்கிலியால் பிணைக்கப் பட்டு உறங்கிக்கொண்டிருந்த **அறிவிலி, சோம்பேறி, துணிச்சல்காரன்** மூவரையும் காப்பாற்ற முயன்றேன். ஆனால் அவர்களோ என் பேச்சைக் கேட்கவில்லை. அதன்பிறகு சுவரேறிக் குதித்து நேர்வழியை அடைந்த வெளிவேஷம், மாய்மாலம் ஆகிய இருவரையும் கண்டேன். தாங்களும் சீயோனுக்குப் போவதாக அவர்கள் கூறிக்கொண்டார்கள். ஆனால் அவர்கள் போன வழியும் தெரியவில்லை; என்ன ஆனார்கள் என்றும் தெரியவில்லை. அவர்கள் வந்த வழி சரியானதில்லை என்று நான் கூறியபோதிலும் கூட அவர்கள் நம்பவில்லை. பின்னர் இந்த மலைமீது ஏற நான் பட்ட கடினங்கள் கொஞ்ச நஞ்சமா? அரண்மனை வாயிலை அடையு

முன்பு சிங்கங்களைக் கண்டு பயந்து நின்றுவிட்டேன். வாயிற்காப்போன் எனக்குத் துணிவூட்டியபின்புதான் தாண்டி வந்தேன். இவ்வளவு தூரம் என்னைக் காப்பாற்றி வந்ததற்காகவும், என்னை ஏற்றுக்கொண்டு உபசரிக்கும் உங்களைச் சந்திக்கவைத்ததற்காகவும் கடவுளுக்கு நன்றி செலுத்துகிறேன்'' என்று தழுதழுத்த குரலில் கூறினான் கிறிஸ்தியான்.

பக்திக்கு அடுத்தபடியாக விவேகம் கிறிஸ்தியானிடம் கேள்விகள் கேட்கத் துவங்கினாள்.

"எப்போதாவது உன் ஊரைப்பற்றிய நினைவுகள் உனக்கு எழுவதுண்டா?" என்று கேட்டாள் விவேகம்.

''சிலவேளைகளில் நினைவு வரும், அப்போது மனம் கலங்கும். ஆனாலும் நான் திரும்பிச் செல்ல விரும்பவில்லை. நித்திய பேரின்பத்தையல்லவா நான் நாடிச் செல்கிறேன்'' என்றான் கிறிஸ்தியான்.

"உன்னுடைய பழைய குணங்கள் சிலவற்றையும் கூடவே கொண்டு வந்திருக்கிறாய் அல்லவா?'' என்று கேட்டாள் விவேகம்.

"உண்மைதான் அம்மா. எனக்கு விருப்பமில்லாவிட்டாலும் சில என்னுடனேயே தங்கிவிட்டன. எங்கள் அழிநகரத்தைச் சேர்ந்தவர்களுடைய மாம்ச இச்சை என்னோடு வந்தது உண்மை தான். இவற்றை நினைத்துத்தான் நான் கவலைப்படுகிறேன். என் வாழ்வுக்கேற்றவற்றை நானே தெரிந்துகொள்வதாய் இருந்தால், அந்தப் பழையவைகளில் ஒன்றையும் வேண்டும் என்று விரும்பவே மாட்டேன். நல்லவற்றையே செய்யவேண்டும் என்னும் விருப்பம் எனக்கிருந்தாலும், தீமையைச் செய்ய வேண்டும் என்ற ஆசையும் அழிந்து போகவில்லையே" என்று கவலைப்பட்டான் கிறிஸ்தியான்.

''இவ்வாறு உன் மனதைக் கலங்கச் செய்யும் இந்த உணர்வுகள் எப்போதாவது நீங்குவதுண்டா?" விவேகம் கேட்டாள்.

"உண்டு அம்மா, அப்போது நான் அடையும் ஆனந்தத்திற்கு அளவே கிடையாது" என்றான் கிறிஸ்தியான் மகிழ்ச்சியுடன்.

"எந்த வேளைகளில் உன் கவலை மாறிப்போகிறது?" என்று தொடர்ந்து கேட்டாள் விவேகம்.

"சிலுவைக் காட்சியை நினைத்துப் பார்க்கும்போது என் கவலைகள் அகன்று விடுகின்றன அம்மா. என் அங்கியைக்

கூர்ந்து நோக்கும்போதும் என் கவலைகள் மறந்துபோகின்றன. என் இடுப்பிலிருக்கும் இந்தச் சுருளை எடுத்துப் படித்தாலும் கவலைகள் விலகும். நான் நாடிச் செல்லும் சீயோன் மலையைப்பற்றி நினைத்துப் பார்த்தாலும் கவலைகள் மறைந்து விடுகின்றன'' என்றான் கிறிஸ்தியான்.

“சீயோன் மலைமீது உனக்கு நாட்டம் இருக்கிறதா?'' என்று அவனிடம் கேட்டாள் விவேகம்.

“ஏன் வாஞ்சை இருக்காதா? எனக்காகச் சிலுவையில் மரித்தவர் இன்னும் உயிரோடு இருக்கிறாரே! சீயோன் மலைக்குச் சென்றால் நான் அவரை நேருக்கு நேர் இப்போது காண்பேனே! எனக்குள்ள மனக்கவலைகளையெல்லாம் மறந்து அங்கே பேரின்பத்தை அனுபவிப்பேனே! அங்கே மரணமே கிடையாதாம் (வெளி. 21:4)! என் மனதுக்குப் பிடித்த நண்பர்களோடு கூடி உறவாடுவேன். உண்மையைக் கூறினால், அம்மா, அவரால் என்னுடைய பாரச் சுமை நீங்கிவிட்டபடியால், அவர்மீது அளவுகடந்த அன்பு வைத்திருக்கிறேன். இங்கோ நான் உள்ளான கவலைகளால் அழிந்துபோகிறேன். சீயோனை அடைந்துவிட்டாலோ, அழிவே இல்லாதவனாக, ஓயாமல் பரிசுத்தர், பரிசுத்தர் என்று பாடிக்கொண்டிருக்கும் கூட்டத்தோடு வாழுவேன்'' என்றான் கிறிஸ்தியான் மகிழ்ச்சியுடன்.

இப்போது கருணை கிறிஸ்தியானிடம் தன்னுடைய கேள்விகளை கேட்கத் துவங்கினாள்.

“உனக்குத் திருமணம் ஆகிவிட்டதா? பிள்ளைகள் உண்டா?'' என்று அவள் கேட்டாள்.

“ஆகிவிட்டது அம்மா, மனைவியும் நான்கு பிள்ளைகளும் இருக்கிறார்கள்'' என்றான் கிறிஸ்தியான்.

“அப்படியானால், நீ ஏன் அவர்களை உன்னோடு கூட்டி விரவில்லை?''

இந்தக் கேள்வியைக் கேட்டவுடன் கிறிஸ்தியானின் கண்கள் கலங்கின.

“அவர்களும் என்னுடன் வந்திருந்தால் எவ்வளவு நலமாயிருந்திருக்குமே, அம்மா. ஆனால் நான் மோட்சத்தை நோக்கிப் பயணம் புறப்படுவது அவர்களுக்குப் பிடிக்கவில்லையே. அம்மா'' என்று அங்கலாய்த்தான்.

“அவர்களோடு பேசி, அவர்களும் கூட வராவிட்டால் அவர்களுக்கு அழிவு நிச்சயம் என்று அறிவுறுத்தியிருக்கக் கூடாதா?'' என்று கருணை அன்போடு கேட்டாள்.

"சொல்லிப் பார்த்தேனே, அம்மா, கடவுள் இந்த நகரம் அழிந்துபோகும் என்று எனக்கு வெளிப்படுத்தியுள்ளார். என்னோடு நீங்களும் புறப்பட்டு வாருங்கள் என்று எத்தனை முறை வற்புறுத்திக் கூப்பிட்டேன். கடைசியில் அவர்கள் என்னைப் பைத்தியக்காரன் (ஆதி. 19:14) என்றே முடிவுகட்டி விட்டார்கள்" என்று வருத்தப்பட்டான் கிறிஸ்தியான்.

"ஆண்டவரை நோக்கி இதற்காக ஜெபித்ததுண்டா?" என்று கேட்டாள் கருணை.

"எத்தனையோ தடவைகள் ஜெபம் செய்ததுண்டு. ஏனென்றால் என் மனைவியும், பிள்ளைகளும் என்மீது எவ்வளவு அன்பு வைத்திருந்தார்கள் என்பதை நான் மறந்துவிடவில்லை" என்றான் கிறிஸ்தியான்.

"உன்னுடைய ஊர் அழிந்துவிடும் என்று உனக்கு நிச்சயமாகத் தெரிந்திருக்கிறதே! அதைப்பற்றிய உன் கவலையையும் பயத்தையும் அவர்களோடு பகிர்ந்துகொள்ளவில்லையா?" என்று கருணை கேட்டாள்.

"ஒரு தடவையா? இரு தடவையா? எத்தனையோ முறை சொல்லிச் சொல்லி என் தொண்டை கட்டிக் கொண்டதுதான் மிச்சம். என் முகத்தைப் பார்த்தே அவர்கள் புரிந்து கொண்டிருக்கலாம். என் கண்ணீரைப் பார்த்தாவது அவர்கள் மனம் இளகியிருக்கலாம். அழிவை நினைத்து நான் நடுங்கியதை யாவது கண்டிருக்கலாம். இவ்வளவும் இருந்து என்ன பயன்? என்னோடு புறப்படும்படி அவர்கள் மனம் மாறவில்லையே!" மீண்டும் அங்கலாய்த்தான் அவன்.

"அதற்கு என்ன காரணம் என்று நினைக்கிறாய்?"

"என் மனைவி உலக உறவுகளை விட்டுவிடுவதற்குப் பயப்பட்டாள். என் பிள்ளைகளோ சிற்றின்பங்களில் ஆசை கொண்டிருந்தார்கள். வெவ்வேறு காரியங்களில் அக்கறைகொண்டு என்னுடைய எச்சரிப்புக்குச் செவிசாய்க்கவில்லை. என்னைத் தனியே பயணம்பண்ணும்படி விட்டுவிட்டார்கள்" என்றான் கிறிஸ்தியான்.

"அவர்கள் உன்னோடு வரும்படி கேட்டுக்கொண்டதெல்லாம் உண்மைதான். ஆனால் உன்னுடைய கெட்ட நடவடிக்கைகளால் அவர்கள் அதற்கு முக்கியத்துவம் கொடுக்கவில்லை என்றுதான் தோன்றுகிறது" என்று குற்றம் சாட்டினாள் கருணை.

"நான் முற்றிலும் தூய நடவடிக்கையுள்ளவன் என்று கூற முடியாதுதான். அடிக்கடி நான் உலக இச்சைகளில் விழுந்து போனதுண்டு. ஒருவன் கூறும் சத்தியங்கள் அவனது தீய

நடவடிக்கைகளைப் பயனற்றதாக்கிவிட முடியும் என்பதை நானறிவேன்; என்றாலும் ஒன்றுமட்டும் என்னால் உறுதியாகக் கூறமுடியும். மோட்சத்துக்குப் போகவேண்டும் என்ற விருப்பத்தை கெடுக்குமளவுக்கு, நான் தவறு ஏதேனும் செய்து, அவர்களுக்கு இடறலாக இருந்ததில்லை. இந்தக் காரியத்தில் நான் எவ்வளவு கண்டிப்போடு இருந்தேன் என்பதற்கு அவர்களே சாட்சி பகரக் கூடும். அவர்களுக்குத் தடையாக ஏதேனும் இருந்திருக்குமானால், அது நான் தூய கடவுளுக்கு முன்பாக செய்யாமலிருக்க முயன்றதாகவே இருக்கலாம். என்னால் பிறருக்கு எந்தவிதத் தீமையும் விளையக்கூடாத வகையில்தான் நான் நடந்துகொண்டேன் என்பதுதான் உண்மை" என்று கிறிஸ்தியான் உறுதியாகக் கூறினான்.

'உண்மைதான். "காயீன் தன் சகோதரனைப் பகைத்தான்" (1 யோவான் 3:12) என்று கூறப்பட்டுள்ளதை நாம் அறிவோமே. ஏன் அவன் அவ்வாறு பகைத்தான்?'' 'தன் கிரியைகள் பொல்லாதவைகளும், தன் சகோதரன் கிரியைகள் நீதியுள்ளவைகளுமாய் இருந்ததினாலேதானே' பகைத்தான்? நீ தீமையை வெறுத்ததினால், உன் மனைவியும் பிள்ளைகளும் உன்னை வெறுத்தார்கள். அவர்கள் நன்மையை நாடுபவர்கள் கிடையாது என்பதை இதன்மூலம் வெளிப்படுத்திவிட்டார்கள். நீயோ இரத்தப் பழியிலிருந்து உன் ஆத்துமாவைத் தப்புவித்துக் கொண்டாய் (எசே. 3:19)" என்று முடிவாகக் கூறினாள் கருணை.

இவ்வாறு அவர்கள் இரவு உணவு தயாராகும்வரை பேசிக் கொண்டிருந்ததை நான் என் கனவில் கண்டேன். சாப்பாடு தயாரானவுடன் அனைவரும் மேசையின் முன்னால் அமர்ந்தார்கள். சுவையான, சத்துள்ள உணவு வகைகளும், பான வகைகளும் கொண்டுவந்து வைக்கப்பட்டன. சாப்பாட்டு வேளையின்போது அவர்கள் அந்த மலையின் அதிபரைப் பற்றிப் பேசிக்கொண்டார்கள்.

அவர்கள் பேச்சிலிருந்து அந்த அதிபர் மகா பலமுள்ள வீரர் என்பதும், மரணத்திற்கு அரசரான பெரிய அரக்கனோடு அவர் போர்புரிந்து அவனைக் கொன்றார் (எபி. 2:14, 15) என்பதும் தெரிந்தது. அது மட்டுமன்றி; இந்தக் கடும்போரில் அவர் அடைந்த துன்பங்களுக்கும், வேதனைகளுக்கும் அளவில்லை என்பதையும் அவர்கள் பேச்சின்மூலம் அறிந்துகொண்டேன். கனவைக் கண்டு கொண்டிருந்த நானும் அவரை அதிகமாக நேசிக்கும்படி தூண்டப்பட்டேன்.

இந்தப் போரில் அவர் அதிகமாய் இரத்தம் சிந்தினாரென்று கிறிஸ்தியான் கூறினான். ஆனால் அவர் பட்ட துன்பங்களெல்லாம் மக்கள்மேல் அவர் கொண்டிருந்த பூரண அன்பினாலேயே

பட்டார் என்னும் உண்மை அவருடைய எல்லாக் கிரியைகளையும் கிருபையுடையதாக்கி மேன்மைப்படுத்துகிறது. அந்த மாளிகையில் இருந்து சிலர் அந்த மகிமையானவர் சிலுவையில் மரித்த பின்பு அவரைக் கண்டு அவரோடு பேசிக்கொண்டிருந்ததாகவும், அப்போது அவர் ஏழைப் பரதேசிகளை நேசிக்கிறேன் என்று கூறியதைக் கேட்டதாகவும் சொன்னார்கள். பூமியெங்கிலும் அவரைப்போன்ற அன்பர் கிடையவே கிடையாது என்றும் கூறினார்கள். இதை நிரூபிக்கும்படி அவர்கள் ஓர் உண்மையையும் எடுத்துக் காட்டாகச் சொன்னார்கள். எளியவனுக்கு உதவி செய்யும்படியாக அவர் தமது மகிமைகளையெல்லாம் களைந்து போட்டாராம். அது மட்டுமன்றி அவர் சீயோன் மலையில் தனிமையாக வாசம் செய்யமாட்டேன் என்றும் கூறிவிட்டாராம். அவர் தனது குணநலனுக்கு ஏற்றபடி குப்பைமேட்டில் வசிக்கிறவர்களாக இருந்த அநேக எளியவர்களைப் பிரபுக்களாக்கிவிட்டார் *(1 சாமு. 2:8)* என்றும் கூறினார்கள்.

இவ்வாறு அவர்கள் நீண்ட நேரம் உரையாடிக் கொண்டிருந்ததை நான் என் கனவில் கண்டேன். அதன் பிறகு கடவுளுடைய பாதுகாப்புக்கு ஒப்புக்கொடுத்து, உறங்கச் செல்லும்படி எழுந்தார்கள். கிறிஸ்தியான் தங்கும்படி ஒரு மேல் அறை கொடுக்கப்பட்டது. அதன் ஜன்னல் சூரியன் உதிக்கும் திசையை நோக்கித் திறந்தது. **சமாதானம்** என்ற இந்த அறையில் படுத்து, இரவு முழுவதும் நிம்மதியாக உறங்கினான் கிறிஸ்தியான். காலை சூரியன் உதயமாகும்போது எழுந்த அவன் அந்த அழகிய காட்சியைக் கண்டு கடவுளைத் துதித்தான்; அவன் பாவங்களை மன்னித்து, இம்மட்டும் அவனைக் கொண்டு சேர்த்த அவருக்கு நன்றி கூறினான்.

காலையில் விழித்தெழுந்து வந்த மற்றவர்கள் அவனோடு உரையாடினார்கள். அவன் இந்த அரண்மனையின் அதிசயங்களையெல்லாம் கண்டபிறகே அவ்விடம்விட்டுச் செல்லவேண்டுமென்று அவனிடம் கேட்டுக்கொண்டார்கள்.

முதலில் அவனை அரண்மனையிலிருந்த நூலகத்திற்கு அழைத்துச் சென்றார்கள். மிகவும் அபூர்வமான வரலாற்று ஏடுகளை அவனுக்குக் காட்டினார்கள். அந்த ஏடுகளில் அம்மலையின் ஆண்டவருடைய வம்ச அட்டவணை இருந்தது. அந்த அட்டவணையில் மலையின் அதிபர் நித்தியமானவருடைய குமாரன் என்றும், அனாதி தலைமுறையாகத் தோன்றினவர் என்றும் குறிக்கப்பட்டிருந்தது. அவரது கிரியைகள் அந்த ஏடுகளில் விவரமாகக் கொடுக்கப்பட்டிருந்தன. அவர் தனக்காக ஊழியம் செய்யும்படி ஏற்றுக்கொண்ட அநேகருடைய பெயர்களும்,

நித்திய இருப்பிடங்களில் அவர் அவர்களைக் குடியமர்த்தியது பற்றிய உண்மைகளும் எழுதப்பட்டிருப்பதை நான் என் கனவில் கண்டேன்.

அதன்பின்பு அவர்கள் மலையின் அதிபருடைய ஊழியர்கள் சிலருடைய செயல்களைப்பற்றிய செய்திகளை வாசித்தார்கள். அவர்கள் எவ்வாறு நாடுகளை வெற்றி கொண்டார்கள், நீதியை நடப்பித்தார்கள், வாக்குத்தத்தங்களைப் பெற்றார்கள், சிங்கங்களின் வாய்களை அடைத்தார்கள், அக்கினியின் உக்கிரத்தை அவித்தார்கள், பட்டயக்கருக்குக்குத் தப்பினார்கள், பலவீனத்தில் பலன் கொண்டார்கள், யுத்தத்தில் வல்லவர்களானார்கள், அந்நியருடைய சேனைகளை முறியடித்தார்கள்" *(எபி. 11:33, 34)* என்று அந்தச் செய்திகள் விளக்கமாகக் கூறின.

அந்த நூலகத்தின் மற்றொரு பகுதியிலிருந்து ஒரு நாளாகமப் புத்தகத்தை எடுத்து வாசித்தார்கள். தங்கள் ஆண்டவரை முன்னொரு காலத்தில் அவமதித்து, அலட்சியமாக எண்ணினவர்களைக்கூட அவர் திரும்ப ஏற்றுக்கொண்டு, அவர்களுக்குத் தமது கிருபையை அளிக்கும்படியாக அன்பு செலுத்தச் சித்தமுள்ளவராயிருக்கிறார் என்ற உண்மை அதில் எழுதப்பட்டிருந்தது. இந்த நூல்கள் மட்டுமின்றி, விரோதிப்ப வர்களைப் பயத்தில் நடுங்கச் செய்யக்கூடியதும், பயணிகளுக்கு ஆறுதலளித்து அவர்களுக்கு உற்சாகமளிக்கக் கூடியதுமான முந்தைய வரலாறுகளும், பிற்காலத்துக்குரிய தீர்க்கதரிசனங்கள், முன் அடையாளங்கள், அவைகளின் நிறைவேறுதல்பற்றிய உண்மைகளும் அடங்கிய பல வரலாற்று நூல்களையும் கிறிஸ்தியானுக்குக் காட்டினார்கள்.

அடுத்த நாள் அவர்கள் கிறிஸ்தியானை அரண்மனையின் ஆயுதக் கிடங்கிற்கு அழைத்துச் சென்றார்கள். பயணிகளுக்கென்றே அம்மலையின் அதிபர் சேகரித்து வைத்துள்ள பட்டயம், கேடகம், தலைச்சீரா, மார்க்கவசம், ஒருபோதும் தேய்ந்து போகாத பாதரட்சை இவற்றைக் காட்டினார்கள். வானத்தின் நட்சத்திரங்களின் எண்ணிக்கையின் அளவுக்கு போர் வீரர்கள் வந்தாலும் அவர்கள் அனைவருக்கும் தேவைப்படும் அனைத்து ஆயுதங்களும் அங்கே குவித்து வைக்கப்பட்டிருந்தன!

மலையின் அதிபருடைய அடியார் சிலர் மகிமையான செயல்களைச் செய்துமுடிக்கப் பயன்படுத்திய பல கருவிகளையும் கிறிஸ்தியானுக்குக் காட்டினார்கள். மோசேயின் கோலையும், மீதியானியரைக் கலங்கடிக்க கிதியோன் பயன்படுத்திய பந்தங்களையும் பெலிஸ்தியரை வெல்ல சிம்சோன் உபயோகித்த தாடை எலும்பையும் கண்டு அகமகிழ்ந்தான் கிறிஸ்தியான்.

கோலியாத்தை மடங்கடிக்க தாவீது எறிந்த கவண் கல்லையும், ஆண்டவர் தமது உக்கிர நாளிலே பாவ மனிதனை அழிக்கும்படி பயன்படுத்தும் பட்டயத்தையும், இன்னும் அநேக ஆயுதங்களையும் கிறிஸ்தியானுக்குக் காட்டினார்கள். இவற்றைக் கண்டு கிறிஸ்தியான் அடைந்த மகிழ்ச்சிக்கு அளவே இல்லை! பின்பு அவரவர் அறைக்குச் சென்று ஓய்வெடுத்தார்கள்.

மறுநாள் காலையில் கிறிஸ்தியான் எழுந்து பயணம் புறப்பட ஆயத்தமாவதை நான் என் கனவில் கண்டேன்.

"இன்று மட்டும் இருந்து போ; மேகக் கூட்டம் இல்லா விட்டால் மகிழ்ச்சி மலையை உனக்குக் காட்டுவோம். அந்த மகிழ்ச்சி மலையிலிருந்து பரலோகம் சிறிது தொலைவுதான். அதைப் பார்த்தால் உனக்கு ஆறுதலாயிருக்கும்" என்று அந்தப் பெண்மணிகள் கிறிஸ்தியானிடம் கேட்டுக் கொண்டார்கள்.

அவர்கள் வேண்டுகோளுக்குச் செவிசாய்த்து கிறிஸ்தியான் தன் பயணத்தை நிறுத்திவிட்டான். அந்தப் பெண்மணிகள் கிறிஸ்தியானை அரண்மனையின் மேல் தளத்திற்குக் கூட்டிச் சென்று, தெற்குத் திசையில் பார்க்குமாறு கூறினார்கள்.

கிறிஸ்தியான் பார்த்தபோது மகிழ்ச்சி மலையின் மகிமையான காட்சிகளைக் கண்டு மெய்மறந்து நின்றான். வானத்தை எட்டிவிடுமளவுக்கு உயர்ந்த மரங்களும், வெகுதூரம் படர்ந்திருந்த திராட்சைத் தோட்டங்களும், பழமரங்களும், பல வண்ணப் பூச்செடிகளும் கிறிஸ்தியானின் உள்ளத்தைக் கொள்ளை கொண்டன. வெள்ளிக் கம்பிகளைப்போல நெளிந்து நெளிந்து சென்ற நீரோடைகளையும், வெண்ணிற ஆடை விரிக்கப்பட்டது போன்ற நீர்நிலைகளையும் கண்டான் கிறிஸ்தியான். இவற்றைக் காண்பதே மன மகிழ்ச்சி அளிக்கக்கூடியதாக இருந்தது!

"இந்த மலைநாட்டின் பெயர் என்ன?" என்று கிறிஸ்தியான் கேட்டான்

"**இம்மானுவேல் தேசம்** என்பது அதன் பெயர். இந்த மலையைப்போல, அந்த மலை நாடும் பயணிகளுக்குரியதுதான். நீ அங்கே செல்லும்போது அங்கிருந்து மோட்ச வாசலைக் காணலாம்; அங்குள்ள மேய்ப்பர் வெளியே வந்து உலாவும் காட்சியையும் காணமுடியும்" என்று அந்தப் பெண்மணிகள் கூறினார்கள்.

கிறிஸ்தியான் மீண்டும் தான் பயணம் புறப்படவேண்டும் என்ற விருப்பத்தைத் தெரிவித்தான். பெண்மணிகள் அவனை ஆயதக் கிடங்குக்கு அழைத்துச் சென்றார்கள்.

வழியில் எதிர்பார்க்கப்படும் ஆபத்துக்களைச் சந்திக்கும் வகையில் கிறிஸ்தியான் சர்வாயுதவர்க்கத்தை (எபே. 6:10-18) அணிந்துகொண்டான்.

வாயிற்காப்போனை அணுகிய கிறிஸ்தியான், "இவ்வழியே யாராவது பயணிகள் சென்றார்களா?" என்று அவனிடம் கேட்டான்.

"ஆம், ஒருவன் சென்றான்" என்றான் வாயிற்காப்போன்.

"அப்படியா?" அவன் பெயர் என்ன என்று உமக்குத் தெரியுமா?" ஆர்வமாகக் கேட்டான் கிறிஸ்தியான்.

"அவன் பெயரைக் கேட்டபோது **உண்மையானவன்** என்று கூறினான்" என்றான் வாயிற்காப்போன்.

"உண்மையானவனா போகிறான்? அவனை எனக்கு நன்றாகத் தெரியுமே! அவன் என்னுடைய ஊரைச் சேர்ந்தவன்தான். இன்னும் சொல்லப்போனால் என் பக்கத்து வீட்டுக்காரன் அவன். இதற்குள்ளாக அவன் அதிகதூரம் சென்று விட்டிருப்பானோ" என்று கேட்டான் கிறிஸ்தியான்.

"அவன் அநேகமாக மலையடிவாரத்தை அடைந்திருப்பான் என்று நினைக்கிறேன்" என்றான் வாயிற்காப்போன்.

"மிகவும் நன்றி ஐயா, கர்த்தர் உம்மோடு இருப்பாராக. நீர் காட்டிய அன்புக்காக கடவுள் உம்மை மென்மேலும் ஆசீர்வதிப்பாராக" என்று நன்றி கூறிய கிறிஸ்தியான் உடனடியாகப் புறப்படும்படி அவசரப்பட்டான்.

அப்போது விவேகம், பக்தி, கருணை, முன்யோசனை என்ற பெண்மணிகளும் மலையடிவாரம்வரை அவனுடன் வருவதாகக் கூறிப் புறப்பட்டார்கள். ஏற்கெனவே அவர்கள் பேசிக்கொண்ட காரியங்களைப்பற்றி உரையாடியவாறே அடிவாரம்வரை சென்றார்கள்.

"இந்த மலையில் ஏறுவதைப்போல, இப்போது இறங்குவதும் கடினமாக இருக்கிறதே!" என்று வியப்படைந்தான் கிறிஸ்தியான்.

"ஆமாம், நீ தாழ்மையின் பள்ளத்தாக்கை நோக்கிச் சென்று கொண்டிருக்கிறாய். இதைக் கடந்து செல்லும் எவரும் சறுக்கிவிழாமல் இருப்பது கடினம். இதனால்தான் அடிவாரம் வரை நாங்கள் உன்னுடன் வரவிரும்பினோம்" என்று விவேகம் கூறினாள்.

கிறிஸ்தியான் எவ்வளவோ எச்சரிக்கையுடன் இறங்கினாலும் ஓரிரு இடங்களில் சறுக்கி விழுந்துவிட்டான்.

மலையின் அடிவாரத்தை அடைந்தவுடன் அவர்கள் கிறிஸ்தியானுக்கு ஒரு ரொட்டி, ஒரு திராட்சை இரசப்புட்டி, திராட்சைப் பழக் குலை இவற்றைக் கொடுத்து அவனை வழியனுப்பிவைத்தார்கள்.

14. அப்பொல்லியோனுடன் சந்திப்பு

தாழ்மையென்னும் பள்ளத்தாக்கின் வழியே கிறிஸ்தியான் தனியாக நடந்துபோவதை நான் என் கனவில் கண்டேன். இந்தப் பள்ளத்தாக்கில் அவன் பட்ட அவதிகளுக்குக் கணக்கே இல்லை!

கிறிஸ்தியான் தன்னை வழியனுப்ப வந்த பெண்மணிகளைப் பிரிந்து சிறிது தூரம் வருவதற்குள்ளாக **அப்பொல்லியோன்** என்னும் பெயரையுடைய பிசாசு அவனுக்கு எதிராக வந்தான்.

இவனைக் கண்டவுடன் கிறிஸ்தியான் தயங்கினான். 'இவனை எதிர்த்து செல்வதா, அல்லது திரும்பி விடுவதா?' என்று தனக்குள்ளே யோசித்த அவன் ஒரு முடிவுக்கு வந்தான். 'திரும்பிச் சென்றால் அவனுடைய அம்புகள் கவசமில்லாத என் முதுகைத் துளைத்தாலும் துளைத்துவிடலாம். அதனால் அவனை நேருக்கு நேர் எதிர்ப்பதே சரியானது' என்ற முடிவுடன் முன்னால் சென்றான் கிறிஸ்தியான்.

அப்பொல்லியோனின் கொடூரமான உருவத்தைக் கண்டு கிறிஸ்தியானின் உடல் சிலிர்த்தது. அப்பொல்லியோனின் உடல் மீன் செதில்களைப்போன்று காணப்பட்டது. கரடியைப்போன்ற பாதங்களையும், பறவைகளைப்போன்ற இறக்கைகளையும் கொண்டிருந்தான். சிங்கத்தின் வாயைப்போலிருந்த அவன் வாயிலிருந்து நெருப்பும் புகையும் வெளிவந்தன!

கிறிஸ்தியானைப் பார்த்துச் சீறிய அவன்: "யார் நீ? எங்கேயிருந்து வருகிறாய்? எங்கே செல்கிறாய்?'' என்று கேட்டான்.

"பாவங்களின் இருப்பிடமாகிய அழிநகரத்திலிருந்து சீயோன் மலையை நோக்கிச் செல்கிறேன்'' என்று கூறினான் கிறிஸ்தியான்.

''அப்படியானால் நீயும் என்னுடைய பிரஜைகளில் ஒருவன்தான். ஏனென்றால் அழிநகரத்தின் அதிபதியே நான்தான். உன் அரசனாகிய எனக்கு ஊழியம் செய்ய வேண்டிய நீ, எனக்குத் துரோகம் செய்துவிட்டு, இப்படிப் புறப்பட்டுவிட்டாயே! உன்னை என்ன செய்கிறேன் பார்" என்று உறுமினான் அப்பொல்லியோன்.

"உன்னுடைய நாட்டில் நான் பிறந்தது உண்மைதான். ஆனாலும் உனக்குப் பணிபுரிய என்னால் முடியாது. வேலை செய்தாலும் கூலி சரியாகக் கொடுக்காதவனிடம் எவனாவது வேலை பார்ப்பானா? நீ கொடுக்கும் கூலி அரை வயிற்றுக்குப் போதுமா? அதுவுமில்லாமல் பாவத்தின் சம்பளம் மரணம் அல்லவா? அதனால் என் புத்தி தெளிந்தவுடன், எனது வாழ்வுக்கேற்ற வழியை நான் தெரிந்துகொண்டேன்" என்று மனத்துணிவுடன் பதிலளித்தான் கிறிஸ்தியான்.

"எந்த அதிபதியும் அவர்கள் பிரஜையை இவ்வாறு இழந்துபோக விட்டுவிடமாட்டான். நானும் உன்னை விடப்போவதில்லை. வேலை அதிகம், கூலி குறைவு என்று குறை கூறுகிறாயே! உன் விருப்பப்படியே அதை ஒழுங்குப்படுத்திக் கொள்ளலாம். நீ மறுபடியும் நம்முடைய ஊருக்குப்போய் தொடர்ந்து உன் வேலைகளைச் செய்; நமது நாட்டின் வருமானத்திலிருந்து உன் விருப்பத்திற்கேற்ப அனைத்தையும் தருவதற்கு வாக்களிக்கிறேன்" என்று ஆசைக்காட்டினான் அப்பொல்லியோன்.

"நான் இராஜாதி இராஜாவுக்கு என்னை ஒப்புக்கொடுத்து அவருக்கு அடிமையாகிவிட்டேன். இனிமேல் உன் பின்னால் வருவது நியாயமாகாது" என்றான் கிறிஸ்தியான்.

"என்ன இது? நீ கூறுவதைப் பார்த்தால் இந்தத் தீமையை விட்டுவிட்டுப் பெரிய தீமையில் விழுந்துவிட்டது போலல்லவா இருக்கிறது? ஐயோ பாவம், அவரிடமா போய்ச் சேர்ந்தாய்? பரவாயில்லை, போனது போகட்டும். எப்படியும் என்னைவிட்டு அவரிடம் போய்ச் சேர்ந்தவர்கள் திரும்பவும் என்னிடம் வந்துவிடுவார்கள். நீயும் அப்படியே வந்துவிட்டால் உனக்கும் நலமாயிருக்கும்" என்றான் அப்பொல்லியோன்.

"நான் இனி அவருக்கே அடிமை என்று அவரிடம் உறுதி யளிக்கிறேன். இனி நான் அதை மீறி நடந்தால் என்னைப் போல துரோகி வேறு எவரும் இருக்க முடியாது" என்றான் கிறிஸ்தியான்.

"அதுசரி, எனக்கும் இதேபோன்று துரோகம் செய்திருக்கிறாயே! இப்போது நீ பேச்சைக் கேட்டுத் திரும்பிவிட்டால் அதையெல்லாம் மறந்துவிடுவோம்" என்று மீண்டும் வற்புறுத்தினான் அப்பொல்லியோன்.

"எனக்குத் தெளிவான அறிவு இல்லாத காலத்தில் உனக்கு அடிமையாக இருப்பதாக வாக்களித்தது உண்மைதான். ஆனால் இப்போது நான் யாருடைய ஆளுகையின் கீழ் இருக்கிறேனோ

அவர் எனக்கு அதை மன்னித்து, உனக்கு அடிமையாக இருந்த காலத்தில் நான் செய்த பாவங்களையெல்லாம் மறந்துவிடுவார் என்று நான் நம்புகிறேன். நாசக்காரனாகிய அப்பொல்லியோனே, இன்னும் நான் கூறுவதைக் கேள். உண்மையைச் சொன்னால் இப்போது நான் அவருடைய பணியையும், அவர் தரும் சம்பளத்தையும், அவருடைய அடியார்களையும், அவருடைய ஆளுகையையும், அவருடைய நாட்டையுமே விரும்புகிறேன். அதனால் நீ இனிமேல் வம்புபேசி என்னை வழிமறிக்க வேண்டியதில்லை. நான் அவருடைய சேவகன்; அவரையே பின்தொடர்வேன்" என்று திட்டவட்டமாகக் கூறிவிட்டான் கிறிஸ்தியான்.

"அப்பனே, நீ கவலையைவிட்டு மகிழ்ச்சியோடு போவது போல் தோன்றுகிறதே. நீ போகும் வழியில் உனக்கு வரப்போகும் அழிவுகளைப் பற்றியாவது யோசித்துப்பார். எனக்குத் துரோகம் பண்ணி என்னுடைய வழிகளைவிட்டு விலகிய அவருடைய சேவகர்களுக்கு எவ்வளவு கேவலமான முடிவு நேரிட்டிருக்கிறது என்பதை நீ அறிவாய் என்று நினைக்கிறேன். அவர்களில் அநேகர் அவமானகரமான முறையில் மரணமடைந்திருக்கிறார்கள். அது போகட்டும், எனது ஊழியத்தைவிட அவருடைய ஊழியம் மேன்மையானது என்கிறாயே! அவர் தமது ஊழியக்காரர்களுக்கு உதவி செய்யும்படி, எப்போதாவது தன்னுடைய இடத்தைவிட்டு நகர்ந்தது உண்டா? சொல் பார்ப்போம். நானோ அப்படிப் பட்டவனல்லவே! என்னுடைய ஊழியர்கள் சிறையிலடைக்கப் பட்டாலும்கூட, என்னுடைய பலத்தைக் கொண்டோ அல்லது ஏதாவது தந்திரம் செய்தோ, அவர்கள் அவருடைய கைக்கும், அவருடைய ஊழியக்காரர் கைக்கும் தப்பும்படி எவ்வளவு முயற்சி செய்கிறேன்! அதே உதவியை நான் உனக்கும் செய்ய முடியும். என்னை நம்பு" என்று கிறிஸ்தியானை மயக்கும் வண்ணம் மாய்மாலம் பேசினான்.

"தப்பாகப் புரிந்துகொண்டிருக்கிறாய் நீ. அவர் எங்கள் திட விசுவாசத்தைச் சோதிப்பதற்காகத்தான் இப்போது ஆண்டவர் உதவி செய்யாததுபோல ஒதுங்கியிருக்கிறார். நீ சொல்லுவதுபோல அவர்களுடையது பரிதாபகரமான முடிவல்ல; அதுவே மகிமையான முடிவு! இன்றைய மகிழ்ச்சியைப்பற்றி அவர்கள் கவலைப்படுவது கிடையாது; பிற்கால நித்திய மகிழ்ச்சியை நோக்கியே அவர்கள் காத்திருக்கிறார்கள். மகிமையின் இராஜாவாக தூதர் புடைசூழ ஆண்டவர் வரும்போது அவர்கள் அதை பெற்றுக்கொள்வார்கள்" என்று கூறினான் கிறிஸ்தியான்.

தனது பயணத்தில் கிறிஸ்தியான் இதுவரை செய்துள்ள தவறுகளைச் சுட்டிக்காட்டி கேலி செய்யத் துவங்கினான்

அப்பொல்லியோன். ''அவருடைய ஊழியக்காரன் என்று சொல்லிக்கொள்கிறாயே, அதற்குள்ளாக எத்தனை முறை அவருக்கு உண்மையாக நடப்பதில் தவறிவிட்டிருக்கிறாய்! இனியும் அவர் உனக்கு ஊதியம் கொடுப்பார் என்று நினைக்கிறாயா?'' என்று கேட்டான் அவன்.

''அப்படி நான் உண்மைக்கு விரோதமாக நடந்து கொண்டதைக் கூறு பார்ப்போம், அழிநகரத்து அதிபதியே!'' என்று கூறினான் கிறிஸ்தியான்.

"ஏன் நீ அவநம்பிக்கைச் சேற்றில் சிக்கிக் கொண்டபோது, ஏண்டா இங்கு வந்தோம் என்று மனம் கலங்க உன்னுடைய தலைவர் கூறிய பாதையில் செல்லாமல் குறுக்கு வழியில் சுமையை இறக்க வேண்டும் என்று வழி விலகிச் செல்ல வில்லையா? விழித்திருக்கவேண்டிய நேரத்தில் தூங்கிப் போய்விடவில்லையா? சிங்கங்களைக் கண்டு திரும்பிப்போக நினைக்கவில்லையா? உன் பயணத்தைப்பற்றி யாராவது கேட்டால் தற்பெருமையுடன் கண்டவற்றையும், கேட்ட வற்றையும் கூற நீ விரும்பவில்லையா? இதெல்லாம் உண்மையாக நடப்பதா? சொல், அப்பனே சொல்'' என்று குத்திக் காட்டினான் அப்பொல்லியோன்.

"நீ சொல்வது உண்மைதான், இவை மட்டுமன்றி இன்னும் அநேக தவறுகளைக்கூட நான் செய்திருக்கிறேன். என்றாலும் நான் அவற்றுக்காக மெய்யாகவே வருந்தும்போது, என் ஆண்டவர் என்னை மன்னிக்கச் சித்தமுடையவராயிருக்கிறார். உன் நாட்டில்தான் நான் இந்தப் பெலவீனங்களைப் பெற்றேன். அங்கேதான் பாவத் தளையில் கட்டுண்டு விடுபட முடியாமல் பெருமூச்சு விட்டேன். இப்போதோ அவற்றையெல்லாம் என் எசமானரிடம் அறிக்கையிட்டு மன்னிப்பைப் பெற்றுக் கொண்டேன்'' என்று மகிழ்ச்சியோடு கூறினான் கிறிஸ்தியான்.

கிறிஸ்தியானின் வார்த்தைகளைக் கேட்டு, அவன் மலர்ந்த முகத்தைக் கண்டவுடன் அப்பொல்லியோனின் கோபம் கட்டுக்கடங்காமல் அதிகரித்தது. "உன்னுடைய எசமானரின் விரோதி நான். அவருடைய கட்டளைகளையும் அவற்றைப் பின்பற்றுபவர்களையும் நான் வெறுக்கிறேன். இப்போது உன்னோடு போர் புரிந்து உன்னை வெற்றிக்கொள்ளவே இங்கே வந்திருக்கிறேன்'' என்று கத்தினான்.

"அப்பொல்லியோனே நான் சொல்வதைக் கேள். வீணாக என்னோடு மோதாதே. நான் பரிசுத்த பாதையில் இருக்கிறேன். நீ என்னை அழிக்க முடியாது'' என்று எச்சரித்தான் கிறிஸ்தியான்.

அப்பொல்லியோனோ கொஞ்சமும் பின்வாங்கவில்லை. கிறிஸ்தியானின் பாதையை வழி மறித்து நின்று கொண்டான். "எதைக் கண்டும் எனக்குப் பயமில்லை! நீதான் உனக்கு வரவிருக்கிற சாவைப்பற்றிப் பயப்படவேண்டும்! என் இடமாகிய பாதாள உலகத்தின்மீது ஆணை! நீ இந்த இடத்தைவிட்டுத் தப்பிச் செல்ல முடியாது. உன் ஆத்துமாவை இப்போதே அழித்து விடுகிறேன் பார்!" என்று மூர்க்கத்தனமாகக் கத்திய அப்பொல்லியோன் ஒரு தீ அம்பை எடுத்து கிறிஸ்தியானின் நெஞ்சுக்கு நேராக எய்தான். விசுவாசம் என்ற கேடகத்தினால் அந்தக் கொடூர அம்பைத் தடுத்து வீழ்த்திவிட்டான் கிறிஸ்தியான்!

'இனி தயங்கியிருப்பதில் பயனில்லை. எதிர்த்து முன்னேறுவதே ஒரே வழி' என்று நினைத்த கிறிஸ்தியான் மனத்துணிவுடன் அப்பொல்லியோனை நெருங்கினான். அவ்வளவுதான்! சரசரவென்று அவன்மீது அம்புகளை எய்யத் துவங்கிவிட்டான் அப்பொல்லியோன். கிறிஸ்தியான் எவ்வளவு திறமையாகத் தடுத்தபோதிலும் சில அம்புகள் அவன் தலையிலும், கையிலும், காலிலும் காயப்படுத்திவிட்டன. காயங்களினால் கிறிஸ்தியான் சற்றுப் பின்வாங்கினான். இதைக் கண்ட அப்பொல்லியோன் களிப்போடு இன்னும் சரமாரியான அம்புகளை அவன்மீது தொடுத்தான். இனிமேல் பின்வாங்கினால் ஆபத்து என்பதை உணர்ந்த கிறிஸ்தியான் முன்னே சென்று அந்த அம்புகளைத் தடுத்தான். அரை நாள் மட்டும் இந்தச் சண்டை தொடர்ந்து நடந்துகொண்டிருந்தது. காயமடைந்து பெலவீனப்பட்ட கிறிஸ்தியானால் தொடர்ந்து சமாளிக்க முடியாமல் சோர்ந்து போய்விட்டான்.

இதைக் கவனித்துக் கொண்டிருந்த அப்பொல்லியோன் இதுதான் சரியான தருணம் என்பதை அறிந்தான். அருகே நெருங்கி முழு பலத்தோடு கிறிஸ்தியானைத் தள்ளிவிட்டான்! கிறிஸ்தியானிடமிருந்த வேத வசனம் என்னும் பட்டயம் கைநழுவித் தூர விழுந்துவிட்டது! வெற்றிக் களிப்பில் கத்தினான் அப்பொல்லியோன். "அப்பனே, இப்போது உன் உயிர் என் கையில்" என்று கூறி பலங்கொண்ட மட்டும் கிறிஸ்தியானை நசுக்கினான். அவன் குற்றுயிரும் குறையுயிருமானான்! கடைசியாக, அவனை முற்றிலுமாக அழித்துவிடத் துணிந்த அப்பொல்லியோன் கையை ஓங்கினான். ஆனால் கிறிஸ்தியான் காப்பாற்றப்படுவது ஆண்டவருடைய சித்தமாக இருந்தது! அப்பொல்லியோன் கையை ஓங்கும்போது, கிறிஸ்தியான் தன் முழு பலத்தையும் திரட்டி, கையை நீட்டி விழுந்துகிடந்த பட்டயத்தைப் பற்றிக் கொண்டான். "என் சத்துருவே, எனக்கு விரோதமாய்ச் சந்தோஷப்படாதே; நான் விழுந்தாலும்

எழுந்திருப்பேன்" (மீகா 7:8) என்று கூறியபடி பட்டயத்தைக் கொண்டு முழு பலத்துடன் அப்பொல்லியோனைக் குத்தினான். மரணஅடி பெற்றதுபோல அப்பொல்லியோன் பின்வாங்கினான். கிறிஸ்தியானின் மனதிடம் அதிகரித்தது. "இவையெல்லாவற்றிலேயும் நாம் நம்மில் அன்பு கூறுகிறவராலே முற்றும் ஜெயங்கொள்ளுகிறவர்களாயிருக்கிறோமே" (ரோமர் 8:37) என்று கூறிய அவன் அப்பொல்லியோன்மீது பாய்ந்து அவனைத் தாக்கினான். தொடர்ந்து சண்டையிட முடியாத அப்பொல்லியோன் தனது இறக்கைகளை விரித்துப் பறந்து போய்விட்டான். அதன்பிறகு அவன் கிறிஸ்தியானின் பாதையில் குறுக்கிடவேயில்லை!

இந்த சண்டை நடந்த வேளையில் அப்பொல்லியோன் போட்ட சத்தமும், கூக்குரலும் இடி முழக்கம் போலிருந்தது. இந்தப் போரை என்னைப்போல நேரில் கண்டவர்கள் மட்டுமே அதன் பயங்கரத்தைப் புரிந்துகொள்ள முடியும். அப்பொல்லியோன் வலுசர்ப்பத்தைப் போலவே பேசினான். அவனோடு சண்டையிட்ட கிறிஸ்தியானின் இருதயத்திலிருந்து கட்டுக்கடங்காமல் பெருமூச்சு வெளிப்பட்டது. இந்தச் சண்டை மும்முரமாக நடந்துகொண்டிருக்கும்போது நான் கிறிஸ்தியானின் முகத்தையே கவனித்துக் கொண்டிருந்தேன். அதில் மகிழ்ச்சியின் அறிகுறியே காணப்படவில்லை. தன் பட்டயத்தால் அப்பொல்லியோனைக் குத்திச் சாய்த்த பிறகுதான் அவன் முகத்தில் மகிழ்ச்சி துளிர்விட்டது. புன்னகையோடு ஆகாயத்தை நிமிர்ந்து பார்த்தான். இதுவரை நான் இப்படிப்பட்ட சண்டையை பார்த்ததும் கிடையாது; கேள்விப்பட்டதும் கிடையாது!

சண்டை முடிந்தபிறகு தன்னைக் காப்பாற்றிய கடவுளை நோக்கி துதிகளை ஏறெடுத்தான் கிறிஸ்தியான். மகிழ்ச்சியோடு பாட்டுப்பாடி ஆண்டவரை வணங்கினான்.

அவ்வேளையில் ஜீவ மரத்தின் இலைகளை ஏந்திய ஒரு கை அவனை நோக்கி நீண்டது. கிறிஸ்தியான் அதைப் பெற்றுக் கொண்டான். சண்டையில்பட்ட காயங்களின்மீது ஒவ்வொரு இலையாகக் கிள்ளி வைத்தான். உடன்தானே அந்தக் காயங்கள் குணமாகிவிட்டன. கன்னியர் அவன் பயணத்திற்காகக் கொடுத்த அப்பத்தைப் புசித்து, திராட்சரசத்தைக் குடித்து இளைப்பாறினான். சிறிது நேரம் கழிந்தது. மறுபடியும் பயணம் புறப்பட்ட கிறிஸ்தியான், இன்னும் ஏதாவது விரோதிகள் எதிர்ப்பட்டால் ஆயத்தமாக இருக்கவேண்டும் என்ற எண்ணத்துடன் பட்டயத்தைக் கையில் ஏந்தியவனாகக்

கிளம்பினான். அப்பொல்லியோனால் கிறிஸ்தியானுக்கு மேலும் ஏந்தத் தொந்தரவும் நேரவில்லை.

15. கிறிஸ்தியான் மரண இருளின் பள்ளத்தாக்கைக் கடத்தல்

தாழ்மையின் பள்ளத்தாக்கை அடுத்து, **மரண இருளின் பள்ளத்தாக்கு** என்ற பெயர் கொண்ட மற்றொரு பள்ளத்தாக்கும் இருந்தது. மோட்சத்திற்குச் செல்லும் பாதை அதன் வழியே சென்றபடியால் கிறிஸ்தியான் அந்தப் பள்ளத்தாக்கையும் கடந்து செல்ல வேண்டியிருந்தது. இந்தப் பள்ளத்தாக்கைக் குறித்து எரேமியா தீர்க்கதரிசி "அவாந்தர வெளியும், பள்ளங்களுமுள்ள தேசமும், வறட்சியும், மரண இருளுமுள்ள தேசமும், ஒருவனும் கடவாமலும் ஒரு மனுஷனும் குடியிராமலும் இருக்கிற தேசமுமான வனாந்தரம்" (எரே. 2:5) என்று குறிப்பிட்டுள்ளார். அப்பொல்லியோனின் அம்புகள் விளைவித்த துன்பத்தைவிட அதிகமான துன்பங்களைக் கிறிஸ்தியான் இந்தப் பள்ளத்தாக்கில் சந்திக்க நேர்ந்தது.

கிறிஸ்தியான் தாழ்மைப் பள்ளத்தாக்கைக் கடந்து, மரண இருளின் பள்ளத்தாக்கில் காலடி எடுத்துவைக்கும்போது இருவர் அவனுக்கு எதிராக வருவதை நான் என் கனவில் கண்டேன். இவர்கள் நல்ல நாட்டைப்பற்றித் தவறான செய்தி கொடுப்பவர்களின் (எண். 13:32) வம்சத்தில் வந்தவர்கள்.

கிறிஸ்தியானைக் கண்டவுடன் அவர்கள் "போ, திரும்பிப் போ" என்று கத்தினார்கள்.

"நீங்கள் எங்கே ஐயா, போகிறீர்கள்?" என்று கிறிஸ்தியான் அவர்களைப் பார்த்துக் கேட்டான்.

"திரும்பிதான் செல்கிறோம். நீயும் உயிர்பிழைக்க வேண்டுமானால், சமாதானத்தோடு இருக்க விரும்பினால் திரும்பிப்போவதுதான் நல்லது" என்று அவர்கள் கிறிஸ்தியானுக்கு துர் ஆலோசனை கூறினார்கள்.

"ஏன், அப்படியென்ன துன்பம் வழியில் இருக்கிறது?" என்று கிறிஸ்தியான் கேட்டான்.

"என்னவென்றா கேட்கிறாய்? நீ போகும் இதே வழியில் எங்களால் முடிந்த மட்டும் நடந்து சென்றோம். இன்னும் சிறிது தூரம் போயிருந்தால் நிச்சயம் அழிந்து விட்டிருப்போம். நல்லவேளை, அதற்குள்ளாக திரும்பி வந்துவிட்டோம். இல்லாவிட்டால், உன்னை எச்சரிக்கை செய்யவே யாருமில்லாமல் போயிருக்கும்" என்று பரபரப்போடு கூறினார்கள் அவர்கள்.

“அப்படி என்னதான் நடந்தது? சொல்லுங்களேன்” என்று கேட்டான் கிறிஸ்தியான்.

“நல்லவேளை ஒன்றும் நடந்துவிடவில்லை. நாங்கள் மரண இருளின் பள்ளத்தாக்கில் காலடி எடுத்து வைக்கும்போதே, அங்கிருந்த அபாயங்களைக் கண்டு பின்னே வந்துவிட்டோம்” என்றான் அவர்களில் ஒருவன்.

“அப்படி என்னதான் கண்டீர்கள்? அதையாவது சொல்லுங்களேன்” என்று கேட்டான் கிறிஸ்தியான்.

“சொன்னால் நீயும் பயந்துவிடுவாய். அந்தப் பள்ளத்தாக்கு கன்னங்கரேலென்று ஒரே இருளாக இருக்கிறது. பிசாசுகளையும், வலுசர்ப்பங்களையும் அங்கு கண்டோம். கையில் விலங்கு மாட்டப்பட்டு, அளவற்ற துன்பங்களை அனுபவிக்கும் மக்களின் கூக்குரலையும், வேதனைப் புலம்பல்களையும் கேட்டோம். மனமடிவை உண்டாக்கும் கலக்கம் என்ற கருமேகம் அந்தப் பள்ளத்தாக்கை மூடிக்கொண்டிருக்கிறது. சில வேளைகளில் மரணமும் அங்கே ஆட்சி செலுத்துவதுண்டு. சுருக்கமாகக் கூறினால் அங்குப் பார்க்கும் இடமெல்லாம் அபாயங்களும், குழப்பங்களும்தான்” என்று ஒருவன் விவரமாகக் கூறினான்.

“நீங்கள் சொல்லுவது உண்மையாக இருக்கலாம். ஆனால் நான் நாடிச் செல்லும் பரலோகத்திற்கு இதுவே வழி என்று நிச்சயமாகத் தெரிகிறதே!” என்றான் கிறிஸ்தியான்.

“நாங்கள் சொல்ல வேண்டியதை சொல்லிவிட்டோம், இதுதான் உன் பாதையாக இருந்தால் தாராளமாகப் போ. ஆனால் நாங்கள் வரப்போவதில்லை. திரும்பிச் செல்லப் போகிறோம்” என்று சொல்லிவிட்டு பரலோக பாதையை விட்டுத் திரும்பிச் சென்றார்கள்.

அபாயங்களைப் பற்றிக் கேள்விப்பட்ட கிறிஸ்தியான் பின்வாங்கவில்லை. உருவிய பட்டயத்தைக் கையில் பிடித்தவனாகப் பள்ளத்தாக்கில் கால் வைப்பதை நான் என் கனவில் கண்டேன்.

மரண இருளின் பள்ளத்தாக்கின் நெடுக, பரலோக பாதையின் வலது பக்கத்தில் கிடுகிடு பாதாளம் காணப்பட்டது. காலம் காலமாக இதில்தான் அநேகர் விழுந்து மாண்டு போனார்கள். அதுமட்டுமன்றி பாதையின் இடது புறத்தில் ஒரு சகதிக் குழியும் இருந்தது. அதில் விழுபவன் எவ்வளவுதான் நல்லவனாக இருந்தபோதிலும் மீண்டும் எழுந்து நிற்க வகை தெரியாமல் திகைப்பான். தாவீது இராஜாவும் ஒருமுறை இந்தக் குழியில் விழுந்துவிட்டான். அவனிலும் மேலானவர் வந்து

அவனைத் தூக்கிவிட்டிருக்காவிடில் (சங். 69:14) அவன் நிச்சயம் இதிலே அழிந்துபோயிருப்பான்!

இந்தப் பள்ளத்தாக்கின் வழியே செல்லும் பாதையும் மிகவும் குறுகலாக இருந்தது. இது கிறிஸ்தியானுக்குப் பெரிய சோதனையாக விளங்கியது. ஏனென்றால் காரிருளில் காலடி எடுத்துவைப்பதில் கொஞ்சம் தவறினாலும் வலது பக்க பாதாளத்தில் விழுவது நிச்சயம்! அதற்குப் பயந்து இடது பக்கமாக நகர்ந்தால் சகதியில் சிக்கிக்கொள்ள நேரிடும்! மிக மெதுவாகக் காலடி எடுத்துவைத்து தள்ளாடியபடியே நடந்து சென்றான் கிறிஸ்தியான். இந்தக் கடினங்களை எண்ணி அவன் கண்களிலிருந்து நீர் வழிந்தது. பெருமூச்சு விட்டபடியே மெல்ல மெல்ல நகர்ந்து சென்றான். போகப் போக கன்னங்கரேலென்ற இருள் அதிகமாகியது. ஒரு காலை எடுத்து எங்கே வைப்பது என்று தெரியாமல், ஒற்றைக் காலோடு நின்று அழுவான் கிறிஸ்தியான்.

இந்த மரண இருளின் பள்ளத்தாக்கின் நடுவே நரகத்தின் வாயில் ஒன்று இருப்பதை கிறிஸ்தியான் கண்டான். பாதையின் மிக அருகே இருந்த அதைக் கண்டு திகைத்து நின்றுவிட்டான் கிறிஸ்தியான். அந்த வாயிலிலிருந்து நெருப்புப் பொறிகளும், புகையும் வெளிப்பட்டன. பட்டயத்தைக் கொண்டு அப்பொல்லியோனை விரட்ட முடிந்தது. ஆனால் இந்தப் பிரச்சினைக்கு என்ன செய்வது? ஒருகணம் திகைத்துப்போன கிறிஸ்தியான் பட்டயத்தை உறையில் போட்டான்; ஜெபம் என்ற ஆயுதத்தைத் தன் கையில் எடுத்துக்கொண்டான். "கர்த்தாவே, என் ஆத்துமாவை விடுவியும்" (சங். 116:4) என்று வெகுநேரம் ஜெபித்தான். அப்படியும் நெருப்பு சுவாலைகள் அடங்கிய பாடில்லை! முன்னிலும் உக்கிரமாய் கிளம்பின. இந்த இடத்திலேயே அழிந்துவிடுவோமோ என்ற பயம் கிறிஸ்தியானைப் பிடித்துக்கொண்டது. என்றாலும் ஜெபம் என்ற ஆயுதத்தைக் கையில் பிடித்தவனாக நீண்ட தூரம் பரந்து எழும்பிய அக்கினி சுவாலைகளை ஒருவாறு கடந்துவிட்டான். அப்போது மற்றொரு அபாயம் எதிர்ப்பட்டது! பிசாசுகள் ஒரு கூட்டமாக எதிரே வருவதைக் கண்ட கிறிஸ்தியான் ஒருகணம் நின்றான். என்ன செய்வது என்று யோசித்தான். திரும்பிவிடலாமா என்ற எண்ணம்கூடத் தோன்றியது. ஆனால் இதுவரை எத்தனையோ அபாயங்களைக் கடந்து வந்திருக்கிறோமே, மறுபடியும் அதே அபாயங்களைச் சந்திப்பதைவிட முன்னே இருக்கும் சோதனைகளையே சகிக்கலாம் என்ற முடிவுக்கு வந்தான் அவன். பிசாசுகளுக்கு எதிராகத் துணிவுடன் நடந்து சென்றான். அவை நெருங்கி வந்தவுடனே அவன் "ஆண்டவருடைய

வல்லமையினால் கடந்து போவேன்'' என்று சிங்கம் கெர்ச்சிப்பதைப் போலச் சத்தமிட்டான். அவ்வளவுதான்! பிசாசுகள் விலகி மறைந்துபோய் விட்டன!

இவ்வேளையில் கிறிஸ்தியானிடம் காணப்பட்ட குணாதிசயம் ஒன்றையும் நான் கூறியேதான் ஆக வேண்டும்! நரகத்தின் வாயிலை அவன் கடந்துவந்தபோது தன் நினைவே இல்லாதவனைப்போலக் காணப்பட்டான். சுய உணர்வற்ற நிலையில் அவன் பேசுவதைப்போலவும், செய்கிறதைப்போலவும் எனக்குப் பட்டது. ஏனெனில் அவன் அக்கினி சுவாலைகளைக் கடந்து சென்றபோது, தீயவன் ஒருவன் சத்தமின்றி அவனருகே சென்று, அவன் காதுகளில் தேவதூஷணங்களைக் கூறுவதை நான் கண்டேன். கிறிஸ்தியானோ அவை தன் உள்ளத்திலிருந்தே வெளிப்பட்டன என்று நினைத்துக் கொண்டான். இதுவரை இல்லாத அளவுக்கு மனக்கவலை அடைந்தான். தான் எவ்வளவாய் நேசித்த எசமானைப்பற்றி இவ்வாறு அவதூறான எண்ணங்கள் உருவாகின்றனவே என்று நினைத்து சொல்லொண்ணாத் துக்கம் அடைந்தான். அவன் சுய உணர்வோடு இருந்திருந்தால் அந்தத் தீயவனைக் கண்டுகொண்டு நிச்சயம் அவனைத் தடுத்திருப்பான்.

இந்த மனக் கவலையோடு கிறிஸ்தியான் வெகு தூரம் நடந்து சென்றபோது, "நான் மரண இருளின் பள்ளத்தாக்கிலே நடந்தாலும், பொல்லாப்புக்குப் பயப்படேன், தேவரீர் என்னோடுகூட இருக்கிறீர்" (சங். 23:4) என்று ஒருவன் அவனுக்கு முன்பாகச் சத்தமிடுவதுபோலத் தோன்றியது. இதனால் அவன் கவலை நீங்கி மனமகிழ்ச்சியடைந்தான். அவனுடைய முகமலர்ச்சிக்கு இரண்டு மூன்று காரணங்கள் இருப்பதை நான் கண்டேன்.

அவனுக்கு முன்பாக இந்தக் குரல் கேட்டபடியால் கடவுளுக்குப் பயந்த யாரோ ஒருவர் அவனுக்கு முன்னால் இதே பாதையில் நடந்து செல்கிறார் என்பதை அவன் அறிந்து கொண்டான்.

அந்த மரண இருளின் பள்ளத்தாக்கில் நடந்து சென்ற போதிலும் கடவுள் தனக்குப் பாதுகாப்பாகத் தன்னோடு இருக்கிறார் என்பதை அவன் உணர்ந்து கொண்டான். பல திரைகளுக்கு மத்தியில் அவர் இருப்பதைக் கண்டுகொள்ள முடியாவிட்டாலும், அவர் மற்றவர்களோடு இருந்ததுபோலத் தன்னோடும் இருப்பார் என்ற நம்பிக்கை அவனுக்கு ஏற்பட்டது.

இன்னும் கொஞ்சம் வேகமாக நடந்து சென்றால் முன்னே செல்பவர்களைச் சேர்ந்து ஒரே கூட்டமாகச் செல்லலாமே என்ற எண்ணத்தில் துரிதமாக நடந்தான்.

கிறிஸ்தியான் முன்னால் நடந்துசெல்பவரை கூப்பிட்டுப் பார்த்தான்; ஆனால் பதிலொன்றும் கிடைக்கவில்லை. கிறிஸ்தியான் நடந்து செல்லச் செல்ல இருள் விலகிப் பொழுதும் விடிந்தது. "அவர் மரண இருளை விடியற்காலமாக மாற்றினார்'' (ஆமோஸ் 5:8) என்று மகிழ்ச்சியோடு ஆர்ப்பரித்தான் கிறிஸ்தியான்.

வெளிச்சம் பரவிய பின்பு, தான் வந்த வழியைப் பார்க்கும் எண்ணத்தில் திரும்பிப் பார்த்தான் அவன். பாதையின் வலது புறத்திலிருந்த கிடுகிடு பாதாளமும், இடது பக்கத்திலிருந்த சேற்றுக் குழியும் தெளிவாகத் தெரிந்தது. இரண்டுக்கும் நடுவில் தான் நடந்துவந்த பாதை எவ்வளவு நெருக்கமாக இருக்கிறது என்பதைக் கண்டு அதிசயித்தான். அந்தப் பள்ளத்தாக்கில் வசித்த பிசாசுகள், வலுசர்ப்பங்களை இவை வெகு தொலைவில் கும்மாளமிடுவதையும் அவன் கண்டான். இவை அனைத்துமே எளிதில் காணக்கூடாத தொலைவில் இருந்தாலும், "அவர் அந்தகாரத்திலிருக்கிற ஆழங்களை வெளியரங்கமாக்கி மரண இருளை வெளிச்சத்தில் கொண்டு வருகிறார்'' (யோபு 12:22) என்ற வசனத்தின்படி கிறிஸ்தியானுக்கு இவை தெளிவாகக் காண்பிக்கப்பட்டன.

இவ்வளவு அபாயங்களைக் கடந்து வந்தபோதும், எந்தவித ஆபத்தும் இல்லாமல் காப்பாற்றப்பட்டதை உணர்ந்து மகிழ்ச்சியடைந்தான். முன்பு அவன் இந்தச் சோதனைகளைக் கண்டு பயப்பட்டாலும், இப்போது அவன் கவலை முற்றிலும் நீங்கிவிட்டது. சூரிய ஒளி எங்கும் பரவியது. இது அவன் மகிழ்ச்சியை இன்னும் அதிகரித்தது. ஏனென்றால் அவன் இதுவரை கடந்து வந்த பாதையைவிட, இனி செல்ல வேண்டிய பாதை கடினமாக இருந்த போதிலும் சூரிய ஒளியில் பாதை தெளிவாகத் தெரிந்தது. பாதை முடியுமட்டும் கண்ணிகளும், பொறிகளும், பள்ளங்களும், கண்ணுக்குத் தெரியாத குழல்களும், ஆழமான கிணறுகளும், செங்குத்தான மேடுகளும் இருந்தன. மரண இருளின் பள்ளத்தாக்கின் துவக்கத்தில் இருள் மூடியிருந்ததுபோல, இங்கும் காரிருள் கவிந்திருந்ததால் எவராலுமே இந்தப் பாதையைக் கடந்து செல்ல முடியாது என்பது நிச்சயம். ஆனால் சூரிய ஒளி அவனுக்குத் தெளிவாக வழிகாட்டியபடியால் அவன் மிக எளிதாகப் பள்ளத்தாக்கின் அடுத்த பகுதியைக் கடந்து சென்றுவிட்டான். "அவர் தீபம் என் தலையின்மேல் பிரகாசித்தது; அவர் அருளின வெளிச்சத்தினால் இருளைக் கடந்துபோனேன்" (யோபு 29:3) என்று மகிழ்ச்சியோடு அறிக்கையிட்டான்.

16. போப்பு இராட்சதனோடு சந்திப்பு

மரண இருளின் பள்ளத்தாக்கின் முடிவில் எலும்புக் குவியல்களும், சின்னாபின்னமாக்கப்பட்ட பலருடைய உடல்களும், எலும்புக்கூடுகளும் குவிக்கப்பட்டிருப்பதை என் கனவில் கண்டேன். இவை எப்படி இங்கே வந்தன என்று யோசித்துப் பார்க்கும்போது, எனக்குச் சற்று முன்னால் **போப்பு, பலதேவ அடியார்** என்ற இரண்டு இராட்சதர்கள் முன்னொரு காலத்தில் வசித்து வந்த குகை இருக்கிறதென்பதையும், அவர்களுடைய கட்டளையின்படி வெட்டிக் கொல்லப்பட்ட, நெருப்பிலிட்டுப் பொசுக்கப்பட்ட அநேக மனிதருடைய எலும்புகளும், எலும்புக்கூடுகளுமே இங்கே குவியலாகக் கிடக்கின்றன என்பதையும் நான் அறிந்துகொண்டேன். ஆனால் கிறிஸ்தியானோ எந்தவிதப் பயமுமின்றி இந்தப் பகுதியைக் கடந்து சென்றது எனக்கு வியப்பைத் தந்தது. அப்போதுதான் எனக்கு உண்மை விளங்கியது. பல தேவ அடியார் இறந்து போய் பல வருடங்கள் ஆகிவிட்டதாம்; போப்பு இராட்சதனோ இப்போது குடுகுடு கிழவனாக நடைப்பிணம் போலவே இருக்கிறானாம்! தனது இளம்பருவ கேளிக்கைகளினால் இடுப்பொடிந்து, குளறுவாயனாக, கை கால் உணர்ச்சியற்றவனாக குகை வாயிலில் பரிதாபகரமாக உட்கார்ந்திருக்கிறானாம். பரலோகத்துக்குச் செல்லும் பயணிகளை முன்புபோலவே பிடித்து அவமானப்படுத்த அவன் நினைத்தாலும், அசையக்கூட முடியாத நிலையில் அவனால் ஒன்றுமே செய்யமுடியவில்லையாம். வேறு வழியின்றி அந்த வழியே செல்பவர்களைப் பார்த்துக் கண்களை உருட்டிப் பற்களை கடித்துக் கொண்டிருக்கிறானாம்.

கிறிஸ்தியான் அந்தக் குகையைக் கடக்கும்போது, அவனைத் தடுக்க முடியாத போப்பு இராட்சதன் கோபத்தோடு, "உங்களில் இன்னும் எத்தனை பேரை நெருப்பிலிட்டுப் பொசுக்கினாலும் உங்களுக்கு புத்தி வரப்போவதில்லை" என்று கத்தினான்.

என்ன பதில் கூறுவது என்று தெரியாமல் ஒரு கணம் திகைத்தான் கிறிஸ்தியான். பிறகு ஒன்றும் பேசாமலே அந்த இடத்தை வேகமாகக் கடந்துவிட்டான். அவனை எந்தவித அபாயமும் சூழ்ந்து கொள்ளவில்லை.

அற்புத பூலோகமே!
மரண இருளின் பள்ளத்தாக்கிலே
மீட்பரே எனக்குத் துணைவந்தார்
பிசாசு, நரகம், பொறி, வலை,
குழி, உளை, இருள், பாதாளம்

அனைத்தும் என்னைச் சூழ்ந்தன!
இயேசுவே! நீர் என்னைக் காப்பாற்றினீர்!

என்று மகிழ்ச்சியோடு பாடிக்கொண்டு கிறிஸ்தியான் தொடர்ந்து செல்வதை நான் என் கனவில் கண்டேன்.

17. உண்மையானவனைச் சந்தித்தல்

இந்த இராட்சதர் குகையைக் கடந்து கிறிஸ்தியான் சற்று தூரம்போனபோது அவன் ஒரு மேடான பகுதியைக் கண்டான். அதன்மீது ஏறி பயணிகள் தாங்கள் செல்லவிருக்கும் பாதையைத் தெளிவாகக் கண்டுகொள்ளும் வண்ணமாகவே அந்த மேடு அமைக்கப்பட்டிருந்தது. கிறிஸ்தியான் அதன்மேல் ஏறிப் பார்த்தான். கூப்பிடும் தூரத்தில் **உண்மையானவன்** என்ற பெயரையுடையவன் போய்க் கொண்டிருப்பதை கண்டவுடன் அவனுக்கு ஒரே மகிழ்ச்சி!

"உண்மையானவனே, நில்லும், நானும் வருகிறேன்" என்று உரத்த குரலில் கத்தினான் கிறிஸ்தியான்.

உண்மையானவன் திரும்பிப் பார்த்தான்; கிறிஸ்தியானைக் கண்டபின்பும் அவன் நிற்கவில்லை.

"என்னால் நிற்க முடியாது. நான் என் உயிர் பிழைக்கத் தப்பியோடுகிறேன். பழி வாங்குபவர்கள் என்னைத் துரத்தி வருகிறார்கள்" என்று கூறிய உண்மையானவன் நிற்காமல் தொடர்ந்து நடந்துகொண்டிருந்தான்.

எப்படியாவது அவனைப் பிடித்துவிட வேண்டும் என்ற எண்ணத்தில் வேகமாக ஓடினான் கிறிஸ்தியான். இப்படி ஓடிச் சென்ற அவன் உண்மையானவனுக்கும் முன்னால் ஓடிவிட்டான்! தன்னுடைய வேகத்தை எண்ணிப் பெருமைப்பட்ட அவன் பாதையைக் கவனிக்கவில்லை. கால், தடுக்கிக் கீழே விழுந்து விட்டான்! உண்மையானவன் வந்து தூக்கிவிட்ட பிறகே அவனால் எழுந்து நிற்க முடிந்தது!

அதன் பிறகு அவர்கள் தங்கள் பயண அனுபவங்களை ஒருவரோடொருவர் பகிர்ந்து கொண்டபடியே நடந்து செல்வதை நான் என் கனவில் கண்டேன்.

"அன்பு நண்பன் உண்மையானவனே, உன்னைச் சந்தித்ததிலும் ஆண்டவர் நாம் இருவரும் ஒன்றாக நடந்து போகக் கிருபையளித்ததிலும் நான் மிகவும் மகிழ்ச்சியடைகிறேன்" என்று பேச்சைத் துவக்கினான் கிறிஸ்தியான்.

"நண்பனே நீ ஊரிலிருந்து புறப்படும்போதே உன்னுடன் சேர்ந்துகொள்ள நினைத்திருந்தேன். ஆனால் சற்றுத் தாமதமாகி விட்டது. அதனால்தான் இவ்வளவு தூரம் தனியாகப் பயணம் செய்யவேண்டியதாயிற்று'' என்று அங்கலாய்த்தான் உண்மையானவன்.

"நான் புறப்பட்ட பிறகு எவ்வளவு காலம் அழிநகரத்தில் இருந்தாய்?" என்று கேட்டான் கிறிஸ்தியான்.

"அந்த ஊர் வெறுத்துப்போகுமட்டும் அங்கே இருந்தேன். நீ போனவுடனேயே நம்முடைய பட்டணம் விரைவிலேயே நெருப்பினால் அழிக்கப்படும் என்ற பேச்சு ஊரெங்கும் பரவிவிட்டது" என்றான் உண்மையானவன்.

''உன் அண்டைவீட்டாரும் இதைப்பற்றிப் பேசிக் கொண்டார்களா?" என்று ஆவலுடன் கேட்டான் கிறிஸ்தியான்.

"அவர்கள் மட்டுமா? சில நாள்களாக எல்லாருமே இதைப் பற்றித்தான் பேசிக் கொண்டார்கள்'' என்றான் உண்மையானவன்.

''அப்படியிருந்தும் உன்னைத் தவிர வேறு ஒருவரும் அழிவிலிருந்துத் தப்பிக்கொள்ள வெளியேறவில்லையா?" என்று கவலையுடன் கேட்டான் கிறிஸ்தியான்.

"அழிநகரத்தில் அழிவைப்பற்றிய பேச்சு பரவினாலும் யாருமே அதை நம்பியதுபோலத் தெரியவில்லை உன்னைப் பற்றிய பேச்சு வந்தாலே அவர்கள் உன்னைக் கேலி பண்ணுவதுதான் வழக்கம். உன்னுடைய பயணமே அழிவை நோக்கிய பயணம் என்றுகூடச் சொல்லி வந்தார்கள். ஆனால் நானோ அழிநகரம் நிச்சயம் அழிந்துபோகும் என்பதை நம்பியபடியால் பயணம் புறப்பட்டுவிட்டேன்" என்று கூறினான் உண்மையானவன்.

"விட்டுக்கொடுப்பவனைப்பற்றி ஏதாவது செய்தி தெரியுமா?" என்று கேட்டான் கிறிஸ்தியான்.

''அவனா? அவநம்பிக்கை உள்ளவரையில் உன்னோடு வந்தானாமே? சிலர் அவன் அதில் விழுந்து எழுந்துவந்தான் என்று கூறுகிறார்கள். ஆனால் அவனோ விழுந்ததைக் காட்டிக் கொள்ளாமலிருக்க முயற்சி செய்கிறான். ஆனால் அவன் சேறும் சகதியுமாகத் திரும்பி வந்ததை மறைக்க முடியுமா?'' என்று சிரிப்புடன் கூறினான் உண்மையானவன்.

"அவன் அண்டைவீட்டார் அதைப்பற்றி என்ன கூறினார்கள்?" என்று கேட்டான் கிறிஸ்தியான்.

"அதுவா? அவன் வீட்டுக்குள் நுழைந்ததுதான் தாமதம். ஊரார் கூடி வந்துவிட்டார்கள். சிலர் அவனைக் கேலி பண்ணினார்கள்; வேறு சிலர் அவனைக் கடிந்துகொண்டார்கள். தொடர்ந்து கேள்விகளால் அவனைத் துளைத்தெடுத்தார்கள். அதுமட்டுமல்ல, அவனை இனி எவருமே வேலைக்குச் சேர்த்துக்கொள்ள முடியாது என்று சொல்லிவிட்டார்கள். முந்தைய நிலையிலும் அவனுடைய தற்போதைய நிலைமை மிகவும் மோசமாகிவிட்டது" என்று வருத்தத்துடன் கூறினான் உண்மையானவன்.

"அழிநகரவாசிகளுக்கு அவன் பயணம் புறப்பட்டதுதான் பிடிக்கவில்லையே. பிறகு ஏன் திரும்பி வந்தவனைக் குறைகூற வேண்டும்?" என்று கேட்டான் கிறிஸ்தியான்.

"துவங்கிய காரியத்தைச் செய்து முடிக்காத கோழை என்றுதான் அவனைக் குறை கூறுகிறார்கள். அவன் மெய்யான வழியைவிட்டுப் பின்வாங்கிப்போனதினாலே கடவுள் அவனைச் சாபமாகவும், பாழாகவும், ஈசலிடுதலுக்கிடமாகவும், நிந்தையாகவும் (எரே. 29:18) வைத்தார் என்று நான் நினைக்கிறேன்" என்றான் உண்மையானவன்.

"நீ புறப்படுமுன்பு அவனைப் பார்த்துப் பேசியிருக்கக் கூடாதா?" என்ற கிறிஸ்தியானின் கேள்விக்கு உண்மையானவன் அளித்த பதில் இதோ:

"அவனை எங்கே கண்டு பேசுவது? ஒரு முறை தெருவில் என்னைக் கண்ட அவன், நேரில் சந்திக்க வெட்கப்பட்டுக் கொண்டு, பக்கத்துச் சந்து வழியாக நுழைந்துவிட்டான். அவனோடு பேசவே எனக்கு வாய்ப்புக் கிடைக்கவில்லை!"

"பயணம் புறப்படும்போது அவனைப்பற்றி எனக்குக் கொஞ்சம் நம்பிக்கை இருந்தது. ஆனால் இப்போதோ அவனும் அழிநகரத்தின் அழிவோடு அழிந்துபோய்விடுவானோ என்று அஞ்சுகிறேன். 'நாய் தான் கக்கினதைத் தின்னவும், கழுவப்பட்ட பன்றி சேற்றிலே புரளவும் திரும்பினது என்று சொல்லப்பட்ட மெய்யான பழமொழியின்படியே' (2 பேதுரு 2:22) அவனுக்குச் சம்பவித்தது" என்று கூறி வருத்தப்பட்டான் கிறிஸ்தியான்.

"அவன் அழிந்துவிடுவானோ என்ற பயம் எனக்குமுண்டு, ஆனால் வரவிருப்பதை யாரால் தடுக்க முடியும்?" என்றான் உண்மையானவன்.

"நீ சொல்லுவதும் உண்மைதான். அவனைப்பற்றிப் பேசி இனி என்ன பயன்? நம்முடைய காரியங்களைப் பற்றிப் பேசிக்கொண்டாலாவது ஏதாவது பயனிருக்கும்'' என்ற முடிவுக்கு வந்த கிறிஸ்தியான் "பயணத்தில் உனக்கு அநேக சோதனைகள் வந்திருக்குமே. அதைப்பற்றிக் கொஞ்சம் சொல்லுவாயா?" என்று கேட்டுக்கொண்டான்.

''நீ நம்பிக்கையிழப்பு என்ற உளையில் விழுந்து விட்டாயல்லவா? நானோ அதைப் பத்திரமாகக் கடந்து, குறுகிய வாசலை அடைந்துவிட்டேன். ஒரே ஓர் ஆபத்துதான் நேரிடவிருந்தது. **காமக்கன்னிதான்** என்னைத் திசை திருப்பிவிட முயன்றாள்'' என்று உண்மையானவன் கூறும்போதே அபாயத்தைக் கடந்துவந்துவிட்ட நிம்மதி அவன் முகத்தில் தெரிந்தது.

''அவள் வீசும் வலையிலிருந்து நீ தப்பிவிட்டால் அதைப்போன்ற மகிழ்ச்சி வேறு எதுவுமே கிடையாது. யோசேப்பைப் பிடிக்கவும் அவள் வலைவிரித்தாளே! நல்லவேளையாக, அவனைப்போலவே நீயும் தப்பிவிட்டாய். ஆனால் யோசேப்பு அந்த வலையிலிருந்து தப்புவது கடினமாகவே இருந்தது (ஆதி. 39:11-13). எவ்வளவு பெரிய தண்டனை அவனுக்குக் கிடைத்தது! அதுசரி, நீ எப்படி அவளிடமிருந்து தப்பினாய்?" என்று ஆவலாகக் கேட்டான் கிறிஸ்தியான்.

"அவளைப்பற்றி நீ கொஞ்சம் அறிந்திருந்தாலும், அவள் வாய்ஜாலத்தைப்பற்றி நீ அறிந்திருக்கமுடியாது என்றே நினைக்கிறேன். அருகே வந்த அவள் தன்னுடன் வந்தால் கிடைக்காத இன்பங்களையெல்லாம் அளிப்பதாக ஆசை காட்டினாள். சிற்றின்பத்தைக் கொடுக்கும் அனைத்தையும், மாம்ச இச்சையைத் தீர்த்து வைக்கும் எல்லாவற்றையும் கொண்டுவருவதாக அவள் என்னிடம் மறுபடியும் கூறினாள்" என்றான் உண்மையானவன்.

''நல்லவேளை, நீ அவளுடைய வலையில் விழாமல் தப்பியதற்காக ஆண்டவருக்கு தோத்திரம். கர்த்தருடைய கோபத்திற்கு ஏதுவானவன் அவளிடம் விழுவான் (நீதி. 22:14) என்று சொல்லப்பட்டிருக்கிறதே" என்றான் கிறிஸ்தியான்.

''நான் அவளுடைய வலையிலிருந்து முழுவதுமாகத் தப்பிவிட்டேனோ என்னவோ தெரியவில்லை'' என்று உண்மையானவன் கூறுவதைக் கேட்ட கிறிஸ்தியான் அவனைத் திரும்பிப் பார்த்தான்.

"அவளுடைய நேச வார்த்தைகளுக்கு நீ இணங்கியிருக்க மாட்டாய் என்றே நான் நம்புகிறேன்" என்றான் அவன்.

அவ்வளவு தூரம் நான் அவளுக்கு இடம் கொடுக்கவில்லை. "அவள் நடைகள் பாதாளத்தைப் பற்றிப் போகும்" (நீதி. 5:5) என்ற எச்சரிப்பை நான் மறந்து விடவில்லை. அவளைக் கண்டு மயங்கி விடாதபடி நான் கண்களை மூடிக்கொண்டேன். அப்போது அவள் என்னைக் கண்டபடி திட்டினாள்; ஏசினாள். நானோ திரும்பிப் பார்க்காமல் வந்துவிட்டேன்" என்று நிம்மதிப் பெருமூச்சுவிட்டான் உண்மையானவன்.

"அதன்பிறகு வேறு எவரும் உன்னை வழிமறிக்க வில்லையா?" என்று கேட்டான் கிறிஸ்தியான்.

"கடின மலையின் அடிவாரத்தில் வரும்போது முதியவர் என்னிடம் வந்து, 'நீ யார்? எங்கே போகிறாய்?' என்று கேட்டார். 'நான் மோட்சத்திற்குச் செல்லும் பயணி ஐயா' என்று பதில் கூறினேன். 'அப்பனே உன்னைப் பார்த்தால் அடக்கமுள்ள பிள்ளையைப்போல தோன்றுகிறது. என்னுடன் தங்கி, நான் கூறும் பணிகளைச் செய்து ஊதியம்பெற விருப்பம் உண்டா?' என்று கேட்டார். அவர் யாரென்றும், எந்த ஊரைச் சேர்ந்தவர் என்றும் கேட்டேன். அவர் பெயர் **முதலாம் ஆதாம்** என்றும் ஊரின் பெயர் **ஏமாற்று வேலை** என்றும் தெரிந்துகொண்டேன். அதன்பிறகு அவர் கொடுக்கும் பணி என்னவென்றும், ஊதியம் எவ்வளவு என்றும் கேட்டேன். சிற்றின்பமே பணியென்றும், அவருடைய சொத்துகளுக்குச் சுதந்திரவாளியாவதே ஊதிய மென்றும் கூறினார். அவர் தங்கும் வீடு எப்படிப்பட்டதென்றும், வேலைக்காரர்கள் எப்படிப்பட்டவர்களென்றும் கேட்டேன். உலகத்திலுள்ள இன்பங்கள் எல்லாம் அவர் வீட்டில் இருக்கிறதாம்! அவர் வளர்த்த பிள்ளைகள்தான் வேலைக்காரர்களாம்! அவருக்கு மூன்று இளம்பெண்கள் இருக்கிறார்கள் என்பதையும் தெரிந்துகொண்டேன். அவர்கள்தாம் **மாம்சஇச்சை, கண்களின் இச்சை, வாழ்க்கையில் பெருமை!** நீ விரும்பினால் அவர்களை மணந்து கொண்டு என் மாப்பிள்ளை ஆகிவிடலாம் என்றும் ஆசைகாட்டினார். எவ்வளவு ஆண்டுகள் அவருடன் இருக்க வேண்டுமென்று கேட்டதற்கு அவர் மரிக்கும்வரை இருந்தால் போதுமென்று கூறினார்" என்றான் உண்மையானவன்.

"இறுதியில் நீ என்ன முடிவுக்கு வந்தாய்?" என்று ஆவலாகக் கேட்டான் கிறிஸ்தியான்.

"என்ன முடிவுக்கு வருவது? அவர் பேசுவதெல்லாம் நியாயம்போலத் தோன்றியபடியால் அவருடன் போவது நலம்

என்று நினைத்தேன். ஆனால் நல்லவேளையாக அவன், நெற்றியில் எழுதப்பட்டிருந்ததைக் கவனித்து விட்டேன். 'பழைய மனிதனையும் அவன் செயல்களையும் களைந்து போடுங்கள்' என்று எழுதப்பட்டிருந்தது'' என்று உண்மையானவன் கூறும்போதே,

"அப்புறம் என்ன நடந்தது?" என்று குறுக்கிட்டுக் கேட்டான் கிறிஸ்தியான்.

"இவன் என்ன ஆசை வார்த்தைகளைப் பேசினாலும் வீட்டுக்குப் போனால் அடிமைபோன்றுதான் என்னை நடத்துவான் என்பதை அறிந்து கொண்டேன். எனக்குள் கட்டுக்கடங்காமல் கோபம் எழுந்து, 'ஒன்றும் பேசாதீர்' நான் உம் வீட்டு வாசற்படியைக்கூட மிதிக்கமாட்டேன் என்று தீர்மானமாகக் கூறிவிட்டேன். அவனும் கோபத்தில் கண்டபடி ஏசினான். 'உன்னை என்ன செய்கிறேன் பார். உன் ஆத்துமா மீட்கப்படக்கூடாதபடிக்கு உன் பாதையில் குறுக்கே தகுந்த ஆள் ஒருவனை அனுப்புகிறேன் பார்' என்று சவால்விட்டான். நான் திரும்பிவிட்டேன். அவன் என் மாமிசத்தைப் பிடித்து இழுத்தான். ஆனால் எப்படியோ அவனிடமிருந்து தப்பிவிட்டேன். 'நிர்ப்பந்தமான மனிதன் நான்' என்ற புலம்பலுடன் கடினமலையில் ஏறினேன். பாதி தூரம் வந்தபிறகு திரும்பிப் பார்த்தேன். ஒருவன் வெகு வேகமாக என்னைத் தொடர்ந்து ஓடிவருவதைக் கண்டேன். அதைப் பார்த்தவுடன் என் வேகத்தை அதிகரித்தேன். அவனோ இன்னும் வேகமாக வந்து இளைப்பாறும் தலத்தில் என்னைப் பிடித்துவிட்டான்" என்றான் உண்மையானவன்.

''அந்த இடத்தில்தான் இளைப்பாற அமர்ந்த நான் அப்படியே உறங்கிவிட்டேன் என் சுருளையும் தொலைத்து விட்டேன்" என்று அவன் பேச்சில் குறுக்கிட்ட கிறிஸ்தியான் கூறினான்.

''கொஞ்சம் பொறு. நான் சொல்வதைச் சொல்லி முடித்துவிடுகிறேன்" என்று கூறிய உண்மையானவன் தொடர்ந்து பேசினான்: "அவன் என் அருகே வந்தவுடன் 'உன் தலையைப் பிளக்கிறேன் பார்' என்று சொல்லிக்கொண்டே பலங்கொண்ட மட்டும் குத்தினான். நான் சிறிது நேரம் மயங்கி விழுந்துவிட்டேன். சுய உணர்வு பெற்றவுடன் அவனிடம், "ஏன் என்னை இவ்வாறு அடித்துத் தள்ளுகிறாய்?' என்று கேட்டேன். 'நீ உன் உள்ளத்தில் முதல் ஆதாமோடு நெருக்கம் கொண்டாயல்லவா? அதனால்தான்' என்று கூறிய அவன் மறுபடியுமாக என்னைக் குத்தி வீழ்த்தினான். நான் மரித்தவனைப்போல விழுந்து

கிடந்தேன். இந்த முறை சுய நினைவுபெற அதிக நேரமாயிற்று. விழித்தெழுந்த நான் 'ஐயா, என்னை அடிக்காதீர்கள், விட்டு விடுங்கள்' என்று கெஞ்சினேன். 'உன்னை விடுவதா?' என்று கூறி அவன் மறுபடியும் என்னை அடிக்கத் துவங்கினான். நல்ல வேளையாக ஒருவர் வந்து அவனைத் தடுத்திராவிட்டால் நான் அப்போதே இறந்துபோயிருப்பேன்."

"அவனைத் தடுத்தது யார்?" என்று கேட்டான் கிறிஸ்தியான்.

"முதலில் அவர் யாரென்பதை நான் அறிந்துகொள்ள வில்லை. அவர் அவனைத் தடுத்துவிட்டுத் திரும்பிச் செல்லும்போதுதான் அவரைக் கவனித்தேன். அவர் கைகளிலும், கால்களிலும் ஆணிகளால் கடாவப்பட்ட தழும்புகளைக் கண்டேன். நமது இரட்சகர்தான் அவர் என்பதை அறிந்து ஆண்டவரைத் துதித்தபடியே மறுபடியும் மலைமீது ஏறினேன்" என்றான் உண்மையானவன்.

"உன்னை அடித்தவன் மோசே நியாயப்பிரமாணத்தை மீறுபவர்கள்மீது அவன் இரக்கம் காட்டமாட்டான்" என்றான் கிறிஸ்தியான்.

"அவனைப்பற்றி நான் ஏற்கெனவே அறிந்திருக்கிறேன். நான் அழிநகரத்தில் என் வீட்டில் மகிழ்ச்சியாகக் காலங்கழித்த நாளில் அவன் வந்து நீ இன்னும் இங்கேயே இருந்தால் இந்த வீடு உன் தலைமேல் விழும்படி அதை எரித்துவிடுவேன் என்றவன் மேலும் என்னை மிரட்டி அங்கிருந்து விரட்டினான்" என்று கூறினான் உண்மையானவன்.

"மோசே கடினமலையில் உன்னைச் சந்தித்த பிறகு மலையின்மேல் இருக்கும் வீட்டை நீ பார்க்கவில்லையா?" என்று கிறிஸ்தியான் கேட்டான்.

"ஆம், அந்த வீட்டையும் நான் கண்டேன். அதன் வாயிலில் படுத்திருந்த சிங்கங்களை முன்னரே பார்த்துவிட்டேன். அந்தச் சிங்கங்கள் உறங்கிக் கொண்டிருந்தன. நான் அந்த இடத்தைக் கடந்தபொழுது மதிய வேளையாக இருந்தது. எனவே இருட்டுவதற்குள் இன்னும் அதிக தூரம் போய்விடலாம் என்ற எண்ணத்தில் நான் அங்கு தங்கவில்லை. வாயிற்காப்போனைக் கடந்து நேரே வந்துவிட்டேன்" என்றான் உண்மையானவன்.

"உண்மைதான். நீ கடந்து சென்றதைப்பற்றி வாயிற்காப்போன் கூறினான். நீ அந்த வீட்டினுள் வந்து செல்லவில்லையே என்று நான் வருத்தப்பட்டேன். அங்கு நான் கண்ட காட்சிகளை எப்படி விவரித்துச் சொல்வது? சாகும்வரை அதை என்னால்

மறக்க முடியாது. அதுசரி, தாழ்மையின் பள்ளத்தாக்கில் நீ ஒருவரையும் சந்திக்கவில்லையா?'' என்று கேட்டான் கிறிஸ்தியான்.

"அங்கு அதிருப்தி என்ற ஒருவனைச் சந்தித்தேன். என்னைத் தன்னுடன் திரும்பக் கூட்டிச் செல்ல அவன் எவ்வளவோ முயற்சி செய்தான். அந்தப் பள்ளத்தாக்கு மகிமையுள்ளதல்ல என்று அவன் வாதிட்டான். தொடர்ந்து சென்றால் என் நண்பர்களாகிய பெருமை, வீண்பெருமை, சுயபெருமை, உலகப் பெருமை போன்றவர்களை மனம் புண்படச் செய்வதாகும் என்று கூறினான். என்னைப்போன்ற முட்டாள் எவருமே கிடையாது என்று அவர்கள் நினைத்துக் கொள்வார்கள் என்றும் விவாதம் செய்தான்" என்றான் உண்மையானவன்.

"நீ என்ன பதில் கூறினாய்?" என்று ஆவலுடன் கேட்டான் கிறிஸ்தியான்.

"இவர்கள் அனைவரும் என் இனத்தவர் என்று கூறிக் கொள்வது உண்மைதான். ஆனால் என்று நான் பயணம் புறப்பட்டேனோ அன்றே அவர்களை ஒதுக்கித் தள்ளிவிட்டேன். அவர்களும் என்னை வெறுக்கிறார்கள். எனவே இனத்தார் என்று கூறிக்கொள்வதற்கு ஒன்றுமேயில்லை. அதுமட்டுமன்றி இந்தப் பள்ளத்தாக்கைப் பற்றிய அவன் எண்ணமும் தவறுதான் என்று எடுத்துச் சொன்னேன். ஏனென்றால் 'மேன்மைக்கு முன்னானது தாழ்மை; அழிவுக்கு முன்னானது அகங்காரம்' என்று சொல்லப்பட்டிருக்கிறதே. எனவே என் இச்சைகளுக்குகந்த பாதையில் செல்வதைவிட, எத்தனையோ ஞானிகளால் நல்லவழி என்று கண்டுகொள்ளப்பட்ட இந்த வழியில் செல்வதுதான் மேன்மை என்று நான் நினைக்கிறேன் என்று அவனிடம் உறுதியாகச் சொல்லிவிட்டேன்" என்றான் உண்மையானவன்.

"வேறு ஒருவரையும் நீ அந்தப் பள்ளத்தாக்கில் சந்திக்க வில்லையா?" என்று மறுபடியும் கேட்டான் கிறிஸ்தியான்.

''**அவமானம்** என்ற பெயருடைய மற்றொருவனையும் சந்தித்தேன். நான் இதுவரை சந்தித்த எல்லாரையும்விட இவன் முரட்டுக் குணமுள்ளவனாகக் காணப்பட்டான். மற்றவர்களை யாவது ஓரிரு நியாயங்களை எடுத்துக்கூறிச் சமாளித்துவிடலாம். ஆனால் இவனிடத்தில் அது முடியாது'' என்றான் உண்மையானவன்.

"அவன் அப்படி உன்னிடம் என்னதான் கூறினான்?" என்று கேட்டான் கிறிஸ்தியான்.

“அவனா? கடவுள் பக்தி என்று கூறுவதையே அவன் ஆட்சேபிக்கிறான். கடவுளைப்பற்றி நினைப்பதே கேவலமானது, இழிவானது என்று வாதிட்டான். இளகிய மனதுடையவனாக இருப்பது ஆண்களின் அழகல்ல என்று கூறினான். ஒருவன் தனக்குத் தோன்றியபடி நடக்காமல், ஒவ்வொரு நிமிடமும் தனது பேச்சிலும், நடத்தையிலும் கவனமாகப் பயத்துடன் நடப்பதைக் கண்டு பார்ப்பவர்கள் கேலிபண்ணுவார்களாம். பலவான்களிலும், செல்வந்தர்களிலும், அறிவாளிகளில் ஒரு சிலர் மட்டுமே என்னைப் போல அவனுடைய வார்த்தைகளை அலட்சியம் செய்தார்கள் என்று சொன்னான். அவர்கள் புத்திகெட்டதனமாக ஒருவரும் அறியாத நன்மைக்காக செல்வத்தையும், மதிப்பையும் உதறித் தள்ளிவிடுகிறார்கள் என்றும் குறை கூறினான். ஒவ்வொரு காலத்திலும் மோட்சத்தை நோக்கிப் பயணம் செய்தவர்கள் அந்தக் காலத்திலுள்ள அறிவிலிகளும், தாழ்ந்தவர்களும், கீழானவர்களுமே என்று அவன் வாதம் புரிந்தான். உலக ஞானத்தைப்பற்றி அவர்களுக்கு ஒன்றுமே தெரியாதபடியினால் தான் அவர்கள் கடவுள் பக்தி, கடவுள் என்று பேசிக் கொள்கிறார்கள் என்று கூறினான். இன்னும் நாம் மேன்மையாக நினைக்கும் அநேக காரியங்களை அவன் மட்டம்தட்டிப் பேசினான். ஒன்று சொல்கிறேன் கேள். அருளுரைகளைக் கேட்கும்போது நாம் உள்ளத்தில் தொடப்பட்டு வியாகுல மடைவது கேவலமான காரியமாம். ஆராதனைக்குச் சென்று விட்டுப் பாவ உணர்வோடு இதயம் கனத்தவர்களாக வெளியே வருவது வெட்ககரமானதாம். சிறுசிறு காரியங்களுக்கெல்லாம் ஒருவன் மற்றவனிடம் மன்னிப்புக் கேட்பதும், களவாடிய பொருளைத்திரும்பக் கொடுப்பதும் அவமானமாம். கடவுளைப் பற்றிய உணர்வு காரணமாக சில தீய குணங்களைக் கொண்ட பெரியவர்களைத் தாழ்வாகப் பேசுவதும், கடவுளுக்குப் பயந்தவர்கள் என்று தாழ்ந்த நிலையில் உள்ளவர்களோடு சகோதர உறவு கொண்டாடுவதும் வெட்கப்படத்தக்க காரியங்கள் இல்லையா என்று வாதிட்டான்” என்று கூறினான் உண்மையானவன்.

“அவனுக்கு நீ என்ன பதில் கூறினாய்?” என்று கேட்டான் கிறிஸ்தியான்.

“என்ன பதில் கூறுவதென்றே தெரியாமல் முதலில் திகைத்தேன். அவ்வளவு தூரம் அவன் என்னைக் குழப்பி விட்டான். அவமானத்தால் என் முகம் சிவந்து போய்விட்டது. நல்ல வேளையாக மனிதருக்குள் மேன்மையாக எண்ணப்படுவது கடவுளுக்கு முன்பாக அருவருப்பாக இருக்கிறது என்ற சத்தியம் எனக்கு நினைவில் வந்தது (லூக்கா 16:15). அப்போதுதான் அவன்

மனிதர்கள் இப்படியிருக்கிறார்கள், அப்படியிருக்கிறார்கள் என்று தானே சொல்லிக்கொண்டிருக்கிறான். ஆனால் கடவுளைப்பற்றி ஒன்றுமே சொல்லவில்லை என்பதை உணர்ந்தேன். அதுமட்டுமன்றி, நாம் இறுதி நியாயத்தீர்ப்பு நாளன்று உலக ஞானத்தின்படியோ அல்லது அவர்கள் பேச்சுத் திறமையினாலோ நியாயந்தீர்க்கப்படாமல் உன்னதமானவருடைய சர்வ ஞானத்தின்படியல்லவா நியாயந்தீர்க்கப்படுவோம் என்ற உண்மையும் என் நினைவில் வந்தது. உலகத்தார் அனைவரும் சேர்ந்து சரியல்ல என்று கூறினாலும் ஆண்டவர் சரியென்று கூறினால் அதுவே சரியானது என்பதையும் உனர்ந்தேன்.

கடவுள் தம்மீது அன்பு கொண்டவர்களையே மேலானவர்கள் என்றும், நல்மனச் சாட்சியையே பெரிதாக நினைக்கிறார் என்றும், கடவுளுடைய அரசுக்காகத் தங்களையே பைத்தியக்காரர்கள்போல ஆக்கிக்கொண்டவர்களையே ஞானிகள் என்று கருதுகிறார் என்றும், அவரிடம் அன்புகாட்டும் ஓர் ஏழைக் கிறிஸ்தவன் அவருக்கு விரோதமான செல்வந்தனை விட மேலானவன் என்று ஏற்றுக்கொள்கிறார் என்றும், நான் உணர்ந்துகொண்டேன். உடனே மனத்திடம் கொண்டவனாக அவனை நோக்கி, 'ஏய்! அவமானம் என்பவனே! என்னை விட்டு அப்பாலே போ. நீ என் மீட்பிற்கே விரோதியாக இருக்கிறாய். என் ஆண்டவராகிய அரசருக்கு முன்பாக அவருக்கு விரோதியான உன்னை நான் ஏற்றுக்கொள்ள முடியுமா? அப்படி உன்னை நான் ஏற்றுக்கொண்டால் பின்னர் அவருடைய வருகையின்போது அவர் முகத்தில் நான் எப்படி விழிப்பேன்? அவருடைய வழியையும், அவருடைய ஊழியர்களையும் குறித்து நான் வெட்கப்பட்டால் பின்பு அவர் அருளும் ஆசீர்வாதங்களைப் பெறுவது எப்படி என்று கூறி அவனிடம் கண்டிப்போடு பேசினேன். என்ன சொல்லி என்ன? எந்தப் பேச்சைக் கேட்டும் அவன் விலகக் கூடியவனாகத் தோன்ற வில்லையே! அவ்வளவு பிடிவாதக்காரனாக இருந்தான் அவன். என்னைவிட்டு விலகாமல் தொடர்ந்து வந்து கடவுளைப் பின்பற்றினால் அவமானங்கள் ஏற்படும், கடினங்கள் குறுக்கிடும் என்றெல்லாம் வேண்டாதவற்றைப் பேசிக்கொண்டு வந்தான். நான் நின்று அவனைத் திரும்பிப் பார்த்தேன். "நீ என்னைத் தொடர்ந்து வருவதால் உனக்கு ஓர் இலாபமும் இல்லை. நீ எவற்றையெல்லாம் அவமானம் என்று நினைக்கிறாயோ அவற்றையெல்லாம் நான் கடவுளுக்காக மேன்மை என்று நினைக்கிறேன்" என்று கூறி அவனை உதறித் தள்ளினேன். அவன் விலகிச் சென்றவுடன் நான்,

பரலோக அழைப்புக்குக் கீழ்ப்படிந்தோரே!
உங்கள் மாம்சத்துக்குரிய சோதனைகள்
ஏராளம்! ஏராளம்!
எனவே புத்துணர்வடைவீர்! புத்துணர்வடைவீர்!
மாம்ச இச்சையில் விழுந்துவிட்டால்
அவை மேற்கொள்ள இடம்கொடுத்தால்
அழிவே! அழிவே!

எனவே விழிப்புடனிருப்பீர்! விழிப்புடனிருப்பீர்! என்று மகிழ்ச்சியோடு பாடிக்கொண்டே தொடர்ந்து நடந்தேன்" என்று புன்னகையோடு கூறினான் உண்மையானவன்.

"அன்பான நண்பனே! நீ துரோகியாகிய அவமானம் என்பவனை விரட்டியடித்ததற்காக நான் மிகவும் மகிழ்ச்சியடைகிறேன். அவனுக்கு அந்தப் பெயர் ஏற்றதுதான். நாம் நடுத்தெருவில் நடந்துசென்றாலும் அவன் நம்மைப் பின்தொடர்ந்து வந்து எவ்வளவாக நமக்குள் அவமான உணர்வை ஏற்படுத்த முயலுகிறான்! நன்மையானதையெல்லாம் நாம் அவமானமாக நினைக்கும்படி செய்ய முயற்சிக்கிறான். அவனைப்போலப் பிடிவாதக்காரன் வேறு எவனுமே கிடையாது என்று கூறலாம். ஆனால் நாம் அவனைத் தொடர்ந்து எதிர்த்து மேற்கொள்ள வேண்டும். அவன் இப்படிப் பேசுவதினால் தன்னைத்தான் பைத்தியக்காரன் என்று வெளிப்படுத்திக் கொள்கிறானேயொழிய வேறொன்றுமில்லை. 'ஞானவான்கள் கனத்தைச் சுதந்தரிப்பார்கள்; மதிகேடரோ கனவீனத்தை அடைவார்கள்' (நீதி. 3:35) என்றல்லவா சாலொமோன் இராஜா கூறுகிறார்?" என்றான் கிறிஸ்தியான்.

"சத்தியத்திற்காக எப்போதும் விழிப்புடன் போராட வேண்டும் என்று ஆண்டவர் சொல்லியிருக்கிறாரே! அவமானம் என்ற அவனை எதிர்த்துப் போராடத்தக்க வல்லமையைக் கொடுக்கும்படி அவரை நோக்கி ஜெபிப்பது அவசியம்" என்று கூறினான் உண்மையானவன்.

"நீ சொல்லுவதுதான் சரியானது. அதன்பிறகு நீ அந்தப் பள்ளத்தாக்கில் வேறு ஒருவரையும் சந்திக்கவில்லையா?" என்று கேட்டான் கிறிஸ்தியான்.

"வேறு ஒருவரும் எனக்கு எதிராக வரவில்லை. ஏனென்றால் நான் அந்தப் பள்ளத்தாக்கையும் அதன் பின்பு மரண இருளின் பள்ளத்தாக்கையும் கடக்கும்வரை சூரியன் ஒளிவீசிக் கொண்டிருந்தது" என்று பதில் கூறினான் உண்மையானவன்.

"நீ தப்பி வந்தது நல்ல காரியம்தான். ஆனால் நானோ அந்தப் பள்ளத்தாக்கைக் கடந்து வரும்போது அநேக ஆபத்துக்களை எதிர்க்க வேண்டியிருந்தது அந்தப் பள்ளத்தாக்கில் காலடி எடுத்து வைத்த உடனேயே அப்பொல்லியோன் என்ற பிசாசு என்னை எதிர்த்து வந்தான். அவனோடு நீண்ட நேரம் போர்புரிய வேண்டியதாகிவிட்டது. அவன் என்னை அழித்து விடுவானோ என்ற எண்ணம்கூட ஏற்பட்டது. அதுவும் அவன் என்னைக் கீழே தள்ளிவிட்டு, மேலே ஏறி நசுக்கினபோதோ நிச்சயம் இறந்துவிடுவேன் என்று நினைத்துவிட்டேன். அவன் என்னைக் கீழே விழத்தள்ளின போது, என் கையிலிருந்த பட்டயமும் கீழே விழுந்துவிட்டது. அதைக் கண்டவுடன் அவன், 'நீ இனிமேல் தப்ப முடியாது' என்று ஆர்ப்பரித்தான். ஆனால் நான் உடன்தானே ஆண்டவரை நோக்கிக் கூப்பிட்டேன். அவர் என்னை இடுக்கண்களிலிருந்து மீட்டு இரட்சித்தார். அதன்பிறகு நான் மரண இருளின் பள்ளத்தாக்கின் வழியே நடந்துவந்தேன். பாதி தூரத்தைக் கடந்து வரும்வரை எங்கும் ஒரே இருள்! கால் தவறி விழுந்து இறந்துவிடுவோமோ என்றுகூட நினைத்தேன். ஆனால் விரைவிலேயே இருள் விலகி சூரியன் உதயமாயிற்று. எனவே மீதி வழியைக் கடந்து வருவது எளிதாக இருந்தது" என்று கூறினான் கிறிஸ்தியான்.

18. வாயாடியைச் சந்தித்தல்

கிறிஸ்தியானும், உண்மையானவனும் ஒருவரோடொருவர் பேசிக்கொண்டே நடந்து செல்வதை நான் என் கனவில் கண்டேன். அப்போது **வாயாடி** என்ற பெயரையுடைய ஒருவன் அவர்களுடன் வந்து சேர்ந்து கொண்டான். அவர்கள் நடந்து சென்ற பாதை சற்று அகலமாக விரிந்து சென்றபடியால் அவன் அவர்களுக்கு அருகே நடந்துவர முடிந்தது. உயரமான அவன் பார்ப்பதற்கு சற்று அவலட்சணமாகக் காணப்பட்டான்.

அவனைக் கண்டவுடன் உண்மையானவன் "நண்பனே, எங்கே செல்கிறாய், பரலோகத்துக்கா?" என்று கேட்டான். வாயாடி 'ஆமாம்' என்று பதில் கூறினான்.

"அப்படியா? நீர் எங்களுக்கு நல்ல வழித்துணையாக இருப்பீர் என்று நினைக்கிறேன்" என்றான் உண்மையானவன்.

"நானும் அப்படியே இருப்பேன் என்று உறுதிசொல்ல முடியும்" என்று வாயாடி கூறக் கேட்ட உண்மையானவன் "அப்படியானால் சேர்ந்து வாரும்; பயனுள்ள காரியங்களைப் பற்றிப் பேசிக்கொண்டே நடந்து செல்லலாம்" என்று உற்சாகத்துடன் கூறினான்.

''யாராயிருந்தாலும் சரி அவர்களுடன் பயனுள்ள காரியங்களைப்பற்றிப் பேசிக்கொண்டே நடந்து செல்வதுதான் எனக்கு விருப்பம். உங்களைப்போன்ற நல்லவர்களை வழித் துணையாகப் பெற்றதில் நான் பெரிதும் மகிழ்ச்சியடைகிறேன். மெய்யாகச் சொல்லப்போனால் அநேகர் வேண்டாத காரியங்களைப் பேசிக்கொண்டுதான் பயணம் செய்கிறார்கள். நீங்களோ அவர்களைவிட வேறுபட்டவர்களாக இருப்பீர்கள் என்று நினைக்கிறேன். எனக்கு வீண் பேச்சென்றால் பிடிக்காது'' என்று பெருமிதத்தோடு கூறினான் வாயாடி.

"கடவுளுக்கடுத்த காரியங்களைப்பற்றிப் பேசுவதைப் போல் அருமையும், இனிமையுமான காரியம் வேறெதுவும் உண்டோ?'' என்றான் உண்மையானவன்.

"ஐயா, உமது வார்த்தைகளெல்லாம் மிகவும் மேன்மையான வார்த்தைகள்! உம்மை எனக்கு மிகவும் பிடித்துப் போய்விட்டது. கடவுளுக்கடுத்த காரியங்களைப்பற்றிப் பேசுவதைவிட இனிமையானதும், பயனுள்ளதுமான காரியம் வேறு உண்டோ? இதைவிட இனிமையான வேறு செய்திகள் உண்டோ? ஒருவன் எதைக் குறித்துப் பேசவிரும்பினாலும், அது அதிசயங்களைக் குறித்ததாக இருந்தாலும் சரி அல்லது பழங்கால நிகழ்ச்சிகளைப் பற்றியதாக இருந்தாலும் சரி அல்லது இரகசியமான செய்திகளைக் குறித்ததாக இருந்தாலும் சரி, அல்லது அடையாளங்களைக் குறித்துப் பேச விரும்பினாலும் சரி, இவை யெல்லாவற்றையும்பற்றி வேதாகமத்தில் எழுதப்பட்டதுபோல வேறு எதிலாவது உள்ளத்தைத் தொடும் வகையில் எழுதப்பட்டிருக்கிறதா? இல்லையே!'' என்று வளவளவென்று பேசிக்கொண்டே போனான் வாயாடி.

"உண்மைதான்; ஆனாலும் அந்தக் காரியங்களைக் குறித்து பயனுள்ள செய்திகளையே நாம் பரிமாறிக்கொள்ள வேண்டும்'' என்றான் உண்மையானவன்.

"நீர் சொல்லுவது உண்மைதான். நானும் அதையேதான் சொல்கிறேன். அப்படிப்பட்ட காரியங்களை பேசுவது நமக்கு அதிக பயனைத் தரும். இப்படிப் பேசிக்கொண்டால் மட்டுமே ஒருவன் உலகப் பிரகாரமான காரியங்களை மாயை என்பதையும், பரலோகத்துக்கடுத்த காரியங்கள் மகிமை என்பதையும் அறிந்துகொள்வதோடு இவைப்பற்றிய அறிவையும் பெற்றுக் கொள்ளலாம். இவை வெறும் பொதுவான பயன்கள் மட்டுமே. சிறப்பான பயன்கள் என்னென்ன? இவற்றைப்பற்றிப்பேசிக் கொள்வதினால் ஒருவன் மறுபிறப்பின் தேவை, நமது மூடச் செயல்கள், கிறிஸ்துவின் நீதியின் அவசியம் இவற்றைத்

தெரிந்துகொள்ளலாம். அதுமட்டுமன்றி எவ்வளவுக்கெவ்வளவு இவைப்பற்றிப் பேசிக்கொள்கிறோமோ அவ்வளவுக்கவ்வளவு மனந்திரும்புதலும், விசுவாசித்தலும், ஜெபித்தலும், சகித்துக் கொள்ளுதலும், எளிதாகிறது. ஒருவரோடொருவர் உரையாடுவதின் மூலம் மனதுக்கு ஆறுதலளிக்கும் வேதாகம வாக்குத்தத்தங்களைப் பற்றியும் அறிந்துகொள்ளலாமே. இவை மட்டுமா? ஒருவரின் தவறான சிந்தனைகளைக் கடிந்து உணர்த்தவும், சத்தியத்தை நிலைநிறுத்தவும் தக்கதாக ஒருவன் திறமை பெற்றவனாகிவிடலாம்'' என்றான் வாயாடி.

“நீர் சொல்லுவது அனைத்தும் சரியே. இவைகளைப் பற்றி உம்மூலம் கேள்விப்படுவதில் நான் மகிழ்ச்சியடைகிறேன்'' என்றான் உண்மையானவன்.

“இவ்வாறு உரையாடிக்கொள்ளாதபடியினால்தான் அநேகர் இரட்சிப்பின் தேவையைப்பற்றியும், அவர் ஆத்துமாவில் கிருபை செயல்படுவதின் அத்தியாவசியத்தைப்பற்றியும் அறிந்துகொள்ள முடிவதில்லை. நித்திய வாழ்வைப்பெற இவை அவசியம் என்பதைத் தெரிந்துகொள்ள முடிவதில்லை. அறியாமையினால் நியாயப்பிரமாணத்தின் கிரியைகள் தங்களைப் பரலோக இராஜ்யத்துக்குக் கொண்டுசேர்க்கும் என்று தவறாக நினைத்து வருகிறார்கள்'' என்று கூறினான் வாயாடி.

“இவற்றைப்பற்றிய அறிவு கடவுள் அருளும் ஈவு என்றுதான் நான் நினைக்கிறேன். எந்த மனிதனும் அதைத் தன்னுடைய முயற்சியினால் பெற்றுக்கொள்ள முடியாது. அவற்றைப்பற்றி வெறுமனே பேசுவதினாலும் அறிந்துகொள்ள முடியாது'' என்றான் உண்மையானவன்.

“நான் நன்றாக அறிந்தது இதுதான். மேலோகத்திலிருந்து ஒருவனுக்குக் கொடுக்காவிட்டால் எந்த மனிதனும் எதையும் பெற்றுக்கொள்ள முடியாது. கிரியையினால் எதுவும் கிடைப்பதில்லை; கிருபையினாலேயே எல்லாம் கிடைக்கிறது. இதுதான் உண்மை என்பதற்கு எத்தனை வேதாகம ஆதாரங்கள் வேண்டுமானாலும் என்னால் கொடுக்க முடியும்'' என்றான் வாயாடி.

“அது சரிதான். நாம் இப்போது எதைப்பற்றிப் பேசலாம் என்று நீரே சொல்லும்'' என்றான் உண்மையானவன்.

“எதைப்பற்றி வேண்டுமானாலும் நான் பேசத் தயாரா யிருக்கிறேன். மோட்சத்தைப்பற்றியதா அல்லது பூமிக்குரிய காரியமா, நீதிவழியைப்பற்றியதா அல்லது நற்செய்தியா, பக்திக்கடுத்த காரியமா அல்லது உலகப் பிரகாரமானதா?

எதுவானாலும் சரி. நடந்துபோன காரியங்களா அல்லது நடக்கப் போகும் காரியங்களா? எதைப்பற்றி வேண்டுமானாலும் என்னால் பேச முடியும். வேண்டிய காரியமோ அல்லது வேண்டாத காரியமோ? பேசுவதற்கு நான் தயார். நீரே எதைப்பற்றிப் பேசலாம் என்பதைத் தீர்மானித்துக்கொள்ளும்" என்று பெருமையாகப் பேசினான் வாயாடி.

அவனது பேச்சைக் கேட்டு வியப்படைந்த உண்மையானவன் மெல்ல நகர்ந்து கிறிஸ்தியானின் அருகே வந்தான்.

"கிறிஸ்தியானே, பார்த்தாயா? நம்முடன் வருபவன் பெரிய திறமைசாலியாக இருப்பான் போலிருக்கிறதே! சாமர்த்தியசாலி தான்" என்று கிசுகிசுத்த குரலில் கூறினான்.

இதைக் கேட்டவுடன் கிறிஸ்தியான் கேலியாகச் சிரித்தான்.

"உன்னோடு பேசியவன் சாதாரண ஆளில்லை. ஒரே வேளையில் இருபது பேர் வந்தாலும்கூட தன் பேச்சினால் அவர்களை மயக்கிவிடுவான்" என்றான் கிறிஸ்தியான்.

"அப்படியா? அவனை இதற்கு முன்பே உனக்குத் தெரியுமா?" என்று ஆவலுடன் கேட்டான் உண்மையானவன்.

"தெரியுமே! அவனுக்கு என்னைப் பற்றித் தெரிவதைவிட எனக்கு அவனைப்பற்றி இன்னும் அதிகமாகத் தெரியும்!" என்றான் கிறிஸ்தியான்.

"எனக்கு அவன் யாரென்று தெரியவில்லையே! நீயே சொல்!" என்று கேட்டான் உண்மையானவன்.

"அவன் நம்முடைய ஊரைச் சேர்ந்தவன்தான். வாயாடி என்ற அவனுடைய பெயர் அவனுக்குப் பொருத்தமானதுதான். நம் ஊர் பெரிய ஊராக இருக்கிறபடியால் உனக்கு அவனைத் தெரியவில்லைபோலும்" என்றான் கிறிஸ்தியான்.

"நம்முடைய ஊரானா, எங்கே எந்தத் தெரு, யாருடைய மகன்?" என்ற கேள்விகளை அடுக்கினான் உண்மையானவன்.

"இவனையா தெரியாது? அலப்புத் தெருவிலிருக்கிற வீண்பேச்சாளனின் மகன். அலப்புத் தெரு வாயாடி என்றால் சின்னக் குழந்தைக்குக்கூடத் தெரியுமே? நன்றாகப் பேசுகிறான் என்பது உண்மைதான். மற்றபடி மிகவும் அற்பமானவன்" என்றான் கிறிஸ்தியான்.

"பார்த்தால் நல்லவன் போல் தெரிகிறதே!" என்று ஐயப்பட்டான் உண்மையானவன்.

“அவனைப்பற்றி முழுவதும் தெரியாதவர்கள் அப்படித்தான் நினைத்துக்கொள்கிறார்கள். ஓர் அரைகுறை ஓவியனின் ஓவியம் கூட தூரத்தில் பார்க்கும்போது அழகாகத்தான் தோன்றுகிறது! ஆனால் அருகில் பார்க்கும்போது அதன் குறைகள் அசிங்கமாகத் தெரிகின்றன அல்லவா? அதைப்போலத்தான் இவனும்! ஊரெல்லாம் நல்ல பெயர்தான். ஆனால் வீட்டுக்குள்ளே மோசமானவன் என்று பெயரெடுத்திருக்கிறான்'' என்றான் கிறிஸ்தியான்.

“அதனால்தான் கேலியாகச் சிரித்தாயா?” என்று கேட்டான் உண்மையானவன்.

“நான் சிரித்ததென்னவோ உண்மைதான். ஆனால் நான் மற்றவர்களைப் பரியாசம்பண்ணுவதும் கிடையாது; இல்லாததையும் பொல்லாததையும் கூறி குற்றம் சுமத்துவதும் கிடையாது. இத்தகைய பாவங்களை நான் செய்யாதிருக்க ஆண்டவர்தாமே எனக்குத் துணைநிற்பாராக. அவனைப்பற்றி இன்னும் விவரமாகக் கூறினால் நீயும் தெளிவாகப் புரிந்துகொள்வாய். யார் எதைப் பேசினாலும் அதற்கேற்றபடி பேசுவதில் இவன் மிகவும் திறமைசாலி! இப்போது உன்னிடம் பேசினானே, அதைப்போலவே சாராயக் கடையில் இருந்து கொண்டும் பேசுவான். எவ்வளவுக்கெவ்வளவு மது வெறி ஏறுகிறதோ அவ்வளவுக்கவ்வளவு சரமாறியாக வார்த்தைகள் வெளிவரும்! அவன் பேசுகிறானே என்று அவன் தேவ பக்தியுள்ளவன் என்று நினைத்துவிடக்கூடாது. அவன் வெறும் வாயினால் பேசுகிறவன். அவன் இருதயத்தில் அந்த எண்ணமே கிடையாது! இவ்வாறு பேசித் திரிவது மட்டுமே பக்தி என்று அவன் நினைத்துக் கொண்டிருக்கிறான்” என்றான் கிறிஸ்தியான்.

‘‘நீ சொல்லுவதெல்லாம் உண்மையென்றால், நான் அவனிடம் ஏமாந்து போனேன் போலிருக்கிறதே!'' என்றான் உண்மையானவன்.

“போலிருக்கிறதா? உண்மையிலேயே நீ ஏமாந்துவிட்டாய்! ‘அவர்கள் சொல்லுகிறார்கள்; சொல்லியும் செய்யாதிருக்கிறார்கள்’ (மத். 23:3) என்று வேதவசனம் கூறுவது இப்படிப்பட்டவர்களைப் பற்றித்தான். ஆனால் ‘தேவனுடைய இராஜ்யம் பேச்சிலே அல்ல, பெலத்திலே உண்டாயிருக்கிறது’ (1 கொரி. 4:20). ஜெபமோ, விசுவாசமோ, மனந்திரும்புதலோ எதைப்பற்றி வேண்டுமானாலும் அவனால் பேச முடியும்! ஆனால் எதையுமே அவன் மனதில் ஏற்றுக்கொள்ளமாட்டான். அவனுக்கு மிக அருகில் நான் குடியிருந்தபடியால் வீட்டிலும், வெளியிலும் அவன் நடத்தையைப்பற்றி நன்றாக அறிந்திருக்கிறேன். அதனால் நான்

கூறுவதெல்லாம் உண்மை என்பது உறுதி. முட்டையின் வெள்ளைக் கரு தானாக எந்தவிதச் சுவையுமற்று இருப்பதைப் போல அவன் வீடும் விசுவாசமற்ற வீடாகவே இருக்கிறது. அங்கே உத்தம மனஸ்தாபமும் கிடையாது! ஜெபமும் கிடையாது! மிருகத்தைவிட கீழான நிலையில் அவர்கள் பக்தியற்ற வாழ்க்கை வாழ்ந்துகொண்டிருக்கிறார்கள். கிறிஸ்தவ விசுவாசத்திற்கே அவன் நிந்தையையும் அவமானத்தையும் கொண்டுவரக் கூடியவனாக இருக்கிறான் என்று அவனைப்பற்றி அறிந்தவர்கள் கூறுவார்கள். அவனால் அந்தப் பகுதியிலேயே கிறிஸ்து நிந்தனைக்குள்ளாகிறார் என்றுதான் சொல்ல வேண்டும்! அவனைப்பற்றி என்ன சொல்லுகிறார்கள் தெரியுமா? வெளியில் தூய்மையானவன், வீட்டிலோ சாத்தான் என்றுதான் அவனை அழைக்கிறார்கள்! பணியாளர்களை அநியாயமாய் திட்டுகிறான்! வீண் வாய்ச்சண்டைக்குச் செல்கிறான்! இதனால் அவனுடன் எப்படிப் பேசுவதென்றே தெரியாமல் அவர்கள் விலகிச் சென்று விடுகிறார்கள்! அவனோடு வாணிபம் செய்பவர்கள்பாடோ இன்னும் பரிதாபமாயிருக்கிறது! இவனோடு வாதாடுவதற்குப் பதில் திருடர் கையில் பொருள்களை எடுத்துக் கொடுத்துவிடுவது மேல் என்று எண்ணுகிறார்கள்! ஏனென்றால் முடிந்தால் இவன் தந்திரம் பண்ணி அவர்களையே ஏமாற்றி விடுவான்! தகப்பன் என்றால் பிள்ளைகளுக்கு நற்போதனைகளை அளிப்பார்கள் என்றுதானே படித்திருக்கிறோம்? ஆனால் இவனோ அவர்களை எத்தர்களாக்கப் பயிற்சி கொடுக்கிறான். இவர்களில் யாராவது இளகிய மனமுள்ளவர்களாகவோ, பயந்தவர்களாகவோ காணப்பட்டால் அவர்களை அறிவீனர்கள் என்று திட்டுகிறான்; பெரிய பொறுப்புக்களை அவர்களிடம் கொடுப்பதில்லை; மற்றவர்களிடமும் அவர்களைப் பாராட்டிப் பேசுவதில்லை! எனக்குத் தெரிந்தபடி இவன் அநேகர் பாவத்தில் விழுந்து போகவும், பின்வாங்கிப் போகவும் காரணமாக இருந்திருக்கிறான். ஆண்டவர்தாம் அவனைத் தடுத்து நிறுத்த வேண்டும். இல்லாவிட்டால் அவன் இன்னும் அநேகரை அழிவுக்கு இட்டுச் சென்றுவிடுவான்'' என்று கூறினான் கிறிஸ்தியான்.

''கிறிஸ்தியானே, நீ அவனை நன்றாக அறிந்திருக்கிறாய் என்பது உன் பேச்சிலிருந்தே தெரிகிறது. நீ உத்தம கிறிஸ்தவனாக இருப்பதால் நான் உன் வார்த்தைகளை நம்புகிறேன். வாயாடி ஓர் ஏமாற்றுக்காரன் என்பதை எனக்குப் புரியவைத்ததற்காக மிகவும் நன்றி'' என்றான் உண்மையானவன்.

''நான் அவனைப்பற்றி முன்னரே அறியாதிருந்தால் உன்னைப்போலவே நானும் ஏமாந்து போயிருக்கலாம். ஆனால் மெய்யான ஒரே வழியிலிருந்து நம்மைத் திருப்புகிற எவரைப்

பற்றியும் எச்சரிக்கை செய்வது நம்முடைய கடமையல்லவா? இந்த வீண் பேச்சாளனை நண்பன் என்று கூறிக்கொள்ளவோ, சகோதரன் என்று சொல்லவோ அனைவரும் வெட்கப் படுகின்றனர். இவன் பேச்சைக் கேட்டாலே விசுவாசிகள் முகத்தைச் சுளித்துக்கொள்கிறார்கள்'' என்றான் கிறிஸ்தியான்.

''நண்பனே உனக்கு நன்றி, சிலருடைய பேச்சுக்கும் செயலுக்கும் எந்தவிதத் தொடர்பும் கிடையாது என்பதைப் புரியவைத்துவிட்டாய். இனி நான் எச்சரிக்கையுடன் இருப்பேன்'' என்றான் உண்மையானவன்.

''நம்முடைய சரீரத்திற்கும், ஆத்துமாவுக்கும் எவ்வளவு வேறுபாடு இருக்கிறதோ அவ்வளவு வேறுபாடு சொல்லுக்கும் செயலுக்கும் இருக்கிறதென்பதே உண்மை. ஆத்துமா இல்லாத சரீரம் செத்தது என்று சொல்லுகிறோமே! செயல் இல்லா விட்டால் வெறும் பேச்சினால் என்ன பயன்? விசுவாசத்திற்கு அடிப்படையே கிருபைதான்! 'திக்கற்ற பிள்ளைகளும் விதவைகளும் படுகிற உபத்திரவத்திலே அவர்களை விசாரிக்கிறதும், உலகத்தால் கறைபடாதபடிக்குத் தன்னைக் காத்துக்கொள்ளுகிறதுமே பிதாவாகிய தேவனுக்குமுன்பாக மாசில்லாத சுத்தமான பக்தியாய் இருக்கிறது' (யாக். 1:22-27) என்று யாக்கோபு சொல்லியிருக்கிறாரே! இது அந்த வாயாடிக்குத் தெரியாது போலிருக்கிறது! நற்செய்தியைக் கேட்பதும் பேசுவதுமே போதுமானது என்று நினைத்து தன்னைத் தானே ஏமாற்றிக்கொள்கிறான்! கேட்பது என்பது விதையை விதைப்பது போன்றதே! ஆனால் விதை முளைவிட்டு, மரமாக வளர்ந்து கனிகொடுக்க வேண்டாமா? நற்செய்தியெனும் விதையும் நம் இதயத்தில் வேரூன்றி, ஆவியின் கனிகளாகப் பலன்கொடுக்க வேண்டும். நமது கனிகளைக் கொண்டே நாம் நியாயந்தீர்க்கப்படுவோம் என்பதை மறந்துவிடக் கூடாது. விசுவாசம் என்பது செயல்மூலம் வெளிப்பட்டதா என்பதே கண்டறியப்படும். நமக்குள் இருக்கும் பயிர் அறுவடை செய்யப்படுவதே இறுதி முடிவு! அறுப்பில் தானியத்தைத்தானே விவசாயி எதிர்பார்க்கிறான்! எனவே உண்மையான விசுவாசமில்லாத எதுவும் இறுதி நியாயத்தீர்ப்பில் பயனற்றதாகி விடும். வாயாடியின் விசுவாசப் பேச்செல்லாம் அன்று ஒன்றுமில்லாததாகிவிடும்'' என்றான் கிறிஸ்தியான்.

''நீ இதைப்பற்றிச் சொல்லும்போது மோசே தீர்க்கதரிசி சுத்தமான மிருகங்களைப்பற்றிக் கண்டுபிடிப்பது எவ்வாறு என்று கூறியது (லேவி. அதி. 11) என் நினைவில் வருகிறது. உண்மை விசுவாசி விரிகுளம்புள்ளதும், அசை போடுகிறதுமான

மிருகங்களுக்குச் சமம் என்று கூறலாம். முயலை எடுத்துக்கொள். அது அசை போடுகிறது; ஆனால் அதற்கு விரிகுளம்பில்லை. எனவே அது ஓர் அசுத்தமான மிருகம்! வீண்பேச்சாளனும் இப்படித்தான்! அவன் வார்த்தைகளை அசை போடுகிறான்; எல்லாக் காரியங்களைப்பற்றியும் வாயினால் பேசுகிறான். ஆனால் அவனுக்கு விரிகுளம்பு என்னும் செய்கை இல்லை மெய்மனஸ்தாபத்தோடு அவன் எதையும் பேசவில்லை என்பதை நான் புரிந்துகொண்டேன்'' என்றான் உண்மையானவன்.

“இன்னொன்றையும் நான் நினைவுபடுத்த விரும்புகிறேன். பவுல் அப்போஸ்தலன் இவர்களைச் சத்தமிடுகிற வெண்கலத் துக்கும், ஓசையிடுகிற கைத்தாளத்துக்கும் ஒப்பிட்டிருக்கிறார் *(1 கொரி. 13:1)*. இவர்கள் உயிரற்ற வெறும் ஓசை எழுப்பும் இசைக் கருவிகளைப்போலவே இருக்கிறார்கள். மெய்யான விசுவாசமும் நற்செய்தியின் கிருபையும் இல்லாதவர்களே உயிரற்றவர்கள் என்று குறிப்பிடப்படுகிறார்கள். இவர்களின் வாயின் வார்த்தைகள் தேவதூதர்களின் வார்த்தைகளை ஒத்ததாக இருந்தாலும்கூட அவர்கள் நித்திய ஜீவனைப் பெறும் ஆண்டவருடைய பிள்ளைகளின் பாக்கியத்தைப்பெற முடியாது என்று நிச்சயமாகக் கூற முடியும்'' என்றான் கிறிஸ்தியான்.

“துவக்கத்திலேயே அவனோடு சேர்ந்து நடப்பது எனக்கு அவ்வளவாகப் பிடிக்காமல்தான் இருந்தது. இப்போது நீ இவைகளைக் கூறிய பிறகோ அவனைப் பற்றி நினைத்தாலே வெறுப்பாக இருக்கிறது. அவன் நம்முடனே வருகிறானே! அவனை விரட்டுவதற்கு என்ன செய்யலாம்?'' என்று கேட்டான் உண்மையானவன்.

‘‘நான் சொல்லும் ஆலோசனைப்படி நீ நடந்தால் அவனாகவே இவர்கள் உறவு வேண்டாம் என்று நம்மை விட்டு ஓட்டம் பிடிப்பான்! கடவுள் அவன் மனதில் கிரியை செய்து அவனை மாற்றினாலொழிய இது நிச்சயமாக நடக்கும்'' என்று புன்சிரிப்புடன் கூறினான் கிறிஸ்தியான்.

“அப்படியா? என்ன யோசனை? சொல் பார்ப்போம்!'' என்று ஆவலாகக் கேட்டான் உண்மையானவன்.

“நீ வேறு ஒன்றும் செய்ய வேண்டாம். நேரே அவனிடம் போ. மெய்யான விசுவாசத்தைப்பற்றிப் பேசுவோம் என்று சொல். அவன் நிச்சயமாக அதற்கு முன் வருவான். அதன் பின்பு அவன் இருதயத்திலும், குடும்பத்திலும், வெளிப் பேச்சிலும் மெய் விசுவாசம் இருக்கிறதா என்று கண்டுபிடி'' என்று ஆலோசனை கூறினான் கிறிஸ்தியான்.

சரியென்று தலையாட்டிய உண்மையானவன் மெல்ல நகர்ந்துசென்று வாயாடியோடு சேர்ந்து கொண்டான்.

"வாரும், வாரும், இதற்குள் நாம் அநேக காரியங்களைக் குறித்துப் பேசி முடித்திருக்கலாமே!" என்ற அங்கலாய்ப்போடு உண்மையானவனை வரவேற்றான் வாயாடி.

"ஏன் இப்போதே பேச்சைத் துவங்கலாமே! எதைப் பற்றிப் பேசுவது என்பதை நானே தெரிந்து கொள்ளலாம் என்று கூறியிருந்தீரே! ஆண்டவருடைய மீட்கும் கிருபை ஒருவன் உள்ளத்தில் இருந்தால் அது எவ்விதம் வெளிப்படும் என்பதையே பேசும் பொருளாகக் கொள்ளலாமே!'' என்றான் உண்மை யானவன்.

"நல்ல கேள்வி தான். முழுமனதோடு இதற்கு விடை கூற நான் முன்வருகிறேன். முதலாவது கடவுளுடைய கிருபை எந்த இருதயத்தில் குடியிருக்கிறதோ அங்கு பாவத்துக்கு விரோதமான எண்ணம் அதிகமாகக் காணப்படும் இரண்டாவதாக" என்று கூறுவதற்கு முன்பாக உண்மையானவன் இடைமறித்தான்.

"கொஞ்சம் பொறும். ஒவ்வொரு கருத்தாகச் சோதித்துவிட்டுப் பின்னர் அடுத்த கருத்துக்குச் செல்லலாம். நீர் கூறியதற்குப் பதிலாக கடவுளுடைய கிருபையைக்கொண்ட ஓர் ஆத்துமா தன்னுடைய பாவங்களைக் குறித்து அருவருப்பான எண்ணம் கொண்டிருக்கும் என்று கூறுவது இன்னும் பொருத்தமாக இருக்கும் என்று நினைக்கிறேன்'' என்று கூறினான் உண்மையானவன்.

''ஏன் அப்படிச் சொல்கிறீர்? பாவத்துக்கு விரோதமான எண்ணம் என்பதும், பாவங்களைக் குறித்து அருவருப்பான எண்ணம் என்பதும் ஒன்றுதானே? இரண்டுக்கும் இடையில் என்ன வேறுபாடு இருக்கிறது?'' என்று கேட்டான் வாயாடி.

"இரண்டுக்கும் எவ்வளவோ வேறுபாடு இருக்கிறதே! உலகப் பிரகாரமாக ஒருவன் பாவத்துக்கு விரோதமான எண்ணம் கொண்டிருக்கலாம்! ஆனால் விசுவாசத்தினால் உண்டாகும் பாவ வெறுப்பின் வல்லமையின்றி ஒருவனும் தனது பாவத்தைக் குறித்து அருவருப்பு அடையக் கூடியவனாக இருக்கமாட்டான். நான் எத்தனையோ பேர் மேடையில் நின்று பாவத்துக்கு விரோதமாகப் பேசுவதைக் கண்டிருக்கிறேன். ஆனாலும் அவர்கள் வீட்டிலும், பேச்சிலும் பாவ இச்சையுள்ளவர்களாக இருப்பதைக் கண்டிருக்கிறேன். யோசேப்பின் எசமானியை எடுத்துக்கொள். யோசேப்பு அவளுடைய இச்சைக்குச் சம்மதம் தெரிவிக்காததினால் எவ்வளவாக அவள் ஓர் உத்தமியைப்

போலக் கூக்குரலிட்டாள்! ஆனால் அவள் இச்சைப்படி அன்று நடந்திருந்தால் அவள் பாவத்தில் விழுந்திருப்பாள் அல்லவா? சிலர் பாவத்துக்கு விரோதமாகப் பெருங்குரலெடுத்துப் பேசுகிறார்கள் என்பது உண்மைதான். ஆனால் இது எப்படியிருக்கிறது தெரியுமா? ஒரு தாய் தன் பிள்ளையை நீ கெட்ட பிள்ளை, உனக்கு உணவு கிடையாது என்று கூறுவது போல, அவர்கள் பாவத்துக்கு விரோதமாகப் பேசுகிறார்கள். ஆனால் என்ன நடக்கிறது? சிறிது நேரம் கழித்து அந்தத் தாய் என்ன செய்கிறாள்? அதே பிள்ளையைக் கட்டியணைத்து, கண்ணே, மணியே என்று கொஞ்சுகிறாள். அதைப்போல இவர்களும் மறுபடியும் தங்கள் பாவங்களை அணைத்துக் கொள்கிறார்கள். எனவே பாவத்துக்கு விரோதமாகப் பேசுவதில் மட்டும் எந்தப் பயனுமில்லை என்பதே என் கருத்து" என்று ஒரு குட்டிப் பிரசங்கமே நிகழ்த்திவிட்டான் உண்மையானவன்.

"என் பேச்சிலே குறை காணலாம் என்று நீர் எதிர் பார்ப்பதைப்போலத் தோன்றுகிறது" என்றான் வாயாடி.

"அப்படியொன்றும் இல்லை! அது என் குணமும் அல்ல! ஒவ்வொரு கருத்தையும் புரிந்துகொள்ளும் வகையில் தெளிவாக விளக்கவே நான் விரும்புகிறேன். அடுத்து இருதயத்திலிருக்கும் தேவ கிருபை வெளிப்படும் முறைபற்றி இரண்டாவது கருத்தைக் கூறும்" என்றான் உண்மையானவன்.

"நற்செய்தியைப்பற்றி தெளிவாகத் தெரிந்திருப்பதுதான்" என்றான் வாயாடி.

"இதைத்தான் முதல் கருத்தாகக் கூறியிருக்க வேண்டும் எப்படிச் சொன்னால் என்ன, இதுவும் சரியான அடையாளம் அல்ல, ஏனென்றால் நற்செய்தி உண்மைகளைப்பற்றி அரைகுறை அறிவையல்ல, நிறைந்த அறிவைப் பெற்றவனும்கூட உள்ளத்தில் தேவ கிருபை அற்றவனாக இருக்கலாமே! எனவே அவன் சகல இரகசியங்களையும், சகல அறிவையும் அறிந்திருந்தாலும் அவன் தேவ கிருபையைப்பெற்றிராவிட்டால் கடவுளுடைய பிள்ளையாக இருக்கமாட்டான். 'இவ்வகளையெல்லாம் அறிந்து கொண்டீர்களா?' என்று இயேசு ஒரு முறை தன் சீடர்களிடம் கேட்டார். 'ஆம்' என்று அவர்கள் பதில் கூறினார்கள். உடனே அவர் என்ன சொன்னார் தெரியுமா? 'இவைகளைச் செய்வீர்களானால் பாக்கியவான்களாக இருப்பீர்கள்' என்று கூறினார் இயேசு. அவர்கள் அறிவுக்கேற்றபடி அவர்களை ஆசீர்வதிக்காமல் அவர்கள் கிரியைக்கேற்றபடியே அவர்களை ஆசீர்வதிக்கிறார். ஏனென்றால் செய்கைமூலம் வெளிப்படாத அறிவை ஒருவன் கொண்டிருக்கலாம். எஜமானுடைய சித்தத்தை

அறிந்தும் அதன்படி செய்யாதவன் எவனோ, என்று நமது மீட்பர் இயேசு மற்றோரிடத்தில் எச்சரிக்கை செய்துள்ளார். இதிலிருந்து எசமானருடைய கட்டளைகளை அறிந்திருந்தும் அதன்படி செய்யாதவர்களும் உண்டு என்பது தெரிகிறது.

ஒருவன் தேவதூதர்களைப்போல அறிவைப் பெற்றிருந்தாலும் கிறிஸ்துவை ஏற்றுக்கொள்ளாதவனாக இருக்கலாம். எனவே நீர் சொல்லும் அடையாளம் சரியான அடையாளமல்ல என்றே கூற வேண்டும். பேச்சில் வல்லவர்களுக்கு ஒன்றைப் பற்றிய அறிவே மேலானதாகக் காணப்படும், என்றாலும், கடவுளுக்கு விருப்பமானதெல்லாம் கிரியைதான். அறிவிலும் இரண்டு வகை உண்டு. எல்லாவற்றையும் அறிந்துகொள்ள வேண்டும் என்ற ஆவலில் தேடிப் பெற்றுக்கொள்ளும் அறிவு ஒன்று. மற்றொன்று விசுவாசம், அன்பு இவற்றின் கிருபையால் நாம் பெற்றுக் கொள்ளும் அறிவு. இந்த அறிவு கடவுளுடைய சித்தத்தை நிறைவேற்றும்படி நம்மை நெருக்கி ஏவுகிறது. முதலில் நான் கூறிய அறிவு பேச்சில் விருப்பமுடையவர்களைத் திருப்தி செய்யக் கூடியது. ஆனால் இரண்டாவது அறிவைப் பெறாவிட்டால் உண்மைக் கிறிஸ்தவன் மெய்யான மகிழ்ச்சியைப் பெற முடியாது; 'எனக்கு உணர்வைத்தாரும்; அப்பொழுது நான் உமது வேதத்தைப் பற்றிக் கொண்டு, என் முழு இருதயத்தோடும் அதைக் கைக்கொள்ளுவேன்' என்று சங்கீதக்காரன் கூறியதை *(சங். 119:34)* மறந்துவிட்டீரா?" என்று கேட்டான் உண்மையானவன்.

"நான் முன்பு சொன்னது சரிதான், நீர் பேச்சில் குற்றம் கண்டுபிடிக்கவே முயற்சி செய்கிறீர். இப்படியிருந்தால் பிறகு எப்படி உள்ளத்தில் எழுப்புதல் உண்டாகும்?" என்று பதில் கேள்வி கேட்டான் வாயாடி.

"அதைப்பற்றி அப்புறம் பேசிக்கொள்ளலாமே! உள்ளத்திலிருக்கும் கடவுளுடைய கிருபை வெளிப்படும் வேறு அடையாளம் ஏதேனும் உண்டா?" என்று உண்மையானவன் கேட்டபோது,

"இனியும் உம்மிடம் அதுபற்றிக் கூற நானென்ன அறிவில்லாதவனா? நீர் என் கருத்துக்கு ஒத்து வருபவராகத் தெரியவில்லையே!" என்று அங்கலாய்த்தான் வாயாடி.

"சரி, உமக்கு அதைப்பற்றிக் கூற விருப்பமில்லையென்றால் நானாவது கூற அனுமதி கொடுமேன்!" என்றான் உண்மை யானவன்.

"உமது விருப்பப்படி நீர் பேசலாம்" என்று சொல்லிவிட்டான் வாயாடி.

''ஒருவனுடைய இருதயத்தில் கடவுளுடைய கிருபை இருப்பது உண்மையானால் அது அவனுக்குள்ளே கிரியை செய்வதால் வெளிப்படும்; மட்டுமன்றி மற்றவர்களுடன் அவன் பழகும் விதத்திலும் வெளிப்படும். இதை அவர்கள் தெளிவாகக் கண்டு கொள்ளலாம்.

''கடவுளுடைய கிருபை அவனுக்குள் எவ்வாறு கிரியை செய்கிறது என்பதைப் பார்ப்போமா? அது அவனுக்குள் பாவ உணர்வை ஏற்படுத்துகிறது. அவனுடைய ஜென்ம சுவாபமாகிய பாவ இயல்பையும், அவிசுவாசத்தையும் சுட்டிக் காட்டுகிறது. அவன் தன் பாவத்தை அறிக்கை செய்து விட்டுவிடவும், இயேசுவை மீட்பராக ஏற்றுக்கொண்டு கடவுளுடைய இரக்கத்தைப் பெறவும் அவனைத் தூண்டுகிறது அவன் இதைச் செய்யாவிட்டால் நித்திய தண்டனையைப் பெறுவான் என்று அறிவுறுத்துகிறது. அவன் பாவத்துக்காக வெட்கப்படுகிறான்; மெய் மனஸ்தாபம் அடைகிறான். அது மட்டுமன்றி, மீட்பர் அவனுக்குள் வாசம்பண்ணுவார் என்பதையும், அவரின்றி நித்திய ஜீவனைப் பெற முடியாது என்பதையும் அவன் உணர்ந்துகொள்கிறான். அவர் இல்லாமல் வாழ முடியாது என்ற பசிதாகத்தை அவன் பெறுகிறான். இப்படிப் பசிதாகம் உள்ளவர்களுக்காக கடவுள் அநேக வாக்குத்தத்தங்களை அருளிச் செய்துள்ளார். அவனவன் தனது விசுவாசத்துக்குத்தக்கதாக மன மகிழ்ச்சியையும், சமாதானத்தையும் பெறுகிறான். தனது விசுவாசத்தின் அளவுக்கேற்றபடி பரிசுத்தத்தின் மீது வாஞ்சை கொண்டிருக்கிறான்; மீட்பரைப்பற்றி மேலும் அறிந்துகொள்ள ஆசைப்படுகிறான்; அவருக்கு ஊழியம் செய்வதில் விருப்பம் கொள்கிறான். ஒருவனுடைய இருதயத்தில் கடவுளின் கிருபை இவ்வாறு வெளிப்படுகிறது. என்றாலும் இவை அனைத்துமே ஆண்டவருடைய வெளிப்பாடுகள் என்பதை அவன் அறிந்துகொள்வது ஆர்வம். ஏனென்றால் அவனுடைய பிறவிக் குணமும், பாவத்துக்கு இணங்கும் இயல்பும் இதற்குத் தடையாக இருக்கின்றன. கடவுளுடைய கிருபை தன் உள்ளத்தில் கிரியை செய்கிறது என்பதை ஒருவன் தெரிந்துகொள்ள தெளிந்த புத்தியும், அறிவும் அவசியமாக அவனுக்குத் தேவைப்படும்.

''ஒருவனுடைய ஆத்துமாவினுள் இருக்கும் கடவுளுடைய கிருபை அவனுக்குள் எவ்வாறு கிரியை செய்யும் என்பதையும் பற்றி இதுவரை கூறினேன். இனி அது எவ்வாறு மற்றவர்களுக்கு வெளிப்படுத்தப்படுகிறது என்பதைப் பார்ப்போமா?

''அவன் தன் ஆத்துமாவில் கொண்டிருக்கும் விசுவாசத்தை மற்றவர்களுக்கு வெளிப்படுத்துவதின்மூலம் அது வெளிப்படும்.

இரண்டாவதாக, அவன் செயல்களின்மூலம் அண்டைவீட்டார் அறிந்துகொள்ளும் வகையில் வெளிப்படும். அவன் வாழ்க்கை பரிசுத்தமாக இருக்கும்படி அவன் இருதயம் பரிசுத்தமாக இருக்கும். அவன் குடும்பத்தாரும் பரிசுத்த ஜீவியம் செய்வார்கள். அவன் பாவத்தைக் கண்டு அருவருக்கும் மனநிலையில் இருப்பதால், தன் குடும்பத்தாரின் பாவங்களைக் கண்டித்து, அவர்கள் அதை விட்டுவிடத் தூண்டுவான். உலகெங்கும் நற்செய்தியை அறிவித்து, அனைவரும் பரிசுத்த ஜீவியம் செய்ய உதவும்படி வாஞ்சிப்பான். வெறுமனே ஆண்டவருக்கடுத்த காரியங்களைப்பற்றிப் பேசி, விசுவாசமுள்ளவனைப் போலத் தன்னைக் காட்டிக்கொள்பவன் அல்ல அவன். தனது விசுவாசத்தினால் கடவுளுடைய வசனத்திற்குக் கீழ்ப்படிந்து நடப்பதின்மூலம் கடவுளுடைய கிருபை வெளிப்படக் காரணமாக இருப்பான்" என்று விளக்கினான் உண்மையானவன்.

"ஐயா, வாயாடியே, நான் இதுவரை கடவுளுடைய கிருபையின் கிரியை என்னவென்றும் அது எவ்வளவு வெளிப்படுகிறது என்பதையும் தெளிவாகக் கூறினேனே! இதற்கு விரோதமாக நீர் ஏதாவது கூற விரும்பினால் அதைக் கூறும்" என்று கேட்டான் உண்மையானவன்.

"அச்சச்சோ, உமக்கு விரோதமாக நான் எதையும் பேச விரும்பவில்லை, ஐயா. இனி நீர் கூறுவதைக் கேட்டுக் கொண்டிருப்பதுதான் என் வேலை ம்....ம் இரண்டாவது கேள்வியைக் கேளுமேன்!" என்றான் வாயாடி.

ஒருவன் கடவுளுடைய கிருபையைப் பெற்றவனாக இருந்தால் அவனுடைய கிரியைகள்மூலம் அது வெளிப்படுகிறது என்பதைப் பார்த்தோமல்லவா? உமது வாழ்க்கையும், வாயின் வார்த்தைகளும் அதற்குச் சாட்சியாக விளங்குகின்றனவா என்பதுதான் என் இரண்டாவது கேள்வி. உம்முடைய விசுவாசம் வெறும் உதட்டளவில் இருக்கிறதா, அல்லது கிரியையில் வெளிப்படுகிறதா? ஆனால் உண்மையோடு இதற்குப் பதில் கூறும். உம்முடைய மனச்சாட்சி ஒத்துக்கொள்ளக் கூடியதாகவும் கடவுளுக்கு முன்பாகவும் எதையும் மாற்றாமல் கூறும். ஏனென்றால் தன்னைத்தான் புகழுகிறவன் உத்தமனல்ல, கர்த்தரால் புகழப்படுகிறவனே உத்தமன் *(2 கொரி. 10:18)* என்று கூறப்பட்டிருக்கிறதே. என் பேச்சு என்னை அயோக்கியன் என்று வெளிப்படுத்தும்போது, என் அண்டைவீட்டார் இவன் பொய்யன் என்று என்னைப் பற்றிக் கூறும்போது நான் அப்படியல்ல, நான் ஓர் உத்தமன் என்று சொல்லிக் கொள்வது நியாயமாகுமா? நீரே சொல்லும்'' என்று தூண்டினான் உண்மையானவன்.

உண்மையானவன் கூறியதைக் கேட்டவுடன் வாயாடியின் முகம் வெளிறிப் போய்விட்டது! என்றாலும் அவன் சுதாரித்துக் கொண்டான்.

"ஓகோ, நீர் அறிவிக்கும், மனச்சாட்சி ஒத்துக்கொள்வதற்கும், கடவுள் உத்தமன் என்று சாட்சி கூறுவதற்கும் முடிச்சுப் போடுகிறீரோ? நீர் இப்படியெல்லாம் என்னிடம் கேள்வி கேட்பீர் என்று நான் எதிர்பார்க்கவேயில்லை! இவற்றுக்கு நான் பதில் கூறப் போவதும் இல்லை! நீர் ஒருவேளை பள்ளியில் என் ஆசிரியராக இருந்து கேள்வி கேட்டால் நான் பதில் கூறலாம். மற்றபடி என்னை நீர் நியாயந்தீர்க்க நான் இடம் கொடுக்க மாட்டேன். அது சரி, நீர் ஏன் இப்படிப்பட்ட கேள்விகளை என்னிடம் கேட்கிறீர் என்பதையாவது நான் தெரிந்து கொள்ளலாமா?" என்று கேட்டான் வாயாடி.

"ஏனென்றா கேட்கிறீர்? உம்முடைய பேச்சுத் திறமையைக் கண்டு நானும்கூட கொஞ்சம் மயங்கிவிட்டது உண்மைதான். இது வெறும் வாய்ப் பேச்சா அல்லது விசுவாசத்தின் வெளிப்பாடா என்பதைத் தெரிந்துகொள்ளவே இவ்வாறு கேட்டேன். நீர் வெறும் வாய்ப் பேச்சாளன் என்றும், நீர் கூறுவதற்கு விரோதமாக உமது செயல்கள் சாட்சி கூறுகின்றன என்றும் நான் கேள்விப்பட்டிருக்கிறேன். கிறிஸ்தவர்களுக்கிடையே நீர் கறைபடிந்தவராக இருக்கிறீர் என்றும், உம்முடைய அவிசுவாச கிரியைகள் விசுவாசிகளுக்கு இடறலாக இருக்கின்றன என்றும், இதனால் தீய வழியில் சென்று அழிவைச் சம்பாதித்தவர்கள் அநேகர் என்றும், இன்னும் அழியும் நிலையில் இருப்பவர்களும் ஏராளமானோர் என்றும் நான் அறிந்திருக்கிறேன். உம்முடைய விசுவாசப் பேச்சு சாராயக் கடைக்கும், பொருளின்மீது இச்சை கொண்டிருக்கும் மனதுக்கும், பொய்பேசும் உதடுகளுக்கும், பொய் ஆணையிடும் நாவுக்கும் அயோக்கியர் கூட்டத்திற்கும் மட்டுமே ஒத்துப்போகுமென்றும், விசுவாசிகள் மத்தியில் அது செத்ததாகக் காணப்படுகிறது என்றும் கேள்விப்பட்டிருக்கிறேன். துர் நடத்தையுள்ள ஒரு பெண் பெண்ணினத்திற்கே அவமானத்தைத் தேடித் தருவதுபோல நீர் விசுவாசிகள் எல்லாருக்குமே அவமானத்தைத் தேடி தருகிறீர்" என்றான் கிறிஸ்தியான்.

"என்றாலும் கொஞ்ச நேரமாவது அவனுடன் பேசக் கிடைத்த வாய்ப்புக்காக நான் மகிழ்ச்சியடைகிறேன். என்னால் முடிந்தவரை நான் அவனுக்கு வேதாகம சத்தியங்களை எடுத்துக் கூறிவிட்டேன். என்றாவது அவன் இதைப்பற்றி நினைத்துப் பார்ப்பான் அல்லவா? அப்படியே அவன் தன் பாதையைவிட்டு

மாறாவிட்டாலும் நான் என் கடமையைச் செய்துவிட்டேன் என்பதில் ஐயமில்லை!" என்று கூறினான் உண்மையானவன்.

"நீ தெளிவாக வேத போதனைகளை அவனுக்கு எடுத்துக் கூறியது நல்லதுதான். இந்நாள்களில் உன்னைப்போலத் தெளிவாகவும், நேரடியாகவும் வேதாகம சத்தியங்களை எடுத்துக்கூறுபவர்கள் கொஞ்சப் பேர்தான். இதனால்தான் அநேகர் கடவுளுக்கடுத்த காரியங்களைக் கேட்பதற்கே விரும்புவதில்லை. வீண் பேச்சாளனைப் போன்ற வாயாடி மனிதர்களுக்கு பேச்சில் மட்டும்தான் கடவுள் பக்தி இருக்கிறது. அவர்கள் நடக்கும் விதமோ தாறுமாறாகக் காணப்படுகிறது! இப்படிப்பட்டவர்களை நம்மோடு சேர்த்துக்கொண்டால் கிறிஸ்தவ மார்க்கத்திற்கே அவமானம்தான் வந்து சேரும்; விசுவாசிகளுக்கும் மன வருத்தம் ஏற்படும். அனைவருக்கும் அவமானத்தைத் தேடித் தருகிறீர்" என்று குற்றம் சாட்டினான் உண்மையானவன்.

"யாரோ கூறியதைக் கேட்டு நீ என்னைப்பற்றி இந்த முடிவுக்கு வந்துவிட்டாய்! நீ கோபமும் முகச் சுழிப்புமுடைய மனிதன் என்பது தெரிந்துவிட்டது. இனி உன்னோடு பேச நான் ஆயத்தமாக இல்லை!" என்று கோபத்தோடு கூறிவிட்டு விலகிச் சென்றுவிட்டான் வாயாடி.

இதைக் கண்ட கிறிஸ்தியான் உண்மையானவனை நெருங்கி வந்தான்.

"நண்பனே, நான் சொன்னபடியே நடந்துவிட்டது பார்த்தாயா? நீ என்ன அறிவுரை கூறினாலும் அவன் தனது இச்சைகளை விட்டுவிடமாட்டான். தன் நடத்தையைச் சீர் செய்து கொள்வதைவிட, உன்னைவிட்டுப் பிரிவதே மேல் என்ற முடிவுக்கு வந்துவிட்டான்! போகட்டும், அதனால் நமக்கு ஒன்றும் நஷ்டமில்லை, அவனுக்குத்தான் நஷ்டம், அவன் தனது தீய குணங்களை விட்டுவிடுவதுபோலத் தோன்றவில்லை. அவன் நம்முடன் வந்தால் நம்மையும் அவனைப்போல மாற்றத்தான் முயலுவான். நல்லவேளை, நாம் தப்பிவிட்டோம்! வேதாகமமும் இப்படிப்பட்டவர்களை விட்டு விலகு என்றுதானே போதிக்கிறது? இப்படிப்பட்ட மனிதர்களிடம் நீ நடந்துகொண்ட முறையில் நடந்துகொள்வதே நல்லது, இதனால் ஏதாவது ஒரு முடிவு ஏற்படும். ஒன்று அவன் தன் தவறான வழிகளைவிட்டு விலகி மெய்யான விசுவாசத்துடன் ஆண்டவரை உண்மையாய்ப் பின் தொடருவான். அல்லது இவர்கள் சகவாசமே வேண்டாமென்று மெய் விசுவாசிகளுக்கு இடறலுண்டாக்காமல் விலகிப் போய்விடுவான்" என்று சொன்னான் கிறிஸ்தியான்.

அதன்பிறகு அவர்கள் வாயாடியின் தொல்லை நீங்கியதில் மனமகிழ்ச்சியோடு பாடிக் கொண்டே நடந்து செல்வதை நான் என் கனவில் கண்டேன். மேலும் தங்கள் அனுபவங்களை ஒருவரோடொருவர் பகிர்ந்து கொண்டார்கள். இவ்வாறு பேசிக் கொண்டே சென்றதால் அவர்களுக்குப் பயணக் களைப்பு தெரியவில்லை. இல்லாவிட்டால் அவர்கள் மிகவும் சோர்ந்து போயிருப்பார்கள். இப்படியே அவர்கள் அந்தப் பாழடைந்த நிலப்பகுதியைக் கடந்து வந்து விட்டார்கள்.

19. நற்செய்தியாளரோடு மூன்றாம் சந்திப்பு

அவர்கள் இருவரும் அந்தப் பகுதியைக் கடந்து முடியும் வேளையில் உண்மையானவன் தற்செயலாகப் பின்னால் திரும்பிப்பார்த்து யாரோ ஒருவர் வருவதைக் கண்டான். அவர் ஏற்கெனவே சந்தித்தவர்போலத் தோன்றியதால் கிறிஸ்தியானை அழைத்து, "அவர் யார் என்று பார்!" என்று கேட்டான்.

திரும்பிப் பார்த்த கிறிஸ்தியானின் முகம் மலர்ந்தது.

"என் நேச நண்பர் நற்செய்தியாளர்தான் வருகிறார்" என்று மகிழ்ச்சியோடு கத்தினான் கிறிஸ்தியான்.

"அவர் எனக்கும் நண்பர்தான். குறுகிய வாசல் வழியை எனக்குச் சுட்டிக் காட்டியதே அவர்தான்'' என்றான் உண்மையானவன்.

நற்செய்தியாளர் அருகே நெருங்கி வரும்வரை அங்கேயே நின்றுவிட்டார்கள்.

அவர்களைக் கண்டவுடன் நற்செய்தியாளரும் மகிழ்ச்சி யடைந்தார்.

''அன்பு சகோதரர்களே, உங்களுக்குச் சமாதானம் உண்டாவதாக. உங்களுக்கு உதவி செய்பவர்களும் சமாதானத்தைப் பெறுவார்களாக! என்று வாழ்த்தினார் நற்செய்தியாளர்.

''வாரும், வாரும் புண்ணியரே! உம்மைக் கண்டவுடன் எங்கள் நித்திய மகிமைக்கென்று நீர் செய்த உதவிகளும், காட்டிய ஆதரவும் எங்கள் நினைவில் வருகிறது!'' என்று நன்றியுடன் கூறினான் கிறிஸ்தியான்.

''நற்செய்தியாளரே, வணக்கம்! நன்றி கலந்த கோடி வணக்கங்கள்! என்னைப்போன்ற எளிய பயணிகளுக்கு உம்முடைய உறவு எவ்வளவு பயனுள்ளதாயிருக்கிறது!" என்று கூறினான் உண்மையானவன்.

"இதற்கு முன்பு நான் உங்களைச் சந்தித்த பின்பு உங்கள் பயணம் எப்படியிருந்தது? உங்கள் அனுபவங்கள் என்ன? பிரச்சினைகளை எவ்வாறு சமாளித்தீர்கள்?" என்று அன்புடன் கேட்டார் நற்செய்தியாளர்.

கிறிஸ்தியானும், உண்மையானவனும் வழியில் தாங்கள் சந்தித்த அபாயங்களையும், பட்ட கஷ்டங்களையும் எடுத்துக் கூறி, எவ்வாறு கடவுளுடைய கிருபையால் அவற்றை எதிர்கொண்டார்கள் என்பதையும் விவரித்தார்கள்.

இதைக் கேட்ட நற்செய்தியாளர் அளவற்ற மகிழ்ச்சி யடைந்தார். "ஆகா, என் உள்ளம் எவ்வளவு ஆனந்தமடைகிறது! நீங்கள் சோதனைகளைச் சந்தித்ததினாலல்ல, அவற்றை வெற்றிக்கொண்டு இவ்வளவு தூரம் கடந்து வந்ததினாலே நான் மிகவும் மகிழ்ச்சியடைகிறேன்" என்றார் நற்செய்தியாளர்.

அவர் மேலும் தொடர்ந்து பேசினார்.

"என் பேச்சைக் கேட்டு நீங்கள் சரியான பாதையில் செல்லுவதின் நிமித்தமாக நான் என் ஆவியில் களிகூருகிறேன். ஏனென்றால், நான் விதைத்தேன். நீங்கள் அறுவடை செய்தீர்கள். விதைக்கிறவனும் அறுக்கிறவனுமாகிய இருவரும் ஒருமித்துச் சந்தோஷப்படும் காலம் வரும் என்று வேதாகமம் கூறுகிறது *(யோவான் 4:36)* அல்லவா? நீங்கள் முடிவுவரை உங்கள் பயணத்தைத் தொடர்வதற்குத் 'தளர்ந்து போகாதிருந்தால் ஏற்ற காலத்தில் அறுப்பீர்கள்' உங்களுக்கு முன்னால் அழிவில்லாத ஒரு கிரீடம் வைக்கப்பட்டிருக்கிறது. எனவே உங்கள் சரீரத்தை ஒடுக்கிக் கீழ்ப்படுத்தி *(1 கொரி. 9:27)* அந்தக் கிரீடத்தைப் பெற்றுக்கொள்ளத்தக்கதாக ஓடுங்கள். உங்களைப்போலவே அநேகர் இந்தக் கிரீடத்தைப் பெறும்படி ஓடுகிறார்கள். ஆனால் அவர்களுக்கு முன்பாக வேறு சிலர் ஓடி கிரீடத்தை பெற்றுவிடுகிறார்கள். எனவே நீங்கள் உங்கள் கிரீடத்தை இழந்துவிடாதபடி உங்களுக்குள்ளதைப் பற்றிக்கொண்டிருங்கள் *(வெளி. 3:11)*. சாத்தானை நீங்கள் இன்னும் முற்றிலுமாக வெற்றி கொண்டுவிடவில்லை. 'பாவத்துக்கு விரோதமாய்ப் போராடுகிறதில் இரத்தஞ் சிந்தப்படத்தக்கதாக இன்னும் எதிர்த்து நிற்கவில்லையே' *(எபி. 12:4)*. பரலோக அரசைப் பற்றிய எண்ணமே எப்போதும் உங்கள் முன்பாக இருப்பதாக! காணப்படாதவைகளைப்பற்றி திட விசுவாசம் கொண்டிருப் பீர்களாக! பூலோகத்துக்கடுத்த எந்தக் காரியத்தையும் பற்றிய சிந்தனையில் ஆழ்ந்து விடாதிருப்பீர்களாக! எல்லாவற்றையும்விட உங்கள் இருதயமே 'திருக்குள்ளதும் மகா கேடுள்ளதுமா யிருக்கிறது' *(எரே. 17:9)* எனவே இருதயத்தின் இச்சைகளைப்பற்றி எச்சரிக்கையுடன் இருங்கள். வானத்திலும் பூமியிலுமுள்ள

எல்லா வல்லமைகளும் உங்கள் பக்கத்தில் இருப்பதால் திட மனதோடு முன்னேறிச் செல்லுங்கள்" என்று நற்செய்தியாளர் ஆலோசனை கூறினார்.

"மிகவும் நன்றி ஐயா, உங்கள் வார்த்தைகள் ஆறுதலையும், உற்சாகத்தையும் தருகின்றன. ஐயா, நீங்கள் இன்னுமுள்ள பாதையின் பயங்கரங்களை அறிந்திருப்பீர். அவற்றைப்பற்றியும், அவற்றை வெற்றிகொள்ளும் வழிமுறைகளையும் தயவுசெய்து கூறுங்கள்" என்று கேட்டுக்கொண்டான் கிறிஸ்தியான்.

"அன்பான சகோதரர்களே, நீங்கள் 'அநேக உபத்திரவங்களின் வழியாய் தேவனுடைய இராஜ்யத்தில் பிரவேசிக்க வேண்டும்' என்றும், 'கட்டுகளும் உபத்திரவங்களும் உங்களைச் சூழ்ந்திருக்கிறது' என்றும் வேத வசனங்கள் கூறுவதை நீங்கள் அறிந்திருப்பீர்கள் என்று நினைக்கிறேன். எனவே எந்தவித சோதனைகளும் எதிர்நோக்காமல் நீங்கள் உங்கள் பயணத்தை முடித்து விடலாம் என்று எண்ணிவிடாதீர்கள். இந்த வேத வார்த்தைகள் உண்மை என்பதை இதுவரை நீங்கள் அனுபவித்துள்ள துயரங்களே உங்களுக்கு உணர்த்தியிருக்கும். வெகுவிரைவிலேயே நீங்கள் இன்னும் அநேக துன்பங்களைச் சந்திக்க வேண்டியிருக்கும். சற்றுத் தொலைவில் ஒரு பட்டணம் இருக்கிறது. அங்கு சென்றால் விசுவாசத்தின் விரோதிகள் நாலாபுறமிருந்தும் உங்களைச் சூழ்ந்து ஒரேயடியாக உங்களை அழித்துவிட முயலுவார்கள். உங்களில் ஒருவராவது அல்லது இருவருமோ இரத்தச்சாட்சிகளாக மரிக்க நேரிடலாம் என்பதை மறந்துவிடாதீர்கள். என்றாலும் மரணபரியந்தம் உண்மையுள்ளவர்களாக இருங்கள். அப்போது மகிமையின் அரசர் ஜீவகிரீடத்தை உங்களுக்கு அளிப்பார். ஒருவேளை அங்கே மரணத்தை தழுவுகிறவனின் சாவு பயங்கரமானதாக இருந்தாலும், அவன் படும் துன்பங்கள் தாங்கக் கூடாதவைகளாக இருந்தாலும், அவன் உயிரோடிருக்கும் மற்றவனைவிடப் பாக்கியவான் என்றே கூறவேண்டும். ஏனென்றால் அவன் மற்றவனுக்கு முன்பே மோட்ச பாக்கியத்தைப் பெற்று அனுபவிப்பான். அது மட்டுமின்றி, பயணத்தின் முடிவில் சந்திக்க வேண்டிய சோதனைகளுக்கும், பயங்கரங்களுக்கும் அவன் தப்பிக்கொள்கிறான். நீங்கள் அந்த நகரத்தினுள் நுழையும்போதே நான் கூறும் இவைகள் எல்லாம் சம்பவிக்கலாம். அப்போது என் வார்த்தைகளை நினைவில் வைத்திருங்கள். மனத்திடத்தோடு சாத்தானின் சோதனைகளை எதிர்கொள்ளுங்கள். நன்மை செய்கிறவர்களாக உங்கள் ஆத்துமாக்களை. உண்மையுள்ள ஆண்டவருக்கு ஒப்புக்கொடுங்கள்" என்று மேலும் அறிவுரை கூறினார் நற்செய்தியாளர்.

20. மாயாபுரி பட்டணத்தில் பயணிகள்

பிறகு என் சொப்பனத்தில் கிறிஸ்தியானும் உண்மையானவனும் ஒரு பட்டணத்தைக் கடந்து போக வேண்டியதாக இருந்தது. அதற்கு **மாயாபுரி** என்று பெயர். அங்கே உலக இன்பங்களையும் இச்சைகளையும் குறிப்பிடும் மாயாபுரிச் சந்தை என்ற ஒரு சந்தையும் இருந்தது. அது மற்ற சந்தைகளைப்போல குறிப்பிட்ட நாள்களில் மட்டும் கூடுவதல்ல. ஆண்டு முழுவதும், நாள்தோறும் கூடி, நிமிடந்தோறும் வியாபாரம் நடத்தும் சந்தைதான் அது. அந்தச் சந்தை கூடும் நகரமும் ஒரு மாயையாய் இருப்பதாலும், அங்கு வாணிகம் செய்யப்படும் பொருள்களும் மாயையாய் இருப்பதாலும் 'எல்லாம் மாயையே' என்று ஞானி கூறியிருக்கிறபடி அந்தச் சந்தை மாயாபுரிச் சந்தை என்று அழைக்கப்படுகிறது என்பதில் வியப்பொன்றுமில்லை.

இந்தச் சந்தை இப்போது தோன்றியதல்ல; காலாகாலமாக நடந்து வருகிறது. ஏறத்தாழ ஐயாயிரம் ஆண்டுகளுக்கு முன்பு இவர்களைப்போன்ற சில பயணிகள் மோட்சத்தை நோக்கிச் சென்றார்கள். அவர்கள் இந்த வழியேதான் சென்றார்கள் என்பதை பெயல்செபூல் என்ற சாத்தானும், அப்பொல்லியோன், லேகியோன் என்ற பிசாசுகளும் மற்றும் அவர்களுடைய பூத கணங்களும் கண்டுபிடித்தார்கள். பயணிகளுக்குச் சோதனை உண்டாக்கும்படியாக அவர்கள் இந்த இடத்தில் சகலவித மாயைகளையும் விற்பனை செய்யும் சந்தை ஒன்றை நிரந்தரமாக நிறுவினார்கள். இங்கு வீடுகள், நிலம், வாணிபங்கள், கௌரவம், மகிமை, பதவிகள், பட்டங்கள், நாடுகள், அரசுகள், சகலவித இச்சைகள், இன்பங்கள் இவை வியாபாரம் செய்யப்படுகின்றன. விபசாரிகள், மனைவிகள், பிள்ளைகள், முதலாளிகள், பணியாளர்கள், உயிர்கள், இரத்தம், சரீரம், ஆத்துமாக்கள், பொன், வெள்ளி, நவரத்தினங்கள் இவையாவும் விற்கப்படுகின்றன.

இந்தச் சந்தையில் தந்திரஜாலம், சூதாட்டம், நடனம், கூத்து, வஞ்சகர் சதியாலோசனை மற்றும் சகலவித கேளிக்கைகளும் எப்போதும் நடந்து கொண்டிருக்கும்.

களவுகளையும், விபசாரங்களையும், கொலைகளையும் பொய்ச்சாட்சிகளையும் சர்வசாதாரணமாக இங்குக் காணலாம்.

பெரிய சந்தை மைதானத்தையும் தவிர சில்லறைச் சாமான்களை விற்கும் கடைத் தெருக்களும் நிறைந்திருந்தன. எந்தெந்தத் தெருக்களில் என்னென்ன பொருள்கள் விற்பனையாகின்றன என்பதை எளிதாக அறிந்துகொள்ளும் வண்ணம் பெயர் பலகைகள் எழுதித் தொங்கவிடப்

பட்டிருந்தன. பல்வேறு நாடுகளின் பொருள்களை வாங்க வசதியான வகையில் ஒவ்வொரு நாட்டுக்கும் ஒரு தெரு ஒதுக்கப் பட்டிருந்தது. பிரிட்டானிய தெருவையும், ஜெர்மானிய தெருவையும், ஜப்பானிய தெருவையும் இங்கே காணலாம். அந்தந்த நாட்டு மாயைகள் இங்கே விற்பனை செய்யப்பட்டன. ஒவ்வொரு சந்தையிலும் ஏதேனும் ஓரிடத்துப் பொருள்களுக்கு எதிர்ப்பார்ப்பு அதிகமாக இருப்பதுபோலவே, இங்கு ரோமாபுரிச் சரக்குக்கு அதிக வரவேற்பு இருந்தது. வெகு சிலர் மட்டுமே அந்தச் சரக்கை ஒதுக்கி வந்தனர்.

மோட்சப் பட்டணத்துக்குச் செல்லும் பாதை இந்தச் சிற்றின்பச் சந்தை வழியாகவே சென்றபடியால் எந்தவொரு பயணியும் இதன் மாயைகளைக் காணாமல் ஒதுங்கிச் செல்ல முடியாது. அப்படிச் செல்வானேயாகில் அவன் 'உலகத்தை விட்டு நீங்கிப் போக வேண்டியதாயிருக்கும்' *(1 கொரி. 5:10)*. சகலருக்கும் அதிபதியானவர்கூட இந்த உலகத்தைவிட்டுத் தனது நாட்டுக்குச் சென்றபோது இந்தச் சந்தையின் வழியாகவே நடந்து போனார். அவர் இந்தச் சந்தையைக் கடந்து போன அன்று இங்கு வியாபாரம் மும்முரமாக நடந்துகொண்டிருந்தது. அப்போது இந்தச் சந்தைக்கு அதிபதியான பெயல்செபூலோ நேரே அவரிடம் வந்து இந்த மாயைகளை வாங்கிக் கொள்ளும்படியும், அப்படிச் செய்தால் அவரையே அனைத்துக்கும் அரசராக ஆக்கிவிடுவதாகவும் ஆசை காட்டினான். தெருத் தெருவாக அவரை அழைத்துச் சென்று அவர் மயங்க மாட்டாரா என்று ஆவலுடன் எதிர்பார்த்தான். ஆனால் அவரோ அவனுடைய ஆசைக்கு இணங்கவில்லை! எந்தவொரு மாயையையும் திரும்பிக் கூடப் பார்க்கவில்லை! தான் கர்த்தருக்கே பணிவேன் என்று *(லூக்கா 4:5-8)* உறுதியாகக் கூறிவிட்டார்!

கிறிஸ்தியான், உண்மையானவன் இருவரும் சந்தையின் நடுவே நடந்து சென்றார்கள். அவர்களைக் கண்டவுடன் அங்கே கூடியிருந்தவர்களிடையே கூச்சலும், குழப்பமும் அதிகரித்தது. இதற்கான காரணங்கள் சில உண்டு!

பயணிகள் அணிந்திருந்த ஆடை அந்தச் சந்தையிலிருந்தவர்கள்அணிந்திருந்த ஆடையிலும் மாறுபட்டிருந்தது. எனவே யார் இங்கே விசித்திரமான அங்கியோடு வந்திருப்பது என்று அவர்கள் பயணிகளை உற்றுப் பார்த்தார்கள்! வேறு சிலரோ இவர்கள் புத்தி சுயாதீனமில்லாதவர்கள் என்ற முடிவுக்கு வந்தார்கள்! அவர்கள் வேடிக்கை பொருள்களானார்கள் *(1 கொரி. 4:9)* இவ்வாறு அவர்கள் அணிந்திருந்த அங்கியே குழப்பத்துக்கு காரணமாக இருந்தது!

இரண்டாவதாக அவர்கள் பேச்சும் சந்தையைச் சேர்ந்தவர்களுடைய பேச்சிலிருந்து வேறுபட்டிருந்தது. இவர்கள் பேசியதை அநேகரால் புரிந்துகொள்ள முடியாததால் குழப்பம் அதிகரித்தது! இவர்கள் கானான் மொழியைப் பேசியதே இதற்குக் காரணம்! இந்த மொழியை உலகத்தாராகிய சந்தை கூட்டத்தினர் ஒருவரும் அறியவில்லை *(1 கொரி. 2:7, 8).*

கிறிஸ்தியானும், உண்மையானவனும் மாயாபுரிச் சந்தையின் வியாபாரப் பொருள்கள் எதையும் திரும்பிக்கூடப் பார்க்க வில்லை! இது சந்தைக் கூட்டத்தினரின் கோபத்தைத் தூண்டிவிட்டது! சிலர் தங்கள் பொருள்களை பார்க்க வரும்படி கூவியழைத்தபோது பயணிகள் இருவரும் காதுகளைப் பொத்திக் கொண்டார்கள்! 'மாயையைப் பாராதபடி, நீர் என் கண்களை விலக்கி, உமது வழிகளில் என்னை உயிர்ப்பியும்' *(சங். 119:37)* என்று விண்ணை நோக்கி வேண்டிக்கொண்டார்கள்.

அவர்கள் நடந்து சென்றபோது, அவர்களைக் 'கேலி பண்ணும் நோக்கோடு அருகே வந்த ஒருவன் "ஐயா, தங்களுக்கு என்ன பொருள் வேண்டும்?" என்று கேட்டான். அவனைத் திரும்பிப் பார்த்த பயணிகள் "நாங்கள் சத்தியத்தையே வாங்குவோம்" *(நீதி. 23:23)* என்று மிடுக்காகப் பதில் கூறினார்கள்.

இதை கேட்ட சந்தைக் கூட்டத்தினர் தாங்கள் அவமதிக்கப் பட்டதாக எண்ணி, பயணிகளைச் சுற்றிலும் கூடி வந்தார்கள். சிலர் அவர்களைக் கேலிபண்ணினர்; சிலர் தகாத வார்த்தைகளால் அவர்களைத் திட்டினர்; வேறு சிலரோ கடும் கோபம்கொண்டு அவர்களை அடித்து உதைக்க வேண்டும் என்று கூக்குரலிட்டார்கள்! இதனால் சந்தைக் கூட்டத்தின ரிடையே குழப்பமும், அமளியும் ஏற்பட்டது! சந்தையின் வாணிபம் தடைப்பட்டுப் போயிற்று! இதைக் கேள்விப்பட்ட சந்தையின் அதிபதிக்கு கடும்கோபம் ஏற்பட்டது. அவன் வேகமாக அங்கே வந்து அவர்களைப் பிடித்துக் கட்டி விசாரணைக்கு அனுப்பிவைத்தான்.

விசாரணையை நடத்தியவர்கள் அந்த மாயா நகரைச் சேர்ந்தவர்கள்தாம். கைது செய்து கொண்டுவரப்பட்ட **கிறிஸ்தியான், உண்மையானவன்** ஆகிய இருவரிடமும் அவர்கள் எங்கிருந்து வருகிறார்கள் என்றும், எங்கே செல்கிறார்கள் என்றும், மாயாபுரியின் வழக்கத்துக்கு விரோதமான ஆடைகள் அணிந்து குழப்பத்தை விளைவித்தது ஏன் என்றும் விசாரித்தார்கள்.

"ஐயா, நாங்கள் பரலோகத்துக்குச் செல்லும் பயணிகள். எனவே இந்த உலகத்துக்கு அந்நியர்களாக இருக்கிறோம். உங்கள்

நகரத்தாரும், வணிகர்களும்தான் எங்களைக் கேலிபண்ணினார்கள்; வசைமொழி பொழிந்தார்கள். எங்கள் பயணத்தைத் தடுத்தார்கள். இவ்வளவையும் செய்யுமளவுக்கு நாங்கள் அவர்களுக்கு எந்தவிதத் தீங்கும் இழைக்கவில்லை. நாங்கள் பேசியதோ ஒரே ஒரு சொற்றொடர் மட்டுமே! என்ன வேண்டும் என்று ஒரு வியாபாரி கேட்டபோது 'நாங்கள் சத்தியத்தையே வாங்குவோம்' என்று மட்டுமே கூறினோம். வேறெதுவும் பேசவில்லை, ஐயா" என்று பதில் கூறினான் கிறிஸ்தியான்.

ஆனால் விசாரணை செய்தவர்கள் அவர்களுடைய பேச்சை நம்பவில்லை. ஒன்று இவர்கள் புத்தி சுயாதீனமுள்ளவர்களாக இருக்கவேண்டும், அல்லது அந்தச் சந்தையின் வழிமுறைகளை அழிக்க வந்த விரோதிகளாக இருக்கவேண்டும் என்ற முடிவுக்கு வந்தார்கள். அவர்கள் இருவருக்கும் சாட்டையால் அடிக்கப்படும் தண்டனையை விதித்தார்கள். சாட்டை அடியோடு அவர்களை விட்டுவிடவில்லை! அவர்கள் உடலெங்கும் சேற்றைப் பூசி, சந்தைக்கு நடுவே ஒரு கூண்டில் அடைத்து வைத்தார்கள்!

சந்தை மனிதர்கள் மறுபடியும் அவர்களைக் கேலி பண்ணவும், நிந்திக்கவும் துவங்கினார்கள். சந்தைக்கு அதிபதி அதைக் கண்டு சிரித்து மகிழ்ந்தான். ஆனால் **உண்மையானவனும், கிறிஸ்தியானுமோ** பதிலுக்கு பதில் பேசவில்லை, தீமைக்கு தீமை செய்யாமல் அவர்களுக்காக ஜெபித்தார்கள்; புன்முறுவலோடு அனைத்துக் கொடுமைகளையும் சகித்துவந்தார்கள். இதைக் கண்டு வேடிக்கை பார்த்தவர்களில் சிலர் பயணிகள்மீது அனுதாபம் கொண்டார்கள். அவர்களை நிந்திப்பவர்களைக் கடிந்துகொண்டு அவர்களைத் தடுத்தார்கள். ஆனால் அந்தக் கொடியவர்களோ "நீங்கள் அவர்களுக்குப் பரிந்துபேச வருகிறீர்களோ? உங்களையும் கூண்டில் அடைக்க வேண்டியதுதான்" என்று கூறி அனுதாபப்பட்டவர்கள்மீது பாய்ந்து அவர்களைத் தாக்கினார்கள். அவர்களோ "இந்தப் பயணிகள் அமைதியாக இருப்பதைப் பார்த்தீர்களா? அவர்கள் ஒருவருக்கும் தீமை செய்ய எண்ணவில்லை. அவர்களைக் கூண்டில் அடைத்துச் சித்திரவதை செய்வதைவிட, இந்தச் சந்தையிலுள்ள அநேக கள்ள வியாபாரிகளைத் தூக்கில் போடுவதுகூட நியாயம்தான்" என்று வாதாடினார்கள். இதனால் வாக்குவாதம் முற்றிக் கைகலப்பில் முடிந்தது! ஒருவரையொருவர் அடிக்கவும், உதைக்கவும், மிதிக்கவும் துவங்கினார்கள். இருதரப்பிலும் சேதம் அதிகமாகியது!

இதைக் கண்ட அதிபதி இவ்வளவு தகராறுகளுக்கும் பயணிகள் இருவருமே காரணம் என்று குற்றம்சாட்டி மீண்டும் அவர்களை விசாரணைக்கு இழுத்துச் சென்றான். விசாரணை

முடிவின்படி அவர்கள் மறுபடியும் சாட்டையினால் அடிக்கப்பட்டார்கள். இரும்புக் குண்டுகளை அவர்கள் கழுத்தில் கட்டி, விலங்குகளை மாட்டி, மற்றவர்களுக்கு எச்சரிக்கையாக இருக்கும்படி தெருத் தெருவாக இழுத்துச் சென்றார்கள்.

கிறிஸ்தியானும், உண்மையானவனும் எந்தவொரு எதிர்வாதமும் பேசாமல் அனைத்து அடிகளையும், நிந்தைகளையும் பொறுமையாகச் சகித்துக் கொண்டார்கள். இதனால் அந்தப் பட்டணத்து மக்களில் அநேகர் அவர்கள் மீது அனுதாபப்படவும் அவர்களுக்காகப் பரிந்துபேசவும் துவங்கினார்கள். என்றாலும் அவர்களுக்கு விரோதமான கொடியவர்களின் எண்ணிக்கையைவிட அனுதாபிகளின் எண்ணிக்கை குறைவாகவே இருந்தது. இப்படி சிலர் பயணிகள் பக்கம் திரும்புவது கொடியவர்களின் கோபத்தை இன்னு மதிகமாகத் தூண்டிவிட்டது. அவர்கள் பயணிகளைக் கொன்று விடுவதே மேல் என்ற முடிவுக்கு வந்தார்கள். மாயாபுரி மக்களிடையே பிரிவினையை உண்டாக்கும் இவர்களை அழிக்காவிட்டால், அந்த நகரத்தின் நோக்கமே சீர் குலைந்துவிடும் என்று அஞ்சினார்கள்.

பயணிகள் இருவரும் மீண்டும் கூண்டில் அடைக்கப் பட்டார்கள். இறுதித் தீர்ப்பு கூறப்படும்வரை அவர்களை வெளியே விடக்கூடாது என்று முடிவு செய்யப்பட்டது. அவர்களின் கால்கள் தொழுமரத்தில் பிணைக்கப்பட்டன.

"நண்பனே, நற்செய்தியாளர் கூறியது அப்படியே நடந்து வருகிறது பார்த்தாயா? நம் இருவரில் எவரேனும் இரத்தச் சாட்சியாக மரிக்க வேண்டியிருந்தால் அது நானாகவே இருக்க வேண்டுமென்று விரும்புகிறேன்" என்று ஆவலுடன் கூறினான் **கிறிஸ்தியான்.** தானும் அதே வாஞ்சை கொண்டிருப்பதாகத் தெரிவித்தான் **உண்மையானவன்.** என்றாலும் ஆண்டவருடைய சித்தத்திற்குத் தங்களை ஒப்புக்கொடுத்து அமைதியாகக் காத்திருந்தார்கள்.

இவர்கள் இருவருக்கும் மரண தண்டனை விதிக்க வேண்டும் என்ற நோக்கத்தோடு **நன்மையை வெறுப்பவன்** என்ற பெயரையுடைய நியாயாதிபதியிடம் விசாரணைக்காக அழைத்துச் சென்றார்கள். பயணிகள்மீது பல குற்றங்கள் சுமத்தப் பட்டன. இவர்கள் மாயாபுரிச் சந்தையின் வாணிகத்திற்கு விரோதமாக இருக்கிறார்கள். வாணிபப் பொருள்களைப்பற்றி அவதூறாகப் பேசுகிறார்கள்; நகரத்தில் ஏற்பட்ட குழப்பங்களுக்கும், அடிதடிகளுக்கும் இவர்களே காரணம்; இவர்கள் மக்களில் சிலரைத் தம்வயப்படுத்தி, அரசின்

கட்டளைக்கு விரோதமாகச் செயல்பட்டார்கள். இவையே இவர்கள்மீது சுமத்தப்பட்ட குற்றங்கள்!

இந்தக் குற்றங்களின் பட்டியல் வாசித்து முடிக்கப்பட்டவுடன் உண்மையானவன் அதற்குப் பதில் கூறத் துவங்கினான்:

"எல்லாவற்றுக்கும் மா உன்னதமானவருக்கு விரோதமாகச் செயல்படுபவர்களையே நான் எதிர்த்தேன். வேறொரு குற்றமும் செய்யவில்லை! இதோ இந்தப் பட்டியலில் வாசிக்கப்பட்ட குற்றங்கள் எதையும் நாங்கள் செய்யவில்லை என்பது மட்டுமன்றி எந்தவிதக் குழப்பத்திற்கும் நாங்கள் காரணமாக இருக்கவில்லை என்றும் எங்களால் உறுதியாகக் கூறமுடியும். நாங்கள் பதில் செயல்புரியாமல் அனைத்தையும் பொறுமையாகச் சகித்துக் கொண்டிருந்தோம். ஒருவேளை நகரத்தில் சிலர் எங்கள் குற்றமின்மையைப் புரிந்துகொண்டு, அனுதாபத்துடன் எங்கள்மீது பரிவுகாட்டியிருக்கலாம். அவர்கள் எங்கள் பக்கம் வந்தால் அது அவர்களுக்கு நன்மையே தவிரத் தீமையல்ல! நீங்கள் உங்கள் அதிபதியை மேலானவர் என்று புகழுவதை நாங்கள் வெறுக்கிறோம். பெயல்செபூல் என்ற அவன் எங்கள் ஆண்டவருக்கு விரோதியானவன். எனவே அவனையும் அவன் சகாக்களையும் வெறுத்து ஒதுக்குகிறோம்'' என்று கணீரென்ற குரலில் சாட்சிபகர்ந்தான் **உண்மையானவன்.**

இதைக் கேட்ட நியாயாதிபதி **நன்மையை வெறுப்பவன்** கடுங்கோபம் கொண்டான்.

"யாரங்கே? இந்த அற்பப் பதர்களுக்கு விரோதமாகச் சாட்சி கூறக்கூடியவர்கள் உண்டோவென்று நகரெங்கும் பறை அறிவித்துத் தேடுங்கள்'' என்று உக்கிரத்துடன் கட்டளை யிட்டான்.

அவனுடைய கட்டளை நகரெங்கும் அறிவிக்கப்பட்டது.

அப்போது **பொறாமை, சடங்காச்சாரன், பழிகாரன்** என்ற மூவரும் சாட்சிகூற முன்வந்தார்கள். ஒவ்வொருவராகத் தனது சாட்சியைக் கூறும்படி நன்மையை வெறுப்பவன் கட்டளையிட்டான்.

"நியாயாதிபதி அவர்களே, நான் இந்த **உண்மையானவன்** என்பவனை நீண்டநாள்களாக அறிவேன். இவனுக்குப் பெயர்தான் உண்மையே, ஆனால் இவன் எப்போதுமே உண்மைக்கு விரோதமாகத்தான் செயல்படுவான். இவனைப் போன்ற பொய்யன் நமது நாட்டில் வேறு எவருமே இருக்க முடியாது! இவன் அரசனையும் மதிப்பதில்லை, அரச

கட்டளைகளுக்கும் கீழ்ப்படிவதில்லை! நமது பழக்க வழக்கங்கள் அனைத்தையும் இவன் பரியாசம் செய்து, அவமதிக்கிறான். நமது அரசருக்கு விரோதமான போதனைகளே உண்மை என்று கூறி, அவற்றை மற்றவர்களுக்கும் அறிவிக்க முயலுகிறான். அதுமட்டுமன்றி ஒருநாள் இவன் சந்தைக்கருகே வந்து நின்று, கிறிஸ்தவ போதனைகளும், மாயாபுரிச் சந்தையின் பழக்க வழக்கங்களும் ஒன்றுக்கொன்று நேர் எதிர்மாறாக இருக்கின்றன என்றும், அதனால் இந்தப் பழக்கங்களை விட்டொழிக்க வேண்டும் என்றும் கூறியதை நான் என் காதால் கேட்டேன். நியாயாதிபதி அவர்களே! இப்படி இவன் கூறிவருவதால் இவன் நமது அரசின் மேன்மையான சட்டங்களை குற்றம் என்றும், அவற்றைப் பின்பற்றும் நாமனைவரும் குற்றவாளிகள் என்றும் தேச விரோதமாகப் பேசுவது உறுதியாகிறதல்லவா?'' என்று பொறாமை சொல்லும்போது நன்மையை வெறுப்பவன் குறுக்கிட்டான்.

''நீ கூறும் குற்றச்சாட்டுகள் இவ்வளவுதானா? என்று கேட்டான்.

''இவனுடைய குற்றங்களை எடுத்துக் கூறுவதென்றால் இன்னும் எவ்வளவோ கூறலாம், நியாயாதிபதி அவர்களே! ஆனாலும் நான் தங்களின் நேரத்தை அதிகமாக எடுத்துக் கொள்ள விரும்பவில்லை! மற்ற சாட்சிகளையும் விசாரித்த பின்னர், இவனை மரண தண்டனைக்குள்ளாக்கும் வகையில் இன்னும் அநேக குற்றச்சாட்டுகளைக் கூறுவேன்'' என்று சொன்ன **பொறாமை** சற்று ஒதுங்கி நின்றுகொண்டான்.

அதன் பின்னர் **சடங்காச்சாரன்** முன்னே வரும்படி அழைக்கப்பட்டான்.

"இதோ கூண்டினுள் நிற்கும் இந்தக் கைதியை நன்றாகப் பார்த்துக்கொள். இவனுக்கு விரோதமான குற்றச்சாட்டுகளை நீ இப்போது கூறலாம்'' என்று ஆணையிட்டான் **நன்மையை வெறுப்பவன்.**

சத்தியப் பிரமாணம் செய்தபிறகு சடங்காச்சாரன் பேசத் துவங்கினான்.

"நியாயாதிபதி அவர்களே, இவனோடு எனக்கு அதிகமாகப் பழக்கமில்லை! இனிமேலும் அவனோடு பழகுவதாகவும் எண்ணமில்லை! சில நாள்களுக்கு முன்பாக நான் இவனோடு பேச நேர்ந்தது. அப்போதுதான் இவன் தொற்றுநோயைப் போன்று நம்மை அழிக்கக் கூடியவன் என்பதை நான் அறிந்துகொண்டேன். இவன் என்ன சொன்னான் தெரியுமா?

நீங்கள் பின்பற்றும் வழி என்றுமே உங்களுக்கு மீட்பைப் பெற்றுத் தரப் போவதும் இல்லை. நீங்கள் கடவுளுடைய கிருபையைப் பெறவும் முடியாது என்று இவன் வாதிட்டான். ஐயா, இவன் நமது முடிவு எப்படியாகும் என்று கூறுகிறான் பார்த்தீர்களா? நாம் செய்வதெல்லாம் பயனற்ற வழிபாடு என்றும், நமது பாவங்களுடனேயே நாம் வாழுகிறோம் என்றும், இறுதியாக நாம் அனைவரும் அழிந்து போவோம் என்றும் இவன் கூறுவதைப்போலவே இவன் வார்த்தைகள் இருக்கின்றன என்று மட்டும் கூறி சாட்சியை முடித்துக்கொள்கிறேன்'' என்றான் அவன்.

அடுத்ததாக **பழிகாரன்** சாட்சிகூற முன்னால் வந்தான். அவனும் சத்தியப் பிரமாணம் செய்த பிறகு உண்மைக்கு விரோதமாகச் சாட்சிகூறத் தொடங்கினான்.

"நியாயாதிபதி அவர்களே! கூடியிருக்கும் பிரபுக்களே! இதோ இந்தக் குற்றவாளிக் கூண்டில் நிற்கும் இவனை நான் பல காலமாக அறிந்திருக்கிறேன். நாம் வாய்விட்டுப் பேசத் தயங்கும் காரியங்களை இவன் துணிவோடு பேசியதையும் கேட்டிருக்கிறேன். இவன் வேறு எதையாவது பேசியிருந்தாலும் கூட சகித்துக்கொண்டிருக்கலாம். ஆனால் இவனோ நமது மகிமைபொருந்திய அதிபதியாகிய பெயல்செபூல் அவர்களையே பழித்துப் பேசுகிறான். அவரோடு விட்டுவிட்டானா? இல்லை! பழைய மனித நாயகர், மாம்ச இச்சை துரை, காம அரசர், லோப பிரபு இவர்களையும் மற்றும் பிற பிரபுக்களையும் பற்றிப் பல அவதூறுகளைப் பேசியிருக்கிறான். அதுமட்டுமா? இந்த நகரத்திலுள்ள அனைவரும் தன்னைப்போல மனந்திரும்பினால் இந்தப் பிரபுக்களை ஓடஓட விரட்டிவிடலாம் என்றுகூட நிந்தனையாகப் பேசியிருக்கிறான். மாட்சிமை தங்கிய உம்மையும் அவன் விட்டுவிடவில்லை! நியாயாதிபதியாக உம்மையே அவன் விசுவாசமற்ற தீயவன் என்று பழித்துப் பேசியிருக்கிறான். இவ்வாறு இந்த மாயாபுரியின் கனவான்கள் அனைவரையும் கண்டபடி பேசி அவமானப்படுத்தியிருக்கிறான்'' என்று கூறினான் **பழிகாரன்.**

சாட்சிகளின் உரைகள் முடிவடைந்தவுடன் நியாயாதிபதி உண்மையை நோக்கித் திரும்பினான். அவன் கண்கள் சிவந்தன.

''அடேய், அற்பப்பதரே! வேதப்புரட்டனே! தேசத் துரோகியே! இதோ இந்த உத்தமர்கள் உனக்கு விரோதமாகக் கூறிய சாட்சிகளைக் கேட்டாயா?" என்று கத்தினான்.

"நியாயாதிபதியே! அவர்கள் குற்றச்சாட்டுகளை நான் ஏற்றுக் கொள்ளப் போவதில்லை! நான் குற்றமற்றவன் என்பதை

நிரூபிக்கும்படி சில வார்த்தைகளைப் பேச எனக்கு அனுமதியுண்டா?" என்று கேட்டான் உண்மையானவன்.

"நீ பிழைத்திருப்பதற்குத் தகுதியுடையவனே கிடையாது! இங்கேயே உன்னை வெட்டிப் போட்டாலும் அது நியாயம்தான். என்றாலும் கிருபையாய் நீ பதில்வாதம் புரிய இடம் கொடுக்கிறோம். உன் கடைசி வார்த்தைகளையும்தான் கேட்போமே! என்று அலட்சியமாக அனுமதி கொடுத்தான் **நன்மையை வெறுப்பவன்.**

பொறாமை எனக்கு விரோதமாகச்சாட்சி கூறினானே! அதற்கு முதலில் நான் பதில் கூறுகிறேன். ஆண்டவருடைய வசனத்துக்கு விரோதமான எந்தவொரு கட்டளையோ அல்லது சட்டமோ அல்லது பழக்கவழக்கமோ கிறிஸ்தவ போதனைகளுக்கு நேர் விரோதமானது என்றுதான் நான் கூறினேன். வேறெதையும் நான் கூறவில்லை என்று அறிக்கையிடுகிறேன். இவ்வாறு நான் கூறியது தவறா? தவறென்றால் என்ன தவறு என்பதை விளக்கிக் கூறுமாறு வேண்டுகிறேன். உங்கள் விளக்கம் சரியென்றால் அதை நான் ஒப்புக்கொள்கிறேன்" என்றான் **உண்மையானவன்.**

அவன் மேலும் தொடர்ந்து பேசினான்: "**சடங்காச்சாரன்** கூறிய குற்றச்சாட்டுக்கு இதோ பதில்சொல்கிறேன். கடவுளை வணங்குவதற்கு அவர்மீது விசுவாசம் வைத்திருப்பது அவசியம். ஆனால் ஆண்டவருடைய சித்தத்தைப்பற்றிய வெளிப்படுத்தல் இல்லாவிட்டால் விசுவாசம் உண்டாக வழியேயில்லை. எனவே கடவுளை வழிபடுவதில் தேவ சித்தத்திற்கு விரோதமான பழக்கங்கள் திணிக்கப்பட்டிருக்குமானால் அவை மானிட விசுவாசத்தினாலேயே நுழைக்கப்பட்டிருக்கின்றன. இத்தகைய விசுவாசம் கடவுள்மீதான விசுவாசம் அல்ல. இதன்மூலம் நித்திய ஜீவனைப் பெற முடியாது என்றுதான் நான் கூறினேன். வேறு எந்தக் காரியத்தையும்பற்றி நான் எதுவும் பேசவில்லை என்பதுதான் உண்மை'' என்று உறுதியாகக் கூறினான் உண்மையானவன்.

பழிகாரன் கூறிய சாட்சியைப்பற்றிக் குறிப்பிடும்போது, ''**பழிகாரன்** கூறியதைப் போன்ற பழிச் சொற்களையும், அவதூறுகளையும் நான் பேசியதே இல்லை! ஆனால் ஒன்று மட்டும் நான் சொன்னது உண்மை. இந்த மாயாபுரி அதிபதியும், அவன் உதவியாளர்களான மாம்ச இச்சை பிரபு போன்றவர்களும் இந்த நாட்டுக்கும், நகரத்துக்கும் ஏற்றவர்கள் அல்லர் என்றும், அவர்கள் எரிநரகத்தில் இருக்கவே தகுதியானவர்கள் என்றும்தான் கூறினேன். கடவுள்தாமே தம் கிருபையினால்

என்னைக் காப்பாராக!" என்று கூறி தன் எதிர்வாதத்தை முடித்தான் **உண்மையானவன்.**

அப்போது நியாயாதிபதி தனது ஆசனத்தின் அருகே அமர்ந்து, நடவடிக்கைகளைக் கவனித்துக் கொண்டிருந்த அந்த நகரத்து கனவான்களைப் பார்த்து, "ஐயா, ஜுரிமார்களாகிய கனவான்களே! இதோ இந்த நகரத்தில் அமளியை உண்டாக்கிய இவன்மீது சுமத்தப்பட்ட குற்றச்சாட்டுகளையும், அதற்கு ஆதாரமான சாட்சிகளையும், இவனுடைய எதிர்வாதத்தையும் கேட்டீர்கள். அவனுக்கு மரண தண்டனை அளிப்பதா அல்லது விடுதலை செய்வதா என்பதைப் பற்றிய உங்கள் தீர்மானத்தைத் தெரிவிக்கும்படி வேண்டிக்கொள்கிறேன். அதற்கு முன்பு நமது பரம்பரையான சட்டங்களையும் தீர்ப்புகளையும்பற்றி உங்களுக்குச் சிறிது நினைவூட்ட விரும்புகிறேன்" என்றான்.

"பெரிய பார்வோன் என்பவன் நமது அதிபதியின் உத்தம ஊழியன். அவனுடைய அரசு பரிபாலன காலத்தில் எதிர் இனத்தார் அதிகமாகப் பெருகி வல்லமை பெற்று விடக்கூடாது என்ற நோக்கத்தில் அவர்களிடையே பிறக்கும் ஆண் குழந்தைகளையெல்லாம் ஆற்றில் போட்டுவிட வேண்டும் (யாத். 1:22) என்று அந்தப் பார்வோன் சட்டம் கொண்டு வந்தான். நேபுகாத்நேச்சார் நமது அதிபதியின் மற்றொரு ஊழியன். அவனுடைய அரசாட்சியின் நாள்களில் அவன் ஒரு பெரிய பொற்சிலையை உருவாக்கி அதை வணங்காதவன் எவனோ அவன் எரிகிற அக்கினிச்சூளையில் போடப்பட வேண்டும். என்று கட்டளை பிறப்பித்தான் (தானி. 3:6). தரியு என்ற பேரரசன் ஆண்ட காலத்தில், அவனைத் தவிர வேறு கடவுளை நோக்கி ஜெபிக்கும் மனிதன் சிங்கக் கெபியிலே போடப்பட வேண்டும் (தானி. 6:7) என்ற சட்டம் இயற்றப்பட்டிருந்தது. இவை அனைத்துமே நமது அதிபதிக்கு விருப்பமான சட்டங்கள். இதோ, இந்தக் கைதியைப் பாருங்கள். இவன் வெறும் எண்ணங்களால் மட்டும் இந்தக் கட்டளைகளை மீறவில்லை. தன் வாயின் வார்த்தைகளினாலும், செய்கைகளினாலும் இந்தச் சட்டங்களை மீறியிருக்கிறான். இந்தப் பாதகத்தை நாம் சகிக்கத்தான் வேண்டுமோ?

"பார்வோனின் கட்டளை எந்தவிதக் குற்றமும் நடைபெறாத காலத்தில், இவ்வாறு நடப்பதைத் தவிர்க்கும் நோக்கத்தோடு. வெறும் ஐயத்தினால் மாத்திரமே பிறப்பிக்கப்பட்டது. மற்ற இரண்டு சட்டங்களோ குற்றத்தின் தண்டனையைத் தெளிவாக எடுத்துக் கூறுகின்றன. அவற்றின்படி பார்த்தால் இந்த அற்பப் பதர் நமது கொள்கைகளுக்கு விரோதி என்பதை நாம் கண்டு

கொள்ளலாம். இவன் நமது அதிபதியின் துரோகியாகையால் மரணதண்டனைக்குப் பாத்திரனாக இருக்கிறான். எனவே பிரபுக்களே! கனவான்களே! நீங்கள் நன்றாக ஆராய்ந்து உங்கள் தீர்ப்பைக் கூறும்படி கேட்டுக்கொள்கிறேன்'' என்றான் **நன்மையை வெறுப்பவன்.**

நியாயாதிபதி இவ்வாறு கூறியவுடன், சுற்றிலுமிருந்த ஜுரிமார்களாகிய கபோதன், நலமற்றவன், குரோதன், காமுகன், நெறியற்றவன், குறும்பன், பெருமை, விரோதன், பொய்மை, நிஷ்டூரகன், பகைஞன், தீராவிரோதன் என்ற பன்னிருவரும் எழுந்து தனி ஆலோசனைக்காக வெளியே சென்றார்கள். ஒவ்வொருவரும் தங்கள் தங்கள் கருத்துக்களை வெளியிட்டார்கள். தலைமை ஜுரியான கபோதன், "இவன் அரச துரோகி, இவன் அழிக்கப்பட வேண்டும்'' என்றான். நலமற்றவன் "இவனைப் பூமியிலிருந்து அகற்ற வேண்டும்'' என்று ஆலோசனை கூறினான். "அவன் அழிவதே நமக்கு நல்லது'' என்றான் குரோதன். "அவனைப் பார்க்கவே வெறுப்பாக இருக்கிறது'' என்றான் காமுகன். "இவனை இப்படியே விட்டு விட்டால் நம்முடைய வழிகள் அனைத்திலும் குற்றம் கண்டுபிடித்து விடுவான்'' என்றான் நெறியற்றவன். "இவனைத் தூக்கில் போடுங்கள்; தூக்கில் போடுங்கள்'' என்றான் குறும்பன். "ஒரு பயனுமற்றவன் இவன்'' என்று சொன்னான் பெருமை. "இவனைக் கண்டாலே எனக்கு கோபம் பொங்கி வருகிறது'' என்று கத்தினான் விரோதன். "இவன் சரியான திருடன்'' என்று முடிவு கூறினான் பொய்மை. "இவனைத் தூக்கில் போட்டுக் கொன்றாலும் என் மனம் ஆறாது'' என்றான் நிஷ்டூரகன். "நம் நடுவில் இவன் இருக்கக் கூடாது'' என்றான் பகைஞன். "இந்த உலகம் முழுவதையும் எனக்குத் தருவதாக இருந்தாலும் அவனை விடுதலைசெய்ய நான் ஒப்புக் கொள்ளமாட்டேன். இவனுக்கு மரண தண்டனைதான் அளிக்கப்படவேண்டும்'' என்று உறுதியாகக் கூறினான் தீராவிரோதன்.

ஜுரிகளின் முடிவுப்படியே உண்மையானவனுக்கு மரண தண்டனை விதிக்கப்பட்டது! கூடியிருந்தவர்களில் அநேகர் மகிழ்ச்சியால் ஆரவாரித்தார்கள்.

உண்மையானவனை வெளியே இழுத்து வந்த அவர்கள் அவனைச் சாட்டையினால் அடித்தார்கள்; தலையில் குட்டினார்கள்; கத்தியால் குத்தினார்கள்; அவன்மீது கல்லெறிந்தார்கள்; ஈட்டியால் உடலைத் துளைத்தார்கள். இவ்வாறு சித்திரவதை செய்தபின்பு, அவனை ஒரு கம்பத்தில் கட்டி, சுற்றிலும் நெருப்பு மூட்டி, உயிரோடு அவனை

கொளுத்தினார்கள். இவ்வாறு உண்மையானவன் இரத்தச் சாட்சியாக மரித்தான்.

உண்மையானவனைச் சித்திரவதை செய்த கூட்டத்தினரின் பின்னே இரண்டு குதிரைகள் பூட்டப்பட்ட இரதம் ஒன்று நிற்பதை நான் என் கனவில் கண்டேன். அவனுக்காகப் பரலோக அதிபதி அனுப்பியிருந்த இரதம் அது! உண்மையானவன் அதன்மீது ஏறி, மேகங்களினூடே பரலோக வாசலை நோக்கிச் செல்வதை நான் பார்த்தேன். எங்கும் எக்காள சத்தம் தொனித்தது!

கிறிஸ்தியானோ இன்னும் சிறிது காலம் சிறையில் அடைக்கப்பட்டிருந்தான். கொடியவர்களின் திட்டங்களையும், செய்கைகளையும் மேற்கொள்ளக்கூடிய வல்லமையுடையவர் அல்லவா நமது பரலோக அதிபதி? கிறிஸ்தியான் அதிசயிக்கத்தக்க வகையில் காவலிலிருந்து தப்பும்படி செய்தார் அவர். அவன் அவரைத் துதித்தபடியே தன் பயணத்தைத் தொடர்ந்தான்.

வெற்றி கொண்டு மோட்ச பாக்கியத்தைப்பெற்று தற்போது தூதர்களோடு சேர்ந்து ஆதிகீதம் முழங்கிக் கொண்டிருக்கும் உண்மையானவனைப் போற்றிப் புகழ்ந்தபடியே நடந்து சென்றான் கிறிஸ்தியான்.

கிறிஸ்தியான் **நன்னம்பிக்கை** என்ற நண்பனோடு நடந்துசெல்வதை நான் என் கனவில் கண்டேன். இவன் மாயாபுரியைச் சேர்ந்தவன். உண்மையானவனும் கிறிஸ்தியானும் மாயாபுரிச் சந்தையில் நிந்திக்கப்பட்டபோது அவர்களின் பொறுமையையும் சகிப்புத்தன்மையையும் கண்டு இவர்களின்மீது அனுதாபப்பட்டவர்களில் ஒருவன் இவன். உண்மையானவன் இரத்தச் சாட்சியாக மரித்ததைப் பார்த்து மனம் திரும்பினான். கிறிஸ்தியானுடன் தானும் பயணம் செல்ல முடிவு செய்து விட்டான். உண்மையானவன் கிறிஸ்துவுக்காக மரித்தபின்பு தனியே புறப்பட்ட கிறிஸ்தியானுக்கு மற்றுமொரு தோழன் கிடைத்துவிட்டான்!

தன்னைப்போலவே இன்னும் அநேகர் மாயாபுரியிலிருந்து பயணம் புறப்பட வாஞ்சையாக இருக்கிறார்கள் என்று தெரிவித்தான் நன்னம்பிக்கை.

21. உலகபக்தனைச் சந்தித்தல்

கிறிஸ்தியானும், நன்னம்பிக்கையும் பேசியபடியே மாயாபுரியின் கோட்டையைக் கடந்து வெளியேறும்போது

தங்களுக்கு முன்பாக நடந்து சென்று கொண்டிருந்த ஒருவனைச் சந்தித்தார்கள். அவனுக்கு **உலகபக்தன்** என்று பெயர்.

நன்னம்பிக்கையும், கிறிஸ்தியானும் அவனிடம் "ஐயா, நீங்கள் எந்த ஊர்? இந்த வழியாக எங்கே போய்க் கொண்டிருக்கிறீர்கள்?" என்று கேட்டார்கள்.

உடனே அவன், "ஐயா, நான் நயவசனப்பட்டணத்திலிருந்து புறப்பட்டு, மோட்சப் பட்டணத்திற்குப் போய்க் கொண்டிருக்கிறேன்" என்றான்.

"நயவசனப்பட்டணமா? அங்கே எல்லாரும் இதமாக பேசி ஏமாற்றுபவர்கள் (நீதி. 26:25) என்றல்லவா நான் கேள்விப் பட்டிருக்கிறேன்" என்றான் கிறிஸ்தியான்.

"ஏனப்பா அப்படிச் சொல்லுகிறாய்? அங்கே நல்லவர்கள் இராவிட்டால் வேறு எங்கே இருப்பார்கள்?" என்று சமாளிக்கப் பார்த்தான் உலகபக்தன்.

அவன் இதுவரை தன்னுடைய பெயரைக் கூறாதபடியால், "ஐயா உங்கள் பெயர் என்ன?" என்று கிறிஸ்தியான் அவனிடம் கேட்டான்.

"உங்களைப்பற்றி எனக்குத் தெரியாது என்னைப் பற்றியும் உங்களுக்குத் தெரியாது. நீங்களும் இந்த வழியில் போகிற வர்களானால் நானும் மகிழ்ச்சியோடு உங்களுடன் வருகிறேன். இல்லாவிட்டால் நான் தனியாகத்தானே போகவேண்டும்!" என்று அவன் கூறினாலும் தன் பெயரைச் சொல்லவில்லை.

கிறிஸ்தியான் மறுபடியும் அவனோடு பேச்சுக் கொடுத்தான். "நானும்கூட உங்கள் ஊரைப்பற்றிக் கேள்விப்பட்டிருக்கிறேன். அது வசதியான செல்வந்தர் நிறைந்த பட்டணம் போலிருக்கிறது" என்றான் அவன்.

"அதிலென்ன ஐயம்? எவ்வளவு வசதியான பட்டணம் அது! அங்குள்ள செல்வந்தர்கள் பலர் என்னுடைய நண்பர்கள்தான்!" என்றான் உலகபக்தன்.

"நான் அதிகமாகக் கேள்வி கேட்பதாக நினைத்துக் கொள்ளாதீர்கள் அங்கே உங்களுக்கு உறவினர்கள் உண்டா?" என்று கேட்டான் கிறிஸ்தியான்.

"அநேகமாக எல்லாரும் என்னுடைய உறவினர்கள்தான். ஆனாலும் நெருங்கிய உறவினர்களை மட்டும் கூறுகிறேன். **கட்சிமாறி நாயகர்** என்பவர் வேளைக்கேற்றபடி பேசும் திறமைசாலி. நயவசன பட்டணம் என்று அந்த ஊருக்குப்

பெயர்வரக் காரணமான **நயவசன நாயகர்** தான் அங்கே முதலில் குடியேறியவர். இவர்கள் மட்டுமின்றி **இன்சொல்லன், இரட்டைமுகன்** இவர்களும்கூட என் உறவினர்கள்தான். எங்கள் ஊர்ப் பூசாரி **இரட்டைநாக்கு** என்பவரும் என் இனத்தவர்தான். அவர் எனக்குத் தாய்மாமன் முறை. உண்மையைச் சொல்லட்டுமா? என் பாட்டனார் ஒரு படகோட்டிதான். அவர் ஒரு திசையை நோக்கியபடி, மறு திசையில் படகை ஓட்டுவதில் வல்லவர். நானும் அவர் முறையைப் பின்பற்றி நிறையப் பணம் சம்பாதித்துச் சேர்த்திருக்கிறேன்" என்றான் உலகபக்தன்.

"உமக்குத் திருமணம் ஆகிவிட்டதா?" என்று கேட்டான் கிறிஸ்தியான்.

"ஓ! ஆகிவிட்டதே! என் மனைவி ஒரு சிறந்த பத்தினி. **போலிமகள்** என்ற பெண்தான் அவளது தாய். இவளும் உயர்ந்த குடும்பத்தைச் சேர்ந்தவள்தான். ஏழையானாலும் சரி; பணக்காரனாக இருந்தாலும் சரி அவர்களுக்கு ஏற்றபடி நடந்து கொள்வதில் திறமைசாலி. ஆனால் எங்களுக்கும், கட்டளைக்குக் கீழ்ப்படிந்து நடக்கும் சமயப்பற்று உள்ளவர்களுக்கும் அவளோடு ஒத்துப் போகாது ஆனாலும் என்ன? இரண்டே இரண்டு அற்பக் காரியங்களினால்தான் எங்களுக்குள் ஒத்துப் போகவில்லை. ஏனென்றால் நாங்கள் எதிர்காற்றிலும், எதிர்த்து வரும் அலையின் ஊடேயும் செல்வதில்லை. ஆனால் மார்க்க வெறி அலங்கரித்துக்கொண்டு வீதியில் செல்லும்போது நாங்கள் இன்னும் அதிக வைராக்கியம் கொள்கிறோம். அப்போது சூரிய ஒளி பிரகாசிப்பதையும், மக்கள் ஆரவாரித்துப் புகழுவதையும் காணும்போது மிகவும் மகிழ்ச்சியடைகிறோம்" என்றான் உலகபக்தன்.

அவன் இன்னமும் தன் பெயரைக் கூறாவிட்டாலும் அவனைக் குறித்து கிறிஸ்தியானுக்கு ஐயம் ஏற்பட்டது.

தனியாக வந்துகொண்டிருந்த தன் நண்பன் நன்னம்பிக்கையிடம் திரும்பிய கிறிஸ்தியான், "இவன் பேசுவதையும், நடந்துகொள்வதையும் பார்க்கும்போது இவன்தான் உலகபக்தன் என்பவனோ என்று ஐயம் ஏற்படுகிறது" என்றான். தீயவர்கள் அனைவரிலும் மோசமானவன்தான் அந்த உலகபக்தன் என்று அவனுக்குத் தெரிந்திருந்தது. இதையும் அவன் தன் நண்பனிடம் கூறினான்.

"அப்படியானால் நேரடியாக அவனிடம் அவன் பெயரைக் கேட்டுவிட வேண்டியதுதானே? பெயரைச் சொல்லவா அவன் வெட்கப்படுவான்?" என்றான் நன்னம்பிக்கை.

கிறிஸ்தியான் மறுபடியும் உலகபக்தனின் அருகே சேர்ந்து, அவனோடுகூட நடக்கத் துவங்கினான்.

“ஐயா, உங்களுடைய பேச்சைக் கேட்டால் உலகிலேயே பெரிய ஞானி நீர்தான் என்று தோன்றுகிறது. ஒன்று நான் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். உமது பெயரை நான் ஏற்கெனவே கேள்விப்பட்டிருக்கிறேன்” என்று சுற்றி வளைத்த கிறிஸ்தியான், “உமது பெயர் உலகபக்தன் என்பதுதானே?” என்று கேட்டான்.

‘‘அடடா, உண்மையில் அது என்னுடைய பெயர் இல்லையே! என்மீது பொறாமை கொள்பவர்கள் இரண்டகத்தைச் சுட்டும் இந்தப் பெயரால் என்னை அழைக்கிறார்கள். நல்லவர்கள்கூட சிலர் தங்களை இழிவாகப் பெயர் சொல்லிக் கூப்பிடுவதை ஏற்றுக்கொள்வதுபோல நானும் இதை ஏற்றுக் கொண்டிருக்கிறேன். அவ்வளவுதான்” என்று கூறிச் சமாளிக்கப் பார்த்தான்.

“ஏன் இப்படி அவர்கள் கூப்பிடும்படி நீர் நடந்து கொள்வது இல்லையா?’’ என்று விடாமல் கேள்வியெழுப்பினான் கிறிஸ்தியான்.

“அச்சச்சோ, நான் அப்படி நடந்துகொள்ளவே இல்லை!” என்று மறுத்த உலகபக்தன் மேலும் தொடர்ந்து, “அவர்களாகவே இப்படி அழைக்கத் துவங்கியது ஏன் என்று நான் சொல்லட்டுமா?” சில வேளைகளில் சமய சந்தர்ப்பத்திற்கு ஏற்ற வகையில் நான் என் அறிவைப் பயன்படுத்தி பணம் சம்பாதிப்பதுண்டு. என் வாழ்க்கையும் வசதியாகியது. இதைப் பார்த்து பொறாமைப்பட்டவர்கள்தான் எனக்கு இந்தப் பெயரைச் சூட்டியிருக்கிறார்கள், எதற்காக அவர்கள் எனக்கு இந்தப் பெயரைக் கூறுகிறார்கள் என்பதை எண்ணும்போது, அது என் ஆசீர்வாதம் என்றுதான் நினைக்கிறேன். மற்றபடி பொறாமைக்காரர்கள் என்னை இழிவு படுத்திவிடமுடியாது” என்று பெருமையுடன் கூறினான்.

‘‘நான் கேள்விப்பட்டது நீர்தான் என்பது இப்போது உறுதி யாகிவிட்டது. நீர் இந்தப் பெயரை ஏற்றுக்கொண்டாலும் சரி, ஏற்றுக்கொள்ளாவிட்டாலும் சரி, இந்தப் பெயர் உமது குணத்துக்குப் பொருத்தமாகத்தான் இருக்கிறது!’’ என்றான் கிறிஸ்தியான்.

“நீ அப்படி நினைத்தால் அதற்கு நான் என்ன செய்ய முடியும்? ஆனால் ஒன்று மட்டும் உண்மை. என்னை உங்களுடன் வர அனுமதித்தால் போகப்போக நான் ஒரு நல்ல நண்பன் என்பதை உணர்ந்து கொள்வீர்கள்’’ என்றான் உலகபக்தன்.

"அதெப்படி உம்மால் முடியும்? நாம் எதிர்காற்றில் செல்ல வேண்டியிருக்குமே! எதிர்நீச்சல் அடிக்க வேண்டியிருக்குமே! ஆனால் இவை உமது கொள்கைக்குப் புறம்பானவை அல்லவா? அது மட்டுமா? சமயப் பற்று வீதியில் பெருமையாக உலவிவரும் போது மட்டுமல்லாமல், அது வேதனைகளை அனுபவிக்கும் போதுகூட, கந்தையில் வரும்போதுகூட அதைப் பின்பற்ற வேண்டியிருக்குமே! புகழை மட்டுமா? நிந்தனைகளையும் சகித்துக்கொள்ள வேண்டியிருக்குமே! உம்மால் அது முடியுமா?" என்று கேட்டான் கிறிஸ்தியான்.

"ஏன் என்னை வற்புறுத்தி, மாற்ற விரும்புகிறாய்? என் விருப்பப்படி விட்டுவிடு. நான் உன்கூடவே வருகிறேன்" என்று தந்திரமாகக் கூறினான் உலகபக்தன்.

"அது முடியாது! நான் கூறியதுபோல நீர் உமது குணத்தை மாற்றிக்கொள்ளாவிட்டால் எங்களோடு நடந்துவர முடியாது" என்று உறுதியாகக் கூறிவிட்டான் கிறிஸ்தியான்.

"நீ என்ன சொன்னாலும் சரி, என் கொள்கையில் தவறு இருப்பதாக நீ கூறுவதை என்னால் ஒப்புக்கொள்ள முடியாது. அதனால் எவ்வளவு லாபம் கிடைக்கிறது! பிறகு ஏன் நான் அதை விடவேண்டும்? நான் உங்களுடன் வரக்கூடாது என்று சொல்வீர்களானால் நான் கவலைப்படப் போவதில்லை. நான் முன்புபோலவே தனியாக நடந்து வருவேன். என்னுடைய கருத்துக்களுக்குச் செவிகொடுப்பவன் வந்தால் அவனை என்னுடன் சேர்த்துக் கொண்டு, மகிழ்ச்சியாகப் பேசியபடியே வருவேன். நீங்கள் போங்கள்" என்று சொல்லிவிட்டான் உலகபக்தன்.

22. உலகபக்தன் நண்பர்களோடு சந்திப்பு

உலகபக்தனை விட்டுப் பிரிந்து கிறிஸ்தியானும், நன்னம்பிக்கையும் முன்னால் எட்டி நடை போடுவதை நான் என் கனவில் கண்டேன்.

சற்றுத் தொலைவு சென்ற பின்னர் இருவரில் ஒருவன் பின்னால் திரும்பிப் பார்த்தான். அங்கே உலகபக்தனோடு வேறு மூன்று பேர் சேர்ந்துகொள்வதை அவன் கண்டான்.

அவர்கள்தான் **உலகப்பிரியன், பணப்பிரியன், கஞ்சன்** இவர்கள் மூவருமே உலகபக்தனோடு ஒன்றாகச் சேர்ந்து பள்ளியில் படித்தவர்கள். இவர்கள் படித்தது எங்கே? இச்சை என்று கூறப்படும் வடநாட்டு வாணிப நகரங்களில் ஒன்றான ஆதாய நகரத்தைச் சார்ந்த சர்வகலாசாலைத் தலைவனாகிய

காசுபிடுங்கி என்பவனிடம் படித்தவர்கள். இவர் எவ்வகையி லாவது கட்டாயப்படுத்தியோ, தந்திரமாகப் பேசியோ, பொய் கூறியோ அல்லது விசுவாசியைப் போல வேடமிட்டோ, மாயமான முறையிலோ தன் மாணவர்கள் மற்றவர்களிடம் பணம் பிடுங்கி செல்வந்தர்கள் ஆவதற்கு வழிகாட்டியவர். இப்போது அந்த நான்கு மாணவர்களும் தேர்ச்சி பெற்றவர்க ளாக, தாங்களாகவே தனித்தனி பள்ளிகளை நடத்தி வந்தார்கள்.

நான் முன் கூறியபடியே அவர்கள் நான்கு பேரும் ஒருவரை ஒருவர் சந்தித்து வணக்கங்களைப் பரிமாறிக் கொண்டார்கள். அப்போது பணப்பிரியன் என்பவன் உலகபக்தனிடம், "அதோ முன்னால் போகிறார்களே அவர்கள் யார்?" என்று கேட்டான். கிறிஸ்தியானும், நன்னம்பிக்கையும் சற்று முன்னால்தான் சென்றுகொண்டிருந்தார்கள்.

"அவர்களா? அவர்கள் ஏதோ வெளிநாட்டைச் சேர்ந்தவர்கள் அவர்கள் விருப்பப்படியே பயணம் செய்கிறார்கள்" என்று அலட்சியமாகக் கூறினான் உலகபக்தன்.

"ஏன் அவர்கள் சற்று நின்று நம்மோடு பயணம் செல்லக் கூடாது? எல்லாருமே மோட்சத்தை நோக்கித்தானே சென்று கொண்டிருக்கிறோம்?" என்றான் பணப்பிரியன்.

"எல்லாரும் அங்கேதான் போகிறோம், ஆனால் முன்னால் போகிறார்களே அவர்கள் கண்டிப்பானவர்களாகத் தோன்றுகிறார்கள். அவர்களுடைய எண்ணங்களுக்கு விரோதமானவர்களுடன் சேர்ந்து பயணம் செல்வதைக்கூட அவர்கள் விரும்பவில்லை. பக்தியைப் பற்றி அவர்களுக்குக் கவலையில்லை. கருத்து வேறுபாடு இருந்தாலே விரட்டி விடுகிறார்கள்" என்று குற்றம் சாட்டினான் உலகபக்தன்.

"அடடா, அது மோசமான குணமாயிற்றே! இப்படிச் சிலர் தங்களது விசுவாசத்தில் பெருமை கொண்டு, தங்களைத் தவிர மற்றவர்களுக்கு மீட்பே கிடையாது என்று சொல்லிவிடுகிறார்கள். அதுசரி, உம்மோடு அவர்கள் எதில் கருத்து வேறுபாடு கொண்டிருந்தார்கள்?" என்று கேட்டான் கஞ்சன்.

"அதை ஏன் கேட்கிறாய்? அவர்கள் பிடிவாதக் குணம் படைத்தவர்கள்போலத் தோன்றுகிறது. பருவம் எப்படி யிருந்தாலும், வெயிலானாலும் சரி, மழையானாலும் சரி தொடர்ந்து பயணம் செய்ய வேண்டுமென்று அவர்கள் கூறுகிறார்கள். நானோ எதிர்காற்றிலும், எதிர் அலைகளிலும் செல்ல வேண்டாமென்று கூறினேன். ஆண்டவரை நம்பி அவர்கள் உடன்தானே அனைத்தையும் செய்துமுடிக்க

விரும்புகிறார்கள். ஆனால் நானோ உயிருக்கோ, உடமைக்கோ ஆபத்து வராதபடி கவனமாகவும், மெதுவாகவும் காரியங்களைச் செய்ய முயலுகிறேன். எவர் என்ன சொன்னாலும் சரி, அவர்கள் தங்கள் கருத்தை மாற்ற விரும்பவில்லை நானோ வேளைக்கேற்றபடி வளைந்து கொடுப்பவன். விசுவாசம் இருந்தாலும் அதே வேளையில், நமது உடமைகளுக்கு நஷ்டம் வரக்கூடாது என்றும், உடல்நலத்துக்கும் கேடு வரக்கூடாது என்றும் நான் கூறுகிறேன். அவர்களோ கந்தை அணியக்கூடிய தாழ்வு நிலை வந்தாலும்கூட விசுவாசத்தைக் கைவிடக் கூடாது என்கிறார்கள். என்னால் அதை ஒப்புக்கொள்ள முடியவில்லை. வசதியான சூழ்நிலையில் எந்தவித இடையூறுமில்லாத வேளையில் விசுவாசத்தைப் பற்றிக்கொள்வதுதான் எனக்குப் பிடிக்கும்" என்றான் உலகபக்தன்.

நீர் சொல்லுவதுதான் சரி. நமக்குக் கிடைக்கும் ஆதாயங்களைக் காப்பாற்றிக்கொள்ள நமக்கு சுய சித்தம் கொடுக்கப்பட்டுள்ளது. அதைக் கொடுத்ததே ஆண்டவர் தானே! பிறகு நாம் அவருக்காக நமக்கு வரும் ஆதாயங்களை ஏன் விட்டுக்கொடுக்க வேண்டும்? காற்றுள்ளபோதே தூற்றிக்கொள் என்ற பழமொழியை மறந்துவிடக்கூடாது அல்லவா? தேனீக்கள் மழைகாலத்தில் கூட்டில் அடைப்பட்டுக் கிடந்து, வசந்த காலத்தில் ஆடிப் பாடித் திரிவதைக் கண்டிருக்கிறோம் அல்லவா? ஆண்டவர்தானே இந்த மழையையும், வெயிலையும் கொடுத்தவர். காலத்துக்கு ஏற்றபடி நாம் நடந்துகொள்ள வேண்டாமா? மழையையும், வெயிலையும் பாராமல் அவர்கள் மோட்சப் பயணம் செல்வதென்றால் போகட்டும். நாம் வசதிப்படும் போது சிரமமின்றி பயணத்தைத் தொடரலாம். ஆண்டவர் அருளும் ஆசீர்வாதங்களை ஒன்றுகூட விடாமல் அளிக்கக் கூடிய அசெளகரியமில்லாத விசுவாசம்தான் எனக்கு வேண்டும், இந்த உலகில் அவர் எவ்வளவு வசதிகளைக் கொடுத்திருக்கிறார். அவற்றை அனுபவிப்பதற்கு முதலிடம் கொடுப்பது தவறா? ஏன், ஆபிரகாமும், சாலொமோனும் வசதியான விசுவாசிகளாகத்தானே இருந்தார்கள்? நல்ல மனிதன் பொன்னைத் தூளைப்போலச் சேமித்து வைப்பான் என்று யோபு என்ற விசுவாசி கூறியுள்ளாரே! இதோ முன்னால் போகிறவர்கள் அந்த விசுவாசி கூறியதைப்போல நடந்து கொள்வதில்லை போலிருக்கிறதே!" என்றான் உலகப்பிரியன் என்பவன்.

"சரிசரி, அவர்களைப்பற்றி நமக்கென்ன கவலை? நாம் நால்வரும் ஒரே கருத்துடையவர்கள். சேர்ந்து போகலாமே!" என்றான் கஞ்சன்.

"ஆமாம், அவர்களைப்பற்றி நாம் ஏன் பேச வேண்டும்? நாம் வேதத்தை மட்டுமன்றி, நமது அறிவையும் சார்ந்து நமது கொள்கைகளை அமைத்துக்கொண்டுள்ளோம். இவ்வாறு கொள்கைப் பிடிப்பு இல்லாதவர்கள் தனக்கென ஒரு வாழ்க்கையைத் தேடிக்கொள்ளாதவர்கள்தான். தங்களுக்குச் சுய சித்தம் இருக்கிறது என்பதையே அவர்கள் அறிந்துகொள்ள வில்லை" என்றான் பணப்பிரியன்.

"ஆமாம், ஆமாம், அது சரி நாம் எல்லாருமே ஒன்றாக மோட்சப் பயணம் செல்லப் புறப்பட்டிருக்கிறோம் அல்லவா? அழிவுக்குத் தப்பிக்கொள்ள ஒரு பொதுவான கருத்தை நான் உங்களோடு பகிர்ந்துகொள்ள விரும்புகிறேன்.

"ஒருவனுக்கு முன்பாக அவனது வாழ்க்கைக்கான வசதிகள் அனைத்தும் வைக்கப்பட்டிருக்கின்றன. அவன் அந்த வசதிகளைப் பெற வேண்டுமானால், தனது விசுவாசத்தில் விட்டு கொடுக்க வேண்டும் என்றும், இரட்டை வேடம் போடவேண்டும் என்றும் கூறப்படுகிறது என்று வைத்துக்கொள்வோம். அப்போது அவன் இந்த வசதிகளைப் பெறுவதற்காக வேடம் தரித்துக்கொண்டு, அதே வேளையில் நல்லவனாகவும் வாழ்வது தவறில்லை என்று நான் நம்புகிறேன்" என்றான் உலகபக்தன்.

"நீர் கூறியதைப்பற்றி நான் விளக்கமாகக் கூற விரும்புகிறேன். முதலில் ஒரு போதகரை எடுத்துக்கொள்வோம். அவருக்கு அதற்கான தகுதிகள் அனைத்தும் இருந்தபோதிலும், குறைந்த வருமானம் வரும் ஒரு சிறு சபையின் பொறுப்பே அவருக்குக் கிடைத்திருக்கிறது. அவர் இன்னும் அதிக வருமானமும், மதிப்பும், செல்வாக்கும் தரக்கூடிய ஒரு சபையைத் தேடுகிறார். தேவ கிருபையால் அப்படி ஒரு சபை அவருக்குக் கிடைக்கிறது. அப்போது அவர் அந்தச் சபையாருக்கு ஏற்றபடி தன்னை மாற்றிக்கொள்வது நியாயம்தானே! அந்தச் சபையாரின் பண்புகளுக்கு ஏற்றபடி, அவர்களது எதிர்பார்ப்புகளுக்கு ஒத்தபடி அவர் தனது விசுவாசத்தை சரிப்படுத்திக்கொள்ள வேண்டும். தனது பக்தி வைராக்கியத்தைக் கொஞ்சம் விட்டுக் கொடுக்க வேண்டியிருந்தாலும் இருக்கலாம். சபையாரின் கருத்துக்கு ஏற்றபடி, அவர் தனது சொந்தக் கருத்துக்களைச் சற்றே மாற்றிப் பிரசங்கம் செய்ய வேண்டியிருக்கலாம். என்ன இருந்தாலும் அவர் தனது அழைப்பை விட்டு விடாமல் தானே செயல்படுகிறார். இதில் தவறு இருக்கிறது என்று எப்படிக் கூறமுடியும்?"

என்று கூறிய பணப்பிரியன் மேலும் தொடர்ந்தான்.

"அதுமட்டுமா?" இதே வேளையில் அவரால் நல்லவனாகவும் வாழமுடியும். எப்படி என்று சொல்லட்டுமா? அதிக வருமானம் தரக்கூடிய பெரிய வேலை தேவ கிருபையால் அவருக்குக் கிடைக்கிறதென்றால், அவர் தாராளமாக அதை ஏற்றுக் கொள்ளலாம். அது நியாயம்தான். அவர் மனச்சாட்சிப்படி நடந்துகொண்டால் இதில் தவறொன்றும் இராது. இரண்டாவதாக, அதிக வருமானம் தரும் சபையை அவர் பெறுவதால் அவருக்கு இன்னும் சிறப்பாக வேத ஆய்வு செய்யவும் வைராக்கியத்தோடு பணிபுரியவும், சிரத்தை எடுத்துப் பிரசங்கம் செய்யவும் அது உதவியாக இருக்கிறது. இதுவும் தேவ கிருபைதானே?

''அதுமட்டுமா? சபையாருக்கு ஏற்றபடி தனது பக்தி வைராக்கியத்தை மாற்றிக்கொள்வதிலும் தவறொன்றும் இல்லை. இதனால் அவருக்கு சுயநலம் இல்லையென்றும், மற்றவர்களைக் கவரக்கூடிய அன்புடையவர் என்றும், போதகர் பணிக்கேற்றபடி ஒத்துப் போகிறவர் என்றும் சபையாரால் பாராட்டப்படுகிறார். இது போதாதா? அதனால் நான் என்ன சொல்லுகிறேன் என்றால், ஒரு போதகர் அதிக வருமானமுள்ள ஒரு பெரிய சபையை நாடிச் செல்வது பண ஆசையினால்தான் என்று கூறிவிட முடியாது. அவர் தன் வாய்ப்பைப் பயன்படுத்தி, போதகர் தொழிலில் இன்னுமதிகமாகத் தேர்ச்சி பெறுகிறார் என்றுதான் கூறவேண்டும். தன் அழைப்பை அலட்சியம் பண்ணாமல் இன்னுமதிகமாக முயற்சி செய்வதற்காக அவரைப் பாராட்டத்தான் வேண்டும்'' என்று கூறிய பணப்பிரியன் கொஞ்சம் தன்னை ஆசுவாசப்படுத்திக்கொண்டு மேலும் தொடர்ந்தான்.

"இப்போது ஒரு வணிகர் எவ்வாறு நல்லவனாகவே இருந்து தனது வாழ்வை வளப்படுத்திக் கொள்ளமுடியும் என்பதைப் பற்றிக் கூறுகிறேன். அவன் நிச்சயமாக தனது பக்திவைராக்கியத் தினாலே தன் வருமானத்தைப் பெருக்கிக்கொள்ளமுடியும். அவன் நல்லவனாக இருப்பதினால், வசதியுள்ள ஒரு பெண் அவனுக்கு மனைவியாகக் கிடைத்தால் அதுவே போதுமே? அதுமட்டுமா? அவனது நல்ல குணத்தைக் கண்டு செல்வந்தரான வாடிக்கைக்காரர்கள் அவனுக்குக் கிடைப்பார்கள். பிறகு அவனது வாணிபம் வளரத் தடையேதும் இருக்காது அல்லவா? அதனால்தான் நான் சொல்லுகிறேன். 'ஒருவன் எந்த வழியிலாவது பக்திவைராக்கியத்தைப் பெற்றுக்கொள்வது நல்லதுதான். வசதியுள்ளவனைக் கைப்பிடிப்பதும், பணக்கார வாடிக்கையாளர்களைப் பெறுவதும் தவறாகுமா? மூன்றாவதாக அவ்ன் நல்லவனாக இருப்பதால் நல்லவர்கள் அவன் பக்கம்

வந்து சேருவதில் தவறேதும் இருக்குமோ? இவ்வாறு அவன் பக்திவைராக்கியமுள்ளவனாகத் தன்னைக் காட்டிக் கொள்வதினால் அவனுக்கு நல்ல மனைவி கிடைத்திருக்கிறாள், நல்ல வாடிக்கைக்காரர்கள் கிடைத்திருக்கிறார்கள், நல்லவர்களின் துணை கிடைத்திருக்கிறது. இவ்வளவு நன்மைகளைப் பெற வேண்டும் என்ற நோக்கத்துடன் ஒருவன் பக்திவைராக்கியமுள்ளவனாக மாறுவது நியாயம்தானே?" என்று விவாதம் புரிந்தான் பணப்பிரியன்.

அவன் கருத்துக்கள் அனைத்தும் சரியே என்று மற்றவர்களும் ஆமோதித்தார்கள்.

"இதுவே சரியான வாழ்க்கை முறை. இதை எதிர்த்து நிற்க ஒருவராலும் முடியாது" என்று அவர்கள் ஒப்புக்கொண்டார்கள்.

''அதோ முன்னால் போகிறார்களே, கிறிஸ்தியானும் நன்னம்பிக்கையும்! அவர்கள்தானே உம்மை எதிர்த்துப் பேசியவர்கள்?" என்று உலகப்பக்தனிடம் கேட்ட ஒருவன்.

"நாம் போய் அவர்களிடம் இந்தக் கருத்தைச் சொல்வோம். நிச்சயமாக அவர்களால் இதை எதிர்த்துப் பேச முடியாது'' என்றும் கூறினான்.

மற்றவர்களும் இதற்கு ஒப்புக்கொண்டார்கள்.

''கொஞ்சம் நில்லுங்கள்'' என்று கிறிஸ்தியானையும், நன்னம்பிக்கையையும் நோக்கிக் குரலெழுப்பினார்கள், அவர்களும் அப்படியே நின்றுவிட்டார்கள்.

நான்கு நண்பர்களும் அவர்களை நோக்கி விரைவாக சென்றார்கள்.

''ஏற்கெனவே உலகபக்தனின் பேச்சினால் அவர்கள் எரிச்சலடைந்திருக்கிறார்கள். அதனால் இப்போது உலகப் பிரியனே கேள்வியைக் கேட்கட்டும்'' என்று அவர்கள் வழியிலேயே முடிவு செய்தார்கள்.

அதன்படியே கிறிஸ்தியானை நெருங்கியவுடன் உலகப் பிரியன் இந்தக் கேள்வியைக் கேட்டான்.

"இவ்வளவுதானா? ஆவிக்குரிய நிலையில் குழந்தையாக இருப்பவன்கூட இதைப்போன்ற ஆயிரக்கணக்கான கேள்விகளுக்குப் பதில் கூறிவிடுவானே!" என்று அலட்சியமாகச் சொன்ன கிறிஸ்தியான் பதில் கூறத் துவங்கினான்.

"யோவான் எழுதிய நற்செய்தி நூலில் நமது மீட்பர் கூறிய (யோவான் 6:26) வார்த்தைகளை மறந்துவிட்டீர்களா? வெறும் உணவையும் சரீரப் பிரகாரமான நலன்களையும் நோக்கமாகக் கொண்டு அவரை பின்பற்றுவது நியாயமானதல்ல. அவர் பெயரைச் சொல்லியும், பக்தி வைராக்கியத்தைக் கொண்டும் இவ்வுலக வாழ்வுக்கான ஆதாயங்களைத் தேடிக் கொள்வது மிகவும் அநியாயம்! அஞ்ஞானிகளும், மாய்மாலக்காரரும், பிசாசைப் பின்பற்றுபவர்களுமே இத்தகைய நோக்கத்தைக் கொண்டிருப்பதை நான் கண்டிருக்கிறேன். இவர்களோடுகூட பில்லி சூனியக்காரர்களும் தங்கள் போலிப் பக்தியை ஆதாயம் தேடப் பயன்படுத்திக் கொள்கின்றனர். வேதாகமத்திலிருந்தே இதைப்போன்ற ஏமாற்றுக்காரர்களுக்கான எடுத்துக்காட்டுகளைச் சுட்டிக்காட்டுகிறேன். ஒவ்வொன்றாகக் கேளுங்கள்" என்று கூறிய கிறிஸ்தியான் விவரமாகச் சொல்லத் துவங்கினான்.

அஞ்ஞானிகள் சுயநலத்துக்காக போலிப் பக்தியை நாடுகிறார்கள் என்பதற்கு ஓர் எடுத்துக்காட்டைக் கூறுகிறேன். ஆதியாகமம் 34:20-24 வசனங்களில் இந்த வரலாறு கூறப்பட்டுள்ளது. ஏமோரும் அவன் மகன் சீகேமும் யாக்கோபின் ஆட்டு மந்தைகளையும், அவனது குடும்பத்துப் பெண்களையும் கண்டபோது அவர்களை அபகரிக்க விரும்பினார்கள். இதற்காக அவர்கள் செய்தது என்ன தெரியுமா? பக்தி வைராக்கியமுள்ள வர்களைப் போல நடித்தார்கள். யாக்கோபின் குடும்பத்தாரைப் போல அவர்களும் விருத்தசேதனம் செய்துகொண்டார்கள். இதனால் யாக்கோபோடு சுலபமாக உறவுகொள்ள முடியும் என்று நினைத்தார்கள். யாக்கோபின் குமாரத்தியை மணந்துகொள்வதும், அவனது ஆடுமாடுகளைத் தங்களுக்கெனப் பெறுவதுமே அவர்கள் நோக்கமாக இருந்தது. நடந்தது என்ன? தவறான நோக்கத்தோடு பக்தி வைராக்கியம் கொண்டுள்ளது போல நடித்த அவர்கள் அனைவருமே அழிக்கப்பட்டார்கள்! இந்த எடுத்துக்காட்டு போதுமா, இன்னும் வேண்டுமா?" என்று கேட்ட கிறிஸ்தியான், அவர்கள் பேசாமலிருப்பதைக் கண்டவுடன் மேலும் தொடர்ந்தான்.

"இப்போது மாய்மாலக்காரரின் கதியைப் பாருங்கள். பரிசேயர்கள் இப்படிப்பட்ட போலியான பக்தி வைராக்கியமே கொண்டிருந்தார்கள். மற்றவர் முன்னால் நீண்ட ஜெபங்கள் செய்துவிட்டு, ஏழை விதவைகளின் கொஞ்ச நஞ்ச சொத்தையும் கூட சூறையாடுவார்கள் (லூக்கா 20:46, 47). அவர்கள் அதிக ஆக்கினையை அடைவார்கள் என்று நமது மீட்பர் கூறியுள்ளார். அதுசரி, பிசாசுகளை பின்பற்றுபவர்களின் நிலையை பார்ப்போமா? யூதாஸ் காரியோத்து நமது மீட்பரின் சீடர்களில்

ஒருவனாக இருந்தவன்தான். ஆனால் அவன் சிந்தனை முழுவதும் பணத்தைப் பற்றியதாகவே இருந்தது. பணத்துக்காக நமது மீட்பரையே காட்டிக் கொடுக்க அவன் தயங்கவில்லை. அவன் மீட்பரின் சீடனாக போலி வேடமிட்டிருந்தான். உண்மையில் அவன் பிசாசின் கூலிக்காரன்தான். இறுதியில் அவன் போலிப் பக்தியால் சம்பாதித்ததைக் கொண்டு அவனால் வாழ முடியவில்லை. தற்கொலை செய்துகொண்டான். அவனுக்கு நேர்ந்த கதியைக் கண்டபிறகாவது போலியான பக்தி வைராக்கியத்தை மாற்றிக்கொள்ள கூடாதா?" என்று கேட்ட கிறிஸ்தியான் மேலும் தொடர்ந்தான்.

''பில்லிசூனியக்காரனாகிய சீமோனும் போலியான பக்திவைராக்கியத்தைக் கொண்டிருந்தவன்தான். பணம் சம்பாதிப்பதற்காக அவன் பரிசுத்த ஆவியானவரைப் பெற விரும்பி அப்போஸ்தலனாகிய பேதுருவுக்கே இலஞ்சம் கொடுக்க முன்வந்தான் (அப். 8:10-22). தேவனுடைய வரத்தைப் பணத்தினாலே சம்பாதிக்க முடியாது என்று கூறி பேதுரு அவனைக் கடிந்துகொண்டான். அவன் இருதயம் ஆண்டவருக்கு முன்பாகச் செம்மையாக இல்லை என்றும் கூறினான். இதுவா உண்மையான பக்திவைராக்கியம்? இவ்வாறு உலகப்பிரகாரமான நன்மைகளைப் பெற்றுக்கொள்ள தனது விசுவாசத்தைப் பயன்படுத்துபவன் இறுதியில் இந்த உலக நன்மைகளுக்காகவே தன் விசுவாசத்தை விட்டுவிடுவான். யூதாஸ் உலக நன்மைகளை நாடியபோது தன் ஆண்டவரையே காட்டிக் கொடுக்கத் துணிந்துவிட்டான். இறுதியில் இந்த உலகப் பற்று அவனுக்கு அழிவையே தேடித் தந்தது. எனவே உலகப் பிரகாரமான நன்மைகளுக்காகப் பக்தி வைராக்கியம் கொண்டிருப்பது வெறும் மடத்தனம் மட்டுமல்ல, அது சாத்தானைப் பின்பற்றி அழிவைத் தேடிக் கொள்வதுதான்" என்று உறுதியாகக் கூறி முடித்தான் கிறிஸ்தியான்.

இதைக் கேட்ட அந்த நால்வராலும் பதில் கூறவே முடிய வில்லை. ஒருவரையொருவர் பார்த்து, திருதிருவென்று விழித்தனர்.

நன்னம்பிக்கையோ கிறிஸ்தியான் கூறியது அனைத்துமே சரியென்று ஒப்புக்கொண்டு அவனைப் பாராட்டினான்.

சற்று நேரம் அமைதியாக நடந்து சென்றார்கள். உலகபக்தனும் அவனது நண்பர்களும் மெதுவாக நடக்கத் துவங்கினார்கள். கிறிஸ்தியானும், நன்னம்பிக்கையும் அவர்களைப் பொருள்படுத்தாது துரிதமாக நடந்து முன்னேறினார்கள்.

"என்னுடைய நியாயமான வாதத்தை எதிர்த்தே இவர்களால் ஒன்றும் கூற முடியவில்லை. அப்படியானால் ஆண்டவருடைய நியாத்தீர்ப்புக்கு முன்னால் எப்படி நிற்கப் போகிறார்களோ தெரியவில்லை. களிமண் பாண்டத்திற்கு முன்பே கட்டையாக நிற்பவர்கள், பட்சிக்கும் அக்கினியின் முன்னால் எந்த நிலையை அடைவார்களோ?" என்று அங்கலாய்த்தபடியே நன்னம்பிக்கை யுடன் நடந்துசென்றார்கள்.

23. பயணிகள் செல்வமலைக்கு வந்து சேருதல்

எனது கனவில் கிறிஸ்தியானும், நன்னம்பிக்கையும் ஒரு சமவெளியை நெருங்குவதை நான் கண்டேன். அந்தச் சமவெளிக்கு **இளைப்பாறும் தலம்** என்று பெயர் சூட்டப்பட்டிருந்தது, மகிழ்ச்சியோடு அந்த இருவரும் அந்தச் சமவெளியைக் கடந்து சென்றார்கள். அது ஒரு குறுகிய சமவெளி. எனவே வெகு விரைவாக அதைக் கடந்து **செல்வமலை** என்ற பெயருடைய ஒரு மலைக்கு அருகே வந்து சேர்ந்தார்கள்.

அந்த மலையில் ஒரு வெள்ளிச் சுரங்கம் இருந்தது. அந்த உலகப் பிரகாரமான செல்வத்தைப் பார்க்க ஆசை கொண்டு அருகே சென்ற பலர் சுரங்கத்தின் மணல் சரிந்து, அதில் சிக்கி மாண்டுபோனார்கள். வேறு பலர் கை, கால் எலும்புகள் முறிந்து சாகும்வரை முடவர்களாக வேதனைப் பட்டார்கள்.

அந்தச் சுரங்கத்துக்குச் செல்லும் பாதையின் ஓரமாக **தேமாஸ்** என்பவன் நின்றுகொண்டிருப்பதை நான் என் கனவில் கண்டேன். அவன் முன்பு ஒருகாலத்தில் பவுல் அப்போஸ்தல னோடு சேர்ந்து ஊழியம் செய்தவன். பின்னர் உலக நன்மைகளுக்காக அவன் தனது ஊழியத்தை விட்டுவிட்டான். இப்போது அவன் அந்தப் பாதையோரமாக நின்றுகொண்டு அருகே வருபவர்களைச் சுரங்கத்தைப் பார்க்க வருமாறு வருந்தி அழைத்துக்கொண்டிருந்தான்.

கிறிஸ்தியானையும், நன்னம்பிக்கையையும் கண்டவுடன் அவன், "வாருங்கள், வாருங்கள், வந்து இந்த அதிசயத்தைப் பாருங்கள்!" என்று அழைத்தான்.

"அப்படி என்ன அதிசயம் அங்கே இருக்கிறது?" என்று கேட்டான் கிறிஸ்தியான்.

"இதற்கு **வெள்ளிக் கேணி** என்று பெயர். நீங்கள் தோண்டத்தோண்ட வெள்ளி கிடைத்துக் கொண்டே இருக்கும்.

நீங்கள் விரைவிலேயே கோடீஸ்வரர்களாக ஆகிவிடலாம்'' என்று ஆசை வார்த்தை சொல்லி அழைத்தான் அந்தத் தேமாஸ்.

''அதைப் போய்த்தான் பார்ப்போமே!'' என்று கிறிஸ்தியானை அழைத்தான் நன்னம்பிக்கை.

''என்னை வற்புறுத்தாதே! இந்த இடத்தைப்பற்றி நான் ஏற்கெனவே கேள்விப்பட்டிருக்கிறேன். அந்தப் புதையலைத் தேடிப் போய் மாண்டவர்கள் எத்தனையோ பேர்! மோட்சம் நோக்கிப் பயணம் போகிறவர்களுக்கு இது பெரிய இடறலாக இருக்கிறது என்றான் கிறிஸ்தியான்.

கிறிஸ்தியான் தேமாசை அருகே அழைத்தான்.

''இந்த இடம் மிகவும் மோசமானது அல்லவா? அநேக பயணிகள் தொடர்ந்து முன்னேற முடியாமல் செய்து விட்டதல்லவா? என்று அவனிடம் கேட்டான் கிறிஸ்தியான்.

''கவனமாகச் செல்பவர்கள் எந்தவித ஆபத்திலும் சிக்கிக் கொள்வதில்லை'' என்று சத்தமாகக் கூறினான் தேமாஸ்.

''ஏன் இந்தச் சோதனை? நாம் நமது வழியே போவோம்'' என்று நன்னம்பிக்கையிடம் கூறினான் கிறிஸ்தியான்.

''நமக்குப் பின்னால் வருகிறானே உலகபக்தன், அவன் எப்படியும் இந்த இடத்துக்கு வரத்தானே வேண்டும்? அப்போது தேமாஸ் அவனைக் கூப்பிட்டால் அவன் நிச்சயமாகச் சென்றுதான் பார்ப்பான்'' என்றான் நன்னம்பிக்கை.

நிச்சயமாக அவன் தனது கொள்கைப்படி அதைச் சென்றுதான் பார்ப்பான். அங்கே அவன் இறந்து போனாலும் போகலாம்'' என்றான் கிறிஸ்தியான்.

''ஏன் தயங்குகிறீர்கள்? வந்து பாருங்கள்'' என்று மறுபடியும் அவர்களை வருந்தி அழைத்தான் தேமாஸ்.

''நாங்களோ நேரான வழியில் சென்றுகொண்டிருக்கிறோம். நீயோ ஆண்டவருக்கு விரோதமானவனாக இருக்கிறாய். ஏற்கெனவே நீ ஆக்கினைத் தீர்ப்பையும் அடைந்திருக்கிறாய். எங்களையும் ஏன் அழிவை நோக்கி இழுக்கிறாய்? அப்படி நாங்கள் வழிவிலகினால் எங்கள் அரசருக்கு அது தெரிந்துவிடும். பிறகு எப்படி நாங்கள் வெட்கப்படாமல் அவரது முகத்தில் விழிக்க முடியும்?'' என்றான் கிறிஸ்தியான்.

அவர்களை எப்படியாவது வீழ்த்திவிட வேண்டுமென்று முடிவு செய்த தேமாஸ், ''நானும் உங்களைப் போல ஒரு

மோட்சப் பயணிதான்" வாருங்கள், அதைப் போய்ப் பார்த்து விட்டு, நானும் உங்களுடன் வருகிறேன்" என்றான்.

"எங்களை ஏமாற்ற முயலாதே! நீ தேமாஸ் என்பது எனக்குத் தெரியும்" என்றான் கிறிஸ்தியான்.

"ஏன் அதற்கென்ன? நானும் ஆபிரகாமின் புத்திரன்தானே!" என்றான் தேமாஸ்.

"நீ இப்படிச் சொல்லிக் கொள்வாய் என்று எனக்குத் தெரியும். ஆனால் குணத்தில் யூதாஸ் உன் தகப்பன், கேயாசி உன் பாட்டனார் அல்லவா? அவர்களைப்போல நீயும் பிசாசுக் கடுத்த காரியங்களைத்தானே செய்கிறாய்? உன் மூதாதையர் தங்கள் குருக்களையே ஏமாற்றியவர்கள், காட்டிக் கொடுத்தவர்கள்! நாங்கள் மோட்சம் செல்லும் போது நீயும் அவர்களைப்போலவே கேடு விளைவித்துக் கொண்டிருக்கிறாய் என்பதை அறிவிப்போம்" என்று கூறிய கிறிஸ்தியான், நன்னம்பிக்கையை அழைத்துக்கொண்டு வேகமாக முன்னால் சென்றான்.

இதற்குள் உலகபக்தனும், அவனது நண்பர்களும் அங்கே வந்து சேர்ந்தார்கள். தேமாஸ் அவர்களை அழைப்பதற்கு மறக்கவில்லை! எந்தவித மறுப்புப் பேச்சுமின்றி அவர்கள் அவனது வலையில் விழுந்தார்கள்.

அவர்கள் சுரங்கத்தில் மணல் சறுகி இறந்தார்களோ அல்லது புகை மண்டலத்தில் சிக்கி மரித்தார்களோ எப்படியென்று எனக்குத் தெரியாது. ஆனால் அவர்களை நான் மறுபடியும் அந்தப் பாதையில் பார்க்கவில்லை!

உலகபக்தன், உலகபக்தன்
வெள்ளிக் கேணியே தேமாசின்
வலையில் விழுந்தானே!
ஓடிச் சென்ற அவனுக்கு
அதுவே முடிவாயிற்று!

என்று பாடியபடியே முன்னால் சென்றான் கிறிஸ்தியான்.

சமவெளியைக் கடந்து வீதியோரமாக நின்ற ஒரு சிலையை இருவரும் நெருங்கினார்கள். ஒரு பெண் சிலையாக மாறியதுபோல அது தோன்றியது. யாரது, எப்படி இவ்வாறாக ஆயிற்று என்பதை அறிந்துகொள்ள அவர்கள் அருகே நெருங்கினார்கள்.

அந்தச் சிலையின் நெற்றியில் ஏதோ எழுதப்பட்டிருந்ததை

நன்னம்பிக்கை கவனித்தான். படிப்பில் தேறிய கிறிஸ்தியானை அருகே அழைத்து வந்து என்ன எழுதப்பட்டிருக்கிறது என்பதை அறிந்துகொள்ளுமாறு சுட்டிக்காட்டினான்.

"லோத்தின் மனைவியை நினைத்துக்கொள்ளுங்கள்" என்று வாசித்த கிறிஸ்தியானுக்கு உண்மை நிலை புரிந்தது. லோத்து சோதோமின் அழிவிலிருந்துத் தப்பிக்கொள்ளும்படி ஓட நேர்ந்தது. அப்போது அவனோடு ஓடிவந்த அவனது மனைவி, கட்டளையை மீறி திரும்பிப் பார்த்து உப்புத்தூணாக மாறிவிட்டாள். இதுதான் அந்த உப்புத் தூண் என்பதை இருவரும் அறிந்துகொண்டார்கள்.

"சகோதரனே, இந்தச் சிலையை பார்த்தாயா? நாம் கடந்துவந்த ஒரு சோதனையைப்போன்ற ஒரு சோதனையில் தானே லோத்தின் மனைவி விழுந்து போனாள். இப்போது அதற்கு சாட்சியாக அவள் உப்புத் தூணாக நிற்கிறாள். தேமாசின் அழைப்பைக் கேட்டு நீயும் நானும் போயிருந்தால் நாமும்கூட இப்படி அழிவுக்குச் சாட்சியாகத்தானே நிற்போம்?" என்றான் கிறிஸ்தியான்.

"நானும் உன்னை அழைத்தேனே! அதற்காக நான் வெட்கப்படுகிறேன். எனது ஆசையின் விளைவாக நானும் இவ்வாறு தண்டிக்கப்படாமல் இருப்பது ஆண்டவருடைய கிருபைதான். லோத்தின் மனைவியோ பின்னால் திரும்பிப் பார்த்ததற்கே சிலையாகி விட்டாளே! நானோ போய்ப் பார்க்க ஆசைப்பட்ட பிறகும் நமது எசமானரின் கருணையினாலே பிழைத்துக் கொண்டேன். அவருக்கு நன்றி" என்று கூறினான் நன்னம்பிக்கை.

"இப்போது பார்த்த இந்தச் சிலையை நினைவில் வைத்து இனிமேலாவது எச்சரிக்கையாக இருப்போமாக. இதோ இந்தப் பெண் ஒரு தண்டனைக்குத் தப்பிய போதிலும், மற்றொரு தண்டனையினால் இப்படி உப்புத் தூணாகிவிட்டாள். சோதோமின் அழிவுக்குத் தப்பிய அவள்; திரும்பிப் பார்த்து அதற்குரிய தண்டனையைப் பெற்றுக் கொண்டாள்" என்றான் கிறிஸ்தியான்.

"நீ சொல்லுவது உண்மைதான். இந்தச் சிலை ஒரு நிரந்தர எச்சரிப்பாக இங்கே நின்றுகொண்டிருக்கிறது. அப்படியே கோராகு, தாத்தான், அபிராம் என்பவர்களும், அவர்களுடைய பாவத்தினால் பலியான இருநூற்று ஐம்பது பேரும் (எண். 16:31, 32; 26:9, 10) இன்னும் நமக்கு எச்சரிப்பாக இருக்கிறார்கள். இதே வேளையில் என்னை வியப்படையச் செய்யும் ஒரு காரியமும்

இருக்கிறது. இதோ இந்தப் பெண் தான் நின்ற இடத்திலேயே திரும்பிப் பார்த்து, அதற்கு மேல் ஓரடிகூட எடுத்துவைக்காமல் தூணாகி விட்டாளே! இதோ தேமாசின் பேச்சைக் கேட்டு அழிவை நோக்கிப் போனார்களே, அவர்கள் அங்கேயிருந்து திரும்பிப் பார்த்தாலே இந்தச் சிலையைக் கண்டு எச்சரிப்பைப் பெற்றிருப்பார்களே! இது எனக்கு வியப்பை அளிக்கும் ஒரு காரியமாக இருக்கிறது" என்றான் நன்னம்பிக்கை.

"ஆமாம், நீ சொல்வது சரிதான். இது ஒரு வியப்பான காரியமாகத்தான் இருக்கிறது. இது அவர்கள் இருதயச் சீர்கேட்டைத்தான் வெளிப்படுத்துகிறது. நீதிபதிக்கு முன்னால் நின்றுகொண்டே திருடுகிற ஒருவனைப்போலவும், தூக்குமரத்தின் அருகிலேயே கொள்ளையடிக்கிற கள்வனைப்போலவும்தான் இவர்கள் இருக்கிறார்கள். சோதோம் பட்டணத்தாரின் பாவம் ஆண்டவரின் சமுகத்தை எட்டியது என்று சொல்லப் பட்டிருக்கிறதே! அவரது கிருபையைச் சற்றும் எண்ணிப் பார்க்காமல், அவரது முகத்துக்கு முன்பாகவே பாவம் செய்தார்கள், ஏதேன் தோட்டம்போன்ற அழகான சோதோம் இந்தப் பாவிகளினால் பாழாக்கப்பட்டது. எனவேதான் ஆண்டவர் கடும்கோபம் கொண்டார். அவர்களை நிர்மூலமாக்கினார். இந்த அழிவின் அடையாளங்களைக் கண் முன்னால் கண்டபின்னரும்கூட, அழிவை நோக்கிச் செல்லும் தேமாஸ் போன்றவர்கள் கடுமையான தண்டனைக்கு ஏற்றவர்கள்போலத்தான் தோன்றுகிறார்கள்'' என்று அங்கலாய்ப்புடன் கூறினான் கிறிஸ்தியான்.

"நீ சொல்லுவது சரிதான் ஆனால் நானும் நீயும் இவ்வாறு அழிவின் அடையாளமாக நிற்காமல் தப்பிக் கொண்டோம். ஆண்டவரை தோத்தரிக்கவும், அவருக்குப் பயந்து நடக்கவும் இந்த உப்புத்தூண் ஓர் எச்சரிப்பாக இருக்கிறது'' என்றான் நன்னம்பிக்கை.

24. பயணிகள் ஜீவநதிக்கு அருகே வருதல்

பயணிகள் இருவரும் துரிதமாக நடந்து ஓர் அழகான ஆற்றின் கரையை வந்தடைவதை நான் கனவில் கண்டேன்.

அந்த நதி தாவீது அரசனால் தேவநதி என்றும், யோவான் அப்போஸ்தலனால் ஜீவ தண்ணீருள்ள நதி என்றும் அழைக்கப் பட்டுள்ளது. இது பரிசுத்த ஆவியானவருக்கு ஓர் அடையாளமாகக் காணப்படுகிறது.

அளவுகடந்த மகிழ்ச்சியோடு அவர்கள் அந்த ஆற்றின் கரையில் நடந்து சென்றார்கள். விருப்பப்படி தெளிந்த நீரை அள்ளி அள்ளிப் பருகினார்கள். அவர்கள் களைப்பு நீங்கிப் புத்துணர்வு பெற்றார்கள். இரு கரைகளிலும் பல மரங்கள் செழிப்பாக வளர்ந்து நின்றன. அதன் இலைகளைப் பறித்துத் தின்று வயிற்று உபாதைகளையும், பயணத்தால் ஏற்பட்ட இரத்த அழுத்தத்தையும் குணமாக்கிக் கொண்டார்கள். ஆற்றின் இருகரைகளிலும் பசுமையான புல்வெளிகளும், லீலி மலர்களும் காணப்பட்டன. அங்கே படுத்து இளைப்பாறினார்கள். மரத்தின் கனிகளை உணவாக உட்கொண்டு, ஆற்றுநீரைப் பருகி தாகத்தைத் தணித்துக் கொண்டார்கள் இவ்வாறு அநேக நாள்களை அங்கே மகிழ்ச்சியாகக் கழித்தார்கள்.

இதோ, தேனிலும் இனிய தெளிந்த
நீரோடை ஓடுகிறது
பாதைவழிப் பயணிகளுக்கு களிப்போடு
இளைப்பாறுதல் தருகிறது
பச்சை வயல்கள், மகிழ வைக்கும்
இனியநல் வாசம்
பசிதணிக்கும் பழமரங்கள்! புசிப்பதற்
கினியநல் உணவு!
இச்சை கொண்டெவனும் உள்ளதைவிற்பான்
இதை வாங்கவே!

என்று பாடிக் களித்தார்கள். இறுதியில் அவர்கள் தங்கள் மோட்சப் பயணத்தைத் தொடர்ந்தார்கள்.

25. பயணிகள் பக்கத்துப் புல்வெளியில் செல்லுதல்

ஆற்றின் ஓரமாகவே பாதை செல்லும்வரை அவர்களுக்கு மகிழ்ச்சியாகவே இருந்தது. ஆனால் விரைவிலேயே பாதை கரடுமுரடாகியது. ஆற்றைவிட்டு விலகியும் சென்றது. ஏற்கெனவே வெகுதூரம் நடந்து பாதங்கள் தேய்ந்து போயிருந்த படியால் கரடுமுரடான பாதையில் நடப்பது கடினமாக இருந்தது. அதுமட்டுமன்றி ஆற்றங்கரையில் பழமரங்கள் பசியைத் தணித்துவந்தபடியால், அந்த வசதியுமன்றித் தொடர்ந்து செல்லத் தயங்கினார்கள்.

வேறு இலகுவான பாதை இருக்காதா என்று தேடினார்கள். அப்போது தாங்கள் செல்லும் பாதையின் இடதுபுறத்தில் புல்வெளி இருப்பதையும், அதை நோக்கிச் செல்ல படிகட்டுகள் இருப்பதையும் கண்டார்கள். அந்தப் புல்வெளிக்குப் **பக்கத்துப் புல்வெளி** என்று பெயர். கிறிஸ்தியான் அருகே சென்று எட்டிப்

பார்த்தான். அங்கே புல்வெளியில் நடுவிலும் ஒரு பாதை செல்வதை கண்டான், கண்ணுக்கெட்டிய தூரம் வரை அந்தப் பாதை அவர்கள் செல்ல வேண்டிய பாதைக்கு இணையாகவே செல்வதை போலத் தோன்றியது.

''நன்னம்பிக்கையே வாரும், இங்கேயும் ஒரு பாதை இருக்கிறது. அது இலகுவான பாதையாகத் தோன்றுகிறது" என்று கிறிஸ்தியான் நன்னம்பிக்கையை அழைத்தான்.

"பாதை இருப்பது சரிதான், ஆனால் ஒரு வேளை இந்தப் பாதை நாம் செல்ல வேண்டிய பாதையைவிட்டு விலகிச் சென்றால் என்னசெய்வது?'' என்று ஐயம் கிளப்பினான் நன்னம்பிக்கை.

"அப்படியொன்றும் தெரியவில்லையே! இந்தப் பாதை நமது பாதைக்கு இணையாகவேதான் செல்கிறது'' என்றான் கிறிஸ்தியான். சாத்தான் மோட்சப் பயணிகளை ஏமாற்ற இவ்வாறு வழி செய்திருக்கிறான் என்பதை அவர்கள் உணரவில்லை.

நன்னம்பிக்கை கிறிஸ்தியானின் ஆலோசனையை ஏற்றுக் கொண்டான். இருவருமாக படிக்கட்டுகள் வழியே புதிய பாதையை அடைந்தார்கள். காலுக்கு மெத்தென்ற புல்வெளிப் பாதையில் உற்சாகமாக நடைபோட்டார்கள்.

சற்றுத் தூரம் சென்றபோது, தங்களுக்கு முன்னால் ஒருவன் நடந்து செல்வதைக் கண்டார்கள். **வீண் நம்பிக்கை** என்பது அவன் பெயர்.

அவனை அழைத்த கிறிஸ்தியான், "இந்த பாதை எங்கே செல்கிறது?" என்று கேட்டான்.

"ஏன் நம்பிக்கை இல்லையா? இந்தப் பாதை மோட்சத்தை நோக்கித்தான் செல்கிறது" என்றான்.

நன்னம்பிக்கையைத் திரும்பிப் பார்த்த கிறிஸ்தியான், ''பார்த்தாயா? நான் நினைத்தது சரிதான். இதுவும் நேர்ப் பாதைதான்?'' என்றான். தங்களைப்போலவே தவறான பாதையில் செல்லும் ஒருவனின் பேச்சைக் கேட்டு, அதுதான் சரியான பாதை என்று நினைத்து முன்னேறும் அநேக கிறிஸ்தவர்களைப்போலவே அவர்களும் நடந்துகொண்டார்கள்.

வீண்நம்பிக்கை முன்னால் நடந்து செல்ல, கிறிஸ்தியான், நன்னம்பிக்கை இருவரும் பின்னால் சென்றார்கள்.

அப்போது சூரியன் மறைந்து இருள் பரவத் துவங்கியது. முன்னால் செல்பவர்களைக்கூடப் பார்க்க முடியவில்லை.

முன்னால் நடந்துசென்ற வீணநம்பிக்கை இருளில் வழிதெரியாமல் முன்னால் வெட்டப்பட்டிருந்த ஒரு குழியில் விழுந்துவிட்டான். வீண்பெருமை கொண்டவர்களை வீழ்த்தவே அந்த மைதானத்துச் சொந்தக்காரரால் குழி வெட்டப் பட்டிருந்தது. விழுந்த வேகத்தில் அவன் உடல் சிதைந்துவிட்டது.

அவன் விழுந்த சத்தத்தைக் கேட்டு கிறிஸ்தியானும், நன்னம்பிக்கையும் திடுக்கிட்டு நின்றார்கள். வீணநம்பிக்கையின் பெயரைச் சொல்லி அழைத்தார்கள். வேதனைக் குரல்தான் கேட்டதேயொழிய, வீணநம்பிக்கை எதுவும் பேசியதாகக் கேட்கவில்லை.

பயந்துபோன நன்னம்பிக்கை கிறிஸ்தியானிடம், "நாம் இப்போது எங்கே இருக்கிறோம்?" என்று கேட்டான்.

"தெரியவில்லையே!" என்று கூறிய கிறிஸ்தியான் தன்னால் தானே அவர்கள் இந்தத் தவறான வழிக்கு வந்து வேதனைப்பட வேண்டியிருக்கிறது என்று எண்ணிக் கலங்கினான்.

அவ்வேளையில் புயல் காற்று வீசியது. மின்னல் பளிச்சிட, இடிஇடிக்க கனத்த மழை பெய்தது. மழைநீர் வெள்ளமாகத் திரண்டு ஓடியது.

"ஐயோ, நாம் ஏன் வழிவிலகி இங்கு வந்தோம்?" என்று புலம்பினான் நன்னம்பிக்கை.

"இது அபாயகரமான வழி என்று எனக்குத் தெரிய வில்லையே!" என்று அங்கலாய்த்தான் கிறிஸ்தியான்.

"முதலிலேயே இந்த வழியைப்பற்றி எனக்குச் சந்தேகம் ஏற்பட்டது. அதனால்தான் பொறுமையோடு நான் எச்சரித்தேன். நீர் என்னைவிட வயதில் முதிர்ந்தவராக இருந்தபடியால் எதிர்த்துப் பேச முடியவில்லை" என்றான் நன்னம்பிக்கை.

"என்னை மன்னித்துவிடு. இவ்வாறு வழிவிலகச் செய்ததற்காக நான் வருத்தப்படுகிறேன். நடப்பதற்கு எளிதாக இருக்கும் என்ற எண்ணத்தில்தான் நான் இந்த வழியைத் தெரிந்தெடுத்தேன். தயவுசெய்து என்னை மன்னித்துவிடு" என்று கேட்டுக் கொண்டான் கிறிஸ்தியான்.

"கவலைப்படாதீர் நண்பரே, நான் உம்மை மன்னித்து விட்டேன். நாம் இங்கே வந்ததுகூட ஏதாவது நன்மைக்காக இருக்கலாம்" என்று கூறினான் நன்னம்பிக்கை.

''என்மீது கோபப்படாமல் நீ தயவுள்ள நண்பனாக இருப்பதற்கு நன்றி. இனிமேலும் நாம் இங்கே இருக்கக் கூடாது. உடனே திரும்பிச் செல்லலாம்'' என்று அவசரப்படுத்தினான் கிறிஸ்தியான்.

''சரி நான் முன்னால் போகிறேன். நீர் என் பின்னால் வாரும்'' என்றான் நன்னம்பிக்கை.

''இல்லை இல்லை, நானே முன்னால் போகிறேன். நமது இந்த நிலைமைக்கு நான்தானே காரணம்! மறுபடியும் ஏதாவது ஆபத்து நேரிட்டால் அதை முதலில் நான் சந்திக்கிறேன்'' என்றான் கிறிஸ்தியான்.

''இல்லை நண்பரே, உமது மனதில் குழப்பம் இருக்கிறது. மறுபடியும் ஒருவேளை நீர் பாதை மாறிவிடலாம்'' என்று நன்னம்பிக்கை சொல்லிக் கொண்டிருந்தபோதே ''நீ நடந்துவந்த பாதைக்கே திரும்பு'' என்று அவர்களுக்கு உருக்கமூட்டும் வகையில் எழுந்த ஒரு குரலைக் கேட்டார்கள்.

இதற்குள்ளாக அவர்கள் வந்த வழி வெள்ளப் பெருக்கில் மூழ்கிப் போயிருந்தது. என்றாலும் அந்த வெள்ளத்தின் ஊடேயும் அவர்கள மிகவும் கடினப்பட்டு ஊர்ந்து வந்தார்கள். தவறான பாதையில் செல்வது எளிதாகத்தான் இருக்கிறது. ஆனால் அதைவிட்டு மறுபடியும் சரியான வழிக்கு வருவதுதான் கடினமாக இருக்கிறது அல்லவா?

இருளில் வெள்ளத்தின் நடுவே நடந்து செல்ல வேண்டியிருந்தது. கழுத்தளவு உயர்ந்து வந்த நீர் அவர்களைப் பயமுறுத்தியது. சில வேளைகளில் அவர்கள் பாதை தவறி நீரில் மூழ்கி மறுபடியும் கடினப்பட்டு பாதையின்மேல் ஏற வேண்டி யிருந்தது.

ஆனாலும்கூட அவர்க்ளால் அந்தப் படிக்கட்டுப் பாதையைக் கண்டுபிடிக்க முடியவில்லை. விடியும்வரை காத்திருக்கலாம் என்ற எண்ணத்தில் ஒதுங்கக் கிடைத்த சிறிதளவு இடத்தில்[1] அமர்ந்து விட்டார்கள். களைப்பு மிகுதியால் அப்படியே கண்ணயர்ந்தார்கள்.[2]

26. கடும்பயங்கர அரக்கனின் பிடியில் சிக்குதல்

அவர்கள் உறங்கிக் கொண்டிருந்த இடத்திற்கு அருகே

---

1. அவர்கள் மனச்சாட்சியை ஏதோ சாக்குப் போக்கு சொல்லிச் சமாதானப் படுத்திக் கொண்டார்கள் என்பதையே இது குறிக்கிறது.

2. தங்கள் தவறான நடத்தையால் ஏற்பட்ட பரிதாபமான நிலையைப்பற்றி அக்கறையின்றி இருப்பது.

'சந்தேகக் கோட்டை'[1] என்ற கோட்டை இருந்தது. அவர்கள் தங்கியிருந்த இடமும் அந்தக் கோட்டையும் கடும்பயங்கர அரக்கன் என்ற அரக்கனுக்குச் சொந்தமானவை.

மறுநாள் அதிகாலையிலேயே எழுந்துவிட்ட அந்த அரக்கன் தன்னுடைய நிலத்தைச் சுற்றி வந்தான். அப்போது கிறிஸ்தியானும், நன்னம்பிக்கையும் உறங்கிக் கொண்டிருப்பதைக் கண்டு கடுங்கோபம் கொண்டான்.

"யார் நீங்கள்?" ம்....ம் எழுந்திருங்கள்" என்று சத்தம் போட்டான். அவர்கள் அலறியடித்துக் கொண்டு எழுந்தார்கள்.

"இது என்னுடைய இடம். இங்கே எப்படி வந்தீர்கள்? என்ன செய்கிறீர்கள்?" என்று கோபமாகக் கேட்டான் அவன்.

"ஐயா, நாங்கள் மோட்சப் பயணிகள். பாதை தெரியாமல் இங்கே வந்துவிட்டோம். எங்களை மன்னித்துகொள்ளுங்கள்" என்று கிறிஸ்தியானும், நன்னம்பிக்கையும் கெஞ்சினார்கள்.

அந்த அரக்கனின் கோபம் அதிகமாகியது. "செய்வதையும் செய்துவிட்டு மன்னிப்பா கேட்கிறீர்கள்? இது என்னுடைய இடம். உங்கள் கால்களால் அதை மிதித்து நாசமாக்கியதோடு மட்டுமல்லாமல், படுத்து உறங்கிப் பாழ்பண்ணிவிட்டீர்கள். உங்களைக் கண்டிப்பாகத் தண்டித்தே ஆக வேண்டும். ம்....ம் முன்னால் நடந்துபோங்கள்" என்று உறுமிய அரக்கன் அவர்களைத் தள்ளிச் சென்றான்.

அவனது பராக்கிரமத்தையும், மூர்க்க குணத்தையும் கண்ட மோட்சப் பயணிகளால் ஒன்றும் பதில் கூற முடியவில்லை.

அவர்களை இழுத்துச் சென்று அரக்கன் தனது கோட்டையிலிருந்த ஒரு சிறைக்குள் தள்ளி அடைத்தான். எங்கும் ஒரே இருள்! துர்நாற்றம் வேறு வீசியது!

இந்தப் பரிதாபகரமான இடத்தில் புதன்கிழமை காலைமுதல் சனிக்கிழமை இரவுவரை அடைக்கப்பட்டிருந்தார்கள். உண்ண உணவோ, குடிக்க நீரோ கொடுக்கப்படவில்லை! எவருமே அவர்களை எட்டிக்கூட பார்க்கவில்லை! அவர்களது சிநேகிதர்களும், தோழர்களும் அவர்கள் இருக்குமிடம் அறியாமல் தூரமாய் விலகியிருந்தார்கள் (சங். 88:18). தனது அவசரபுத்தியும் அறியாமையும்தானே இதற்குக் காரணம் என்று மனம் நொந்த கிறிஸ்தியான், சிறைச்சாலை வேதனைகளோடு இரு மடங்கு வேதனை அனுபவித்தான்.

---

1. சந்தேகக் கோட்டை - உண்மைக் கிறிஸ்தவர்கள் பாவத்துக்கு இடம் கொடுத்த பின்பு அவர்கள் மனதில் தங்கள் இரட்சிப்பைக் குறித்து ஏற்படும் ஐயத்தை இது குறிக்கிறது.

அந்த அரக்கனின் மனைவியின் பெயர் **அவிசுவாசம்**. கணவனைப்போலவே அவளும் மிகவும் கொடூரமானவள்.

இரவில் படுக்கைக்குச் செல்லும்போது அந்த அரக்கன் தன் மனைவியிடம், "என் அன்பே, இன்று நமது இடத்தில் இரண்டு மோட்சப் பயணிகள் படுத்துத் தூங்கிக் கொண்டிருந்தார்கள். அவர்களைப் பிடித்து நான் பாதாளச் சிறையில் அடைத்திருக்கிறேன். அவர்களுக்கு என்ன தண்டனை கொடுப்பது?" என்று கேட்டான்.

"ஆகா, யார் அவர்கள்? எங்கேயிருந்து வருகிறார்கள்? எங்கே போகிறார்கள்?" என்று ஆவலோடு கேட்டாள் அவிசுவாசம்.

அரக்கன் அவர்களைபற்றித் தான் அறிந்துகொண்டதையெல்லாம் அவளிடம் கூறினான்.

"ரொம்பவும் நல்லதாகப் போய்விட்டது. காலையில் எழுந்தவுடன் அவர்களை நன்றாக அடித்துத் துன்புறுத்தும்" என்று யோசனை கூறினாள்.

மறுநாள் காலையில் விடியும்போதே எழுந்த அரக்கன் ஒரு கனத்த தடியை எடுத்துக்கொண்டு சிறைச்சாலைக்குச் சென்றான்.

மோட்சப் பயணிகள் இருவரையும் அவமானப்படுத்தும் வண்ணமாகத் தகாத வார்த்தைகளைப் பேசினான். அவர்களோ ஒரு சொல்கூட எதிர்த்துப் பேசவில்லை. என்றாலும் கையில் கொண்டு சென்றிருந்த தடியால் அவர்களை நையப் புடைத்தான். வேதனையில் நகரக் கூடாத அளவு அடித்துவிட்டு கதவைப் பூட்டித் திரும்பினான்.

பயணிகள் இருவரும் வேதனையால் அங்கலாய்த்தபடியே அந்த நாளைக் கழித்தார்கள்.

அன்று இரவு, "என்ன, அவர்கள் இருவரும் இறந்து போய்விட்டார்களா?" என்று தன் கணவனிடம் கேட்டாள் அவிசுவாசம்.

அவர்கள் இன்னும் உயிரோடிருக்கிறார்கள், என்று கேள்விப் பட்டவுடன் அவள் எரிச்சலடைந்தாள்.

"நாளை காலையிலேயே போய் அவர்கள் தங்களைத் தாங்களே மாய்த்துக்கொள்ளும்படி தூண்டிவிடும்" என்று ஆலோசனை கூறினாள் அவிசுவாசம்.

அவள் சொன்னபடியே அரக்கன் மறுநாள் காலையில் சிறைச்சாலைக்குச் சென்றான். பயணிகள் அசையக்கூட முடியாமல் அப்படியே கிடப்பதைக் கண்டான்.

"என்ன இந்தச் சிறையைவிட்டு வெளியே போக ஆசைப் படுகிறீர்களா?" அப்படியானால் தற்கொலை செய்துகொள்வதைத் தவிர வேறு வழியில்லை. கத்தியால் குத்திகொண்டோ, தூக்குப் போட்டுக்கொண்டோ உயிரை மாய்த்துக்கொள்ளுங்கள். புலம்பிக் கொண்டிருப்பதில் என்ன பயன்? கசப்போடு வாழ்வதில் என்ன பயன்?" என்றெல்லாம் பேசினான் அந்த அரக்கன்!

இதைக் கேட்டவுடன் கிறிஸ்தியானும், நன்னம்பிக்கையும் நம்பிக்கையிழந்து தற்கொலை செய்துகொள்வார்கள் என்று அந்த அரக்கன் எதிர்பார்த்தான்.

ஆனால் அவர்களோ தங்களை அனுப்பிவிடும்படி அவனிடம் கெஞ்சினார்கள்.

இதைக் கேட்டு கடுங்கோபம் கொண்ட அரக்கன் அவர்களைத் தாக்குவதற்காக அவர்கள்மேல் பாய்ந்தான்.

அப்போது கோடைகாலத்தில் அவனுக்கு வழக்கமாக வரும் வலிப்பு வந்துவிட்டது. தள்ளாடிய அவன் கீழே விழுந்து கை, கால்களை அசைக்க முடியாமல் அப்படியே கிடந்தான். அப்படி அவன் விழாமலிருந்தால் பயணிகள் இருவரையும் நிச்சயம் கொன்று போட்டிருப்பான்!

சற்று நேரம் கழித்து எழுந்த அரக்கன் இன்னும் பலவீனமானவனாகவே இருந்தான். ஒன்றும் பதில் பேசாமல் ஏதோ யோசனையில் திரும்பிப் போய்விட்டான்.

அவன் போனவுடன் கிறிஸ்தியான், நன்னம்பிக்கையைப் பார்த்து:

"தம்பி, தப்பிப் பிழைப்போம் என்ற நம்பிக்கையில்லாத நிலையில் நாம் இனிமேல் என்ன செய்வது? இதைப் போன்ற மோசமான நிலையில் இன்னும் தொடர்ந்து வாழ்வதா? அரையும் குறையுமாகச் செத்து மடிவதை விட ஒரேயடியாகத் தற்கொலை செய்துகொள்வதுதான் மேல் என்று எனக்குத் தோன்றுகிறது. இந்தச் சிறைச் சாலையைவிட கல்லறைக்கே போய்விடலாம் போலிருக்கிறது (யோபு 7:15). நீ என்ன சொல்லுகிறாய்?" என்று கேட்டான்.

"என்ன அப்படிக் கேட்கிறாய்? நாம் இப்போது இருக்கும் நிலை பரிதாபகரமானது என்பது உண்மைதான். ஆனாலும் நாம் எப்படி நம்மை நாமே கொன்றுகொள்ள முடியும்? நாம் நாடிச் செல்கிறோமே அந்தப் பரலோகத்தின் ஆண்டவர் என்ன சொல்லியிருக்கிறார் என்பதை மறந்துவிட்டாயா? 'கொலை செய்யாதிருப்பாயாக' என்பது அவரது பத்துக் கட்டளைகளில்

ஒன்று அல்லவா? நம்மை நாமே அழித்துக்கொள்வதும் ஒரு கொலைதானே? அதுமட்டுமா? மற்ற ஒருவனைக் கொன்றால் அவன் சரீரத்தை மட்டுமே அழிக்கிறோம். ஆனால் தற்கொலை செய்யும்போது நாம் நமது சரீரம், ஆத்துமா இரண்டுக்குமே அழிவைக் கொண்டுவருகிறோம் அல்லவா? நாம் இவ்வளவு தூரம் பரலோகத்தை நோக்கிப் பயணம் வந்து என்ன பயன்? கொலைகாரனுக்குரிய நித்திய தண்டனையை ஏற்று நாம் நரகத்துக்கு அல்லவா செல்லவேண்டியிருக்கும்?'' என்று கூறி நன்னம்பிக்கை கிறிஸ்தியானைக் கடிந்துகொண்டான். பதில் பேச முடியாமல் தலைகுனிந்தான் கிறிஸ்தியான்.

"ஏன் நாம் கலங்க வேண்டும்? இந்த அரக்கனின் கையில் சிக்கிய அநேகர் இறுதியில் அவனிடமிருந்து தப்பியிருக்கிறார்கள் என்பதை நாம் வரலாற்றின்மூலம் அறிந்திருக்கிறோம் அல்லவா? இவனையும்விட அனைத்தையும் படைத்த ஆண்டவர் மகா வல்லமையுடையவர் என்பதை மறந்துவிட்டாயா? அவர் நினைத்தால் இந்த அரக்கனை ஒரு நொடியில் கொன்றுபோட முடியும் அல்லவா? அல்லது நம்மைப்பற்றி அவன் கொண்டுள்ள கடுங்கோபத்தை ஆண்டவர் தணியச் செய்யலாம். மறுபடியும் வலிப்பு வந்து அவன் விழுந்து கிடக்கும்படி செய்யலாம்" என்று கூறிய நன்னம்பிக்கை திடீரென்று கையை உதறிக் கொண்டான்.

''அடடா, வீண் பயத்தால் நல்ல வாய்ப்பை நழுவ விட்டுவிட்டோமே! வலிப்பு வந்து அவன் விழுந்து கிடந்தபோது நாம் தப்ப வழி தேடியிருக்கலாமே! இனிமேலும் நாம் கவனமாக இருக்க வேண்டும். வாய்ப்புக் கிடைக்கும்போது அவன் கையிலிருந்து தப்பியாக வேண்டும்! அதுவரை பொறுமையாக நமது கடினங்களைச் சகித்துக்கொள்வோம். தற்கொலை செய்து இன்னும் பாவத்தை தேடிக்கொள்ள வேண்டாம்" என்று கூறி நன்னம்பிக்கை கிறிஸ்தியானைச் சமாதானப்படுத்தினான்.

இருவரும் முந்தைய நாளைப்போலவே அன்றும் அந்த இருட்டறையில் அடைந்து கிடந்தார்கள்.

அவர்கள் தனது ஆலோசனைப்படி தற்கொலை செய்து கொண்டார்களா என்பதை நோட்டமிட அரக்கன் மாலை மயங்கும் வேளையில் மறுபடியும் அங்கே வந்தான். ஆனால் அவர்கள் இன்னமும் உயிரோடிருப்பதைக் கண்டு அவனுக்கு எரிச்சல் வந்தது.

உண்ண உணவோ, குடிக்க நீரோ இல்லாமல், காயங்களைக் கவனிப்பதற்கும் யாரும் இல்லாமல் அசைவற்ற நிலையில், அரைகுறை மூச்சுவிட்டுத் திணறிக்கொண்டிருந்த அவர்களின் அருகே நெருங்கினான் அரக்கன்.

"என் யோசனைப்படி உங்கள் உயிரை மாய்த்துக்கொள்ளா விட்டால் கடுமையான சித்திரவதைகளுக்கு ஆளாவீர்கள்" என்று கோபத்துடன் அவர்களை எச்சரித்து உறுமியபடியே திரும்பிச் சென்றான் அரக்கன்.

இரண்டு பயணிகளும் பயத்தால் நடு நடுங்கியபடியே கிடந்தார்கள். இன்னும் சித்திரவதையா? ஐயோ! தாங்க முடியுமா?

''தம்பி எனக்கென்னமோ இன்னும் துன்பங்களை அனுபவிப்பது முடியாத காரியம்போலத் தோன்றுகிறது. அதற்குப் பதில் ஒரேயடியாக உயிரை மாய்த்துக் கொள்ளலாம்" என்று அங்கலாய்க்கத் துவங்கினான் கிறிஸ்தியான்.

''என்ன இப்படிப் புலம்புகிறாய்? இந்தப் பயணத்தில் இதுவரை நீ செய்த வீரதீரச் செயல்களை மறந்துவிட்டீரா? கொடிய அப்பொல்லியோனால்கூட உம்மைத் தோற்கடிக்க முடியவில்லையே! மரண இருளின் பள்ளத்தாக்கிலுள்ள இருளின் சக்திகளாலும் உம்மை ஒன்றும் செய்ய முடியாமல் போயிற்று. இப்போது மட்டும் ஏன் கலங்குகிறீர்? உம்மைவிட பெலவீனனாகிய நானும் உம்மை போலவே இந்த இருட்டறையில் உணவோ, நீரோ இன்றி வேதனைகளைச் சகித்து வருகிறேனே! அந்த மாயாபுரியில் நீர் காட்டிய வீரம்தான் என்ன! உமது திட விசுவாசத்தைக் கண்டுதானே நான் உம்முடன் சேர்ந்து வருகிறேன்! கலங்காமல் பொறுமையாக இரும். நமது எசமானவர் உண்மையுள்ளவர். அவர் நம்மை நிச்சயம் விடுவிப்பார்'' என்று கடந்துபோன நல்ல காரியங்களை எடுத்துக்கூறி கிறிஸ்தியானின் விசுவாசத்தைப் பலப்படுத்தினான் நன்னம்பிக்கை.

அன்று இரவு, அரக்கன் தன் மனைவி அவிசுவாசத்தோடு தனித்திருக்கும் வேளையில் அவள் அவனைப் பார்த்து:

"என் நாயகனே, உன் யோசனையைக் கேட்டு அவர்கள் இருவரும் தங்கள் உயிரைமாய்த்துக் கொண்டார்களா? என்று ஆவலுடன் கேட்டான்.

"சரியான முரடன்கள்போலத் தோன்றுகிறது. சாவதைவிட வேதனைகளைச் சகிப்பதே மேல் என்று நினைத்துக் கொள்கிறார்கள்" என்று சலித்துக் கொண்டான் அரக்கன்.

''அப்படியானால் நீ ஒன்று செய். நாளை அவர்கள் இருவரையும் கூட்டிக் கொண்டு போய், அரண்மனைக்குப் பின்னால் சவக் கிடங்கில் இதற்கு முன்னால் இறந்தவர்களின் எலும்புகளையும், மண்டை ஓடுகளையும் காட்டிப் பயமுறுத்து. அவர்களையும் இதேபோன்று அழித்துப் போடுவதாய் மிரட்டு" என்று யோசனை கூறினாள் அவனது மனைவி அவிசுவாசம்.

மறுநாள் காலை, விடிந்த்வுடன் அரக்கன் நேரே அந்தப் பயணிகளிடம் சென்றான். அவர்களைத் தரதரவென்று இழுத்து கொண்டுபோய் எலும்புக் குவியல்களைக் காட்டினான்.

"இதோ உங்களைபோன்ற இறுமாப்பு பிடித்த பயணிகளின் கதியைப் பார்த்தீர்களா? எனது இடத்துக்குள் அநியாயமாக நுழைந்த அவர்கள் பரிதாபமாகப் போய் விட்டார்கள். என் கையாலேயே அவர்களை நார் நாராய்க் கிழித்து எறிந்து விட்டேன். ஹாஹா, உங்களுக்கு இன்னும் பத்தே நாள் அவகாசம் கொடுக்கிறேன் நீங்களாகத் தற்கொலை செய்து கொண்டால் வேதனை இல்லை. இல்லாவிடில் அணு அணுவாகச் சித்திரவதை அனுபவிக்க வேண்டியதுதான்" என்று கொர்ச்சித்த அரக்கன் அவர்களை மறுபடியும் சிறையில் அடைத்துவைத்தான்.

தன் கை வலிக்கும்வரை அவர்களை அடித்துத் துன்புறுத்தினான் அரக்கன். ஆனால் அவர்களோ ஒன்றும் பதில் பேசவில்லை!

அன்று இரவு அவிசுவாசம் மறுபடியும் தன் கணவனோடு அந்தக் கைதிகளைப்பற்றி ஆலோசனை செய்யத் துவங்கினாள்.

"அன்பே அவிசுவாசமே, நான் எவ்வளவாக அவர்களைப் பயமுறுத்தினாலும், கைவலிக்க அடித்தாலும் அனைத்தையும் சகித்துக்கொண்டு அவர்கள் பேசாமல் இருந்துவிடுகிறார்கள். எனக்கு ஒரே வியப்பாக இருக்கிறது!" என்றான் அரக்கன்.

"ஓகோ, எனக்கு இப்போது புரிந்துவிட்டது. யாரோ வந்து அவர்களை விடுவிப்பார் என்ற நம்பிக்கையில் இருப்பதுபோலத் தோன்றுகிறது. அல்லது இப்படியும் இருக்கலாமோ? அவர்களிடம் பல்வேறு சாவிகள் இருக்கலாம். ஏதேனும் ஒன்றினால் சிறைச்சாலையைத் திறந்து தப்பிவிடலாம் என்ற எண்ணத்தில் இருக்கிறார்கள் போலிருக்கிறது" என்று ஐயம் கிளப்பினாள் அவிசுவாசம்.

"அப்படித்தான் இருக்கும். நாளை காலை முதல் வேலையாக அவர்களைச் சோதனையிட வேண்டும்" என்று முடிவு செய்தான் அரக்கன்.

இவ்வேளையில் பயணிகள் இருவரும் ஆண்டவரை நோக்கி ஊக்கமாக ஜெபித்துக் கொண்டிருந்தார்கள். காலைவரை இந்த ஜெபம் தொடர்ந்தது.

திடீரென்று விழித்துக் கொண்டவன்போல கூக்குரலிட்டான் கிறிஸ்தியான்.

''என்னைப்போன்ற ஒரு மடையன் உண்டா? இந்த இருட்டறையிலிருந்து தப்புவதற்கான சாவி என்னிடம் இருப்பதை இதுவரை மறந்துவிட்டேனே!'' என்று உற்சாகத்தால் கத்திய கிறிஸ்தியான் தன் மடியிலிருந்த 'வாக்குத்தத்தம்' என்ற இரட்சிப்பின் நிச்சயத்தை உறுதிப்படுத்தும் திறவுகோலை எடுத்துத் தன் நண்பனிடம் காட்டினான்.

"இந்தச் சாவியைக் கொண்டு சந்தேகக் கோட்டையின் எந்தப் பூட்டையும் திறந்துவிடலாமே!" என்று மகிழ்ச்சியுடன் கூறினான் கிறிஸ்தியான்.

"அப்படியானால் இனி என்ன தயக்கம்? உடனே இதைப் பயன்படுத்தித் தப்பிச் செல்லலாம்?" என்று அவசரப்படுத்தினான் நன்னம்பிக்கை.

கிறிஸ்தியான் வாக்குத்தத்தம் என்ற அந்தத் திறவு கோலைக் கொண்டு சிறைச்சாலையின் ஒவ்வொரு கதவையும் மிக எளிதாகத் திறந்துவிட்டான்.

கிறிஸ்தியானும், நன்னம்பிக்கையும் சிறையைவிட்டு வெளியே வந்தார்கள். அரண்மனை முற்றத்துக்குப் போகும் கதவையும் திறந்துவிட்டார்கள்!

இனிமேல் வெளியே செல்வதற்கான கதவை திறக்க வேண்டியதுதான். ஆனால் அந்தக் கதவின் பூட்டு துருப்பிடித்துப் போயிருந்தது. சற்றுச் சிரமப்பட்டே அதைத் திறக்க முடிந்தது. ஆனால் கதவைத் திறந்தபோது அது 'கிரீச்' என்ற ஒலி எழுப்பிவிட்டது!

அயர்ந்து உறங்கிக் கொண்டிருந்த அரக்கன் திடுக்கிட்டு விழித்தான். பயணிகள் கதவைத் திறந்து தப்புவதை ஊகித்தான். உடனே ஓடிச்சென்று அவர்களைப் பிடிக்க முயன்றான்.

ஆனால் அதற்குள் வலிப்பு நோயால் அவன் கைகளும், கால்களும் இழுத்துக்கொண்டன. அப்படியே கீழே விழுந்து விட்டான் அவன்.

பயணிகள் இருவரும் விரைவாக ஓடித் தப்பிவிட்டார்கள்.

சற்றுத் தூரம் நடந்து வந்து நீதியின் பாதையாகிய பரலோக பாதையில் வந்து சேர்ந்துகொண்டார்கள். அரக்கனின் எல்லையை விட்டு வெளியேறிவிட்டபடியால் அதன் பிறகு அவனால் அவர்களுக்கு ஆபத்து ஒன்றும் நேரிடவில்லை.

தங்களைப்போலவே பரலோகத்தை நோக்கிப் பயணமாக வருபவர்கள் வழிதவறி அந்த அரக்கனின் பிடியில் சிக்கிக்

கொள்ளக்கூடாது என்று தீர்மானித்த பயணிகள் அந்த இடத்தில் எச்சரிப்புப் பலகை ஒன்றை நிறுவ முடிவு செய்தார்கள்.

அரக்கனின் அரண்மனைக்குச் செல்லும் படிக்கட்டின் அருகே அவர்கள் ஒரு பலகையில் கீழ்கண்டவாறு செதுக்கிவைத்தார்கள்.

"ஒரு பயங்கரமான அரக்கனால் கட்டி எழுப்பப்பட்ட படிக்கட்டுப் பாதைதான் இது. இதன் வழியே சென்றால் அவனுடைய சந்தேகக் கோட்டையில் சிக்கிக்கொள்ள நேரிடும். அவன் பரலோக பிதாவுக்குப் பெரிய விரோதியாவான். பரலோகம் செல்லும் பயணிகளை அழிப்பதே அவன் நோக்கம்!"

அவர்களுக்குப் பிறகு அந்த இடத்தை வந்தடைந்த பிற பயணிகள் இதனால் எச்சரிப்படைந்து, அரக்கனின் கைகளில் பிடிபடாமல் தப்பினார்கள். பரலோக பாதையில் பயமின்றித் தொடர்ந்தார்கள்.

கிறிஸ்தியானும், நன்னம்பிக்கையும் தாங்கள் அந்த அரக்கனிடமிருந்து தப்பி வந்ததை ஒரு பாடலாகப் பாடிய படியே நடந்து செல்வதை நான் என் கனவில் கண்டேன்.

"நடப்போம் நடப்போம்
விழிப்போடு நடப்போம்
மோட்சப்பாதை தவறினால்
அழிவைச் சந்திப்போமே
கெட்ட அரக்கன் நம்மையே
அழிக்கச் சித்தம் கொண்டான்
மட்டற்ற அன்பினால் நம்
ஆண்டவர் நம்மை விடுவித்தார்!"

என்று ஆண்டவரைத் துதித்தபடியே அவர்கள் நடந்து சென்றார்கள்.

27. மகிழ்ச்சி மலையை வந்தடைதல்

மகிழ்ச்சி மலை[1] என்ற மலைப் பகுதியை அடையும் வரை அவர்கள் பேசிக் கொண்டே நடந்து சென்றார்கள்.

அருமையான பச்சை பசேலென்ற தோட்டங்கள்! வண்ண வண்ண மலர்கள் பூத்துக் குலுங்கும் நந்தவனங்கள்! வெள்ளிக் கம்பியென பளபளப்புடன் ஓடிவரும் நீரூற்றுக்கள்!

---

1. மகிழ்ச்சி மலை என்பது கிறிஸ்தவர்கள் முதிர் வயதில் அனுபவக்கும் சமாதானத்தையும், மகிழ்ச்சியையும் குறிக்கிறது.

இவற்றைக் கண்டுகளிக்கும் ஆர்வத்துடன் பயணிகள் மலைச் சரிவின்மீது ஏறினார்கள்.

மோட்சம் செல்லும் பாதை அந்த மலையின் வழியாகவே சென்றது. பாதையின் இருபுறமும் மேய்ப்பர்கள் தங்கள் ஆடுகளை மேய்த்துக் கொண்டிருந்தார்கள்.

"ஐயா, இவை யாருடைய ஆடுகள்?" என்று மேய்ப்பர் களோடு மெல்லப் பேச்சுக் கொடுத்தான் கிறிஸ்தியான்.

"இந்த மலைப்பகுதி இம்மானுவேலரின் நிலத்தில் ஒரு பகுதிதான். மலையுச்சியிலிருந்து பார்த்தால் அவரது பட்டணத்தைக் காணலாம். இந்த ஆடுகள் அவருடையவையே! அவர் இந்த ஆடுகளுக்காகத் தமது ஜீவனையும் கொடுத் திருக்கிறார்" என்றான் மேய்ப்பர்களில் ஒருவன்.

"பரலோக பட்டணம் செல்லும் வழி இதுதானா?" என்று கேட்டான் கிறிஸ்தியான்.

"நீ செல்லும் பாதை சரிதான்" என்றான் மற்றொரு மேய்ப்பன்.

"அப்படியா? இன்னும் எவ்வளவு தூரம் இருக்கிறது?" என்று ஆவலாகக் கேட்டான் கிறிஸ்தியான்.

"அங்கே சென்று சேரத் தகுதியில்லாதவர்களுக்கு அது இன்னமும் வெகு தூரம்தான்" என்று பதிலளித்தான் அந்த மேய்ப்பன்.

"பாதை பாதுகாப்பானதா அல்லது அபாயகரமானதா?" என்று அறிந்துகொள்ள விரும்பினான் கிறிஸ்தியான்.

"பாதுகாப்பாக நடந்து செல்பவர்களுக்கு அது பாதுகாப்பானதுதான்! பாதகரோவென்றால் அவைகளில் இடறி விழுவார்கள்" (ஓசியா 14:9) என்றான் மேய்ப்பன்.

"பயணத்தில் களைப்படைபவர்கள் தங்கி ஓய்வெடுக்க ஏதேனும் இடம் உண்டா?" என்று கேட்டான் கிறிஸ்தியான்.

"இங்கே பயணமாக வரும் அந்நியரை உபசரிக்க வேண்டும் (எபி. 13:2) என்று எங்கள் எசமான் எங்களுக்குக் கட்டளை யிட்டிருக்கிறார். எனவே இந்த மலைகளின் நன்மைகள் யாவும் நீங்கள் அனுபவிப்பதற்காகவே கொடுக்கப்பட்டுள்ளன. நீங்கள் அவற்றைப் புசித்து இளைப்பாறலாம்" என்று புன்சிரிப்புடன் கூறினான் அந்த மேய்ப்பன்.

அந்த இருவரும் பரலோகம் நோக்கிச் செல்லும் பயணிகள் என்பதை அறிந்தவுடன் மேய்ப்பர்கள் அவர்களிடம், "நீங்கள்

எங்கேயிருந்து வருகிறீர்கள்? இதுவரை எப்படி வந்தீர்கள்? இவ்வாறு நீங்கள் முயற்சியுடன் முன்னேறி வருவதற்குக் காரணம் என்ன? எதிர் நோக்கிய சோதனைகள் என்னென்ன?'' என்றெல்லாம் ஆவலுடன் கேட்டார்கள்.

மேய்ப்பர்களின் ஆர்வத்துக்கும் காரணம் இருந்தது. ஏனெனில் அந்தப் பகுதிவரை வந்துசேரும் பயணிகளின் எண்ணிக்கை மிகவும் குறைவாகவே இருந்தது!

கிறிஸ்தியானும், நன்னம்பிக்கையும் தங்கள் அனுபவங்களை அவர்களுக்கு விரிவாக எடுத்துச் சொன்னார்கள். அதைக் கேட்டு மகிழ்ச்சியடைந்த மேய்ப்பர்கள் அவர்களை அன்புடன் பராமரித்தார்கள்.

“அன்புக்குரியவர்களே, உங்களை இந்த மகிழ்ச்சி மலைப் பகுதியில் வரவேற்பதற்கு மகிழ்ச்சியடைகிறோம்!'' என்று அவர்களை வரவேற்றார்கள் அந்த மேய்ப்பர்கள்.

அறிவு, அனுபவம், விழிப்பு, மெய்ம்மை என்ற அந்த மேய்ப்பர்கள்[1] நால்வரும் அவர்களைக் கரம் பிடித்து தங்கள் கூடாரத்திற்கு அழைத்துச் சென்றார்கள். தங்கள் உணவை அவர்களோடு பகிர்ந்து கொண்டார்கள்.

''நீங்கள் கொஞ்சக் காலமாவது எங்களோடு தங்கினால் உங்களைப்பற்றி நாங்கள் இன்னுமதிகமாக அறிந்துகொள்ள முடியும். அதுமட்டுமின்றி இந்த மலையின் ஆசீர்வாதங்களையும் நீங்கள் அனுபவிக்கலாம்'' என்று பயணிகளிடம் கேட்டுக் கொண்டார்கள்.

பயணிகளும் அதற்குச் சம்மதித்தார்கள் இரவு வெகு நேரமாகிவிட்டபடியால் ஓய்வெடுக்கச் சென்றார்கள்.

மறநாள் காலையில் மேய்ப்பர்கள் பயணிகள் இருவரையும் தங்களுடன் உலாவ அழைத்துச் செல்வதை நான் என் கனவில் கண்டேன். இயற்கையின் பேரழகை இரசித்தபடியே அவர்கள் நடந்து சென்றார்கள்.

“நாம் இவர்களுக்குச் சில அற்புதங்களைக் காட்டலாமா?'' என்று மேய்ப்பர்கள் தங்களுக்குள் ஆலோசித்தார்கள். நால்வரும் ஒரே மனதாக முடிவு செய்தார்கள்.

முதலில் அவர்கள் **வேதப் புரட்டல்** என்ற மலையுச்சிக்கு

---

1. ஆடுகளுக்காகத் தம் ஜீவனைக் கொடுத்த பிரதான மேய்ப்பனாகிய இயேசுவானவரின் உண்மையான ஊழியர்களே மேய்ப்பர்கள் என்றழைக்கப் படுகின்றனர்.

பயணிகளை அழைத்துச் சென்றார்கள். அந்த மலையின் மறுபுறம் செங்குத்தான பாதாளமாக இருந்தது. அதன் அடித்தளத்தை எட்டிப்பார்க்கும்படி மேய்ப்பர்கள் பயணிகளிடம் கேட்டுக்கொண்டார்கள்.

கீழே எட்டிப் பார்த்த கிறிஸ்தியானும், நன்னம்பிக்கையும் அதிர்ந்து போய்விட்டார்கள். மலையுச்சியிலிருந்து கீழே விழுந்தவர்களின் சடலங்கள் சின்னாபின்னமாக இறைந்து கிடந்தன!

"இதன் பொருள் என்ன?" என்று படபடப்புடன் கேட்டான் கிறிஸ்தியான்.

"சரீர உயிர்த்தெழுதலைப்பற்றி இமநேயு, பிலேத்து இருவரும் அளித்த தவறான உபதேசங்களைப்பற்றி நீ கேள்விப் பட்டிருக்கிறாயா?" என்று மேய்ப்பர்கள் கேட்டார்கள்.

ஆமென்று தலையாட்டினார்கள் பயணிகள் இருவரும்.

"அவர்களின் தவறான போதனைகளுக்குச் செவி சாய்த்தவர்கள்தான் இவ்வாறு சிதைந்து கிடக்கிறார்கள். இன்றுவரை அவர்களது சடலங்கள் அடக்கம் பண்ணப்படாமைக்கு காரணம் என்ன தெரியுமா? செங்குத்தான இந்தப் பகுதியின் வழியாக அவர்கள் இந்த மலைமீது ஏற முயன்றதினால் அவர்கள் அடைந்த கதி மற்றவர்களுக்கும் எச்சரிப்பாக இருக்க வேண்டும் என்பதற்காகத்தான்" என்றான் ஒரு மேய்ப்பன்.

அதன்பிறகு மேய்ப்பர்கள் பயணிகளை எச்சரிப்பு[1] என்ற பெயரையுடைய மற்றொரு மலையுச்சிக்கு அழைத்துச் செல்வதை நான் என் கனவில் கண்டேன்.

"அதோ, தூரத்தில் பாருங்கள்" என்று மேய்ப்பர்கள் அவர்களிடம் கேட்டுக் கொண்டார்கள்.

கிறிஸ்தியானும், நன்னம்பிக்கையும் எட்டிப் பார்த்தார்கள்.

அங்கே கல்லறைகளின் நடுவே அநேகர் அங்குமிங்குமாக நடந்து திரிவதை கண்டார்கள். அவர்களுக்குக் கண் பார்வை இல்லை! சிலவேளைகளில் கல்லறைகளின் மீது தடுக்கி விழப் பார்த்தார்கள்! அங்கேயிருந்து அவர்களால் வெளியேற முடியவில்லை!

"யார் இவர்கள்?" என்று சற்றே பயத்துடன் கேட்டான் கிறிஸ்தியான்.

---

1. எச்சரிப்பு-மற்றவர்களுக்கு நேரிட்டதைக் கண்டு அவர்கள் எச்சரிப்பு உணர்வைப்பெற வேண்டும் என்பதே இதன் பொருள்.

"நீங்கள் வரும் வழியில், பாதையின் இடது பக்கமாக புல்வெளிக்கு இட்டுச் செல்லும் படிக்கட்டுப் பாறை ஒன்றைக் கவனித்தீர்களா?" என்று கேட்டான் ஒரு மேய்ப்பன்.

"ஆம்" என்று மட்டுமே பயணிகள் கூறினார்கள்.

"அந்தப் பாதை சந்தேகக் கோட்டை என்ற கோட்டையை நோக்கிச் செல்கிறது. வீண் நம்பிக்கை என்ற கொடூரமான அரக்கன் அங்கே குடியிருக்கிறான். இதோ இந்த மனிதர்கள் பயணம் புறப்பட்டு வந்தவர்கள்தான். ஆனால் அந்தப் படிக்கட்டுப் பாதையை அணுகும்போது சரியான பாதை கரடுமுரடாக இருந்தபடியால், புல்வெளிப் பாதையில் சென்று வீண்நம்பிக்கை என்ற அந்த அரக்கனின் பிடியில் சிக்கிக் கொண்டார்கள். அவன் அவர்களைச் சந்தேகக் கோட்டையின் பிரதானச் சிறையில் அடைத்து வைத்துச் சித்திரவதை செய்தான். அவர்கள் கண்களைப் பிடுங்கிவிட்டு, இந்நாள்வரை இந்தக் கல்லறைகளின் நடுவே அலைந்து திரியும்படி விட்டு விட்டான். 'அறிவின் பாதையில் நடக்காத மனிதன், மரித்தவர்களின் மத்தியில் மரண அவஸ்தைப்படுவான்' என்ற முதுமொழிக்கேற்ப நடந்துவிட்டது" என்றான் ஒரு மேய்ப்பன்.

கிறிஸ்தியானும், நன்னம்பிக்கையும் ஒருவரையொருவர் பார்த்துக் கொண்டார்கள். அவர்களது கண்களிலிருந்து நீர் வழிந்தது. என்றாலும் மேய்ப்பர்களிடம் அவர்கள் ஒன்றுமே கூறவில்லை!

அதன்பிறகு அந்த மேய்ப்பர்கள் பயணிகள் இருவரையும் ஒரு பள்ளத்தாக்குக்கு அழைத்துச் செல்வதை நான் என் கனவில் கண்டேன். அங்கே ஒரு மலையின் அடிவாரத்தில் ஒரு கதவு காணப்பட்டது. அந்தக் கதவைத் திறந்த மேய்ப்பர்கள் பயணிகளை உள்ளே பார்க்கும்படி கேட்டுக்கொண்டார்.

இருள் நிறைந்த உட்பகுதியிலிருந்து புகை கிளம்பிவந்தது. அதுமட்டுமன்றி நெருப்பு கொழுந்துவிட்டு எரிகிற இரைச்சல் கேட்டது. வேதனையில் கூக்குரல் இடுபவர்களின் குரலும் காதுகளில் விழுந்தது. கந்தகம் எரியும் துர்நாற்றம் மூக்கைத் துளைத்தது.

"இதன் பொருள் என்ன?" என்று மூக்கைச் சுளித்தபடியே கேட்டான் கிறிஸ்தியான்.

"இது நரகத்துக்கு செல்லும் ஒரு பக்க வழியாகும். மாய் மாலக்காரர்கள் இந்த வழியாகவே நரகத்தைச் சென்றடை கிறார்கள். ஏசாவைப்போன்று பிறப்புரிமையை விற்றுப் போட்டவர்களும், யூதாசைப்போன்று எசமானரைக் காட்டிக்

கொடுத்தவர்களும், அலெக்சாண்டரைப்போன்று நற்செய்தியை இழிவுப்படுத்திக் கூறியவர்களும், அனனியா, சப்பீராளைப் போன்று பொய்கூறிப் பித்தலாட்டம்பண்ணுபவர்களும் இந்த வழியாகத்தான் நரகத்துக்குச் செல்கிறார்கள்'' என்று விளக்கினான் ஒரு மேய்ப்பன்.

உடனே நன்னம்பிக்கை அந்த மேய்ப்பனைப் பார்த்து, ''ஒருவேளை இவர்களும் எங்களைப்போன்ற மோட்சப் பயணிகள் போன்ற கபட வேடம் தரித்து வந்தார்களோ?" என்று கேட்டான்.

"ஆமாம், நீண்ட நாள்களாக அவர்கள் இந்த வேடம் தரித்து வந்தார்கள்" என்றான் அந்த மேய்ப்பன்.

''இவ்வாறு இவர்கள் நரகத்துக்குள் தள்ளப்படுமுன்பு எவ்வளவு தூரம் பயணம் செய்து வந்திருக்கிறார்கள்?" என்று கேட்டான் நன்னம்பிக்கை.

"சிலர் இந்த மலைவரை வந்திருக்கிறார்கள். வேறு சிலரோ இன்னும் சற்றுத் தொலைவுவரைகூடச் சென்றிருக்கிறார்கள்'' என்றான் மேய்ப்பன்.

"இத்தகைய சோதனைகளை வெற்றிகொள்வதற்கு எல்லாம் வல்லவர் நமக்குப் போதிய வல்லமையைத் தர வேண்டுமென்று நாம் வேண்டிக்கொள்வது அவசியமல்லவா?" என்று பயணிகள் ஒருவரோடொருவர் பேசிக் கொண்டார்கள்.

"ஆம், அத்தகைய வல்லமை உங்களுக்கு நிச்சயம் தேவைப் படும்" என்று மேய்ப்பர்கள் ஒப்புக்கொண்டார்கள்.

இதற்குள்ளாக பயணிகள் தங்கள் பயணத்தைத் தொடர வாஞ்சித்தார்கள். மேய்ப்பர்களும் அதற்குச் சம்மதித்து, மலைப் பகுதி முடியும்வரை அவர்களுடனே நடந்து வந்தார்கள்.

அப்போது ஒரு மேய்ப்பன் மற்றொரு மேய்ப்பனிடம், "நமது தூர நோக்குக் கண்ணாடிமூலம் இவர்களால் பார்க்கக் கூடுமானால் இவர்களுக்கு நாம் பரலோக பட்டணத்தின் வாயில்களைக் காட்டலாமே!" என்று சொல்லிக் கொண்டான்.

அவர்கள் கண்ணாடி என்று குறிப்பிட்டது நமது வேதாகமத்தையே! நாம் விசுவாசம் என்னும் கரத்தால் அதைப் பற்றிக்கொண்டு நமது ஆத்துமாவின் கண்கள் மூலம் பார்க்க வேண்டும். ஆனால் அவிசுவாசத்துக்கு ஏதுவான பய உணர்வு நமது கைகளை நடுங்கச் செய்து பார்வையை மங்கலாக்குகிறது!

மேய்ப்பனின் ஆலோசனைக்குப் பயணிகள் ஆர்வத்தோடு சம்மதிக்கிறார்கள்.

எனவே மேய்ப்பர்கள் அவர்களைத் **தெளிவு சிகரம்** என்ற சிகர உச்சிக்கு அழைத்துச் சென்றார்கள். அவர்கள் பார்க்கும்படி கண்ணாடியை அவர்களிடம் கொடுத்தார்கள்.

பயணிகள் எவ்வளவோ ஆர்வத்துடன் பார்க்க முயன்றாலும் கூட அவர்களால் தெளிவாகப் பார்க்க முடியவில்லை! நரகத்தைப் பற்றி மேய்ப்பர்கள் கூறிய வார்த்தைகள் அவர்களுக்குப் பய உணர்வை ஏற்படுத்தி, அவர்கள் கைகளை நடுங்கச் செய்திருந்தன. ஆனாலும் கூட வாயிலைப்போன்ற ஒரு சாயலையும், அந்த இடத்தின் மகிமையும் கண்டதாக நினைத்துக் கொண்டார்கள்.

"இதோ மேய்ப்பர்கள் இரகசியங்களை வெளிப்படுத்த,
மற்றவர்களிடமிருந்த மறைக்கப்பட்டவைகளை அறிந்தோமே!
வாருங்கள், இந்த மேய்ப்பர்கள் அண்டை!
கேளுங்கள் அவர்கள் கூறும் செய்திகளை!"

என்று உற்சாகமாகப் பாடியபடியே புறப்பட ஆயத்த மானார்கள்.

அப்போது மேய்ப்பர்களில் ஒருவன் அவர்களிடம் அடுத்துவரும் பாதைப்பற்றிய விவரம் அடங்கிய சீட்டைக் கொடுத்தான். மற்றொருவன் **வீண்புகழ்ச்சி** என்பவனின் பேச்சில் மயங்கிவிடக்கூடாது என்று எச்சரித்தான். மூன்றாமவன் அவர்கள் **மயக்கும் பூமியில்** அயர்ந்து உறங்கிவிடக் கூடாது என்று எச்சரிக்கை செய்தான். நாலாமவன் ஆண்டவர் அவர்களது வழிப்பயணத்தை ஆசீர்வதிக்கட்டும் என்று கூறி வழியனுப்பி வைத்தான்.

அவ்வேளையில் நான் கனவிலிருந்து திடுக்கிட்டு விழித்துக் கொண்டேன்.

28. பயணிகள் புத்தியீனனைச் சந்தித்தல்

மறுபடியும் உறங்கச் சென்றபோது என் கனவு தொடர்ந்தது. அப்போது பயணிகள் மலையை விட்டிறங்கி மோட்சம் செல்லும் பாதையில் துரிதமாக நடைபோடுவதை கண்டேன்.

இந்த மலையின் அடிவாரத்தில் இடதுபுறத்தில் **ஏமாற்று நாடு** என்ற பகுதி இருக்கிறது. அங்கிருந்து கோணலான ஒரு சிறு பாதை பயணிகள் செல்லும் பாதையில் வந்து சேர்ந்தது. சுறுசுறுப்பாக விரைந்து வந்த **புத்தியீனன்** என்ற இளைஞன் அவர்களோடு சேர்ந்து கொண்டான்.

''யாரப்பா நீ? எங்கேயிருந்து வருகிறாய்?'' என்று கிறிஸ்தியான் அவனிடம் கேட்டான்.

"ஐயா, அதோ இடதுபுறம் தெரிகிறதே! அந்தப் பகுதியில் தான் நான் பிறந்து வளர்ந்தேன். இப்போது பரலோக பட்டணத்தை நோக்கிச் சென்றுகொண்டிருக்கிறேன்" என்றான் அந்த இளைஞன்.

"அதெப்படி உன்னால் அந்த வாயிலுக்குள் நுழைய முடியும்? ஏதேனும் பிரச்சினைகள் ஏற்பட்டால் என்ன செய்வாய்?" என்று வியப்புடன் கேட்டான் கிறிஸ்தியான்.

"மற்ற நல்ல மனிதர்களைப்போலவே நானும் போவேன்" என்று அலட்சியமாகப் பதில் கூறினான் புத்தியீனன்.

"அதெப்படி? வாயிலைத் திறக்கும்படி காட்டுவதற்கு உன்னிடம் என்ன இருக்கிறது?" என்று கேட்டான் கிறிஸ்தியான்.

"ஏன், நான் என் ஆண்டவரின் சித்தத்தை அறிவேன். இதுவரை நான் ஒரு நல்லவனாகவே வாழ்ந்து வந்திருக்கிறேன். அவனவனுக்குச் செலுத்த வேண்டியதைச் செலுத்தி வருகிறேன். ஜெபிக்கிறேன்; உபவாசிக்கிறேன்; தசம பாகம் செலுத்துகிறேன்; ஏழைகளுக்கு உதவுகிறேன். என்னுடைய நாட்டைவிட்டு இதோ பயணமாகப் புறப்பட்டிருக்கிறேன்" என்று பெருமையுடன் கூறினான் அந்த இளைஞன்.

"அது சரிதான், ஆனால் நீ இந்தப் பாதையின் துவக்கத்திலிருக்கும் குறுகிய வாசல் வழியாக வராமல் ஏதோ கோணலான பாதை வழியாக அல்லவா வந்திருக்கிறாய்? நீ உன்னைப்பற்றி என்ன நினைத்துக்கொண்டாலும் சரி, ஒரு நாள் வரும். அப்போது நீ பரலோக பட்டணத்துக்குள் அனுமதிக்கப் படமாட்டாய். கள்ளனென்றும், திருடனென்றும் குற்றம் சாட்டப்படுவாய்" என்று எச்சரித்தான் கிறிஸ்தியான்.

"ஐயா, நீங்கள் யாரோ, எனக்கு அந்நியர்கள். உங்களைப்பற்றி எனக்குத் தெரியாது. உங்கள் நாட்டின் கொள்கையைப் பின்பற்றுவதோடு நீங்கள் திருப்திப் பட்டுக்கொள்ளுங்கள். நான் என் நாட்டின் கொள்கையைத்தான் பின்பற்றுவேன். நீங்கள் கூறும் அந்த வாசல் எங்கள் நாட்டை விட்டு வெகு தொலைவில் இருக்கிறது என்பதை உலகமே அறியும். எங்கள் பகுதியிலுள்ள ஒருவனுக்கும் அங்கே செல்லும் வழிகூடத் தெரியாது என்றுதான் நான் நினைக்கிறேன். ஆனால் அதைப் பற்றி எங்களுக்கு கவலையும் இல்லை. நீங்கள்தான் பார்த்தீர்களே! எங்கள் நாட்டிலிருந்து எவ்வளவு அருமையான, இயற்கை அழகு கொண்ட ஒரு பாதை இந்தப் பாதையில் வந்து சேருகிறதே! அதுவே போதுமானது" என்றான் அந்த இளைஞன்.

தனது சுய பெருமையின்மூலம் அந்த இளைஞன் தன்னைப் புத்திசாலி என்று நினைத்துக் கொண்டிருக்கிறான் என்பது கிறிஸ்தியானுக்குப் புரிந்தது.

கிறிஸ்தியான் நன்னம்பிக்கையை நோக்கித் திரும்பினான்.

"இவனைவிட மூடனைக் குறித்து அதிக நம்பிக்கையாய் இருக்கலாம் (நீதி. 26:12). மூடன் வழியிலே நடக்கிறபோதும் மதிகெட்டவனாயிருக்கிறான்; தான் மூடனென்றும் அவன் எல்லாருக்கும் சொல்லுகிறான் (பிர. 10:3) இப்படிப்பட்ட ஒருவனைக் குறித்து நாம் என்ன செய்வது? அவனோடு இன்னும் கொஞ்சம் பேசிப் பார்க்கலாமா? அல்லது ஏற்கெனவே நான் அவனுக்குக் கூறியவற்றை அவன் சிந்தித்துப் பார்க்கும்படி, அவனை விட்டுவிட்டு நாம் முன்னே செல்லலாமா? பிறகு அவனை மறுபடியும் சந்தித்து அவனுக்கு ஏதேனும் நன்மை செய்ய முடியுமா என்று பார்க்கலாமா?" என்று கிறிஸ்தியான் நன்னம்பிக்கையின் காதுகளில் கிசுகிசுத்தான்.

"புத்தியீனன் இன்னும் கொஞ்சம்
யோசிக்கட்டுமே
நாம் கூறியதைச் சிந்தித்துப்
பார்க்கட்டுமே
நல் ஆலோசனையை விட்டுத்
தள்ளினால்
ஆதாயமின்றி அழிபவன்
அவன்தானே!
புரிந்துகொள்ளா அறிவுடையோர்
தம்மை
மீட்பதரிது என்றாரே நம் ஆண்டவர்!"

என்று கூறிய நன்னம்பிக்கை மேலும் தொடர்ந்து;

"இப்போதே எல்லாவற்றையும் இவனிடம் கூறுவது நன்மை பயக்கும் என்று எனக்குத் தோன்றவில்லை. எனவே நாம் இவனை விட்டுவிட்டு முன்னால் செல்லலாம். இவனது அறிவுக்கேற்றபடி பின்னர் கொஞ்சம் கொஞ்சமாக இவனுக்கு எடுத்துச் சொல்லலாம்" என்றும் கூறினான்.

எனவே புத்தியீனனைப் பின்னால் விட்டுவிட்டு அவர்கள் முன்னால் சென்றார்கள். அவனை விட்டுக் கடந்து சற்றுத் தூரம் சென்றபோது பாதை இருளடைந்து காணப்பட்டது. அங்கே வியப்பளிக்கும் காட்சி ஒன்றைக் கண்டார்கள். அங்கு ஏழு பிசாசுகள் ஒரு மனிதனை ஏழு வலுவான கயிறுகளால் கட்டி, மலையின் மறுபுறம் அவர்கள் ஏற்கெனவே பார்த்த வாயிலை

நோக்கி அவனைத் தூக்கிச் செல்வதைக் கண்டார்கள் (மத். 12:45). கிறிஸ்தியானும், நன்னம்பிக்கையும் இதைக் கண்டு நடு நடுங்கினார்கள். பிசாசுகள் அந்த மனிதனை இழுத்துச் செல்லும்போது, அவன் தனக்கு அறிமுகம் ஆனவன்தானா என்பதைக் கண்டறிய கிறிஸ்தியான் உற்றுப் பார்த்தான். அவன் ஒருவேளை நாத்திக பட்டணத்தைச் சேர்ந்த பேர்க் கிறிஸ்தவன் என்பவனாக இருக்கலாமோ என்று நினைத்தான். ஆனால் அந்த மனிதன் பிடிபட்ட ஒரு திருடனைப்போலத் தலையைக் கவிழ்த்தபடியே சென்றபடியால் அவன் முகத்தைச் சரியாகக் கவனிக்க முடியவில்லை. அவன் சற்றுத் தூரம் சென்றபிறகு திரும்பிப் பார்த்த நன்னம்பிக்கை அவன் முதுகில் "வீண் மதவெறியன், அழிக்கும் நாசகாரக் கொள்கையுடையவன்" என்று எழுதப்பட்ட தாள் ஒன்று பிணைக்கப்பட்டிருப்பதைக் கண்டான்.

"இப்போது நான் கேள்விப்பட்ட ஒரு செய்தி என் நினைவில் வருகிறது. அது இந்தப் பகுதியில் வசித்த **அற்ப விசுவாசி**[1] என்பவனைப் பற்றிய செய்தியாகும். அவன் கபடற்ற பட்டணம் என்ற ஊரில் வசித்துவந்தான். இந்தத் தெருவின் முனையில் அகன்ற வழி வாயிலிலிருந்து வரும் ஒரு சந்து இருக்கிறது. அது மரித்தவன் சந்து[2] என்றழைக்கப்படுகிறது. அங்கே அடிக்கடி படுகொலைகள் நடக்கிறபடியால் அந்தச் சந்துக்கு இந்தப் பெயர் வந்திருக்கிறது.

"அற்பவிசுவாசி என்ற அந்த மனிதன் நம்மைப் போலப் பயணம் புறப்பட்டான். வழியில் சோர்ந்துபோன அவன் இந்தப் பகுதியில் படுத்து உறங்கிவிட்டான். அந்த வேளையில் அகன்ற வழி வாயிலிருந்து வரும் சந்தில் மூன்று முரடர்கள் வந்தார்கள். **அதைரியன், சந்தேகப் பேர்வழி, பாவ உணர்வூட்டுபவன்**[3] இந்த மூவரும் சகோதரர்கள். அற்பவிசுவாசி அங்கே படுத்து உறங்குவதைக்[4] கண்டு வேகமாக ஓடி வந்தார்கள். தன் உறக்கத்திலிருந்து திடுக்கிட்டு விழித்த அற்பவிசுவாசி மறுபடியும் பயணத்தைத் தொடர ஆயத்தமாகிக் கொண்டிருந்தான்.

"அருகே வந்த முரடர்கள் 'அப்படியே நில்' என்று அவனை மிரட்டினார்கள். இதைக் கண்ட அற்ப விசுவாசியின் முகம் பயத்தால் வெளுத்துவிட்டது. எதிர்க்கவும் பலமற்றவனாக

---

1. அற்ப விசுவாசி - கிறிஸ்தவன் என்று சொல்லிக்கொண்டாலும் திட விசுவாசம் இல்லாதவன்.

2. பெயர்க் கிறிஸ்தவர்கள் குறுகிய வழியை விட்டுவிட்டு அழிவுக்குச் செல்லும் விசாலமான பாதையில் செல்வதை இது குறிக்கிறது.

3. பாவத்தில் விழும்போது நம்மை விரட்டும் பயங்கரங்களைக் குறிக்கிறது.

4. பெயர்க் கிறிஸ்தவன் விசுவாசக் கிரியைகளில் ஈடுபடாமல் சோர்ந்திருப்பது.

ஓடவும் முடியாமல் அப்படியே நின்றுவிட்டான் அதைரியன். 'உன் பணப் பையைக் கொடு' என்று அவனை மிரட்டினான். அற்பவிசுவாசிக்கோ தனது பணத்தைக் கொடுக்க மனமில்லாதபடியால் சற்று தயங்கினான். அப்போது அருகே ஓடிவந்த சந்தேகப்பேர்வழி அவன் பைக்குள் கையைவிட்டு ஒரு வெள்ளிக் கட்டியை எடுத்துக் கொண்டான்.[1] அவனோ 'திருடன், திருடன்' என்று கத்தினான். கோபம் கொண்ட பாவ உணர்வூட்டுவோன் தன் கையிலிருந்த தடியால் அற்ப விசுவாசியின் தலையில் ஓங்கி அடித்தான். இரத்தம் பீறிட்டுப் பாய அவன் கீழே சாய்ந்துவிட்டான். அப்போது அந்தப் பாதையில் யாரோ வரும் சத்தத்தைக் கேட்ட மூவரும், வருவது ஒருவேளை நல்நம்பிக்கை என்ற ஊரைச் சேர்ந்த மகாகிருபை[2] என்பவராக இருக்குமோ என்ற பயத்தில் ஓடிவிட்டார்கள். சற்று நேரத்தில் கண்விழித்த அற்பவிசுவாசி தட்டுத் தடுமாறியபடி தன் வழியே சென்றான். இந்தச் செய்தியைத்தான் நான் கேள்விப்பட்டிருந்தேன்'' என்றான் கிறிஸ்தியான்.

''அவனிடமிருந்த அனைத்தையும் கொள்ளையடித்துக் கொண்டு போய்விட்டார்களா?'' என்று சோகத்துடன் கேட்டான் நன்னம்பிக்கை.

''அப்படியில்லை, அவன் வைத்திருந்த நவரத்தினங்களை அவர்கள் கண்டுபிடிக்கவில்லை. எனவே அவை அவனிடம் பத்திரமாகத்தான் இருந்தன. ஆனால் அவனுக்கு ஏற்பட்ட பெரிய இழப்பு என்னவென்றால் அவன் வழிச் செலவுக்காக வைத்திருந்த பணத்தில் பெரும் பகுதி களவாடப்பட்டுவிட்டது. அவனிடம் எஞ்சிய பணம் பயணம் முடியும்வரை அவனைக் கொண்டு சேர்க்கப் போதியதாக இல்லை என்று நான் கேள்விப் பட்டேன். வழியிலே உயிர்வாழ பிச்சையெடுத்தபடியேதான் செல்லவேண்டியிருந்ததாம்! அப்படியே போதிய உணவு கிடைக்காதபடியால் பயணத்தின் பெரும்பகுதியிலும் அவன் வெறும் வயிற்றோடுதான் போயிருக்கவேண்டும் (1 பேதுரு 4:18). அவன் தனது நவரத்தினங்களை விற்கவும் முன்வரவில்லை''[3] என்றான் கிறிஸ்தியான்.

''நல்லவேளையாக, அவனைப் பரலோகத்திற்குள் நுழைய அனுமதிக்கும் சீட்டை அவன் பறிகொடுத்துவிடவில்லையே!'' என்றான் நன்னம்பிக்கை.

---

1. அற்பவிசுவாசி தன் பயணத்தை இழந்து போவது நற்செய்தியினால் அவனுக்குக் கிடைக்கும் ஆறுதல்களை இழந்துபோவதைக் குறிக்கிறது.

2. மகாகிருபை - சோர்ந்துபோன கிறிஸ்தவர்களின் விசுவாசத்தைப் பலப்படுத்தும் உண்மைக் கிறிஸ்தவனைக் குறிக்கிறது.

3. அற்பவிசுவாசியாக இருந்தாலும் அவன் ஒட்டுமொத்தமாக தனது விசுவாசத்தை விட்டுவிடவில்லை என்பதை இது குறிக்கிறது.

"அதுவும் வியப்பான காரியம்தான். அந்த முரடர்களிடமிருந்து எதையும் ஒளித்து வைக்கும் தந்திரம் அவனுக்கு இல்லாதிருந்தது. அவர்களைக் கண்டு அவன் பயந்துதான் போயிருந்தான்! எனவே அந்த முரடர்களின் பார்வையிலிருந்து அந்தச் சீட்டு தப்பியது ஆண்டவரின் கிருபையேயொழிய வேறொன்றுமில்லை!" *(2 தீமோ. 1:12-14)* என்று வியப்புடனும் கூறினான் கிறிஸ்தியான்.

"அவனிடமிருந்து அவர்கள் நவரத்தினங்களைக் கைப் பற்றாதது அவனுக்கு ஓர் ஆறுதலாகத்தானே இருந்திருக்க வேண்டும்?" என்றான் நன்னம்பிக்கை.

அவன் அதைப் பயன்படுத்த வேண்டியவிதமாகப் பயன்படுத்தியிருந்தால் அவனுக்கு அது ஓர் ஆறுதலாகவே விளங்கியிருக்கும். அவன் தனது பணத்தை இழந்து போய்விட்ட குழப்பத்தில், பயணத்தின்போது அவன் அதைப் பயன்படுத்தவே இல்லை! உண்மையில் அநேகமாக அவன் அதை மறந்தே விட்டான் என்றுதான் சொல்லவேண்டும். அப்படி ஒருவேளை அது அவன் நினைவில் வந்து, அதனால் ஆறுதல்பட துவங்கினாலும்கூட, அப்போதெல்லாம் அவனது இழப்பைப் பற்றிய எண்ணம் வந்து இதையெல்லாம் அழித்துப்போடும்" என்றான் கிறிஸ்தியான்.

"பாவம், இது அவனுக்கு எவ்வளவு துயரத்தை அளித்திருக்கும்!" என்று அங்கலாய்த்தான் நன்னம்பிக்கை.

"கொஞ்ச நஞ்ச துயரமா? மீளாத் துயரம் அடைந்திருப்பான்! அவனைப்போலவே முன்பின் பார்த்தறியாத ஓரிடத்தில் நாமும் நமது பொருள்களைப் பறிகொடுத்து, படுகாயப்படுத்தப் பட்டிருந்தால் நாமும் இப்படித்தான் துயரப்பட்டிருப்போம். அவன் துயரமிகுதியால் இருதயம் வெடித்து இறக்காமலிருப்பதே பெரிய வியப்புதான்! அவன் தொடர்ந்து பயணம் செய்தாலும் கூட செல்லும் வழியெல்லாம் புலம்பிக்கொண்டும், கசப்போடு குறை கூறிக்கொண்டுமே சென்றான் என்று நான் கேள்விப் பட்டேன் வழிப்பயணத்தில் அவனை முந்திக்கொண்டவர் களிடமும், அவன் தாண்டிச் சென்றவர்களிடமும், தான் எப்படி, எங்கே கொள்ளையடிக்கப்பட்டான் என்பதையும், அவனைக் கொள்ளையடித்தது யார் என்பதையும், அவன் எதைப் பறிகொடுத்தான் என்பதையும், படுகாயத்தோடு தான் உயிர் பிழைத்தது எப்படி என்பதையும் பற்றியே சொல்லிக்கொண்டு சென்றதாக எனக்குச் செய்தி கிடைத்தது" என்றான் கிறிஸ்தியான்.

"தனது பயணத்தின் பிரச்சினைகள் தீர்க்கப்படவேண்டும் என்பதற்காக அவன் தனது நவரத்தினங்களில் சிலவற்றையாவது

விற்றோ அல்லது அடகு வைத்தோ பொருள் திரட்டாதது எனக்கு வியப்பாக இருக்கிறது" என்றான் நன்னம்பிக்கை.

"என்ன நீ, முட்டையிலிருந்து இன்னும் வெளிவராத குஞ்சைப்போல உலக ஞானம் அறியாதவனாகப் பேசுகிறாயே! அவன் எங்கே அதை அடகு வைப்பான்? அல்லது யாரிடம்தான் அதை விற்பான்? அவன் கொள்ளையடிக்கப்பட்ட அந்தப் பகுதியில் அந்த நவரத்தினங்களை ஏற்றுக்கொள்ளக் கூடியவர்கள் எவருமே கிடையாது. அப்படிப்பட்ட ஓர் உதவியைப் பெற்றுக்கொள்ளவும் அவன் விரும்பவில்லை. ஏனென்றால் பரலோக பட்டணத்தின் வாயிலை அடையும்போது அவனிடம் அந்த நவரத்தினங்கள் இல்லாவிட்டால் அவன் உள்ளே நுழைய அனுமதிக்கப்படமாட்டான் என்பதையும் அவன் அறிந்திருந்தான். பத்தாயிரம் திருடர்கள் அவனை மேற்கொள்ளுவதைவிட, பரலோகத்தில் நுழைய அனுமதி மறுக்கப்படுவது மோசமான காரியம் என்று அவன் உணர்ந்திருந்தான்'' என்றான் கிறிஸ்தியான்.

"அன்பான சகோதரனே, ஏன் இவ்வாறு கடின வார்த்தைகளால் பேசுகிறாய்? கொஞ்சம் பயற்றங்கூழுக்காக ஏசா தனது பிறப்புரிமையையே விற்றுப்போடவில்லையா? அந்தப் பிறப்புரிமைதானே அவனுக்கு ஒரு நவரத்தினமாக இருந்தது? பிறகு ஏன் அற்பவிசுவாசியும் தடுமாறிப் போயிருக்கக்கூடாது?" என்று கேட்டான் நன்னம்பிக்கை.

"ஏசா மட்டுமல்ல, அவனைப்போல இன்னும் அநேகரும் தங்கள் பிறப்புரிமையை விற்றுப்போடுகிறார்கள் என்பது உண்மைதான், இதன்மூலம் அந்த மூடனைப்போல தங்களுக்கு வரவிருக்கும் மேலான ஆசீர்வாதத்தையும் இழந்து போகிறார்கள். ஆனால் ஏசாவுக்கும் அற்பவிசுவாசிக்கும், அவன் பொருளுக்கும் இவன் பொருளுக்கும் வேறுபாடு உண்டு என்பதை நீ அறிந்துகொள்ள வேண்டும். ஏசாவுக்கு அவன் வயிறே அவன் கடவுளாக இருந்தது. ஆனால் அற்பவிசுவாசிக்கு அப்படியல்ல. அது மட்டுமா? ஏசாவின் பிறப்புரிமை ஒரு முன்னடையாளமாக மட்டுமே இருந்தது. ஆனால் அற்பவிசுவாசியின் நவரத்தினங்களோ அதிலும் மேலானவை! ஏசா தனது சரீரப் பிரகாரமான இச்சையைத் திருப்தி செய்துகொள்ளவே விரும்பினான்; ஆனால் அற்பவிசுவாசியின் வாஞ்சை அதுவல்ல! தனது இச்சைகளைப் பூர்த்தி செய்துகொள்வது மட்டுமே ஏசாவின் நோக்கமாக இருந்தது. 'இதோ நான் சாகப்போகிறேனே, இந்தச் சேஷ்ட புத்திரபாகம் எனக்கு என்னத்திற்கு என்றான்' (ஆதி. 25:32) என்றல்லவா அவன் கூறினான்? ஆனால் அற்ப விசுவாசியோ கொஞ்சம் விசுவாசம் கொண்டிருந்தாலும்கூட

அந்த அற்பவிசுவாசத்தைக் கொண்டும் இத்தகைய சரீரப் பிரகாரமான இச்சைகளில் விழுந்து விடாமல் தப்பினான்!

ஏசா தனது பிறப்புரிமையை விற்றுப்போட்டதுபோல, இவன் தனது நவரத்தினங்களை விற்றுப்போடாமல் காத்துக்கொண்டான். எந்த இடத்திலும் ஏசா சிறிதளவாவது விசுவாசம் கொண்டிருந்தான் என்று நாம் படிக்கவில்லையே! அப்படிப்பட்ட ஒருவனுக்கு சரீர இச்சைகளே மேலானதாக இருப்பதில் வியப்பொன்றும் இல்லையே! ஏனெனில் அவன் தனது பிறப்புரிமையை மட்டுமன்றி ஆத்துமாவையும் அனைத்தையும் பிசாசுக்கு விற்றுப் போடும்போது அவனது மாம்ச இச்சைகளைத் தடுப்பதற்குச் சிறிதளவேனும் விசுவாசம்கூட அவனிடம் இல்லை! வெறிபிடித்து ஓடும் ஒரு கழுதையைத் திசை திருப்ப முடியாததுபோல, இத்தகையவர்களின் மனதை மாற்றுவதும் கடினமான காரியம்தான். அவன் தனது மனதில் ஏற்பட்ட இச்சையை எந்த விலை கொடுத்தாவது நிறைவேற்றிக்கொள்வான்.

ஆனால் அற்பவிசுவாசியோ இப்படிப்பட்ட இச்சை உள்ளவன் அல்லன்! அவன் தெய்வீக காரியங்கள்மீதே வாஞ்சை கொண்டிருந்தான். ஆவிக்குரிய காரியங்களைப் பின்பற்றியே அவன் வாழ்ந்தான். எனவே வெறுமையான காரியங்களால் தன் உள்ளத்தை நிரப்புவதற்காக, எவரேனும் அந்த நவரத்தினங்களை வாங்க முன்வந்தாலும்கூட, அவற்றை விற்றுவிட அவன் விரும்பவில்லை. தன் வயிற்றை வைக்கோலால் நிரப்பிக்கொள்ள எவனாகிலும் பணம் செலவழிப்பானா? காகத்தைப்போல பறவையையும் மாமிசம் சாப்பிட வைக்க முடியுமா? விசுவாசமே இல்லாதவர்கள் ஒருவேளை மாம்ச இச்சைகளைத் தீர்த்துக்கொள்ள தங்களையோ அல்லது தங்கள் உடைமைகளையோ அடகு வைக்கவோ அல்லது விற்கவோ முன் வரலாம். ஆனால் மீட்பையளிக்கும் விசுவாசத்தைப் பெற்றவர்கள், அந்த விசுவாசம் அற்பமான விசுவாசமாக இருந்தாலும்கூட, நிச்சயமாக அவ்வாறு செய்யமாட்டார்கள். இங்கேதான் சகோதரனே நீ தவறான எண்ணம் கொண்டிருக்கிறாய்!" என்றான் கிறிஸ்தியான்.

"நீ சொல்வதை நான் ஒப்புக்கொள்கிறேன். ஆனாலும் உன்னுடைய கடுமையான வார்த்தைகள் என்னைக் கோபமடையச் செய்தது உண்மைதான்" என்றான் நன்னம்பிக்கை.

"ஏனப்பா அப்படிக் கோபப்படுகிறாய்? முட்டைக்குள் குறுகுறுக்கும் குஞ்சோடு உன்னை நான் ஒப்பிட்டது உண்மைதான். ஆனால் அதை மறந்துவிடு. நாம் இப்போது விவாதிக்கும் காரியத்தைப்பற்றி மட்டுமே எண்ணிப்பார். அப்போது நீயும் என் கருத்துக்களை ஒப்புக்கொள்வாய்" எனறான் கிறிஸ்தியான்.

'ஆனால் கிறிஸ்தியானே, ஒரு காரியம் அந்த மூன்று கொள்ளைக்காரர்களும் கோழைகள் என்றுதான் நான் நினைக்கிறேன். இல்லாவிட்டால் யாரோ வரும் சத்தம் கேட்டவுடன் அவர்கள் ஏன் அப்படி தலைதெறிக்க ஓட வேண்டும்? புத்தியீனன் முதலிலேயே ஏன் அவர்களை எதிர்த்து நின்றிருக்கக் கூடாது? அவர்களை எதிர்த்துப் பார்த்துவிட்டு, அது வெற்றி பெறாதபோது வேண்டுமானால் புத்தியீனன் தன் பொருள்களை விட்டுக் கொடுத்திருக்கலாம்'' என்று தன் கருத்தைக் கூறினான் நன்னம்பிக்கை.

"பலரும் அவர்கள் கோழைகள் என்றுதான் சொல்லியிருக்கிறார்கள். ஆனால் சோதனை வரும்போது சோதிக்கப்படுபவர்கள் இந்த உண்மையை உணர்ந்து அவர்களை எதிர்ப்பதில்லை. புத்தியீனனால் கொஞ்சம்கூட வீரம் காட்டியிருக்க முடியாது! அப்படிப்பட்ட மனபலம் அவனுக்குக் கிடையாது. ஆனாலும் என் சகோதரனே, நீ சொல்லுவதைப் பார்த்தால், இத்தகைய சோதனைகள் உன்னை எதிர்நோக்கும்போது, நீ முதலில் எதிர்த்துப் பார்த்துவிட்டு, உன்னால் முடியாவிட்டால் சோதனைகளின் காலிலேயே விழுந்துவிடுவாய் போலிருக்கிறதே! இப்போது அவர்களைவிட்டு தொலைவில் இருக்கிறபடியால் நீ இவ்வாறு மனத்துணிவோடு பேசிவிட்டாய்! இப்போதே அவர்கள் நேரில்வந்து, அற்பவிசுவாசியைத் துன்புறுத்தியது போல, உன்னையும் துன்புறுத்தினால் உன் வீறாப்பான எண்ணங்களெல்லாம் பறந்தே போய்விடும்!" என்று கிண்டலாகக் கூறிய கிறிஸ்தியான் மேலும் தொடர்ந்து,

"அவர்கள் வழிப்பறி செய்பவர்கள் என்பதையும் நீ மறந்துவிடக்கூடாது அடித்தளமேயில்லாத பாதாளத்தின் அரசனுடைய கையாள்களே அவர்கள்! தேவைப்பட்டால் பாதாள அரசனே அவர்களுக்கு உதவியாக வருவான். அவனது குரலே சிங்கத்தின் கர்ச்சனைபோல இருக்கும். *(1 பேதுரு 5:8)* இந்தப் புத்தியீனனைப்போல நானும்கூட அவர்களிடம் சிக்கி விழிக்க நேரிட்டது. அப்பப்பா, எவ்வளவு பயங்கரமான காரியம்! அவர்கள் மூவரும் என்மீது பாய்ந்தார்கள். ஒரு கிறிஸ்தவனைப் போல நான் அவர்களை எதிர்த்து நின்றேன். அவர்களோ பெருமுழக்கமிட்டு தங்கள் அதிபதியை அழைத்தார்கள். அவனும் வந்துவிட்டான்! எனது உயிருக்கே ஆபத்து வரும் நிலை ஏற்பட்டது! ஆனால் நான் அணிந்திருந்த கவசம் எனக்குப் பாதுகாப்பை அளித்தது. என்றாலும்கூட அவர்களை வீரத்துடன் எதிர்த்து நிற்பது வெகு கடினமாகவே இருந்தது. இத்தகைய ஒரு போராட்டத்தில் நேரடியாக ஈடுபட்டிருந்தால் மட்டுமே இதைப் பற்றி முழுமையாகப் புரிந்துகொள்ள முடியும்'' என்று விவாதித்தான் கிறிஸ்தியான்.

"அவர்கள் மகாகிருபை வருகிறார் என்று எண்ணித்தானே ஓட்டம் பிடித்தார்கள்!" என்றான் நன்னம்பிக்கை.

மகாகிருபை நேரில் வரும்போது அந்தக் கொள்ளைக் காரனும், அவர்களுடைய அதிபதியும் அநேக முறை ஓடித் தப்பி யிருப்பது உண்மைதான். இதில் வியப்பேதும் இல்லை! ஏனென்றால் அவர் இராஜாதி இராஜாவின் தளபதியாக இருக்கிறார். ஆனால் இராஜாவின் தளபதிக்கும், புத்தியீனனுக்கும் நிச்சயம் வேறுபாடுகள் உண்டு. இராஜாவின் பிரஜைகள் அனைவருமே அவருக்காகப் போராடும் தீரர்கள் அல்லவே? அதுமட்டுமன்றி, எவ்வளவுதான் முயன்றாலும் அவர்களால் அவரைப்போல எதிர்த்து நிற்க முடியாதே! தாவீது எதிர்த்து நின்றதுபோல எந்தச் சிறு குழந்தையாலும் கோலியாத்தை எதிர்த்து நிற்க முடியுமா? ஒரு சிட்டுக் குருவிக்கு ஓர் எருதின் பலம் கிடைக்குமா? சிலர் பலசாலிகளாக இருக்கிறார்கள்; ஆனால் மற்றவர்கள் பெலவீனர்களாகவே இருக்கிறார்கள். சிலர் திட விசுவாசம் கொண்டிருக்கிறார்கள்; வேறு பலர் அற்பவிசுவாசிகளாக இருக்கிறார்கள். இந்த மனிதனும் பெலவீனனாக இருந்தபடியால்தான் தோற்றுப்போனான்'' என்றான் கிறிஸ்தியான்.

"என்றாலும் மகாகிருபை வந்து அவர்களோடு கடுமையாகப் போர்புரியத்தான் வேண்டியிருந்திருக்கும். மகாகிருபை தனது பட்டயத்தைக் கொண்டு போரிடுவதில் வல்லவர்தான்! ஆனாலும் அவரால் பட்டய நுனியால் தான் அவர்களை எதிர்கொள்ள முடியும். ஆனால் கைக்குக் கை மோதினால் மனபலமற்றவனால் கூட அவரது காலைவாரிக் கீழே விழத் தள்ளிவிட முடியும். ஒரு மனிதன் தரையில் விழுந்தபின்பு அவனால் வேறு என்ன செய்ய முடியும்?

"மகாகிருபையின் முகத்தை நன்கு உற்று நோக்கினால் அதில் தழும்புகளும், வெட்டுக்காய அடையாளங்களும் இருப்பதைக் காணமுடியும். நான் கூறியதற்கு அவையே நிரூபணங்களாக இருக்கின்றன. இவ்வாறு ஒருமுறை போரிடும்போது 'செத்தே போனோம்!' என்று அவர் கத்தியதாகக்கூட நான் கேள்விப்பட்டிருக்கிறேன். இந்த முரடர்கள் தாவீதிடம்கூட முறுமுறுக்கவும், புலம்பவும், அங்கலாய்க்கவும் செய்திருக்கி றார்கள். ஏமானும், எசேக்கியாவும் அவர்களது நாள்களில் தீரர்களாகத்தான் இருந்தார்கள். ஆனாலும்கூட அவர்களும் இந்தத் திருடர்களுக்கு எதிர்த்துநிற்க வேண்டியிருந்தது. அவர்களது பாதுகாப்பான மேலாடைகள்கூட கிழிந்து கந்தல் கந்தலாகிவிட்டன. பேதுருவும்கூட தனது திறமையைக் கொண்டு

அவர்களை வீழ்த்திவிட முயன்றார். அவர் அப்போஸ்தலர்களின் இளவரசர் என்று அழைக்கப்பட்டாலும்கூட, அவர்கள் ஒரு வேலைக்காரப் பெண்ணைக் கொண்டே அவரைப் பயப்படுத்தி நடுங்க வைத்துவிட்டார்கள்!

"அதுமட்டுமா? அவர்கள் கூப்பிடும் தொலைவில் தான் அவர்களது அரசன் இருக்கிறான். எப்போதேனும் அவர்கள் தளர்ந்து விடுவதுபோலக் காணப்பட்டால், அவர்களது கூக்குரலைக் கேட்டு அவன் உதவிக்கு ஓடி வந்து விடுகிறான். அவனைத் தாக்குகிறவனுடைய பட்டயம், ஈட்டி, வல்லையம், கவசம் ஒன்றும் அவனுக்கு முன் நிற்காது. அவன் இரும்பை வைக்கோலாகவும், வெண்கலத்தை உளுத்த மரமாகவும் எண்ணுகிறான். அம்பு அவனைத் துரத்தாது; கவண் கற்கள் அவனுக்குத் துரும்பாகும். அவன் பெருந்தடிகளைத் தாளடிகளாக எண்ணி, ஈட்டியின் அசைவை இகழுவான் என்று அவனை பற்றிக் கூறப்பட்டுள்ளது (யோபு 14:26-29). இப்படிப்பட்டவனை எதிர்த்து ஒரு மனிதனால் என்ன செய்ய முடியும்?

ஒவ்வொரு வேளையிலும் ஒரு மனிதன் ஏறிச் செல்ல அவனுக்கு யோபுவின் குதிரை கிடைத்தது, அந்தக் குதிரையில் ஏறிச் செல்ல அவன் திறனும் மனபலமும் பெற்றிருந்தால்தான் அவனால் பல அற்புதமான காரியங்களைச் செய்ய முடியும் என்பது உண்மைதான். ஏனெனில் அந்தக் குதிரையின் கனைப்பு இடிபோல முழக்கமிடுகிறது. ஒரு வெட்டுக்கிளியைப் பயமுறுத்துவதுபோல அதைப் பயமுறுத்த முடியாது. அதன் நாசியிலிருந்து வெளிப்படும் மூச்சு பயங்கரமாக இருக்கிறது அது தரையில் தனது கால்களால் பள்ளம் எழுப்பி, தனது பலத்தைக் குறித்து செருக்குடன், கவசம் அணிந்த மனிதர்களையும் எதிர்த்துச் செல்லுகிறது. அதைப் பயமுறுத்துபவர்களை அது அலட்சியப்படுத்தி, எந்தவிதப் பயமுமின்றி, பட்டய முனையிலும் பின்வாங்காமல் இருக்கிறது. பளபளக்கும் ஈட்டியோ, பட்டயமோ, அம்புகளோ எதிராகக் காட்டப்பட்டாலும் அது கடுங்கோபத்தோடு தரையில் குழி பறிக்கிறது; எக்காள சத்தத்துக்கும் அது பயப்படுவதில்லை. 'ஆ, ஆ' என்று எக்காள தொனியை அலட்சியப்படுத்துகிறது. தொலைவில் நடக்கும் சண்டையையும், தளபதிகளின் கட்டளைக் குரலையும், சேனைகளின் ஆரவாரத்தையும் மோப்பம் பிடிக்கும் சக்தி வாய்ந்தது அது! (யோபு 39:19-25).

"ஆனால் உன்னையும், என்னையும் போன்ற காலாட்படை வீரர்கள் விரோதியைச் சந்திக்கலாம் என்று வீண் பெருமையோடு எதிர்பார்க்கக்கூடாது. மற்றவர்கள் தோற்றுவிட்டதைப்பற்றிக் கேள்விப்படும்போது, நாம் அவர்களைவிட வீராவேசமாகப்

போரிடமுடியும் என்று அசட்டு நம்பிக்கை கொள்ளவும் கூடாது. ஆனால் இப்படிப்பட்டவர்கள் சோதனையை எதிர்நோக்கும் போது எப்படிப் புறமுதுகு காட்டி ஓடுகிறார்கள் என்பதையும் நாம் அறிவோம். நான் முன்பு கூறிய பேதுருவையே இத்தகையோருக்குச் சிறந்த முன்மாதிரியாகக் கூறலாம். என் ஆண்டவருக்காக நான் எல்லாவற்றையும் சகிப்பேன் என்று அவன் எவ்வளவாய் வீறாப்புப் பேசினான்? ஆனால் நடந்தது என்ன? இப்படிப்பட்ட முரடர்கள் எதிர்த்து வந்தபோது அவன் ஓடி ஒளிந்துகொண்டு மறுதலிக்கவே முன்வந்தான் அல்லவா?

"எனவே பரலோக பாதையில் இத்தகைய கொள்ளைகள் நடைபெறுகின்றன என்பதை நாம் கேள்விப்படும்போது மறக்காமல் செய்யவேண்டிய செயல்கள் இரண்டு உள்ளன.

"முதலாவதாக, ஆயுதம் ஏந்தியவர்களாகவும், கையில் கேடகத்தைப் பிடித்தவர்களாகவும் வெளியே வரவேண்டும். இத்தகைய பாதுகாப்பு இல்லாமையினால்தான் ஒருவனால் சாத்தானை மேற்கொள்ள முடியவில்லை. ஏனெனில் இத்தகைய ஆயுதங்கள் இன்றி நாம் அவனை எதிர்கொள்ளும்போது, அவன் இதைப்பற்றிப் பயப்படுவதேயில்லை. எனவேதான் ஒரு ஞானி இவ்வாறு கூறியுள்ளார்: "பொல்லாங்கன் எய்யும் அக்கினி யாஸ்திரங்களையெல்லாம் அவித்துப்போடத்தக்கதாய், எல்லாவற்றிற்கும் மேலாக விசுவாசமென்னும் கேடகத்தைப் பிடித்துக்கொண்டவர்களாயும் நில்லுங்கள்" *(எபே. 6:16).*

"இரண்டாவதாக, நமது இராஜாவும் நம்மோடுகூட துணையாக வரும்படி கேட்டுக்கொள்வது மிகவும் நல்லது. மரண இருளின் பள்ளத்தாக்கில் சென்றபோது தாவீது இந்தத்துணை கிடைத்ததற்காக மிகவும் மகிழ்ச்சியடைந்தான். 'உம்முடைய சமுகம் என்னோடே கூடச் செல்லாமற்போனால், எங்களை இவ்விடத்திலிருந்து கொண்டுபோகாதிரும்' *(யாத். 33:15)* என்று மோசே ஆண்டவரிடம் கேட்டுக்கொண்டான் என் சகோதரனே, அவர் நமக்குத் துணையாக இருக்கும்போது நமக்கு விரோதமாகச் சுற்றிலும் படையெடுத்து வருகிற பதினாயிரம் பேருக்கும் நாம் பயப்படோம் *(சங். 3:6).* அவருடைய துணை இல்லாவிட்டால் பெருமையோடு நமக்கு உதவிசெய்ய முன்வருபவர்கள் கொலை செய்யப்பட்டவர்களின் கூட்டத்தில் விழுவார்கள் *(ஏசாயா 10:4).*

"என்னைப் பொருத்தமட்டில் நான் ஒரு முறை இத்தகைய ஆபத்துக்களைச் சந்திக்க வேண்டியிருந்தது. அப்போது நமது ஆண்டவரின் கிருபையினாலேயே நான் காப்பாற்றப்பட்டு இன்றும் உயிரோடு இருக்கிறேன். என்னைப்பற்றி நானே

பெருமை பாராட்டக்கூடாது. இதைப்போன்ற போராட்டங்களை நாம் இனிமேலும் சந்திக்காமல் இருந்தோமென்றால் நான் பெரிதும் மகிழ்ச்சியடைவேன்; ஆனால் இன்னும் பல ஆபத்துக்களை நாம் சந்திக்க வேண்டியிருக்கும் என்றுதான் நான் அஞ்சுகிறேன். சிங்கத்தின் வாயினின்றும், கரடியின் பிடியிலிருந்தும் நான் தப்பியிருப்பதால் அடுத்துவரும் விருத்தசேதனம் செய்யப்படாத பெலிஸ்தியர்களின் கைகளிலிருந்தும் ஆண்டவர் என்னைக் காப்பாற்றுவார் என்று நம்புகிறேன்'' என்றான் கிறிஸ்தியான்.

"அடடா, புத்தியீனனே!
திருடர் கையில் விழுந்தாயே!
உடைமைகள் கொள்ளை போயிற்றே
இருப்பாய் இதை மறவாமல்!
திடநம்பிக்கை கொண்டுள்ளவன்
உறுதியான விசுவாசம் பெறுவானே!
அட புத்தியீனனே! ஏற்றுக்கொள்!
பதினாயிரம் பேரையும் வெல்லலாமே!

என்று தொடர்ந்து பாடினான் கிறிஸ்தியான்.

இவ்வாறு உரையாடியபடியே கிறிஸ்தியானும், நன்னம்பிக்கையும் முன்னால் நடந்து சென்றார்கள். புத்தியீனன் அவர்களுக்குப் பின்னால் வந்து கொண்டிருந்தான்.

29. முகத்துதி செய்வோனைச் சந்தித்தல்

அவர்கள் சென்று கொண்டிருந்த பாதையைப் போன்றே நேர் வழியாகத் தோற்றமளித்த ஒரு கிளைப்பாதை வழியில் குறுக்கிட்டது. இரண்டு பாதைகளுமே ஒன்றுபோல நேர் வழிகளாகக் காணப்பட்டபடியால் எது சரியான பாதை என்பதைக் கண்டறிய முடியாமல் குழம்பிப் போனார்கள். அங்கே அப்படியே நின்றுவிட்டார்கள்!

அப்போது கரிய உருவமுடைய ஒருவன் மெல்லிய பிரகாசமான உடையணிந்தவனாக அவர்களை நோக்கி வந்தான்.

கிறிஸ்தியானும் நன்னம்பிக்கையும் தயங்கி நிற்பதைக் கண்டவுடன்.

"என்ன இங்கேயே நின்றுவிட்டீர்கள்?" என்று அக்கறையுடன் கேட்டான்.

"நாங்கள் பரலோகத்தை நோக்கிச் சென்றுகொண்டிருக்கிறோம்.

இந்த இரண்டு வழிகளும் ஒன்றுபோலவே காணப்படுகின்றன. எந்த வழியில் செல்வதென்று தெரியவில்லை" என்று பயணிகள் இருவரும் குழம்பிய நிலையில் கூறினார்கள்.

"அப்படியானால் என்னைப் பின்பற்றி வாருங்கள்[1] நானும் அங்கேதான் போய்க் கொண்டிருக்கிறேன்" என்று கூறினான் அந்த மனிதன்.

அவன் பேச்சை நம்பிய பயணிகள் இருவரும் அவனை பின்பற்றினார்கள். ஆனால் கொஞ்சம் கொஞ்சமாக வளைந்த பாதை இறுதியில் அவர்களை நேர் எதிரான திசைக்குச் செல்பவர்களாகக் கொண்டுபோய் விட்டுவிட்டது. அவர்கள் செல்ல வேண்டுமென்று வாஞ்சையுடன் புறப்பட்டிருந்த பரலோகத்தை நோக்கிச் செல்வதற்குப் பதிலாக இப்போது அந்தப் பட்டணத்துக்கு முதுகைத் திருப்பினவர்களாக எதிர்த் திசையில் நடந்து கொண்டிருந்தார்கள். ஆனாலும்கூட அந்த மனிதனைப் பின்பற்றுவதை அவர்கள் விட்டுவிடவில்லை.

வழிதவறி வந்துவிட்டோம் என்பதை அவர்கள் உணர்ந்துகொள்வதற்கு முன்பாக அவர்களை ஒரு வலையில் சிக்கவைத்து விட்டான் அந்த மனிதன்! என்ன செய்வதென்று அறியாமல் விழித்தார்கள் பயணிகள் இருவரும்!

அப்போது அந்த மனிதன் மேலே அணிந்திருந்த பிரகாசமான அங்கி நழுவிக் கீழே விழுந்துவிட்டது! அப்போதுதான் தாங்கள் சிக்கிக்கொண்டது எந்த இடமென்று உணர்ந்தார்கள். வலையைவிட்டு வெளியேற முடியாமல் கண்ணீர் விட்டபடி தவித்தார்கள் இருவரும்!

"எப்படிப்பட்ட ஆபத்தில் மாட்டிக்கொண்டோம் நாம். முகத்துதி செய்பவனைப் பற்றி எச்சரிக்கையாக இருக்க வேண்டுமென்று மேய்ப்பர்கள் ஏற்கெனவே கூறியிருந்ததை மறந்துவிட்டோமே! 'பிறனை முகத்துதி செய்கிறவன், அவன் கால்களுக்கு வலை விரிக்கிறான்' (நீதி. 29:5) என்று ஒரு ஞானி சொல்லியது உண்மையாகவே போய்விட்டது" என்று அங்கலாய்த்தான் கிறிஸ்தியான்!

"அந்த மேய்ப்பர்கள் நாம் செல்ல வேண்டிய வழியை குறித்து சில குறிப்புகளும் கொடுத்தார்களே! நாம் அதைப் படிக்க மறந்துவிட்டோமே! நம்மை அழிக்கக்கூடியவனின் வழியைப் பின்பற்றாமல் தவிர்த்திருக்கலாமே! தாவீது இந்தக்

1. முகத்துதி செய்பவனைப் பின்பற்றுதல் - தங்களது கிரியைமூலம் மீட்பைப் பெறலாம் என்ற தவறான போதனைக்கு இடம் கொடுப்பதைக் குறிக்கிறது. இவ்வாறு செல்பவர்கள் சத்திய வழியைவிட்டு தவறான போதனையெனும் வலைக்குள் சிக்கிக்கொள்கிறார்கள்.

காரியத்தில் நம்மைவிட ஞானமுள்ளவராய் நடந்திருக்கிறார். 'மனுஷரின் செய்கைகளைக் குறித்து, நான் உம்முடைய உதடுகளின் வாக்கினாலே துஷ்டனுடைய பாதைகளுக்கு விலக்கமாய் என்னைக் காத்துக்கொள்ளுகிறேன்' (சங். 17:4) என்று அவர் கூறியிருக்கிறாரே!" என்றான் நன்னம்பிக்கை.

இவ்வாறு அவர்கள் இருவரும் புலம்பியபடியே அந்த வலைக்குள் கிடந்தார்கள். அப்போது கையில் கயிற்றிலான சவுக்கை ஏந்தியவராக பிரகாசமான ஒருவர்[1] தங்களை நோக்கி வருவதைக் கண்டார்கள்.

அவர்களின் அருகே நெருங்கியவுடன் அவர், "எங்கேயிருந்து வருகிறீர்கள்? இங்கே என்ன செய்கிறீர்கள்" என்று கோபமாகக் கேட்டார்.

"நாங்கள் சீயோனுக்குச் சென்று கொண்டிருக்கும் பயணிகள்; ஆனால் வெள்ளை அங்கி தரித்த ஒரு கறுப்பு மனிதன் எங்களை வழிதவறச் செய்துவிட்டான். அவனது அழைப்புக்குச் செவிசாய்த்து, அவனும் சீயோனுக்குச் செல்வதாகக் கூறியபடியால் அவனைப் பின்பற்றி வந்தோம். இங்கே வந்து மாட்டிக் கொண்டோம்" என்று கூறினார்கள் பயணிகள் இருவரும்.

கையில் சவுக்கைப் பிடித்திருந்த அந்த மனிதர், "உங்களை ஏமாற்றியவன்தான் முகத்துதி செய்பவன். அவன் ஒரு கள்ள அப்போஸ்தலன் (2 கொரி. 11:13, 14). அவன் தன்னை ஒரு ஒளியின் தூதனாகக் காட்டிக்கொள்கிறான்" என்று கூறினார்.

பிறகு அந்த மனிதர் வலையைக் கிழித்து பயணிகள் இருவரையும் விடுவித்தார்.

"சரி என் பின்னால் வாருங்கள். நான் உங்களைச் சரியான பாதையில் கொண்டுபோய்ச் சேர்க்கிறேன்" என்று அவரது அழைப்புக்குச் செவிசாய்த்து பயணிகள் இருவரும் அவருக்குப் பின்னால் சென்றார்கள். முகத்துதி செய்பவனைப் பின்பற்றுவதற்காகப் பிரிந்து வந்திருந்த இடம்வரை கூட்டிக் கொண்டுபோய் சரியான பாதையில் அவர்களைச் சேர்த்தார்.

அவர்களை நோக்கித் திரும்பிய அவர் "நேற்றிரவு எங்கே தங்கினீர்கள்?" என்று கேட்டார்.

"மேய்ப்பர்களுடன் மகிழ்ச்சி மலையில் தங்கியிருந்தோம்" என்றார்கள்.

---

1. பிரகாசமான ஒருவர் - பரிசுத்த ஆவியானவரைக் குறிக்கிறது. வழிதப்பிப்போன விசுவாசிகளின் உள்ளத்தில் குற்ற உணர்வை ஏற்படுத்தி அவர்களை மனந்திரும்பச் செய்கிறார்.

"அந்த மேய்ப்பர்கள் நீங்கள் செல்லவேண்டிய வழியைப் பற்றிக் குறிப்பு ஏதேனும் கொடுக்கவில்லையா?'' என்று கேட்டார் அவர்.

"கொடுத்தார்கள்".

"பிறகு ஏன் சரியான வழி எது என்று தெரியாமல் திகைத்து நின்றபோது அதை எடுத்துப் பார்க்கவில்லை?'' என்று கோபமாகக் கேட்டார் அவர்.

"மறந்துவிட்டோம்" என்று தலை குனிந்தபடியே கூறினார்கள் பயணிகள்.

"அதுமட்டுமா?" இந்த முகத்துதி செய்பவனைப் பற்றி மேய்ப்பர்கள் எச்சரிக்கவில்லையா?" என்று கடுமையான குரலில் கேட்டார் அவர்.

"எச்சரித்தார்கள். ஆனால் இவ்வளவு இனிமையாகப் பேசுபவன் நிச்சயம் அந்த முகத்துதி செய்பவனாக இருக்க முடியாது என்று நினைத்துக் கொண்டோம்" என்றார்கள் பயணிகள்.

அப்போது அந்தப் பிரகாசமான நபர் அவர்களைக் கீழே படுக்கும்படி கட்டளையிடுவதை நான் என் கனவில் கண்டேன். அவர்கள் அவரது கட்டளைக்குக் கீழ்ப்படிந்தார்கள்.

அந்த நபர் தன் கையிலிருந்த சாட்டையால் பயணிகளின் முதுகில் காயம் ஏற்படும்வரை அடித்தார்.

"நான் நேசிக்கிறவர்களெவர்களோ அவர்களைக் கடிந்து கொண்டு சிட்சிக்கிறேன்; ஆகையால் நீ ஜாக்கிரதையாயிருந்து மனந்திரும்பு'' (வெளி. 3:19) என்று கூறியபடியே அவர் அவர்களை நன்றாக அடித்தார்.

"சரி, இப்போது நீங்கள் உங்கள் வழியே போகலாம். மேய்ப்பர்கள் கூறிய மற்ற ஆலோசனைகளைக் கவனமாகப் பின்பற்றுங்கள்" என்று கூறி அவர்களை வழியனுப்பி வைத்தார்.

அவரது கருணைக்காக நன்றிகூறிய பயணிகள் பாடியபடியே மோட்சப் பாதையில் தங்கள் பயணத்தைத் தொடர்ந்தார்கள்.

"பாதையில் நடப்போரே! வாருங்கள் இங்கே
வழிதவறும் பயணிகள் நிலையைப் பாருங்கள்!
சிக்கிக் கொண்டனரே ஒரு கொடுவலையில்
நல்லாலோசனையை மறந்ததே இதன் காரணம்!
அவர்கள் காப்பாற்றப்பட்டது உண்மைதான்!
எச்சரிப்புக்காக சவுக்கடியும் பட்டனரே!

என்று பாடியபடியே சென்றார்கள்.

இவ்வாறு சற்றுதூரம் சென்றபோது தங்களுக்கு எதிராக ஒருவன் வருவதைக் கண்டார்கள்.

30. நாத்திகனைச் சந்தித்தல்

''அதோ ஒருவன் சீயோனுக்குத் தன் முதுகைக் காட்டியவாறே வருகிறானே! அவன் நம்மை நோக்கித் தான் வருகிறான் என்று நினைக்கிறேன்'' என்றான் கிறிஸ்தியான்.

''ஆமாம், வருகிறான். ஆனால் நாம் எச்சரிப்புடன் இருப்போம். அவனும் முகத்துதி செய்பவனைப்போன்ற ஒருவனாக இருந்துவிடக் கூடாதே!'' என்றான் நன்னம்பிக்கை.

அந்தப் புது மனிதன் அவர்களை நெருங்கிவிட்டான். அவனே **நாத்திகன்** என்ற பெயரையுடையவன்.

“நீங்கள் எங்கே செல்கிறீர்கள்?” என்று அவன் பயணிகளிடம் கேட்டான்.

“சீயோன் மலைக்குச் செல்கிறோம்” என்று பதிலளித்தான் கிறிஸ்தியான்.

இதைக் கேட்ட நாத்திகன் கடகடவென்று சிரித்தான்.

“ஏன் இப்படிச் சிரிக்கிறாய்?” என்று எரிச்சலுடன் கேட்டான் கிறிஸ்தியான்.

“இவ்வளவு கடினமான ஒரு பயணத்தைச் செய்யும் உங்கள் மடத்தனத்தைக் கண்டுதான் நான் சிரிக்கிறேன். உங்களுக்குக் கிடைக்கப்போவதெல்லாம் பயணத்தில் ஏற்படும் வேதனைகள் தான். வேறென்ன கிடைக்கப்போகிறது?” என்று கூறி மறுபடியும் சிரித்தான் நாத்திகன்.

“நாங்கள் அங்கே ஏற்றுக்கொள்ளப்பட மாட்டோம் என்று எதைக் கொண்டு சொல்லுகிறாய்?'' என்று கோபத்துடன் கேட்டான் கிறிஸ்தியான்.

''ஏற்றுக்கொள்ளப்படுவதா? எங்கே? இந்த உலகம் முழுவதிலும் நீங்கள் எதிர்பார்ப்பதைப்போன்ற ஓரிடம் கிடையாது?” என்றான் நாத்திகன்.

“ஆனால் வரப்போகும் உலகில் அது இருக்கிறது” என்று நம்பிக்கையுடன் கூறினான் கிறிஸ்தியான்.

“நான் எனது சொந்த நாட்டில், எனது வீட்டில் இருந்த போது, நீ இப்போது கூறியதுபோன்ற செய்தியைக் கேள்விப் பட்டேன். அன்றிலிருந்து கடந்த இருபது வருடங்களாக

எங்கெல்லாமோ இந்தப் பட்டணத்தில் சுற்றித்திரிந்தபோது அப்படி ஓர் இடத்தை என்னால் கண்டுபிடிக்க முடியவில்லை!" என்றான் நாத்திகன்.

"நாங்களும் கேள்விப்பட்டோம்; அதை விசுவாசிக்கிறோம். நிச்சயம் அப்படி ஓர் இடத்தைக் கண்டடைவோம்!" என்று உறுதியான குரலில் கூறினான் கிறிஸ்தியான்.

"நானும் என் வீட்டிலிருந்து விசுவாசத்தோடுதான் புறப்பட்டேன். அதைத் தேடி நீங்கள் இன்னும் சென்றடையாத தொலைவுவரைச் சென்றுவிட்டுதான், கண்டுபிடிக்கமுடியாமல் இப்போது திரும்பிக் கொண்டிருக்கிறேன். இதுவரை என்னால் கண்டுபிடிக்க முடியாத அந்த இடத்தைப் பற்றிய நம்பிக்கையை விட்டொழித்துவிட்டு, என்னுடைய இடத்துக்குச் சென்று, இதற்காக அருவெறுத்துத் தள்ளியவற்றை மறுபடியும் சேர்த்துக் கொண்டு இன்பமாக இருக்கப்போகிறேன்" என்றான் நாத்திகன்.

அப்போது கிறிஸ்தியான் நன்னம்பிக்கையைத் தனியே அழைத்துக் கொண்டுபோய், "இந்த மனிதன் கூறுவது உண்மையாக இருக்குமா?" என்று கேட்டான்.

"இவனைப்போன்று இனிமையாகப் பேசும் எவனையும் நம்பி ஏமாறாமல் இருப்போம். இப்படிப்பட்ட ஒருவனின் பேச்சைக் கேட்டதினால் நாம் எவ்வளவு வேதனைகளை அனுபவிக்க வேண்டியிருந்தது என்பதை மறந்துவிட்டாயா? சீயோன் மலை என்ற இடமே கிடையாதா? என்ன அபத்தம் இது? நாம்தான் மகிழ்ச்சி மலை உச்சியிலிருந்து அந்தப் பட்டணத்தின் வாயில்களைப் பார்த்தோமே! அது மட்டுமன்றி, நாம் இப்போது கண்டு நடப்பவர்களாக அல்ல, விசுவாசத்தில் நடப்பவர்களாக அல்லவா இருக்கிறோம்? *(2 கொரி. 5:6)* சவுக்கைக் கையில் வைத்திருக்கும் நபர் மீண்டும் நம்மைத் தேடிவந்து தண்டிக்க இடம் கொடுக்காமல் முன்னேறிச் செல்வோம். பார்க்கப்போனால் அனுபவம் பெற்ற நீதான் எனக்குப் புத்தி சொல்ல வேண்டும். ஆனால் இப்போது நானே சொல்கிறேன் கேள்: 'என் மகனே, அறிவைத் தரும் வார்த்தைகளை விட்டு விலகச் செய்யும் போதகங்களை நீ கேளாதே' *(நீதி. 19:27)*. அன்பான சகோதரனே, அவனுக்குச் செவிசாய்க்காமல் என்னுடைய பேச்சைக் கேள். 'நாமோ கெட்டுப் போகப் பின்வாங்குகிறவர்களாயிராமல், ஆத்துமா ஈடேற விசுவாசிக்கிறவர்களாயிருக்கிறோம்" *(எபி. 10:39)* என்றான் நன்னம்பிக்கை.

"நமது விசுவாசத்தின் சத்தியத்தைப்பற்றி நான் ஐயம் கொண்டதினால் உன்னிடம் இந்தக் கேள்வியைக் கேட்கவில்லை.

உனது இருதயத்தின் நேர்மையிலிருந்து ஒரு கனி வெளிப்படும் பொருட்டாகவே இப்படிக் கேட்டேன். இந்த மனிதன் உலகத்தின் அதிபதியால் கண்கள் குருடாக்கப்பட்ட நிலையில் இருக்கிறான். நாம் சத்தியத்திலேயே நம்பிக்கை வைத்திருக்கிறோம். அதில் எள்ளளவும் பொய் இல்லை என்ற உறுதியோடு முன்னேறிச் செல்வோம். சத்தியத்தினால் ஒரு பொய்யுமுண்டாயிராது. (யோவான் 2:21) அல்லவா?" என்றான் கிறிஸ்தியான்.

"நமது ஆண்டவரின் மகிமைபற்றிய நம்பிக்கையில் இப்போது மகிழ்ச்சியடைகிறேன்" என்று கூறிய நன்னம்பிக்கை கிறிஸ்தியானை அழைத்துக்கொண்டு பரலோகம் செல்லும் பாதையில் முன்னேறினான்.

நாத்திகனோ அவர்களைக் கேலிசெய்து சிரித்தபடியே எதிர்த்திசையில் சென்று விட்டான்.

பயணிகளில் இருவரும் தொடர்ந்து செல்வதை நான் என் கனவில் கண்டேன்.

அப்போது அவர்கள் ஒரு புதிய இடத்தைச் சென்றடைந் தார்கள்.

31. உறக்க பூமியில் பயணிகள்

அந்த இடத்துக்குப் புதிதாக வந்து சேர்ந்தவர்களை அங்கு வீசும் காற்று உறக்கத்திலாழ்த்தும் சக்தி படைத்ததாக இருந்தது.

நன்னம்பிக்கையின் கண்கள் உறக்கத்தில் சொக்கத் துவங்கின.

அவன் கிறிஸ்தியானிடம் திரும்பி, "நண்பனே, எனக்குத் தூக்கம் வருகிறது. கண்களைத் திறந்து வைத்திருப்பதே கடினமாக இருக்கிறது. இங்கேயே படுத்துச் சற்று நேரம் ஓய்வெடுத்துவிட்டுச் செல்லலாம்" என்று கூறினான்.

"இல்லை, வேண்டவே வேண்டாம். அப்படி நாம் உறங்கினால் நாம் மறுபடியும் எழவே மாட்டோம்" என்று எச்சரித்தான் கிறிஸ்தியான்.

"ஏன் அப்படிச் சொல்கிறாய், சகோதரனே! களைத்து போனவனுக்கு உறக்கம் இனிமையானதாக இருக்குமல்லவா? நாம் உறங்கி எழுந்தால் புத்துணர்வு பெறுவோம்" என்று வாதிட்டான் நன்னம்பிக்கை.

"மேய்ப்பர்களில் ஒருவர் இந்த உறக்க பூமியைப் பற்றி எச்சரித்ததை மறந்துவிட்டாயா? நாம் உறக்கத்தில் ஆழ்ந்து விடாமல் இருக்க வேண்டும் என்றல்லவா அவர் கூறினார்!

எனவே மற்றவர்களைப்போல நாம் தூங்கிவிடாமல் 'விழித்துக் கொண்டு தெளிந்தவர்களாயிருக்கக்கடவோம்' *(1 தெச. 5:6)*" என்றான் கிறிஸ்தியான்.

"நான் கூறியது தவறு என்பதை ஒப்புக்கொள்கிறேன். நான் தனியாக இங்கு வந்திருந்தால் உறக்கத்தில் ஆழ்ந்து இறந்து போனாலும், போயிருப்பேன்! 'ஒண்டியாயிருப்பதில் இருவர் கூடியிருப்பது நலம்' *(பிர. 4:9)* என்று பிரசங்கியார் கூறியது உண்மைதான் இதுவரை உன்னுடைய துணை கிடைத்ததே பெரிய கருணைதான்! உனது உழைப்புக்காக உனக்கு நிச்சயம் நல்ல வெகுமதி கிடைக்கும் என்று கிறிஸ்தியானைப் பாராட்டினான் நன்னம்பிக்கை.

"அது இருக்கட்டும், தூக்கத்தை விரட்டுவதற்காக நாம் எதைப்பற்றியாவது விவாதிக்கலாம்" என்று ஆலோசனை கூறினான் கிறிஸ்தியான்.

"முழுமனதோடு நான் அதற்கு ஒப்புக்கொள்கிறேன்" என்று மகிழ்ச்சியோடு சம்மதித்தான் நன்னம்பிக்கை.

"எதைப்பற்றிப் பேசலாம்?" என்று கேட்டான் கிறிஸ்தியான்.

"ஆண்டவர் நம்மில் துவக்கின கிருபையைப்பற்றிப் பேசுவோமே! ஆனாலும் முதலில் நீ இதைப்பற்றிப் பேசு" என்று கேட்டுக் கொண்டான் நன்னம்பிக்கை.

"முதலில் ஒரு பாடலைப் பாடுகிறேன் கேள்" என்று கூறிய கிறிஸ்தியான் பாடத் துவங்கினான்.

"பரிசுத்தவான்கள் கண் மயங்கினால்
வரட்டும் அவர்கள் இங்கே!
பரிவாய்ப் பேசுகிறோம் பயணிகள்
இருவர், வந்து கேட்கட்டும்!
உறங்கும் விழிகள் மூடாமலிருக்க
அறிவின் வார்த்தைகள் கேட்கட்டும்!
உறவு, பரிசுத்தவான்களின் உறவு,
நரகத்திற்கான அழிவிலிருந்து மீட்குமே!"

என்று கனிவாகப் பாடினான் கிறிஸ்தியான்.

"முதலில் நான் உன்னிடம் ஒரு கேள்வி கேட்கிறேன்" என்று உரையாடலைத் துவக்கிய கிறிஸ்தியான்,

"இப்போது நீ செய்யும் இந்தப் பயணத்தைத் துவங்க வேண்டுமென்ற வாஞ்சை எப்போது உனக்கு உண்டாயிற்று?" என்று நன்னம்பிக்கையிடம் கேட்டான்.

''எப்போது எனது ஆத்துமாவின் நன்மைக்கடுத்த காரியங்களைச் சிந்திக்கத் துவங்கினேன் என்றுதானே கேட்கிறாய்?'' என்று கேட்டான் நன்னம்பிக்கை.

“ஆம், அப்படித்தான்” என்றான் கிறிஸ்தியான்.

“நமது உலகப் பொருள்காட்சி சாலையில் விற்கப்பட்ட அநேக பொருள்கள் துவக்கத்தில் எனக்கு அதிக இன்பத்தை அளித்தன. ஆனால் தொடர்ந்து நான் அவற்றில் மூழ்கியிருந்தால் அவை என்னை அழிவுக்கு இட்டுச் சென்றிருக்கும் என்பதை இப்போது நான் உணர்கிறேன்'' என்றான் நன்னம்பிக்கை.

''அப்படி உனக்கு இன்பம் அளித்த பொருள்கள் என்னென்ன?'' என்று கேட்டான் கிறிஸ்தியான்.

''இந்த உலகத்தின் அனைத்து செல்வங்களும், பொக்கிஷங்களும் எனக்கு இன்பத்தை அளித்தன. கலகம் விளைவிப்பதிலும், குடிப்பதிலும், தூஷணம் பேசுவதிலும், பொய் கூறுவதிலும், அசுத்தமாக நடப்பதிலும், ஓய்வு நாளை ஆசரிக்காமல் இருப்பதிலும், ஆத்துமாவை அழிக்கக்கூடிய அனைத்துக் காரியங்களிலும் நான் மகிழ்ச்சியைக் கண்டேன். ஆனால் இறுதியில் பரலோகத்துக்கடுத்த காரியங்களைப் பற்றிக் கேட்டு அவற்றை ஆராய்ந்து அறிந்ததின்மூலமாகவும், உன்னைப் பற்றியும், விசுவாசத்திற்காக இரத்தச் சாட்சியாக மரித்த உண்மையானவனைப்பற்றியும் கேள்விப்பட்டதினாலும் இந்த உலகப்பிரகாரமான காரியங்களின் முடிவு மரணமே என்பதை உணர்ந்துகொண்டேன். இந்தக் காரியங்களின் காரணமாக கீழ்ப்படியாமையின் பிள்ளைகள் ஆண்டவருடைய கோபாக்கினையைத் தண்டனையாகப் பெறுவார்கள் (எபே. 5:6) என்றும் அறிந்துகொண்டேன்'' என்றான் நன்னம்பிக்கை.

“இந்தப் பாவ உணர்வு ஏற்பட்டவுடன் அதற்குக் கீழ்ப் படிந்தீரா?'' என்று கேட்டான் கிறிஸ்தியான்.

“இல்லை, அப்போது பாவத்தின் தீங்கைப்பற்றியும், அதைப் பின்பற்றுவதினால் ஏற்படும் அழிவைப்பற்றியும் அறிந்துகொள்ள விரும்பவில்லை. வேத வசனம் என் உள்ளத்தில் கிரியை செய்யத் துவங்கியபோது, அந்தக் கிருபையின் ஒளியைக் காண விரும்பாமல் கண்களை மூடிக்கொள்ள விரும்பினேன்'' என்றான் நன்னம்பிக்கை.

“ஆண்டவருடைய ஆவியானவர் உன்னுடைய உள்ளத்தில் கிரியை செய்யத் துவங்கியபோது நீ அதற்கு இடம்கொடாமல் போனதற்குக் காரணம் என்ன?'' என்று கேட்டான் கிறிஸ்தியான்.

"காரணங்களைச் சொல்லட்டுமா? முதலாவதாக, இது என்னில் செய்யப்படும் ஆண்டவருடைய கிரியை என்பதை நான் அறிந்திருக்கவில்லை. ஒரு பாவியின் மனதில் பாவத்தைப் பற்றிய உணர்வை ஏற்படுத்துவதின்மூலம் ஆண்டவர் அவனை மனந்திரும்புதலை நோக்கி வழி நடத்துகிறார் என்பதையும் நான் அறிந்திருக்கவில்லை. இரண்டாவதாக, பாவம் செய்வது என் மாம்சத்திற்கு இன்பகரமாக இருந்தபடியால் அதைவிட்டு விலக விரும்பவில்லை. மூன்றாவதாக, எனது பழைய நண்பர்களோடு உடன் இருப்பதும், அவர்களது செயல்களும் எனக்கு மிகவும் பிடித்துப் போயிருந்தபடியால் அவர்களை விட்டு எப்படி விலகுவது என்றே எனக்குத் தெரியவில்லை. நான்காவதாக, இத்தகைய பாவஉணர்வு எனக்குள் உருவாகும்போது, அது என் இருதயத்தில் குழப்பத்தையும் பயத்தையும் உண்டு பண்ணினபடியால் அதைப்பற்றி நினைத்துப் பார்க்கவே அஞ்சினேன்" என்று கூறினான் நன்னம்பிக்கை.

"உனது மனக்குழப்பம் எப்போதாவது நீங்கியதுண்டா?" என்று கேட்டான் கிறிஸ்தியான்.

"ஓ! சில வேளைகளில் குழப்பம் மறைந்து மனம் சமாதானமடையும். ஆனால் மறுபடியும் குழப்பமும், கவலையும் என்னை ஆட்கொண்டுவிடும். அப்போது நிலைமை முன்பைவிட மோசமாகிவிடும்" என்று பெருமூச்சு விட்டபடியே கூறினான் நன்னம்பிக்கை.

"அப்படி மறுபடியும் உனது பாவங்களைப்பற்றி உன்னை நினைக்கத் தூண்டியது எது?" என்று கேட்டான் கிறிஸ்தியான்.

"இதோ ஒவ்வொன்றையும் பட்டியல் போட்டுக் கூறட்டுமா? 1. தெருவில் செல்லும்போது யாராவது நல்ல மனிதரைப் பார்க்க நேர்ந்தால், 2. வேத வசனங்களை யாராவது வாசிப்பதை நான் கேட்க நேர்ந்தால், 3. எனக்குத் தலைவலி ஏற்பட்டால், 4. எனது அண்டை வீட்டார் எவரேனும் நோய்வாய்ப்பட்டிருக்கிறார்கள் என்று கேள்விப்பட்டால், 5. மரித்தவர்களுக்காக சாவு மணி அடிப்பதைக் கேட்டால், 6. எனது மரணத்தைப்பற்றி நானே நினைத்துப் பார்க்கத் துவங்கினால், 7. மற்றவர்கள் சடுதியாய் மரணமடைந்தார்கள் என்று கேள்விப்பட்டால், 8. நான் விரைவிலேயே நியாயத்தீர்ப்பைச் சந்திக்க வேண்டுமே என்று நினைத்துப் பார்த்தால், நான் எனது பாவங்களைப் பற்றிய உணர்வைப் பெறுவேன்" என்றான் நன்னம்பிக்கை.

"இவ்வாறு நீ எந்த வகையிலாவது பாவ உணர்வைப் பெற்றால், அதை விரட்டியடிப்பது உனக்குச் சுலபமாக இருக்குமா?" என்று கேட்டான் கிறிஸ்தியான்.

“அவ்வளவு எளிதான காரியமல்ல அதை விரட்டியடிப்பது! ஏனெனில் அந்த உணர்வு என் மனச்சாட்சியை உறுதியாகப் பற்றிக்கொள்ளுகிறது. எனது உள்ளம் இவ்வாறு பாவத்துக்கு எதிரான உணர்வைக் கொண்டிருக்கும்போது மறுபடியும் பாவம் செய்வதைப்பற்றி நான் நினைத்தால் அது எனக்கு இரட்டைச் சித்திரவதையாக இருக்கும்” என்று கூறும்போதே நன்னம்பிக்கை யின் குரல் நடுங்கியது.

“அப்போது நீ என்ன செய்வாய்?” என்று ஆவலுடன் கேட்டான் கிறிஸ்தியான்.

“எனது வாழ்க்கை முறையை மாற்றிக்கொள்ள நான் முயல வேண்டும் என்று நினைப்பேன். அல்லது ஆண்டவருடைய கோபாக்கினைதான் ஒரே முடிவு என்று நினைத்துக் கொள்ளுவேன்” என்றான் நன்னம்பிக்கை.

“அப்படி மாற்றிக்கொள்ள நீ முயற்சி செய்திருக்கிறாயா?” என்று கேட்டான் கிறிஸ்தியான்.

“ஆம், பாவங்களைவிட்டு மட்டுமல்ல பாவகரமான நண்பர்களையும் விட்டு விலகி ஓடிப்போய் பக்திக்கடுத்த கடமைகளைச் செய்ய முயலுவேன். ஜெபிப்பது, வேதம் வாசிப்பது, எனது பாவங்களை உணர்ந்து கண்ணீர் வடிப்பது, அண்டை அயலாரிடம் உண்மையே பேசுவது போன்ற கடமைகளைச் செய்வேன். இன்னும் நான் செய்த அநேக காரியங்களைப் பற்றியும் இங்கே கூறுவதற்கு நேரம் போதாது” என்றான் நன்னம்பிக்கை.

“அப்போது நீ உன்னைப்பற்றி மேன்மையாக எண்ணிக் கொள்வாயா?” என்று கேட்டான் கிறிஸ்தியான்.

“ஆம், சில வேளைகளில் அப்படி நினைத்துக்கொள்வதுண்டு. ஆனால் என்னை நானே சரிப்படுத்திக்கொள்வதற்கு முன்பாகவே மனக்குழப்பம் மறுபடியும் என்னை ஆட்கொண்டுவிடும்” என்றான் நன்னம்பிக்கை.

“நீர்தான் உம்மைச் சரிப்படுத்திக் கொள்ள முயன்று வந்தாயே, பிறகு ஏன் மறுபடியும் மனக் குழப்பம் ஏற்பட்டது?” என்று விடாமல் கேட்டான் கிறிஸ்தியான்.

“நான் நானாகவே என்னைச் சரிப்படுத்திக்கொள்ள முயன்றபோது எனது கிரியைகள் பயனற்றவை என்பதை உணர்த்தும் அநேக வேத வசனங்களைப் படிக்க நேர்ந்தது. இதோ சில வசனங்கள்: ‘எங்களுடைய நீதிகளெல்லாம் அழுக்கான கந்தைபோல் இருக்கிறது” ‘நியாயப் பிரமாணத்தின்

கிரியைகளினாலே எந்த மனுஷனும் நீதிமானாக்கப்படுவதில்லையே' (கலா. 2:16). அப்படியே நீங்களும் உங்களுக்குக் கட்டளையிடப்பட்ட யாவற்றையும் செய்த பின்பு, நாங்கள் அப்பிரயோஜனமான ஊழியக்காரர், செய்ய வேண்டிய கடமையை மாத்திரம் செய்தோம் என்று சொல்லுங்கள்'' (லூக்கா 17:10) போன்ற வசனங்கள் எனக்குள் கிரியை செய்தன. எனது நீதியெல்லாம் வெறும் கந்தையாக இருக்குமானால் நியாயப்பிரமாணத்தின் கிரியைகளினால் எந்த மனிதனும் நீதிமானாக்கப்பட முடியாது என்பதினாலும், நமது கிரியைகள் எவ்விதத்திலும் நமக்குப் பயனளிக்கமாட்டா என்பதினாலும், நியாயப்பிரமாணத்தைப் பின்பற்றுவதினால் மட்டும் பரலோக பாக்கியத்தைப்பெற முடியாது என்பதினாலும் எனது நற்கிரியைகளின் பயனற்ற தன்மையைப்பற்றி நான் சிந்தித்தேன். அது மட்டுமா? ஒருவன் ஒரு கடையில் வாடிக்கையாகக் கடனுக்குச் சரக்குகள் வாங்கி வருகிறான் என்று வைத்துக் கொள்வோம். கடன் தொகை ஆயிரம் ரூபாயை எட்டிவிட்டது ஆனால் அதற்குப் பிறகு அவன் பணம் கொடுத்தே தன் சரக்குகளைப் பெற்றுக்கொள்கிறான். என்றாலும் பழைய கடனாகிய ஆயிரம் ரூபாய் கடைக்காரனின் கணக்கேட்டில் அப்படியே இருக்கும் அல்லவா? அதைப் பார்க்கும் கடைக்காரன் அந்தப் பழைய கடனுக்காக அவனை நியாயத்தீர்ப்புக்குள் கொண்டு வருவான் அல்லவா என்றெல்லாம் நினைத்துப் பார்த்தேன்' என்றான் நன்னம்பிக்கை.

அது சரி, உன்னைப் பொருத்தமட்டில் இதன் விளக்கம் என்ன?'' என்று கேட்டான் கிறிஸ்தியான்.

எனது பாவங்களின் காரணமாக நான் ஆண்டவரின் கணக்கேட்டில் கடன்காரனாகப் பதிவு செய்யப்பட்டிருக்கிறேன். இப்போது என்னை நானே சரிப்படுத்துவதின் மூலம் பழைய கடன்களைச் சரிக்கட்ட முடியாது. எனவே இப்போது நான் எவ்வளவுதான் சரி செய்தாலும், கடனில் மூழ்கிப் போகும் ஆபத்தில்தான் இருக்கிறேன். அப்படியானால் எனது முந்தைய மீறுதல்களினால் எனக்கு நானே வருவித்துக் கொண்ட ஆக்கினையிலிருந்து நான் எப்படித் தப்பிப் பிழைக்க முடியும் என்று சிந்திக்கத் துவங்கினேன்'' என்றான் நன்னம்பிக்கை.

"சரியான சிந்தனைதான்! தொடர்ந்து சொல்லு!'' என்று உற்சாகப்படுத்தினான் கிறிஸ்தியான்.

"நான் சரிசெய்யும் முயற்சியில் ஈடுபட்டாலும் மற்றொரு காரியம் என்னை வருத்தி வந்தது. இப்போது நான் செய்யும் மேன்மையான காரியங்களைச் சீர்தூக்கிப் பார்க்கும்போது,

அவற்றிலும்கூட புதிய பாவம் காணப்படுவதைக் கண்டு திடுக்கிட்டேன். எனவே என்னைப் பற்றியும், என் கிரியைகளைப் பற்றியும் நான் கொண்டிருந்த வீண் பெருமையோடும்கூட, அப்படி ஒரு வேளை முன்பு ஒரு பாவமும் செய்யாதவனாக இருந்தாலும் கூட இப்போது நான் ஒரே ஒரு நாளில் செய்யும் பாவம்கூட என்னை நரக ஆக்கினைக்கு இட்டுச் செல்லக் கூடியது என்பதையும் உணர்ந்தேன்" என்றான் நன்னம்பிக்கை.

''அப்போது என்ன செய்தாய்?'' என்று கேட்டான் கிறிஸ்தியான்.

''என்ன செய்வதா? உண்மையானவனிடம் என் குழப்பத்தைப்பற்றிக் கூறும் வரையில் என்ன செய்வதென்றே எனக்குத் தெரியவில்லை. அவன் எனக்கு நெருங்கிய நண்பனாக இருந்தான். இதுவரை ஒரு பாவமும் செய்யாத ஒரு நபரின் நீதியை நான் எனக்கொன்று பெறாவிட்டால், என்னுடைய சுய நீதியோ அல்லது உலகத்தில் காணப்படும் அனைத்து நீதியின் ஒட்டுமொத்தமோ என்னை மீட்க முடியாது என்று அவன் கூறினான் என்றான் நன்னம்பிக்கை.

"அவன் உண்மையைக் கூறினான் என்று நீ நினைத்தாயா?" என்று கேட்டான் கிறிஸ்தியான்.

"எனது சொந்தக் கிரியைகளைக் குறித்து நான் திருப்தியும், மகிழ்ச்சியும் பெற்றிருந்த வேளையில் அவன் இவ்வாறு கூறியிருந்தால் நான் அவனை ஒரு முட்டாள் என்று கூறியிருப்பேன். ஆனால் இப்போது எனது நற்கிரியைகளிலும் பாவக் கறை படிந்திருப்பதை அறிந்து, என் அவல நிலையை உணர்ந்திருந்தபடியால் நான் அவன் கூறியதை ஒப்புக்கொள்ள வேண்டியிருந்தது" என்றான் நன்னம்பிக்கை.

''அவன் அவ்வாறு கூறும்போது, இதுவரை பாவமே செய்யாதவர் என்று கூறக் கூடிய ஒருவர் இருக்க முடியும் என்று நீ எண்ணினாயா?" என்று கேட்டான் கிறிஸ்தியான்.

''முதலில் அவன் கூறியது விநோதமாகத்தான் இருந்தது என்பதை நான் ஒப்புக்கொண்டே ஆக வேண்டும். ஆனால் அவனோடு இருந்து, உரையாடியபோது அவன் கூறியது உண்மைதான் என்ற உறுதி எனக்கு ஏற்பட்டது" என்றான் நன்னம்பிக்கை.

''அந்த நபர் யார் என்றும், அவரால் எப்படி நீதிமானாக்கப்பட முடியும் என்றும் நீ அவனிடம் கேட்டாயா?" என்று அறிந்துகொள்ள முயன்றான் கிறிஸ்தியான்.

"ஆம், அவர்தான் மகா மேன்மையானவரின் வலது பாரிசத்தில் வீற்றிருக்கும் ஆண்டவராகிய இயேசு! அவர் மாம்சப் பிரகாரமாக வந்திருந்தபோது, சிலுவை மரத்தில் அவர்பட்ட வேதனைகளின்மூலம் செய்த கிரியையை விசுவாசிப்பதின் மூலமே நாம் நீதிமானாக்கப்பட முடியும் என்று அவன் கூறினான். அந்த நபரின் நீதி மட்டும் நம்மை எப்படி ஆண்டவருக்கு முன்பாக நீதிமானாக்க முடியும் என்று நான் அவனிடம் கேட்டேன். அவரே வல்லமையுள்ள ஆண்டவர் என்று அவன் கூறினான். அவர் தமக்காக மரிக்கவில்லை என்றும் அவன் விளக்கினான். நான் அவரை விசுவாசித்தால் அவரது கிரியைகளின் பலன்களைப் பெற்றுக்கொள்வேன் என்றும் அவன் கூறினான்" என்றான் நன்னம்பிக்கை.

"அப்போது நீ என்ன செய்தாய்?" என்று கேட்டான் கிறிஸ்தியான்.

"அவர் என்னை இரட்சிக்க விரும்பவில்லை என்று நான் எண்ணியபடியால், என்னால் விசுவாசிக்க இயலாது என்று நான் கூறினேன்" என்றான் நன்னம்பிக்கை.

"அப்போது உண்மையானவன் உன்னிடம் என்ன சொன்னான்?" என்று தொடர்ந்து கேட்டான் கிறிஸ்தியான்.

"அவரிடம் சென்று பார்க்கும்படி அவன் கூறினான். அது வெறும் அனுமானமே என்று நான் கூறினேன். 'நீங்கள் எல்லாரும் என்னிடத்தில் வாருங்கள்" (மத். 11:28) என்று இயேசுவே கூறியிருப்பதாக உண்மையானவன் சொன்னான். அதுமட்டுமன்றி அவரைப்பற்றி எழுதப்பட்ட ஒரு நூலையும் என்னிடம் கொடுத்து, 'வானமும் பூமியும் ஒழிந்துபோம், என் வார்த்தைகளோ ஒழிந்து போவதில்லை' (மத். 24:35) என்று இயேசுவே அதைப்பற்றிக் கூறியிருப்பதாகவும் சொன்னான். அப்படி நான் வரும்போது நான் என்ன செய்யவேண்டுமென்று அவனிடம் கேட்டேன். நான் அவருக்கு முன்பாக பணிந்து குனிந்து முழங்காற்படியிட்டு (சங். 95:6), ஜெபம்பண்ணி, ஸ்தோத்திரம் செலுத்தி (தானி. 6:10), என் முழு இருதயத்தோடும் அவரைத் தேட வேண்டும் (எரே. 29:12, 13) என்று அவன் கூறினான். அதுசரி, அவரிடம் நான் எப்படி வேண்டிக்கொள்வது என்று உண்மையானவனிடம் கேட்டேன். 'நீ போ, அங்கே அவர் கிருபாசனத்தின்மேல் வீற்றிருக்கக் காண்பாய் (யாத். 25:22) நீ இரக்கத்தைப் பெறவும், ஏற்ற சமயத்தில் சகாயஞ்செய்யும் கிருபையை அடையவும், தைரியமாய்க் கிருபாசனத்தண்டையிலே சேரக்கடவாய்' (எபி. 4:16) என்று அவன் கூறினான். வருட முழுவதும் அவரிடம் வேண்டிக்கொள்பவர்களுக்குப் பாவ

மன்னிப்பை அருளுவார் என்றும் அவன் கூறினான். அப்படி அவரருகே செல்லும்போது என்ன சொல்லுவதென்றே எனக்குத் தெரியாதே என்று நான் அங்கலாய்த்தேன். அவனோ இப்படிச் சொல் என்று எனக்குச் சொல்லிக் கொடுத்தான். 'ஆண்டவரே பாவியாகிய என்மேல் கிருபையாயிரும். இயேசு கிறிஸ்துவை நான் அறிந்து, அவரை விசுவாசிக்கும்படி நீரே எனக்கு உதவும். அவரது நீதி எனக்கு அளிக்கப்படாவிட்டால், அந்த நீதியில் நான் விசுவாசம் வைக்காவிட்டால் நான் ஒன்றுக்கும் உதவாதவன் என்று நான் அறிக்கையிடுகிறேன். ஆண்டவரே, நீர் கிருபையுள்ள தேவன் என்றும், உமது குமாரனாகிய இயேசு கிறிஸ்து இந்த உலகத்தின் மீட்பராகும்படி நீர் குறித்திருக்கிறீர் என்றும் நான் அறிகிறேன். என்னைப்போன்ற மகா பாவிக்கும் நீர் ஆசீர்வாதங்களைத் தாராளமாக அருள நீர் சித்தமாயிருக்கிறீர் என்பதை நான் அறிவேன். நான் பாவியிலும் மகா பாவி, ஆண்டவரே. இந்தத் தருணமே உம்முடைய குமாரனாகிய இயேசு கிறிஸ்துவின்மூலம் எனது ஆத்துமாவை மீட்டுக்கொள்ளுமாறு உமது மகா பெரிய கிருபையை அருளும்படி வேண்டுகிறேன். ஆமென்' என்று ஜெபிக்கும்படி அவன் கற்றுத் தந்தான் என்றான் நன்னம்பிக்கை.

''அவன் உனக்குக் கூறியபடி நீ செய்தாயா?'' என்று கேட்டான் கிறிஸ்தியான்.

"ஆம், மீண்டும் மீண்டும் வேண்டுதல் செய்தேன்" என்றான் நன்னம்பிக்கை.

"அப்போது பிதாவானவர் குமாரனை உனக்கு வெளிப்படுத்தி னாரா?" என்று ஆவலுடன் கேட்டான் கிறிஸ்தியான்.

"முதலாம் முறையும் கிடையாது. இரண்டு, மூன்று, நான்கு, ஐந்து, ஆறு என ஆறு தடவைகள் முயன்றும் பயனேதும் கிடைக்கவில்லை என்று கூறினான் நன்னம்பிக்கை.

''அப்போது என்ன செய்தாய்?'' என்று கேட்டான் கிறிஸ்தியான்.

"என்ன செய்வதென்றே தெரியாமல் விழித்தேன்" என்றான் நன்னம்பிக்கை.

"ஜெபத்தை நிறுத்திவிட வேண்டும் என்று நினைத்தாயா?" என்று கேட்டான் கிறிஸ்தியான்.

"ஒரு முறையா, இரு முறையா? நூறு, இரு நூறு தடவைகள் அந்த எண்ணம் வந்தது'' என்று சலித்தபடியே கூறினான் நன்னம்பிக்கை.

"அப்படியானால் பிறகு ஏன் ஜெபிப்பதை நிறுத்தவில்லை?" என்று வற்புறுத்திக் கேட்டான் கிறிஸ்தியான்.

"என்னிடம் கூறப்பட்டது அனைத்தும் உண்மை என்று நான் விசுவாசித்தேன். இந்தக் கிறிஸ்துவின் நீதியேயன்றி, சகல உலகமும் என்னை இரட்சிக்க மாட்டாது என்று நான் உறுதியாக விசுவாசித்தேன். எனவே ஜெபிப்பதை விட்டுவிட்டால் நான் மரித்துப் போவேன். அதைவிட ஆண்டவருடைய கிருபாசனத் தண்டையில் ஜெபித்தபடி மரிப்பதே மேல் என்று நினைத்தேன். 'அது தாமதித்தாலும் அதற்குக் காத்திரு; அது நிச்சயமாய் வரும், அது தாமதிப்பதில்லை' (ஆப. 2:3) என்ற வசனம் என் நினைவில் வந்தது. எனவே பிதாவானவர் தமது குமாரனை வெளிப்படுத்தும் வரையில் நான் ஜெபித்துக்கொண்டே இருந்தேன்" என்றான் நன்னம்பிக்கை.

"அவர் எப்படி உனக்கு வெளிப்படுத்தப்பட்டார்?" என்று ஆவலுடன் கேட்டான் கிறிஸ்தியான்.

"அவரை நான் எனது சரீரப்பிரகாரமான கண்களால் காணவில்லை; எனது மனக் கண்களால் (எபே. 1:18, 19) அவரைக் கண்டேன். ஒரு நாள் இதுவரை என் வாழ்நாளில் என்றுமே அனுபவித்தறியாத வகையில் அதிகமான மன துக்கத்தில் மூழ்கியிருந்தேன் எனது பாவங்களின் கொடுமையையும், எனது அபாத்திரமான நிலையையும் நான் உணர்ந்ததே இதற்கும் காரணம். நரகத்தின் வேதனைகளையும் என் ஆத்துமா அத்தகைய நித்திய தண்டனைக்கு ஏதுவானது என்பதையும் உணர்ந்து வருந்தினேன். அப்போது பரலோகத்திலிருந்து இயேசுவானவர் என்னை நோக்கிப் பார்த்து, "கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவை விசுவாசி (அப். 16:31); அப்பொழுது நீ இரட்சிக்கப்படுவாய்" என்று கூறுவதுபோல எனக்குத் தோன்றியது" என்று கூறிய நன்னம்பிக்கை மேலும் தொடர்ந்தான்.

"அப்போது நான் அவரிடம், ஆண்டவரே நான் பாவிகளிலும் பெரிய பாவியாக இருக்கிறேன் என்று அறிக்கை செய்தேன். உடனே அவர் 'என் கிருபை உனக்குப் போதும்' (2 கொரி. 12:9) என்று பதிலளித்தார். ஆண்டவரே, விசுவாசிப்பது என்றால் என்ன என்று நான் அவரிடம் கேட்டேன். 'என்னிடத்தில் வருகிறவன் ஒருக்காலும் பசியடையான், என்னிடத்தில் விசுவாசமாயிருக்கிறவன் ஒருக்காலும் தாகமடையான்', (யோவான் 6:35) என்ற வசனத்தின்மூலம் அவரிடம் வருவதும், விசுவாசிப்பதும் ஒன்றுதான் என்று கண்டு கொண்டேன். கிறிஸ்துவினால் வரும் மீட்பைப்பற்றி முழு

இருதயத்தோடு வாஞ்சை கொண்டு வருபவனே விசுவாசிப்பவன் என்பதை உணர்ந்தேன்.

அப்போது என் கண்களில் நீர் பொங்கி வழிந்தது. 'ஆண்டவரே, என்னைப் போன்ற மகா பாவியை நீர் ஏற்றுக்கொள்வீரா? என்னையும் மீட்டு இரட்சிப்பீரா?' என்று ஏக்கத்துடன் கேட்டேன். 'என்னிடத்தில் வருகிறவனை நான் புறம்பே தள்ளுவதில்லை' (யோவான் 8:37) என்று அவர் உறுதியாகக் கூறினார். 'ஆண்டவரே, உம்மிடம் வரும்போது, எனது விசுவாசம் உம்மிடம் நிலை கொண்டிருக்க நான் செய்ய வேண்டியது என்ன?' என்று தாழ்மையோடு அவரிடம் கேட்டேன். உடனே அவர் 'பாவிகளை இரட்சிக்க கிறிஸ்து இயேசு உலகத்தில் வந்தார்' (1 தீமோ. 1:15) 'விசுவாசிக்கிற எவனுக்கும் நீதி உண்டாகும்படி கிறிஸ்து நியாயப் பிரமாணத்தின் முடிவாய் இருக்கிறார்' (ரோமர் 4:25); அவர் நம்முடைய பாவங்களுக்காக ஒப்புக்கொடுக்கப்பட்டும், நாம் நீதிமான்கள் ஆக்கப்படுவதற்காக எழுப்பப்பட்டும் இருக்கிறார்' (ரோமர் 4:25); 'அவர் நம்மில் அன்பு கூர்ந்து தமது இரத்தத்தினாலே நம்மைக் கழுவினார்' (ரோமர் 10:4); 'தேவனுக்கும் மனுஷருக்கும் அவர் ஒருவரே மத்தியஸ்தர்' (1 தீமோ 2:5); 'தமது மூலமாய்த் தேவனிடத்தில் சேருகிற வர்களுக்காக வேண்டுதல் செய்யும்படிக்கு அவர் எப்பொழுதும் உயிரோடிருக்கிறவர்' (எபி. 7:25) என்று கூறினார்.

"நான் கேட்டறிந்த எல்லாவற்றையும் சிந்தித்துப் பார்த்து, அவருடைய மகிமையில் என்னுடைய நீதியையும், அவருடைய இரத்ததால் எனது பாவம் சுத்திகரிக்கப்படுதலையும் ஏற்றுக்கொள்ள வேண்டும் என்றும், அவர் தமது பிதாவானவரின் கட்டளைக்குக் கீழ்ப்படிந்து, தமக்காக அல்ல, தனது மீட்புக்காக எவன் அவரை ஏற்றுக்கொள்வானோ அவனுக்காகவே தண்டனைக்குத் தம்மை ஒப்புக்கொடுத்தார் என்பதை நன்றியறிதலோடு ஏற்றுக்கொள்ள வேண்டுமென்றும் நான் அறிந்துகொண்டேன். அப்போது என் இருதயத்தில் மகிழ்ச்சி பொங்கி வழிந்தது; என் கண்கள் நீரால் நிரம்பின; எனது உள்மனம் இயேசுவானவரின் நாமம் மற்றும் கிரியைகளைக் குறித்து அன்போடு பிரவாகித்தது" என்று உற்சாகத்துடன் கூறினான் நன்னம்பிக்கை.

"ஆம், உனது ஆத்துமாவுக்குக் கிறிஸ்து வெளிப்படுத்தப் பட்டார் என்பது உண்மைதான். ஆனால் உனது ஆவியில் இது எத்தகைய விளைவுகளை உண்டாக்கியது என்பதைக் கூறுவாயா?" என்று கேட்டான் கிறிஸ்தியான்.

"உலகம் மட்டுமின்றி, உலகத்தின் நீதியும்கூட நியாயத் தீர்ப்புக்கு ஏதுவானது என்று உணர்ந்துகொண்டேன். ஆண்டவராகிய பிதாவானவர் நீதிபரராக இருப்பினும், தம்மிடம் வரும் பாவியை நீதியாய் நீதிமானாக்கக் கூடும் என்பதையும் அறிந்துகொண்டேன். எனது முந்தைய வாழ்க்கையின் பயங்கரத்தைக் குறித்து, இந்த உணர்வு, என்னை வெட்கப்படும்படி செய்தது. எனது அறியாமையைக் குறித்து எனக்கு உணர்த்தியது. ஏனெனில் இதற்கு முன்னர் ஒருபோதும் இந்த அளவு இயேசுவானவரின் மகத்துவத்தைக் குறித்து என் இருதயத்தில் நான் உணரவில்லை. பரிசுத்தமான ஒரு வாழ்க்கையைப்பற்றி வாஞ்சிக்கும்படியும், ஆண்டவராகிய இயேசுவின் மகிமைக்காகவும், அவருக்குக் கனமுண்டாகவும் ஏதேனும் செய்யும்படியும் அது என்னைத் தூண்டியது. என் உடலில் பதினாயிரம் படி இரத்தம் இருக்குமானால், அது முழுவதையும் கிறிஸ்துவுக்காகச் சிந்தும்படியான துணிவையும் நான் பெற்றேன்" என்று கூறினான் நன்னம்பிக்கை.

32. புத்தியீனனை மறுபடியும் சந்தித்தல்

கிறிஸ்தியானும், நன்னம்பிக்கையும் இவ்வாறு உரையாடிக் கொண்டே செல்லும்போது, திரும்பிப் பார்த்த நன்னம்பிக்கை புத்தியீனன் தங்களை நெருங்கி வருவதைக் கண்டான்.

கிறிஸ்தியானே பார், அந்த இளைஞன் நம் பின்னால் வருகிறான்" என்று அவன் கிறிஸ்தியானிடம் கூறுவதை நான் என் கனவில் கண்டேன்.

"ஆமாம், நானும் பார்த்தேன். அவன் நமது உறவை விரும்பாததுபோல, நெருங்கி வராமல் சற்றுப் பின்னாலேயே வருவதை நானும் கவனித்தேன்" என்றான் கிறிஸ்தியான்.

"இதுவரை அவன் நம்முடனேகூட நடந்து வந்திருப்பானே யாகில் அது அவனை எந்த விதத்திலும் பாதித்திருக்காது என்பது நிச்சயம்" என்றான் நன்னம்பிக்கை.

"அது உண்மைதான். ஆனால் அவன் வேறுவிதமாய் நினைக்கிறான்போலும்" என்று சலித்தபடியே கூறினான் கிறிஸ்தியான்.

"ஆனாலும்கூட நாம் அவனுக்காகச் சற்றுத் தாமதிப்போம்" என்றான் நன்னம்பிக்கை. கிறிஸ்தியானும் அதற்கு ஒப்புக்கொண்டான். புத்தியீனன் அருகே வரும்வரை இருவரும் அங்கேயே நின்றுகொண்டார்கள்.

புத்தியீனன் நெருங்கி வந்தவுடன் கிறிஸ்தியான் அவனிடம், "வாப்பா வா, ஏன் அவ்வளவு தூரம் பின்னால் வந்து கொண்டிருந்தாய்?" என்று கேட்டான்.

"கூட்டமாக நடந்து செல்வதைவிட தனியாக நடந்து செல்வதுதான் எனக்கு விருப்பம்" என்று அலட்சியமாகக் கூறினான் புத்தியீனன்.

"அவன் நம்மோடுகூட வர விரும்பவில்லை என்று நான் ஏற்கெனவே கூறினேன் அல்லவா? ஆனாலும் இப்போது அவனையும் சேர்த்துக்கொண்டு பேசியபடியே போகலாம்" என்று கிறிஸ்தியான் நன்னம்பிக்கையிடம் தனியாகக் கூறினான்.

அதன்பிறகு புத்தியீனனை நோக்கித் திரும்பிய கிறிஸ்தியான், "அருகே வா தம்பி, எப்படி இருக்கிறாய்? உன் ஆத்துமாவில் தேவனைப் பற்றியுள்ள எண்ணங்கள் தற்போது எப்படி யிருக்கின்றன?" என்று அக்கறையுடன் கேட்டான்.

"எல்லாம் நலமே! எப்போதுமே நான் நல்ல நோக்கங்களையே கொண்டிருப்பதால் அவற்றைப்பற்றிச் சிந்திப்பது இவ்வாறு நடக்கும்போது எனக்கு ஆறுதலாக இருக்கிறது" என்றான் புத்தியீனன்.

"அந்த நல்ல சிந்தனைகளைப்பற்றி எங்களுக்கும் கூறுவாயா?" என்று ஆவலுடன் கேட்டான் கிறிஸ்தியான்.

"நான் ஆண்டவரைப்பற்றியும், பரலோகத்தைப் பற்றியுமே சிந்தித்துக்கொண்டிருக்கிறேன்" என்று பதிலளித்தான் புத்தியீனன்.

"சாத்தானும், சபிக்கப்பட்ட ஆத்துமாக்களும் கூட இப்படியே சிந்திக்கின்றன" என்றான் கிறிஸ்தியான்.

"ஆனால் வேறுபாடு என்னவென்றால் நான் வாஞ்சையோடு அதைப் பற்றிச் சிந்திக்கிறேன்" என்று விவாதித்தான் புத்தியீனன்.

"இங்கே சேரத் தகுதியில்லாதவர்கள்கூட இதே வாஞ்சையைப் பெற்றுள்ளார்கள். 'சோம்பேறியுடைய ஆத்துமா விரும்பியும் ஒன்றும் பெறாது' (நீதி. 1:34) என்று கூறப்பட்டுள்ளதை மறந்து விட்டாயா?" என்றான் கிறிஸ்தியான்.

"நான் வெறும் வாஞ்சை மட்டும் கொண்டிருக்கவில்லையே! அதற்காக மற்ற அனைத்தையும் விட்டுவிட ஆயத்தமாக இருக்கிறேனே?" என்று உறுதியுடன் கூறினான் புத்தியீனன்.

"அதைப்பற்றித்தான் எனக்கு ஐயமாக இருக்கிறது. ஏனென்றால் அனைத்தையும் விட்டுவிடுவது என்பது எளிதான

காரியமல்ல. ஆமாம், உண்மையில் அநேகர் இது எவ்வளவு கடினம் என்பதை உணருவதில்லை. அது சரி, நீ ஆண்டவருக்காகவும், பரலோகத்துக்காகவும் அனைத்தையும் விட்டுவிட்டேன் என்று கூறுகிறாயே! ஏன் அப்படிச் சொல்லுகிறாய்?" என்று கேட்டான் கிறிஸ்தியான்.

"என் இருதயம் அப்படித்தான் சொல்லுகிறது" என்றான் புத்தியீனன்.

"நீதிமொழிகள் நூலில் 'தன் இருதயத்தை நம்புகிறவன் மூடன்' (நீதி. 28:26) என்று ஞானி கூறியிருக்கிறாரே!" என்று விவாதித்தான் கிறிஸ்தியான்.

"கெட்ட இருதயத்தைப்பற்றியே அவ்வாறு கூறப்பட்டுள்ளது. ஆனால் என்னுடையதோ நல்ல இருதயம்' என்று பெருமையுடன் கூறினான் புத்தியீனன்.

"அதை உன்னால் நிரூபிக்க முடியுமா?" என்று கேட்டான் கிறிஸ்தியான்.

"ஏனெனில் என் இருதயம் பரலோகத்தைப்பற்றிய நம்பிக்கையின் மூலம் என்னைத் தேற்றுகிறது" என்றான் புத்தியீனன்.

"உன் இருதயம் அப்படி உன்னை ஏமாற்றுகிறது என்றுதான் கூற வேண்டும். ஒருவனுக்கு கிடைக்கக் கூடாத ஒன்றைக்கூட அவனுக்குக் கிடைக்கும் என்று வீண் நம்பிக்கையூட்டி ஒருவனுக்கு ஆறுதலளிக்கக் கூடியதுதான் அவனுடைய இருதயம்" என்றான் கிறிஸ்தியான்.

"ஆனால் என் இருதயமும், என் நடத்தையும் ஒத்துப் போகின்றன. எனவே என் நம்பிக்கைக்கு உறுதியான ஆதாரம் உண்டு என்று என்னால் கூற முடியும்" என்றான் புத்தியீனன்.

"உன் இருதயமும், உன் நடத்தையும் ஒத்துப் போகின்றன என்று உன்னிடம் கூறியது யார்?" என்று கேட்டான் கிறிஸ்தியான்.

"என் இருதயமே அப்படிச் சொல்லுகிறது" என்றான் புத்தியீனன்.

"உன் இருதயம் உனக்கு அப்படிச் சொல்லுகிறது. திருடன் தனக்குச் சாட்சியாக தன் தோழனையே கூப்பிடுவது போலல்லவா இருக்கிறது நீ சொல்லுவது? தேவனுடைய வசனம் இதைக் குறித்துச் சாட்சி கூறாவிட்டால் வேறு சாட்சிகளால் எந்தவிதப் பயனும் இல்லை" என்றான் கிறிஸ்தியான்.

"நல்ல சிந்தனைகளைக் கொண்டிருக்கும் இருதயம் நல்ல இருதயம்தானே? ஆண்டவருடைய கட்டளைகளுக்கு ஏற்ப நடப்பது நல்ல நடத்தை இல்லையா?" என்று வாதிட்டான் புத்தியீனன்.

"ஆம், நல்ல சிந்தனைகளைக் கொண்டிருக்கும் இருதயம் நல்ல இருதயம்தான். ஆண்டவருடைய கட்டளைகளுக்கு ஏற்ப நடப்பது நடத்தைதான். ஆனால் நல்ல நடத்தை கொண்டிருப்பது வேறு, நல்ல நடத்தை கொண்டிருப்பதாக நினைத்துக் கொண்டிருப்பது வேறு என்பதை நான் உனக்குச் சுட்டிக்காட்ட விரும்புகிறேன்" என்றான் கிறிஸ்தியான்.

"நல்ல சிந்தனைகள் என்றும், ஆண்டவருடைய கட்டளைக்கு ஏற்ற நன்னடத்தை என்றும் நீ எவற்றைக் குறிப்பிடுகிறாய் என்று நான் தெரிந்து கொள்ளலாமா?" என்று கேட்டான் புத்தியீனன்.

"நல்ல சிந்தனைகள் என்று கூறப்படுபவை பல்வேறு வகைப்பட்டவை. சில நம்மை நாமே மதிக்கின்றன; சில ஆண்டவருக்கும், சில கிறிஸ்துவுக்கும், வேறு சில வேறு காரியங்களுக்கும் மதிப்புக் கொடுக்கின்றன" என்றான் கிறிஸ்தியான்.

"நம்மைப்பற்றிய நல்ல சிந்தனைகள் என்று எவற்றைக் குறிப்பிடுகிறாய்?" என்று கேட்டான் புத்தியீனன்.

"ஆண்டவருடைய வசனத்துக்கு ஒத்துப்போகும் சிந்தனைகள் தான்" என்றான் கிறிஸ்தியான்.

"நம்மைப்பற்றிய நல்ல சிந்தனைகள் எப்போது ஆண்டவருடைய வசனத்தோடு ஒத்துப் போகின்றன?" என்று கேட்டான் புத்தியீனன்.

"ஆண்டவருடைய வசனம் என்ன தீர்ப்பளிக்கிறதோ அதே தீர்ப்பை நம்மைப்பற்றிய தீர்ப்பாக ஏற்றுக்கொள்ளும்போதுதான். இதோ இன்னும் தெளிவாகக் கூறுகிறேன். மனிதனுடைய இயல்பான நிலையைப்பற்றி வேத வசனம் என்ன கூறுகிறது? 'நீதிமான் ஒருவனாகிலும் இல்லை நன்மை செய்கிறவன் இல்லை, ஒருவனாகிலும் இல்லை' (ரோமர் 3:10-12) என்றும் 'மனுஷனுடைய ... இருதயத்து நினைவுகளின் தோற்றமெல்லாம் நித்தமும் பொல்லாததே' (ஆதி. 6:5) என்றும், 'மனுஷனுடைய இருதயத்தின் நினைவுகள் அவன் சிறு வயது தொடங்கிப் பொல்லாததாயிருக்கிறது' (ஆதி. 8:21) என்றும் வேத வசனம் கூறுகிறது அல்லவா? இவ்வாறெல்லாம் நம்மைப்பற்றி நாமே நினைக்கும்போதுதான், நமது சிந்தனைகள் வேத வசனங்களோடு

ஒத்துப்போகின்றன; அவை நல்ல சிந்தனைகளாகின்றன'' என்றான் கிறிஸ்தியான்.

"என்னுடைய இருதயம் அவ்வளவு மோசமானது என்று என்னால் நினைக்கமுடியாது" என்றான் புத்தியீனன்.

"அப்படியானால் நீ உனது வாழ்க்கை முழுவதும் உன்னைப் பற்றி எந்தவித நல்ல சிந்தனையும் கொண்டிருக்கவில்லை என்றுதான் கூறவேண்டும். மேலும் தொடர்ந்து சொல்லுகிறேன் கேள். வேத வசனமானது நமது இருதயங்களைப்பற்றித் தீர்ப்புச் சொல்லுவது போல, அது நமது நடத்தையைப்பற்றியும் தீர்ப்புச் சொல்லுகிறது. எனவே நமது இருதயத்தின் சிந்தனைகளும், நடத்தைகளும் வேத வசனம் அளிக்கும் தீர்ப்புக்கு ஒத்துப்போனால் மட்டுமே அவை நல்லவை என்று கூற முடியும்" என்றான் கிறிஸ்தியான்.

"இன்னும் தெளிவாகச் சொல்" என்று கேட்டுக்கொண்டான் புத்தியீனன்.

''இன்னும் உனக்குப் புரியவில்லையா? மனிதனுடைய வழிகள் கோணலான வழிகள் (சங். 125:5) என்றும், மாறுபாடான பாதைகளில் (நீதி. 2:15) அவன் செல்லுகிறான் என்றும், எல்லாரும் வழிதப்பி, ஏகமாய்க் கெட்டுப் போனார்கள் (ரோமா 3:12) என்றும் வேதவசனம் கூறுவதை நீ அறியவில்லையா? இவ்வாறு ஒரு மனிதன் உண்மையான உணர்வுடனும், தாழ்மையான இருதயத்துடனும் தனது வழிகளைப்பற்றி நினைப்பானேயாகில், அவன் தனது வழிகளைப்பற்றி நல்ல சிந்தனைகள் கொண்டிருக்கிறான் என்றும் கூறலாம். ஏனெனில் இப்போது அவனது சிந்தனைகள் வேதவசனம் கூறும் தீர்ப்புக்கு ஒத்திருக்கின்றன" என்று விளக்கி கூறினான் கிறிஸ்தியான்.

"அது சரி, ஆண்டவரைப்பற்றிய நல்ல சிந்தனைகள் எவை?" என்று கேட்டான் புத்தியீனன்.

''நம்மைப்பற்றிய சிந்தனைகளைக் குறித்து நான் கூறியதுபோலவே வேதவசனங்கள் ஆண்டவரைப் பற்றிக் கூறுவதற்கு நமது சிந்தனைகளும் ஒத்துப்போக வேண்டும். அவரைப்பற்றியும், அவரது குண நலன்களைப் பற்றியும் வேத வசனங்கள் கூறுவதற்கு ஏற்றபடி சிந்திக்க வேண்டும். இப்போது இதைப்பற்றி முழுமையாக விவரிக்க நேரமில்லை. ஆனால் நம்மைக் குறித்த காரியத்தில், நாம் நம்மைப்பற்றி அறிந்ததைவிட அவர் நம்மைப் பற்றி அதிகமாக அறிந்திருக்கிறார் என்றும், நம்மால் நம்மில் காணக்கூடாத பாவங்களையும் அவர் அறிந்தவர் என்றும், நமது உள்ளான நினைவுகளையும் அவர் அறிந்தவர்

என்றும், நமது இருதயத்தின் ஆழங்கள்கூட அவர் கண்முன்னால் திறந்த புத்தகங்களாக இருக்கின்றன என்றும், நமது நீதிகள் அனைத்தும் அவரது நாசிகளில் துர்நாற்றமாக இருக்கின்றன என்றும், நமது மேன்மையான கிரியைகளின்மூலமும்கூட நாம் எந்த நம்பிக்கையோடும் அவர் முன்னால் நிற்பதை அவர் சகிக்கமாட்டார் என்றும் நாம் சிந்திக்கும்போது அவை தேவனைப்பற்றிய நல்ல சிந்தனைகள் ஆகின்றன'' என்றான் கிறிஸ்தியான்.

''என்னால் பார்க்கக்கூடிய அளவுக்கு அதிகமாக ஆண்டவரால் பார்க்கமுடியாது என்றும், எனது நற்கிரியைகளால் நான் அவரைச் சென்றடைய முடியும் என்றும் நினைப்பதற்கு நான் என்ன ஒரு முட்டாளா?'' என்று கோபமாகக் கேட்டான் புத்தியீனன்.

"அப்படியானால் இதைப்பற்றி நீ என்னதான் நினைக்கிறாய்?'' என்று கேட்டான் கிறிஸ்தியான்.

''சுருங்கச் சொன்னால், நான் நீதிமானாக்கப்படுவதற்குக் கிறிஸ்துவை விசுவாசிக்க வேண்டும் என்று நினைக்கிறேன்'' என்றான் புத்தியீனன்.

"அவரது தேவையைப்பற்றி நீ உணராதிருக்கும்போது, அவரை விசுவாசிக்க வேண்டும் என்று நினைப்பதாகக் கூறுகிறாயே! அதுதான் எப்படி என்று நான் கேட்கிறேன்! நீ உனது ஜென்ம பாவத்தைப்பற்றியும், உனது பாவ கிரியைகளைப் பற்றியும் உணராதிருக்கிறாயே! உன்னைப்பற்றி நீ கொண்டுள்ள எண்ணங்களும், உனது கிரியைகளைப்பற்றிய உனது சிந்தனைகளும், நீ ஆண்டவருக்கு முன்பாக நீதிமானாக்கப்பட, கிறிஸ்துவின் தனிப்பட்ட நீதி உனக்கு அவசியம் என்பதை நீ உணரவில்லை என்று வெளிப்படுத்துகின்றனவே! பிறகு எப்படி நீ கிறிஸ்துவை விசுவாசிப்பதாகக் கூறுகிறாய்?'' என்று கேட்டான் கிறிஸ்தியான்.

''அதைப்பற்றி எனக்குப் போதிய விசுவாசம் உண்டு'' என்றான் புத்தியீனன்.

"நீ எப்படி விசுவாசிக்கிறாய்?'' என்று அவனிடம் கேட்டான் கிறிஸ்தியான்.

''கிறிஸ்து பாவிகளுக்காக மரித்தார் என்று நான் விசுவாசிக்கிறேன். நான் அவருடைய நியாயப்பிரமாணங்களுக்குக் கீழ்ப்படிந்து நடப்பதை அவர் கிருபையாய் ஏற்றுக்கொள்வதின் மூலம் நான் ஆண்டவருக்கு முன்பாக நீதிமானாக்கப்படுவேன்

என்றும் விசுவாசிக்கிறேன். தேவன் எனது பக்திக்கடுத்த ஊழியங்களை ஏற்றுக்கொள்ளும்படியாக, கிறிஸ்து தமது குண நலன்களால் அவற்றை அங்கீகரிக்கிறார் என்றும், இதனால் நான் நீதிமானாக்கப்படுவேன் என்றும் விசுவாசிக்கிறேன்" என்றான் புத்தியீனன்.

"உனது இந்த விசுவாச அறிக்கையிலுள்ள குறைபாடுகளை நான் சுட்டிக் காட்டுகிறேன். முதலாவதாக நீ குருட்டாம்போக்கான விசுவாசத்தோடு நம்புகிறாய்; இத்தகைய விசுவாசத்தைப்பற்றி வேதாகமத்தில் எங்கும் கூறப்படவில்லை. இரண்டாவதாக நீ தவறான விசுவாசத்தைக் கொண்டிருக்கிறாய்; கிறிஸ்துவின் தனிப்பட்ட நீதியினால் நீதிமானாக்கப்படுவதை விடுத்து உனது கிரியைகளினால் நீதிமானாக்கப்படுவதாக நீ கூறுவது தவறு.

"மூன்றாவதாக, கிறிஸ்து உன்னையல்ல, உனது கிரியைகளை நீதியுள்ளதாக ஆக்குகிறார் என்றும், இதனால் உன் கிரியைகளின்மூலமே நீ நீதிமானாக்கப்படுகிறாய் என்றும் விசுவாசிப்பது தவறாகும். நான்காவதாக, உனது இந்த விசுவாசம் ஏமாற்று விசுவாசமாக இருப்பதால் வல்லமையுள்ள ஆண்டவருடைய நியாயத்தீர்ப்பு நாளில் நீ அவருடைய கோபாக்கினைக்கு நிச்சயம் ஆளாவாய். ஒரு பாவ ஆத்துமா நியாயப்பிரமாணத்தின் மூலம் தனது பரிதாபகரமான நிலையை உணரும்போது, மெய்யான, நீதிமானாக்கக்கூடிய விசுவாசம், அந்த ஆத்துமாவைக் கிறிஸ்துவின் நீதிக்குள் புகலிடம் தேடும்படி செய்கிறது. அவரது நீதி என்பது நீதிமானாக்கப்படுதலுக்கான, அதாவது உனது கீழ்ப்படிதல் ஆண்டவரால் ஏற்றுக்கொள்ளப் படுவதற்குத்தக்கதான கிருபையின் கிரியை அல்ல, நமக்குப் பதிலாக அவர்தாமே நியாயப்பிரமாணத்துக்குக் கீழ்ப்படிந்து பாவமற்றவராக இருந்தும், நமது பாவ கிரியைகளுக்கான தண்டனையை ஏற்றுக்கொண்டதின்மூலம் அவர் பெற்ற நீதிதான் அது. இந்த நீதியையே மெய்யான விசுவாசம் ஏற்றுக்கொள்கிறது. இந்த நீதியின் வஸ்திரத்தால் மூடப்பட்ட ஆத்துமா குற்றமற்றதாக ஆண்டவருக்கு முன்னால் அளிக்கப்பட்டு, ஏற்றுக்கொள்ளப்படுகிறது; ஆக்கினைத் தீர்ப்பிலிருந்தும் விடுதலையும் பெறுகிறது" என்று விளக்கினான் கிறிஸ்தியான்.

"என்ன இது? நமது கிரியைகளுக்குப் பதிலாக கிறிஸ்து தமது சரீரத்தின் பாடுகளினால் சம்பாதித்தவற்றையா நம்பியிருக்கும்படி சொல்லுகிறீர்? இத்தகைய எண்ணம் நமது மாம்ச இச்சைகளைக் கட்டவிழ்த்துவிட்டு, நம் விருப்பப்படி வாழ நம்மை அனுமதிக்கிறது. ஏனென்றால் நாம் விசுவாசிக்கும்போது, கிறிஸ்துவின் தனிப்பட்ட நீதியால் நாம் நீதிமானாக்கப்பட

முடியும் என்பதால் நாம் எப்படியும் வாழலாம் என்ற எண்ணம் அல்லவா ஏற்படும்?" என்று விவாதித்தான் புத்தியீனன்.

"புத்தியீனன் என்ற பெயருக்கு ஏற்ப நீ புத்தியற்றவனாகவே இருக்கிறாய்! உனது பதில் அதைத்தான் உறுதிப்படுத்துகிறது. நீதிமானாக்கக்கூடிய நீதி எது என்பதையும், அதை விசுவாசிப்பதின் மூலம் உனது ஆத்துமாவுக்குப் பாதுகாப்பைப் பெறமுடியும் என்பதையும், ஆண்டவருடைய கோபாக்கினையிலிருந்து உனக்கு மீட்பு வாங்கித் தருகிறது அது என்பதையும் நீ அறிந்திருக்க வில்லை. அது மட்டுமன்றி கிறிஸ்துவின் நீதியின் மேல் வைக்கும் மீட்பளிக்கும் விசுவாசத்தின் பலன்களாகிய கிறிஸ்துவுக்குள் நமது இருதயத்தை ஆண்டவருக்குள் வெற்றிகொள்ளுதல், அவருடைய நாமத்தையும், அவருடைய வசனத்தையும், அவருடைய வழிகளையும், அவருடைய மக்களையும் நேசித்தல் ஆகிய இவைகளைப்பற்றியும் நீ அறிந்திருக்கவில்லை. •நீ புத்தியீனமாக கற்பனை செய்வதற்கு இவை மாறாகவே இருக்கின்றன அல்லவா?" என்றான் கிறிஸ்தியான்.

"எப்போதாவது பரலோகத்திலிருந்துக் கிறிஸ்து அவனுக்கு வெளிப்படுத்தப்பட்டிருக்கிறாரா என்று அவனிடம் கேள்" என்று கிறிஸ்தியானைத் தூண்டினான் நன்னம்பிக்கை.

"என்னது? நீயும் வெளிப்படுத்துதல்களை எதிர் பார்ப்பவன் தானா?'' நீயும், உன்னைப்போன்ற மற்றவர்களும் இந்தக் காரியத்தைப்பற்றிக் கூறுபவை எல்லாம் குழப்பமடைந்த மூளையின் கற்பனைகளே என்றுதான் நான் நினைக்கிறேன்'' என்றான் புத்தியீனன்.

"என்னப்பா, அப்படிப் பேசுகிறாய்? பிதாவாகிய ஆண்டவர் கிறிஸ்துவை ஒருவனுக்கு வெளிப்படுத்தாவிட்டால், கிறிஸ்து மாம்சப் பிரகாரமான கண்களுக்கு மறைவாக ஆண்டவருக்குள் இருக்கிறார் என்றும், மனிதன் மீட்பைப் பெறுமளவுக்கு அவரை அறிய முடியாது என்றும் நீ அறிய மாட்டாயோ?'' என்று கேட்டான் நன்னம்பிக்கை.

"இது என்னுடைய விசுவாசமல்ல, உன்னுடைய விசுவாச மாகவே இருக்கட்டும். எனது சிந்தனையில் உன்னைப்போன்ற அநேக கற்பனைகள் இல்லாவிட்டாலும்கூட, என் விசுவாசம் உன்னுடைய விசுவாசத்திற்குச் சற்றும் தாழ்ந்ததல்ல என்பதுதான் உண்மை" என்று வாதிட்டான் புத்தியீனன்.

"நான் சில வார்த்தைகள் கூற அனுமதியுங்களேன்! இதைப் பற்றி நீ இவ்வளவு அலட்சியமாகப் பேசக்கூடாது, ஏனென்றால் எனது நண்பன் கூறியதுபோல, பிதாவானவரால் வெளிப்படுத்தப்

பட்டாலன்றி எந்த மனிதனாலும் கிறிஸ்துவை அறிந்துகொள்ள முடியாது என்று என்னால் உறுதியாகக் கூற முடியும். எந்த விசுவாசத்தினால் ஓர் ஆத்துமா கிறிஸ்துவைப் பற்றிப் பிடித்துக் கொள்ளுகிறதோ அந்த விசுவாசம்கூட அவரது மகா வல்லமையின் மேன்மையாலேயே உண்டானதாகவே இருக்கும். மத். *11:27; 1* கொரி. *12:3;* எபே. *1:17-19.* புத்தியீனனே, இந்த விசுவாசத்தின் கிரியையைப்பற்றி நீ அறியாமலிருக்கிறாய் என்றே எனக்குத் தோன்றுகிறது. எனவே விழிப்புணர்வு பெற்று, உனது பரிதாபகரமான நிலையை உணர்ந்து, ஆண்டவராகிய இயேசுவண்டை ஓடிவா! ஆண்டவருடைய நீதியாகிய அவருடைய நீதியினால், நீ நியாயத்தீர்ப்பின் கோபாக்கினையிலிருந்து விடுதலை பெறுவாய்" என்று அவன் புத்தியீனனுக்குப் புத்திமதி கூறினான்.

"நீங்கள் வேகமாகப் போகிறீர்கள். உங்களோடு இணைந்து வருவது எனக்கு இயலாத காரியமாகப்படுகிறது. எனவே நீங்கள் முன்னே செல்லுங்கள். நான் சற்றுப் பின்தங்கி வருகிறேன்" என்று முடிவாகச் சொல்லிவிட்டான் புத்தியீனன்.

"புத்தியீனனே, இழந்தாய் புத்தியை
இன்னமுமே!
பத்து தடவை புத்தி சொல்லியும் அதை
எண்ணவில்லையே!
ஒத்துக் கொள் உன் தவறை
இனிமேலாயினும்
காலம் குறுகியதென அறிந்து
கீழ்ப்படிவாயே!
ஆலோசனைகள் உன்னை மீட்கும்படி
தாழ்ந்து நடப்பாயே!
அலட்சியப் படுத்தாதே இதோ நிச்சயம்
அழிவாய் நீயே!"

என்று பாடியபடியே கிறிஸ்தியானும், நன்னம்பிக்கையும் அவனைவிட்டுப் பிரிந்து முன்னால் நடந்தார்கள்.

"வா என் நண்பன் நன்னம்பிக்கையே, மறுபடியும் நானும் நீயும் மட்டுமே நடந்து செல்ல வேண்டும் போலிருக்கிறது" என்று நன்னம்பிக்கையை அழைத்தபடியே நடந்தான் கிறிஸ்தியான்.

அவர்கள் இருவரும் முன்னால் நடந்து செல்வதையும், புத்தியீனன் பின்தங்குவதையும் நான் என் கனவில் கண்டேன்.

"பாவம், இவனைப்பற்றி நான் பரிதாபப்படுகிறேன். இறுதியில் அவனுக்கு அழிவுதான் முடிவு என்று நான் நினைக்கிறேன்" என்று வருத்தத்துடன் கூறினான் கிறிஸ்தியான்.

"நமது பட்டணத்தில் எத்தனையோ பேர், குடும்பம் குடும்பமாக, இவனைப்போன்ற நிலையிலேயே இருக்கிறார்கள் என்பதையும், பயணிகளில்கூட சிலர் இவ்வாறு இருக்கிறார்கள் என்பதையும் அறியும்போது நான் மிகவும் பரிதாபப்படுகிறேன்" என்று கூறிய நன்னம்பிக்கை, "நமது பட்டணத்திலேயே நிலைமை இப்படி இருக்குமானால் இந்தப் புத்தியீனன் வந்த இடத்தில் இப்படிப்பட்டவர்கள் எத்தனைபேர் இருக்கிறார்களோ?" என்று அங்கலாய்த்தான்.

"வேத வசனம் என்ன கூறுகிறது? 'அவர்கள் பார்க்கக் கூடாதபடிக்கு அவன் அவர்கள் கண்களைக் குருடாக்கினான்' என்று வேத வசனம் கூறுவது உண்மைதான். அதைவிடு, இப்போது நாம் தனியாகத்தானே இருக்கிறோம்? இத்தகைய மனிதர்களைப்பற்றி நீ என்ன நினைக்கிறாய்? எப்போதாவது அவர்கள் பாவ உணர்வைப் பெற்று, தங்கள் பரிதாபகரமான நிலையை உணர்ந்திருக்கமாட்டார்களா?" என்று கேட்டான் கிறிஸ்தியான்.

"ஏன் நீயே இந்தக் கேள்விக்குப் பதில் கூறலாமே என்னைவிட வயதில் முதிர்ந்தவன் நீயல்லவா?" என்றான் நன்னம்பிக்கை.

"அவர்கள் சில வேளைகளில் எப்படியும் பாவ உணர்வைப் பெறுவார்கள் என்று தான் நினைக்கிறேன். ஆனால் இயல்பிலேயே அவர்கள் புத்தியீனர்களாக இருப்பதால் இத்தகைய பாவ உணர்வு அவர்களது நன்மைக்காகவே கொடுக்கப்படுகிறது என்பதைப் புரிந்துகொள்வதில்லை. எனவே தங்களுக்குள் எழுப்புதலைத் தோற்றுவிக்கும் அனலை அவித்துவிட்டு, தங்கள் இருதயத்தின் விருப்பத்திற்கேற்றபடி நடந்து, தங்களைத் தாங்களே புகழ்ந்துகொள்கிறார்கள்" என்றான் கிறிஸ்தியான்.

"ஒருவன் பயணம் புறப்படும்போது அவனைச் சரியான பாதையில் வழிநடத்தவும் அவனது நன்மைக்காகவுமே பயஉணர்வு கொடுக்கப்படுகிறது என்று நம்புகிறேன்" என்றான் நன்னம்பிக்கை.

'அதுசரியான பாதையில் வழிநடத்தும் தேவபயம் என்றால் அது நன்மையையே அளிக்கும். ஏனென்றால் 'கர்த்தருக்குப் பயப்படுதலே ஞானத்தின் ஆரம்பம்' (*சங். 111:10*) என்று வேதாகமம் கூறுகிறது அல்லவா?" என்றான் கிறிஸ்தியான்.

"இப்படிப்பட்ட மெய்யான பயத்தின் குணநலன்கள் என்னவென்று கூறமாட்டாயா?" என்று கேட்டுக்கொண்டான் நன்னம்பிக்கை.

"மூன்று காரியங்களைக் கொண்டு அது மெய்யான பயமா என்று கண்டுபிடிக்கலாம். முதலாவதாக, அது ஏன் ஏற்படுகிறது? மீட்பை பெறுவதற்கு ஏதுவாக, நமது பாவங்களைக் குறித்து குற்ற உணர்வை அது உருவாக்குகிறது. இரண்டாவதாக, அது மீட்புக்காக கிறிஸ்துவை உறுதியாகப் பற்றிப் பிடித்துக் கொள்ளும்படி செய்கிறது. மூன்றாவதாக, அது ஆத்துமாவில் ஆண்டவருக்கும், அவரது வார்த்தைகளுக்கும், அவரது வழிகளுக்கும் உரிய மதிப்புக் கொடுக்கும்படி தூண்டுகிறது. ஆத்துமாவை மென்மையானதாக ஆக்கி, ஆண்டவருடைய மகிமைக்குக் குலைச்சல் உண்டாக்காமல் நடக்கும்படியும், சமாதானத்துக்கு ஊறு விளைவிக்காமல், ஆவியானவரைத் துக்கப் படுத்தாமலும், விரோதிகள் தூஷணமாகப் பேசுவதற்கு இடம் கொடாமலும், இடப்பக்கமோ அல்லது வலப்பக்கமோ விலகிவிடாமல் நேராக நடக்கும்படியும் மெய்யான பயம் வழிநடத்துகிறது" என்றான் கிறிஸ்தியான்.

"நன்றாகச் சொன்னாய்! நீ சொல்வது உண்மையென்று நான் நம்புகிறேன். நாம் இப்போது உறக்க பூமியை அநேகமாக கடந்துவிட்டோம் அல்லவா?" என்று கேட்டான் நன்னம்பிக்கை.

"ஏன், இப்படி உரையாடி வருவது உனக்குச் சோர்வாக இருக்கிறதா?" என்று வியப்புடன் கேட்டான் கிறிஸ்தியான்.

"அப்படியொன்றுமில்லை, நாம் எங்கே இருக்கிறோமென்று அறிந்துகொள்ள விரும்புகிறேன். அவ்வளவுதான்" என்றான் நன்னம்பிக்கை.

"உறக்க பூமியை கடக்க இன்னும் இரண்டு மைல் தூரமாவது நடக்க வேண்டுமென்று நினைக்கிறேன். சரி, நாம் பேசிக்கொண்டிருந்த காரியத்துக்கு வருவோம்" என்றான் கிறிஸ்தியான்.

"புத்தியீனமுள்ளவர்கள் தங்களுக்குப் பயத்தை அளிக்கும் குற்ற உணர்வு தங்களுக்கு நன்மை உண்டாக்கும்படியே கொடுக்கப்படுகிறது என்பதை உணராதபடியால் அந்த உணர்வை அடக்கப் பார்க்கிறார்கள்" என்று தொடர்ந்து கூறினான் கிறிஸ்தியான்.

"அவர்கள் எவ்வாறு இந்த உணர்வை அடக்க முயலுகி றார்கள்?" என்று கேட்டான் நன்னம்பிக்கை.

"முதலாவதாக, இந்தப் பயஉணர்வு ஆண்டவரால் அருளப்பட்டது என்பதை அறியாமல், சாத்தான்தான் இந்தப் பயத்தை உருவாக்குகிறான் என்று நினைத்துக்கொள்கிறார்கள்.

இந்தக் காரியங்கள் தங்களை வீழ்த்திவிடும் என்று நினைத்து அதை எதிர்த்து நிற்கிறார்கள். இரண்டாவதாக, இந்தப் பயங்கள் தங்கள் விசுவாசத்தை அழித்துவிடும் என்று நினைத்துக் கொள்கிறார்கள். இதனால் தங்கள் இருதயத்தை அதற்கு விரோதமாகக் கடினப்படுத்திக்கொள்கிறார்கள். மூன்றாவதாக தாங்கள் பயப்படக்கூடாது என்ற எண்ணம் அவர்களுக்கு இருக்கிறபடியால், இந்தப் பய உணர்வை அசட்டை செய்து, கவலையேயின்றி தங்கள் விருப்பப்படி நடக்கிறார்கள். நான்காவதாக, பரிதபிக்கப்படத்தக்க தங்கள் பழைய சுய பரிசுத்த உணர்வை அது எடுத்துப்போடும் என்று நினைத்து, தங்கள் முழு பலத்தோடும் அதை எதிர்த்து நிற்கிறார்கள்" என்று விளக்கினான் கிறிஸ்தியான்.

"இதைப்பற்றி எனக்கும் கொஞ்சம் தெரியும். ஏனென்றால் நான் சுய உணர்வைப் பெறுவதற்கு முன்னர் இப்படிப்பட்ட நிலையில்தான் இருந்தேன்" என்றான் நன்னம்பிக்கை.

"சரி, இப்போது நாம் புத்தியீனனுடைய காரியங்களைப் பற்றிப் பேசுவதை முடித்துக்கொண்டு, வேறு பயனுள்ள காரியங்களைப் பற்றிச் சிந்திப்போம்" என்றான் கிறிஸ்தியான்.

"சரிதான், ஆனால் என்ன காரியம் என்பதைப்பற்றி நீதான் முடிவு செய்ய வேண்டும்" என்று கூறினான் நன்னம்பிக்கை.

33. குறுகியகாலம் என்பவரைப்பற்றிய செய்தி

"அது சரி உனக்குத் தெரியுமா? உங்கள் நாட்டில் ஏறத்தாழ பத்து ஆண்டுகளுக்கு முன்னர் **குறுகியகாலம்**[1] என்பவர் சிறந்த விசுவாசியைப்போல வாழ்ந்துவந்தானே! அவனைத் தெரியுமா உனக்கு" என்று கேட்டான் கிறிஸ்தியான்.

"அவனையா? தெரியுமா! அவன் **நேர்மை** என்ற பட்டணத்துக்கு இரண்டு தொலைவிலிருந்து சீர்கேடு என்ற பட்டணத்தில் **பின்வாங்கி** என்பவரின் வீட்டுக்கு அருகில் வசித்து வந்தான்" என்று நினைவு கூர்ந்தான் நன்னம்பிக்கை.

"நீ சொல்லுவது சரிதான். இவனும் அவனும் ஒரே கூறையின் கீழ்தான் குடியிருந்தார்கள். ஒரு முறை அவனுக்குள் எழுப்புதல் ஏற்பட்டது. அவன் தனது பாவங்களைக் குறித்த குற்ற உணர்வைக் கொஞ்சம் பெற்றான்; அதனால் ஏற்படவிருக்கும் அழிவைப் பற்றிய உணர்வையும் பெற்றான்" என்றான் கிறிஸ்தியான்.

---

1. 'குறுகியகாலம்' சிறிது காலம் விசுவாசிகளாக இருந்து, பின்னர் பின்வாங்கிப் போகிறவர்களை குறிக்கிறது.

"அதை நானும் ஒப்புக்கொள்கிறேன். எனது வீடு அவன் வீட்டுக்கு மூன்று மைல் தொலைவுக்குள்தான் இருந்தது. அநேக முறை அவன் கண்களில் நீர் வழிய என்னிடம் வந்திருக்கிறான். உண்மையிலேயே அவனைக் குறித்து பரிதாபம் எனக்கு ஏற்பட்டது. அவனைப்பற்றி எனக்குக் கொஞ்சம் நம்பிக்கையும் இருந்தது. ஆனால் 'கர்த்தாவே, கர்த்தாவே' என்று கதறுபவர்கள் அனைவரும் உண்மையானவர்கள் என்று கூறமுடியாது என்பதற்கு இவன் சிறந்த எடுத்துக்காட்டாக விளங்கிவிட்டானே!" என்று அங்கலாய்த்தான் நன்னம்பிக்கை.

"நாம் இப்போது செல்வதுபோல அவனும் மோட்சப் பயணம் செல்ல விரும்புவதாக ஒரு முறை என்னிடம் கூறினான். திடீரென்று **சுய மீட்பன்**[1] என்பவனின் நட்பு அவனுக்குக் கிடைத்ததிலிருந்து என்னைச் சந்திப்பதை விட்டுவிட்டான்" என்றான் கிறிஸ்தியான்.

"சரி, இப்போது நாம் அவனைப்பற்றிப் பேசுகிறபடியால், இப்படிப்பட்டவர்கள் திடீரென்று பின்வாங்கிப் போவதற்கான காரியங்களை ஆராய்வோமா?" என்று கேட்டான் நன்னம்பிக்கை.

"ஆம், அது மற்றவர்களுக்கும் பயனுள்ளதாக இருக்கும். ஆனால் முதலில் நீ இதற்கான காரணங்களை ஆராய்ந்து சொல்" என்றான் கிறிஸ்தியான்.

"இப்படிப் பின்வாங்கிப் போவதற்கு நான்கு காரணங்கள் இருக்கின்றன என்று நான் நினைக்கிறேன். முதலாவதாக, இத்தகைய மனிதர்களின் மனச்சாட்சியில் எழுப்புதல் ஏற்பட்டாலும், அவர்கள் மனம் மாற்றம் அடைவதில்லை. எனவே பாவ உணர்வின் வல்லமை அகன்று போகும்போது, அவர்களைப் பக்தி உணர்வு பெறச் செய்யும் தூண்டுதல் பிசுபிசுத்துப் போகிறது. அவர்கள் தங்கள் சொந்த வழிகளுக்குத் திரும்புகிறார்கள். நாய் அளவுக்கதிகமாகத் தின்று, அது அதற்கு ஏற்றுக்கொள்ளாததாக இருந்துவிட்டால், வயிற்றிலுள்ள உணவு முழுவதும் வெளியே வரும்வரை அது கக்கித் தள்ளுகிறது. உண்மையில் தான் உண்டவை அனைத்தையும் அது பத்திரப்படுத்திக்கொள்ள வேண்டுமென்று விரும்பினாலும், குடலைப் புரட்டுகிறபடியால், தன்னிச்சையாகவே வாந்தி பண்ணிப்போடுகிறது! ஆனால் அப்படியே விட்டுவிடுகிறதா? இல்லையே! அந்த உணவு தன் மனதுக்குப் பிடித்ததாக இருக்கிறபடியால் தான் கக்கினதையே மறுபடியும் எடுத்து விழுங்குகிறது! எந்தவித அருவருப்பு உணர்வும் அதற்கு

---

1. சுய மீட்பன் - இயேசு கிறிஸ்துவின்மூலம் மீட்பைப் பெறுவதை விட்டுவிட்டு, தங்கள் நற்கிரியைகளால் மீட்பைப் பெற முடியும் என்று நம்புகிறவர்களைக் குறிக்கிறது.

ஏற்படுவதில்லை! நாய் தான் கக்கினதைத் தின்னுகிறது என்று வேத வசனமும் (2 பேதுரு 2:22) கூறுகிறது அல்லவா? இதைப்போலவே சிலர் நரகத்தின் வேதனைகளைப்பற்றிய உணர்வையும் தண்டனையைப்பற்றிய பயத்தையும் பெறும்போது மோட்ச பாக்கியத்தைப்பற்றிய வாஞ்சையைப் பெறுகிறார்கள். ஆனால் அந்த உணர்வும், பயமும் குன்றும்போது, மோட்சம் மற்றும் மீட்பைப்பற்றிய வாஞ்சையும் அழிந்துபோகிறது. அவர்களது பாவ உணர்வும், பயமும் அகன்று போகும்போது, பரலோகம் மற்றும் மகிழ்ச்சியைப் பற்றிய வாஞ்சையும் மடிந்துபோகிறது. அவர்கள் தங்கள் பழைய வழிகளுக்குத் திரும்பிவிடுகிறார்கள்".

"இரண்டாவதாக, மனிதர்களைப்பற்றி அவர்கள் கொண்டுள்ள பயம் அவர்களை அடிமைப்படுத்தி வைத்திருக்கிறது. 'மனுஷருக்குப் பயப்படும் பயம் கண்ணியை வருவிக்கும்" (நீதி. 29:25) என்று வேதாகமம் கூறுகிறது. நரக அக்கினியின் இரைச்சல் அவர்களின் காதுகளில் கேட்கும்வரை அவர்கள் பரலோகத்தைப்பற்றிய வாஞ்சை கொண்டிருக்கிறார்கள். ஆனால் அந்தப் பயம் சற்றுத் தணியும்போது, வேறுவிதமான சிந்தனைகள் அவர்களை ஆள்கொள்ளுகின்றன. நாம் இருப்பதையும் இழந்துபோவதைவிட புத்தியாய் நடந்துகொள்வதே நலம் என்றும், தவிர்க்க முடியாத தேவையற்ற தொல்லைகளை ஏன் நாமே வருவித்துக் கொள்ள வேண்டும் என்றும் நினைக்கத் துவங்குகிறார்கள். மறுபடியும் உலக இச்சைகளில் விழுந்து போகிறார்கள்."

"மூன்றாவதாக, விசுவாசியாக இருப்பதினால் அவர்கள் வெட்கப்படுவதும் அவர்களுக்கு இடறலாக இருக்கிறது. அவர்கள் தங்கள் பெருமை மற்றும் அகந்தை உணர்வு காரணமாக, பக்தியுள்ளவனாக இருப்பது தாழ்ந்தது என்றும் அற்பமானது என்றும் நினைத்துக்கொள்கிறார்கள். எனவே நரகம் மற்றும் வரவிருக்கும் ஆக்கினை பற்றிய அவர்களது உணர்வுகள் மங்கும்போது பின்வாங்கிப் போகிறார்கள்."

"நான்காவதாக, குற்ற உணர்வையும், தேவ பயத்தையும்பற்றித் தியானிப்பது அவர்கள் மனதுக்குச் சஞ்சலமாக இருக்கிறது. தங்களுக்கு அழிவு நேரிடுவதற்கு முன்பே அதைப்பற்றி நினைத்து வருத்தப்படுவதை அவர்கள் விரும்பவில்லை. ஆனால் அழிவுக்கு முன்னரே அதைப்பற்றிய உணர்வை அவர்கள் பெற்றால் நீதிமான்கள் ஓடித் தப்புவதுபோல அவர்களும் தப்பமுடியும். ஆயினும் நான் ஏற்கெனவே கூறியதுபோல, பாவ உணர்வு மற்றும் தேவ பயத்தைப்பற்றி நினைப்பதைக்கூட அவர்கள் தவிர்க்கிறார்கள். இவ்வாறு தங்களுக்குள் ஏற்படும் எழுப்புதல்

உணர்வை அவர்கள் விரட்டிவிடும்போது, மகிழ்ச்சியோடு தங்கள் இருதயங்களைக் கடினப்படுத்திக் கொள்கிறார்கள். இன்னும் கடினப்படுத்தும் வழிகளையே அதிகமாகத் தேடிக் கொள்கிறார்கள்" என்று விளக்கமாகக் கூறினான் நன்னம்பிக்கை.

"பின்வாங்குதலுக்கான காரணங்களை அநேகமாக தெளிவாகக் கூறிவிட்டாய். ஒருவனுடைய உள்ளத்திலும், சித்தத்திலும் மாற்றம் இல்லாமல் இருப்பதே அவன் பின்வாங்கிப் போவதற்கான அடிப்படைக் காரணம் என்று சொல்லலாம். அவர்கள் நீதிபதிக்கு முன்னால் நிற்கும் ஒரு குற்றவாளியைப்போல இருக்கிறார்கள். அவன் நடுங்குகிறான்; கலங்குகிறான்; முழுமனதோடு மனந்திரும்புவதைப்போலத் தோற்றமளிக்கிறான். ஆனால் தண்டனைப்பற்றிய பயமே இதற்குக் காரணமேயொழிய, அவன் தனது குற்றங்களை முழுமனதாக வெறுக்கிறான் என்று கூறிவிட முடியாது. ஏனென்றால் அவனுக்கு விடுதலை கிடைத்தாலும் அவன் தொடர்ந்து ஒரு திருடனாகவோ அல்லது முரடனாகவோதான் இருப்பான். ஆனால் அவனது மனம் உண்மையாகவே மாற்றமடைந்தால், அவன் புதுமனிதனாகி விடுவான்" என்றான் கிறிஸ்தியான்.

"அது சரி, அவர்கள் பின்வாங்குவதற்கான காரணங்களை நான் கூறிவிட்டேன். அவர்கள் எப்படிப் பின்வாங்குகிறார்கள் என்பதைப்பற்றி நீ கூறுவாயா?" என்று கேட்டுக் கொண்டான் நன்னம்பிக்கை.

"ஓ! இதோ சொல்கிறேன் கேள். முதலாவதாக, அவர்கள் தேவனைப்பற்றியும், மரணத்தைப்பற்றியும், வரவிருக்கும் நியாயத்தீர்ப்பைப்பற்றியும் தங்கள் மனதில் தோன்றும் எண்ணங்களை எல்லாம் புறக்கணிக்கிறார்கள். இரண்டாவதாக, ஒரு விசுவாசிக்குள்ள தனிப்பட்ட கடமைகளாவன, தனி ஜெபம், இச்சைகளை அடக்குதல், விழித்திருத்தல், பாவத்தைப்பற்றிய மனஸ்தாபம் மற்றும் இவைபோன்ற கடமைகளை நிறைவேற்று வதைப் படிப்படியாக விட்டுவிடுகிறார்கள்".

"மூன்றாவதாக, அவர்கள் ஜீவனும், அனலுமுள்ள கிறிஸ்தவர்களின் ஐக்கியத்தை விட்டு விலகுகிறார்கள். நான்காவதாக, தங்கள் பொதுவான பொறுப்புக்களான, வேத வசனத்தைக் கேட்டல், வேத வாசிப்பு, சபைகூடி தியானித்தல் இவற்றிலும் பின்வாங்கிப் போகிறார்கள். ஐந்தாவதாக, விசுவாசத்தை விட்டு விலக வேண்டுமென்ற நோக்கத்தோடு, உத்தம விசுவாசிகளிடம் காணப்படும் சிறுகுறைகளையும் பெரிதுபடுத்தி, அவர்களை அவமானப்படுத்த சாத்தானின் கையாள்களாகச் செயல்படத் துவங்குகிறார்கள்".

"ஆறாவதாக, உலகப் பிரகாரமான, இச்சைகளில் விழுந்து போன, சிற்றின்பப் பிரியர்களோடு தங்களை ஐக்கியப்படுத்திக் கொள்கிறார்கள். ஏழாவதாக, உலகப் பிரகாரமான மற்றும் சிற்றின்ப நடவடிக்கைகளில் இரகசியமாக ஈடுபடுகிறார்கள். நேர்மையானவர்கள் என்று கூறப்படும் எவரிடமாவது இத்தகைய குற்றங்கள் இருப்பதைக் கண்டால் பெரு மகிழ்ச்சி கொண்டு, அவர்களைப் பின்பற்றுவதாகக் கூறிக்கொண்டு, மேலும் துணிவோடு தங்கள் நடவடிக்கைகளில் ஈடுபடுகிறார்கள்.

"எட்டாவதாக, சிறுசிறு பாவங்களை வெளியரங்கமாகவே செய்யத் துவங்குகிறார்கள். ஒன்பதாவதாக, மனம் கடினப்பட்டவர்களாக தாங்கள் யார் என்பதைத் துணிவுடன் வெளிப்படுத்துகிறார்கள். இவ்வாறு அவர்கள் மறுபடியும் அழிவின் கடலில் தள்ளப்படுகிறார்கள். கிருபையினாலே அவர்கள் அற்புதவிதமாகத் தடுக்கப்படாவிட்டால், தங்களைத் தாங்களே ஏமாற்றிக் கொண்டு நித்திய அழிவுக்குப் பாத்திரராகி விடுகிறார்கள்" என்று தெளிவாக விளக்கினான் கிறிஸ்தியான்.

34. ஆனந்த நாட்டில் பயணிகள்

பயணிகள் இருவரும் உறக்க பூமியைக் கடந்து, **ஆனந்த நாட்டினுள்**[1] நுழைவதை நான் என் கனவில் கண்டேன். அங்கே இனிமையும், மனரம்மியமுமான காற்று வீசியது! அவர்கள் செல்ல வேண்டிய பாதை அழகும், அமைதியும் நிறைந்த இந்தப் பகுதியின் ஊடாகச் சென்றது. எனவே பயணிகள் அங்கே சற்றுத் தங்கி, இளைப்பாறிக் கொண்டார்கள். பறவைகளின் தொடர்ந்த இன்னிசை கானத்தைக் கேட்டார்கள்! மலர்கள் மலரும் அழகை நாள்தோறும் கண்டு மனம் மலர்ந்தார்கள்! காட்டுப் புறாக்களின் கனிவான குரல் அவர்களுக்குத் துணையாக இருந்தது!

இந்த நாட்டில் சூரியன் இரவும், பகலும் தொடர்ந்து ஒளி வீசுகிறது! எனவே இது மரண இருளின் பள்ளத்தாக்குக்கு அப்பால், அரக்கனின் ஆளுகையைவிட்டு விலகிய இடத்தில் அமைந்துள்ளது. சந்தேகக் கோட்டையை அவர்கள் பார்க்க முடியாது. ஆனால் அவர்கள் செல்லவிருக்கும் பட்டணத்தின் அழகை கண்டுகளிக்க முடிந்தது!

அதுமட்டுமன்றி, பரலோகவாசிகள் சிலரையும் அவர்களால் சந்திக்க முடிந்தது. அந்த இடம் பரலோகத்தின் எல்லைக்கு வெகு

---

1. ஆனந்த நாடு - ஆவிக்குரிய அனுபவம் பெற்ற விசுவாசிகள் வாழ்க்கையின் கடைசியில் அனுபவிக்கும் சமாதானம், நம்பிக்கை, ஆண்டவரோடுள்ள ஐக்கியம் இவற்றைக் குறிக்கிறது.

அருகில் இருக்கிறபடியால் ஒளிமயமான பரலோகவாசிகள் அங்கே உலாவ வருவதுண்டு. இந்த நாட்டில்தான் மணவாளனுக்கும், மணவாட்டிக்கும் இடையேயுள்ள உடன்படிக்கை புதுப்பிக்கப்பட்டது. மணவாளன் மணவர்ட்டியைக் குறித்து மகிழ்ச்சியடைவதைப் போல, ஆண்டவரும் அவர்களைக் குறித்து மகிழ்ச்சியடைகிறார்.

இங்கே அவர்களுக்கு தானியமோ, திராட்சரசமோ குறைவாக இருக்கவில்லை; அவர்கள் தங்கள் பயணத்தில் கிடைக்காமல் தவித்த அனைத்துமே இங்கு அபரிமிதமாகக் கிடைப்பதைக் கண்டு அகமகிழ்ந்தார்கள்.

'இதோ உன் இரட்சிப்பு வருகிறது; இதோ அவர் அருளும் பலன் அவரோடும் அவர் செய்யும் பிரதிபலன் அவருக்கு முன்பாகவும் வருகிறது என்று சீயோன் குமாரத்தியை நோக்கிச் சொல்லுங்கள்' என்று பட்டணத்துக்கு வெளியே பலத்த குரலில் கூறப்படுவதையும் பயணிகள் கேட்டார்கள்.

இந்தத் தேசத்தில் குடியிருந்தவர்கள் பயணிகளைப் 'பரிசுத்தவான்கள்' என்றும் 'ஆண்டவரால் மீட்கப்பட்டவர்கள்' என்றும் 'தெரிந்து கொள்ளப்பட்டவர்கள்' என்றும் அழைத்தார்கள்.

மோட்சப் பட்டணத்தைவிட்டு வெகு தொலைவில் இருக்கும்போது அவர்கள் அனுபவியாத மகிழ்ச்சியையும், ஆனந்தத்தையும் அவர்கள் இப்போது அனுபவித்தார்கள். அருகே செல்லச் செல்ல பட்டணம் தெளிவாக அவர்கள் கண்களுக்குத் தெரிந்தது. முத்துக்களாலும், விலைமதிப்பிட முடியாத கற்களாலும் கட்டப்பட்டிருந்த அந்தப் பட்டணத்தின் தெருக்கள் பொன்மயமாக இருந்தன. பட்டணத்தின் இயற்கையான மகிமையோடுகூட, சூரிய வெளிச்சம்பட்டு அந்தத் தெருக்கள் தகதகவென்று பிரகாசமான ஒளியைப் பிரதிபலித்ததினாலும் காண்பதற்கே ஜெகஜோதியாகத் தோன்றியது. அளவற்ற வாஞ்சை தன்னை ஆட்கொள்ள, அதனால் நோய்வாய்ப்பட்டு மயங்கி விழுந்தான் கிறிஸ்தியான். நன்னம்பிக்கையும்கூட ஓரிருமுறை இவ்வாறு மயங்கி விழுந்தான்.

தங்கள் மயக்கத்தினால் அப்படியே சற்று நேரம் விழுந்து கிடந்த அவர்கள் வேதனை பொறுக்க முடியாமல் "என் நேசரைக் கண்டால் நான் அன்பின் மிகுதியால் வியாதிப்பட்டிருக்கிறேன் என்று சொல்லுங்கள்" என்று புலம்பினார்கள்.

சற்றுப் பெலன் அடைந்தவர்களாக, தங்கள் நோயை தாங்கிக் கொள்ளக் கூடியவர்களாக அவர்கள் நடந்து சேர்ந்தார்கள்.

அங்கே பட்டணத்தின் அருகே பழத்தோட்டங்களும், திராட்சத் தோட்டங்களும், மலர்த் தோட்டங்களும் காணப்பட்டன. அந்தத் தோட்டங்களின் கதவுகள் நேர்வழிப் பாதையை நோக்கித் திறந்திருந்தன.

இந்த இடத்தை அவர்கள் அடைந்தபோது **தோட்டக்காரன்**[1] அவர்கள் முன்னால் வந்து நின்றான்.

"இந்தப் பழத்தோட்டங்களும், மற்ற தோட்டங்களும் யாருடையவை?" என்று பயணிகள் அவனிடம் கேட்டார்கள்.

"இவை இராஜாதி இராஜாவின் தோட்டங்கள். அவருக்கு இன்பமளிப்பதற்காகவும், பயணிகளுக்கு இளைப்பாறுதல் அளிப்பதற்காகவுமே இவை உருவாக்கப்பட்டுள்ளன" என்று கூறிய தோட்டக்காரன், அவர்களைத் திராட்சத் தோட்டங்களுக்குள் அழைத்துச் சென்று, ஆசைதீர திராட்சப் பழங்களைத் திருப்தியாகப் புசித்து *(உபா. 23:24)* இளைப்பாறும் படி கூறினான்.

இராஜாதி இராஜா உலாவும் பாதைகளையும் அவர் அமர்ந்து மனமகிழும் மலர்ப்பந்தல்களையும் அவன் அவர்களுக்குச் சுட்டிக்காட்டினான். இங்கே அவர்கள் சற்று நேரம் தங்கி இளைப்பாறினார்கள்.

இதோ, அவர்கள் இதுவரை தங்கள் பயணத்தில் என்றுமே பேசாத விதமாக, தங்கள் உறக்கத்தில் அதிகமாகப் பேசுவதை நான் என் கனவில் கண்டேன்.

இதைக் கண்டு நான் வியந்துபோய் நின்றேன். எனது வியப்பைக் கவனித்த தோட்டக்காரன், "இதற்காக ஏன் வியப்படைந்து நிற்கிறாய்? இந்தத் தோட்டத்துத் திராட்சைப் பழங்களின் தன்மையே அப்படித்தான்! இவை 'மெதுவா யிறங்குகிறதும், உறங்குகிறவர்களின் உதடுகளைப் பேசப் பண்ணுகிறதுமான நல்ல' *(உன். 7:9)* திராட்சப் பழங்களாக இருக்கின்றன" என்று கூறினான்.

அவர்கள் இளைப்பாறி எழுந்தவுடன் பட்டணத்தை நோக்கித் துரிதமாகப் புறப்படுவதை நான் என் கனவில் கண்டேன். அந்தப் பட்டணம் பொன்மயமாக இருந்தபடியாலும், சூரிய ஒளி அதன்மீது பட்டுப் பிரகாசித்தபடியாலும் அதன் மகிமையை நேரடியாகப் பார்க்க முடியாமல் கண்கள் கூசின! அதற்கென்று சிறப்பாக உருவாக்கப்பட்டிருந்த ஒரு கண்ணாடிமூலம் அந்த மகிமையைப் பார்த்துக் கொண்டார்கள் *(2 கொரி. 3:18)*.

---

1. தோட்டக்காரன் - உண்மையான நற்செய்தி ஊழியனைக் குறிக்கிறது.

அவர்கள் தொடர்ந்து செல்லும்போது பொன்மயமான உடை தரித்த, பிரகாசமான ஒளிபோன்று ஜொலிக்கும் முகத்தோடு இருவர் அவர்களுக்கு எதிராக வந்தார்கள்.

“எங்கேயிருந்து வருகிறீர்கள்?'' என்று அவர்கள் பயணி களிடம் கேட்டார்கள். அவர்களும் பதில் கூறினார்கள்.

அவர்கள் வழியில் எங்கெங்கே தங்கினார்கள், என்னென்ன சோதனைகள் மற்றும் ஆபத்துக்களைச் சந்தித்தார்கள். எத்தகைய ஆறுதலையும் இன்பங்களையும் அனுபவித்தார்கள். என்றெல்லாம் அவர்கள் விரிவாகக் கேட்டார்கள். பயணிகளும் தங்கள் அனுபவங்களை அவர்களிடம் எடுத்துக் கூறினார்கள்.

“இன்னும் இரண்டே இரண்டு கஷ்டங்களை மட்டுமே நீங்கள் எதிர்நோக்க வேண்டியிருக்கிறது. அதன்பிறகு பட்டணத்தைச் சென்றடையலாம்'' என்று அவர்கள் பயணிகளிடம் கூறினார்கள்.

“எங்களோடு துணையாக வாருங்கள்” என்று கிறிஸ்தியானும், நன்னம்பிக்கையும் அவர்களை அழைத்தார்கள்.

“நாங்கள் வருவோம். ஆனால் நீங்கள் உங்கள் சொந்த விசுவாசத்தினால்தான் எங்கள் துணையைப் பெறமுடியும்” என்று கூறினார்கள் அவர்கள்.

அவர்கள் ஒன்று சேர்ந்து பட்டணத்தின் வாயில் கண்ணில்படும்வரை நடந்து செல்வதை நான் என் கனவில் கண்டேன்.

35. பயணிகள் ஆற்றைக் கடந்து செல்லுதல்

அந்த வாயிலுக்கும், பயணிகளுக்கும் நடுவில் ஓர் ஆறு பாய்ந்து சென்றது. ஆனால் அந்த ஆற்றைக் கடக்க ஒரு பாலமும் இல்லை. ஆற்று நீரும் மிகவும் ஆழமாக இருந்தது. இந்த ஆற்றைக் கண்டவுடன் பயணிகள் அதிர்ந்துபோய் நின்று விட்டார்கள்!

“நீங்கள் இந்த ஆற்றைக் கடந்து சென்றால்தான் பரலோகத்தின் வாயிலை அடையமுடியும்” என்று அவர்களுடன் சென்ற ஒளிமயமான நபர்கள் கூறினார்கள்.

“அந்த வாயிலை அடைய வேறு ஏதாவது வழி இருக்கிறதா?” என்று பயணிகள் கேட்டார்கள்.

“இருக்கிறது! ஆனால் உலகம் உண்டாக்கப்பட்ட நாளிலிருந்தே இரண்டே இரண்டு மனிதர்களே அந்த வழியாகச்

செல்ல அனுமதிக்கப்பட்டுள்ளார்கள். அவர்கள் ஏனோக்கு, எலியா என்ற இருவர்! மற்றபடி கடைசி எக்காளம் தொனிக்கு மட்டும் காத்திருக்க வேண்டியதுதான்" என்று கூறிவிட்டார்கள் ஒளிமயமான நபர்கள்!

கிறிஸ்தியான் மனக் குழப்பம் அடைந்தவனாக அங்குமிங்கும் சுற்றிப் பார்த்தான். ஆற்றைக் கடக்காமல் செல்வதற்கு வேறெந்த வழியும் இருப்பதாகத் தோன்றவில்லை!

"ஆற்றின் எல்லாப் பகுதியும் ஆழமாகத்தான் இருக்கிறதா?" என்று சோர்வுடன் கேட்டார்கள் பயணிகள்.

"நீங்கள் பரலோகத்தின் இராஜாதி இராஜாவின் மேல் வைத்திருக்கும் விசுவாசத்திற்கேற்ப ஆறு ஆழம் அதிகமாகவோ அல்லது குறைவாகவோ காணப்படும். எந்த நிலையிலும் நாங்கள் உங்களுக்கு உதவி செய்யமாட்டோம்" என்று கூறிவிட்டார்கள் அந்த ஒளிமயமான நபர்கள்.

ஆற்றைக் கடந்து சென்றுவிட வேண்டும் என்ற நோக்கத்துடன் பயணிகள் அந்த ஆற்றில் இறங்கினார்கள்.

கிறிஸ்தியான் ஆற்றில் முழ்கத் துவங்கினான்!

"நண்பனே, நான் ஆழமான நீரில் மூழ்கிப் போகிறேன். வெள்ளம் என்மேல் கரைபுரண்டு ஓடுகிறது. என்னால் நிற்க முடியவில்லை!" என்று கிறிஸ்தியான் நன்னம்பிக்கையைப் பார்த்துக் கதறினான்.

"சோர்ந்து போகாதே நண்பனே, என் காலுக்குக் கீழே தரை தட்டுப்படுகிறது. நல்லதுதான்!" என்று அவனைத் தேற்றினான் நன்னம்பிக்கை.

"ஐயோ நண்பனே, மரணத்துக்கு ஏதுவான துக்கம் என்னைப் பிடித்துக்கொண்டது. பாலும் தேனும் ஓடும் நாட்டைப் பார்க்கும் பாக்கியம் எனக்குக் கிடைக்காது" என்று புலம்பினான் கிறிஸ்தியான்.

காரிருளும், பயமும் அவனைப் பிடித்துக் கொள்ளவே அவனால் ஒன்றையுமே பார்க்க முடியாமற் போயிற்று! அவன் தன் உணர்வுகளை அநேகமாக இழந்து போயிருந்தான். அவனால் தெளிவாகப் பேச முடியவில்லை! பயணத்தில் இதுவரை தான் பெற்ற ஆசீர்வாதங்களை நினைத்து ஆறுதல் பெறவும் அவனால் கூடாமற்போயிற்று! பரலோகத்தில் கால் வைக்க முடியாமல் தான் அந்த ஆற்றிலேயே மடிந்து போகப் போவதாகப் பயத்துடன் புலம்பிக் கொண்டிருந்தான் அவன். அவன்

பயணத்தைத் துவங்குவதற்கு முன்னரும், துவங்கிய பின்னரும் அவன் செய்த பாவங்களை நினைத்து அவன் கலங்கிக் கொண்டிருந்ததையும் அருகிலே நின்றவர்கள் கவனித்தார்கள். பிசாசுகள் மற்றும் அசுத்த ஆவிகளை நினைத்து அவன் மனம் கலங்கிக் கொண்டிருந்ததையும் அவன் பேசிய வார்த்தைகள் நிருபித்தன.

கிறிஸ்தியான் நீரில் மூழ்கிவிடாமல் அவன் தலையை நீர் மட்டத்துக்கு மேலாக உயர்த்தி வைத்திருப்பது நன்னம்பிக்கைக்குக் கடினமாகவே இருந்தது. சில வேளைகளில் கிறிஸ்தியான் நீருக்குள் அமிழ்ந்து போய்ச் சற்று நேரத்திற்குப் பின்பு அரை குறை உயிருடையவனாகத் தலையை உயர்த்துவான்.

''சகோதரனே, அதோ நான் பரலோகத்து வாயிலைக் காண்கிறேன். நம்மை வரவேற்க அநேகர் அங்கே கூடி நிற்கிறார்கள்'' என்று கூறி அவன் கிறிஸ்தியானை ஆறுதல்படுத்த முயலுவான்.

"அவர்கள்...அவர்கள் உனக்காகத்தான் காத்திருக்கிறார்கள். நான் உன்னை அறிந்த நாளிலிருந்தே நீ நல்ல நம்பிக்கை உடையவனாக இருப்பதை நான் கண்டிருக்கிறேன்'' என்று கூறினான் கிறிஸ்தியான்.

"நீயும் நம்பிக்கை உடையவனாகத்தானே இருக்கிறாய்!'' என்றான் நன்னம்பிக்கை.

"இல்லை சகோதரனே, இல்லை! நான் உத்தமனாக இருந்தால் அவர் இங்கே வந்து என்னைக் காப்பாற்ற மாட்டாரா?" எனது பாவங்களின் காரணமாக அவர் என்னைக் கைவிட்டுவிட்டார்?" என்று அலரத் துவங்கினான் கிறிஸ்தியான்.

"என் அன்பான சகோதரனே. துன்மார்க்கரைக் குறித்து என்ன சொல்லப்பட்டிருக்கிறது என்பதை நீ மறந்துவிட்டாயா? 'மரணபரியந்தம் அவர்களுக்கு இடுக்கண்களில்லை; அவர்களுடைய பெலன் உறுதியாயிருக்கிறது' (சங். 73:4, 5) என்றல்லவா சொல்லப்பட்டுள்ளது? அது மட்டுமா? 'நரர் படும் வருத்தத்தில் அகப்படார்கள்; மனுஷர் அடையும் உபாதியை அடையார்கள்' என்றுமல்லவா சொல்லப்பட்டுள்ளது? எனவே உன் துன்மார்க்கத்தால் இந்த இடுக்கண்களும், வருத்தமும் வந்ததாகக் கூறிப் புலம்பாதே! இந்த ஆற்றில் நீ படும் துயரங்களும், வேதனைகளும் ஆண்டவர் உன்னைக் கைவிட்டு விட்டார் என்பதற்கான அடையாளங்கள் அல்ல! இதுவரை அவரது நன்மைகளை நீ பெற்றிருப்பதை நீ நினைவுகூருகிறாயா என்பதைக் கண்டறிய அனுப்பப்பட்டுள்ள சோதனைகள்தான்

இவை! உனது துயரங்களின்போது நீ அவரைச் சார்ந்து வாழ்கிறாயா என்பதைக் கண்டறியவே இத்தகைய சோதனைகள் 'அனுப்பப்பட்டுள்ளன" என்று கூறினான் நன்னம்பிக்கை.

கிறிஸ்தியான் சற்று நேரம் எதையோ சிந்தித்தபடி அமைதியாக இருப்பதை நான் என் கனவில் கண்டேன்.

"கவலைப்படாமல் இரு, இயேசு கிறிஸ்து உன்னைப் பூரணமாக்குகிறார்" என்று கூறி கிறிஸ்தியானைத் தேற்றினான் நன்னம்பிக்கை.

அப்போது கிறிஸ்தியான் உரத்த சத்தத்தோடு, "அதோ அவரை நான் மீண்டும் காண்கிறேன். 'நீ தண்ணீர்களைக் கடக்கும்போது நான் உன்னோடு இருப்பேன்; நீ ஆறுகளைக் கடக்கும்போது அவைகள் உன்மேல் புரளுவதில்லை' (ஏசாயா 43:2) என்று ஆறுதல் வார்த்தை கூறுகிறாரே!" என்று உற்சாகமாகக் கத்தினான்.

அதன்பிறகு அவர்கள் இருவரும் மனத் துணிவுள்ளவர்களாக முன்னேறினார்கள். இதுவரை அவர்களைக் களங்கப்பண்ணின விரோதிகள் அவர்கள் கரையை அடையும்வரை கல்லைப்போல சமைந்து நின்றுவிட்டார்கள்.

கிறிஸ்தியான் தனது காலடியில் தரை தட்டுப்படுவதை உணர்ந்தான். ஆழமற்ற அந்தப் பகுதியைக் கடந்து இருவரும் அக்கரை சேர்ந்தார்கள்.

ஆற்றின் மறுகரையில் அந்த ஒளிமயமான நபர்கள் இருவரும் அவர்களுக்காகக் காத்து நிற்பதைக் கண்டார்கள். கரையேறிய பயணிகளை அவர்கள் வணங்கி வரவேற்றார்கள்.

"இரட்சிப்பின் வாரிசுகளுக்கு ஊழியம் செய்யும்படி அனுப்பப்பட்ட ஊழியம் செய்யும் ஆவிகளே நாங்கள்" என்று கூறிய அவர்கள் மோட்ச வாயில்வரை பயணிகளுடன் சென்றார்கள்.

36. பயணிகள் மோட்ச வாயிலை அடைதல்

பரலோக பட்டணம் ஒரு மலையின்மேல் கட்டப் பட்டிருந்தது. அந்த இரண்டு நபர்களும் அவர்களைக் கரம் பிடித்து அழைத்துச் சென்றபடியால் பயணிகளுக்கு அந்த மலையின்மேல் ஏறுவது எளிதாகவே இருந்தது. அதுமட்டுமன்றி அவர்கள் தங்களுடைய அழிவுக்குரிய, உலகப்பிரகாரமான அங்கியை ஆற்றோடு விட்டுவிட்டு வந்திருந்தார்கள். ஆற்றில் இறங்கும்போது அந்த அங்கியோடு இறங்கியிருந்ததாலும், அங்கியில்லாமல் அக்கரை சேர்ந்திருந்தார்கள். அந்தப்

பட்டணம் கட்டப்பட்டிருந்த அடித்தளம் மேகமண்டலங்களுக்கு மேலிருந்த போதிலும் அவர்கள் துடிப்புடனும், வேகமாகவும் மலைமீது ஏறினார்கள். காற்று மண்டலங்களின் பல்வேறு அடுக்குகளினூடே இனிமையாகப் பேசியபடியே அவர்கள் சென்றார்கள். அவர்கள் பாதுகாப்போடு ஆற்றைக் கடந்து வந்தபடியாலும் அவர்களுக்குப் பணிவிடை செய்ய மகிமையுள்ள நபர்கள் துணையாக வந்தபடியாலும் அவர்கள் ஆறுதலடைந்தவர்களாக மகிழ்ச்சியுடன் பேசிக்கொண்டே சென்றார்கள்.

பயணிகள் அந்த ஒளிமயமான நபர்களுடன் அந்த இடத்தின் மகிமையைப்பற்றிப் பேசியபடியே சென்றார்கள். வார்த்தைகளால் எடுத்துக்கூற முடியாதபடி வனப்பும், மகிமையும் நிறைந்த இடமாக இருந்தது அது! அங்கே பரலோக எருசலேமாகிய சீயோன் மலை இருக்கிறது என்று அவர்கள் கூறினார்கள். அங்கே ஆயிரம் பதினாயிரமான, தேவதூதர்களும் பூரணராக்கப்பட்ட நீதிமான்களுடைய ஆவிகளும் இருக்கின்றன (எபி. 12:22-24).

"நீங்கள் இப்போது ஆண்டவருடைய பரதீசுக்குப் போகிறீர்கள். அங்கே நீங்கள் ஜீவவிருட்சத்தைக் கண்டு என்றும் வாடாத அதன் கனிகளைப் புசிப்பீர்கள் (வெளி. 2:7). அங்கே செல்லும்போது உங்களுக்கு வெண்மையான அங்கிகள் கொடுக்கப்படும். நித்திய காலமாக ஒவ்வொரு நாளும் இராஜாதி இராஜாவோடு நடந்து, அவரோடு உரையாடிக் கொண்டிருப்பீர்கள். கீழான பூலோகத்தில் காணப்பட்ட துக்கம், நோய், வருத்தம், மரணம் எதுவும் உங்களை அணுகாது. ஏனெனில் 'முந்தினவைகள் இனி நினைக்கப்படுவதுமில்லை, மனதிலே தோன்றுவதுமில்லை' (ஏசாயா 65:16, 17). ஆண்டவர் எவர்களை வரவிருக்கும் பொல்லாங்கிற்கு நீங்கலாக எடுத்துக் கொண்டாரோ அவர்களாகிய ஆபிரகாம், ஈசாக்கு, யாக்கோபு மற்றும் தீர்க்கதரிசிகளோடு சஞ்சரிப்பீர்கள். அவர்கள் தற்போது தங்கள் படுக்கைகளில் இளைப்பாறிக்கொண்டிருக்கிறார்கள். தங்கள் நீதியில் நடக்கிறார்கள்" என்று அந்த ஒளி மயமான நபர்கள் கூறினார்கள்.

"அந்தப் பரிசுத்த ஸ்தலத்தில் நாங்கள் என்ன செய்ய வேண்டும்?" என்று பயணிகள் கேட்டார்கள்.

"அங்கே நீங்கள் உங்கள் வருத்தத்திற்குப் பதிலாக ஆறுதலையும் கவலைகளுக்குப் பதிலாக மகிழ்ச்சியையும் பெறுவீர்கள். நீங்கள் எதை விதைத்தீர்களோ அதை அறுப்பீர்கள் (கலா. 6:7). உங்கள் பயணத்தின்போது இராஜாதி இராஜாவுக்காக நீங்கள் பட்ட வேதனைகள், சொரிந்த கண்ணீர், ஏறெடுத்த ஜெபங்கள்

இவற்றுக்கான பலனை அனுபவிப்பீர்கள். அங்கே நீங்கள் பொற் கிரீடங்களை அணிவீர்கள். 'அவர் இருக்கிறவண்ணமாகவே அவரைத் தரிசிப்பீர்கள், (1 யோவான் 3:2). பரிசுத்தமான அவருடைய தரிசனத்தை முழுமையாகக் காண்பீர்கள். நீங்கள் உலகத்தில் அவருக்கு ஊழியம் செய்ய வாஞ்சைப்பட்டாலும்கூட, உங்கள் மாம்ச பலவீனத்தினால் முழுமையாக அவருக்கு ஊழியம் செய்ய முடியாத நிலையில் இருந்தீர்கள். ஆனால் இப்போது தொடர்ந்து துதிகளோடு அவருக்கு ஊழியம் செய்வீர்கள். தோத்திரங்களை ஏறெடுப்பீர்கள். சர்வ வல்லவரைக் காண்பதால் உங்கள் கண்கள் களிப்பெய்தும்; அவரது இனிமையான குரலைக் கேட்பதினால் உங்கள் காதுகள் குளிரும். உங்களுக்கு முன்பாகப் பயணம் செய்து இங்கே வந்து சேர்ந்த உங்கள் நண்பர்களோடு சேர்ந்து மகிழ்வீர்கள்; அடுத்து வருபவர்களை வரவேற்க உற்சாகத்தோடு காத்திருப்பீர்கள். மகிமையின் அரசரோடு சேர்ந்து உலாவத் தகுதி பெறும்படி, மகிமையினாலும் மகத்துவத்தினாலும் உடுத்தப்படுவீர்கள். மேக மண்டலத்தில் எக்காளம் தொனிக்க, காற்றின் செட்டைகளின் மேல் பறந்து வருவதுபோல அவர் எழுந்தருளும்போது, நீங்களும்கூட அவருடனே வருவீர்கள்; அவர் நியாயத்தீர்ப்பின் சிங்காசனத்தில் வீற்றிருக்கும்போது, நீங்களும் அவர் அருகே அமர்ந்திருப்பீர்கள். அவர் அக்கிரமக்காரர்கள் - அவர்கள் மனிதர்களாக இருந்தாலும் சரி - தூதர்களாக இருந்தாலும் சரி, அவர்கள்மீது நியாயத்தீர்ப்பு கூறும்போது, நீங்களும்கூட அவர்களுக்கு விரோதமாகக் குரல் கொடுக்க முடியும்; ஏனெனில் அவர்கள் அவருக்கு மட்டுமன்றி, உங்களுக்கும் விரோதிகளாக இருக்கிறார்கள். அவர் மறுபடியும் தமது பட்டணத்துக்குத் திரும்பிச் செல்லும்போது, நீங்களும் அவரோடு கூட நித்திய காலமாக இருக்கும்படி, எக்காள தொனியோடு உடன் செல்வீர்கள்" என்று அந்த ஒளிமயமான நபர்கள் கூறினார்கள்.

அவர்கள் இவ்வாறு வாயிலண்டை நெருங்கி வரும்போது, அவர்களைச் சந்திக்க பரலோக சேனையினர் வெளியே வந்தார்கள்.

அந்தச் சேனையினரைப்பற்றிக் குறிப்பிடும்போது, "இவர்கள் உலகத்தில் வசித்தபோது, ஆண்டவருடைய பரிசுத்த நாமத்திற்காக அனைத்தையும் விட்டுவிட்டு, அவரை நேசித்தவர்கள்" என்று அந்த ஒளிமயமான நபர்கள் அவர்களை அறிமுகப்படுத்தினார்கள்.

பிறகு அவர்கள் அந்தச் சேனையினரைப் பார்த்து, "இவர்களை அழைத்து வரும்படி ஆண்டவர் எங்களை

அனுப்பினார். அவர்கள் உள்ளே சென்று தங்கள் மீட்பரைக் கண்டு மகிழ்ச்சியடையும்படியாக நாங்கள் அவர்களைப் பயணத்தில் இவ்வளவு தூரம் வழிநடத்தி வந்தோம்" என்று கூறினார்கள்.

அப்போது பரலோக சேனையினர், "ஆட்டுக்குட்டியானவரின் கலியாண விருந்துக்கு அழைக்கப்பட்டவர்கள் பாக்கியவான்கள்" என்று கூறி ஆர்ப்பரித்தார்கள். (வெளி. 19:9).

அப்போது அவர்களைச் சந்திக்க இராஜாதி இராஜாவின் எக்காளக்காரர்கள் பலர் வெண்மையும், ஒளிமயமுமான ஆடை தரித்தவர்களாக அங்கே வந்தார்கள். அவர்கள் பரலோகமெங்கும் எதிரொலிக்கும்படியாக இனிமையான இசையை எழுப்பினார்கள். அவர்கள் எக்காள தொனியோடுகூட ஆரவாரித்து, "உலகத்தை விட்டு வந்த உங்களைப் பதினாயிரம் வணக்கங்களோடு வரவேற்கிறோம்" என்று கூறி கிறிஸ்தியானையும், நன்னம்பிக்கையையும் வரவேற்றார்கள்.

பயணிகளுக்குப் பாதுகாப்பாக இருக்கும்படியாக, முன்பும், பின்பும், வலது பக்கமும், இடது பக்கமும் அவர்களைச் சூழ்ந்துகொண்டு உன்னத மெட்டுக்களினால் இசை எழுப்பியபடியே அவர்களை அழைத்துச் சென்றார்கள். பரலோகமே கீழிறங்கி அவர்களை வரவேற்றதுபோலத் தோன்றியது!

இவ்வாறு அவர்கள் சேர்ந்து நடந்து சென்றார்கள். தங்கள் இசையோடுகூட தங்கள் பார்வையாலும், செய்கைகளாலும் தாங்கள் அந்தப் பயணிகளை வரவேற்பதில் எவ்வளவு மகிழ்ச்சி கொள்கிறார்கள் என்பதை வெளிப்படுத்தினார்கள். அந்தப் பயணிகள் பரலோகத்தைச் சென்றடையும் முன்பே தேவதூதர்களின் தரிசனத்தின் மூலமும் அவர்களது இனிமையான குரலைக் கேட்டதின் மூலமும் பரலோக பாக்கியத்தை அனுபவித்தார்கள்.

அவர்கள் பரலோக பட்டணத்தையும் கண்ணாறக் கண்டு மகிழ்ந்தார்கள். அங்குள்ள பல்லாயிரம் மணிகளும் ரீங்காரமிட்டு தங்களை வரவேற்பதுபோல நினைத்தார்கள். எல்லாவற்றுக்கும் மேலாக, இத்தகைய பரலோக சேனையினரின் துணையோடு நித்திய நித்தியகாலமாக அங்கே தங்கியிருக்கப் போவதை எண்ணிப் பெருமகிழ்ச்சி கொண்டார்கள். இந்த மகிழ்ச்சியை வார்த்தைகளால் விவரிக்கவும் கூடுமோ?

இவ்வாறு அவர்கள் வாயிலண்டை வந்து சேர்ந்தார்கள்.

37. பயணிகள் மோட்சம் போய் சேர்ந்தார்கள் !

அவர்கள் வாயிலண்டை நெருங்கும்போது, அதன் மேல் "ஜீவ விருட்சத்தின்மேல் அதிகாரமுள்ளவர்களாவதற்கும், வாசல்கள் வழியாய் நகரத்திற்குள் பிரவேசிப்பதற்கும் அவருடைய கற்பனைகளின்படி செய்கிறவர்கள் பாக்கியவான்கள்" (வெளி. 22:14) என்று பொன் எழுத்துக்களில் பொறிக்கப்பட்டிருந்ததைக் கண்டார்கள்.

அப்போது அந்த ஒளிமயமான நபர்கள் அவர்களிடம், "நீங்கள் வாயிலருகே சென்று கூப்பிடுங்கள்" என்று கூறினார்கள்.

பயணிகள் அவ்வாறே அழைத்தவுடன், ஏனோக்கு, மோசே, எலியா முதலானோர் மேலேயிருந்து எட்டிப்பார்த்தார்கள்.

"இவர்கள் இந்தப் பட்டணத்தின் அரசர் மேலுள்ள அன்பினால் தூண்டப்பட்டு, அழி நகரத்திலிருந்து பயணமாகப் புறப்பட்டு இங்கே வந்து சேர்ந்திருக்கிறார்கள்" என்று பயணிகள் அறிமுகப்படுத்தப்பட்டார்கள்.

பயணிகள் தங்கள் பயணத்தின் துவக்கத்தில் பெற்றுக் கொண்ட நற்சாட்சிப் பத்திரங்களைக் கொடுத்தார்கள். அவை அரசரிடம் கொண்டு செல்லப்பட்டன.

அதை வாசித்துப் பார்த்த அரசர். "எங்கே அந்த மனிதர்கள்?" என்று கேட்டார்.

"அவர்கள் வாயிலண்டை நிற்கிறார்கள்" என்று பதில் கூறப்பட்டது.

"சத்தியத்தைக் கைக்கொண்டு வருகிற நீதியுள்ள ஜாதி உள்ளே பிரவேசிப்பதற்காக வாசல்களைத் திறவுங்கள்" என்று அரசர் கட்டளையிட்டார் (ஏசாயா 26:2).

அப்போது பயணிகள் இருவரும் வாயிலுக்குள் நுழைவதை நான் என் கனவில் கண்டேன்.

அவர்கள் உள்ளே நுழையும்போதே மறுரூபமடைந்தார்கள்! பொன்போல ஒளிவீசும் அங்கி அவர்களுக்கு உடுத்தப்பட்டது! சுரமண்டலத்தோடும், கிரீடங்களோடும் அவர்கள் அருகே வந்தவர்கள், அவர்கள் துதித்துப் பாடும்படி சுரமண்டலங்களைக் கைகளில் கொடுத்தார்கள்; கிரீடத்தை அவர்கள் தலையில் சூட்டினார்கள்.

பட்டணத்தின் அனைத்து மணிகளும் மகிழ்ச்சியைத் தெரிவிக்கும் வண்ணமாக ரீங்காரமிடுவதை நான் என் கனவில் கேட்டேன்.

"உன் எஜமானுடைய சந்தோஷத்திற்குள் பிரவேசி" (மத். 25:23) என்ற சத்தமும் கேட்டது.

பயணிகள் இருவரும், "சிங்காசனத்தின்மேல் வீற்றிருக்கிற வருக்கும் ஆட்டுக்குட்டியானவருக்கும் ஸ்தோத்திரமும் கனமும் மகிமையும் வல்லமையும் சதாகாலங்களிலும் உண்டாவதாக" (வெளி. 5:13) என்று உரத்த குரலில் பாடுவதையும் நான் கேட்டேன்.

அவர்களை உள்ளே விடுவதற்காக வாயில் திறக்கப்பட்டபோது, நானும் உள்ளே எட்டிப் பார்த்தேன். இதோ அந்தப் பட்டணம் சூரியனைப்போலப் பிரகாசித்தது. தெருக்கள் பொன் தகடுகளால் வேயப்பட்டிருந்தன. தலையில் கிரீடம் அணிந்தவர்களாக, கைகளில் குருத்தோலைகளை ஏந்திக்கொண்டு, பொன்னாலான சுரமண்டலங்களை இசைத்து துதிப்பாடல்களைப் பாடியபடி உலாவிக் கொண்டிருந்த அநேகரை நான் கண்டேன்.

"சிறகுள்ள சிலர் இடைவிடாமல், "ஆண்டவர் பரிசுத்தர், பரிசுத்தர், பரிசுத்தர்" என்று ஒருவருக்கொருவர் சொல்லிக் கொண்டிருப்பதையும் நான் கண்டேன்."

இதற்குள் கதவு அடைக்கப்பட்டது. இவற்றையெல்லாம் கண்டபோது நானும் அவர்களில் ஒருவனாக இருக்கக்கூடாதா என்ற வாஞ்சை எனக்கு ஏற்பட்டது.

38. புத்தியீனனின் அழிவு

நான் திரும்பிப் பார்த்தபோது, புத்தியீனன் ஆற்றங்கரைக்கு வந்து சேருவதைக்கண்டேன்.

ஆனால் பயணிகளைப்போலத் துன்பப்படாமல் அவன் மிக எளிதாக அந்த ஆற்றைக் கடந்துவிட்டான். ஏனென்றால் அந்த இடத்திலிருந்த **வீண்நம்பிக்கை**[1] என்ற படகுக்காரன் அவனைத் தன் படகில் அழைத்துச் சென்று மறுகரையில் கொண்டுபோய்ச் சேர்த்துவிட்டான்.

மற்றப் பயணிகளைப்போலவே அவனும் மலைமீது ஏறி, வாயிலண்டை நெருங்கிச் செல்வதை நான் என் கனவில் கண்டேன். அவனோடு எவருமே வராமல் அவன் தனியாகவே அங்கே சென்றான். எவருமே அவனுக்கு ஊக்கமளிக்கும்படியாக அவனைச் சந்திக்கவுமில்லை.

---

1. வீண்நம்பிக்கை நம்மை அழிவுக்கே கொண்டு செல்லும், மெய்விசுவாசமே கரைசேர்க்கும்.

அவன் வாயிலண்டை வந்து சேர்ந்தபோது, அவன் மேலே எழுதப்பட்டிருந்த வாசகத்தை நிமிர்ந்து பார்த்தான்.

அவனை உடனடியாக உள்ளே சேர்த்துக்கொள்வார்கள் என்ற எண்ணத்தில் கதவைத் தட்டினான்.

வாசலின் மேற்புரமாக எட்டிப் பார்த்த ஒருவன், "எங்கேயிருந்து வருகிறாய்? உனக்கு என்ன வேண்டும்?" என்று கேட்டான்.

"நான் அரசரின் முன்னிலையில் உணவருந்தியிருக்கிறேன். அவர் எங்கள் தெருக்களில் போதனை அருளியிருக்கிறார்" என்று கூறினான் புத்தியீனன்.

"சரி, உன் நற்சாட்சிப் பத்திரத்தைக் கொடு, அதைக் கொண்டுபோய் அரசரிடம் காட்டுகிறேன்" என்று கேட்டான் மற்றவன்.

புத்தியீனன் தன் மடியைத் தடவிப் பார்த்தான்; அங்கே பத்திரம் இருந்தால்தானே?

"என்ன, உன்னிடம் பத்திரம் இல்லையா?" என்ற கேள்வி கேட்கப்பட்டது.

புத்தியீனன் ஒன்றுமே பதில் கூற முடியாதபடி விழித்துக்கொண்டு நின்றான்.

அரசரிடம் இந்தச் செய்தி அறிவிக்கப்பட்டது. அவரோ அவனைப் பார்க்க கீழிறங்கி வரவில்லை!

அவர் கிறிஸ்தியானையும், நன்னம்பிக்கையையும் பட்டணத்துக்குள் கூட்டி வந்த அந்த ஒளிமயமான நபர்கள் இருவரையும் அழைத்து, "போய் அந்தப் புத்தியீனனின் கைகளையும், கால்களையும் கட்டி அப்புறப்படுத்துங்கள்" என்று கோபமாகக் கட்டளையிட்டார்.

அவர்கள் அவனைப்பிடித்துக் கட்டி, ஆகாய வழியாகக் கொண்டுபோய், மலைச் சரிவில் நான் முன்னர் பார்த்த கதவைத் திறந்து, உள்ளே தள்ளிவிட்டார்கள்! அப்போது நரகத்திற்குச் செல்ல அழிநகரத்திலிருந்து மட்டுமல்ல, பரலோகத்தின் வாசலிலிருந்தும் ஒரு வழி இருக்கிறது என்பதை நான் கண்டு கொண்டேன். நான் விழித்தெழுந்து இவையெல்லாமே கனவென்று கண்டுகொண்டேன்.

இரண்டாம் பாகம்

(ஆசிரியரின் குறிப்பு)

அன்பான நண்பர்களே,

சிறிது காலத்துக்கு முன்பு, கிறிஸ்தியான் என்ற பயணியைப் பற்றியும், அவன் பரலோகத்தை நோக்கி மேற்கொண்ட அபாயகரமான பயணத்தைப்பற்றியும் நான் கண்ட கனவை உங்களோடு பகிர்ந்துகொண்டதில் மகிழ்ச்சியடைந்தேன். நீங்களும் அதனால் பயனடைந்திருப்பீர்கள் என்று நம்புகிறேன். அவ்வேளையில் அவனது மனைவியும், குழந்தைகளும் பயணம் புறப்படவிரும்பாத நிலையில் இருந்தார்கள் என்பதையும் நான் உங்களுக்குக் கூறியிருந்தேன். இதனால் கிறிஸ்தியான் தனியாகவே பயணம் செய்ய நேர்ந்தது. அவர்களோடு அழிநகரத்தில் தங்கினால் வரவிருக்கும் அழிவுக்குத் தான் பாத்திரவானாக ஆகிவிடுவோமோ என்ற பயம் அவனைப் பிடித்தபடியால், அவர்களை விட்டுவிட்டு அவன் தனியாகப் பயணம் புறப்பட்டுவிட்டான் என்று நான் ஏற்கெனவே கூறியிருந்தேன்.

என்னுடைய பல்வேறு அலுவல்கள் நிமித்தமாகவும், கிறிஸ்தியான் பயணமாகச் சென்றவிடங்களுக்கெல்லாம் அவனோடு சென்று அதைப்பற்றி உங்களுக்கு அறிவிக்க வேண்டியிருந்தபடியாலும், என்னால் அழிநகரத்துக்கு உடனே சென்று, அவன் விட்டுச் சென்றவர்களின் நிலைமை எப்படியிருந்தது என்று கண்டறிய முடியவில்லை. ஆனால் சமீபத்தில் அதைப்பற்றி அறிந்துகொள்ள வேண்டுமென்ற வாஞ்சை ஏற்பட்டதால் மறுபடியும் அங்கே சென்றேன். அந்த இடத்திற்கு ஒரு மைல் தொலைவிலிருந்த ஒரு காட்டில் தங்கினேன். நான் அங்கே படுத்து உறங்கியபோது மறுபடியும் ஒரு கனவு கண்டேன்.

1. விவேகியின் வருகை

நான் அவ்வாறு கனவு கண்டுகொண்டிருந்த வேளையில், ஒரு வயோதிபர் அந்த இடத்துக்கு வந்தார். நான் பயணம் செல்ல வேண்டிய பாதையில் அவரும் சற்று தூரம் வரவேண்டியிருந்தபடியால், நான் எழுந்து அவரோடுகூட செல்வதுபோல எனக்குத் தோன்றியது. நாங்கள் நடந்து சென்றபோது, ஒருவரோடொருவர் உரையாடத் துவங்கினோம். கிறிஸ்தியானைப்பற்றியும் அவனது பயணத்தைப்பற்றியும் நாங்கள் விவாதித்தோம்.

"நமது பாதையின் இடது புறமாகக் காணப்படும் பட்டணம் எது ஐயா?" என்று நான் அவரிடம் கேட்டேன்.

விவேகி என்ற பெயருடைய அவர், "அதுவா? அதுதான் அழி நகரம் என்ற பட்டணம். அங்கே அநேகர் குடியிருக்கிறார்கள். ஆனால் அவர்கள் சோம்பேறிகளாகவும், மகா மோசமானவர்களாகவும் இருக்கிறார்கள்'' என்று சலிப்புடனே கூறினார்.

"அதுதான் அந்தப் பட்டணம் என்று நினைத்து, ஒரு முறை நான் அதன் வழியாகப் போனேன். நீர் கூறுவது சரிதான் என்று என்னால் கூறமுடியும்" என்றேன் நான்.

''முற்றிலும் உண்மைதான். அந்த மனிதர்களைப் பற்றி ஏதாவது வார்த்தை பேசக் கூடுமானால் அது எனக்கு மகிழ்ச்சி யாகத்தான் இருக்கும்" என்றார் விவேகி.

"அப்படியானால் நீர் நல்ல எண்ணம் கொண்டவர் என்றும், நன்மையானவற்றைப்பற்றிக் கேட்கவும், பேசவும் விரும்புகிறவர் என்றும் எனக்குத் தோன்றுகிறது. இந்தப் பட்டணத்தைச் சேர்ந்த கிறிஸ்தியான் என்பவன் சிறிது காலத்துக்கு முன்பு மோட்சம் நோக்கிப் பயணம் புறப்பட்டுச் சென்றானே, அவனுக்கு என்ன நேர்ந்தது என்பதைப்பற்றி ஏதாவது கேள்விப்பட்டீரா?" என்று அவரிடம் கேட்டேன்.

"எவ்வளவோ செய்திகள் கேள்விப்பட்டிருக்கிறேனே!. அவன் தனது பயணத்தில் எதிர்நோக்கிய இடையூறுகள், சோதனைகள், போராட்டங்கள், சிறையிருப்புகள் வேதனைகள், பயங்கள், அச்சங்கள் இவற்றைப்பற்றியெல்லாம் கேள்விப்பட்டிருக்கிறேன். அதுமட்டுமா? நாடு முழுவதும் அவனைப்பற்றிதான் பேசப் படுகிறது! அவனைப்பற்றியும், அவனது பயணத்தைப்பற்றியும் அறியாதவர்கள் வெகு சிலரே என்று கூறலாம். அவனது பயணத்தைப்பற்றிய விவரங்களைக் கொண்ட புத்தகங்களை பெரும்பாலானோர் தங்கள் வீடுகளில் வைத்துள்ளார்கள்.

அவனது அபாயமான பயணம் அவனைப்போல இன்னும் அநேகர் பயணம் புறப்படத் தூண்டுதலாக அமைந்திருக்கிறது என்று நான் கேள்விப்படுகிறேன். அவன் இங்கே இருந்தபோது, எல்லாருமே அவனை முட்டாள் என்று கேலிசெய்தாலும், தற்போது எல்லாருமே அவனைப் புகழ்ந்து பேசுகின்றனர். அவன் இப்போது இருக்கும் இடத்தில் துணிவுள்ளவனாக இருக்கிறான் என்று பேசப்படுகிறது. அவன் தற்போது அனுபவிக்கும் ஆசீர்வாதங்களைப்பெற அநேகர் விரும்பினாலும், அவன் சந்தித்த அபாயங்களைச் சந்திக்க அவர்கள் துணிந்து முன்வரவில்லை" என்று கூறினார் விவேகி.

"அவர்கள் அவனைப்பற்றி நினைப்பதெல்லாம் உண்மையாக இருந்தால் அது நலமே! அவன் தற்போது ஜீவ ஊற்றினிடத்திலும் அதன் கரையோரங்களிலும் வசிக்கிறான். எந்தவித உழைப்போ அல்லது மெய்வருத்தமோ இன்றித் தற்போது தான் பெறவேண்டியவையெல்லாம் பெற்று அனுபவிக்கிறான், ஏனெனில் அங்கே எந்தவித கவலையும் காணப்படுவதில்லை. அதுசரி, மக்கள் அவனைப்பற்றி என்ன பேசிக்கொள்கிறார்கள்?" என்று கேட்டேன் நான்.

''மக்கள் அவனைக் குறித்து அநேக விநோதமான காரியங்களைப் பேசிக்கொள்ளுகிறார்கள். சிலர் அவன் இப்போது வெள்ளை ஆடை தரித்தவனாக உலாவுகின்றான் என்று கூறுகிறார்கள். அவன் கழுத்தில் தங்கச் சங்கிலி அணிந்திருக்கிறான் என்றும், தலையில் முத்துக்கள் பதிக்கப்பட்ட தங்கக் கிரீடம் வைத்திருக்கிறான் என்றும் கூறுகிறார்கள். அவன் சென்றபோது சற்றுதூரம் அவனோடு வந்த ஒளிமயமான நபர்கள் இப்போது அவனது தோழர்களாக ஆகிவிட்டார்கள் என்றும் அண்டை வீட்டாரோடு உரையாடுவதுபோல அவனோடு உரையாடுகி றார்கள் என்றும் வேறு சிலர் கூறுகிறார்கள். அதுமட்டுமன்றி அவன் தற்போது இருக்கும் இடத்தின் அரசர் தனது நாட்டில் வாசம்பண்ணும்படி அவனுக்குச் செல்வச் செழிப்புமிக்க இனிமையான ஓர் இடத்தைக் கொடுத்திருக்கிறார் என்றும் ஒவ்வொரு நாளும் அவரோடு அவன் புசித்து, குடித்து உலாவிப் பேசி மகிழ்கிறான் என்றும் கூறுகிறார்கள். அவ்விடத்திலுள்ள அனைவருக்கும் நியாயாதிபதியாக இருப்பவரின் இனிய முகத்தை அவன் காண்கிறான் என்றும் அவரது சகாயம் அவனுக்குக் கிடைத்திருக்கிறது என்றும் வேறு சிலர் கூறுகிறார்கள். அதுமட்டுமா? அந்த நாட்டின் இளவரசரும் ஆண்டவருமானவர் வெகு விரைவில் இங்கே வரப்போகிறாராம். அவன் பயணம் புறப்படும்போது மற்றவர்கள் ஏன் அவனைக் கேலியும், நிந்தனையும் செய்தார்கள் என்பதற்கான காரணங்களைக் கேட்டு அறியப் போகிறாராம்! (யூதா 4, 5).

ஏனெனில் அவன் தற்போது தனது இளவரசனுக்குப் பிரியமானவனாக இருக்கிறபடியாலும், அவன் பயணம் புறப்படும்போது அவனைப்பற்றிக் கூறப்பட்ட நிந்தனைகளைக் குறித்து அவர் கரிசனையுள்ளவராக இருக்கிறபடியாலும், அவனுக்குச் செய்யப்பட்ட அனைத்தையும் அவர் தனக்கே செய்யப்பட்டதாக எடுத்துக்கொள்கிறாராம்! இதில் வியப்பேதுமில்லையே! ஏனென்றால் அவர் மீது அவன் கொண்ட அன்பின் மிகுதியால்தானே அவன் அப்படிப்பட்ட அபாயகரமான பயணம் ஒன்றை மேற்கொண்டான்?'' என்றார் விவேகி.

''உமது பேச்சைக் கேட்டு நான் மிகவும் மகிழ்ச்சி யடைகிறேன். அவன் தனது உழைப்பின் பலனாக இளைப் பாறுதலைப் பெற்றிருப்பதையும் தனது கண்ணீரின் பலன்களை மகிழ்ச்சியோடு அறுவடை செய்வதையும் கண்டு நான் அவனுக்காக ஆனந்தப்படுகிறேன். அவன் தனது விரோதிகள் எய்யும் அம்பு செல்லும் எல்லைக்கு அப்பால் சென்று விட்டதையும், அவனை வெறுப்பவர்களால் எட்டமுடியாத தொலைவை அடைந்துவிட்டதையும் கண்டு நான் அகமகிழ்கிறேன் (வெளி. 14:13; சங். 126:5, 6). இதைப்பற்றிய செய்தி நாடெங்கும் பரவி வருவதும் எனக்கு மகிழ்ச்சியையே தருகிறது. இதன் மூலமாக இதுவரை பயணம் புறப்படாதவர்கள் சிலருடைய மனதிலாவது நல்ல விளைவுகள் ஏற்பட்டால் மகிழ்ச்சிதானே! சரி ஐயா, அவனது மனைவியைப்பற்றியும், குழந்தைகளைப் பற்றியும் ஏதாவது கேள்விப்பட்டீரா? பாவம், அவர்கள் என்ன செய்கிறார்களோ என்று என் மனம் கவலைப்படுகிறது'' என்றேன் நான்.

''யார்? **கிறிஸ்தீனாளையும்** அவள் பிள்ளைகளையும் பற்றியா கேட்கிறாய்? கிறிஸ்தியான் செய்ததுபோலவே அவர்களும் செய்வார்கள் என்றுதான் நான் கேள்விப்பட்டேன். முதலில் அவர்களும் சேர்ந்து அவனை முட்டாள் என்று கேலி செய்தாலும் கூட கிறிஸ்தியானின் கண்ணீராலும், புலம்பல் களாலும் மனம் மாறாவிட்டாலும்கூட தற்போது அவர்கள் எண்ணம் மாறிவிட்டது. அவர்களும் அவனைப் பின்பற்றிப் பயணம் புறப்பட்டுவிட்டார்கள்'' என்றார் விவேகி.

''மிகவும் நல்லது! ஆனால் மனைவியுடன் பிள்ளைகள் அனைவருமா புறப்பட்டுவிட்டார்கள்?'' என்று கேட்டேன் நான்.

''உண்மைதான். அதைப்பற்றிய முழு விவரங்களையும் என்னால் கூற முடியும். ஏனெனில் அவர்கள் புறப்பட்டபோது நான் அவர்கள் வீட்டின் அருகேதான் நின்று கொண்டிருந்தேன்'' என்றார் விவேகி.

''அப்படியானால் அது ஓர் உண்மை என்று ஒருவன் அறிவிக்க முடியும் அல்லவா?'' என்று நான் கேட்டேன்.

"அதைப்பற்றி உனக்கு எந்தவித ஐயமும்வேண்டாம். அந்த நல்ல பெண்மணியும் அவனது நான்கு பையன்களும் பயணம் புறப்பட்டுவிட்டார்கள். நீ சற்றுதூரம் என்னோடு வருகிறபடியால் அதைப்பற்றி நான் விரிவாகக் கூறுகிறேன் என்றார் விவேகி.

2. கிறிஸ்தீனாளின் கனவு

"கிறிஸ்தியானின் மனைவி தன்னுடைய பிள்ளைகளுடன் பயணம் புறப்பட்டது முதற்கொண்டு **கிறிஸ்தீனாள்** என்று அழைக்கப்படுகிறாள். அவளது கணவன் ஆற்றைத் தாண்டிச் சென்ற பிறகு அவனைப் பற்றிய செய்தியொன்றும் அவளுக்குக் கிடைக்கவில்லை. அவள் தனது மனதில் சிந்திக்கத் துவங்கினாள். முதலாவதாக, அவள் தன் கணவனை இழந்து விட்டபடியால் அவர்களது உறவின் ஜீவபந்தம் முற்றிலுமாக அறுந்து போயிற்று. அன்புக்குரியவரை இழந்துபோவது நம்மை எவ்வளவாக துயரத்துக்குள்ளாக்குகிறது என்பதை நீ அறிவாய் அல்லவா? எனவே அவளும் தன் கணவனை நினைத்து அழுது துடித்தாள். அதுமட்டுமன்றி அவள் தன்னைப்பற்றியும் சிந்திக்கத் துவங்கினாள். தான் தன் கணவனுக்குக் கீழ்ப்படியாமல் அவனை அலட்சியப்படுத்தினதினால்தான் அவனை இழந்துவிட்டோமோ என்று எண்ணினாள். அப்போது அவன் பேச்சை அவமதித்தது, அவனிடம் கோபமாகப் பேசியது, அவிசுவாசத்துடன் நடந்து கொண்டது போன்ற அவளது தவறான செய்கைகள் அவள் மனச்சாட்சியைத் துளைத்து, குற்ற உணர்வைப் பெறும்படி செய்தன. அவளது கணவனின் பெருமூச்சுகளையும், அவன் விட்ட கண்ணீரையும், அவனது புலம்பல்களையும் இப்போது நினைத்துப் பார்த்து அவள் கண்கலங்கினாள். அவன் கவலையோடு பேசிய பேச்சுக்களை அலட்சியம் பண்ணியதையும், அவன் தன்னையும், பிள்ளைகளையும் தன்னுடன் வரும்படி வருந்தி அழைத்தபோது மறுத்துவிட்டதையும் எண்ணி எண்ணி வருந்தினாள். தன் பாரத்தை அவன் தனது முதுகில் சுமந்து திரிந்த நாள்களில் அவன் பேசிய பேச்சுகளும், அவன் செய்த செயல்களும் மின்னலெனப் பாய்ந்து வந்து அவள் இருதயத்தைத் துளைத்தன. 'நான் இரட்சிக்கப்படுவதற்காக என்ன செய்வேன்?' என்று அவன் கதறியழுதது இன்னும் அவளது காதுகளில் ரீங்காரமிட்டு அவளைத் துடிக்க வைத்தன.

"அப்போது அவள் தன் பிள்ளைகளை அருகே அழைத்து, 'நான் உங்கள் தகப்பனாருக்கு விரோதமாகப் பாவம் செய்துவிட்டேன்; அவரும் போய்விட்டார். நாமும் அவருடன்

செல்லவேண்டுமென்று அவர் விரும்பினார், நான் உடன் செல்ல விரும்பாதது மட்டுமின்றி, நீங்கள் ஜீவன் பெறுவதற்கும் தடையாக இருந்துவிட்டேன். இதைக் கேட்டவுடன் அந்தப் பையன்கள் கண்ணீர்வடித்து தங்கள் தகப்பனாருக்குப் பின்னால் தாங்களும் செல்ல வேண்டுமென்று கூறிக் கதறினார்கள். 'ஐயோ அந்த நாளே நாம் அவருடன் சென்றிருக்கக் கூடாதா? இனிமேல் தனியாகப் பயணம் செய்வதைவிட அவரோடு சென்றிருந்தால் எவ்வளவோ நன்றாயிருந்திருக்கும்! உங்கள் தகப்பனார் பட்ட வேதனைகள் அவர் முட்டாள்தனமான கற்பனை செய்தவை என்றல்லவா நான் நினைத்துவிட்டேன்? அல்லது தனது மனக்குழப்பத்தால் அவ்வாறெல்லாம் புலம்புகிறார் என்று தவறாக நினைத்துவிட்டேன். ஒரு மேலான நோக்கத்தோடுதான் அவர் இந்த வேதனைகளை அனுபவித்திருக்கிறார் என்று இப்போதுதான் உணர்கிறேன். அவருக்கு ஜீவ ஒளி (யோவான் 8:12) கொடுக்கப்பட்டிருக்கிறது; அதன் பலனாக அவர் மரணத்தின் பிடியிலிருந்து தப்பியிருக்கிறார்' என்று கூறிப் புலம்பினாள் கிறிஸ்தீனாள். அதைக் கேட்டவுடன் அவளது நான்கு பையன்களும்கூட 'அந்த நாளிலேயே அவருடன் கூடப் புறப்பட்டிருக்கலாமே' என்று அழுது கதறினார்கள்.

"அடுத்த நாள் இரவு கிறிஸ்தீனாள் ஒரு கனவு கண்டாள். ஓர் அகலமான தோல் சுருள் அவளுக்கு முன்பாக விரிக்கப்பட்டிருந்தது; அதில் அவளது தவறான செய்கைகளும் சிந்தனைகளும் எழுதப்பட்டிருந்தன. அவளது நிலைமை பரிதாபகரமாக இருந்தது. 'ஆண்டவரே, பாவியாகிய என்மேல் கிருபையாயிரும்' என்று அவள் தன் கனவிலேயே கதறி அழுதாள். அவளது பிள்ளைகளும் அவளது அழுகுரலைக் கேட்டார்கள்.

"அதன்பிறகு அவள் தனது படுக்கையின் அருகே கருமையான இரு உருவங்கள் நின்றுகொண்டு, 'இந்தப் பெண்ணை நாம் என்ன செய்வது? அவள் விழித்திருக்கும் போது மட்டுமன்றி, உறக்கத்திலும்கூட கருணைகாட்டும்படி கதறிக் கொண்டிருக்கிறாள். இவளும்கூட பயணம் புறப்பட்டுவிட்டால் இவளது கணவனை நாம் இழந்தது போல இவளையும் நாம் இழந்துவிடுவோம். எனவே எந்த வழியிலாவது வருங்காலத்தைப் பற்றிய அவளது சிந்தனைகளைத் தடைசெய்ய வேண்டும். அல்லது அவள் பயணம் புறப்படுவதை உலகம் முழுவதும் கூடியும் தடைசெய்ய முடியாது' என்று பேசிக்கொண்டார்கள்.

"உடலெங்கும் வியர்வை வழிய அவள் எழுந்து அமர்ந்தாள். அவள் உடல் நடுங்கியது. சற்று நேரம் கழித்து அவள்

உறக்கத்திலாழ்ந்தாள். அப்போது அவள் தனது கணவன் கிறிஸ்தியான் நித்திய காலமாக வாழுபவர்களோடு சேர்ந்து ஆனந்தமாக இருப்பதைக் காண்பதுபோல நினைத்தாள். சிம்மாசனத்தில் வீற்றிருந்த ஒருவருக்கு முன்பாக அவன் சுரமண்டலத்தை இசைத்துக்கொண்டிருந்தான். சிம்மாசனத்தில் வீற்றிருந்தவரின் சிரசுகள் மேலாக ஒளிமயமான வானவில் காணப்பட்டது அதுமட்டுமன்றி தனது கணவன் இளவரசரின் காலடியில் தனது தலை படும்படியாகக் குனிந்து வணங்கி 'என்னை இந்த இடத்தில் கொண்டுவந்து சேர்த்ததற்காக, என் ஆண்டவரும் இராஜாவுமாகிய உம்மை முழுமனதோடு தோத்தரிக்கிறேன்' என்று கூறுவதையும் கண்டாள். அப்போது அவர்களைச் சுற்றிக் கூட்டமாக நின்றுகொண்டிருந்தவர்கள் சுரமண்டலங்களை இசைத்துப்பாடுவதையும் அவள் கேட்டாள். ஆனால் அவர்கள் என்ன சொல்லுகிறார்கள் என்பது கிறிஸ்தியானுக்கும் அவனது தோழர்களுக்கும் மட்டுமே தெரியுமேயன்றி, ஜீவனுள்ள எந்த மனிதனாலும் அதைப் புரிந்து கொள்ள முடியவில்லை.

3. உள்ளான கிரியையோடு சந்திப்பு

மறுநாள் காலையில் கிறிஸ்தீனாள் எழுந்தவுடனே அவள் ஆண்டவரை நோக்கி ஜெபித்தாள். சற்று நேரம் தனது பிள்ளைகளுடன் பேசிக்கொண்டிருந்தாள்.

அப்போது யாரோ கதவைப் பலமாகத் தட்டும் சத்தம் கேட்டது.

"யாரங்கே, நீர் ஆண்டவருடைய நாமத்தில் வருகிறவராக இருந்தால் உள்ளே வாரும்" என்று அழைத்தாள் கிறிஸ்தீனாள்.

"ஆமென்" என்று கூறியபடியே கதவைத் திறந்து உள்ளே வந்த அவர் அவளை வணங்கினார்.

"இந்த வீட்டில் சமாதானம் நிலவுவதாக. கிறிஸ்தீனாளே, நான் எங்கிருந்து வருகிறேன் என்பது உனக்குத் தெரியுமா?" என்று கேட்டார் அவர்.

அதைக் கேட்டவுடன் அவள் முகம் சிவந்துவிட்டது, உடல் நடுங்கியது.

அதே வேளையில் அவர் எங்கிருந்து, எதற்காக வந்திருக்கிறார் என்பதை அறியும் வாஞ்சை அவள் உள்ளத்தில் எழுந்தது.

"எனது பெயர் **உள்ளான கிரியை**[1] மேலுலக எண்ணங்களைக்

1. உள்ளான கிரியை - இது பரிசுத்த ஆவியானவர் நமது இருதயத்தின் உள்ளில் நடப்பிக்கும் இரகசியமான ஆயத்த கிரியையைக் குறிக்கிறது.

கொண்டிருப்பவர்களோடு நான் வசிக்கிறேன். நான் தங்கியிருக்கும் அந்த மேலுலகிற்கு நீயும் வர வாஞ்சையா யிருக்கிறாய் என்று அங்கே பேசிக்கொள்ளப்படுகிறது. உன் கணவன் மேற்கொண்ட பயணத்தைக் குறித்து நீ உன் உள்ளத்தைக் கடினப்படுத்திக் கொண்டதற்காகவும், உன் பிள்ளைகளும் அதைப்பற்றி அறியாமல் செய்துவிட்டதற்காகவும் உன் கணவனுக்கு இவ்வாறு தீங்கிழைத்து விட்டதற்காக நீ வருத்தப்படுவதாகவும் அங்கே கூறப்படுகிறது. தாம் மன்னிப்பதற்குச் சித்தமுள்ள ஆண்டவரென்றும், எத்தனையோ பாவங்களுக்கும் மன்னிப்பளிக்கச் சித்தமாக இருக்கிறார் என்றும் உன்னிடம் அறிவிக்கும்படியாகவே கருணையுள்ள கர்த்தர் என்னை அனுப்பினார். நீ அவருடைய பிரசன்னத்திற்குள் வரும்படியும், அவருடைய போஜனத்தில் பங்குகொள்ளும்படியும் அவர் உன்னை அழைக்கிறார். உனது தகப்பனாரான யாக்கோபு வின் பாரம்பரிய சுதந்தரங்களினால் அவர் உன்னைப் போஷிப்பார்.

“உனது கணவனாக இருந்த கிறிஸ்தியானும் தனது அநேக தோழர்களோடு அங்கே காத்திருக்கிறான். காண்பவர்கள் அனைவருக்கும் மீட்பை அருளும் கருணை முகத்தை அவர்கள் எப்போதும் கண்டு அகமகிழ்ந்து கொண்டிருக்கிறார்கள். உனது பிதாவானவரின் மாளிகையில் உனது காலடி படும் ஓசையைக் கேட்டும் அவர்கள் அனைவருமே மகிழ்ச்சியடைவார்கள்” என்று கூறினார் உள்ளான கிரியை.

இதைக் கேட்டவுடன் தன்னைப்பற்றி எண்ணி வெட்கப்பட்ட கிறிஸ்தீனாள் தலைகுனிந்தாள்.

“கிறிஸ்தீனாளே, இதோ உனது கணவரின் இராஜா உனக்கு அனுப்பிய கடிதம்'' என்று அந்தக் கடிதத்தை நீட்டினார் உள்ளான கிரியை.

அவள் அந்தக் கடிதத்தைப் பெற்றுக்கொண்டு அதைத் திறந்து பார்த்தாள். மிக உன்னதமான நறுமணம் வீசியது. அந்தக் கடிதம் தங்கமயமான எழுத்துக்களில் எழுதப்பட்டிருந்தது.

அந்தக் கடிதத்தின் சாராம்சமாவது: அவனது கணவன் எப்படி நடந்து கொண்டானோ, அதே விதமாக அவளும் நடந்து கொள்ளவேண்டுமென்பதே அவனுடைய இராஜாவின் விருப்பம். ஏனெனில் அவரது பட்டணத்திற்கு வந்து நித்திய காலமாக அவருடைய பிரசன்னத்தில் களித்திருப்பதற்கு அது ஒன்றே வழியாகும் என்று அந்தக் கடிதத்தில் கூறப்படுகிறது.

கடிதத்தைப் படித்தவுடன் கிறிஸ்தீனாள் பரவசமெய்தினாள்.

அவள் உள்ளான கிரியையைப் பார்த்து “ஐயா, நாங்களும் சென்று இந்த இராஜாவைப் பணிந்துகொள்ளும்படியாக, என்னையும் என் பிள்ளைகளையும் நீர் உம்முடனே கூடத் தூக்கிச் செல்லமாட்டீரா?” என்று கண்ணீரோடு கெஞ்சினாள்.

“கிறிஸ்தீனாளே, இனிப்புக்கு முன்பாக கசப்பை அனுபவித்தே ஆக வேண்டும். உனக்கு முன்பாக பரலோகத்துக்குச் சென்ற உன் கணவன் அனுபவித்த கடினங்களை நீயும் சந்தித்தே ஆக வேண்டும். எனவே நீயும் உன் கணவன் செய்ததுபோல அதோ தெரிகிற வாசல் வழியாகப் பயணம் புறப்படு. நீ செல்ல வேண்டிய பாதை அங்கிருந்துதான் துவங்குகிறது. இனிய துரிதமான பயணத்திற்கு என் வாழ்த்துக்கள். நீ இந்தக் கடிதத்தைப் பத்திரப்படுத்தி வைத்து, நீயும் உன் பிள்ளைகளும் அதை மனதில் பதிய வைக்கும்வரை மறுபடியும் மறுபடியும் எடுத்துப் படியுங்கள் என்று நான் ஆலோசனை சொல்லுகிறேன். ஏனென்றால் நீ செல்லவிருக்கும் இடத்தில் பாடிக் களிக்க வேண்டிய பாடல்களில் இதுவும் ஒன்றாகும். அதுமட்டுமன்றி, அங்குள்ள வாசலிலே நீ இந்தக் கடிதத்தை கொடுக்கவும் வேண்டும்” என்றார் உள்ளான கிரியை.

4. பயணம் புறப்படுவதற்கான ஆயத்தம்

அப்போது என் கனவில் இதைச் சொல்லிக் கொண்டிருந்த விவேகி என்ற அந்த முதியவர் பரிதாப உணர்வு கொள்வதை நான் கவனித்தேன்.

மேலும் அவர் பேசத் துவங்கினார்: “கிறிஸ்தீனாள் தன் பிள்ளைகளை அருகே அழைத்து, என் பிள்ளைகளே, கொஞ்ச காலமாக உங்கள் தகப்பனாரின் மரணத்தைக் குறித்து நான் என் ஆத்துமாவில் சிந்தித்துக் கொண்டிருக்கிறேன் என்பதை நீங்கள் அறிவீர்கள். அவர் மகிழ்ச்சியின்றி உழலுகிறாரோ என்று நான் கவலைப்படுவதாக நீங்கள் அஞ்சவேண்டாம். ஏனெனில் அவர் நல்ல நிலையில் இருக்கிறார் என்ற உறுதியான நம்பிக்கை எனக்கு மனநிம்மதியைத் தருகிறது. ஆனால் என்னுடைய, மற்றும் உங்களுடைய நிலைமையை எண்ணித்தான் நான் கவலைப்படுகிறேன். நமது நிலை பரிதாபகரமானது என்று நான் உணருகிறேன். உங்கள் தகப்பனார் மனபாரம் கொண்டிருந்த போது நான் பேசிய பேச்சுக்களும் எனது மனச்சாட்சியை உறுத்துகின்றன. ஏனென்றால் நான் எனது இருதயத்தைக் கடினப்படுத்திக்கொண்டதோடு மட்டுமன்றி, உங்கள் இருதயம் கடினப்படவும் காரணமாக அமைந்து விட்டேன். அவரோடுகூட பயணம் புறப்படவும் மறுத்துவிட்டேன்.

"இதைப்பற்றிச் சிந்திப்பதே என் இருதயத்தைச் சித்திரவதை செய்கிறது. ஆனால் நேற்றிரவு நான் கண்ட ஒரு கனவும், இன்று காலையில் வந்த நபர் அளித்த ஊக்கமும் எனக்கு ஆறுதலைத் தருகிறது. வாருங்கள் பிள்ளைகளே, நாமும் பயணம் புறப்படுவோம். பரலோகத்திற்குச் சென்று உங்கள் தகப்பனாரைப் பார்க்கும்படியாகவும், அவரோடும் அவரது தோழர்களோடும் சமாதானத்தில் தாபரிக்கும்படியாகவும், அந்த நாட்டின் விதிகளுக்கேற்ப களித்திருக்கும்படியாகவும், குறுகியவாசல் சென்று நமது பயணத்தைத் தொடருவோம்" என்று கூறினாள்.

தங்கள் தாயின் மனமாற்றத்தைக் கண்டு பிள்ளைகள் ஆனந்த கண்ணீர் வடித்தார்கள். அவர்களைச் சந்திக்க வந்திருந்த நபர் அவர்களிடம் விடைபெற்றார். அவர்கள் தாங்கள் பயணம் புறப்படுவதற்கான ஆயத்தங்களைச் செய்யத் துவங்கினார்கள்.

அவர்கள் புறப்பட ஆயத்தமானபோது, அண்டை வீடுகளைச் சேர்ந்த இரண்டு பெண்கள் வந்து கதவைத் தட்டினார்கள்.

"நீங்கள் ஆண்டவருடைய நாமத்தில் வருகிறவர்களானால் உள்ளே வாருங்கள்" என்று அழைத்தாள் கிறிஸ்தீனாள்.

இதைக் கேட்டு அந்தப் பெண்கள் திடுக்கிட்டு நின்றார்கள். ஏனென்றால் அவர்கள் இப்படிப்பட்ட பேச்சைக் கேட்டதில்லை. அதுவும் கிறிஸ்தீனாள் இப்படிப் பேசி அவர்கள் கேட்டதே யில்லை! என்றாலும் அவர்கள் உள்ளே நுழைந்தார்கள். கிறிஸ்தீனாள் பயணம் புறப்படவிருந்ததைக் கண்டு வியப்படைந்தார்கள்.

"அண்டை வீட்டுப் பெண்மணியே இது என்ன?" என்று அவர்கள் கேட்டார்கள்.

அவர்களில் மூத்தவளான **பயந்தவள்**[1] என்பவளைப் பார்த்து கிறிஸ்தீனாள் "நான் ஒரு பயணம் புறப்பட ஆயத்தமாக இருக்கிறேன்" என்றாள்.

இவள் கடின மலையில் கிறிஸ்தியான் சிங்கங்களுடன் பயந்து ஓடிவரும் ஒருவனைச் சந்தித்தானே, அவனுடைய மகள்.

"எங்கே செல்லுகிறாய் என்று சொல்ல மாட்டாயா?" என்று கேட்டாள் பயந்தவள்.

---

1. பயந்தவள் - சிலர் சிறு இடையூறுகளையும் கண்டு பயப்படுவதோடு மட்டுமல்லாமல் மற்றவர்களும் பயப்படும்படி செய்கிறார்கள். நியாயமான காரியமாக இருந்தாலும் பயத்தால் பின்வாங்குகிறார்கள். நீதியின் பாதையில் நாம் எதற்கும் அஞ்சாமல் நடக்க வேண்டும்.

"எனது நல்ல கணவரைப் பின்பற்றியே செல்கிறோம்" என்று கூறிய கிறிஸ்தீனாள் திடீரென்று அழத் துவங்கினாள்.

"பாவம், உனது பிள்ளைகளுக்காகவாவது அவர்களை விட்டுவிட்டு நீ பயணம் புறப்பட்டுவிடாதே" என்று கெஞ்சினாள் பயந்தவள்.

"அவர்களும் என்னோடுதான் வருகிறார்கள். எல்லாருமே உடன்வர ஆசைப்படுகிறார்கள்" என்று பெருமையுடன் கூறினாள் கிறிஸ்தீனாள்.

"எது அல்லது யார் உங்களது இந்த மனமாற்றத்துக்குக் காரணம் என்று நான் அறிய விரும்புகிறேன்" என்றாள் பயந்தவள்.

"நான் உன்னை அறிவேன். ஆனாலும் நீயும்கூட என்னோடு வருவாயானால் பலமாயிருக்கும்" என்றாள் கிறிஸ்தீனாள்.

"உனது தோழிகளை விட்டுச் செல்லவும், ஒருவருமே அறியாத ஓரிடத்துக்குப் பயணம் புறப்படவும் உன் மனதைத் தூண்டிய அந்தப் புதிய செய்திதான் என்ன?" என்று துடிப்புடன் கேட்டாள் பயந்தவள்.

"என் கணவன் என்னைவிட்டுப் பிரிந்ததிலிருந்தே நான் கவலையில் மூழ்கியிருக்கிறேன். அதிலும் அவர் ஆற்றைக் கடந்துவிட்டதாகச் செய்தி வந்தபிறகு என் கவலை அதிகரித்துவிட்டது. அவர் மனபாரத்தில் தவித்தபோது நான் அலட்சியமாகப் பேசிய பேச்சுக்கள் என் மனச்சாட்சியைத் துளைத்தெடுக்கின்றன. அப்போது அவர் எண்ணியதுபோலவே, பயணம் புறப்பட்டுச் செல்வதைவிட வேறு எதுவுமே என் கவலையைத் தணிக்காது என்று நான் உணர்ந்துவிட்டேன். நேற்றிரவு அவரைப் பார்த்துபோலக் கனவு கண்டேன். எனது ஆத்துமா அவரோடிருந்தால் எவ்வளவு நலமாயிருக்கும்! அவர் அந்த நாட்டு இராஜாவின் பிரசன்னத்தில் தங்கியிருக்கிறார்; அவரது மேசையில் அவரோடுகூடப் புசித்துக் குடிக்கிறார். அவர் நித்தியமாக வாழுபவர்களின் தோழனாகிவிட்டார். அவர் வசிப்பதற்காக ஒரு வீடும் அவருக்குக் கொடுக்கப்பட்டுள்ளது. அதோடு ஒப்பிடும்போது இந்த உலகத்தின் மகா மேன்மையான அரண்மனையைக்கூட குப்பை மேட்டோடுதான் ஒப்பிட வேண்டும். நான் அவரிடம் வந்தால் அவர் என்னையும் உபசரிப்பதாக அந்த இடத்தின் இளவரசர் எனக்கு ஒரு கடிதமொன்றை அனுப்பியிருக்கிறார். அந்தக் கடிதத்தைக் கொண்டுவந்தவர் இப்போதும்கூட இங்கேதான் இருக்கிறார். அந்தக் கடிதத்தின்மூலம் நான் அழைக்கப்பட்டுள்ளேன்" என்று

கூறிய கிறிஸ்தீனாள் அந்தக் கடிதத்தை வெளியே எடுத்து அவர்களுக்கு படித்துக் காட்டினாள்.

"இதைப்பற்றி என்ன சொல்லுகிறீர்கள்?" என்று அவள் அவர்களிடம் கேடடாள்.

"இவ்வாறு பல கடிதங்களையும் சந்திக்கும்படி ஓடிச் செல்ல உனக்கு மட்டுமன்றி உன் கணவருக்கும் பைத்தியம்தான் பிடித்திருக்கிறது! உனது கணவர் என்னென்ன ஆபத்துக்களைச் சந்தித்தார் என்பதை நீ அறிந்திருப்பாய் என்றே நான் நம்புகிறேன். அவர் பயணம் புறப்படும்போதே அநேக சோதனைகளைச் சந்திக்கவேண்டியிருந்தது என்று அவருடன் சற்றுத் தூரம், உடன் சென்ற பிடிவாதக்காரனும், விட்டுக் கொடுப்பவனும் கூறியதையெல்லாம் நீ மறந்து விட்டாயா? அவர்கள் ஞானமுள்ளவர்களாகத் தொடர்ந்து செல்லாமல் திரும்பி வந்துவிட்டார்கள். எல்லாவற்றுக்கும் மேலாக அவர் சிங்கங்களைச் சந்தித்ததையும், அப்பொல்லியோனிடம் சண்டை போட்டதையும் மரண இருளின் பள்ளத்தில் நடந்து சென்றதையும் பற்றி நாம் கேள்விப்படவில்லையா? மாயாபுரி சந்தையில் அவர் சந்தித்த ஆபத்தை எவராலும் மறக்க முடியுமோ? ஓர் ஆணான அவராலேயே சமாளிக்க துயரப்பட்டார் என்றால், ஒரு பெண்ணான உன்னால் இந்தக் கடினங்களை எதிர்கொள்ள முடியுமா? அதுமட்டுமா? இந்த நான்கு சின்னஞ் சிறுசுகளும் உனது பிள்ளைகள், உனது மாம்சமாகவும், உனது எலும்புகளாகவும் இருக்கிறார்கள் என்பதையும் மறந்துவிடாதே! எப்படியும் போகவேண்டும் என்று துணிவுகொள்ளாமல் உனது கர்ப்பத்தின் கனிகளுக்காகவாவது நீ பயணம் புறப்படாமல் இங்கேயே இருந்துவிடு" என்று கேட்டுக்கொண்டாள் பயந்தவள்.

"அன்புத் தோழியே, என்னைச் சோதனைக்குள் விழப்பண்ணாதே! மேலான பாக்கியத்தைப் பெறுவதற்கான இந்த வாய்ப்பை நான் நழுவவிட்டு விட்டால் என்னைவிடப் பெரிய முட்டாள் எவரும் இருக்கமுடியுமோ? நீ நான் சந்திக்க வேண்டியிருக்கும் என்று அநேக சோதனைகளை அடுக்கடுக்காகக் கூறினாயே! அவையே நான் சரியான பாதையில் செல்கிறேன் என்பதற்கு நிரூபணங்களாகக் காணப்படுகின்றன அல்லவா? இவையெல்லாம் என்னை ஊக்கமிழக்கச் செய்துவிட முடியாது. இனிப்புக்கு முன்னால் கசப்பை அனுபவித்துதானே ஆகவேண்டும்? அதுமட்டுமன்றி அந்தக் கசப்பு இனிப்பை இன்னும் அதிக இனிமையானதாக ஆக்குகிறது. நீங்கள் ஆண்டவருடைய நாமத்தில் என்னுடைய வீட்டுக்கு வராதபடியால், நீங்கள் விட்டைவிட்டு செல்லும்படி வேண்டிக்

கொள்கிறேன். இதற்கு மேலும் என்னைத் தொந்தரவு செய்யாதீர்கள்" என்று கேட்டுக் கொண்டாள் கிறிஸ்தீனாள்.

இதைக் கேட்டுக் கோபம் கொண்ட பயந்தவள் கிறிஸ்தீனாளை வாய்க்கு வந்தபடி திட்டினாள். பிறகு தன்னுடன் கூட்டி வந்திருந்த **இரக்கம்** என்ற பெண்ணைப் பார்த்து, "இவள் நம்முடைய ஆலோசனையையும் உறவையும் விரும்பாதபடியால் இவள் எப்படியோ போகட்டும் என்று அவள் வழிக்கே விட்டுவிடுவோம், வா" என்று அழைத்தாள்.

ஆனால் இரக்கமோ அவள் பேச்சுக்கு இணங்காமல் சற்று நேரம் அப்படியே அமைதியாக நின்றிருந்தாள். இதற்கு இரண்டு காரணங்கள் இருந்தன!

முதலாவதாக, கிறிஸ்தீனாளைக் கண்டு அவள் உள்ளம் உருகிவிட்டது. இவள் பயணம் செல்வதாக இருந்தால் இவளுக்கு உதவி செய்யும்படி சற்று தூரமாவது அவளுக்குத் துணையாகச் செல்ல வேண்டுமென்று தீர்மானித்துக் கொண்டாள்.

இரண்டாவதாக, அவள் தனது சொந்த ஆத்துமாவை நினைத்தும் கலங்கினாள். கிறிஸ்தீனாள் கூறிய வார்த்தைகள் அவள் உள்ளத்தில் கிரியை செய்யத் துவங்கின. 'நான் இன்னும் கொஞ்சம் கிறிஸ்தீனாளோடு பேசிப் பார்க்க வேண்டும். அவள் கூறுவதில் ஜீவனும் சத்தியமும் காணப்படுவதாகத் தெரிந்தால் நான் முழுமனதோடு அவளுடன் பயணம் புறப்பட்டுச் செல்வேன்' என்று தனக்குள் முடிவு செய்து கொண்டாள்.

அவள் பயந்தவளைத் திரும்பிப் பார்த்து, "இன்று காலையில் நான் உன்னுடன் கிறிஸ்தீனாளைப் பார்க்க வந்தது உண்மைதான். ஆனால் நீ பார்த்தபடி அவள் இந்த நாட்டை விட்டு விடுபட்டுச் செல்லும்போது, அவளது வழிப்பயணத்தில் அவளுக்கு உதவும்படியாக சூரிய ஒளிவீசும் இந்தக் காலை வேளையில் சற்றுத் தூரம் அவளோடு உடன் செல்லலாம் என்று நான் நினைக்கிறேன்'' என்று கூறினாள். ஆனால் அவள் தனது இரண்டாவது காரணத்தை மட்டும் பயந்தவளிடம் கூறாமல் மறைத்துவிட்டாள்.

''நீயும் முட்டாள்தனமாக அவளுடன் செல்ல வேண்டு மென்று முடிவு செய்துவிட்டாய்போலிருக்கிறது. ஆனால் காலம் தாழ்த்தாமல் உன் தவறை உணர்ந்து ஞானமாய் நடந்துகொள். நாம் ஆபத்திற்குள் வலியச் சென்றால் ஆபத்துக்குள்தான் சிக்க நேரிடும் என்பதை மறந்து விடாதே!'' என்று கடுகடுப்புடன் அவளுக்குப் பதில் கூறினாள் பயந்தவள்.

பயந்தவள் தனது வீட்டுக்குத் திரும்பிவிட்டாள். கிறிஸ்தீனாள் பயணம் புறப்பட்டாள்.

வீட்டுக்குச் சென்று பயந்தவள் வெறுமனே இருந்து விடவில்லை. அவள் **வெளவால்கண்ணி, கரிசனையற்றவள், இன்பமயங்கி, மூடநங்கை** என்ற நான்கு அண்டை வீட்டுப் பெண்மணிகளைத் தன் வீட்டுக்கு அழைத்து, கிறிஸ்தீனாளைப் பற்றியும், அவள் பயணம் புறப்படுவது பற்றியும் அவர்களிடம் கூறினாள்.

"அண்டைவீட்டுப் பெண்மணிகளே, இன்று காலையில் எனக்கு வேறு வேலை எதுவும் இல்லாதபடியால் கிறிஸ்தீனாளைப் பார்க்கச் சென்றிருந்தேன். நமது வழக்கப்படி நான் கதவைத் தட்டினேன். அவளோ 'ஆண்டவருடைய நாமத்தில் வருவதாயிருந்தால் உள்ளேவா' என்று கூறினாள். எல்லாம் நல்லபடியாகத்தான் இருக்கிறது என்று நினைத்துக் கொண்டு நான் உள்ளே சென்றேன். அப்போது அவள் பிள்ளைகளும், அவளும் நகரத்தைவிட்டுச் செல்வதற்காக மூட்டை முடிச்சுகளைக் கட்டிக் கொண்டிருந்தார்கள். 'என்ன இது?' என்று நான் அவளிடம் கேட்டேன். அவள் தன் கணவனைப் போலவே தானும் பயணம் புறப்படத் தீர்மானித்திருப்பதாகக் கூறினாள். அவள் கண்ட ஒரு கனவைப்பற்றியும், அவள் கணவன் தற்போது இருக்கும் நாட்டின் இராஜா அவளையும் அங்கே வரும்படி அழைத்த ஒரு கடிதத்தைப் பற்றியும் கூறினாள்" என்றாள் பயந்தவள்.

"என்னது? அவள் போவாள் என்று நீ நினைக்கிறாயா?" என்று கேட்டாள் மூடநம்பிக்கை.

"என்ன வந்தாலும் அவள் நிச்சயம் போவாள்! அவள் அப்படிப் பயணம் சென்றால் வழியில் சந்திக்கவிருக்கும் ஆபத்துக்களையெல்லாம் கூறி அவள் மனதை மாற்ற நான் முயற்சி செய்தேன். ஆனால் அந்த ஆபத்துக்களே அந்தப் பயணத்தின் முக்கியத்துவத்துக்கு நிரூபணங்கள் என்று அவள் கூறிவிட்டாள். 'இனிப்புக்கு முன்னால் கசப்பை அனுபவித்தாக வேண்டும். அப்போது அது இனிப்பை இன்னும் அதிக இனிமையுள்ளதாக ஆக்கும்' என்று என்னிடம் விவாதம் புரிகிறாள்" என்று சலித்துக்கொண்டாள் பயந்தவள்.

"எவ்வளவு மடத்தனமாகவும், குருட்டாம் போக்கிலும் நடந்து கொள்கிறாள்! அவளது கணவன் அனுபவித்த துயரங்களாவது அவளுக்கு ஓர் எச்சரிப்பாக அமையக் கூடாதா? அவன் இப்போது மறுபடியும் இங்கே வந்தால் ஒன்றுமில்லாததற்கு இவ்வளவு பிரச்சனைகளைச் சந்திப்பது ஏனென்று எண்ணி

இங்கேயே திருப்தியுடன் இருந்து விடுவாள் என்றே நான் நினைக்கிறேன்" என்றாள் ஒளவால்கண்ணி.

"இத்தகைய கற்பனையில் வாழும் முட்டாள்கள் இந்த நகரத்தைவிட்டுப் போய்த் தொலையட்டும்! அவள் போவது நமக்குத் தொந்தரவு ஒழிந்ததுபோலாகும் என்று தான் நான் கூறுவேன். அவள் இதே மனதோடு இங்கேயே இருந்துவிட்டால், யாரால் அவளருகே அமைதியோடு வாழ முடியும்? ஒன்று அவள் பேசாமல் அலைவாள் அல்லது பயனற்றுத் திரிவாள் அல்லது புத்திசாலிகளால் ஏற்றுக்கொள்ள முடியாதபடி எதையாவது பிதற்றுவாள். அதனால் அவள் போவதைப்பற்றி நான் ஒருபோதும் கவலைப்படப்போவதில்லை. அவள் போகட்டும்! அந்த இடத்தில் வேறு ஏதாவது நல்லவள் வந்து குடியிருக்கட்டும். இத்தகைய முட்டாள்கள் வாழ ஆரம்பித்ததிலிருந்து உலகமே கெட்டுப் போய்விட்டது" என்று சலித்துக்கொண்டாள் **கரிசனையற்றவள்.**

"வேண்டாம் இந்தப் பயனற்ற பேச்சு! அதை விட்டு விடுங்கள். வேறு காரியம்பற்றிப் பேசுவோம். நான் நேற்று காமமங்கை என்ற அம்மாளின் வீட்டுக்குச் சென்றிருந்தேன். அங்கே நாங்கள் எல்லாரும் இளம்பெண்களைப்போலப் பேசி மகிழ்ந்திருந்தோம். யாரெல்லாம் அங்கே இருந்தார்கள் தெரியுமா? **மாம்சஇச்சகி, மோகினி, காமநண்பன், அருவருப்பு** இன்னும் சிலர் அங்கே கூடிவந்தோம். அங்கே ஆடிப் பாடி மகிழ்ந்தோம். அந்த வீட்டுச் சொந்தக்காரி காமமங்கை நல்ல குடும்பத்தில் பிறந்தவள். அவள் கணவன் காமநண்பனும் சிறந்த அழகன்" என்று கூறினாள் இன்பமயங்கி.

5. கிறிஸ்தீனாள் பயணம் புறப்பட்டாள்

இதற்குள்ளாக கிறிஸ்தீனாள் பரலோக பயணத்தைத் துவங்கி விட்டாள். அவளுடைய பிள்ளைகளும் அவளைத் தொடர்ந்து சென்றார்கள். இரக்கமும் சற்றுதூரம் அவர்களுடன் சென்றாள்.

"அம்மா இரக்கம், நீ உன் வீட்டைவிட்டு கொஞ்ச தூரம் எங்களுடன் வரப் புறப்பட்டிருப்பது எனக்கு ஆறுதலாக இருக்கிறது" என்றாள் கிறிஸ்தீனாள்.

"உன்னுடன் செல்வது எனக்குப் பயனளிக்குமென்று கண்டால் நான் திரும்ப ஊருக்குச் செல்லமாட்டேன்" என்று கூறினாள் இரக்கம்.

"நல்லது, நீ என்னோடுகூட வருவதாக முடிவு செய்தால் நலம். நமது பயணத்தின் முடிவில் என்ன பயன் கிடைக்குமென்று

எனக்குத் தெரியும். என் கணவர் இப்போது இருக்கிறாரே அந்த இடத்திற்குச் சென்றவர்கள் கோடிப் பொன் கொடுப்பதாக இருந்தாலும் திரும்பவரமாட்டார்கள். நீ என்னுடைய அழைப்பின் பேரில் வருகிறபடியால் உன்னை நிச்சயம் புறக்கணிக்கமாட்டார்கள். எவ்வகையிலாவது கிறிஸ்துவண்டை வருகிற அனைவரையும் அவர் ஏற்றுக்கொள்கிறார். என்னையும் என் பிள்ளைகளையும் அங்கே வரும்படி அழைத்துள்ள இராஜா இரக்கத்தில் ஐசுவரியவான்! அது மட்டுமன்றி, நீ விரும்பினால் நான் உன்னை என் பணிப்பெண்ணாக ஏற்றுக்கொண்டு அழைத்துச் செல்வேன். பெயரளவில்தான் பணிப்பெண்! நமக்குள்ள அனைத்துமே இருவருக்கும் பொதுவாகத்தான் இருக்கும். நீ என்னுடன் வந்தால் அதுவே போதும்!" என்று ஆவலுடன் கூறினாள் கிறிஸ்தீனாள்.

"நானும்கூட அங்கே வரவேற்கப்படுவேன் என்ற நிச்சயத்தை எப்படிப் பெறுவது? அப்படிப்பட்ட நம்பிக்கை எனக்கு இருக்குமானால் நான் பின்வாங்காமல் உதவி செய்பவர்களின் துணையுடன், பாதை எப்படிப்பட்டதாக இருந்தாலும் பயணம் புறப்பட்டு விடுவேன்!" என்றாள் இரக்கம்.

"அப்படியானால் நீ ஒன்று செய், குறுகிய வாசல் கதவுவரை எங்களுடன் வா. அங்கே உன் காரியத்தைப்பற்றி நிச்சயத்துடன் அறிந்துகொள்ளலாம். அங்கேயே நீ ஊக்கத்தைப் பெறாவிட்டால் உன்னுடைய இடத்துக்கே திரும்பிப்போய்விடலாம். அதுவரை என்னுடனும், என் பிள்ளைகளுடனும் நீ கருணையோடு வந்ததற்கான ஊதியத்தையும் நான் கொடுத்து விடுகிறேன்" என்றாள் கிறிஸ்தினாள்.

"அப்படியானால் என்ன நடந்தாலும் சரி, நான் உன்னுடன் வருகிறேன். அங்கே என்ன நிகழப் போகிறதோ அதைப் பிறகு பார்த்துக்கொள்ளலாம். பரலோக இராஜா எனக்குக் காட்டுவார்" என்று கூறி அவளோடு சேர்ந்து நடந்தாள் இரக்கம்.

கிறிஸ்தீனாள் தன் இருதயத்தில் மகிழ்ச்சியடைந்தவளாக நடந்து சென்றாள். இரக்கம் அவளோடுகூட வருவது மட்டும் அவளுக்கு மகிழ்ச்சியைத் தரவில்லை; அந்த இளம்பெண் கொஞ்சமாவது தன் மீட்பைப்பற்றி அக்கறை கொண்டிருக்கிறாளே என்று எண்ணியும் அவள் மகிழ்ச்சியடைந்தாள்.

அவர்கள் நடந்துசென்று கொண்டிருந்தபோது திடீரென்று இரக்கம் ஏங்கி அழத் தொடங்கினாள்.

"ஏனம்மா அழுகிறாய்?" என்று அன்போடு கேட்டாள் கிறிஸ்தீனாள்.

“ஐயோ! என் உறவினர்களின் நிலையை எண்ணித்தான் நான் கண்ணீர் வடிக்கிறேன். அவர்கள் இன்னும் அந்தப் பாவம் படிந்த பட்டணத்திலேயே இருக்கிறார்களே! என்ன நடக்கப் போகிறது. அவர்கள் என்ன செய்யவேண்டும் என்பதை அவர்களுக்குக் கூற யாருமே இல்லையே!” என்று கண்ணீர் வடித்தாள்.

“நீ இப்போது உன் உறவினர்களுக்காக ஏங்கிக் கண்ணீர் வடிப்பதுபோலத்தான் என் கணவர் எங்களுக்காக அழுது புலம்பினார். நான் அவரது பேச்சைக் கேட்கவில்லையே என்று அவர் கண்ணீர்விட்டார். நான் அவரது பேச்சுக்குச் செவிசாய்க்கவில்லை. ஆனால் அவருக்கும் நமக்கும் ஆண்டவர் அந்தக் கண்ணீரையெல்லாம் தமது துருத்தியில் அடைத்து வைத்துவிட்டார். இப்போது நானும், நீயும் என் பிள்ளைகளும் அதன் பலனை அனுபவிக்கிறோம். உனது கண்ணீரும் வீணாகப்போகாது என்றுதான் நான் நம்புகிறேன். ‘கண்ணீரோடே விதைக்கிறவர்கள் கெம்பீரத்தோடே அறுப்பார்கள்’ என்றும், ‘அள்ளித் தூவும் விதையைச் சுமக்கிறவன் அழுதுகொண்டு போகிறான்; ஆனாலும் தான் அறுத்த அரிகளைச் சுமந்து கொண்டு கெம்பீரத்தோடே திரும்பி வருவான்’ *(சங். 126:5, 6)* என்றும் வேதாகமத்தில் கூறப்பட்டுள்ளது அல்லவா?” என்று கூறினாள் கிறிஸ்தீனாள்.

மனம் அமைதி பெற்ற இரக்கம்.

“ஆசீர்வதிக்கப்பட்டவரே
　　என் வழிகாட்டி!
வாசலைத் தாண்டி
　　அவரது நகரை எட்டுவது
அவர்தம் சித்தமானால்
　　எனக்கு வழிகாட்டுவாரே!
அவரது கிருபையையும்
　　பரிசுத்த வழியையும்விட்டு
நான் விலகாமலும்
　　திரும்பாமலும் செல்ல
அவர்தம் கருணையால்
　　என்னை வழிநடத்துவாரே!
இதோ நான் விட்டுச் செல்லும்
　　இவர்களையும் சேர்ப்பீரே!
இவர்களுக்காய் ஜெபிக்கிறேன்
　　நான் ஆண்டவரே!
முழு மனதோடும் முழு இருதயத்தோடும்
　　உம்மை ஏற்றுக்கொள்ளட்டும்!”

என்று பாடினாள்.

6. பயணிகள் நம்பிக்கையிழப்பு என்ற உளைக்கு வந்துசேருதல்

கிறிஸ்தீனாளின் வரலாற்றை எனக்குச் சொல்லிக் கொண்டிருந்த அந்த முதிய நண்பர் தொடர்ந்து கூறினார்.

கிறிஸ்தீனாள் நம்பிக்கையின்மை என்ற உளைக்கு அருகே வந்தவுடன் அப்படியே திகைத்துப் போய் நின்றுவிட்டாள்!

"இங்குதானே என் கணவர் சேற்றில் சிக்கித் தவித்தார்!" என்று கூறிய அவள் சற்றுநேரம் கண் கலங்கியபடி நின்று கொண்டிருந்தாள்.

இந்த உளை பயணிகளுக்கு இடையூறாக இருக்கக்கூடாது. அதை மண்மூடிச் சரியாக்க வேண்டும் என்று இராஜா கட்டளையிட்டிருந்த போதிலும், அந்த உளை முன்பைவிட மிகவும் மோசமான நிலையில்தான் இருந்தது!

உடனே நான் அந்த முதியவரிடம், "என்ன ஐயா, நீங்கள் கூறுவது உண்மைதானா?" என்று கேட்டேன்.

"ஆமாம் தம்பி, இராஜாவின் ஊழியக்காரர் என்று சொல்லிக் கொள்ளும் அநேகர் இந்த உளையைச் சரி செய்வதற்காக கற்களையும் மணலையும் கொண்டுவந்து, கொட்டுவதற்குப் பதிலாக, குப்பைகளைக் கொண்டுவந்து கொட்டி இன்னும் அதிகமாகச் சேறாக்கிவிட்டார்கள்!" என்றார் அந்த முதியவர்.

கிறிஸ்தீனாளும் அவள் பிள்ளைகளும் தயங்கி நிற்பதைக் கண்ட இரக்கம்.

"வாருங்கள், துணிந்து நாம் முன்செல்வோம்" என்று அவர்களை அழைத்தாள்.

சேற்றுக்கு நடுவேயிருந்த நடைக் கற்களில் கவனமாகக் கால் வைத்து உளையைக் கடந்து சென்றார்கள்.

கிறிஸ்தீனாள் ஓரிரு முறை தடுமாறி சேற்றில் விழப் பார்த்தாள்! என்றாலும் அனைவரும் பாதுகாப்போடு அக்கரை சேர்ந்தார்கள்.

அப்போது, "விசுவாசித்தவளே பாக்கியவதி. கர்த்தராலே அவளுக்குச் சொல்லப்பட்டவைகள் நிறைவேறும்" *(லூக்கா 1:45)* என்று கூறப்படுவதுபோல உணர்ந்தார்கள்.

அனைவரும் குறுகியவாசல் கதவை நோக்கி வேகமாக விரைந்தார்கள்.

---

1. ஊழியக்காரர் என்று சொல்லிக் கொள்பவர்களின் தவறான, உலகப்பிரகாரமான போதனைகளை இது குறிக்கிறது.

"அம்மா அங்கே ஏற்றுக்கொள்ளப்படுவோம் என்று நீ பெற்றிருக்கிற நம்பிக்கையைப்போல நானும் பெற்றிருப்பே னென்றால் இந்த உளையைவிடப் பெரிய உளை கூட எனக்கு இடையூறாக இராது" என்று கூறினாள் இரக்கம்.

"சரிதான், உன் கவலையை நீ அறிவாய், என் கவலையை நான் அறிவேன். நாம் நமது பயணத்தின் முடிவை எட்டுவதற்குள் எத்தனையோ தீங்குகளைச் சந்திக்க வேண்டியிருக்கும். நாம் எத்தகைய மேலான மகிமையையும், மகிழ்ச்சியையும் அடையப்போகிறோமோ என்று பலர் பொறாமைப்படும் அதே வேளையில், நம்மைப் பகைக்கும் எதிரிகள் நம் வழியில் கண்ணிகளையும் பயங்கரங்களையும் வைத்து நம்மைச் சோர்வடையச் செய்வார்கள் அல்லவா?" என்றாள் கிறிஸ்தீனாள்.

இதுவரை கிறிஸ்தீனாளைப் பற்றிச் சொல்லிவந்த முதியவர் நானே என் கனவின்மூலம் அதை தொடர்ந்து காணும்படி விட்டுச் சென்றுவிட்டார்.

7. குறுகிய வாசலை நெருங்கிச் சேருதல்

நான் என் கனவில் கிறிஸ்தீனாளும், அவள் பிள்ளைகளும், இரக்கமும் குறுகிய வாசலை நெருங்கிச் சேருவதைக் கண்டேன்.

அவர்கள் தங்களுக்குள்ளே யாரைக் கூப்பிடுவது, என்ன பதில் கூறுவது என்று விவாதித்துக் கொண்டார்கள்.

கிறிஸ்தீனாள் வயதில் பெரியவளாக இருக்கிறபடியால் அவளே கதவைத் தட்ட வேண்டுமென்று முடிவு செய்தார்கள். அவளே மற்றவர்களுக்காகப் பேசவேண்டுமென்றும் தீர்மானித்தார்கள்.

தன் கணவன் அந்தக் கதவைத் தட்டியதுபோலவே கிறிஸ்தீனாளும் மறுபடியும், மறுபடியுமாக அந்தக் கதவைத் தட்டினாள்.

பதில் ஒன்றும் கிடைக்கவில்லை! ஆனால் ஒரு நாய் குரைத்தபடியே அவர்கள்மீது பாய்வதற்காக ஓடிவருவதுபோல சத்தம் கேட்டது.

கிறிஸ்தீனாளும், இரக்கமும், பிள்ளைகளும் பயந்து போய் அப்படியே நின்றுவிட்டார்கள். கதவைத் தட்டினால் நாய் பாய்ந்து வந்துவிடுமோ என்ற பயத்தில் அசைவின்றி நின்றுகொண்டிருந்தார்கள்.

கதவை மறுபடியும் தட்டலாமென்றால் நாயைப் பற்றிய பயம்! திரும்பிச் செல்லலாமென்றால் வாயில் காப்பவர்

அவர்கள் திரும்புவதைக் கண்டு கோபப்படுவாரோ என்ற அச்சம்!

சற்று நேரம் ஒன்றும் புரியாமல் நின்றுகொண்டிருந்தார்கள். பிறகு கதவைப் படபடவென்று தட்டினார்கள்.

கதவைத் திறந்த வாயில் காப்போன், "யார், அங்கே?" என்று கேட்டார். நாய் குரைப்பதை நிறுத்திக்கொண்டது.

தலைகுனிந்து வணங்கிய கிறிஸ்தீனாள், "ஐயா, உங்கள் கதவைத் தட்டிய எங்கள்மீது கோபப்படாமல் இருப்பீராக!" என்று பணிவுடன் கேட்டுக்கொண்டாள்.

"நீங்கள் எங்கேயிருந்து வருகிறீர்கள்? உங்களுக்கு என்ன வேண்டும்?" என்று கேட்டார் வாயில்காப்போன்.

"கிறிஸ்தியான் வந்த இடத்திலிருந்து, அவர் வந்த நோக்கத்துக்காகவே நாங்களும் வந்துள்ளோம். உங்களுக்கு விருப்பமானால், பரலோகத்துக்குச் செல்லும் பாதையில் நாங்கள் செல்லும்படி கிருபையாய் வழிவிடும்படி கேட்டுக்கொள்கிறேன்" என்று கூறிய கிறிஸ்தீனாள், "என் பெயர் கிறிஸ்தீனாள் இப்போது பரலோக பாக்கியத்தைப் பெற்றுள்ள கிறிஸ்தியானின் மனைவியாக இருந்தவள்" என்று தன்னைத்தானே அறிமுகம் செய்து கொண்டாள்.

"யார் நீயா?" முன்பு மோட்சப் பயணத்தை வெறுத்து அவதூறாகப் பேசிய நீயும் இப்போது பயணம் புறப்பட்டு விட்டாயா?" என்று வியப்புடன் கேட்டார் வாயில் காப்போன்.

"ஆம் ஐயா, என் பிள்ளைகளும்கூட என்னுடன் பயணம் புறப்பட்டு வந்துள்ளார்கள்" என்று பணிவுடன் கூறினாள் கிறிஸ்தீனாள்.

அப்போது வாயில்காப்போன் அவளைக் கரம்பிடித்து உள்ளே அழைத்துச் சென்றார். "சிறு பிள்ளைகள் என்னிடத்தில் வருகிறதற்காக தடை பண்ணாதீர்கள்" என்று கூறியபடியே கிறிஸ்தீனாளின் பிள்ளைகளையும் உள்ளே அழைத்துக் கொண்டார். கதவு அடைக்கப்பட்டது.

கதவுக்கு மேற்கூறையிலிருந்த எக்காளக்காரனிடம் "கிறிஸ்தீனாளை எக்காள தொனியோடும் மகிழ்ச்சியோடும் வரவேற்க வேண்டும்" என்று கட்டளையிட்டார்.

எக்காளத்தின் தொனி காற்றில் இனிமையாகப் பரவியது.

இதுவரை கண்ணீர் வடித்தவளாக இரக்கம் வெளியிலேயே நின்றுகொண்டிருந்தாள். அவளைப் புறக்கணித்து விட்டார்களோ என்ற பயம் அவளைக் கவ்விக் கொண்டது.

ஆனால் கிறிஸ்தீனாள் அவளை மறந்துவிடவில்லை. தானும் பிள்ளைகளும் உள்ளே சென்றவுடன் அவள் இரக்கத்திற்காகப் பரிந்து பேசத் துவங்கினாள்.

"என் ஆண்டவரே, நான் வந்த அதே நோக்கத்துடன் எனக்குத் துணையாக வந்த ஒரு பெண் வெளியிலேயே நிற்கிறாள். தான் அழைக்கப்படாமல் வருகிறோமே என்ற அச்சத்தில் அவள் ஏற்கெனவே சோர்ந்து போயிருக்கிறாள். என்னையோ என் கணவரின் இராஜா வரும்படி அழைத்திருக்கிறாரே!" என்றாள் கிறிஸ்தீனாள்.

இதற்குள் இரக்கம் பொறுமையிழந்தவளாக தவித்தாள்; ஒவ்வொரு மணித்துளியும் ஒரு மணி நேரம்போல அவளுக்குத் தோன்றிற்று. கிறிஸ்தீனாள் தனக்காகப் பரிந்து பேசி முடிப்பதற்குள்ளாக அவள் கதவைத் தட்டத் துவங்கிவிட்டாள்.

அவள் கதவைப் பலமாக தட்டியவுடன் திடுக்கிட்ட கிறிஸ்தீனாள் தன் பேச்சைப் பாதியில் நிறுத்திவிட்டாள்.

"யார் அங்கே?" என்று கேட்டார் வாயில்காப்போன்.

"என் தோழிதான்" என்றாள் கிறிஸ்தீனாள்.

வாயில்காப்போன் கதவைத் திறந்து வெளியே எட்டிப் பார்த்தார். அங்கே இரக்கம் மயங்கிக் கீழே கிடந்தாள். கதவைத் திறக்க மாட்டார்களோ என்ற அச்சத்தில் அவள் மயங்கி விட்டிருந்தாள்.

அவளது கரத்தை மென்மையாகப் பற்றிய வாயில்காப்போன், "பெண்ணே, எழுந்திரு!" என்று கட்டளையிட்டார்.

மயக்கம் தெளிந்தபின்னரும் இரக்கத்தால் எழுந்து வரமுடியவில்லை.

"ஐயா, நடப்பதற்கே என் உடலில் உயிர் இல்லை!" என்று சோர்வுடன் கூறினாள் அவள்.

"கலங்காதே பெண்ணே! 'என் ஆத்துமா என்னில் தொய்ந்து போகையில் கர்த்தரை நினைத்தேன்; அப்பொழுது என் விண்ணப்பம் உமது பரிசுத்த ஆலயத்திலே உம்மிடம் வந்து சேர்ந்தது' *(யோவான் 2:7)* என்று யோனா என்ற பக்தன் கூறியதை மறந்துவிட்டாயா? எனவே பயப்படாமல் எழுந்து நில். நீ வந்த காரியத்தை என்னிடம் சொல்" என்று கட்டளையிட்டார் வாயில்காப்போன்.

"என் தோழி கிறிஸ்தீனாளோ அழைக்கப்பட்டவளாக இந்த இடத்துக்கு வந்திருக்கிறாள். அவள் இராஜாவிடமிருந்து அழைப்பைப் பெற்றிருக்கிறாள். ஆனால் நானோ அவள் அழைப்பின்பேரில்தான் இங்கே வந்திருக்கிறேன். பயத்தின் காரணமாகவே உள்ளே நுழையத்தயங்குகிறேன்'' என்று கூறினாள் இரக்கம்.

"அவள்தான் நீ இந்த இடத்துக்குவர வேண்டுமென்று உன்னை விரும்பி அழைத்தாளா?" என்று கேட்டார் வாயில்காப்போன்.

"ஆம் ஆண்டவரே, அதனால்தான் நான் வந்துள்ளேன். எனக்குக் கிருபையும், பாவமன்னிப்பும் அளிக்கப்படக் கூடுமானால் தயவு செய்து எனக்கு அதை அருளுமாறு தாழ்மையுடன் கேட்டுக்கொள்கிறேன்'' என்று கெஞ்சினாள் இரக்கம்.

அவர் அவளைக் கரம்பிடித்து உள்ளே அழைத்து வந்தார்.

"யாருடைய அழைப்பினால் ஒருவர் இங்கு வந்தாலும் என்னை விசுவாசிக்கும் ஒவ்வொருவருக்காகவும் நான் வேண்டிக் கொள்கிறேன்'' என்று கூறிய அவர், அருகில் நின்றிருந்தவர் களிடம், "இவள் மயக்கத்திலிருந்து முழு நினைவையும் பெறும்படி, நுகரக்கூடிய ஏதேனும் ஒன்றை கொண்டுவாருங்கள்'' என்று கட்டளையிட்டார்.

அவர்கள் மருக்கொழுந்துக் கொத்து ஒன்றைக் கொண்டுவந்து இரக்கத்திடம் கொடுத்தார்கள். அவள் அதை முகர்ந்து பார்த்து சோர்வு நீங்கியவராக எழுந்து அமர்ந்தாள்.

இவ்வாறு கிறிஸ்தீனாள், அவளது பிள்ளைகள், இரக்கம் இவர்கள் குறுகிய வாசலின் ஆண்டவரால் ஏற்றுக்கொள்ளப் பட்டார்கள். அவர் அவர்களிடம் அன்பான வார்த்தைகளைப் பேசினார்.

"நாங்கள் எங்கள் பாவங்களுக்காக மெய்மனஸ்தாபப் படுகிறோம். உங்கள் மன்னிப்புக்காகக் கெஞ்சுகிறோம். நாங்கள் என்ன செய்ய வேண்டுமென்பதற்காக உமது ஆலோசனையை வேண்டுகிறோம்'', என்று பயணிகள் கேட்டுக் கொண்டார்கள்.

"வார்த்தைகள்மூலமாகவும், செயல்மூலமாகவும், உங்களுக்கு நான் மன்னிப்பை அருளுகிறேன். மன்னிப்பைப் பற்றிய வாக்குத் தத்தங்களையே நான் வார்த்தை என்று கூறுகிறேன். அந்த மன்னிப்பைப் பெறுவதற்காக நான் செய்த கிரியையின் மூலமாகவும் நான் மன்னிப்பை அருளுகிறேன். முதலாவதாக எனது வாயின் முத்தங்களால் (உன். 1:2) ஏற்றுக்கொள்ளுங்கள்.

இரண்டாவதாக உங்களுக்கு வெளிப்படுத்தின பிரகாரம் *(யோவான் 20:20)* அறிந்துகொள்ளுங்கள்" என்று கூறினார் அவர்.

அவர்களை மகிழ்ச்சியடையச் செய்யும்படியாக அவர் அநேக அன்பான வார்த்தைகளைப் பேசுவதையும் நான் என் கனவில் கண்டேன். அவர்களை வாயிலின் மேற்பாகத்தில் ஏறிவரச் செய்து, அவர்கள் மீட்பைப் பெறும்படி செய்த கிரியையைக் காட்டினார்கள்; அவர்கள் பயணமாகச் செல்லும்போது அவர்களுக்கு ஆறுதலளிக்கும்படி அடிக்கடி இந்தக் காட்சியைக் காண்பார்கள் என்றும் கூறினாள்.

பயணிகள் சற்றுநேரம் ஓய்வெடுக்கும்படி அவர் அவர்களை ஒரு வசந்த மண்டபத்தில் விட்டுவிட்டுச் சென்றார். அவர்கள் தங்களுக்குள் பேசத் துவங்கினார்கள்.

"நாம் இங்கே வர முடிந்தது எனக்கு எவ்வளவு மகிழ்ச்சியைத் தருகிறது தெரியுமா?" என்று கூறினாள் கிறிஸ்தீனாள்.

"உன்னைவிட நான் அதிக மகிழ்ச்சியடைய எனக்கு அதிக காரணங்கள் இருக்கின்றன" என்றாள் இரக்கம்.

"வாசலில் நின்று தட்டியபோது ஒருவருமே பதில் கொடுக்க வில்லை என்றவுடன் அதுவரை பட்டபாடெல்லாம் வீணாகிவிடுமோ என்று நான் ஒரு கணம் பயப்பட்டேன். அதுமட்டுமா? அந்த நாய்வேறு பயங்கரமாகக் குரைத்துக் கொண்டிருக்கிறது!" என்றாள் கிறிஸ்தீனாள்.

"உன்னை அவர்கள் உள்ளே அழைத்துக் கொண்டு என்னை வெளியே நிற்கும்படி விட்டுவிட்டார்களே, அப்போது நான் அனுபவித்த பய உணர்வைப்போல இதுவரை நான் என்றுமே அனுபவித்ததில்லை. 'இரண்டு ஸ்திரீகள் ஏந்திரம் அரைத்துக் கொண்டு இருப்பார்கள், ஒருத்தி ஏற்றுக்கொள்ளப்படுவாள், ஒருத்தி கைவிடப்படுவாள்' என்று வசனம் கூறுவதுபோல நான் கைவிடப்பட்டுவிட்டேனோ என்று அழுது கலங்கினேன். மறுபடியும் கதவைத் தட்ட ஊக்கமிழந்து நின்றேன். அப்போது வாசலின் மேல் எழுதப்பட்டிருப்பதைப் படித்து மனத்துணிவைப் பெற்றேன். மறுபடியும் தட்டாவிட்டால் நான் ஒருவேளை ஏமாற்றத்தால் மரித்துவிடுவேன் என்றும் தோன்றியது. எனது ஆவி மரணத்துக்கும், ஜீவனுக்குமிடையில் அலைக்கழிக்கப் பட்டிருந்தபடியால் எப்படி மறுபடியும் தட்டினேன் என்பதே எனக்குத் தெரியாது" என்று கூறினாள் இரக்கம்.

"எப்படி கதவைத் தட்டினாய் என்றே உன்னால் கூற முடியவில்லையா? ஆனால் நீ உருக்கமாகவே கதவைத்

தட்டியிருக்கிறாய். அந்தச் சத்தத்தைக் கேட்டு உண்மையிலேயே நான் திடுக்கிட்டுவிட்டேன். என் வாழ்க்கையிலேயே இப்படி ஒரு சத்தத்தை நான் கேட்கவில்லை என்றுதான் கூற வேண்டும். நீ பலவந்தமாக கதவை உடைக்கிறாய் என்றுதான் நான் நினைத்தேன்" என்று புன்சிரிப்புடன் கூறினாள் கிறிஸ்தீனாள்.

'என்னைப்போன்ற பரிதாபகரமான நிலையில் இருந்த ஒரு பெண்ணால் வேறென்ன செய்ய முடியும்? கதவு அடைக்கப் பட்டுவிட்டது. கொடூரமான நாய்வேறு கத்திக் கொண்டிருந்தது! என்னைப்போன்ற பயந்த சுபாவமுள்ள ஒரு பெண் தன் முழு பலத்தோடும் கதவைத் தட்டாமல் இருக்க முடியுமா? ஆனால் நான் இவ்வாறு முரட்டுத்தனமாக நடந்துகொண்டதைக் குறித்து ஆண்டவர் ஏதாவது கூறினாரா? என்மீது கோபப்பட்டாரா?" என்று ஆர்வத்துடன் கேட்டாள் இரக்கம்.

"நீ கதவைத் தட்டி பலத்த சத்தத்தை எழுப்பியபோது அவர் அதை ஒரு குற்றமாக எண்ணாமல் புன்னகை செய்தார். நீ செய்தகாரியம் அவருக்குப் பிரியமாயிருந்தது என்றே நான் நினைக்கிறேன். ஆனாலும் அப்படியொரு பயங்கரமான ஒரு நாயை அவர்கள் ஏன் வளர்க்கிறார்கள் என்றுதான் எனக்குத் தெரியவில்லை. இப்படியொரு நாய் இங்கே இருக்கிறது என்று தெரிந்திருந்தால் நான் பயத்தால் ஒருவேளை பயணம் புறப்படாமலே இருந்திருப்பேனோ என்னமோ தெரியவில்லை! ஆனால் இப்போது நாம் அனைவருமே உள்ளே இருக்கிறோமே! அது போதும்! நான் உண்மையிலேயே மகிழ்ச்சி அடைகிறேன்" என்றாள் கிறிஸ்தீனாள் நிம்மதிப் பெருமூச்சுடன்.

"மறுபடியும் அவர் வரும்போது, அவர் ஏன் இப்படி பயங்கரமான ஒரு நாயை வளர்த்து வருகிறார் என்று அவரிடம் கேட்பேன். அவர் தவறாக எடுத்துக்கொள்ள மாட்டாரென்று நினைக்கிறேன்" என்றாள் இரக்கம்.

"அது சரிதான், அப்படியே கேள் அக்கா. அந்த நாயைக் கொன்றுபோட்டாலும் நல்லதுதான். மறுபடியும் நாம் வெளியே போகும்போது கடித்துவிடுமோ என்று பயமாக இருக்கிறது" என்றார்கள் பிள்ளைகள்.

மறுபடியும் அவர்களைப் பார்க்கும்படி அவர் கீழிறங்கி வந்தார்.

இரக்கம் முகம் கீழேபட தரையில் விழுந்து அவரை வணங்கினாள். "ஆண்டவரே, எனது உதடுகளால் உமக்களிக்கும் துதிகளின் பலியை ஏற்றுக்கொள்ள வேண்டுமென்று கெஞ்சுகிறேன்" என்றும் கூறினாள்.

“உனக்குச் சமாதானம் உண்டாகட்டும். எழுந்திரு!” என்று அவளை ஆசீர்வதித்தார் ஆண்டவர்.

ஆனால் அவளோ எழவில்லை.

‘‘ஆண்டவரே, நீதியுள்ள உம்மிடம் நான் ஒரு வேண்டுகோளை விடுக்க விரும்புகிறேன். உம்முடைய நியாயங்களைக் குறித்து உம்மோடே நான் பேசும்படி வேண்டுகிறேன் (எரேமியா 12:1) தயவுசெய்து எனது பேச்சுக்குச் செவிசாய்க்கும்படி கேட்டுக்கொள்கிறேன். இந்த இடத்துக்கு வரும் பெண்களும், பிள்ளைகளும் பயத்தால் திரும்பி ஓடும்படி ஏன் இவ்வளவு பயங்கரமான ஒரு நாயை வைத்திருக்கிறீர்கள்?” என்று பணிவுடன் கேட்டாள் இரக்கம்.

“அந்த நாய்க்குச் சொந்தக்காரன் வேறு ஒருவன்தான். நாயும் அவனுடைய இடத்தில்தான் இருக்கிறது. பக்கத்து நிலத்துக்குச் சொந்தக்காரனான அவன் நாயை எல்லையோரத்தில் கட்டி வைத்திருக்கிறான். அந்த நாய் இந்தக் குறுகிய வாசல் மதில் சுவர்வரை வந்து, இங்கே வருபவர்களைப் பார்த்துக் குரைக்கிறது. இதனால் எத்தனையோ பயணிகள் பயந்து போயிருக்கிறார்கள். அவர்களை இங்கே வரவிடாமல் செய்து, பயமுறுத்தித் திருப்பி அனுப்பிவிட வேண்டுமென்பதே அந்த நாயின் சொந்தக் காரனுடைய நோக்கமாக இருக்கிறது. சில வேளைகளில் அந்த நாய் தனது கட்டுகளை அறுத்துக் கொண்டு ஓடிவந்து, நான் அன்பாய் நேசிக்கிற பயணிகளைத் துன்புறுத்தியதும் உண்டு. ஆனாலும் தற்போது நான் அனைத்தையும் பொறுமையாகச் சகித்துக்கொள்கிறேன். அந்த நாய் அவர்களை வீழ்த்திவிடாதபடி, நான் எனது பயணிகளைக் காப்பாற்றுகிறேன். என்னால் கிரயத்துக்கு வாங்கப்பட்டுள்ள பெண்ணே! இதைப்பற்றி நீ முன்னரே அறிந்திருந்தால் அந்த நாயைக் குறித்து இவ்வளவு தூரம் பயப்பட்டிருக்கமாட்டாய் அல்லவா? வீடுவீடாகச் சென்று பிச்சை கேட்பவர்கள்தான் ஒரு வீட்டிலுள்ள நாய் தங்களைப் பார்த்துக் குறைப்பதைக் கண்டு எங்கே இது தங்களைக் கடித்து விடுமோ என்று பயந்து ஓடுகிறார்கள். என்னைத் தேடி வரும் எவரையும், ஓர் அந்நிய வீட்டிலுள்ள நாய் வரவிடாமல் தடுப்பதற்கு நான் இடம் கொடுப்பேனா? இத்தகைய எதிரியின் சோதனைகளுக்கு நீ அஞ்சலாமா? சிங்கத்தின் வாயிலிருந்தே என் அன்பர்களைக் காப்பாற்ற நான் வல்லமையுடையவன் என்பதை மறந்துவிட்டாயா?’’ என்று அவளை மென்மையாகக் கடிந்துகொண்டார் ஆண்டவர்.

“எனது அறியாமையினால் நான் புரிந்துகொள்ளாத ஒன்றைப் பற்றிப் பேசியதற்காக என்னை மன்னிக்கும்படி வேண்டுகிறேன்;

நீர் அனைத்தையும் நன்மையாகச் செய்து முடிப்பவர் என்பதை ஏற்றுக்கொள்கிறேன்'' என்று அறிக்கையிட்டாள் இரக்கம்.

அப்போது கிறிஸ்தீனாள் தங்கள் பயணத்தையும், செல்லும் வழியையும் பற்றி அவரிடம் கேட்கத் துவங்கினாள்.

அவர் அவளது கணவனுக்குச் செய்ததுபோலவே, அவர்களுக்கு உணவளித்தார்; அவர்களது கால்களைக் கழுவினார்; தமது அடிச்சுவட்டின் வழியில் அவர்கள் செல்லும்படி வழிநடத்தினார்.

அவர்கள் தங்கள் வழியே பயணத்தைத் தொடருவதை என் கனவில் கண்டேன்.

பயணத்தின் களைப்பைப் போக்கும்படி இனிமையான காற்று வீசிக்கொண்டிருந்தது.

அப்போது கிறிஸ்தீனாள் பாடத் துவங்கினாள்:

“நான் பயணம் புறப்பட்ட நாளும்
என்னை பயணம் புறப்பட ஏவியவரும்
வாழ்க, வாழ்கவே!
நித்திய வாழ்வு வாழ ஆசைப்பட்டேன்
இன்றோ அதைத் தேடி நாடிஓடுகிறேன்
தாமதம் இல்லேயே!
கண்ணீர் இன்பமாய், பயம் விசுவாசமாய் மாற
பின்னாளின் வெற்றி இன்றே
உறுதியாய் தெரிகிறதே!''

என்று பாடியபடியே அவள் தன் பிள்ளைகளையும் இரக்கத்தையும் அழைத்துக்கொண்டு சென்றாள்.

8. குறுகிய வழியில் பயணம்

கிறிஸ்தீனாளும் அவளைச் சேர்ந்தவர்களும் சென்று கொண்டிருந்த குறுகிய வழிப்பாதையின் மதில் சுவருக்கு மறுபக்கம் ஏற்கெனவே அவர்களைப் பயமுறுத்திய நாயின் சொந்தக்காரனுடைய நிலம் இருந்தது. அதைச் சுற்றி ஓர் அழகிய் தோட்டமும் காணப்பட்டது. அங்கே வளர்ந்திருந்த பழ மரங்களின் சில கிளைகள் பாதையின் மேலாக நீண்டு வந்திருந்தன. கண்ணைப் பறிக்கும் அழகான பழங்கள் அந்தக் கிளைகளில் பழுத்துத் தொங்கின. தங்கள் கண்களின் இச்சையால் அவ்வழியே செல்லும் பயணிகள் சிலர் இந்தப் பழங்களைப் பறித்துத் தின்று ஆபத்தில் சிக்கிக் கொள்வதுண்டு!

கிறிஸ்தீனாளின் பிள்ளைகள் மற்ற சிறுகுழந்தைகளைப் போலவே அந்தப் பழங்களைக் கண்டு ஆசை கொண்டார்கள். பழங்களைப் பறித்துத் தின்னவும் துவங்கிவிட்டார்கள்.

கிறிஸ்தீனாள் அவர்களைக் கண்டித்தபோதிலும், அவர்களோ அதற்குச் செவிசாய்க்கவில்லை. எளிதாகப் பறிக்கக்கூடியதாகவும், இனிமையாகவும், தகாத இன்பங்களைப்போலக் காணப்பட்ட அந்தப் பழங்களைப் பறித்துத் தின்றபடியே நடந்து சென்றார்கள்.

"பிள்ளைகளே, அந்தப் பழங்கள் நம்முடையவை அல்லவே! மற்றவர்களுடைய பொருளுக்கு ஆசைப்படுவது தவறல்லவா?" என்று எச்சரித்தாள் கிறிஸ்தீனாள். அந்தப் பழங்கள் அவளுடைய ஆண்டவரின் விரோதிக்குச் சொந்தமானவை என்பதை அவள் அறிந்திருந்தால், அதனால் தனது பிள்ளைகளுக்கு ஏற்படவிருக்கும் தீங்கை எண்ணிப் பயத்தால் அங்கேயே மரித்துப் போயிருப்பாள் என்று நான் நினைக்கிறேன்.

ஆனால் ஆபத்து ஏதுமின்றி அந்த இடத்தைக் கடந்து சென்றுவிட்டார்கள்.

அவர்கள் குறுகியவாசலிலிருந்து இரண்டு அம்புவிடும் தொலைவுக்குச் சென்றபோது, தங்களுக்கு எதிராக இரண்டு தீய உருவங்கள் வருவதைக் கண்டார்கள்.

உடனே கிறிஸ்தீனாளும், இரக்கமும் முந்தானையால் தங்கள் முகத்தை மூடிக்கொண்டார்கள். அவர்களுக்கு முன்னால் பிள்ளைகள் நடந்து சென்றார்கள்.

அந்தத் தீய உருவங்கள் பெண்கள் இருவரையும் அரவணைத்துக் கொள்வதுபோல அருகே நெருங்கினார்கள்.

உடனே கிறிஸ்தீனாள் "தள்ளி நில்லுங்கள். அல்லது உங்கள் வழியே செல்லுங்கள்" என்று அவர்களை அதட்டினாள்.

அவர்களோ . காதுகேளாத மனிதரைப்போல மறுபடியும் நெருங்கி வந்தார்கள்.

கோபம் கொண்ட கிறிஸ்தீனாள் கால்களால் அவர்களை உதைத்தாள். இரக்கமும் தன்னால் முடிந்தமட்டும் அவர்களை விலக்க முயன்றாள்.

"விலகிப் போங்கள். நாங்கள் மோட்சப் பயணிகளாக இருக்கிறபடியால் எங்களிடம் பணம் ஏதுமில்லை. நண்பர்களின் தயாள உதவியினாலேயே வாழ்கிறோம்" என்று கடினமான குரலில் கூறினாள் கிறிஸ்தீனாள்.

"நாங்கள் பணத்துக்காக உங்களைத் தாக்க வரவில்லை. நாங்கள் கேட்கும் ஒரு சிறு வேண்டுகோளுக்கு நீங்கள்

செவிசாய்த்தால் ஒன்றும் செய்யாமல் விட்டுவிடுவோம்'' என்றான் தீயவர்களில் ஒருவன்.

''நீங்கள் கேட்கப்போவதற்கு நாங்கள் செவிசாய்க்கப் போவதில்லை. அதைச் சட்டைசெய்யவும் போவதில்லை. அதற்கு இணங்கவும் மாட்டோம். நாங்கள் துரிதமாகப் பயணம் செய்யவேண்டியிருக்கிறது. வாழ்வா அல்லது மரணமா என்பதே எங்கள் அவசரமான போராட்டமாக இருக்கிறது'' என்றாள் கிறிஸ்தீனாள்.

பயணிகள் அவர்களைத் தாண்டி முன்னால் செல்ல முயன்றார்கள். தீய உருவங்களோ மறுபடியும் அவர்களை வழிமறித்தார்கள்.

"உங்கள் உயிரைப் பறிப்பது எங்கள் நோக்கமல்ல! வேறொரு காரியத்துக்காகவே வந்துள்ளோம்" என்றான் அந்தத் தீயவன்.

"சரீரத்தையும், ஆத்துமாவையும் கொள்ளை கொள்ளவே நீங்கள் வந்திருக்கிறீர்கள் என்பதை நானறிவேன். எங்களைத் தீங்குக்கு உள்ளாக்கிக் கொள்வதைவிட இந்த இடத்திலேயே மரித்துப் போகவும் சித்தமாயுள்ளோம்" என்று மன உறுதியுடன் கூறினாள் கிறிஸ்தீனாள்.

அவர்கள் இருவரும் "கொலை, கொலை" என்று கத்தியபடி பெண்களின் பாதுகாப்புக்காகக் கொடுக்கப்பட்டுள்ள பிரமாணங்களுக்குத் (உபா. 22:23-27) தங்களைக் கீழ்ப்படுத்திக் கொண்டார்கள்.

அந்தத் தீய மனிதர்களோ அவர்களை விட்டுவிடுவதாக இல்லை! எனவே பெண்கள் மறுபடியும் உரத்த சத்தமாய் அபயக் குரல் எழுப்பினார்கள்.

அவர்களை குறுகிய வாசலைவிட்டு இன்னும் அதிகத் தொலைவு சென்றிராதபடியால், அவர்களின் கூக்குரல் குறுகிய வாசலில் இருந்தவர்களின் காதுகளை எட்டியது.

அது கிறிஸ்தீனாள் குரல் என்பதை உணர்ந்த அவர்கள், அவளைப் பாதுகாக்கும்படி ஓடி வந்தார்கள்.

தீய மனிதர்கள் அவர்களை இழுத்துச் செல்ல முயலுவதைக் கண்டார்கள்!

பிள்ளைகள் பயத்தால் அழுது கதறிக் கொண்டிருந்தார்கள்.

இதைக் கண்ட குறுகிய வாசலைச் சேர்ந்தவர்கள், "நீங்கள் என்ன செய்கிறீர்கள்? எங்கள் ஆண்டவரின் பிள்ளைகளிடமா

அக்கிரமம் பண்ணுகிறீர்கள்?'' என்று கத்தியபடியே ஓடிவந்தார்கள்.

இதைக் கண்ட அந்தத் தீய மனிதர்கள் விரோதியின் கோட்டைச் சுவரில் ஏறி உள்ளே குதித்துவிட்டார்கள். அவர்களுக்கு பாதுகாப்பாக அந்தக் கொடூரமான நாய் குரைத்தபடியே வந்தது.

காப்பாற்றுவதற்காக வந்தவர் பெண்களின் அருகே வந்து, ''இப்போது எப்படியிருக்கிறீர்கள்?'' என்று அன்போடு விசாரித்தார்.

"உங்கள் பிரபுவுக்கு நாங்கள் நன்றி சொல்கிறோம். கொஞ்சம் பயந்துவிட்டோம். அவ்வளவுதான்! ஆனாலும் நீர் வராவிட்டால் அவர்கள் எங்களை மேற்கொண்டிருக்கக் கூடும். எங்களுக்கு உதவியாக வந்ததற்காக மிகவும் நன்றி!" என்று ஆறுதலடைந்த பெண்கள் இருவரும் கூறினார்கள்.

அவர்கள் பயத்தைத் தணியச் செய்யும்படி சற்று நேரம் அவர்களோடு பேசிக் கொண்டிருந்தார் அவர்.

"குறுகிய வாசலில் நீங்கள் உபசரிக்கப்பட்டபோது, நீங்கள் பலவீனமான பெண்கள் என்பதை உணர்ந்து, உங்களுக்கு ஒரு வழிகாட்டி வேண்டுமென்று கேட்பீர்களென்றே நினைத்தேன். அப்படியிருந்தால் இப்படியொரு ஆபத்து உங்களுக்கு வந்திருக்காது என்றே நான் நினைக்கிறேன். நீங்கள் கேட்டிருந்தால் ஆண்டவர் கண்டிப்பாக ஒரு வழிகாட்டியை உங்களுக்குக் கொடுத்திருப்பார்" என்றார் காப்பாற்ற வந்தவர்.

''அப்போதைய ஆசீர்வாதத்தை நினைத்து மகிழ்ச்சியில் ஆழ்ந்திருந்தபடியால் வரவிருக்கும் ஆபத்துக்களைப் பற்றி நாங்கள் மறந்தே போனோம். அதுமட்டுமா? அரசரின் அரண்மனைக்கு வெகு அருகிலேயே இத்தகைய தீயவர்கள் அலைந்து திரிவார்கள் என்று எவர்தான் எதிர்பார்த்திருக்க முடியும்? ஒரு வழிகாட்டியாக ஆண்டவரிடம் வேண்டியிருந்தால் அது எங்களுக்கு நலமாகத்தான் இருந்திருக்கும் என்றாலும் அப்படிப்பட்ட ஒருவர் எங்களுக்குத் தேவை என்பதை அறிந்த ஆண்டவர் தாமாகவே அப்படி ஒருவரை அனுப்பாததுதான் வியப்பாக இருக்கிறது" என்றாள் கிறிஸ்தீனாள்.

"வேண்டிக் கொள்ளப்படாத ஒரு சகாயத்தைச் செய்வது அவசியமில்லையே! இதனால் அதன் மதிப்பும் கூட குறைந்து போகிறது. ஒரு காரியத்தின் அவசியத்தை பற்றி ஒருவன் உணர்ந்த பிறகு, அவன் அதைப் பெற்றுக்கொண்டால் அவன் அதை மதிப்பதோடு அதன் பலனையும் அனுபவிப்பான். நமது

ஆண்டவர் தாமாகவே ஒரு வழிகாட்டியை அனுப்பியிருந்தால், இப்போது நீங்கள் புலம்புவதுபோல, அத்தகைய ஒரு வழிகாட்டியின் அவசியத்தை உணர்ந்திருக்கமாட்டீர்கள். நீங்கள் இன்னும் அதிக விழிப்புடன் இருக்கவேண்டுமென்பதற்காகவே இந்தக் காரியங்கள் நடைபெற்றன" என்றார் காப்பாற்ற வந்தவர்.

"நாங்கள் மறுபடியும் ஆண்டவரிடம் சென்று, எங்கள் தவறை அறிக்கையிட்டு ஒரு வழிகாட்டிக்காகக் கேட்கலாமா?" என்று ஆவலுடன் கேட்டாள் கிறிஸ்தீனாள்.

"நீங்கள் திரும்பிச் செல்ல வேண்டிய அவசியமில்லை. நீங்கள் உங்கள் தவறை உணர்ந்துவிட்டீர்கள் என்பதை நானே ஆண்டவரிடம் கூறிக்கொள்கிறேன். இனிமேல் நீங்கள் சென்று தங்கும் இடங்களில் எந்தத் தேவையும் இருக்காது, மோட்சப் பயணிகளுக்கென்றே நமது ஆண்டவர் ஆயத்தப்படுத்தி வைத்திருக்கும் இளைப்பாறும் தலங்களில் அனைத்துத் தேவைகளும் கவனிக்கப்படுகின்றன. என்றாலும் நான் முன்பே கூறியதைப்போல சகாயத்தை வேண்டுபவர்கள் அதற்காக வேண்டித்தான் ஆகவேண்டும். அப்போதுதான் அதன் மதிப்பை உணருவார்கள்" என்றார் காப்பாற்ற வந்தவர்.

இவ்வாறு கூறியபின்னர் அவர் தனது இடத்துக்குத் திரும்பினார். பயணிகள் தங்கள் பயணத்தைத் தொடர்ந்தார்கள்.

"கொஞ்சமும் எதிர்பாராத ஆபத்து வந்துவிட்டது பார்த்தாயா? நாம் அனைத்து ஆபத்துக்களையும் கடந்து விட்டோம். இனி எந்தக் கவலையும் நம்மை அணுகாது என்றல்லவா நான் நினைத்திருந்தேன்!" என்று அங்கலாய்த்தாள் இரக்கம்.

"எதையும் அறியாதிருந்த நீ இவ்வாறு கூறுவதில் தவறொன்றும் இல்லைதான். ஆனால் நானோ கதவை விட்டு வெளியே வரும்போதே தொலைவில் இந்த ஆபத்தைக் கண்டுவிட்டேன். ஆனாலும் இதைச் சந்திப்பதற்கான ஆயத்தம் ஒன்றையும் நான் செய்துகொள்ளவில்லை. எனவே தவறு என்னுடையதுதான்" என்றாள் கிறிஸ்தீனாள்.

"வீட்டிலிருந்து வெளியேறும்போதே இதை நீ எப்படி அறிந்திருந்தாய் என்பதை எனக்குச் சொல்ல மாட்டாயா?" என்று கேட்டாள் இரக்கம்.

"எப்படியா?" இதோ சொல்கிறேன் கேள். நான் வீட்டைவிட்டு வெளியேறுமுன்னமே ஒருநாள் இரவு இதைப் பற்றிய கனவு ஒன்றைக் கண்டேன். எனது இரட்சிப்பைத் தடுப்பது எப்படியென்று இரண்டு தீய மனிதர்கள் எனது

படுக்கையினருகே நின்று திட்டமிடுவதை நான் கண்டேன். அவர்கள் கூறிய அந்த வார்த்தைகளை நான் இன்னும் நினைவில் வைத்திருக்கிறேன். "இந்தப் பெண்ணைக் குறித்து நாம் என்ன செய்வது? இவளோ இடையிடையே எழுந்து பாவ மன்னிப்புக்காகக் கெஞ்சிக் கொண்டிருக்கிறாள். இவளும் பயணம் புறப்பட்டுவிட்டால், இவள் கணவனை இழந்தது போல இவளையும் இழந்துவிடுவோமே!'' என்று அவர்கள் சொல்லிக்கொண்டிருந்தார்கள். இதை நினைவில் வைத்தாவது சகாயம் கிடைக்கும் இடத்தில் அதைப் பெற்றுக்கொள்ள வேண்டும்!" என்றாள் கிறிஸ்தீனாள்.

"இவ்வாறு அஜாக்கிரதையாக இருந்தாலும்கூட, நமது குறைபாடுகளை வெளிப்படுத்துவதோடு ஆண்டவர் தமது கிருபையை அருளும் வாய்ப்பாகவும் கடந்துபோன பயங்கரமான நிகழ்ச்சி அமைந்துவிட்டது. நாம் அவரது கருணைக்காக வேண்டிக்கொள்ளாவிட்டாலும்கூட அவர் நம்மைவிடப் பலத்த கரங்களிலிருந்து நம்மைக்காப்பாற்றி மீட்டுள்ளார்'' என்றாள் இரக்கம்.

9. விளக்கம் கூறுபவரின் வீடு

இவ்வாறு அவர்கள் சற்று நேரம் பேசிக் கொண்டே நடந்தபோது, அவர்கள் வழியில் கட்டப்பட்டிருந்த ஒரு வீட்டுக்கு அருகே வந்து சேர்ந்தார்கள். இந்த வீடு பயணிகள் இளைப்பாறும் ஒரு தலமாக இருந்தது. இந்த வீட்டைப்பற்றி மோட்சப் பயண நூலின் முதல் பாகத்தில் தெளிவாகக் காணலாம்.

அவர்கள் பொருள்கூறுபவர் என்பவர் வசித்துவந்த இந்த வீட்டை நோக்கிச் சென்றார்கள். அருகே நெருங்கியபோது உள்ளேயிருப்பவர்கள் உரத்த குரலில் ஏதோ பேசிக் கொண்டிருப்பது கேட்டது.

கிறிஸ்தீனாளின் பெயர் கூறப்பட்டதை கேட்டவுடன் பயணிகள் உற்றுக் கவனித்தார்கள். ஏனெனில் கிறிஸ்தீனாளும், அவள் பிள்ளைகளும் பயணம் புறப்பட்டு வரும் செய்தி அவர்கள் வருவதற்கு முன்பாகவே குறிப்பிட்ட ஒவ்வொரு இடங்களையும் எட்டியிருந்தது. அவள் கிறிஸ்தியானின் மனைவி என்பதினாலும் சில காலத்துக்கு முன்னர் அவள் தன் கணவன் பயணம் புறப்படுவதை எதிர்த்தவள் என்பதினாலும் ஆர்வம் அதிகமாக இருந்தது. அவள் வாசலில் நிற்கிறாள் என்பதை அறியாமலே அவர்கள் அவளைப்பற்றிப் புகழ்ந்து பேசிக் கொண்டிருந்தார்கள்.

இறுதியில் கிறிஸ்தீனாள் அந்த வீட்டுக் கதவைத் தட்டினாள். அப்போது **கபடற்றவள்** என்ற பெண்மணி கதவைத் திறந்து இரண்டு பெண்கள் வெளியே நிற்பதைக் கண்டாள்.

"இங்கேயுள்ள யாரைக் கண்டு நீங்கள் பேச விரும்புகிறீர்கள்?" என்று கபடற்றவள் அவர்களிடம் கேட்டாள்.

"பயணிகளுக்கான இளைப்பாறும் தலங்களில் ஒன்று இதுவென்பதை நாங்கள் அறிவோம். எனவேதான் இந்த வாசலண்டை வந்து நிற்கிறோம். ஏற்கெனவே பகல் வேளை முடியப்போகிறது. இரவிலும் பயணத்தைத் தொடர விரும்பாததால் இங்கே தங்கிச் செல்ல விரும்புகிறோம்" என்றாள் கிறிஸ்தீனாள்.

"உங்கள் பெயரென்ன? இந்த வீட்டின் தலைவரிடம் யாரென்று சொல்லட்டும்?" என்று கேட்டாள் கபடற்றவள்.

"என் பெயர் கிறிஸ்தீனாள். சில காலத்துக்கு முன்னர் இதே வழியாகப் பயணம் செய்தவரின் மனைவி நான். இவர்கள் எங்களது நான்கு பிள்ளைகள். இதோ கூட வரும் பெண்ணும் எங்களுடன் பயணம் புறப்பட்டு வருபவள்தான்" என்றாள் கிறிஸ்தீனாள்.

இதைக் கேட்டவுடன் கபடற்றவள் வேகமாக உள்ளே ஓடிச் சென்றாள்.

"வாசலில் யார் வந்திருக்கிறார்கள் தெரியுமா? கிறிஸ்தீனாளும், அவளது பிள்ளைகளும், அவளது தோழியும் நமது உபசரிப்பைப் பெறுவதற்காக வந்துள்ளார்கள்" என்று உள்ளேயிருந்தவர்களிடம் உற்சாகமாக கூறினாள்.

அவர்கள் ஓடிச் சென்று தங்கள் தலைவரிடம் இதைக் கூறினார்கள். அவரே வாசல் வரை வந்து கிறிஸ்தீனாளை வரவேற்றார்.

"கிறிஸ்தியான் என்ற நல்ல மனிதன் தனது பயணத்தின் போது விட்டுச் சென்ற அவன் மனைவி கிறிஸ்தீனாள் நீதானா?" என்று கேட்டார்.

"என் கணவரின் வேதனைகளை அலட்சியப்படுத்தியவளும், அவரோடு பயணம் புறப்படவும் மறுத்த கடின மனதைப் பெற்றிருந்த பாவி நான்தான். இந்த நால்வரும் எங்கள் பிள்ளைகள். இதுவே சரியான வழி என்பதை நானும் உணர்ந்து கொண்டபடியால் பயணம் புறப்பட்டு வந்திருக்கிறேன்" என்றாள் கிறிஸ்தீனாள்.

“ஒரு மனிதன் தன் பிள்ளைகளில் ஒருவனைப் பார்த்து, ‘நீ போய் இன்றைக்கு என் திராட்சத் தோட்டத்தில் வேலைசெய்’ என்றான். அதற்கு அவன் முதலில் மறுத்தாலும் பிறகு வருத்தப்பட்டு வேளைக்குச் சென்றான் என்று கூறப்பட்டதுபோல (மத். 21:28, 29) இப்போது நீயும் நடந்துகொண்டிருக்கிறாய் போலிருக்கிறதே!” என்று அவளைப் பாராட்டினார் விளக்கம் கூறுபவர்.

“அப்படியே ஆகட்டும், ஆமென் எனது ஆண்டவரே அந்த வசனம் என்னில் உண்மையாகும்படி அருளி, இறுதியில் நான் குற்றமற்றவளாகவும், மாசற்றவளாகவும் காணப்பட்டு அவரில் சமாதானத்தைப் பெறும்படி கிருபை புரிவாராக!” என்று மகிழ்ச்சியுடன் கூறினாள் கிறிஸ்தீனாள்.

“ஏன் வாசலிலேயே நின்றுகொண்டிருக்கிறாய்? ஆபிரகாமின் குமாரத்தியே உள்ளே வா!” நீயும் ஒரு பயணியாகப் புறப்பட்டு விட்டாய் என்று நாங்கள் கேள்விப்பட்டபடியால் இப்போது தான் உன்னைப்பற்றிப் பேசிக் கொண்டிருந்தோம் பிள்ளைகளே, உள்ளே வாருங்கள். பெண்ணே, நீயும் உள்ளே வா” என்று அவர் அனைவரையும் உள்ளே அழைத்துச் சென்றார்.

உள்ளே நுழைந்தவுடன், அமர்ந்து இளைப்பாறும்படி கேட்டுக் கொள்ளப்பட்டார்கள். அப்போது அந்த வீட்டிலுள்ளவர்கள் பயணிகளைப் பார்க்கும்படி அந்த அறைக்கு வந்தார்கள்.

கிறிஸ்தீனாளும் மோட்சப் பயணம் மேற்கொண்டிருப்பதைக் கண்டு அவர்கள் அனைவருமே மகிழ்ச்சியடைந்திருந்தார்கள். பிள்ளைகளை வரவேற்கும்படி அவர்களை அன்போடு அரவணைத்து தடவிக் கொடுத்தார்கள் இரக்கத்தையும் அன்போடு வரவேற்றார்கள்.

இரவு உணவு இன்னும் ஆயத்தமாகாதபடியால் விளக்கம் கூறுபவர் அவர்களைத் தமது சிறப்பான தனியறைகளுக்குக் கூட்டிச் சென்று கிறிஸ்தியான் பார்த்தவற்றை அவர்களுக்கும் காட்டினார். கூண்டில் அடைப்பட்டிருந்த மனிதனையும், கனவுகண்ட மனிதனையும், விரோதிகளை வென்று இலக்கை அடைந்த மனிதனையும் மகாபராக்கிரமசாலியின் படத்தையும் கண்டார்கள். கிறிஸ்தியானுக்குப் பெரிதும் பயனளித்த மற்ற காரியங்களையும் கண்டார்கள்.

இவற்றின் அர்த்தத்தை கிறிஸ்தீனாளும் மற்றவர்களும் புரிந்துகொண்டபிறகு, விளக்கம் கூறுபவர் அவர்களை மற்றோர் அறைக்கு அழைத்துச் சென்றார். அங்கே ஒரு மனிதன் கையில்

துடைப்பத்துடன் நின்றபடியே தரையைப் பார்த்துக் கொண்டிருந்தான். அவனது தலைக்கு மேலாக நின்றுகொண்டிருந்த ஒருவர் தன் கிரீடம் ஒன்றை வைத்தவராக துடைப்பத்தைப் போட்டு விட்டு கிரீடத்தை அணிந்துகொள்ளுமாறு மற்றவனிடம் சொல்லிக் கொண்டிருந்தார். ஆனால் மற்றவனோ அவரது பேச்சைச் சட்டை செய்யவில்லை; பழையபடி வைக்கோலையும், சிறு குச்சிகளையும், தரையில் கிடந்த தூசிகளையும் பெருக்கிக் கூட்டிக்கொண்டிருந்தான்.

"இதன் பொருளை என்னால் கொஞ்சம் புரிந்து கொள்ள முடிகிறது. உலகப் பிரகாரமான மனிதன் ஒருவனின் நடவடிக்கைகளைத்தானே இது குறிக்கிறது?" என்று கேட்டாள் கிறிஸ்தீனாள்.

"நீ சொல்லுவது சரிதான். அந்தத் துடைப்பம் அவனது மாம்ச எண்ணங்களைச் சுட்டிக் காட்டுகிறது. தன் கையில் பரலோக கிரீடத்தை ஏந்தியவராக மேலிருந்து அவனை அழைப்பவரின் பேச்சைக் கேட்காமல், அவன் குப்பை கூளங்களைக் கூட்டிச் சேகரிப்பதிலேயே கவனமாக இருக்கிறான். சிலர் பரலோகமே கட்டுக்கதை என்றும், காணக்கூடியவைகளே முக்கியமானவை என்றும் நினைக்கிறார்கள் என்பதையே இது சுட்டிக்காட்டுகிறது. அந்த மனிதனால் கீழே பார்ப்பதைத் தவிர மேலே பார்க்கவே முடியவில்லை அல்லவா? உலகப்பிரகாரமான காரியங்களுக்கு ஒருவன் தன் மனதில் இடம் கொடுக்கும்போது, அவனது இருதயம் ஆண்டவரைவிட்டு விலகிப் போகிறது என்பதையே இது வலியுறுத்துகிறது'' என்று விளக்கினார் விளக்கம் கூறுபவர்.

"இந்தத் துடைப்பம் கூட்டும் வேலையிலிருந்து என்னை விலக்கிக் காப்பாற்றியருளும்" என்று கிறிஸ்தீனாள் வேண்டிக் கொண்டாள்.

''இப்போது பெரும்பாலானவர்கள் இத்தகைய விண்ணப்பங்களை ஏறெடுப்பதே இல்லை! பத்தாயிரம் பேரில் ஒருவர்கூட 'எனக்கு செல்வம் வேண்டாம்' என்று ஜெபிப்ப தில்லை! இப்போது அனைவருமே வைக்கோலையும் குச்சிகளையும் தூசிகளையும் தேடி அலைகிறார்கள்!'' என்று அங்கலாய்த்தார் விளக்கம் கூறுபவர்.

''ஐயா! நீர் சொல்லுவது உண்மைதான்!'' என்று கூறி இரக்கமும் கிறிஸ்தீனாளும் கண்ணீர்விட்டார்கள்.

அதன்பிறகு அந்த இல்லத்திலேயே சிறப்பான அறைக்கு விளக்கம் கூறுபவர் அவர்களை அழைத்துச் சென்றார். "இதைச் சுற்றிப் பார்த்து, ஏதாவது பயனுள்ள ஒன்று காணப்படுகிறதோ

என்று பாருங்கள்'' என்று கேட்டுக்கொண்டார். அவர்கள் சுற்றிச் சுற்றிப் பார்த்தும் அவர்கள் கண்களுக்கு எதுவுமே தென்படவில்லை! சுவரிலிருந்த ஒரு பெரிய சிலந்திப் பூச்சியை அவர்கள் கவனிக்கத் தவறிவிட்டார்கள்!

"ஐயா, எனக்கு ஒன்றும் தெரியவில்லையே!" என்று இரக்கம் சொன்னாள். கிறிஸ்தீனாளும் அப்படியே கூறினாள்.

"நன்றாக உற்றுப் பாருங்கள்" என்றார் விளக்கம் கூறுபவர்.

நன்றாக உற்றுப் பார்த்த கிறிஸ்தீனாள், "ஓர் அவலட்சணமான சிலந்தி பூச்சிதான் தன் கால்களால் சுவரைப் பற்றிக் கொண்டிருக்கிறது" என்றாள்.

"இந்தப் பெரிய அறையில் ஒரேயொரு சிலந்திப் பூச்சிதான் இருக்கிறதா?" என்று கேட்டார் விளக்கம் கூறுபவர்.

அவரது கேள்வியின் பொருளைப் புரிந்துகொண்ட கிறிஸ்தீனாள் கண்கள் கலங்கின.

ஆம், ஆண்டவரே, ஒன்றுக்கு மேற்பட்ட சிலந்திப் பூச்சிகள் இந்த அறையில் உள்ளன. அந்தச் சிலந்திப் பூச்சியிடம் இருப்பதைவிட இன்னும் கடுமையான விஷம் இவற்றிடம் காணப்படுகிறது" என்றாள் கிறிஸ்தீனாள்.

"நீ உண்மையைத்தான் கூறினாய்!" என்று ஒப்புக்கொண்டார் விளக்கம் கூறுபவர்.

அப்போது இதன் கருத்தைப் புரிந்துகொண்ட இரக்கம் வெட்கித் தலைகுனிந்தாள்; பிள்ளைகளும்கூட தங்கள் முகங்களை மூடிக்கொண்டார்கள்.

"நீங்கள் பார்க்கும் இந்த சிலந்திப் பூச்சி 'தன் கைகளினால் வலையைப் பின்னி அரசர் அரண்மனைகளில் வசிக்கிறது' (நீதி. 30:28) என்று எழுதப்பட்டுள்ளது அல்லவா? ஏன் அவ்வாறு எழுதப்பட்டுள்ளது? பாவமெனும் விஷம் நிறைந்தவர்களாக நீங்கள் இருந்தாலும் கூட, விசுவாசமெனும் கரத்தினால், பரலோகத்திலுள்ள மேலான அறையில்கூட பற்றிப் பிடித்துத் தாபரிக்கலாம் என்பதை நாம் உணர்ந்துகொள்ள வேண்டும் என்பதற்காகவே இவ்வாறு எழுதப்பட்டுள்ளது" என்று கூறினார் விளக்கம் கூறுபவர்.

"நான் இதைப்பற்றி முழுவதுமாகச் சிந்திக்கவில்லை என்பதை ஒப்புக்கொள்ளத்தான் வேண்டும். இத்தகைய ஓர் அழகான அறையில் நாம் அந்த சிலந்திப் பூச்சியைப் போல அவலட்சணமானவர்களாகவும், விஷம் நிறைந்தவர்களாகவும்

இருக்கிறோம் என்றுதான் நான் நினைத்தேன். ஆனால் அந்தச் சிலந்திப் பூச்சி தனது கால்களால் இந்த அழகான அறையின் சுவற்றைப்பற்றிக் கொண்டிருப்பது போல, நாம் விசுவாச கரங்களால் பற்றிக்கொள்ள வேண்டும் என்பதைப்பற்றி நான் சிந்திக்கவில்லை. ஆண்டவர் எந்த உயிரையும் வீணாகப் படைக்கவில்லை என்பது உண்மைதான்" என்றாள் கிறிஸ்தீனாள்.

அவர்கள் மகிழ்ச்சியாக இருப்பவர்கள்போலக் காணப்பட்டாலும், அவர்களின் கண்கள் கலங்கியிருந்தன. ஒருவரையொருவர் பார்த்துக்கொண்டார்கள் அவர்கள். பிறகு விளக்கம் கூறுபவரின் முன்னால் பணிந்து அவரை வணங்கினார்கள்.

வேறொரு அறைக்கு அவர் அவர்களை அழைத்துச் சென்றார். அங்கே ஒரு கோழியும் அதன் குஞ்சுகளும் மேய்ந்து கொண்டிருந்தன. அவற்றைச் சற்று நேரம் கவனிக்கும்படி விளக்கம் கூறுபவர் கட்டளையிட்டார். குஞ்சுகளில் ஒன்று தட்டிலிருந்து நீரைக் குடிக்கச் சென்றது. ஒவ்வொரு துளி தண்ணீர் அருந்தியதும் அது தலையை உயர்த்தி, வானத்தைப் பார்த்தது.

"இதோ இந்தக் குஞ்சு செய்வதுபோல, உங்களுக்கு வரும் கிருபை எங்கிருந்து வருகிறது என்பதை உணர்ந்து மேலே பார்த்தபடி அவற்றைப் பெற்றுக்கொள்ளுங்கள்'' என்றார் விளக்கம் கூறுபவர்.

மேலும் அந்தப் பறவைகளைக் கவனிக்கும்படி அவர் கேட்டுக்கொண்டார். நான்கு விதமாக தாய்ப் பறவை தனது குஞ்சுகளை அழைப்பதை அவர்கள் கவனித்தார்கள்.

நாள்முழுவதும் அது ஒரு பொதுவான குரலை எழுப்பியது; சில வேளைகளில் மட்டும் சிறப்பான ஒரு குரலை எழுப்பியது; குஞ்சுகளைக் கூட்டிச் சேர்ப்பதற்கு (மத். 23:27) அது வேறுவிதமான குரல் எழுப்பியது; அபாயத்தைக் குறிக்கும் அலறும் குரல் முற்றிலும் வேறுபட்டதாக இருந்தது.

''இந்தக் கோழியை உங்கள் இராஜாவுக்கும், இந்தக் குஞ்சுகளை அவருக்குக் கீழ்ப்படிபவர்களுக்கும் ஒப்பிட்டுப் பாருங்கள். இந்தக் கோழி தன் குஞ்சுகளிடம் எவ்வாறு நடந்து கொள்கிறதோ, அவ்வாறே அவர் தமது பிள்ளைகளிடம் நடந்துகொள்கிறார் என்று கூறலாம். அவர் தமது பொதுவான அழைப்பின்மூலம் எதையும் அருளுவதில்லை. சிறப்பான அழைப்பின்போது எதையாவது அருளுகிறார்; தமது செட்டையின்கீழ் அடைக்கலம் புகுந்துகொள்பவர்களிடம் அவர்

வேறுவித குரல் எழுப்புகிறார்; விரோதி வருவதைக் கண்டவுடன் அவர் எச்சரிப்பு குரலையும் எழுப்புகிறார். நீங்கள் பெண்ணாக இருப்பதால் இவற்றை எளிதாகப் புரிந்துகொள்வீர்கள் என்றே இந்த அறைக்கு உங்களை அழைத்துவந்து காட்டினேன்'' என்றார் விளக்கம் கூறுபவர்.

"இன்னும் சில காரியங்களைக் காட்டுவீர்களா?'' என்று ஆவலுடன் கேட்டாள் கிறிஸ்தீனாள்.

அவர் அவர்களைக் கசாப்பு வெட்டுபவன் ஓர் ஆட்டை வெட்டிக் கொண்டிருக்கும் இடத்துக்கு அழைத்துச் சென்றார். அந்த ஆடு அமைதியாக தன் மரணத்தை ஏற்றுக்கொண்டது.

"நீங்கள் இந்த ஆட்டைப்போல வேதனைகளை ஏற்றுக் கொள்ளவும், தவறிழைக்கப்படும்போது முணுமுணுப்போ, குறைகூறுதலோ அன்றி பொறுமையாக ஏற்றுக்கொள்ளவும் கற்க வேண்டும். எவ்வளவு அமைதியாக அது தன் தோல் உரிக்கப்படவும்கூட எதிர்ப்பின்றி இடம் கொடுக்கிறது. உங்கள் இராஜா உங்களைத் தமது மந்தையின் ஆடுகள் என்று அழைத்திருப்பதை மறந்துவிடாதீர்கள்!'' என்றார் விளக்கம் கூறுபவர்.

இதன் பிறகு, அழகிய பல்வேறு விதமான மலர்கள் நிறைந்த தனது தோட்டத்திற்கு அவர் அவர்களை அழைத்துச் சென்றார்.

"இந்த மலர்களைக் கண்டீர்களா? இவை அமைப்பிலும், தரத்திலும், வண்ணத்திலும் வாசனையிலும், பயன்படும் விதத்திலும் ஒன்றுக்கொன்று வேறுபட்டிருக்கின்றன; சில மற்றவற்றைவிடச் சிறப்பானவையாக இருக்கின்றன. தோட்டக்காரன் வைத்த இடத்தில் அவை ஒன்றோடொன்று சண்டை போட்டுக்கொள்ளாமல் அப்படியே இருக்கின்றன'' என்றார் விளக்கம் கூறுபவர்.

பின்னர் கோதுமையும், மக்காச்சோளமும் பயிரிடப்பட்டிருந்த தனது வயல்களுக்கு அவர் அவர்களை அழைத்துச் சென்றார். அந்தப் பயிரின் கதிர்கள் அறுக்கப்பட்டு, வெறும் அடிப் பாகம் மட்டுமே நின்று கொண்டிருந்தன.

"இந்த நிலத்தில் நன்கு உரமிடப்பட்டது; ஆழ உழப்பட்டது; பிறகே விதை விதைக்கப்பட்டது. ஆனால் இப்போது நிற்கும் இந்தப் பயிரை என்ன செய்வது?'' என்று அவர் அவர்களிடம் கேட்டார்.

"பாதியை எரித்துவிடுங்கள். மீதியை எருவாகும்படி போட்டுவிடுங்கள்'' என்று கூறினாள் கிறிஸ்தீனாள்.

"பாருங்கள், நீங்கள் கனிகளைத்தான் தேடுகிறீர்கள். கனிகள் காணப்படாவிட்டால் சுட்டெரிக்கும்படி கூறுகிறீர்கள் அல்லது காலில் போட்டு மிதிக்கும்படி சொல்லுகிறீர்கள். இதில் நீங்களும் குற்றம் செய்து கனியற்றவர்களாகக் காணப்படாதபடிக்கு எச்சரிக்கையாயிருங்கள்'' என்று கூறினார் விளக்கம் கூறுபவர்.

அவர்கள் திரும்பி வரும் வழியில் ஒரு சிட்டுக் குருவி, ஒரு பெரிய சிலந்திப் பூச்சியைத் தன் அருகில் கொத்திச் செல்வதைக் கண்டார்கள்.

இரக்கம் அதைக் கண்டு வியப்படைந்தாள்.

''அடடா, இந்தக் குருவிகள் மற்றக் குருவிகளைவிட மேன்மையானவை என்றல்லவா நான் நினைத்து வந்தேன்? மனிதனோடு சுமுகமாகப் பழகுவதில் விருப்பமுள்ளவை என்றல்லவா எண்ணியிருந்தேன்? இவை ரொட்டித் துணுக்குகளையும், உயிர்களைக் கொல்லாமல் வேறு தானியங்களையும் தின்றுவருகின்றன என்றே நான் எதிர்பார்த்திருந்தேன். ஆனால் இப்போது அதைப் பார்க்கும்போது அதன்மேல் நான் வைத்திருந்த மதிப்பையே இழந்துபோக வேண்டியதுதான்!'' என்று அங்கலாய்த்தாள் கிறிஸ்தீனாள்.

"இந்தச் சிட்டுக் குருவி ஓர் அடையாளமாக இருக்கிறது. இவை அழகான பறவைகள்தான் பெயர்க் கிறிஸ்தவர்களையே இவை சுட்டிக்காட்டுகின்றன. இவர்கள் உண்மைக் கிறிஸ்தவர்கள் மீது அதிக மதிப்பும் மரியாதையும் வைத்திருக்கிறார்கள். அவர்கள் மேசையிலிருந்து விழும் உணவுத் துணுக்குகளே போதுமானவை என்பது போல, அவர்களோடு உறவு கொள்ளவும், அவர்களோடு பழகவும் விரும்புகிறார்கள். அவர்கள் இத்தகைய பரிசுத்தவான்களின் வீட்டுக்கு வாஞ்சையோடு செல்வது போலவும், ஆண்டவருடைய பணிகளில் ஈடுபடுவது போலவும் பாவனை செய்கிறார்கள். ஆனால் தனித்திருக்கும்போதோ இந்தச் சிட்டுக் குருவியைப் போல சிலந்திப் பூச்சிகளைப் பிடித்து விழுங்குகிறார்கள்; அவர்களால் தங்கள் உணவுப் பழக்கத்தை மாற்றிக்கொள்ள முடியவில்லை; அநியாயத்தை அருந்துகிறார்கள்; தண்ணீரைப் போலப் பாவத்தைக் குடிக்கிறார்கள்'' என்றார் விளக்கம் கூறுபவர்.

அவர்கள் வீட்டுக்குத் திரும்பி வந்தபோது இரவு உணவு இன்னும்... ஆயத்தமாகவில்லை என்பதை அறிந்தார்கள். அவர்களுக்கு பயனளிக்கும் விதமாக விளக்கம் கூறுபவர் இன்னும் சில காரியங்களைக் கூற வேண்டும் என்று கேட்டுக் கொண்டாள் கிறிஸ்கீனாள்.

"பன்றியானது எவ்வளவு கொழுத்திருக்கிறதோ அவ்வளவு தூரம் சேற்றில் களித்திருப்பதை விரும்புகிறது; எருது எவ்வளவு தூரம் கொழுத்திருக்கிறதோ அவ்வளவுக்கவ்வளவு அது அலட்சியமாக கசாப்புக் களம் நோக்கிச் செல்கிறது. இச்சையுள்ள மனிதன் எவ்வளவுக்கெவ்வளவு ஆரோக்கியமுள்ளவனாக இருக்கிறானோ, அவ்வளவு தூரம் தீமைகள் செய்யக்கூடியவனாக இருக்கிறான். நன்றாக உடையுடுத்தி அழகாகக் காணப்பட வேண்டுமென்று பெண்கள் ஆசைப்படுகிறார்கள்; தேவனுடைய பார்வையில் மதிப்பைப் பெற்றுக் கொடுக்கும் அழகே பெண்களின் மெய்யான அழகு! ஓராண்டு முழுவதும் விழித்திருப்பதைவிட, ஓரிரு இரவுகள் விழித்திருப்பது எளிதுதான்; இதைப்போலவே இறுதிவரை பக்தி வைராக்கியத்துடன் இருப்பதைவிட துவக்கத்தில் விசுவாசமுள்ளவர்களாகக் காணப்படுவது எளிதுதான். சூறாவளியில் ஒரு கப்பல் சிக்கும்போது மாலுமி அத்தியாவசியமாகக் காணப்படாத பொருள்களைக் கடலில் வீசியெறிவதுண்டு; ஆனால் எடையைக் குறைப்பதற்காக எவரேனும் விலையுயர்ந்த பொருள்களை முதலில் தூக்கி எறிவார்களா? தேவனுக்குப் பயப்படாதவர்களே இப்படியெல்லாம் செய்வார்கள்! ஒரு சிறு துவாரம் ஒரு பெரிய கப்பலையே மூழ்கச் செய்து விடுவதுபோல, ஒரு பாவம் அந்தப்பாவியை அழித்துவிடும்! நண்பனை மறந்துபோகும் ஒருவன் நன்றி கெட்ட ஒருவனாகிறான்; ஆனால் தனது மீட்பரையே மறந்து போகிறவன், தனக்குத்தானே கருணை காட்டாதவனாகிவிடுகிறான். பாவத்தில் வாழ்ந்த பின்னரும், மரணத்துக்குப் பின்னர் பரலோக பாக்கியத்தை எதிர்பார்ப்பவன், முள்களை விதைத்து தானியங்களை அறுவடை செய்வதற்குக் காத்திருப்பவனைப் போலிருக்கின்றான்.

ஒருவன் நல்லபடி வாழ வேண்டுமானால், எப்போதுமே தனது இறுதி நாளை நினைத்திருந்து, அதைத் தனது துணைவனைப்போல வைத்திருப்பானாக! கிசுகிசுப்பான பேச்சுகளும், சிந்தனைகளை மாற்றிக்கொள்வதும் பாவம் இன்னும் உலகத்தில் இருக்கிறது என்பதற்கு நிரூபணங்களாக உள்ளன. ஆண்டவருடைய பார்வையில் துச்சமான உலகம் மனிதருடைய கண்ணோட்டத்தில் மதிப்புடையதாகத் தோற்றமளிக்குமானால், ஆண்டவரால் உயர்வாக மதிக்கப்படும் பரலோகத்தின் மேன்மைதான் என்னே! எத்தனையோ கடினங்கள் நிறைந்த இந்த வாழ்க்கையையே விட்டு விலக நாம் விரும்பாமலிருப்போமானால், பரலோக வாழ்க்கையின் மேன்மைதான் என்னே! மனிதனின் நற்குணங்களைப் பற்றிப் போற்றிப் புகழுபவர் அநேகர்; ஆனால் ஆண்டவரின் மேன்மையான குணாதிசயங்களை ஏற்றபடி மதித்துப்

போற்றுபவர் எவரேனும் உண்டா? நாம் எப்போதுமே கடைசிப் பருக்கைவரை சாப்பிட்டு முடிப்பதில்லை; எதையாவது மீதி வைத்துவிடுகிறோம். இதைப்போலவே இந்த உலகம் முழுவதற்கும் தேவையான புண்ணியம் மற்றும் நீதியைவிட அதிகமாகவே இயேசு கிறிஸ்துவிடம் காணப்படுகிறது'' என்று கூறினார் விளக்கம் கூறுபவர்.

அதன்பிறகு அவர் அவர்களை மறுபடியும் தனது தோட்டத்திற்கு அழைத்துச் சென்று, உட்புறம் அழுகிப்போயிருந் தாலும், இன்னும் வளர்ந்து இலைகளைக் கொண்டிருக்கும் ஒரு மரத்தைக் காட்டினார்.

"இதன் பொருள் என்ன?" என்று கேட்டாள் இரக்கம்.

''ஆண்டவருடைய தோட்டத்தில் இருக்கும் அநேகர் இதைப்போலவே வெளியே நன்றாகத் தோற்றமளித்தாலும், உள்ளே அழுகிப் போனவர்களாகக் காணப்படுகிறார்கள். அவர்கள் தங்கள் வாயினால் ஆண்டவரின் சார்பாகப் பேசினாலும், அவருக்காக எதையுமே செய்யமாட்டார்கள் இலைகள் அழகாகக் காணப்பட்டாலும்கூட, உள்ளே அழுகிராது; சாத்தானின் கையில் வனையப்படும் பாத்திரமாகவே இருப்பார்கள்" என்றார் விளக்கம் கூறுபவர்.

இரவு உணவு ஆயத்தமாகிவிட்டது. மேசையில் அனைத்தும் பரிமாறப்பட்டது. ஆண்டவரை நோக்கி தோத்திர ஜெபத்தை ஏறெடுத்த பின்னர் அவர்கள் உணவை உண்ணத் துவங்கினார்கள். உணவருந்தும்போது, விருந்தினர்களை இசையால் மகிழ்விப்பது அந்த இல்லத் தலைவரின் வழக்கம். எனவே இசை வல்லுநர்கள் இசைக் கருவிகளை இசைத்தார்கள். ஒருவன் இனிமையான குரலில்,

"ஆண்டவர் மட்டுமே எனக்கு ஆதாரம்
அவர் மட்டுமே அளிக்கிறார் ஆகாரம்;
எனக்கென்று இருக்குமோ தேவை?
கவனிப்பவர் அவரல்லவோ?"

என்று அவன் பாடினான்.

பாடலும் இசை நிகழ்ச்சியும் முடிவுற்ற பிறகு விளக்கம் கூறுபவர் கிறிஸ்தீனாளைப் பார்த்து,

''உன்னைப் பயணம் புறப்படும்படி முதன் முதலில் தூண்டியது எது?'' என்று கேட்டார்.

"என் கணவரை நான் இழந்துவிட்டது முதலில் என்னைப் பெரிதும் பாதித்தது; இது இயல்பான அன்பினால் ஏற்படுவது

தானே? எனது கணவர் தனது பயணத்தில் பட்ட சோதனைகளும், நான் அவரை அலட்சியப்படுத்தியதும் என் நினைவில் வந்து என்னை வருத்தியது, பாவ உணர்வு என்னைப் பிடித்தது. ஒருவேளை அது என்னைக் குளத்தில் தள்ளியிருக்கலாம். ஆனால் என் கணவர் நல்லபடியாக இருக்கிறாறென்று கனவொன்றைக் கண்டேன். என் கணவர் வசிக்குமிடத்தில் இராஜா என்னையும் அங்கே வரும்படி அழைத்து கடிதமொன்றை அனுப்பியிருந்தார். அந்தக் கனவும் கடிதமுமே பயணம் புறப்படும்படி என்னை ஏவின!" என்றாள் கிறிஸ்தீனாள்.

"நீ வீட்டைவிட்டு வெளியேறு முன்னர் எதிர்பொன்றும் உருவாகவில்லையா?" என்று கேட்டார் விளக்கம் கூறுபவர்.

''என் அண்டைவீட்டுப் பெண்மணியான பயந்தவள் என்பவள் என்னைத் தடுத்தாள். சிங்கங்களைப்பற்றிய பயத்தில் என் கணவரைப் பின்வாங்கச் செய்ய முயன்றவனின் உறவுக்காரி தான் அவள். நான் பயணம் புறப்பட்டிருப்பது அபத்தமென்று கூறி, என் கணவர் வழியில் சந்தித்த ஆபத்துக்களைப்பற்றி எடுத்துச் சொல்லி என்னைத் தடுக்க முயன்றாள். ஆனால் அவளால் வெற்றி பெற முடியவில்லை! ஆனால் எனது பயணத்தில் எனக்கு இடையூறு செய்ய முயன்ற இரண்டு தீயவர்களைப் பற்றி நான் கண்ட கனவுதான் என் மனதை உறுத்திக்கொண்டேயிருந்தது. இன்றும் நான் சந்திக்கும் ஒவ்வொருவரும் என்னைப் பின்வாங்கச் செய்பவர்தானோ என்ற அச்சத்தை அந்தக் கனவே எனக்குக் கொடுத்துள்ளது. மற்றவர்கள் இதை அறிய வேண்டுமென்று நான் விரும்பா விட்டாலும், என் ஆண்டவரிடம் நான் இதைப் பற்றிக் கூறித்தான் ஆகவேண்டும். இந்த மாளிகையின் வாயிலை அணுகுமுன்னால் இரண்டு தீயவர்கள் எங்களைத் தாக்கி கொலை, கொலை' என்று எங்களைக் கத்த வைத்தார்கள். என் கனவில் பார்த்த இரு தீயவர்களைப்போலத்தான் அவர்கள் இருந்தார்கள்'' என்றாள் கிறிஸ்தீனாள்.

உன் ஆரம்பமே நல்லது; முடிவு இன்னும் மேன்மையானதாக இருக்கும்'' என்று அவளை ஆசீர்வதித்த விளக்கம் கூறுபவர், இரக்கத்திடம் திரும்பி, "அன்புக்குரிய பெண்ணே, உன்னைப் பயணம் புறப்படும்படி ஏவியது எது?" என்று கேட்டார்.

திடுக்கிட்ட இரக்கத்தின் உடலில் சற்று நடுக்கம் ஏற்பட்டது. அவள் சிறிதுநேரம் அமைதியாக இருந்தாள்.

"பயப்படாதே, விசுவாசத்தோடு உன் மனதில் இருப்பதைக் கூறு" என்று அவளை உற்சாகப்படுத்தினார் விளக்கம் கூறுபவர்.

"ஆண்டவரே, எனக்கு அனுபவமில்லாமையினால் தான் நான் அமைதியாக இருக்கிறேன். அதுவுமில்லாமல் நான் இறுதியில் குறைவுபட்டவளாக காணப்படுவேனோ என்ற அச்சமும் எனக்கு இருக்கிறது. எனது தோழி கிறிஸ்தீனாள் கூறுவதைப் போல எந்தத் தரிசனத்தையும், கனவையும் நான் காணவில்லை. அதுமட்டுமன்றி நல்ல உறவினர்களின் ஆலோசனைக்கு மறுத்ததினால் வருத்தப்படுவது பற்றியும் எனக்குத் தெரியாது என்றாள் இரக்கம்.

அப்படியானால் பயணம் புறப்படும்படி உன்னைத் தூண்டியது எது?" என்று கேட்டார் விளக்கம் கூறுபவர்.

"எனது தோழி எங்கள் நகரத்தைவிட்டுப் புறப்பட ஆயத்தமாகிக் கொண்டிருந்தபோது, நானும் மற்றொரு தோழியும் தற்செயலாக அவளுடைய வீட்டுக்குச் சென்றிருந்தோம். கதவைத் தட்டிவிட்டு உள்ளே சென்றோம். அவள் புறப்படுவதைப் பார்த்தவுடன், இதன் அர்த்தம் என்ன என்று கேட்டோம். அவளது கணவரிடம் செல்வதற்காக அழைப்பு வந்திருக்கிற தென்று அவள் கூறினாள். மரணமேயற்றவர் மத்தியில், கிரீடம் அணிந்தவராக, கின்னரம் இசைத்தவராக, அரசகுமாரனின் பந்தியில் புசித்துக் குடிப்பவராக அவரைத் துதித்துப் பாடுபவராக இருப்பதைத் தான் கனவின்மூலம் கண்டதாக அவள் கூறினாள். அவள் இவற்றைக் கூறியபோது, என் உள்ளத்தில் அனல் மூண்டது. 'இது உண்மையானால், நான் என் பெற்றோரையும், சொந்த இடத்தையும் விட்டு விட்டு அவளுடன் பயணம் புறப்படுவேன்' என்று என் மனதில் சொல்லிக் கொண்டேன். எனவே இதைப்பற்றிய உண்மைகளைக் கூறும்படியும், அவள் என்னையும் உடன் அழைத்துச் செல்வாளா என்றும் கேட்டேன். ஏனென்றால் நான் வசிக்கும் நகரம் அழியக்கூடியதென்றால், எனக்குத் தங்க வேறிடம் கிடையாது என்பதை உணர்ந்து கொண்டேன். என்றாலும் பாரமுள்ள இருதயத்தோடுதான் நான் பயணம் புறப்பட்டேன்; நான் பயணம் புறப்பட விரும்பவில்லை என்பது இதற்குக் காரணமில்லை; எனது உறவினர்களை விட்டு விட்டுச் செல்கிறேனே என்ற வருத்தம்தான். என் இருதயத்தில் முழு வாஞ்சையோடுதான் நான் பயணம் புறப்பட்டு வந்துள்ளேன். கிறிஸ்தீனாளோடுகூட அவள் கணவரையும், அவரது இராஜாவையும் சந்திப்பேன்" என்றாள் இரக்கம்!

"நீ புறப்பட்டது நல்லதுதான். ஏனென்றால் நீ சத்தியத்தை ஏற்றுக்கொண்டிருக்கிறாய் நகோமி மீதும் அவள் ஆண்டவராகிய தேவன் மீதும் தான் கொண்டிருந்த அன்பினால், தனது தாய், தகப்பனையும், சொந்த இடத்தையும் விட்டு, தான் இதுவரை

அறியாத மக்களோடு செல்லத் துணிந்த ரூத்தைப் போலத்தான் நீயும் இருக்கிறாய். ஆண்டவர் உனது செயலை ஆசீர்வதிப்பார். நீ யாருடைய செட்டையின்கீழ் நம்பிக்கையுடன் அடைக்கலம் புகுந்திருக்கிறாயோ, அந்த இஸ்ரவேலின் ஆண்டவர் உனக்கு நிச்சயம் பலனளிப்பார்'' என்று அவளை ஆசீர்வதித்தார் விளக்கம் கூறுபவர்.

இரவு உணவு முடிவடைந்தது; படுப்பதற்காக ஆயத்தமானார்கள். பெண்கள் தனித்தனியாகவும், பிள்ளைகள் தனியாகவும் படுத்திருந்தார்கள். ஆனந்தக் களிப்போடிருந்த இரக்கத்தினால் உறங்கமுடியவில்லை; ஏனென்றால் இறுதியில் கைவிடப்பட்டுவிடுவோமோ என்ற அவளது அச்சம் அநேகமாக மறைந்துபோயிருந்தது. அவள்மீது சகாயம்காட்டிய ஆண்டவரைத் துதித்தபடியே அவள் படுத்திருந்தாள்.

சூரியோதயத்தின்போது அவர்கள் எழுந்து, பயணத்திற்கான ஆயத்தங்களைச் செய்தார்கள். அவர்களைக் கொஞ்சம் பொறுத்திருக்கும்படி கேட்டுக்கொண்டார் விளக்கம் கூறுபவர்.

“நீங்கள் இங்கேயிருந்து போகும்போது ஓர் ஒழுங்கோடு போகவேண்டும்” என்றார் அவர்.

அவர்களுக்கு முதலில் கதவைத் திறந்துவிட்ட கபடற்றவள் என்ற பெண்மணியிடம். “இவர்களைத் தோட்டத்திலுள்ள குளத்திற்குக் கூட்டிச்சென்று, அங்கே பயணம் புறப்பட்டு வந்ததினால் அவர்கள் உடலில் ஒட்டியிருக்கும் மண் போகும்படி குளிப்பாட்டு” என்று கட்டளையிட்டார் (யோவான் 13:10).

கபடற்றவள் அவர்களைத் தோட்டத்திலிருந்த குளத்திற்கு அழைத்துச் சென்றாள். “இங்கே குளித்து உங்கள் சரீரத்தைச் சுத்தப்படுத்திக்கொள்ளுங்கள். பயணம் செல்லும் பெண்கள் இவ்வாறு தங்களைச் சுத்திகரித்துக்கொள்ள வேண்டும் என்றே எசமானர் விரும்புகிறார்” என்றாள் அவள்.

கிறிஸ்தினாளும், அவள் பிள்ளைகளும், இரக்கமும் அங்கே தங்கள் சரீரங்களைச் சுத்திகரித்துக் கொண்டார்கள். குளித்து முடிந்தவுடன் அவர்கள் உடல் சுத்தமடைந்ததோடு மட்டுமன்றி, புத்துணர்வும் பெற்றார்கள். தொடர்ந்து நடப்பதற்கு ஏற்றபடி கால் மூட்டுகளில் புது பெலனையும் பெற்றார்கள். குளிக்கச் செல்வதற்கு முன்னர் இருந்ததைவிட மேலும் அழகு நிறைந்தவர்களாகத் திரும்பினார்கள்.

அவர்கள் நீராடிவிட்டு வந்தபிறகு அவர்களைப் பார்த்து விளக்கம் கூறுபவர், “பூரண நிலவைப்போல அழகாக இருக்கிறீர்கள்” என்று அவர்களைப் பாரட்டினார்.

பிறகு முத்திரையை எடுத்து வரும்படி பணியாள்களிடம் கட்டளையிட்டார். அவரது நீரில் அவர்கள் சுத்திகரிப்பைப் பெற்றதற்கு அடையாளமான இந்த முத்திரை இடப்படுகிறது. அவர்கள் இனிமேல் செல்லுமிடங்களில் இது அறியப்பட வேண்டும் என்பதற்காக அவர்கள்மீது அவர் முத்திரையிட்டார். அவர்களுக்கு முத்திரையானது எகிப்திலிருந்து புறப்படுவதற்கு முன்னர் இஸ்ரவேல் மக்கள் ஆசரித்த பஸ்காவின் பொருள் பொதிந்ததாக இந்த முத்திரை காணப்படுகிறது. இந்த முத்திரை அவர்களது இரு கண்களுக்கும் நடுவில் போடப்பட்டது. அவர்கள் முகத்தில் இடப்பட்ட ஓர் ஆபரணம் போல இந்த முத்திரை காணப்படுவதில்லை, இது அவர்களின் மதிப்பையும் கூட்டியதால் அவர்கள் தேவதூதர்களைப்போலக் காணப் பட்டார்கள்.

விளக்கம் கூறுபவர் மறுபடியும் அந்தப் பெண்மணியைப் பார்த்து, ஆடையகத்திற்குச் சென்று அவர்களுக்குப் புதிய ஆடைகளை எடுத்துவரும்படி கட்டளையிட்டார்.

அவள் சென்று வெள்ளை ஆடைகளை எடுத்துவந்து அவர் முன்னால் வைத்தாள். பயணிகள் அந்த ஆடைகளை எடுத்து அணியும்படி அவர் கட்டளையிட்டார். அது வெள்ளையும் பரிசுத்தமுமான மெல்லிய ஆடையாக இருந்தது.

பயணிகள் இந்த ஆடைகளை அணிந்த பின்னர் ஒருவர் மற்றவரைப் பார்த்துப் பதறினார்கள். தங்களில் தாங்களே காணமுடியாத மகிமையை அவர் மற்றவர்களிடம் கண்டதுதான் இதற்குக் காரணம். எனவே தங்களைவிட மற்றவர்களை அதிகமாக் மதிக்கவும் துவங்கினார்கள். “நீ என்னைவிட அழகாக இருக்கிறாய்” என்று ஒருவள் மற்றவளிடம் கூறினாள். “இல்லை இல்லை நீதான் என்வைவிட சௌந்திரயவதி!” என்று மற்றவள் கூறினாள். பிள்ளைகளும்கூட தாங்கள் அலங்காரம் செய்யப் பட்டிருப்பதைக் கண்டு வியப்படைந்தார்கள்.

இறுதியில், விளக்கம் கூறுபவர் தனது பணியாளர்களில் ஒருவனாகிய **துணிவு** என்பவனை அழைத்து, பட்டயத்தையும், தலைக் கவசத்தையும் எடுத்துக்கொண்டு அந்தப் பயணிகளை வழிநடத்தி, அவர்கள் அடுத்து தங்கவேண்டிய இடமாகிய அலங்கார மாளிகை என்னும் இடம்வரையில் அவர்களோடு துணையாகச் செல்லும்படி கட்டளையிட்டார்.

அவன் தனது ஆயுதங்களை ஏந்தியவனாக, அவர்களுக்கு முன்பாகச் சென்றான்.

“ஆண்டவர் இனிதான பயணத்தைத் தருவாராக!” என்று

அவர்களை ஆசீர்வதித்து வழியனுப்பி வைத்தார் விளக்கம் கூறுபவர். அங்கிருந்த மற்றவர்களும் அவர்களுக்கு வாழ்த்துக் கூறினார்கள்.

“இந்த இடம் எங்கள் இரண்டாம்
கட்டம்
காலம் காலமாக மற்றவருக்கு
மறைக்கப்பட்டவற்றைக் கண்டோம்
திட்டமாக!
குப்பை வாருபவன், சிலந்தியும்
கோழியும்
தப்புச் செய்யாத குஞ்சும்கூட
மறைச் செய்தியைக் கூறின
அழியாததுவே!
கசாப்புக் கடைக்காரனும், அந்தத்
தோட்டமும்
பசும்வயலும், குருவியும் இரையும்
குறைகண்டு அழிந்த மரமும்
செய்தி கூறவே!
விழிப்போடு ஜெபித்து உண்மையாய்
இருக்கவே
நாள்தோறும் என் சிலுவையெடுத்து
இறையோனைப் பயமின்றி வணங்குவோனாய்
இருக்கவே!”

என்று பாடியபடியே அவர்கள் தங்கள் பயணத்தைத் தொடர்ந்தார்கள்.

10. அலங்கார மாளிகையைச் சென்றடைதல்

துணிச்சல்காரன் அவர்களை வழிநடத்த, பயணிகள் பின்னால் செல்வதை நான் என் கனவில் கண்டேன்.

கிறிஸ்தியானின் முதுகிலிருந்த சுமை அறுந்து விழுந்து கல்லறையினுள் மறைந்துபோன இடத்துக்கு அவர்கள் வந்து சேர்ந்தார்கள்.

இங்கே வந்து நின்று அவர்கள் ஆண்டவரைத் துதித்தார்கள்.

“நாம்வார்த்தையினாலும், கிரியையினாலும் மன்னிப்பைப் பெறவேண்டுமென்று குறுகிய வாசலண்டையில் கூறப்பட்டதை இப்போது நான் நினைவுகூருகிறேன். வார்த்தை என்பது வாக்குத் தத்தங்களைக் குறிக்கிறது. கிரியை என்பது எவ்வாறு அது பெறப்பட்டது என்பதைக் குறிக்கிறது வாக்குத்தத்தங்களைப்பற்றி

நானும்கூடக் கொஞ்சம் அறிவேன். ஆனால் கிரியையின்மூலம் பாவமன்னிப்பு எப்படிப் பெறப்பட்டது என்பதை, துணிவுள்ளவரே, நீர் கூற மாட்டீரா?'' என்று கேட்டுக் கொண்டாள் கிறிஸ்தீனாள்.

''யாருக்குப் பாவமன்னிப்பு தேவைப்படுகிறதோ, அதை அவருக்காக மற்றொருவர் பெற்றுத் தருவதையே இது குறிக்கிறது. மன்னிப்பைப் பெறத் தேவையேயில்லாத ஒருவர் இதைப் பெற்றுத் தந்துள்ளார். நீயும், இரக்கமும் இந்தப் பிள்ளைகளும் பெற்ற மன்னிப்பு இன்னொருவரால் பெற்றுத் தரப்பட்டுள்ளது. உங்களை வாயிலுக்குள் வர அனுமதித்தாரே அவராலேயே இந்த மன்னிப்பு பெறப்பட்டது. நீங்கள் பாவ மன்னிப்பைப் பெறும்படி அவர் இரண்டு வழியாகக் கிரியை செய்திருக்கிறார். உங்களை மூடிப் பாதுகாக்கும்படி நீதியை நடப்பித்திருக்கிறார்; உங்களைக் கழுவிச் சுத்திகரிக்கும்படி தமது இரத்தத்தையும் சிந்தியுள்ளார்'' என்றான் துணிவுள்ளவன்.

''அவர் தமது நீதியை நமக்குக் கொடுத்துவிட்டாரென்றால் தமக்கென்று எதை வைத்திருப்பார்?'' என்று கேட்டாள் கிறிஸ்தீனாள்.

''உனக்குத் தேவைப்படுவதைவிட ஏன், அவருக்கே தேவைப் படுவதைவிட அதிக நீதியை அவர் வைத்திருக்கிறார்'' என்றான் துணிவுள்ளவன்.

''எப்படியென்று எனக்கு விளக்கிச் சொல்ல மாட்டீர்களா?'' என்று கேட்டுக்கொண்டாள் கிறிஸ்தீனாள்.

''என் முழுமனதோடு விளக்கிச் சொல்லுகிறேன், கேள். முதலில், நாம் யாரைப்பற்றிப் பேசப் போகிறோமோ அவருக்குச் சமமானவர் எவருமே கிடையாது என்பதை நாம் நினைவில் கொள்ளவேண்டும். அவர் ஒரே நபரில் இரண்டு இயல்புகளைக் கொண்டுள்ளார்; இரண்டுமே தெளிவாகப் பகுத்துக் காணக்கூடியவை; அதே வேளையில் பிரிக்கக் கூடாதவையுமாகும் இந்த இரண்டு இயல்புகள் ஒவ்வொன்றுக்கும் ஒரு நீதி உண்டு; ஒவ்வொரு நீதியும் அந்த இயல்புக்கு அத்தியாவசியமானவை. ஓர் இயல்பிலிருந்து அதன் நீதியை நிச்சயமாகப் பரிக்க முடியாது. இந்த நீதிகளுக்கு நாம் பங்காளர்கள் ஆவதுமில்லை; நாம் நீதிமானாகிப் பிழைக்கும்படி இவை நம்மீது சாற்றப்படுவது மில்லை. இதுமட்டுமன்றி, இந்த இரண்டு இயல்புகளும் அவரில் இணைந்திருப்பதால், இந்த இரண்டு நீதிகளைத் தவிர மற்றொரு நீதியும் அவரிடம் உண்டு. இது மானிடத் தன்மையிலிருந்து முற்றிலும் வேறுபடுத்தப்படக்கூடிய தெய்வீகத்தன்மையின் நீதியாகவும் இருக்கவில்லை; அல்லது தெய்வீகத் தன்மையிலிருந்து

முற்றிலும் வேறுபடுத்தப்படக்கூடிய மானிடத் தன்மையின் நீதியாகவும் இருக்கவில்லை; இந்த இரண்டு இயல்புகளின் சேர்க்கையைச் சேர்ந்திருக்கும் நீதியாக அது இருக்கிறது; அது ஆண்டவரால் அவருக்கு அளிக்கப்பட்ட மத்தியஸ்தர் ஊழியத்திற்கு ஆண்டவரால் ஆயத்தப்படுத்தப்படுவதற்கு அத்தியாவசியமான நீதியாக இருக்கிறது. அவர் தமது முதல் நீதியைவிட்டு விலகினால் தெய்வீக இயல்பைவிட்டு விலகுவதாக ஆகிவிடும்; அவர் தமது இரண்டாவது நீதியைவிட்டு விலகினால் தனது மானிட இயல்பின் பரிசுத்தத்தைவிட்டு விலகுவதாக ஆகிவிடும்; அவர் தமது மூன்றாவது நீதியை விட்டு விலகினால் மத்தியஸ்தர் ஊழியத்திற்கு அவரைத் தகுதிப்படுத்தும் பரிபூரண நிலையிலிருந்து அவர் விலகியதாகிவிடும்; எனவே அவரிடம் மற்றொரு நீதியும் இருக்கிறது; அது வெளிப்படுத்தப்பட்ட ஒரு சித்தத்திற்குக் கீழ்ப்படிதல் அல்லது கிரியையில் சாதித்ததைச் சார்ந்திருக்கிறது. பாவிகளின் பாவம் மூடப்படும்படியாக இந்த நீதியைக்கொண்டே அவர் அவர்களை மூடுகிறார். 'ஒரே மனிதனுடைய கீழ்ப்படிதலினாலே அநேகர் நீதிமான்களாக்கப் படுவார்கள்' (ரோமர் 5:19) என்று எழுதப்பட்டிருக்கிறது'' என்றான் துணிவுள்ளவன்.

"அப்படியானால் மற்ற நீதிகளினால் நமக்குப் பயன் ஒன்றும் இல்லையா?" என்று கேட்டாள் கிறிஸ்தீனாள்.

''அவையும் நமக்குப் பயனளிப்பவைதான். அவை அவருடைய இயல்புகளுக்கும், பணிகளுக்கும் அத்தியாவசிய மானவையாக இருந்தாலும்கூட அவை மற்றவர்களுக்கு அளிக்கப்படக்கூடாதவையாக இருந்தாலும்கூட, அவை நீதிமானாக்கும் நீதியினால் உண்டாகும் பயன்கள் வெளிப் படும்படி செய்யக்கூடிய வல்லமையைப் பெற்றுள்ளன. அவரது தெய்வீக இயல்பின் நீதியானது அவரது கீழ்ப்படிதலை மகிமைப்படுத்துகிறது; அவரது மானிட இயல்பின் நீதியானது அவரது கீழ்ப்படிதலுக்கு நீதிமானாக்கும் வல்லமையைக் கொடுக்கிறது; அவரது ஊழியத்திற்கேற்றபடி இந்த இரண்டு இயல்புகளின் இணைப்பில் இருக்கும் நீதியானது, அந்த நீதி எதற்காக அபிஷேகம் பெற்றிருக்கிறதோ அந்த மத்தியஸ்தம் பண்ணும் கிரியையைச் செய்து முடிக்கத்தக்க அதிகாரத்தைக் கொடுக்கிறது.

"ஆண்டவராகிய இயேசுவுக்குத் தேவையில்லாத ஒரு நீதியாக இது இருக்கிறது. ஏனென்றால் இந்த நீதி இல்லாமலே அவர் ஆண்டவராக இருக்கிறார். அதுமட்டுமன்றி மனிதனாக கிறிஸ்துவை நீதியுள்ளவராகச் செய்யும்படியான அவசியமே இல்லாத மற்றொரு நீதியும் இருக்கிறது; ஏனென்றால் இந்த நீதி

இல்லாமலே அவர் பரிபூரண மனிதராக இருக்கிறார். அதுமட்டுமா? தேவனும், மனிதனுமாகிய கிறிஸ்துவுக்குத் தேவையில்லாத நீதியும் இருக்கிறது; ஏனென்றால் அந்த நீதி இல்லாமலே அவர் தேவமனிதனாக இருக்கிறார். கிறிஸ்து தேவனாகவும், மனிதனாகவும், தேவமனிதனாகவும் இருப்பதற்குத் தேவையில்லாத ஒரு நீதியும் இருக்கிறது; எனவே அவரால் இதை மற்றவர்களுக்கு அளிக்க முடியும். இது நீதிமானாக்கும் நீதியாக இருக்கிறது; அவருக்கு இது தேவையில்லாதபடியால் அவர் அதை மற்றவர்களுக்கு அளிக்கிறார். இது 'நீதியாகிய ஈவின் பரிபூரணம்' (ரோமர் 5:17) என்று அழைக்கப்படுகிறது. இந்த நீதியை ஆண்டவராகிய இயேசு கிறிஸ்து தாமே நியாயப் பிரமாணத்தின்கீழ் உண்டாக்கியபடியினால், கண்டிப்பாக மற்றவர்களுக்குக் கொடுக்கப்பட்டுவிட வேண்டும்; ஏனென்றால் இந்த நியாயப் பிரமாணமானது தனக்குக் கீழிருக்கும் ஒருவர் நீதியாக மட்டுமன்றி, அன்புடனும் நடந்துகொள்ள வேண்டு மென்று கட்டுப்படுத்துகிறது. எனவே நியாயப்பிரமாணத்தின்படி இரண்டு மேலாடைகளைக் கொண்டுள்ள ஒருவன், அதில் ஒன்றை ஆடையற்ற ஒருவனுக்குக் கொடுத்துவிட வேண்டும். இப்போது ஆண்டவராகிய கிறிஸ்து இரண்டு அங்கிகளைப் பெற்றுள்ளார். ஒன்று அவருக்கு, மற்றொன்று பிறருக்குக் கொடுப்பதற்காக! எனவே அங்கியேயற்ற ஒருவருக்கு அவர் அதை இலவசமாக அருளுகிறார். இவ்வாறுதான் கிறிஸ்தீனாள் நீயும், இரக்கம் நீயும், பிள்ளைகளும் இங்கே வந்திருக்கிறீர்கள்; மற்றொரு மனிதனின் கிரியையினால் மன்னிப்பைப் பெற்றுள்ளீர்கள். தமது கிரியையினால் தாம் சம்பாதித்துக் கொண்டதை ஆண்டவராகிய இயேசு கிறிஸ்து அடுத்து அவரைச் சந்திக்கும் எளியவனுக்கும் அதை அருளிவிடுகிறார்.

"அதுமட்டுமன்றி, கிரியையினால் மன்னிப்பைப் பெற வேண்டுமானால், கிரயமாக ஏதேனும் ஒன்று தேவனுக்குக் கொடுக்கப்பட வேண்டும்; அதுமட்டுமன்றி, நம்மை மூடுவதற்கான ஒன்றும் ஆயத்தப்படுத்தப்பட வேண்டியிருக்கிறது. பாவமானது நீதியான நியாயப்பிரமாணத்தின் சாபத்துக்குள் நம்மைக் கொண்டு சென்றுள்ளது; நாம் இந்தச் சாபத்திலிருந்து மீட்பின்மூலம் நீதிமானாக்கப்படவேண்டும்; நாம் செய்த தவறுகளுக்குத் தக்கதான அபராதம் செலுத்தப்பட வேண்டும். உங்களுடைய இடத்தில், உங்கள் மீறுதல்களுக்கான தண்டனையான மரணத்தை ஏற்று தாமே சிந்திய இரத்தத்தினால் இயேசுவானவர் இந்த அபராதத்தைச் செலுத்தியுள்ளார். அவர் இவ்வாறு தமது இரத்தத்தால், உங்கள் மீறுதல்களின் தண்டனையிலிருந்து உங்களை மீட்டுள்ளார்; நீதியினால் கறைப்பட்டு, உருக்குலைந்த உங்கள் ஆத்துமாவை மூடியுள்ளார்;

இதன் காரணமாக, தேவன் இந்த உலகத்தை நியாயந்தீர்க்க வரும்போது, உங்களைத் தண்டிக்காமல் கடந்துபோகிறார்" என்றான் துணிவுள்ளவன்.

"எவ்வளவு துணிகரமான கிரியை! நாங்கள் வார்த்தையினாலும், கிரியையினாலும் மன்னிப்பைப் பெறுவது எப்படியென்பதை நான் அறிந்துகொண்டேன். இரக்கமே, பிள்ளைகளே, நீங்களும் இதை ஒருபோதும் மறந்துபோகாதிருங்கள். என் அன்புக்குரிய கிறிஸ்தியானின் சுமை விழுந்துபோகும்படி செய்ததும், அவரை மகிழ்ச்சியில் துள்ளிக் குதிக்கும்படி செய்ததும் இந்தக் கிரியைதானே?'' என்று கேட்டாள் கிறிஸ்தீனாள்.

''ஆம், இதைப்பற்றிய விசுவாசமே பாவச் சுமையின் கட்டுகளை அறுத்துப்போட்டது. வேறு எந்த வழியிலும் இதை அறுக்க முடியாது! இந்த இரட்சிப்பின் வல்லமையை அவன் உணர்ந்துகொள்ள வேண்டும் என்பதற்காகவே அவன் தனது பாவச் சுமையைச் சுமந்துகொண்டே சிலுவைவரை செல்ல வேண்டுமென்று ஆண்டவர் விரும்பினார்'' என்றான் துணிவுள்ளவன்.

''நானும் அப்படித்தான் நினைத்தேன். முன்னரே என் உள்ளத்தில் பாரமின்றி, மகிழ்ச்சி நிலவினாலும்கூட, இப்போது பத்து மடங்கு சந்தோஷத்தை நான் உணருகிறேன். இந்த உலகத்திலேயே அதிக பாரத்தை சுமப்பவன்கூட, என்னைப் போல விசுவாசிப்பானேயாகில், அவனும் அளவற்ற மகிழ்ச்சியைப் பெறுவான் என்பதை உணருகிறேன் என்றாள் கிறிஸ்தீனாள்.

"இப்படிப்பட்ட காரியங்களைப்பற்றிப் பேசிக்கொள்வதே நமது மனபாரத்தைக் குறைத்து, ஆறுதலைத் தரக்கூடியதாக இருக்கிறது அல்லவா? நமக்குள் ஒரு புதுவித அன்பையும் அது தோற்றுவிக்கிறது. பாவ மன்னிப்பானது வார்த்தையினால் மட்டுமன்றி, செய்கையினாலும்கூட நமக்கு அருளப்படுகிறது என்பதை அறிந்துகொள்ளும் ஒருவன், நமக்காக அந்தக் கிரியையைச் செய்துமுடித்தவர்மீது அன்பு செலுத்தாமல் இருப்பானா?" என்றான் துணிவுள்ளவன்.

''உண்மைதான்! அவர் எனக்காக இரத்தம் சிந்தினார் என்பதை சிந்திக்கும்போது என் இருதயத்திலும் இரத்தம் கசிகிறது. எனக்கு அன்பானவரே! ஆசீர்வதிக்கப்பட்டவரே! நீர் என்னைப் பெற்றுக்கொள்ளத் தகுதியானவர். கிரயத்தினால் நீர் என்னை வாங்கிக் கொண்டுள்ளீர்! என் முழுமையையும் பெற்றுக்கொள்ள நீர் தகுதியானவர்; என் மதிப்பைவிட

பத்தாயிரம் மடங்கு கிரயத்தை நீர் எனக்காகச் செலுத்தியுள்ளீர்! உமது கிரியை என் கணவரை கண்கலங்கும்படி செய்ததிலும், அவரைத் தள்ளாடியபடி நடக்கச் செய்ததிலும் வியப்பொன்று மில்லை. நானும் அவருடன்கூட பயணம் செல்ல வேண்டு மென்று விரும்பியிருந்தாலும், அதற்கு மறுத்துவிட்ட பாவியாகி விட்டேனே. நான் அவரைத் தனியாகச் செல்லும்படி விட்டுவிட்டேன். இரக்கமே! உன் தாயும், தந்தையும், பயந்தவளும் கூட நம்முடன் வந்திருந்தால் நலமாக இருந்திருக்குமே! காம மங்கையும்கூட வந்திருக்கலாமே! உண்மையிலேயே அவர்களின் இருதயங்கள் தொடப்பட்டிருக்கும். ஒருத்தியின் பயமும், மற்றவளின் காம இச்சையும் மறைந்துபோய், பின்வாங்கிப் போகாமல் அவர்கள் தங்கள் பயணத்தைத் தொடரும்படி செய்திருக்குமே!'' என்று அங்கலாய்த்தாள் கிறிஸ்தீனாள்.

“அன்பின் மிகுதியினால் நீ இவ்வாறெல்லாம் பேசுகிறாய். ஆனால் இந்த அன்பு மாறாமல் இருக்கும் என்று நினைக்கிறாயா? எல்லாருமே இதை அறிந்தவர்கள் அல்லர்; இரத்தம் வழியும் கிறிஸ்துவைப் பார்த்தவர்கள் அனைவருமே இந்தப் பாக்கியத்தைப் பெற்றவர்கள் என்றும் கூறிவிட முடியாது. அவரது இருதயத்திலிருந்து வழிந்த இரத்தத்தைப் பார்த்தபின்னரும், அதற்காக அழுது புலம்பாமல், தூர அவரைப் பரியாசம் செய்தவர்களும் உண்டு; அவரைப் பின்பற்றாமல் தங்கள் இருதயங்களைக் கடினப்படுத்திக் கொண்டார்கள். நான் சொன்ன காரியங்களை நீங்கள் ஆண்டவருடைய அருளால் தியானிப்பதினாலேயே ஆவியின் அன்பைப் பெற்றுக் கொள்கிறீர்கள். தாய்க் கோழியானது தனது பொதுவான குரலினால் குஞ்சுகளுக்கு எந்த இரையையும் கொடுக்க அழைப்பதில்லை என்பதை அறிந்து கொண்டீர்களே, அதை மறந்துபோக வேண்டாம். விசேஷித்த கிருபையினாலேயே இது உங்களுக்கு அருளப்பட்டிருக்கிறது'' என்று விளக்கிக் கூறினான் துணிச்சலுள்ளவன்.

கிறிஸ்தியான் தனது பயணத்தின்போது கடந்து சென்ற, **அறிவிலி, சோம்பேறி, துணிச்சல்காரன்** என்ற மூவரும் உறங்கிக் கொண்டிருந்த இடம் வரை கிறிஸ்தீனாளும், அவளுடன் சென்றவர்களும் அடைவதை நான் என் கனவில் கண்டேன். பாதைக்குச் சற்றுத் தொலைவில் அவர்கள் இரும்புச் சங்கிலிகளில் தொங்குவதைப் பயணிகள் கண்டார்கள்.

‘‘இந்த மூவரும் யார்? ஏன் இங்கே தொங்கவிடப் பட்டுள்ளார்கள்?'' என்று இரக்கம் தங்கள் வழிகாட்டியிடம் கேட்டாள்.

"இந்த மூவரும் தீய குணமுள்ள மனிதர்கள், அவர்கள் பயணம் செல்ல மனமில்லாமல் இருந்ததோடு, அப்படிச் செல்பவர்களுக்கும் இடறலாக இருந்தார்கள். பேதமைக் குணத்தையும், சோம்பேறித்தனத்தையும் கொண்டிருந்த இவர்கள் மற்றவர்களும் தங்கள் குணத்தைப் பெறும்படி தூண்டினார்கள்; இறுதியில் எல்லாம் நலமாயிருக்கும் என்று முன் அனுமானம் செய்ய வைத்தார்கள். கிறிஸ்தியான் இவ்வழியே செல்லும்போது அவர்கள் உறங்கிக்கொண்டிருந்தார்கள். இப்போது தொங்கவிடப் பட்டுள்ளார்கள்" என்றான் துணிவுள்ளவன்.

"இவர்களால் மற்றவர்களுடைய பயணத்தைத் தடுத்துப் போடமுடியுமா?" என்று கேட்டாள் இரக்கம்.

"முடியும், அப்படி அநேகரை இவர்கள் வஞ்சித்திருக்கிறார்கள். **மெதுநடையன்** என்பவனை அவர்கள் இவ்வாறு தடுத்துப் போட்டார்கள். அதுமட்டுமா? **குறைமூச்சான், இதயமற்றவன், இச்சைக்கலைபவன், உறங்கும் தலையான்** என்பவர்களையும் **மந்தமகள்** என்ற பெண்ணையும் அவர்கள் பாதையைவிட்டு விலகும்படி செய்து தங்களைப்போல ஆக்கிவிட்டார்கள், உங்கள் ஆண்டவர் தமது மக்களைக் கடினமாக உழைக்கச் செய்பவர் என்று தவறாக அவதூறு பேசி அநேகருக்கு இடறலுண்டாக்கி னார்கள். நாம் நினைப்பதுபோல பரலோகம் அவ்வளவு மேன்மையானது அல்ல என்று பேசித் திரிந்தார்கள். அவரது ஊழியர்களில் மேன்மையானவர்களைக்கூட குழப்பம் விளைவிப்பவர்கள், வம்பிழுப்பவர்கள் என்று குறைகூறினார்கள். அதுமட்டுமா? தேவ அப்பத்தைத் தவிடு என்றும், மோட்சப் பயணம் செல்வது பயனற்ற, நோக்கமற்ற செயல் என்றும் கூறிவந்தார்கள்" என்றான் துணிவுள்ளவன்.

"அவர்கள் இப்படிப்பட்டவர்களால் அவர்களுக்காக ஒருபோதும் அனுதாபப்படப்போவதில்லை. அவர்களுக்கு நியாயமானதையே அவர்கள் பெற்றுள்ளார்கள். மற்றவர்களும் பார்த்து எச்சரிப்பு அடையும் வகையில் பாதையின் ஓரத்திலேயே அவர்களைத் தொங்க வைத்திருப்பது நல்லதுதான். ஆனால் அவர்களது குற்றங்களைப்பற்றி இரும்பு அல்லது பித்தளைத் தகட்டில் எழுதி இங்கே வைத்தால் அது அவர்களைப்போன்று கெட்ட மனிதர்களுக்கு எச்சரிக்கையாக இருக்குமல்லவா?" என்று கேட்டாள் கிறிஸ்தீனாள்.

"இன்னும் சற்றுத் தூரம் போனால் தகட்டில் எழுதி வைத்திருப்பதை நீ காணலாம்" என்று கூறினான் துணிவுள்ளவன்.

"அவர்கள் இப்படியே இருக்கட்டும். அவர்களது பெயர் தூற்றப்படட்டும். அவர்களுக்கு எதிராக அவர்களது குற்றங்களே

சாட்சி கூறட்டும். நல்லவேளை நாம் இங்கே வந்து சேருவதற்கு முன்னால் அவர்கள் தண்டிக்கப்பட்டு விட்டார்கள். இல்லாவிட்டால் எளிய பெண்களாகிய நம்மையும் எப்படியெல்லாம் ஏமாற்றியிருப்பார்களோ!" என்று கூறிய இரக்கம் பாடத் துவங்கினாள்.

"இதோ, தொங்கும் மூவரும்
சத்தியத்துக்கு விரோதமாய் நடந்தனரே!
தண்டனையின் அடையாளம் இதோ!
பயணம் வருவோருக்கு விரோதிகள்
என்றும் உணரட்டும் இதை!
பரிசுத்தத்தின் விரோதிகள் இவரே
உணர்வாய் ஆத்துமா நீயுமே!"

என்று அவள் பாடினாள்.

பயணிகள் இவ்வாறு நடந்து கடினமலையின் அடிவாரத்தை அடைவதை நான் என் கனவில் கண்டேன்.

11. பயணிகள் கடினமலைக்கு வந்துசேருதல்

பயணிகள் கடினமலையைச் சென்றடைந்தவுடன் அங்கே கிறிஸ்தியான் அனுபவித்த கடினங்களையெல்லாம் துணிவுள்ளவன் அவர்களுக்கு விவரித்துக் கூறினான்.

அவன் அவர்களை முதலில் ஒரு நீரூற்றண்டையில் அழைத்துச் சென்றான்.

"கிறிஸ்தியான் மலைமீது ஏறுவதற்குமுன்பு இதோ இந்த நீரூற்றில்தான் நீர் அருந்தினான். அப்போது அந்த நீர் தெளிவாகவும் சுத்தமாகவும் இருந்தது. ஆனால் பயணிகள் தாகத்தால் அவதிப்படவேண்டுமென்று பின்னர் யாரோ அதைக் கலக்கிவிட்டிருக்கிறார்கள்" என்று கூறினான் (எசே. 34:18, 19).

அவ்வளவு தூரம் பொறாமையினால் மற்றவர்களை அவதிப்படுத்துகிறார்களா?" என்று கேட்டாள் இரக்கம்.

"கவலைப்படாதீர்கள். இந்த நீரை மொண்டு சுவையும் நலமுமான ஒரு பாத்திரத்தில் ஊற்றிவையுங்கள். அப்போது கசடுகள் அடியில் சென்று தங்கிவிடும். தெளிந்த நீர் மேலே வரும். அதைக் குடிக்கலாம்" என்று ஆலோசனை கூறினான் துணிவுள்ளவன்.

கிறிஸ்தீனாளும் அவளுடன் சென்றவர்களும் அப்படியே செய்து தெளிந்த நீரைக் குடித்தார்கள். நாம் எந்தவிதக் கலப்படமான போதனைகளற்ற தெளிவான வேத வசன

சத்தியங்களை ஏற்றுகொள்ள வேண்டும் என்பதற்கு இது உருவகமாக இருக்கிறது.

பிறகு துணிவுள்ளவன் அடிவாரத்தில் வெளிவேஷம் என்பவனும் **மாய்மாலம்** என்பவனும் சென்று வழிதப்பிப்போன இரு பக்கவாட்டு வழிகளைச் சுட்டிக்காட்டினான்.

"இதோ இந்த இரண்டு வழிகளும் அபாயகரமான பாதைகள். கிறிஸ்தியான் இவ்வழியே வந்தபோது, இரண்டு பேர் இந்த வழிகளில் சென்று அழிந்துபோனார்கள். இந்தப் பாதையில் எவரும் செல்லக்கூடாது என்று சங்கிலி போட்டுத் தடுத்திருந்தாலும், எச்சரிப்பு பலகை நடப்பட்டிருந்தாலும் இன்னும்கூட மலையின்மீது ஏறுவது கடினமென்ற எண்ணத்தில் இந்த வழிகளில் சென்று அழிந்துபோகிறார்கள்'' என்று வருத்தத்துடன் கூறினான் துணிவுள்ளவன்.

"துரோகிகளுடைய வழியோ கரடு முரடானது? (நீதி. 13:15) என்று கூறப்பட்டிருக்கிறது அல்லவா? தடைகளைத் தாண்டி இவ்வாறு செல்பவர்கள் எப்படித்தான் தப்பித்துக்கொள்ள முடியும்?" என்று அங்கலாய்த்தாள் கிறிஸ்தீனாள்.

''அப்படிச் செல்பவர்களிடம் இராஜாவின் சேவகர் எவரேனும் வந்து அவர்கள் தவறான வழியில் செல்கிறார்கள், ஆபத்து வரும் என்று எச்சரித்தால் என்ன பதில் சொல்லுகிறார்கள் தெரியுமா? 'நீ கர்த்தருடைய நாமத்தில் எங்களுக்குச் சொன்ன வார்த்தையின்படியே நாங்கள் உனக்குச் செவிகொடாமல், எங்கள் வாயிலிருந்து புறப்பட்ட எல்லா வார்த்தையின்படியேயும் நாங்கள் செய்வோம்' (எரே. 44:16, 17) என்று கூறிவிடுகிறார்கள். சங்கிலியாலும், எச்சரிப்பாலும், பள்ளம் வெட்டப்பட்டிருப்பதினாலும் மட்டும் அந்தப் பாதையில் செல்வது தடுக்கப்பட்டிருக்கவில்லை. இன்னும் சற்றுத்தொலைவு சென்றால் குறுக்குச் சுவர்கூட எழுப்பியிருக்கிறார்கள். ஆனால் இவர்களோ அதையும் தாண்டிக் குதித்துச் சென்று விடுகிறார்கள்" என்று கூறினாள் துணிவுள்ளவன்.

''அவர்களது சோம்பேறித்தனத்தைத்தான் இது வெளிப் படுத்துகிறது. கடினமாக உழைக்க அவர்கள் விரும்புவதேயில்லை. 'சோம்பேறியின் வழி முள்வேலிக்குச் சமானம்' (நீதி. 15:19) என்று நீதிமொழிகளில் கூறப்பட்டுள்ளது போன்றுதான் அவர்கள் நடந்துகொள்கிறார்கள். இந்த மலையின்மீது ஏறி பட்டணத்துக்குச் செல்வது கடினமாக இருக்கிறபடியால், அவர்கள் கண்ணிகள் நிறைந்த பாதையைத் தெரிந்துகொள்கிறார்கள் போலும்!" என்று அங்கலாய்த்தாள் கிறிஸ்தீனாள்.

அதன்பிறகு அவர்கள் கடினமலையின்மீது ஏறிச் சென்றார்கள். அவர்கள் மலையுச்சியை அடையுமுன்பாக கிறிஸ்தீனாளுக்கு மூச்சிரைத்தது.

“அப்பப்பா, எவ்வளவு செங்குத்தான ஏற்றம்! பலசாலியைக் கூட களைப்படைந்துபோக செய்துவிடும். தங்கள் ஆத்துமாவை விட, உடல் சுகத்தை விரும்புகிறவர்கள் அதனால்தான் அந்த இலகுவான பாதைகளைத் தெரிந்துகொள்கிறார்கள் போலும்!” என்று சலித்துக்கொண்டாள் அவள்.

“என்னால் இனி ஓரடிகூட எடுத்துவைக்க முடியாது. உட்கார்ந்து இளைப்பாற வேண்டும்!” என்று புலம்பினாள் இரக்கம்.

பிள்ளைகள் தொடர்ந்து நடக்க முடியாமல் அழத் துவங்கினார்கள்.

“கவலைப்படாதீர்கள். இந்தக் கடினமான தரையில் அமர வேண்டாம். அதோ தெரிகிறதே, அதுதான் இராஜாவின் நந்தவனம். அங்கே சென்று இளைப்பாறலாம்” என்று கூறிய துணிவுள்ளவன் ஒரு சிறுவனின் கையைப் பிடித்துக்கொண்டு, முன்னால் நடந்தான்.

அந்த நந்தவனத்தை அடைவதற்குள் அவர்கள் வியர்வையினால் முற்றிலுமாக நனைந்து போயிருந்தார்கள். அப்படியே சோர்ந்துபோய் அமர்ந்துவிட்டார்கள்.

அப்போது இரக்கம், “கடின உழைப்புக்குப் பிறகு ஓய்வெடுப்பது எவ்வளவு இனிமையாக இருக்கிறது! பயணிகளின் இளவரசர் அவர்களுக்காக இவ்வாறு இளைப்பாறும் தலங்களை உருவாக்கி வைத்திருப்பது எவ்வளவு நன்மையானது! இந்த இளைப்பாறும் தலத்தைப்பற்றி நான் அதிகமாகக் கேள்விப் பட்டிருந்தாலும் இப்போதுதான் அதை முதன்முறையாகப் பார்க்கிறேன். ஆனால் இங்கே படுத்து உறங்கிவிடாமல் எச்சரிப்போடு இருப்போம். அப்படி உறங்கினால் கிறிஸ்தியான் பெரிய பிரச்சினையைச் சந்திக்க வேண்டியிருந்தது என்று கேள்விப்பட்டிருக்கிறேன்” என்று கூறினாள்.

துணிவுள்ளவன் கிறிஸ்தீனாளின் மக்களைப் பார்த்து, “வாருங்கள் பிள்ளைகளே, இப்போது எப்படி இருக்கிறீர்கள்? பயணம் புறப்பட்டு வந்ததைப்பற்றி என்ன நினைக்கிறீர்கள்?” என்று கேட்டான்.

“நான் முற்றிலும் சோர்ந்து விட்டேன். ஆனாலும் நீர் என்னைப் கைப்பிடித்து அழைத்து வந்ததற்கு உமக்கு நன்றி. என்

அம்மா முன்பு என்னிடம் கூறியிருந்தது என் நினைவுக்கு வருகிறது. பரலோகத்துக்குச் செல்லும்வழி ஏணியில் ஏறுவதுபோலக் கடினமானது என்றும், நரகத்துக்கு செல்லும்வழி மலையிலிருந்து இறங்குவதுபோல எளிதானது என்றும் அவர்கள் கூறியிருக்கிறார்கள். சுலபமாக மலையின்மீது இறங்கி நரகத்தைச் சென்றடைவதைவிட, ஏணியில் ஏறி மோட்சத்துக்குச் செல்வதையே நான் விரும்புகிறேன்'' என்று கூறினான் கடைக்குட்டிப் பையன்.

''மலையிறங்குவது மிகவும் எளிது என்று கூறும் பழமொழிகூட இருக்கிறது'' என்றாள் இரக்கம்.

உடனே யாக்கோபு என்ற பெயரையுடைய அந்த கடைக்குட்டிப் பையன், "மலையிறங்குவதுகூட கடினமானதாகக் காணப்படும் காலமும் வரப்போகிறது என்றே நான் நினைக்கிறேன்" என்று பதில் கூறினான்.

"புத்திசாலிப் பையன்! சரியான பதிலைக் கொடுத்தாய்" என்று துணிவுள்ளவன் அவனைப் பாராட்டினான்.

அதைக் கேட்டவுடன் இரக்கம் சிரித்தாள்; பையனோ நாணிக் கோணினான்!

அப்போது கிறிஸ்தீனாள், "காலாற அமர்ந்திருக்கும் இந்த வேளையில் ஏதாவது சாப்பிடலாம் அல்லவா? விளக்கம் கூறுபவரின் வீட்டை விட்டு வெளியே வரும்போது அவர் என்னிடம் ஒரு மாதுளம் பழத்தையும், தேன் அடையையும், ஒரு குப்பி திராட்சரசத்தையும் கொடுத்தார். அவற்றை உண்ணலாமே?" என்று கேட்டாள்.

''அவர் உன்னைத் தனியே அழைத்தபோது ஏதாவது கொடுத்திருப்பார் என்றுதான் நான் நினைத்தேன்'' என்றாள் இரக்கம்.

''அவர் இவற்றைத்தான் கொடுத்தார்'' என்று கூறிய கிறிஸ்தீனாள் மேலும் தொடர்ந்து, ''வீட்டைவிட்டுப் புறப்படும்போது நீயும் என்னுடன் பயணம் புறப்பட்டு வருவதால் என்னிடமுள்ள நன்மைகள் அனைத்தையும் பகிர்ந்து கொடுப்பேன் என்று கூறியிருந்தேன் அல்லவா?'' என்று சொல்லி இரக்கத்திடம் அவளுக்குரிய பங்கை அளித்தாள்.

பையன்களும் அந்த உணவில் பங்கு கொண்டார்கள். அப்போது கிறிஸ்தீனாள் துணிவுள்ளவனைப் பார்த்து, "நீரும் இந்த உணவில் கொஞ்சம் எடுத்துக் கொள்கிறீரா?'' என்று கேட்டாள்.

“நீங்கள்தான் பயணம் புறப்பட்டுச் செல்கிறீர்கள். இவற்றை உண்பது உங்களுக்குப் பயன்தரும். நானோ இன்னும் சற்று நேரத்துக்குள் திரும்பிச் சென்றுவிடுவேன். வீட்டில் இத்தகைய உணவு எனக்காகக் காத்திருக்கும்” என்று கூறி மறுத்துவிட்டான் துணிவுள்ளவன்.

மற்றவர் சாப்பிட்டு முடித்து, திராட்சரசத்தைப் பருகியபிறகு மேலும் சற்று நேரம் அளவளாவியபடி அமர்ந்திருந்தார்கள்.

அப்போது வழிகாட்டியாக வந்த துணிவுள்ளவன், “நேரம் கடந்துவிட்டது. இப்போதே புறப்படுவதுதான் நல்லது” என்று ஆலோசனை கூறினான்.

அவர்கள் புறப்பட்டார்கள். பிள்ளைகள் முன்னால் சென்று கொண்டிருந்தார்கள். தான் திராட்சரசக் குப்பியை மறந்து வைத்துவிட்டு வந்திருப்பதை உணர்ந்த கிறிஸ்தீனாள் அதை எடுத்துவரும்படி தன் பையனை அனுப்பினாள்.

“எல்லாருமே இந்த இடத்தில் எதையாவது தொலைத்து விடுவார்கள்போலும். கிறிஸ்தியானோ தனது சுருளை மறந்து விட்டுவிட்டுப் போனான். இப்போது கிறிஸ்தீனாள் தன் குப்பியை வைத்து வந்துவிட்டாள். இதற்குக் காரணம் என்ன ஐயா?” என்று இரக்கம் துணிவுள்ளவனிடம் கேட்டாள்.

“உறக்கம் அல்லது ஞாபகமறதிதான் இதற்குக் காரணம். சிலர் விழித்திருக்க வேண்டிய நேரத்தில் உறங்கிவிடுகிறார்கள்; சிலர் நினைவில் வைக்க வேண்டியவற்றை மறந்துவிடுகிறார்கள். இதனால்தான் இத்தகைய இளைப்பாறும் தலங்களில் பயணிகள் எதையாவது இழந்துபோகிறார்கள். பயணிகள் எப்போதும் விழிப்புள்ளவர்களாக இருக்க வேண்டும். மகிழ்ச்சியான வேளைகளிலும்கூட அவர்கள் ஏற்கெனவே பெற்றுக்கொண்ட வற்றை மறந்துவிடக் கூடாது. அப்படி மறந்துவிட்டால் மகிழ்ச்சி முடிவில் கண்ணீராகவும், பிரகாசம் முடிவில் மந்தமாகவும் மாறிவிடும். இந்த இடத்தில் கிறிஸ்தியான் பெற்ற அனுபவங்களை மறந்துவிடாதீர்கள்” என்று எச்சரித்தான் துணிவுள்ளவன்.

அவர்கள் மேலும் நடந்து, அவநம்பிக்கையும், கோழையும் கிறிஸ்தியானைச் சந்தித்து சிங்கத்தைப் பற்றிய பயத்தில் அவனைத் திரும்பச் செல்லும்படி வற்புறுத்திய இடத்துக்கு வந்து சேர்ந்தார்கள். அங்கே ஒரு மேடை எழுப்பப்பட்டு, அதன்மீது பதிக்கப்பட்ட ஒரு செப்புத்தகட்டில் ஏதோ வாசகம் எழுதப்பட்டிருப்பதைக் கண்டார்கள். எதற்காக அந்த மேடை எழுப்பப்பட்டிருந்தது என்பதை அந்த வாசகம் தெளிவாக விளக்கியது.

"இந்த மேடையைக் காண்போர்
என்றும் எச்சரிப்புடன் இருப்பீர்!
நெஞ்சையும் நாவையும் காப்பீர்!
இங்கு அழிந்தோர் அநேகர்!

என்ற வாசகத்தின்கீழ் பின்வருமாறு எழுதப்பட்டிருந்தது; "சந்தேகத்தின் காரணமாகவோ அல்லது அச்சத்தின் காரணமாகவோ தொடர்ந்து பயணம் செல்லப் பயப்படுகிறவர்களுக்குரிய தண்டனையை நினைப்பூட்டவே இந்த மேடை எழுப்பப்பட்டுள்ளது. பயணம் சென்ற கிறிஸ்தியானுக்கு தடை ஏற்படுத்த முயன்றதற்காக பழுக்கக் காய்ச்சிய இரும்புத் துண்டினால் நாவு துளைக்கப்பட்ட தண்டனையை இந்த மேடைமீதுதான் பெற்றார்கள்!"

இவ்வாறு எழுதப்பட்டிருப்பதைப் படித்தவுடன் இரக்கம் "இது ஒரு வசனத்தை எனக்கு நினைவூட்டுகிறது. 'கபட நாவே, உனக்கு என்ன கிடைக்கும்? உனக்கு என்ன செய்யப்படும்? பலவானுடைய கூர்மையான அம்புகளும், சூரைச் செடிகளை எரிக்கும் தழலுமே கிடைக்கும்' (சங். 120:3, 4) என்ற வசனமே அது!" என்று கூறினாள்.

அவர்கள் மேலும் நடந்துசென்று சிங்கங்கள் இருக்குமிடத்துக்கு வந்து சேர்ந்தார்கள். துணிவுள்ளவன் பலசாலியாக இருந்தபடியால் அவன் சிங்கங்களைக்கண்டு பயப்படவில்லை. ஆனால் முன்னால் சென்ற பிள்ளைகள் சிங்கங்களைக்கண்டு பயந்து பின்னால் ஓடிவந்து பதுங்கிக் கொண்டார்கள்.

இதைக் கண்டு புன்முறுவல் செய்த துணிவுள்ளவன், "என்ன மக்களே, ஆபத்து ஏதும் இல்லாத வேளைகளில் முன்னால் உற்சாகமாகச் சென்றீர்கள். இப்போதோ சிங்கங்களைக் கண்டவுடன் பின்னால் வந்து ஒளிந்துகொள்கிறீர்களே!" என்று கேட்டான்.

சிங்கங்களை நெருங்கியவுடன் துணிவுள்ளவன் வாளை உருவித் தன் கையில் வைத்தபடி சிங்கங்களின் நடுவே பயணிகளை வழிநடத்திச் சென்றான்.

அப்போது அங்கே ஒருவன் வந்தான். சிங்கங்களைத் தூண்டிவிட்டு, பயணிகள் முன்னேறுவதை தடுப்பதே அவன் நோக்கமாக இருந்தது.

பயணிகளைக் கொன்றுபோடுவதையே அவன் வழக்கமாகக் கொண்டிருந்தபடியால் அவனுக்கு **இரத்தவெறியன்** என்ற பெயர் ஏற்பட்டிருந்தது; அவன் இராட்சத இனத்தைச் சேர்ந்தவனாக இருந்தான்.

“இங்கே ஏன் வருகிறீர்கள்?” என்று அவன் கேட்டான்.

“இந்தப் பெண்களும், சிறு பிள்ளைகளும் மோட்சப் பயணம் செல்கிறார்கள். இந்த வழியாகத்தான் அவர்கள் செல்ல வேண்டும். உன்னைப்பற்றியோ, சிங்கங்களைப் பற்றியோ கவலைப்படாமல் அவர்கள் இந்த வழியாகச் செல்வார்கள்” என்று உறுதியாகக் கூறினான் துணிவுள்ளவன்.

“இது அவர்கள் வழியல்ல. இந்த வழியாக அவர்கள் போகக் கூடாது. நான் அவர்களைப் போகவிடமாட்டேன். சிங்கங்களைத் தூண்டிவிடுவேன்” என்று உறுமினான் இரத்தவெறியன்.

சிங்கங்களின் கெர்ச்சிப்பும் இரத்தவெறியனின் மூர்க்கமும் நீண்ட காலமாக அவ்வழியே பயணிகள் செல்வதைத் தடுத்து வந்தபடியால், அப்பாதையே நடப்பவரில்லாமல் புல்லும் புதருமாக மண்டிக் கிடந்தது!

“அநேகர் அரசருடைய இந்தப் பாதையின் வழியே செல்லவில்லை என்பதாலும், பலரும் பக்கவாட்டுப் பாதைகளின் வழியே செல்கிறார்கள் என்பதாலும் நாங்கள் இந்தப் பாதையில் செல்வதைத் தடுக்க முடியுமா? இதோ, இஸ்ரவேலின் தாயாக நான் எழும்பி, மீண்டும் இந்தப் பாதையில் செல்வதைத் துவங்கப் போகிறேன்” என்று திடமனதோடு கூறினாள் கிறிஸ்தீனாள்.

இரத்த வெறியின் சிங்கங்களின்மீது ஆணையிட்டு அவர்கள் அவ்வழியே செல்லக் கூடாதென்று தடுத்தான். திரும்பிச் செல்லுங்கள் என்று அவர்களை எச்சரித்தான்.

வழிகாட்டியாக உடன்சென்ற துணிவுள்ளவன் தனது பட்டயத்தை உருவிக்கொண்டு முன்னால் சென்றான். இரத்தவெறியன் பின்வாங்கினான்.

“என்ன இது? என்னுடைய இடத்திலேயே வந்து என்னை வீழ்த்த முடியும் என்று நினைக்கிறாயா?” என்று கோபமாகக் கேட்டான் இரத்த வெறியன்.

“இது உன்னுடைய இடமல்ல! அரசரின் இராஜபாதையில் தான் நாங்கள் செல்லுகிறோம். நீதான் வழியில் உன்னுடைய சிங்கங்களை வைத்துப் பயமுறுத்திக்கொண்டிருக்கிறாய். ஆனாலும் பலவீனரான இந்தப் பெண்களும், சிறுவர்களும் இந்தப் பாதையில் செல்லத்தான் போகிறார்கள்” என்று கூறிய துணிவுள்ளவன் பட்டயத்தினால் அவனைத் தாக்கினான்.

இரத்த வெறியன் கீழே சாய்ந்தான். துணிவுள்ளவன் பட்டயத்தினால் அவனது கையைத் துண்டித்தான். இரத்த வெறியன் பெருங்குரலில் உறுமினான். ஆனால் அவனால்

அசையமுடியவில்லை. அவன் எழுப்பிய மரண ஓலம் பயங்கரமாக இருந்தது, சிங்கங்கள் இன்னமும் சங்கிலியால் கட்டப்பட்டிருந்தன. இரத்த வெறியனும் மரித்துப்போனபடியால், பயணிகள் தொடர்ந்து செல்ல முடிந்தது.

"வாருங்கள், என் பின்னால்! சிங்கங்களால் ஆபத்து வராது!" என்று கூறிய துணிவுள்ளவன், சிங்கங்களின் நடுவே அவர்களை வழிநடத்திச் சென்றான். என்றாலும்கூட சிங்கங்களைக் கடந்து சென்றபோது பயணிகள் உடலில் நடுக்கம் ஏற்பட்டது. எந்தவித ஆபத்துமின்றி அவர்கள் அந்த இடத்தைக் கடந்து சென்றார்கள்.

12. அலங்கார மாளிகையில் பயணிகள்

சற்றுத் தொலைவில் வாயிற்காப்போனின் வீடு இருப்பதைக் கண்ட பயணிகள் துரிதமாக அங்கே சென்றார்கள். இதற்குள் இரவு வேளையாகிவிட்டிருந்தது.

வீட்டை நெருங்கியவுடன் வாயிற்காப்போனை அழைத்தபடி, வழிகாட்டி கதவைத்தட்டினார்.

"யார் அங்கே?" என்று வாயிற்காப்போன் கேட்டான்.

"நான்தான்" என்றார் வழிகாட்டி.

அவர் அடிக்கடி பயணிகளை அங்கே அழைத்து வந்திருப்பதால் அவரது குரலை அடையாளம் கண்டுகொண்ட வாயிற்காப்போன் கதவைத் திறந்தான்.

அவன் துணிவுள்ளவனை மட்டுமே கண்டான். மற்றவர்கள் அவருக்கு பின்னால் நின்றுகொண்டிருந்தார்கள்.

"என்ன துணிவுள்ளவரே, இவ்வாறு இரவு வேளையில் இங்கே வந்திருக்கிறீர்கள்?" என்று கேட்டான் வாயிற்காப்போன்.

"நமது ஆண்டவருடைய கட்டளைப்படி நான் சில பயணிகளைக் கூட்டிக்கொண்டு வந்துள்ளேன். வழியில் சிங்கங்களைக் கொண்டு அந்த அரக்கன் பயணிகளைத் தடுத்து நிறுத்த முயன்றதால்தான் தாமதமாகிவிட்டது. ஆனால் நான் அந்த அரக்கனை வீழ்த்திவிட்டுப் பயணிகளைப் பத்திரமாகக் கூட்டிக்கொண்டு வந்துவிட்டேன்" என்றார் துணிவுள்ளவன்.

"நீங்களும் உள்ளே வந்து காலைவரை தங்கிவிட்டுச் செல்லுங்களேன்" என்று அழைத்தான் வாயிற்காப்போன்.

"இல்லை, இன்று இரவே நான் என் ஆண்டவரிடம் திரும்பிச் செல்ல வேண்டும்" என்று கூறிவிட்டார் துணிவுள்ளவன்.

"என்ன ஐயா இது? எங்களை அன்போடும், பாதுகாப்போடும் இவ்வளவு தூரம் நடத்தி வந்துவிட்டு இப்போது திரும்பிச் செல்கிறேன் என்கிறீரே! எங்கள் மனம் வேதனைப்படுகிறதே! எங்களுக்காக எவ்வளவு துணிவுடன் போரிட்டீர்! எவ்வளவு ஆலோசனைகளைக் கூறி வழி நடத்தி வந்தீர்கள்! எங்களிடம் நீர் காட்டிய அன்பையும் செய்த உதவியையும் மறக்க முடியுமா?" என்று கண்ணீர் மல்கக் கூறினாள் கிறிஸ்தீனாள்.

"நீங்கள் பயணம் முடியும்வரை எங்களுக்குத் துணையாக வருவீர்கள் என்றல்லவா நினைத்தோம்? எங்களைப் பாதுகாக்கும் ஒருவரின் துணையின்றி பெண்களாகிய நாங்கள் எவ்வாறு பயணத்தின் ஆபத்துக்களைச் சமாளிக்கப்போகிறோம்?" என்று அங்கலாய்த்தாள் இரக்கம்.

பிள்ளைகளில் சிறுவனாகிய யாக்கோபு, "ஐயா, நாங்கள் பலவீனமானவர்கள், பாதையோ அபாயகரமானது! எங்களோடு வந்து எங்களுக்கு உதவி செய்யுங்கள்" என்று கெஞ்சினான்.

"நான் எனது ஆண்டவரின் கட்டளைப்படியே நடக்கிறேன். உங்கள் பயணம் முடியும்வரை அவர் என்னை உங்களுக்கு வழிகாட்டியாக அனுப்பியிருந்தால் நானும் மகிழ்ச்சியாக வந்திருப்பேன். அவர் இதுவரை நான் உங்களோடு வரும்படி கட்டளை கொடுத்தாரே, அப்போதே நீங்கள் இறுதிவரை உங்களுடன் வரக் கிருபையருளுமாறு கேட்டிருந்தால் அவர் அதற்கு அனுமதி கொடுத்திருப்பார். இப்போதோ காலம் கடந்து போய்விட்டது. நான் திரும்பிச் செல்ல வேண்டும். கிறிஸ்தீனாள், இரக்கம், பிள்ளைகளே! நான் விடை பெற்றுச் செல்கிறேன்" என்று கூறிவிட்டுத் திரும்பிச் சென்றுவிட்டார் துணிவுள்ளவன்.

அப்போது **விழித்திருப்போன்** என்ற பெயரை உடைய அந்த வாயிற்காப்போன் கிறிஸ்தீனாளிடம் அவளது நாடு எது, இனத்தார் யாவர் என்று கேட்டாள்.

"நான் அழிநகரத்திலிருந்து வருகிறேன். நான் ஒரு விதவை. பயணியாகச் சென்ற கிறிஸ்தியானே என் கணவர்" என்று கூறினாள் கிறிஸ்தீனாள்.

"என்ன, கிறிஸ்தியான் உன் கணவரா?" என்று வியப்புடன் கேட்டான் வாயிற்காப்போன்.

"ஆமாம் ஐயா, இதோ இவர்கள் எங்களுடைய பிள்ளைகள். இவள் எங்கள் நகரைச் சேர்ந்தவர்; பெயர் இரக்கம்" என்று கூறினாள் கிறிஸ்தீனாள்.

அப்போது வாயிற்காப்போன் மணியை அடித்தான். அப்போது **மனத்தாழ்மை** என்ற தாதிப் பெண் அங்கே வந்தாள்.

“நீ உடனே உள்ளே சென்று கிறிஸ்தியானின் மனைவி கிறிஸ்தீனாளும், அவளது பிள்ளைகளும் பயணம் புறப்பட்டு வந்திருக்கிறார்கள் என்று அறிவி” என்று வாயிற்காப்போன் கட்டளையிட்டான்.

அவளும் அப்படியே அறிவித்தாள்.

அவள் இதைக் கூறியவுடன் உள்ளே எங்கும் மகிழ்ச்சி ஆரவாரம்!

கிறிஸ்தீனாள் இன்னும் வாசலண்டையில் நின்று கொண்டிருந்தபடியால், உள்ளே இருந்தவர்கள் வெளியே வந்தார்கள்.

“வா, கிறிஸ்தீனாளே வா! நல்லவன் மனைவியே வா! ஆசீர்வதிக்கப்பட்டவளே வா! உன்னுடன் வந்திருப்பவர்களையும் அழைத்துவா!” என்று அன்போடு அவளை வரவேற்றார்கள்.

கிறிஸ்தீனாளும், அவளைத் தொடர்ந்து அவள் பிள்ளைகளும், இரக்கமும் உள்ளே சென்றார்கள்.

அங்கே ஓர் அழகான, பெரிய அறையில் அவர்கள் உட்காரவைக்கப்பட்டார்கள். பயணிகள் வந்திருக்கும் செய்தி மாளிகையின் அதிபருக்கு அறிவிக்கப்பட்டது.

அவர் வந்து, ஆனந்த முத்தத்துடன் அவர்களை வாழ்த்தினார். “ஆண்டவருடைய கிருபையின் பாத்திரங்களே, வாருங்கள்” என்று அவர்களை வரவேற்றார்.

நேரம் தாமதமாகிவிட்டபடியாலும், பயணிகள் சோர்ந்துவிட்டிருந்தபடியாலும் அவர்கள் ஓய்வெடுக்கும்படி விரும்பினார்கள்.

“பொறுங்கள், முதலில் சற்று உணவருந்திவிட்டு, படுக்கைக்குச் செல்லலாம்” என்று உள்ளேயிருந்தவர்கள் கூறினார்கள். கிறிஸ்துவை நினைவுகூறும்வண்ணமாகவும், பயணிகளின் ஐக்கியத்திற்கு அடையாளமாகவும் உள்ள இராப்போஜனத்தையே அவர்கள் இவ்வாறு குறிப்பிட்டார்கள்.

அவர்கள் உணவருந்திய பின்னர், ஒரு சங்கீதத்தைப் பாடி ஜெபித்தார்கள். பின் படுக்கைக்குச் செல்ல ஆயத்தமானார்கள்.

கிறிஸ்தீனாள் தாதிப் பெண்களிடம், “முன்பு என் கணவர் பயணமாக வந்தபோது அவர் தங்கியிருந்த அறையையே எங்களுக்கும் ஒதுக்கினால் நலமாக இருக்கும்” என்று கேட்டுக்கொண்டாள்.

கிறிஸ்தியான் தங்கியிருந்த அறையே அவர்களுக்கு ஒதுக்கப் பட்டது. அனைவருக்கும் அடைக்கலமான கிறிஸ்துவின் மார்பில் இளைப்பாறியதுபோல அவர்கள் அங்கே படுத்து இளைப்பாறி னார்கள். அவ்வேளையில் உறக்கம் வரும்வரை கிறிஸ்தீனாளும் இரக்கமும் பேசத் துவங்கினார்கள்.

''எனது கணவர் மோட்சப்பயணம் சென்றவேளையில் நானும் ஒருநாள் அவரைப் பின்தொடருவேன் என்று நினைக்கவில்லை" என்றாள் கிறிஸ்தீனாள்.

''இப்போது அவர் படுத்த அதே அறையில் அதே படுக்கையில் படுத்து இளைப்பாறுவாய் என்றுகூட நினைத்துப் பார்த்திருக்கமாட்டாய் அல்லவா?" என்றாள் இரக்கம்.

"அவரை நான் மறபடியும் முகமுகமாய் பார்ப்பேன் என்றும், அவரோடுகூட இராஜாவாகிய ஆண்டவரை வழிபடுவேன் என்றுகூட நான் நினைக்கவில்லை. ஆனால் இப்போது அந்த நம்பிக்கை எனக்கு ஏற்பட்டிருக்கிறது'' என்று மகிழ்ச்சியுடன் கூறினாள் கிறிஸ்தீனாள்.

"பொறு, ஏதோ இசையொலி கேட்கிறது அல்லவா?" என்று வியப்புடன் கூறினாள் இரக்கம்.

''நாம் இங்கு வந்திருப்பதைக் கொண்டாடவே இசைக்கிறார்கள் என்று நான் நினைக்கிறேன்'' என்றாள் கிறிஸ்தீனாள்.

"அற்புதம், அற்புதம்! வீட்டிலும் இசை! இருதயத்திலும் இசை! பரலோகத்திலும் இசை! நாம் வந்து சேர்ந்ததை எங்கும் கொண்டாடுகிறார்கள்!" என்று மகிழ்ச்சியுடன் கூறினாள் இரக்கம்.

இப்படிப் பேசியபடியே அவர்கள் மெல்ல மெல்ல கண்ணயர்ந்து விட்டார்கள்.

மறுநாள் காலையில் விழித்தவுடன் கிறிஸ்தீனாள் இரக்கத்திடம், "என்னம்மா, நேற்று உறக்கத்திலேயே சிரித்துக் கொண்டிருந்தாயே! ஏதேனும் கனவு கண்டாயா?'' என்று கேட்டாள்.

"ஆமாம், எவ்வளவு இனிமையான கனவு! ஆனால் நான் உண்மையில் சிரித்தேனா?" என்று கேட்டாள் இரக்கம்.

''எவ்வளவு உரத்த குரலில் சிரித்தாய்! அந்தக் கனவு என்னவென்று எனக்கு கூறமாட்டாயா?'' என்று கேட்டாள் கிறிஸ்தீனாள்.

"நான் ஒரு தனிமையான இடத்தில் இருந்தபடி, எனது

இருதயக் கடினத்தைக் குறித்துக் கவலைப்படுவது போல கனவு கண்டேன். நான் நீண்ட நேரம் அப்படியே இருப்பதைக் கண்டு அநேகர் என்னைச் சுற்றிக் கூடிவிட்டார்கள். என்னவென்று அவர்கள் என்னைக் கேட்டபோது, எனது இருதயக் கடினத்தைக் குறித்து கவலைப்படுகிறேன் என்று கூறினேன். அவர்களில் சிலர் என்னைக் கேலி செய்தார்கள். சிலர் என்னை முட்டாள் என்று குறை கூறினார்கள். சிலர் என்னைத் தள்ளிவிட்டு வேடிக்கை பண்ணினார்கள். அவ்வேளையில் நான் நிமிர்ந்து பார்த்தபோது, இறக்கைகளையுடைய ஒருவர் என்னை நோக்கி இறங்கி வருவதைக் கண்டேன். என்னை நெருங்கிய அவர், 'இரக்கம், உனக்கு என்ன செய்கிறது?' என்று கேட்டார். நான் என் மனக்குறையை அவரிடம் கூறினேன். உனக்குச் சமாதானம் உண்டாகட்டும்' என்று கூறிய அவர் தனது கைக்குட்டையால் எனது கண்ணீரைத் துடைத்து விட்டார்.

வெள்ளி மற்றும் பொன்னாடைகளை எனக்கு அணிவித்தார். கழுத்தில் மணிமாலையையும் காதுகளில் தோடுகளையும் அணிவித்த அவர், எனது தலையில் ஓர் அழகான கிரீடத்தைச் சூட்டினார். 'என்னுடன் வா' என்று அழைத்த அவர் எனது கரங்களைப் பற்றியபடி பறந்தார். அவர் என்னை ஒரு தங்கமயமான வாசலண்டை அழைத்துச் சென்றார். வாசற்கதவை அவர் தட்டினார். கதவு திறக்கப்பட்டது. அவர் என்னைச் சிம்மாசனத்தில் வீற்றிருந்தவரின் அருகே அழைத்துச் சென்றார். 'மகளே, உன் வரவு நல்வரவாகட்டும்' என்று சிம்மாசனத்தில் வீற்றிருந்தவர் என்னை வாழ்த்தினார். நான் அந்த இடத்தைச் சுற்றிப் பார்த்தேன். எவ்வளவு பிரகாசமான இடம்! சூரியனைப் போன்று ஒளி வீசியது! அந்த இடத்தில் உன் கணவரையும் கண்டேன் என்றுதான் நினைக்கிறேன். இவ்வேளையில் நான் உறக்கத்திலிருந்து விழித்துக்கொண்டேன். ஆனால் எப்போது நான் சிரித்தேன் என்று எனக்குத் தெரியவில்லையே!" என்றாள் இரக்கம்.

"நீ சிரித்தது உண்மைதான். இவ்வளவு மகிழ்ச்சியான கனவு கண்டவள் சிரித்ததில் வியப்பில்லைதானே! அது நல்ல கனவுதான்! நீ கண்ட கனவின் முதல் பகுதி உண்மையாக நடந்ததுபோல, இறுதிப் பகுதியும் நிச்சயம் நடக்கும். ஆண்டவர் தங்களுடன் பேசுவதை சில வேளைகளில் மனிதர் உணருவதில்லை. கனவின்மூலமோ ஆழ்ந்த உறக்கத்தின்போதோ படுக்கையில், படுத்திருக்கும் போதோ ஆண்டவர் பேசுகிறார். நாம் ஆண்டவரோடு பேசுவதற்காக படுக்கையிலேயே விழித்திருக்க வேண்டியதில்லை. நாம் உறக்கத்தில் ஆழ்ந்திருக்கும்

போதே, ஆண்டவர் நம்மைச் சந்தித்து, நாம் அவரது சத்தத்தைக் கேட்கும்படி செய்ய முடியும். நாம் உறங்கும்போதுகூட பெரும்பாலும் நமது இருதயம் விழித்திருக்கிறது. ஒருவன் விழித்திருக்கும்போது அவனோடு பேசுவதுபோல, ஆண்டவர் நீதிமொழிகள்மூலமோ, அடையாளங்கள்மூலமோ, உவமைகள் மூலமோ அவன் உறங்கிக் கொண்டிருக்கும்போதுகூட அவனோடு பேச முடியும்'' என்று கூறினாள் கிறிஸ்தீனாள்.

''நான் கண்ட கனவைக் குறித்து நான் மிகவும் மகிழ்ச்சியடைகிறேன். அந்தக் கனவு நிறைவேறும் நாளைக் காண வாஞ்சையுடன் இருக்கிறேன். அப்போது நான் மீண்டும் ஆனந்தத்தில் சிரிக்க முடியும் அல்லவா?'' என்றாள் இரக்கம்.

''சரி, நாம் எழுந்து அடுத்து என்ன செய்ய வேண்டு மென்பதைக் கவனிப்போம்'' என்று படுக்கையிலிருந்து எழுந்தாள் கிறிஸ்தீனாள்.

''அம்மா, நாம் இங்கே சிலகாலம் தங்கிச் செல்லும்படி இங்குள்ளவர்கள் கேட்டுக் கொண்டால் நாம் அதை ஏற்றுக் கொள்வோம். இங்கு சில காலம் தங்கி முன்யோசனை, பக்தி, கருணை என்ற இந்தத் தாதிப் பெண்களோடு பழக எனக்கு விருப்பமாக இருக்கிறது. அவர்கள் அழகானவர்களாக இருப்பது மட்டுமின்றி நற்குணமுள்ளவர்களாகவும் காணப்படுகிறார்கள்'' என்றாள் இரக்கம்.

''பார்ப்போம்'' என்று அதற்குச் சம்மதித்தாள் கிறிஸ்தீனாள்.

காலைக் கடன்களை முடித்தபிறகு அவர்கள் கீழே இறங்கி வந்தார்கள். அங்கிருந்தவர்கள் அவர்கள் நிம்மதியாக ஓய்வெடுத்தார்களா என்று அன்புடன் விசாரித்தார்கள்.

''ஓ! எனது வாழ்க்கையில் நான் என்றுமே இவ்வளவு வசதியாக இராத்தங்கியது கிடையாது!'' என்று திருப்தியுடன் கூறினாள் இரக்கம்.

''நீங்கள் இன்னும் சற்று காலம் இங்கே தங்கினால் இந்த வீட்டின் பாக்கியங்களையெல்லாம் கிடைக்கப் பெறுவீர்கள்'' என்று முன்யோசனையும், பக்தியும் கூறினார்கள்.

''ஆமாம், அனைத்தையும் முழுமனதோடு பெறுவீர்கள்'' என்று ஆமோதித்தாள் கருணை.

பயணிகள் அவர்களது ஆலோசனையை ஏற்று, ஒரு மாதத்திற்கும் மேல் அங்கே தங்கினார்கள். அது அவர்களுக்கு மிகவும் பயனளிப்பதாகவும் இருந்தது.

கிறிஸ்தீனாள் எவ்வாறு தனது பிள்ளைகளை வளர்த்திருக்கிறாள் என்பதைக் கண்டுகொள்ள முன்யோசனை விரும்பினாள். கிறிஸ்தீனாளும் அதற்குச் சம்மதித்தாள்.

முன்யோசனை கடைக்குட்டிப் பையனாகிய யாக்கோபுவிடம் சில கேள்விகளைக் கேட்கத் துவங்கினாள்.

“உன்னைப் படைத்தது யார்?” என்று அவனிடம் கேட்டாள் முன்யோசனை.

“பிதாவாகிய தேவன், குமாரனாகிய தேவன், பரிசுத்த ஆவியானவராகிய தேவன்” என்று பதில் கூறினாள் யாக்கோபு.

“நல்ல பையன். உன்னைக் காப்பாற்றுவது யார் என்று உனக்குத் தெரியுமா?” என்று கேட்டான் முன்யோசனை.

“பிதாவாகிய தேவன், குமாரனாகிய தேவன், பரிசுத்த ஆவியானவராகிய தேவன்” என்றான் யாக்கோபு.

“கெட்டிக்காரப் பையன், பிதாவாகிய தேவன் உன்னை எப்படிக் காப்பாற்றுகிறார்?” என்று கேட்டான் முன்யோசனை.

“அவரது கிருபையின்மூலமாக.”

“குமாரனாகிய தேவன் உன்னை எவ்வாறு காப்பாற்றுகிறார்?”

“அவரது நீதியின்மூலமாகவும், அவரது சிலுவை மரணம் மற்றும் சிந்திய இரத்தத்தின்மூலமாகவும், ஜீவனின்மூலமாகவும்” என்று பதில் கூறினான் யாக்கோபு.

“இப்போது சொல், பரிசுத்த ஆவியானவராகிய தேவன் உன்னை எப்படிக் காபாற்றுகிறார்?”

“அவரது வெளிப்படுத்தல், புதுப்பித்தல் மற்றும் பாதுகாத்துப் பராமரித்தல் இவற்றின்மூலம்” என்றான் அச்சிறுபையன்.

கிறிஸ்தீனாளிடம் திரும்பிய முன்யோசனை, “நீ உன் பிள்ளைகளை நற்போதனைகளுடன் வளர்த்திருப்பதற்காக உன்னைப் பாராட்டுகிறேன். கடைசிப் பையனே இந்தக் கேள்விகளுக்கு சரியான பதில் கூறிவிட்டபடியால் மற்றப் பிள்ளைகளிடமும் இதே கேள்விகளைக் கேட்க அவசியமிருக்காது என்று நினைக்கிறேன். அவனுக்கடுத்த பெரியவனிடம் வேறு சில கேள்விகளை கேட்கப்போகிறேன்” என்று கூறிய முன்யோசனை அடுத்து வயதில் பெரியவனாகிய யோசேப்பை அருகில் அழைத்தாள்.

“நான் உன்னிடம் சில கேள்விகளை கேட்கலாமா?”

“கேளுங்கள்” என்றான் யோசேப்பு.

“மனிதன் என்பவன் எப்படிப்பட்டவன்?”

"அவன் காரண காரியங்களை அறியக் கூடியவன். என் தம்பி கூறியதுபோல ஆண்டவரால் படைக்கப்பட்டவன்'' என்றான் யோசேப்பு.

" 'இரட்சிக்கப்படுவது' என்ற சொல்லின் பொருள் என்ன?"

"தனது பாவத்தினால் அடிமைத்தனத்துக்குள்ளான ஒருவன் மீட்கப்படுவதை அது குறிக்கிறது" என்றான் யோசேப்பு.

"திரித்துவ தேவனால் அவன் இரட்சிக்கப்படுகிறான் என்று கூறுவதின் பொருள் என்ன?"

''பாவம் மற்றவர்களை அடிமைப்படுத்தி ஒரு கொடுங் கோலனைப்போலக் காணப்படுகிறது. ஆண்டவரைத் தவிர வேறு எவரும் நம்மை அதன் பிடியிலிருந்து விடுவிக்கமுடியாது. மனிதனை இந்த அவல நிலையிலிருந்து விடுவிக்குமளவு ஆண்டவர் அவன்மீது அன்பு செலுத்துகிறார்'' என்றான் யோசேப்பு.

"இந்த ஏழை மனிதனை இரட்சிப்பதில் ஆண்டவருடைய நோக்கம் என்ன?" என்று கேட்டாள் முன்யோசனை.

"அவரது நாமத்தையும், அவரது கிருபையையும் அவரது நீதியும் மகிமைப்படுத்துவதே நோக்கம். அதுமட்டுமன்றி அவரது படைப்புகள் நித்திய மகிழ்ச்சியைப் பெறவேண்டும் என்று அவர் வாஞ்சிக்கிறார்'' என்றான் யோசேப்பு.

"யாரெல்லாம் இரட்சிக்கப்படுவார்கள்?"

"அவர் அருளும் இரட்சிப்பை ஏற்றுக்கொள்ளுகிறவர்கள் மட்டுமே!"

"நல்ல பையன், உன் தாயார் உனக்கு நன்றாகவே சொல்லிக் கொடுத்திருக்கிறார்கள். நீயும் அதை நினைவில் வைத்திருக்கி றாய்!'' என்று யோசேப்பின் முதுகில் தட்டி அவனைப் பாராட்டினாள் முன்யோசனை.

அதன்பிறகு அவள் யோசேப்புக்கு மூத்தவனாகிய சாமுவேலை அருகில் அழைத்தாள். இவன் கிறிஸ்தீனாளின் இரண்டாவது மகன்.

"நான் உன்னிடம் சில கேள்விகளை கேட்கட்டுமா?" என்று அவனிடம் கேட்டாள் முன்யோசனை.

"கேளுங்கள், பதில் கூறுகிறேன்" என்றான் சாமுவேல்.

"பரலோகம் எனப்படுவது எது?"

"ஆண்டவர் அங்கே வசிப்பதால் ஆசீர்வதிக்கப்பட்ட ஓர் இடம்" என்று பதில் கூறினான் சாமுவேல்.

"நரகம் எனப்படுவது எது?"

"பாவம், மரணம் இவற்றோடு பிசாசு தங்கியிருக்கும் இடமாதலால் பரிதாபகரமான ஓரிடம்!"

"நீ ஏன் மோட்சத்துக்குச் செல்ல விரும்புகிறாய்?" என்று சாமுவேலிடம் கேட்டாள் முன்யோசனை.

"ஆண்டவரை அங்கு நான் காண்பேன்; சோர்வின்றி அவருக்கு ஊழியம் செய்வேன்; கிறிஸ்துவை அங்கு முகமுகமாய்க் காண்பேன்; என்றென்றும் அவரை நேசிப்பேன். எனக்குள் பரிசுத்த ஆவியானவரின் நிறைவைப் பெறுவேன். அந்தப் பரிபூரணத்தை இங்கே பெற முடியாது அல்லவா?" என்று கூறினான் சாமுவேல்.

"நீயும் நன்றாகவே தெரிந்து வைத்திருக்கிறாய், நல்ல பையன்" என்று அவனையும் பாராட்டினாள் முன்யோசனை.

பிறகு மூத்த பையனாகிய மத்தேயுவை அருகே அழைத்தாள்.

"வா, மத்தேயு நான் உன்னிடமும் சில கேள்விகள் கேட்கட்டுமா?"

"கேளுங்கள்" என்று கூறினான் மத்தேயு.

"ஆண்டவருக்கும் முந்தைய காலத்தில் ஏதேனும் இருந்திருக்கிறதா?" என்று கேட்டாள் முன்யோசனை.

"ஆண்டவருக்கு முன்பு ஏதேனும் இருந்திருக்க முடியாது. அவரே நித்தியமானவர் என்பது மட்டுமன்றி, அனைத்தையும் படைத்தவரும் அவரே! ஆறு நாள்களில் அவர் வானத்தையும், பூமியையும் அவற்றிலுள்ள அனைத்தையும் படைத்தார்" என்று பதில் கூறினான் மத்தேயு.

"வேதாகமத்தைப்பற்றி நீ என்ன நினைக்கிறாய்?" என்று கேட்டாள் முன்யோசனை.

"வேதாகமம் ஆண்டவருடைய பரிசுத்த வார்த்தை."

"உன்னால் புரிந்துகொள்ள முடியாத ஏதேனும் அதில் உள்ளதா?"

"ஆம், அநேக வசனங்களை என்னால் புரிந்துகொள்ள முடியவில்லை" என்று கூறினான் மத்தேயு.

"அப்படிப் புரியாத வசனங்கள் வரும்போது நீ என்ன செய்வாய்?" என்று கேட்டாள் முன்யோசனை.

"ஆண்டவர் என்னைவிட ஞானமுள்ளவர் என்று நினைத்துக்கொள்வேன். எனக்கு நன்மையளிக்கக் கூடியவை என்று அவர் அறிந்துள்ளவற்றை எனக்கு வெளிப்படுத்தும்படி நான் அவரிடம் வேண்டிக்கொள்வேன்" என்றான் மத்தேயு.

"மரித்தோரின் உயிர்த்தெழுதலைப்பற்றிய சத்தியத்தை நீ விசுவாசிக்கிறாயா?"

"அவர்கள் எப்படி அடக்கம்பண்ணப்பட்டார்களோ அப்படியே எழுந்திருப்பார்கள் என்று நான் விசுவாசிக்கிறேன். ஆனால் அழிவற்ற சரீரத்தை உடையவர்களாக எழுந்திருப்பார்கள். ஆண்டவர் இதைக் குறித்து வாக்குத்தத்தம் அருளியிருப்பதாலும், அவர் இதைச் செய்ய வல்லவர் என்பதாலும் நான் இதை விசுவாசிக்கிறேன்" என்று உறுதியாகக் கூறினான் மத்தேயு.

முன்யோசனை அந்தப் பையன்களைப் பார்த்து, "நீங்கள் தொடர்ந்து உங்கள் தாயாரின் வார்த்தைகளுக்குச் செவிசாய்த்து வாருங்கள். அவள் உங்களுக்குத் தொடர்ந்து போதித்து வருவாள். மற்றவர்கள் கூறும் நல்ல வார்த்தைகளுக்கும் நீங்கள் செவி சாய்க்கவேண்டும். உங்கள் நலனுக்காக அவர்கள் நல்ல வார்த்தைகளையே பேசட்டும். வானமும், பூமியும் உங்களுக்கு என்ன போதிக்கின்றன என்பதைக் கவனமாக கவனித்துப் பாருங்கள் உங்கள் தகப்பனார் மோட்சப் பயணத்தில் செல்லும்படி அவரைத் தூண்டிய வேதாகமத்தைத் தியானிப்பதை ஒருபோதும் மறந்துவிடாதீர்கள். நீங்கள் இங்கே இருக்கும்வரை என்னால் முடிந்ததை நான் உங்களுக்குப் போதிக்கிறேன். உங்கள் ஆவிக்குரிய அறிவை வளர்த்துக் கொள்ளும்வண்ணமாக என்னிடம் கேள்வி கேட்டுத் தெரிந்துகொள்ளுங்கள்" என்று கூறினாள் முன்யோசனை.

பயணிகள் அந்த இடத்தில் தங்கி ஒருவாரம் ஆகிவிட்டது. அப்போது **சுறுசுறுப்பானவன்** என்பவன் இரக்கத்திற்கு நன்மை செய்ய வந்தவனைப்போல அவளைச் சந்தித்தான்.

அவன் நல்ல குடும்பத்தில் பிறந்தவன். விசுவாசியைப்போல வேடம் தரித்திருந்தாலும் உலகப் பிரகாரமாகவே வாழ்ந்து வந்தான்.

இரக்கம் மிகவும் அழகுள்ள பெண்மணியாக விளங்கினாள். ஒன்றுக்கு மூன்று முறையாக அவன் அவளிடம் வந்து தான் அவளைத் திருமணம் செய்துகொள்ள விரும்புவதாகக் கூறினான்.

இரக்கம் எப்போதும் சோம்பேறித்தனமாக அமர்ந்திருப்ப தில்லை. தனக்காக எதுவும் செய்ய வேண்டிய தேவையில்லாத வேளையிலும்கூட, அவள் மற்றவர்களுக்காக ஆடைகளைத் தயாரிப்பாள். தேவைப்படுகிறவர்களுக்கு அவற்றை இலவசமாகக் கொடுத்துவிடுவாள்.

அவள் எப்போதும் சுறுசுறுப்பாக இருப்பதைக் கண்டும், அவள் ஆடைகளைத் தயாரித்து விற்கும் திறமையுள்ளவள் என்ற நினைப்பிலும் அவள் தனக்குச் சிறந்த மனைவியாவாள் என்று சுறுசுறுப்பானவன் தீர்மானித்திருந்தான்.

அவன் இவ்வாறு தன்னிடம் கூறியதை இரக்கம் அலங்கார மாளிகையிலுள்ள பெண்களுக்கு அறிவித்தாள். அவர்கள் அவனைப்பற்றி அதிகமாகத் தெரிந்து வைத்திருந்தபடியால் அவனைப்பற்றி அவர்களிடம் கேட்டாள்.

அவன் சுறுசுறுப்பானவன்தான். ஆனால் விசுவாசியைப் போல நடக்கிறான். நற்கிரியைகளின் வல்லமையை அறியாதவன் என்று அவர்கள் கூறினார்கள்.

"அப்படியானால் இனி நான் அவனைத் திரும்பிக் கூடப் பார்க்க மாட்டேன். என் ஆத்துமாவைத் தடை செய்யும் எதனுடனும் நான் உறவுகொள்ள விரும்பவில்லை'' என்று கூறிவிட்டாள் இரக்கம்.

"அவன் இப்படி வந்துபோவதைத் தடுக்க எந்த முயற்சியும் எடுக்கத் தேவையில்லை. நீ ஏழைகளுக்கு உதவுவதையே முக்கியமான பணியாகக் கொண்டிருக்கிறாய் என்பதை அவன் அறிந்துகொண்டாலே அவன் மறுபடியும் வரமாட்டான்" என்று கூறினாள் முன்யோசனை.

மறுமுறை அவன் வந்தபோது அவள் அதே வேலையைச் செய்துகொண்டிருப்பதைக் கண்டான்.

''என்ன, எப்போதும் இதே வேலைதானா?'' என்று எரிச்சலுடன் கேட்டான்.

''ஆமாம், ஒன்று எனக்காக, அல்லது மற்றவர்களுக்காக உடையைத் தயாரித்துக் கொண்டிருக்கிறேன்'' என்று அமைதியாகப் பதில் கூறினாள் இரக்கம்.

''ஒரு நாளைக்கு எவ்வளவு சம்பாதிக்கிறாய்?'' என்று ஆவலுடன் கேட்டான் சுறுசுறுப்பானவன்.

"நான் நற்கிரியைகளில் செல்வம் பெற்றவளாக ஆவதற்காகவே இதைச் செய்கிறேன், பணத்துக்காக அல்ல! வருங்காலத்திற்கு

இவை நல்ல ஆதாரமாக பொக்கிஷமாக விளங்கும்" *(1 தீமோ. 6:17-19)* என்று கூறினாள் இரக்கம்.

"இந்த உடைகளைக் கொண்டு என்ன செய்கிறாய்?" என்று கேட்டான் அவன்.

''ஆடையற்றவர்களுக்கு இவற்றை இலவசமாகக் கொடுக்கிறேன்" என்றாள் இரக்கம்.

இதைக் கேட்டவுடன் சுறுசுறுப்பானவனின் முகம் மாறிவிட்டது. அதன்பிறகு அவன் அவளைச் சந்திக்க வரவேயில்லை! ஏனென்று காரணம் கேட்டபோது, "இரக்கம் ஓர் அழகான பெண்மணிதான். ஆனால் அவளது தாராள குணம் எனக்குப் பிடிக்கவில்லை" என்று கூறிவிட்டான்.

முன்யோசனை இரக்கத்தைப் பார்த்து, ''நான் உனக்கு முன்பே கூறினேன் அல்லவா? அவன் சீக்கிரமாகவே வருவதை நிறுத்திவிடுவான் என்றேனே! அவன் இனிமேல் உன்னைப்பற்றிக் குறை கூறிக்கொண்டுதான் திரிவான். அவன் விசுவாசி என்று பாவனை செய்வதினாலாகட்டும், இரக்கத்தை நேசிப்பதுபோல நடிப்பதிலாகட்டும், அவன் இரக்கத்திற்குச் சற்றும் பொருந்தாத குணமுடையவன். இருவரும் சேரவே முடியாது'' என்று கூறினாள்.

"இதற்கு முன்பே எனக்குத் திருமணமாகியிருக்கக்கூடும். அநேகர் என்னை பார்க்க வந்தார்கள். என் அழகில் குறை கண்டுபிடிக்காவிட்டாலும் எனது தயாளகுணம் அவர்களுக்குப் பிடிக்கவில்லை. எனவே எங்களால் ஒத்துப்போக முடியவில்லை" என்று கூறினாள் இரக்கம்.

''இந்நாள்களில் மற்றவர்களுக்கு உதவிசெய் என்று வாயளவில் சொல்லிக்கொள்கிறார்களே தவிர, உன்னைப் போல உண்மையிலேயே மற்றவர்களுக்கு உதவி செய்கிறவர்கள் மிகவும் கொஞ்சப்பேர்தான்" என்றாள் முன்யோசனை.

"எனது குணத்துக்காக என்னை ஏற்றுக்கொள்பவர்கள் எவரும் முன்வரவில்லையானால் நான் ஒரு கன்னியாகவே மரித்துப்போவேன். அல்லது எனது தயாள குணத்தையே நான் திருமணம் செய்துகொண்டிருப்பதாக நினைத்துக்கொள்வேன். ஏனென்றால் என்னால் என் குணத்தை மாற்றிக்கொள்ள முடியாது. எனது குணத்துக்கு விரோதமான ஒருவர் என் வாழ்க்கையில் குறுக்கிட நான் ஒருபோதும் அனுமதிக்க மாட்டேன். எனக்கு தாராளமனம் என்ற பெயருடைய சகோதரி இருந்தாள். அவளது குணத்துக்கு விரோதமான ஒருவனை அவள்

மணந்துகொண்டாள். அவனும் அவளும் ஒருபோதும் ஒத்துப் போகவில்லை. திருமணத்துக்குமுன்பு அவள் செய்ததுபோல என் சகோதரி எப்போதும் மற்றவர்களுக்கு உதவிசெய்து வந்தாள். முதலில் அவளது கணவன் அவளைக் கண்டித்துப் பார்த்தான். பிறகு உன் உறவே வேண்டாம் என்று அவளை வீட்டைவிட்டே விரட்டிவிட்டான்" என்றாள் இரக்கம்.

"இப்படிச் செய்த அவன் ஒரு பெயர்க் கிறிஸ்தவனாக இருந்தான் அல்லவா?" என்று கேட்டாள் முன்யோசனை.

"ஆமாம், அப்படிப்பட்டவர்கள்தான் இப்போது உலகில் அதிகமாகக் காணப்படுகிறார்கள். அவர்களில் எவரையும் நான் ஏற்றுக்கொள்ளப் போவதில்லை" என்றாள் இரக்கம்.

அப்போது கிறிஸ்தீனாளின் மூத்த மகன் மத்தேயு திடீரென்று வியாதிப்பட்டான். வலி அதிகமானதால் துடித்து அழுதான் அவன்.

அந்த மாளிகைக்குச் சமீபமாக **திறமைசாலி** என்ற மருத்துவர் வசித்து வந்தார். அவர் அனைவராலும் புகழ்ந்து பேசப்பட்டார். கிறிஸ்தீனாளின் விருப்பப்படி அவர் வரவழைக்கப்பட்டார்.

அவனைச் சோதித்துப் பார்த்த திறமைசாலி அவன் வயிற்றுக் கோளாறினால் அவதிப்படுகிறான் என்பதைத் தெரிந்து கொண்டார்.

"இவன் சமீபத்தில் எதைச் சாப்பிட்டான்?" என்று அவர் கிறிஸ்தீனாளிடம் கேட்டார்.

"நல்ல உணவுதான் சாப்பிட்டான், ஐயா?" என்றாள் கிறிஸ்தீனாள்.

"இல்லை, இந்தப் பையன் எதையோ சாப்பிட்டிருக்கிறான். அது செரிக்காமல் அவன் வயிற்றிலேயே தங்கியிருக்கிறது. அது தானாக வெளியே வராது. உடனடியாக அவனுக்குச் சிகிச்சை கொடுத்தால்தான் அவன் உயிர் பிழைப்பான்" என்றார் மருத்துவர்.

"அம்மா, நாம் வந்த பாதையில் துவக்கத்தில் ஒரு வாசல் இருந்ததே! அந்த வாசலை விட்டு வெளியே வரும்போது இடது பக்கச் சுவற்றின் மறுபுறம் ஒரு பழச்சோலை காணப்பட்டதே! அதில் ஒரு மரத்தின் கிளை பாதையின் மேலாக படர்ந்து வந்திருந்தது. அதிலிருந்த ஒருபழத்தைப் பறித்து அண்ணன் தின்றான்" என்று கூறினான் சாமுவேல்.

“ஆமாம், ஆமாம், நானும் பார்த்தேன். நான் கடிந்து கொண்டபிறகும்கூட அவன் அந்தப் பழத்தைத் தின்றுவிட்டான்” என்றாள் கிறிஸ்தீனாள்.

“அவன் ஏதோ வேண்டாத உணவை சாப்பிட்டிருக்கிறான் என்றுதான் நான் கூறினேனே! அந்தப் பழம் மிகவும் தீங்கை வரவழைக்கக் கூடியது. அது பெயெல்செபூலின் தோட்டத்தைச் சேர்ந்த பழம். ஒருவரும் அதைக் குறித்து உங்களை எச்சரிக்காதது எனக்கு வியப்பாக இருக்கிறது அதைத் தின்ற அநேகர் மரித்துப்போயிருக்கிறார்கள்” என்றார் மருத்துவர்.

இதைக் கேட்டவுடன் கிறிஸ்தீனாள் அழத் துவங்கினாள். “குறும்புக்காரனே நானும் உன்னைக் கவனியாமல் இருந்து விட்டேனே! இப்போது நான் என்ன செய்வது?” என்று புலம்பினாள் கிறிஸ்தீனாள்.

“கவலைப்படாதே, இவன் மீண்டும் சுகமடைய வேண்டும். ஆனால் அதற்குள் வயிற்றிலுள்ள விஷம் வெளிவரவேண்டும்” என்றார் மருத்துவர்.

“ஐயா, உங்கள் திறமை முழுவதையும் பயன்படுத்தி அவனுக்கு உதவுங்கள். எவ்வளவு செலவானாலும் பரவாயில்லை” என்று கெஞ்சினாள் கிறிஸ்தீனாள்.

“கவலைப்படாதே, நான் கவனித்துகொள்கிறேன்” என்று கூறிய திறமைசாலி அவனுக்கு ஒரு மருந்தைத் தயார் செய்தார். ஆனால் அந்த மருந்தினால் போதுமான அளவு சுகம் கிடைக்கவில்லை. அந்த மருந்து வெள்ளாட்டுக் கடாவின் இரத்தமும், கிடாரியின் சாம்பலும் கலந்த கலவை என்றும் அதை ஈசோப்புத் தண்டின் சாற்றில் கலந்து கொடுத்தார் (எபி. 9:13-19; 10:1-4) என்றும் கூறப்பட்டது. அந்த மருந்தில் சக்தி குறைவானது என்பதைக் கண்ட மருத்துவர் மற்றொரு மருந்தைத் தயாரித்தார். அதில் கிறிஸ்துவின் சரீரமும், அவரது இரத்தமும் சேர்க்கப் பட்டிருந்தது. கிறிஸ்துவின் சரீரமான இரத்த மாத்திரை என்று அவர் அதற்குப் பெயரிட்டிருந்தார். மேற்கூறிய இரு அம்சங்களுடன், ஓரிரு வாக்குத்தத்தங்களையும், சரியான அளவு உப்பையும் சேர்த்து அவர் இந்த மாத்திரையைத் தயாரித்திருந்தார் (மத். 9:49) வெறும் வயிற்றில் வேளைக்கு மூன்று மாத்திரைகளை விழுங்கிவிட்டு, மனந்திரும்புதலின் கண்ணீரில் அரைலிட்டர் குடிக்க வேண்டுமென்று மருத்துவர் கட்டளையிட்டார்.

இந்த மருந்தைத் தயாரித்து அந்தப் பையனிடம் கொண்டுவந்தார் அவர். அவனோ வயிற்று வலியால் துடித்துக் கொண்டிருந்த போதிலும் அந்த மருந்தை உட்கொள்ள விரும்பவில்லை.

''நீ இதைக் ·குடித்துதான் ஆக வேண்டும்'' என்று வற்புறுத்தினார் மருத்துவர்.

"என் குடலைப் புரட்டுகிறது. வேண்டாம்" என்று மறுத்தான் அந்தப் பையன்.

"எப்படியாவது குடித்துவிடு" என்றாள் அவன் தாயார்.

"நான் வாந்திபண்ணிப் போடுவேன்!" என்றான் மத்தேயு.

அந்த மருந்து எப்படிப்பட்ட சுவையுடையது என்று கிறிஸ்தீனாள் மருத்துவரிடம் கேட்டபோது, அது நற்சுவை யுடையது என்றார் அவர்.

கிறிஸ்தீனாள் தன் நாவின் நுனியால் ஒரு மாத்திரையைச் சுவைத்துப் பார்த்தாள். அவளுக்கு ஒரே வியப்பு!

"மத்தேயு இந்த மாத்திரை தேனைவிட இனிமையாக இருக்கிறது. நீ என்னை நேசித்தால், உன் சகோதரர்களை நேசித்தால், இரக்கத்தை நேசித்தால், உயிர்வாழ விரும்பினால் இதை எப்படியாவது குடித்து விடு!'' என்று கெஞ்சினாள் கிறிஸ்தீனாள்.

முதலில் பிடிவாதம் பண்ணிக்கொண்ட அவன், அந்த மருந்தை ஆசீர்வதிக்கும்படி ஆண்டவரிடம் வேண்டிக் கொண்ட பிறகு, அந்த மாத்திரையை விழுங்கினான். அது அவன் நோயைக் குணமாக்கி, அவனுக்கு உறக்கத்தையும் இளைப்பாறுதலையும் அளித்தது. அவன் உடலில் வியர்வை வழிந்து, நோய் இறங்கியது. அவனது வயிற்று வலி குணமாகியது. சற்று நேரத்தில் அவன் எழுந்து ஒரு கைத்தடியின் உதவியோடு ஒவ்வொரு அறையாக நடந்து செல்லத் துவங்கினான். அவனது நோயைப் பற்றியும், அது எவ்வாறு குணமாகியது என்பதைப் பற்றியும், முன்யோசனை, பக்தி கருணை இவர்களுக்குச் சாட்சியாக அறிவித்தான்.

பையன் குணமடைந்தவுடன் கிறிஸ்தீனாள் மருத்துவரைப் பார்த்து, "எனது பையனை நீங்கள் நனறாகக் கவனித்ததற்காக நான் உங்களுக்கு என்ன கொடுக்க வேண்டும்?'' என்று கேட்டாள்.

''இத்தகைய மருத்துவ பராமரிப்புக்கு என்ன செலுத்த வேண்டும் என்று விதிகளில் கூறப்பட்டிருக்கிறதோ அதை நீ மருத்துவர்களின் சங்க அதிபதிக்குச் செலுத்த வேண்டும்" (எபி. 13:11-15) என்று கூறினார் திறமைசாலி.

"ஐயா, வேறு எதற்காவது இந்த மாத்திரை பயன்படுமா?" என்று கேட்டாள் கிறிஸ்தீனாள்.

"இது சகல நோய்களையும் தீர்க்கக்கூடியது. பயணிகளுக்கு ஏற்படும் அனைத்து நோய்களையும் இது தீர்க்கும். சரியான முறையில் இதைத் தயாரித்து உட் கொண்டால் அது உள்ளத்தை நலமாக வைத்திருக்கும்" என்றார் அந்த மருத்துவர்.

"ஐயா, எனக்குப் பன்னிரெண்டு பெட்டிகள் நிறைய இந்த மாத்திரைகளைத் தயாரித்துக் கொடுங்கள். இவை என்னிடம் இருந்தால், நான் வேறு மருந்தைத் தேடிச் செல்லப் போவதில்லை" என்றாள் கிறிஸ்தீனாள்.

"இவை நோயைக் குணமாக்குவதோடுமட்டுமன்றி, நோய் வராமல் தடுக்கவும்கூடிய மாத்திரைகளாகும். ஒருவன் ஏற்ற அளவில் இந்த மாத்திரைகளைப் பயன்படுத்தினால் அவன் நித்திய ஜீவனைப் பெறுவான் என்பதில் ஐயமில்லை. நான் கூறிய வகைப்படியல்லாது வேறு வகையில் நீ இந்த மாத்திரையைக் கொடுக்கக் கூடாது. அப்படிக்கொடுத்தால் அதனால் எந்தப் பயனும் இருக்காது" என்று கூறிய மருத்துவர் அவளுக்கும் அவள் பிள்ளைகளுக்கும், இரக்கத்திற்கும் தேவையான மாத்திரைகளைக் கொடுத்தார்.

இனிமேல் இவ்வாறு நோயுண்டாக்கும் பழங்களை உட்கொள்ளாதே மத்தேயு என்று அந்தப் பையனை எச்சரித்துவிட்டு அவர் விடைபெற்றார்.

முன்யோசனை பையன்களிடம் அவர்கள் சந்தேகங்களைப் பற்றிக் கேட்கலாம் என்று கூறியிருந்தாள் அல்லவா? அதன்படி மத்தேயு அவளிடம் சில கேள்விகளைக் கேட்டான்.

"ஏன் பெரும்பாலும் மருந்துகள் கசப்பாக இருக்கின்றன?" என்று அவன் அவளிடம் கேட்டான்.

"உலகப் பிரகாரமான உள்ளத்திற்கு ஆண்டவருடைய வசனம் எப்படிப்படடதாக இருக்கிறது என்பதையே இது உணர்த்துகிறது" என்றாள் முன்யோசனை.

"இந்த மருந்தினால் நமக்கு நன்மை உண்டாகக்கூடுமானால் பிறகு ஏன் பேதியும், வாந்தியும் உண்டாகுமாறு செய்கிறது?" என்று கேட்டான் மத்தேயு.

"ஆண்டவருடைய வார்த்தை வல்லமையாகச் செயல்படும் போது அது நமது இருதயத்தையும், மனதையும் சுத்திகரிக்கிறது என்பதையே இது சுட்டிக்காட்டுகிறது. இவ்விரண்டில் ஒன்று உடல் சுத்திகரிப்பையும், மற்றது ஆத்தும சுத்திகரிப்பையும், அளிக்கிறது" என்று விளக்கினாள் முன்யோசனை.

"நாம் உருவாக்கும் நெருப்பின் சுடர்கள் மேல்நோக்கிச் செல்லுகின்றன. சூரியனின் கதிர்கள் கீழ்நோக்கி வருகின்றன. இதன் பொருள் என்ன?" என்று கேட்டான் மத்தேயு.

"மேல்நோக்கிச் செல்லும் நெருப்புச் சுடர்கள் நாம் நமது வாஞ்சைகளை அனலுடன் மேல்நோக்கி ஏறெடுக்க வேண்டும் என்பதை உணர்த்துகின்றன. கீழ்நோக்கிப் பாய்ந்து பயனளிக்கும் சூரியகதிர்கள் உலகத்தின் இரட்சகரானவர் மேலுலகில் இருந்தாலும் தமது கிருபை மற்றும் அன்பினால் கீழேயுள்ள நம்மைத் தொடுகிறார் என்பதை உணர்த்துகின்றன" என்றாள் முன்யோசனை.

"மேகங்களில் நீர் எப்படி வருகிறது?" என்று கேட்டான் மத்தேயு.

"கடலிலிருந்து"

"இதிலிருந்து நாம் என்ன கற்றுக்கொள்கிறோம்?"

"போதகர்கள் தங்கள் போதனைகளை ஆண்டவரிடமிருந்தே பெற்றுக்கொள்ள வேண்டும்" என்றாள் முன்யோசனை.

"மேகங்கள் ஏன் நீரை மழையாகப் பூமியின்மீது பொழிய விடுகின்றன?"

"ஆண்டவரைப் பற்றித் தாங்கள் அறிந்தவற்றை போதகர்கள் மற்றவர்களுக்கு அளிக்க வேண்டும்."

"சூரிய ஒளி ஏன் வானவில் உண்டாகும்படி செய்கிறது?" என்று கேட்டான் மத்தேயு.

"ஆண்டவருடைய கிருபை பற்றிய உடன்படிக்கை கிறிஸ்துவில் நமக்கு உறுதிப்படுத்தப்பட்டுள்ளது என்பதையே இது காட்டுகிறது" என்றான் முன்யோசனை.

"கடலிலிருந்துத் தரையின் அடியாக வரும் நீர் நீரூற்றாக வெளிப்படுவது ஏன்?" என்று கேட்டான் மத்தேயு.

"ஆண்டவருடைய கிருபை கிறிஸ்துவின் சரீரத்தின் மூலமாக நமக்கு வருகிறது என்பதையே இது சுட்டிக் காட்டுகிறது" என்றாள் முன்யோசனை.

ஆனால் சில நீரூற்றுகள் உயர்ந்த மலையின் உச்சியிலிருந்து வெளிப்படுகின்றனவே! ஏன்?" என்று கேட்டான் மத்தேயு.

"வல்லமையுள்ள பெரியவர்களிடமிருந்து மட்டுமன்றி அநேக ஏழ்மையான எளியவர்களிடமிருந்தும்கூட கிருபையின் ஆவி வெளிப்படும்" என்றாள் முன்யோசனை.

"திரியோடு ஒட்டிக்கொண்டு நெருப்பு ஏன் எரிகிறது?"

"நமது இருதயத்தில் கிருபை கிரியை செய்யாவிட்டால், நம்மில் ஜீவனின் மெய்யான ஒளி காணப்படாது" என்றாள் முன்யோசனை.

''மெழுகுவர்த்தியின் ஒளி நிலைத்திருக்க வேண்டும் என்பதற்காக ஏன் திரியும், மெழுகும் தம்மைத் தாமே அழித்துக் கொள்கின்றன?'' என்று கேட்டான் மத்தேயு.

"நம்மிலிருக்கும் ஆண்டவருடைய கிருபை காக்கப்படும்படிக்கு சரீரமும், ஆத்துமாவும் அனைத்துமே தம்மை ஒப்படைத்து அதற்கென ஊழியம் செய்ய வேண்டும் என்பதையே உணர்த்துகிறது" என்றாள் முன்யோசனை.

"பெலிகன் என்ற ஒருவகை நாரை தன் அலகினால் தனது நெஞ்சையே குத்திக்கொள்கிறதே அது ஏன்?''

"பொங்கி வழியும் தனது இரத்தத்தால் அந்த நாரை தனது குஞ்சுகளைப் போஷிக்கிறது. தனது சொந்த இரத்தத்தின்மூலம் தனது பிள்ளைகளை மரணத்திலிருந்துக் காப்பாற்றுமளவுக்கு கிறிஸ்து அவர்களை நேசிக்கிறார்'' என்று மத்தேயுவின் கேள்விக்குப் பதில் கூறினாள் முன்யோசனை.

''சேவல் கூவுவதைக் கேட்டு ஒருவன் எதை நினைவு கூறலாம்.''

''பேதுரு செய்த பாவத்தையும் அவனுடைய மனந் திரும்புதலையும் நாம் நினைவு கூறுகிறோம். ஒரு நாளின் துவக்கத்தைச் சேவல் குரலெழுப்பி அறிவிக்கிறது. நியாயத்தீர்ப்பு நாளையும் இது நமக்கு நினைவூட்டக்கடவதாக'' என்றாள் முன்யோசனை.

பயணிகள் அந்த மாளிகையில் தங்க ஆரம்பித்து ஒரு மாதமாகிவிட்டது. அப்போது அவர்கள் தாங்கள் மறுபடியும் பயணம் புறப்பட ஆயத்தமாக இருப்பதாக மாளிகையில் உள்ளவர்களிடம் தெரிவித்தார்கள்.

அப்போது யோசேப்பு கிறிஸ்தீனாளிடம், "அம்மா, ஒரு முக்கியமான காரியத்தை மறந்து விட்டீர்களே! துணிவுள்ளவரை மறுபடியும் நமக்கு வழிகாட்டியாக அனுப்பும்படி வேண்டிக் கொண்டு விளக்கம் கூறுபவருக்கு கடிதம் அனுப்பினீர்களா?" என்று கேட்டான்.

"நல்ல பையன். சரியான வேளையில் நினைவுபடுத்தினாய்" என்று கூறிய கிறிஸ்தீனாள் உடனடியாக ஒரு வேண்டுதல் கடிதத்தை எழுதினாள்.

விழித்திருப்பவன் என்ற வாயிற்காப்போனுக்குத் தெரிந்த ஒருவனின்மூலம் கிறிஸ்தீனாள் தனது நண்பரான விளக்கம் கூறுபவருக்கு அந்தக் கடிதத்தை அனுப்பினாள்.

அந்தக் கடிதத்தைப் படித்த அவர் அதைக் கொண்டு வந்தவனிடம், ''நான் அவரை அனுப்புவேன் என்று அவர்களிடம் சொல்'' என்று கூறி அனுப்பினார்.

கிறிஸ்தீனாள் தொடர்ந்து தனது பயணத்தைத் தொடரவிருக்கிறாள் என்ற செய்தியைக் கேள்விப்பட்டவுடன், அந்த மாளிகையைச் சேர்ந்த அனைவரும் ஒன்றாகக் கூடிவந்து, இத்தகைய பயனுள்ள பயணிகளை விருந்தினர்களாக அனுப்பியமைக்காக இராஜாவுக்கு நன்றி கூறினார்கள்.

"நாங்கள் வழக்கமாக பயணிகளுக்கு சிலவற்றைக் காட்டி விளக்குவது உண்டு. அவர்கள் தங்கள் பயணத்தின்போது இவற்றைப்பற்றி தியானிக்கலாம் அல்லவா?'' என்று கூறிய அவர்கள் கிறிஸ்தீனாளையும், அவள் மக்களையும், இரக்கத்தையும் உள்ளே அழைத்துச் சென்றார்கள்.

ஏவாள் தின்று சோதனைக்குள்ளான பழங்களில் ஒன்றை அவர்கள் சுட்டிக்காட்டி, ''இது என்ன பழம்?'' என்று கேட்டார்கள். அந்தப் பழத்தை ஏவாள் தின்று, ஆதாமும் அதைத் தின்னும்படி செய்ததினாலேயே இருவரும் ஏதேன் தோட்டத்தை விட்டு விரட்டப்பட்டிருந்தார்கள்.

அதை உற்றுப் பார்த்த கிறிஸ்தீனாள், "இது என்ன பழமோ? நச்சுப் பழமோ, நல்ல பழமோ, எனக்குத் தெரியாது? என்றாள்.

அது எந்தப் பழம் என்பதை அவர்கள் அவளுக்குக் கூறினார்கள். அதைக் கேட்டு, ''அப்படியா?'' என்று வியப்படைந்தாள் கிறிஸ்தீனாள்.

வேறொரு இடத்துக்குப் பயணிகளை அழைத்துச் சென்று அவர்கள், யாக்கோபுவின் ஏணியைக் காட்டினார்கள். அப்போது சில தேவதூதர்கள் அந்த ஏணியில் ஏறிச் சென்று கொண்டிருந்தார்கள். கிறிஸ்தீனாளும் மற்றவர்களும் அந்தக் காட்சியை வியப்போடு பார்த்துக்கொண்டிருந்தார்கள்.

வேறு ஒரு காட்சியை பார்க்க அவர்களை அழைத்தார்கள். அப்போது யாக்கோபு தன் தாயாரிடம், "அம்மா, இந்த அற்புதமான காட்சியை இன்னும் சற்று நேரம் பார்ப்போம்" என்று கெஞ்சினான். எனவே பயணிகள் இன்னும் கொஞ்ச நேரம் அந்தக் காட்சியைப் பார்த்துக் களித்தார்கள்.

மற்றோரிடத்தில் ஒரு தங்க நங்கூரம் தொங்கவிடப் பட்டிருப்பதைப் பயணிகளுக்குக் காட்டினார்கள்.

"கிறிஸ்தீனாளே, இந்த நங்கூரத்தை எடுத்து நீயே உன்னுடன் வைத்துக்கொள். இந்த உறுதியான ஆத்தும நங்கூரம் (எபி. 6:19) வாழ்க்கைப் புயல்களினால் அலைக்கழிக்கப்பட்டுவிடாதபடி உன்னைக் காக்கும். உனக்கு அடைக்கலமான அரணான கோட்டையைப்போல இது விளங்கும் (யோவேல் 3:16)" என்று கூறினார்கள்.

நமது விசுவாச முற்பிதாவான ஆபிரகாம் தனது குமாரனாகிய ஈசாக்கைப் பலியிடும்படி அழைத்துச் சென்ற மலைக்கு பயணிகளைக் கூட்டிச் சென்றார்கள். இன்று வரையிலும் பார்க்கக்கூடிய வகையில் அங்கே வைக்கப்பட்டிருந்த பலிபீடம், விறகுக்கட்டு, நெருப்பு, கத்தி இவற்றைச் சுட்டிக்காட்டினார்கள். இதைக் கண்டவுடன், "ஆபிரகாமைப் போல தன்னைத்தானே வெறுத்து, தனது எசமானை முழுமையாக நேசித்த ஒருவரும் உண்டோ!" என்று வியப்புடன் கூறினார்கள்.

இவற்றைக் காட்டிய பிறகு முன்யோசனை அவர்களைச் சாப்பாட்டு அறைக்கு அழைத்துச் சென்றாள். அங்கு இளம் பெண்கள் வாசிக்கும் இரு வாத்தியங்கள் வைக்கப்பட்டிருந்தன. முன்யோசனை ஓர் இசைக்கருவியை எடுத்துக்கொண்டு அமர்ந்தாள். கருவியை இசைத்தபடியே பாடத் துவங்கினாள்.

ஏவாளின் கனியைப் பார்த்தீரே !
    என்றும் கவனமாக இருப்பீரே !
யாக்கோபுவின் ஏணியைக் கண்டீரே !
    ஏறிச் சென்றனர் தேவதூதர்தாம் !
நங்கூரத்தைப் பெற்றீர் அங்கு !
    ஆனால் போதுமோ இவை இங்கு !
பங்கமற்ற பலியை நீரும்தான்
    ஆபிரகாமோடு சேர்ந்து அளிப்பீரே !

என்று அவள் பாடிக்கொண்டிருந்தபோது, யாரோ கதவைத் தட்டினார்கள்.

வாயிற்காப்போன் கதவைத் திறந்தான். துணிவுள்ளவன் உள்ளே நுழைந்தான். அவரைக் கண்டவுடன் அனைவரும் மகிழ்ச்சியால் ஆரவாரித்தார்கள். அவன் எவ்வாறு இரத்த வெறியன் என்ற அரக்கனைக் கொன்று, அவனுடைய சிங்கங்களிடமிருந்து அவர்களைக் காப்பாற்றினான் என்பதை அவர்களால் மறந்துபோகவும் கூடுமோ?

''எனது ஆண்டவர், கிறிஸ்தீனாள், இரக்கம் உங்கள் ஒவ்வொருவருக்கும் தலா ஒரு திராட்சரசப் புட்டியையும், கொஞ்சம் வறுத்த மக்காசோளமும், மாதுளம் பழம் சிலவும் கொடுத்தனுப்பியிருக்கிறார். பிள்ளைகள் வழியில் பசியாற்றிக் கொள்ள உலர்ந்த திராட்சையும், அத்திப் பழமும்கூட அனுப்பி யிருக்கிறார்'' என்று துணிவுள்ளவன் கூறியவுடன் அவர்களது மகிழ்ச்சிக்கு அளவேயில்லை!

13. அலங்கார மாளிகையைவிட்டுப் புறப்படுதல்

பயணிகள் புறப்பட்டுச் சென்றார்கள்; முன்யோசனை, பக்தி இருவரும் அவர்களோடு சற்றுத் தூரம்வரை சென்றார்கள். வாயிற்காப்போனின் அருகே வந்தபோது கிறிஸ்தீனாள் அவனிடம், "சமீபத்தில் இந்த வழியாக எவரேனும் சென்றார்களா?" என்று கேட்டாள்.

''சமீபத்தில் ஒருவரும் செல்லவில்லை. ஆனால் சில காலத்திற்கு முன்பு இவ்வழியாகச் சென்ற ஒருவன் கூறிய செய்தி இது. நீங்கள் போகவேண்டிய அரசருடைய நெடுஞ்சாலையில் சில காலத்திற்கு முன்னர் பெரிய கொள்ளை ஒன்று நடைபெற்றதாம். ஆனால் அந்தத் திருடர்கள் பிடிப்பட்டு விட்டார்களாம். விசாரணை செய்து மரண தண்டனை விதிக்கப் படப்போகிறதாம்'' என்றான் வாயிற்காப்போன்.

இதைக் கேட்டு கிறிஸ்தீனாளும் இரக்கமும் பயப்பட்டார்கள்.

ஆனால் மத்தேயுவோ, ''அம்மா பயப்படாதீர்கள் துணிவுள்ளவன்தான் நமது வழிகாட்டியாகக் கூட வருகிறாரே!'' என்று கூறி அவர்கள் பயத்தைத் தணித்தான்.

கிறிஸ்தீனாள் வாயிற்காப்போனைப் பார்த்து, "ஐயா நான் இங்கே வந்ததிலிருந்து நீங்கள் என்னிடம் காட்டி வந்த கருணைக்காக நான் உங்களுக்கு மிகவும் கடமைப்பட்டுள்ளேன். எனது மக்களிடம்கூட நீங்கள் அதிகமாக அன்பு காட்டி வந்தீர்கள். உங்கள் கருணைக்கு எவ்வாறு கைம்மாறு செய்வதென்பது எனக்குத் தெரியாது. ஆனால் உங்கள்மீது நான் வைத்துள்ள மரியாதைக்கு அடையாளமாக நான் கொடுக்கும் இந்த நாணயத்தையாவது ஏற்றுக்கொள்ளுங்கள்'' என்று கூறி ஒரு தங்க நாணயத்தை அவனிடம் கொடுத்தாள்.

அவன் தலைகுனிந்து வணங்கி அதைப் பெற்றுக் கொண்டான்.

"அம்மா, உனது ஆடைகள் எப்போதும் வெள்ளையாயும், உன் தலைக்கு எண்ணெய் குறைவில்லாமலும் இருப்பதாக

(பிர. 8:9). இந்த இரக்கம் என்ற பெண் மரித்துப் போகாமல் ஜீவனைப் பெறுவாளாக. அவளது கிரியைகள் வளர்ந்து பெருகட்டும்" என்று வாழ்த்தினான்.

பிறகு பையன்களைப் பார்த்து, "நீங்கள் பாலியத்துக்குரிய இச்சைகளுக்கு விலகியோடி, சுத்த இருதயத்தோடே கர்த்தரைத் தொழுதுகொள்ளுகிறவர்களுடனே, நீதியையும் விசுவாசத்தையும் அன்பையும் சமாதானத்தையும் அடையும்படி நாடுங்கள் (2 தீமோ. 2:22). அப்போது நீங்கள் உங்கள் தாயாரின் இருதயத்தில் மகிழ்ச்சியை வரவழைப்பீர்கள். ஞானிகள் உங்களைப் புகழுவார்கள்'' என்று கூறினான். அவர்கள் வாயிற்காப்போனுக்கு நன்றி கூறிவிட்டுப் புறப்பட்டார்கள்.

அவர்கள் நடந்துசென்று ஒரு மலைச் சரிவின் அருகே வந்து சேருவதை நான் என் கனவில் கண்டேன்.

அப்போதுதான் நினைவுக்கு வந்ததுபோல பக்தி திடீரென்று, "அடடா, நான் கிறிஸ்தீனாளுக்கும் அவளுடன் வந்தவர்களுக்கும் கொடுக்கவேண்டும் என்று நினைத்திருப்பதைக் கொடுக்காமல் மறந்துவிட்டேனே! நான் போய் அதை எடுத்து வருகிறேன்" என்று கூறிவிட்டுத் திரும்ப ஓடினாள்.

அந்த வேளையில் அருகிலிருந்த தோப்புக்குள் யாரோ ஓர் இனிமையான பாடலைப் பாடுவதுபோல கிறிஸ்தீனாளுக்குத் தோன்றியது. அந்தப் பாடலின் அடிகள் இப்படி அமைந்திருந்தன:

என் வாழ்நாள் முழுவதும்
கிடைத்ததே உம் தயவு!
உமது வீட்டில் என்றென்றும்
அடைக்கலம் பெறுவேன் நானே!

கிறிஸ்தீனாள் உற்றுக் கவனித்தாள். அப்போது அதற்குப் பதிலாக மற்றொரு குரல் இவ்வாறு பாடுவதைப் போலத் தோன்றியது.

ஏன் அப்படி? வல்லவர் அவர் நல்லவர்
அவர் கிருபை என்றும் நிச்சயமே!
நிலைத்திருக்குமே அவர் சத்தியம்
எந்நாளும் - காலம் காலமாகவே!

இந்த அற்புதமான பாடல்களைப் பாடுவது யார் என்று அவள் முன்யோசனையிடம் கேட்டாள்.

''அது மனிதரல்ல! எங்கள் நாட்டுப் பறவைகள் தாம் இவ்வாறு ஒலியெழுப்புகின்றன. வசந்த காலத்தில், மலர்கள்

பூத்துக் குலுங்கும்போது, கதிரவன் கதிர்விட்டுப் பிரகாசிக்கும் போது அவை நாளெல்லாம் பாடுவதை நீ கேட்கலாம். நான் அடிக்கடி சென்று அவற்றின் பாடல்களைக் கேட்பேன். சில பறவைகளை நாங்கள் வீட்டிலும் வளர்ப்பதுண்டு. நாம் சோகமயமாக இருக்கும்போது அவை பக்கத் துணையாக இருக்கின்றன. காடுகளையும் சோலைகளையும், தனிமையான இடங்களையும் நாம் களித்திருக்கும் இடங்களாக அவை மாற்றி விடுகின்றன'' என்று கூறினாள் முன்யோசனை.

இதற்குள் பக்தி மறுபடியும் வந்துவிட்டாள்.

''கிறிஸ்தீனாளே, இதோ பார். நீங்கள் எங்களுடைய மாளிகையில் பார்த்த காட்சிகளெல்லாம் இதில் படமாக வரையப்பட்டுள்ளன. நீங்கள் இவற்றை மறந்துவிட்ட வேளைகளில் இந்தப் படங்களைப் பார்த்து மீண்டும் நினைவுபடுத்திக்கொள்ளலாம். இவை உங்களுக்குப் புத்தி புகட்டுவதோடு, ஆறுதலையும் அளிக்கும்'' என்று கூறி பக்தி அவற்றை கிறிஸ்தீனாளிடம் கொடுத்தாள்.

14. தாழ்மை பள்ளத்தாக்கில் பயணிகள்

அவர்கள் மலைச்சரிவின் வழியாக தாழ்மை என்ற பள்ளத்தாக்குக்கு இறங்கிச் சென்றார்கள். அது செங்குத்தான சரிவாகவும், சறுக்கி விழத்தக்கதாகவும் இருந்தது. அவர்கள் கவனமாக இருந்தபடியால் ஆபத்தின்றி கீழே இறங்கிவிட்டார்கள்.

பள்ளத்தாக்கை அடைந்தவுடன் பக்தி கிறிஸ்தீனாளைப் பார்த்து, ''இங்குதான் உன் கணவன் கிறிஸ்தியான் அப்பொல்லியோன் என்ற அரக்கனைச் சந்தித்து அவனோடு போரிட நேர்ந்தது. நீ இதைப் பற்றிக் கேள்விப்பட்டிருப்பாய் என்று நினைக்கிறேன். ஆனால் நீ பயப்படாதே. துணிவுள்ளவன் உனக்குத் துணையாகவும், வழிகாட்டியாகவும் இருக்கிறார். நீங்கள் சேதமின்றிச் செல்வீர்கள் என்று நம்புகிறேன்'' என்றாள். பயணிகளை வழிகாட்டியின் பொறுப்பில் ஒப்படைத்து விட்டு பெண்கள் இருவரும் திரும்பிச் சென்றுவிட்டார்கள்.

''நாம் இந்தப் பள்ளத்தாக்கைப்பற்றிப் பயப்பட வேண்டியதில்லை. நாமே வருவித்துக் கொள்ளாத வரையில் எந்த ஆபத்தும் நம்மை அணுகப் போவதில்லை. கிறிஸ்தியான் இங்கே அப்பொல்லியோனைச் சந்தித்து அவனோடு போரிட நேர்ந்தது உண்மைதான். ஆனால் மலைச்சரிவில் அவன் சிலமுறை சறுக்கியதின் விளைவுதான் அது. மலைச் சரிவில் சறுக்குபவர்கள் இங்கே நிச்சயம் போரை எதிர்நோக்க வேண்டியிருக்கும். அதனால்தான் இந்தப் பள்ளத்தாக்குக்குக் கெட்ட பெயர்

வந்துவிட்டது. ஒரு குறிப்பிட்ட இடத்தில், குறிப்பிட்ட எவனுக்காவது ஓர் ஆபத்து நேரிட்டிருந்தால், அந்த இடத்தில் கெட்ட ஆவி இருக்கிறது என்று சாதாரணமாக மக்கள் நினைத்துக்கொள்கிறார்கள். இதுவோ எவ்வளவு பெரிய தவறு! அவர்களது கிரியைகளின் விளைவாகவே அவர்கள் ஆபத்துக்களைச் சந்திக்க நேரிடுகிறது. மற்ற இடங்களைப்போலவே இந்தத் தாழ்மையின் பள்ளத்தாக்கும் பயன்தரக் கூடிய ஓரிடமாகவே இருக்கிறது. நாம் கவனமாக இவ்வழியில் சென்றால், கிறிஸ்தியான் ஏன் அவதிக்குள்ளானான் என்பதின் காரணத்தைக் கூட ஒரு வேளை கண்டறியக் கூடும்" என்றான் துணிவுள்ளவன்.

அப்போது யாக்கோபு தன் தாயாரைப் பார்த்து, "அம்மா, அதோ ஒரு தூண் நிறுத்தப்பட்டிருக்கிறது! அதில் ஏதோ எழுதப்பட்டிருப்பதுபோலத் தோன்றுகிறது நாம் அருகே சென்று அதைப் பார்ப்போம்!" என்று கூறினான்.

அவர்கள் அருகே சென்றார்கள். அங்கே, "இங்கு வருமுன் கிறிஸ்தியான் சந்தித்த சறுக்கல்களும், இங்கு அவன் சந்தித்த போர்களும் அனைவருக்கும் எச்சரிப்பாக அமையட்டும்" என்று எழுதப்பட்டிருந்தது.

"பார்த்தீர்களா? நான் முன்பே சொல்லவில்லையா? கிறிஸ்தியான் இங்கே எதிர்நோக்கிய போர்களுக்கான காரணத்தைக கண்டுபிடிக்க முடியும் என்று கூறினேன் அல்லவா?" என்று கூறிய துணிவுள்ளவன் கிறிஸ்தீனாளைப் பார்த்து, பல்வேறு பயணிகள் சந்தித்த ஆபத்துக்களைத்தான் கிறிஸ்தியானும் எதிர்நோக்கியிருக்கிறான். ஏனென்றால் இந்த மலையில் ஏறுவதைவிட இறங்குவதுதான் கடினம். இதைப்போன்ற அநேக மலைகளை உலகில் காண முடியாது. ஆனால் கிறிஸ்தியானைப்பற்றிக் குறை கூற வேண்டாம். அவன் தனது விரோதியை வெற்றி கண்டு இப்போது இளைப்பாறிக் கொண்டிருக்கிறான். அவனைப்போல நாமும் சோதிக்கப்படும் போது வெற்றிபெற மேலேயுள்ளவர் நமக்குக் கிருபை யருளுவாராக!" என்றான்.

அவன் மேலும் தொடர்ந்து, "இந்த தாழ்மையின் பள்ளத்தாக்கு எப்படியிருக்கிறது என்பதைப் பார்ப்போம். இது வளமான ஒரு பூமி. எங்கும் புல்வெளிகள் நிறைந்திருப்பதை நீங்களே பாருங்கள். நம்மைப்போலவே இந்தப் பள்ளத்தாக்கைப் பற்றி முன்னரே கேள்விப்பட்டிராத ஒருவன் இந்தப் பருவத்தில் இங்கே வந்தால் இந்தக் கண்கவர் காட்சிகளைக் கண்டு களிப்பெய்தாமல் இருப்பானோ? எவ்வளவு பச்சைப்பசேலென்று காட்சியளிக்கிறது! அழகான லீலிமலர்கள் அணிவகுத்து

நிற்கின்றன! இந்தத் தாழ்மையின் பள்ளத்தாக்கில் அநேக உழைப்பாளிகள் தங்களுக்கென்று நிலத்தைப் பெற்றிருப்பதை நான் அறிவேன். ஏனெனில், தேவன் பெருமையுள்ளவனுக்கு எதிர்த்து நிற்கிறார்; தாழ்மையுள்ளவனுக்கோ கிருபை அளிக்கிறார் (யாக். 4:6). உண்மையிலேயே இது செழிப்பான நிலம்தான். நல்ல விளைச்சலை அளிக்கிறது. பரமபிதாவின் வீட்டை விரைவில் சென்றடைய விரும்பும் சில பயணிகள் இதற்கு மேலும் ஏறிச் செல்ல மலைகளோ குன்றுகளோ குறுக்கிடக்கூடாது என்று நினைக்கின்றனர். ஆனாலும் ஆண்டவர் வகுத்த வழிதான் வழி. இறுதியில் முடிவு உண்டு" என்றான் துணிவுள்ளவன்.

மேலும் அவர்கள் நடந்து செல்லும்போது ஒரு சிறுவன் தன் தகப்பனாரின் ஆடுகளை மேய்த்துக் கொண்டிருப்பதைக் கண்டார்கள். அந்தச் சிறுவன் எளிய உடைகளை அணிந்திருந் தாலும் மலர்ந்த முகத்தை உடையவனாகக் காணப்பட்டான். அவன் தனிமையில் அமர்ந்தபடி பாடிக்கொண்டிருந்தான். அந்தப் பையன் பாடுவதைக் கவனிக்கும்படி துணிவுள்ளவன் கேட்டுக்கொண்டார். பயணிகள் அந்தப் பாடலைக் கவனித்தனர்.

தரையில் இருப்பவன் கீழேவிழான்
　தாழ்மையுள்ளவன் பெருமை கொள்வான்
தாழ்மையுள்ளவன் எவனோ அவனுக்கு
　கர்த்தரே வழிகாட்டியாக இருப்பார்
கொஞ்சமோ அதிகமோ இருப்பதே
　போதுமென்பது என் மனம்
திருப்தியுடையோரை நீருமே
　என்றும் காப்பாற்றுவீரே!
பயணம் செல்வோர்க்கு என்றுமே
　பாரம் அதிகம் தானுமே!
இங்கே கொஞ்சம் பிறகே அனைத்தும்
　என்றும் இதுவே மேன்மையே!

"அவன் பாடுவதைக் கேட்டீர்களா? செல்வத்தில் வாழ்ந் திருப்பவரைவிட இவன் மகிழ்ச்சியான வாழ்க்கை வாழ்ந்து கொண்டிருக்கிறான். அவன் உள்ளத்தில் திருப்தி நிலவுகிறது என்று என்னால் உறுதியாகக் கூற முடியும்" என்று கூறிய வழிகாட்டி மேலும் தொடர்ந்தார்.

"இந்தப் பள்ளத்தாக்கில்தான் ஆண்டவருடைய நாட்டுப்புற மாளிகை முன்னர் கட்டப்பட்டிருந்தது. இங்கே தங்கியிருப்பதை அவர் அதிகமாக நேசித்தார். இங்கே இனிமையான காற்று வீசிக் கொண்டிருக்கிறபடியால், இந்தப் புல்வெளிகளின் நடுவே உலாவச் செல்வது அவருக்கு மிகவும் பிடித்தமாக இருந்தது. வாழ்க்கையின் பரபரப்பையும், கூச்சல்களையும்விட்டு விலகி

ஒருவர் இங்கே அமைதியான சூழ்நிலையில் இருக்கமுடியும். மற்றப் பகுதிகள் அனைத்திலும் குழப்பமும், கூச்சலும்தான் காணப்படுகிறது. இந்தத் தாழ்மையின் பள்ளத்தாக்கு மட்டுமே தனிமையின் அழகு நிறைந்த பகுதியாக இருக்கிறது. மற்ற இடங்களில் ஒருவன் தியானிப்பதற்குப் பல இடையூறுகள் காணப்படலாம். ஆனால் இங்கோ அவன் தனிமையில் சிந்திக்க முடியும். பயணிகளாகச் செல்ல முன்வருபவர்கள்மட்டுமே இந்தப் பள்ளத்தாக்கிற்குள் நுழைகின்றனர். கிறிஸ்தியான் இங்கே அப்பொல்லியோனோடு போரிட நேர்ந்தது உண்மைதான். ஆனால் முன்காலத்தில் இங்கே அநேகர் தேவதூதர்களைச் சந்தித்திருக்கிறார்கள்; இந்த இடத்தில் ஜீவ வார்த்தைகளைக் கண்டெடுத்திருக்கிறார்கள்'' என்றான் துணிவுள்ளவன்.

“இந்த இடத்தை முன்காலத்தில் நமது ஆண்டவர் தமது நாட்டுப்புற வீடாகக் கொண்டிருந்தார் என்று நான் முன்னரே கூறினேன் அல்லவா? இந்த இடத்துக்கு விரும்பிவருகிறவர்களுக்கு வழியில் பராமரிப்பு அளிக்கவும், அவர்கள் தங்கள் பயணத்தைத் தொடரும்படி ஊக்குவிக்கவும் உதவியாக இருக்கும்படி பகிர்ந்து கொடுப்பதற்காக ஆண்டுதோறும் மானியம் அளிக்கும் ஒரு நிதியையும் அவர் நிறுவியுள்ளார்'' என்று மேலும் தொடர்ந்து கூறினான் துணிவுள்ளவன்.

''ஐயா, இந்தப் பள்ளத்தாக்கில் எனது தகப்பனாரும் அப்பொல்லியோனும் போரிட்டார்கள் என்று கேள்விப் பட்டிருக்கிறோமே! ஆனால் எந்த இடத்தில் அந்தச் சண்டை நடந்தது?'' என்று துணிவுள்ளவனிடம் கேட்டான் சாமுவேல்.

''இன்னும் சற்றுத் தொலைவிலுள்ள ஒரு நெருக்கமான பாதையில் உனது தகப்பனாருக்கும், அப்பொல்லியோனுக்கும் இடையே சண்டை நடைபெற்றது. அந்த இடம் **மறதிக்காடு** என்ற புல்வெளிக்கு அப்பால் உள்ளது. இந்த இடத்தில் மிகவும் அபாயகரமான பகுதியே அதுதான்! தாங்கள் பெற்ற அனுபவித்துள்ள தயவுகளை எப்போது பயணிகள் மறந்து, தாங்கள் தகுதியற்றவர்களாயினும் ஆண்டவர் தங்களுக்கு அருளிய ஆசீர்வாதங்களை நினைவுகூறாமல் இருக்கும்போதுதான் அவர்கள் இத்தகைய போர்களில் சிக்கிக்கொள்ள நேரிடுகிறது. இன்னும் அநேகரும்கூட இந்த இடத்தில் பல பிரச்சினைகளைச் சந்தித்திருக்கிறார்கள். அந்த இடத்துக்கு நாம் செல்லும்போது அதைப்பற்றி இன்னும் அதிகமாகக் கூறுகிறேன். இன்றும்கூட அவ்விடத்தில் நடைபெற்ற சண்டைகள் நினைவூட்டும் அடையாளங்களையும், ஞாபகச் சின்னங்களையும் அங்கே காணலாம் என்றே நான் நினைக்கிறேன்'' என்றான் துணிவுள்ளவன்.

"மற்ற எல்லா இடங்களையும்விட இந்த இடத்தில் இருப்பது எனக்கு மிகவும் பிடித்திருக்கிறது. இந்த இடத்தின் சூழ்நிலை எனது மனநிலையோடு இசைந்து காணப்படுகிறது. வண்டிகள் ஓடும் சத்தமும், சக்கரங்கள் எழுப்பும் ஓசையும் காணப்படாத அமைதியான இடங்களில் இருக்கவே நான் விரும்புகிறேன். இங்கு ஒருவன் எந்தவித இடையூறுமின்றி தான் யார், எங்கிருந்து வந்தான், என்ன செய்தான். ஆண்டவர் எதற்காக அவனை அழைத்திருக்கிறார் என்பதைப்பற்றிச் சிந்திக்க முடியும். சிந்தித்து, இருதயம் உடைந்துபோனவனாகக் கலங்கி, எஸ்போனின் *(உன்.7:4)* குளத்தைப் போன்று கலங்கிய கண்களுடன் காணப்படலாம். அழுகையின் பள்ளத்தாக்காகக் காணப்படும் இந்த இடத்தின் வழியே செல்பவர்கள் இதைத் தங்களுக்குத் தேவையான நீரூற்றாக ஆக்கிக்கொள்கிறார்கள். இங்குள்ளவர்களுக்காக ஆண்டவர் விண்ணிலிருந்து அனுப்பும் மழை குளங்களை நிறைக்கிறது. இந்தப் பள்ளத்தாக்கிலிருந்துதான் ஆண்டவர் தம்மைப் பின்பற்றுபவர்களுக்கு அவர்களுக்குரிய திராட்சத் தோட்டங்களை விநியோகிப்பார். அப்பொல்லியோனோடு அவதிப்பட்ட பின்னரும் கிறிஸ்தியான் பாடிக்கொண்டே சென்றபடி இந்தத் தோட்டத்தினூடே செல்பவர்கள் அனைவரும் பாடிக்கொண்டே செல்வார்கள்" என்றான் இரக்கம்.

"நீ சொல்லுவது உண்மைதான். நான் இந்தப் பள்ளத்தாக்கின் வழியே அநேகமுறை கடந்து சென்றிருக்கிறேன். இங்கிருக்கும்போது நான் நலமாக இருப்பதை உணர்கிறேன். நான் அநேக பயணிகளை இந்த வழியில் வழிநடத்திச் சென்றிருக்கிறேன். அவர்களும் இதையேதான் சொல்லுகிறார்கள். நமது அரசரும் கூட 'சிறுமைப்பட்டு, ஆவியில் நொறுங்குண்டு, என் வசனத்துக்கு நடுங்குகிறவனையே நோக்கிப் பார்ப்பேன் *(ஏசாயா 66:2)* என்று கூறுகிறார்" என்றான் துணிவுள்ளவன்.

இவ்வாறு பேசியபடியே நடந்துசென்ற அவர்கள் கிறிஸ்தியானும், அப்பொல்லியோனும் போரிட்ட இடத்துக்கு வந்து சேர்ந்தார்கள்.

அந்த இடத்தை கிறிஸ்தீனாளுக்கும், இரக்கத்திற்கும் பிள்ளைகளுக்கும் சுட்டிக்காட்டிய வழிகாட்டி, "இதோ இந்த இடத்தில்தான் கிறிஸ்தியான் நின்றுகொண்டிருந்தான். அதோ அங்கேயிருந்த அப்பொல்லியோன் எதிர்த்து வந்தான். நான் ஏற்கெனவே சொல்லவில்லையா? சண்டையின் அடையாளமாக கிறிஸ்தியானின் இரக்கத்தை இன்றுவரை இதோ இந்தக் கற்களின் மீது காணலாம். அப்பொல்லியோனின் ஒடிந்துபோன அம்புகளின் துண்டுகளைக்கூட ஆங்காங்கே காணலாம். ஒருவரோடொருவர் எதிர்த்து நின்றபோது, கோபத்தில் மண்மீது அழுத்தமாக வைத்த

காலடி சுவடுகளை இன்றும் பார்க்க முடிகிறதே! ஒருவரையொருவர் கட்டிப்புரண்டு சண்டை போட்டதில் கற்கள் நொறுங்கி கிடப்பதைப் பாருங்கள்! ஆம், கிறிஸ்தியான் இந்த இடத்தில் ஹெர்குலிசைப்போல திடமான மனிதனாக நின்று போரிட்டான். அப்பொல்லியோன் தோற்கடிக்கப்பட்டபோது அவன் பக்கத்திலுள்ள மரண இருளின் பள்ளத்தாக்கிற்குப் பின்வாங்கிச் சென்றுவிட்டான். இன்னும் சற்று நேரத்தில் அந்தப் பள்ளத்தாக்கையும் நாம் கடந்துசெல்ல வேண்டியிருக்கும். அதோ அந்தத் தூணில் இந்தப் போரைப் பற்றியும், கிறிஸ்தியான் பெற்ற வெற்றியைப் பற்றியும் காலம் காலமாக அனைவரும் அறிந்துகொள்ளும் வண்ணம் பொறித்து வைக்கப்பட்டுள்ளது" என்று கூறினாள்.

அவர்கள் செல்லும் வழியிலிருந்து அந்தத் தூணின் அருகே நின்று அதில் எழுதப்பட்டிருந்த வாசகத்தை அவர்கள் வாசித்தார்கள். இதோ:

"இந்த இடத்தில் நடந்தது போர்
விந்தை ஆனால் உண்மை!
போரிட்டது கிறிஸ்தியானும் அப்பொல்லியோனும்
வீரர் யாரெனக் கண்டறிய!
வெற்றி பெற்றதோ மனிதன்
சற்றும் அஞ்சாமல் விரட்டினான் எதிரியை
அவன் புகழ் பாடுவேன் நானுமே!
அவனியோர் இதை அறிவீரே!"

என்று அந்த வெற்றிக் கம்பத்தில் எழுதப்பட்டிருந்தது.

15. மரண இருளின் பள்ளத்தாக்கில் பயணிகள்

பயணிகள் இந்த இடத்தைக் கடந்துசென்று மரண இருளின் பள்ளத்தாக்கின் எல்லைக்கருகே வந்து சேர்ந்தார்கள். இது மற்ற பள்ளத்தாக்கைவிட நீண்ட பகுதியாக இருந்தது. அங்கு பல ஆவிகள் குடிகொண்டிருந்தன. ஆனால் பயணிகள் பகல் வேளையில் அதைக் கடந்து சென்றபடியாலும், துணிவுள்ளவன் அவர்களுக்கு வழிகாட்டியாக இருந்தபடியாலும், அநேகமாக மிக எளிதாக அவர்கள் அந்தப் பள்ளத்தாக்கைக் கடந்து சென்றார்கள் என்றே கூறவேண்டும்.

அவர்கள் அந்தப் பள்ளத்தாக்கினுள் காலடி எடுத்து வைத்தபோது, மரிக்கும் நிலையிலிருப்போர் பெருங்குரலில் மரண ஓலம் எழுப்புவதைப்போன்ற முனகலைக் கேட்டதாக நினைத்தார்கள். ஆழ்ந்த வேதனையில் எவரோ புலம்பும்

குரலைக் கேட்டதுபோலவும் தோன்றியது. இதனால் பிள்ளைகள் பயந்து நடுங்கினார்கள். பெண்கள் முகம் வெளிறிப்போய் காணப்பட்டார்கள். ஆனால் அவர்களது வழிகாட்டி அவர்களுக்கு ஆறுதலளித்து அவர்களை வழிநடத்தினார்.

மேலும் சற்றுத் தூரம் நடந்து சென்றபோது அவர்கள் காலடியில் நிலம் நடுங்குவதைப் போன்ற உணர்வைப் பெற்றார்கள். அடியில் பள்ளம் இருக்கிறதோ என்று நினைக்கத் தோன்றியது. பாம்புகள் சீறும் ஓசை கேட்டுக் கொண்டிருந்தது. ஆனால் எதுவும் வெளியே வரவில்லை!

அப்போது அந்தப் பையன்கள் “இந்த மோசமான பாதை இன்னும் முடிவடையவில்லையா?” என்று அங்கலாய்த்தார்கள்.

“பிள்ளைகளே திடமனதுள்ளவராய் இருங்கள். காலைப் பார்த்து வையுங்கள். இல்லாவிட்டால் கண்ணிகளில் மாட்டிக்கொள்வீர்கள்” என்று அவர்களை எச்சரித்தார் துணிவுள்ளவன்.

இந்த வேளையில் யாக்கோபு வியாதிப்பட்டான். பயம்தான் இதற்குக் காரணம் என்று நான் நினைக்கிறேன். உடனே கிறிஸ்தீனாள் விளக்கம் கூறுபவர் அனுப்பியிருந்த திராட்ச ரசத்தில் கொஞ்சத்தை அவனுக்கு குடிக்க கொடுத்தாள். திறமைசாலி தயாரித்துக் கொடுத்திருந்த மாத்திரைகளில் மூன்றையும் அவனுக்குக் கொடுத்தாள். அவன் சுகம்பெற்று எழுந்து அமர்ந்தான்.

அவர்கள் பள்ளத்தாக்கின் மையப்பகுதியைச் சென்றடைந்தார்கள்.

அப்போது கிறிஸ்தீனாள், “அதோ நமக்கு முன்பாகப் பாதையில் நான் இதுவரை பார்த்தறியாத ஓர் உருவம் எதிராக வருவதுபோல எனக்குத் தோன்றுகிறது” என்றாள்.

“அம்மா, அது எந்த உருவம்?” என்று கேட்டான்.

“அருவருப்பான உருவம்போலத் தெரிகிறது” என்றாள் கிறிஸ்தீனாள்.

“அம்மா, அது எப்படி இருக்கிறது?” என்று மறுபடியும் கேட்டான் யோசேப்பு.

“அது கொஞ்சம் தொலைவில் இருக்கிறபடியால் அது எப்படியிருக்கிறது என்று என்னால் கூறமுடியவில்லை” என்று கூறிய கிறிஸ்தீனாள் சற்று நேரம் கழித்து, “இதோ அந்த உருவம் அருகே வந்து நிற்கிறது” என்று நடுங்கும் குரலில் கூறினாள்.

உடனே துணிவுள்ளவன், "உங்களில் பயப்படுகிறவர் எவரும் பாதுகாப்புக்காக என்னை நெருங்கிச் சேர்ந்துகொள்ளுங்கள் என்று கூறினார். அந்தத் தீய உருவம் நெருங்கி வந்தபோது, அவர் அதை எதிர்த்துச் சென்றார். ஆனால் அந்த உருவம் திடீரென்று மறைந்துவிட்டது!

"பிசாசுக்கு எதிர்த்து நில்லுங்கள். அப்பொழுது அவன் உங்களைவிட்டு ஓடிப்போவான்" (யாக். 4:7) என்ற வசனத்தை அவர்கள் நினைவு கூர்ந்தார்கள்.

அவர்கள் புத்துணர்வு பெற்றவர்களாக மேலும் தொடர்ந்து சென்றார்கள். சற்றுத் தொலைவு சென்ற பின்னர் திரும்பிப் பார்த்த இரக்கம் ஒரு சிங்கம் அவர்களை வேகமாக விரட்டிக்கொண்டு வருவதைக் கண்டு அலறினார்கள்.

சிங்கம் உரத்த குரலில் கெர்ச்சித்தது. அதன் கர்ஜனை பள்ளத்தாக்கு எங்கும் எதிரொலித்தது. வழிகாட்டியைத் தவிர பயணிகள் அனைவருமே பயத்தால் நடுங்கினார்கள்.

சிங்கம் நெருங்கி வந்தவுடன் துணிவுள்ளவன் அவர்களைப் பின்னால் தள்ளிவிட்டு, சிங்கத்திற்கு எதிர்த்துச் சென்றான். விசுவாசத்தில் உறுதியாக இருந்த அவன் சிங்கத்துக்கு எதிர்த்து நின்றான் (1 பேதுரு 5:8, 9). அப்போது அந்தச் சிங்கம் பின்வாங்கி ஓடிவிட்டது.

ஆபத்து நீங்கியவர்களாக பயணிகள் தொடர்ந்து நடந்து சென்றார்கள். வழிகாட்டி அவர்களுக்கு முன்பாக நடந்து சென்றான். பாதையின் குறுக்கே வெட்டப்பட்டிருந்த ஒரு நீண்ட பள்ளத்தின் அருகே அவர்கள் வந்து சேர்ந்தார்கள். அவர்கள் அதைக் கடக்குமுன்னர் திடீரென்று மூடுபனி பரவிவந்து எங்கும் இருள் சூழ்ந்தது. அவர்களால் எதையும் பார்க்க முடியவில்லை.

"அச்சச்சே, இப்போது என்ன செய்வது?" என்று பயணிகள் பதறினார்கள்.

"பயப்படாதீர்கள், இந்த இருள் விலகும்வரை அப்படியே நில்லுங்கள்'' என்று அவர்களுக்கு தைரியமூட்டினான் துணிவுள்ளவன்.

விரோதிகள் நெருங்கி வருவதைப்போன்று பயங்கர சத்தத்தை அவர்கள் கேட்டார்கள். அந்தப் பள்ளத்திலிருந்து நெருப்பும், புகையும் மேலெழும்பி வருவதைக் கண்டார்கள்.

"பாவம் என் கணவர். எப்படிப்பட்ட பாதையில் அவர் சென்றார் என்பதை இப்போது நான் உணருகிறேன். இந்த

இடத்தைப்பற்றி நான் அதிகமாகக் கேள்விப்பட்டிருந்தாலும் இப்போதுதான் இந்தப் பயங்கரமான இடத்தை நான் நேரில் கண்டிருக்கிறேன். பாவம் அவர்! இரவு நேரத்தில் தன்னந்தனியாக அவர் இந்தப் பாதையில் சென்றிருக்கிறார். தீய பிசாசுகள் அவரைக் கிழித்துப் போட்டுவிடுவதுபோல நெருங்கி வந்து பயமுறுத்தின. இந்த இடத்தைப்பற்றி அநேகர் கூறியிருக்கிறார்கள். ஆனால் இங்கே வந்து பார்த்தால்மட்டுமே இதைப்பற்றி அவர்களால் முழுமையாகக் கூற முடியும். 'இருதயத்தின் கசப்பு இருதயத்திற்கே தெரியும்; அதன் மகிழ்ச்சிக்கு அந்நியன் உடந்தையாகான்' *(நீதி. 14:10)* என்று கூறினாள் கிறிஸ்தீனாள்.

"இது பெரிய கடலில் பணிபுரிவதுபோலவும், ஆழத்தில் செல்வதுபோலவும் இருக்கிறது. கடலின் நடுவில் நாம் குடியிருப்பதுபோலவும், மலையின் அஸ்திபாரத்திற்குள் போவது போலவும் இருக்கிறது. பூமி தனக்குள் நம்மை அடைத்துப் போடுவதுபோலவும் தோன்றுகிறது. 'எவன் தனக்கு வெளிச்ச மில்லாததினால் இருட்டிலே நடக்கிறானோ, அவன் கர்த்தருடைய நாமத்தை நம்பி, தன் தேவனைச் சார்ந்துகொள்ளக்கடவன்' *(ஏசாயா 50:10)* என்று கூறப்பட்டிருக்கிறதே. நான் ஏற்கெனவே இந்தப் பாதையில் அடிக்கடி சென்றிருக்கிறேன் என்று நான் உங்களுக்குக் கூறியிருக்கிறேன். இப்போது சந்தித்த ஆபத்துக்களைப் பார்க்கிலும் இன்னும் அநேக ஆபத்துக்களையும் சந்தித்திருக்கி றேன். ஆனால் நான் இன்றும் உயிரோடிருப்பதை நீங்கள் பார்க்கிறீர்களே! நான் பெருமைப்படமாட்டேன்; ஏனென்றால் என்னை நானே காப்பாற்றிக்கொள்ள முடியாது. ஆனால் நாம் பாதுகாப்போடு அழைத்துச் செல்லப்படுவோம் என்ற நம்பிக்கை நமக்கு இருக்கிறது. வாருங்கள், இந்த இருளை அகற்றி ஒளியைப் பிரகாசிக்கும்படி செய்ய வல்லவரை நோக்கி ஜெபிப்போம். அந்த ஒளி இருளை அகற்றுவதோடு மட்டுமின்றி, நரகத்தின் சாத்தான்களையும் அகற்றிவிடும்" என்றான் துணிவுள்ளவன்.

பயணிகள் கண்ணீரோடு ஜெபித்தார்கள். ஆண்டவர் அவர்களுக்கு ஒளியையும், விடுதலையையும் அனுப்பினார். அவர்களால் பாதையைத் தெளிவாகக் காண முடிந்தது. குறுக்கிட்ட அந்தப் பள்ளத்தையும் கடந்து சென்றார்கள். ஆனால் துர்நாற்றம் பயங்கரமாக இருந்தது. முகத்தைச் சுழித்தவாறே அவர்கள் அந்த இடத்தைக் கடந்து சென்றார்கள்.

"நாம் முதலில் நுழைந்த வாயிலண்டையிலோ அல்லது விளக்கம் கூறுபவரின் இடத்திலோ நாம் கண்டதைப்போன்ற இனிமையான இடம் இதுவல்ல" என்று இரக்கம் கிறிஸ்தீனாளிடம் கூறினாள்.

“எப்போதுமே இங்கே இருக்கவேண்டிய நிலைமையைவிட இந்த இடத்தைக் கடந்து செல்வது மோசமானதல்ல. இத்தகைய பயங்கரமான வழியில் நாம் சென்று நமக்கு வாக்களிக்கப் பட்டுள்ள வீட்டை அடையும்போது, அந்த இடத்தின் மேன்மையை இன்னுமதிகமாக உணரும்படியாகவே நாம் இந்த வழியாக கடந்து செல்ல வேண்டியிருக்கிறது'' என்றான் பையன்களில் ஒருவன்.

இதைக் கேட்ட வழிகாட்டி, ‘‘நன்றாகச் சொன்னாய், சாமுவேல், இப்போது நீ ஒரு முழு மனிதனைப்போலப் பேசியிருக்கிறாய்...” என்று அவனைப் பாராட்டினார்.

“இந்த ஆபத்துக்களையெல்லாம் கடந்து சென்றுவிட்டால், ஒளியைப்பற்றியும், இந்த நல்ல வழியைப்பற்றியும் எனது மதிப்பு அதிகமாகும்” என்றான் அந்தப் பையன்.

“இன்னும் சற்று காலத்தில் நாம் இதைக் கடந்து விடுவோம்” என்று கூறி பயணிகளை உற்சாகப்படுத்தினாள் வழிகாட்டி.

அவர்கள் தொடர்ந்து சென்றார்கள்.

“இந்தப் பள்ளத்தாக்கிற்கு முடிவே கிடையாதா?'' என்று அங்கலாய்த்தான் யோசேப்பு.

‘‘உங்கள் பாதையைக் கவனித்துச் செல்லுங்கள். கண்ணிகளினூடே நாம் நடந்து செல்கிறோம்'' என்று அவர்களை எச்சரித்தான் துணிவுள்ளவன்.

அவர்கள் மிகவும் கவனத்தோடு நடந்து சென்றாலும் கண்ணிகளில் அகப்படாமல் செல்லுவது சிரமமாகவே இருந்தது.

கண்ணிகள் நிறைந்த இடத்தைப் பயணிகள் கடந்தபோது, இடது புறத்திலிருந்து பள்ளத்தில் நார் நாராய்க் கிழிக்கப்பட்ட உடலுடன் ஒருவன் தூக்கி எறியப்பட்டிருந்ததைக் கண்டார்கள்.

இவன்தான் **கவனமற்றவன்**. இந்த வழியாகப் பயணம் சென்றவன் கண்ணிகளில் அகப்பட்டு, வெகு காலமாக இப்படிக் கிடக்கிறான். அவனோடு வந்த **கவனமுள்ளவன்** என்பவன் இவன் பிடிப்பட்டபோது தப்பிவிட்டான். இங்கே எத்தனைபேர் கொல்லப்பட்டிருப்பார்கள் என்பதை உங்களால் கற்பனை செய்துகூட பார்க்க முடியாது. ஆயத்தமின்றியும், வழிகாட்டி யின்றியும் பயணம் புறப்பட்டு வருவதின் விளைவுதான் இது! கிறிஸ்தியான் இந்த இடத்தில் தப்பிப் பிழைத்தது வியப்பான காரியம்தான். ஆனால் அவன் தனது ஆண்டவருக்குப் பிரியமானவனாக இருந்தான். சுத்த இருதயமுள்ளவனாகவும்

இருந்தான். இல்லாவிட்டால் அவனால் இந்த இடத்தைத் தாண்டிச் சென்றிருக்க முடியாது" என்றான் துணிவுள்ளவன்.

16. சங்கார அரக்கனைச் சந்தித்தல்

பயணிகள் பள்ளத்தாக்கின் மறுமுனையைச் சென்றடைந்தார்கள். தனது பயணத்தின்போது கிறிஸ்தியான் கடந்துசென்ற குகையைத் தாண்டி இவர்களும் சென்றார்கள்.

அப்போது அந்தக் குகையிலிருந்துச் சங்கார அரக்கன் வெளிப்பட்டான். தனது பேச்சுத் திறமையால் இளவயது பயணிகளை வீழ்த்திவிடுவது இவனது வழக்கமாக இருந்தது.

துணிவுள்ளவனைப் பெயர் சொல்லி அழைத்த அரக்கன், "நீ இந்தக் காரியத்தைச் செய்யக் கூடாது என்று எத்தனை முறை உன்னை நான் எச்சரித்திருக்கிறேன்?" என்று கடுமையான குரலில் அதட்டினான்.

"எந்தக் காரியம்?" என்று கேட்டான் துணிவுள்ளவன்.

"எந்தக் காரியமா?" எந்தக் காரியம் என்று உனக்குத் தெரியாதா? அதற்கு நான் ஒரு முடிவு செய்கிறேன்" என்று உறுமி சண்டையிடவந்தான் அரக்கன்.

"சண்டை போடுவதற்கு முன்னர் எதற்காக நாம் மோதிக்கொள்கிறோம் என்பது தெரியவேண்டாமா?" என்று கேட்டான் துணிவுள்ளவன்.

என்ன செய்வது என்று தெரியாமல் பெண்களும், பையன்களும் நடுங்கியபடியே நின்றுகொண்டிருந்தார்கள்.

"நீ இந்த நாட்டைக் கொள்ளையடிக்கிறாய்; அதிலும் மிகவும் மோசமான கொள்ளை" என்றான் அந்த அரக்கன்.

"பொதுவாகப் பேசாதே! என்னவென்று சொல்!" என்று கேட்டான் துணிவுள்ளவன்.

"ஆள்களைக் கடத்திச் செல்பவனின் வேலையையே நீ செய்கிறாய். பெண்களையும், பிள்ளைகளையும் அழைத்துக் கொண்டு, என் எசமானரின் அரசாங்கம் பலவீனப்படும்படியாக அவர்களை அந்நிய நாடடுக்குக் கூட்டிக்கொண்டு போகிறாய்" என்று கடுமையான குரலில் குற்றம் சாட்டினான் அந்த அரக்கன்.

"நான் பரலோகத்தின் ஆண்டவருடைய ஊழியக்காரன். பாவிகள் மனந்திரும்பும்படி அவர்களை ஊக்குவிப்பதே எனது பணி. ஆண்களையும், பெண்களையும், சிறு பிள்ளைகளையும்

இருளிலிருந்து ஒளிக்கும், சாத்தானின் கட்டுகளிலிருந்து ஆண்டவரிடத்திற்கும் அழைத்து வரும்படி நான் கட்டளை பெற்றிருக்கிறேன். இதற்காகவே நீ சண்டைக்கு வருவதாக யிருந்தால், வா. நானும் ஒரு கை பார்க்கிறேன்'' என்று அறைகூவினான் துணிவுள்ளவன்.

அரக்கன் போரிட முன்னால் வந்தான். வாளை உருவியபடி அவனை எதிர்த்துச் சென்றான் துணிவுள்ளவன். அரக்கன் ஓர் உருளைக் கட்டையை எடுத்துக்கொண்டான்.

முதல் அடியில் அரக்கன் துணிவுள்ளவனை முழங்காலில் அடித்து அவனை வீழ்த்தினான். பெண்களும், பையன்களும் பயந்துபோய் கூக்குரலிட்டார்கள். சுதாரித்துக் கொண்டு எழுந்த துணிவுள்ளவன் முழு பலத்தோடு அரக்கனைத் தாக்கி அவனது கையில் காயம் உண்டாக்கிவிட்டான். அவர்கள் ஒரு மணி நேரம் இவ்வாறு போரிட்டார்கள். அந்த அரக்கன் விடும் மூச்சுக் காற்று நீராவியைப்போல வெளிவந்துகொண்டிருந்தது.

சற்று நேரம் ஓய்வெடுக்கும்படி இருவரும் அமர்ந்தார்கள். துணிவுள்ளவன் ஆண்டவரை நோக்கி ஜெபித்தான். அந்தப் பெண்களும் பையன்களும் போர் முடிவடையும்வரை, புலம்பி அழுதபடியே இருந்தார்கள்.

ஓய்வெடுத்த பின்னர் துணிவுள்ளவனும் அரக்கனும் மீண்டும் ஒருவரோடொருவர் மோதிக்கொண்டார்கள். தன் முழு பலத்தோடு அரக்கனைத் தாக்கிய துணிவுள்ளவன் அவனைக் கீழே தள்ளிவிட்டான்.

''கொஞ்சம் பொறு, நான் எழுந்துகொள்கிறேன்'' என்று முனகினான் அந்த அரக்கன்.

அவன் எழுந்து நிற்கும்வரை காத்திருந்த துணிவுள்ளவன் மீண்டும் அவனோடு போரிட்டான். அரக்கன் தனது தடியால் அவனது மண்டை உடையும்படி தாக்கினான். ஆனால் துணிவுள்ளவன் இலாவகமாக விலகிக்கொண்டான்.

இனியும் விடக்கூடாது என்று முழுபலத்தோடு அரக்கனின் மீது பாய்ந்து துணிவுள்ளவன் அவனது விலாவில் பட்டயத்தால் ஓங்கிக் குத்தினான். அரக்கன் தள்ளாடினான். அவனால் தடியைக் கையில் பிடித்திருக்கமுடியவில்லை. மறுபடியும் அவனைத் தாக்கிய துணிவுள்ளவன் பட்டயத்தினால் அரக்கனின் தலையை வெட்டிவிட்டான்.

பெண்களும், பையன்களும் மகிழ்ச்சியால் ஆரவாரித்தார்கள். தங்களைக் காப்பாற்றிய ஆண்டவரைத் துதித்தான் துணிவுள்ளவன்.

அவர்கள் அனைவருமாக ஒரு தூணைக் கட்டியெழுப்பி, அதன் உச்சியில் அந்த அரக்கனின் தலையைப் பதித்தார்கள். பயணிகள் படிக்கும்படி, அதனடியில் இவ்வாறு எழுதி வைத்தார்கள்.

இந்த தலைக்குரியவன் வீணன்
பயணிகளைத்தான் துன்புறுத்தினான்!
தடுத்தான், வெட்டிக் குவித்தான்!
ஒருவரையும் விடவில்லை!
பயணிகளின் வழிகாட்டி நானே!
துணிவுள்ளவனும் வந்தேனே!
பயணிகளின் விரோதி அவனே
அழித்தேன் நானும் அவனையே!

தொடர்ந்து நடந்துசென்ற பயணிகள், பயணிகள் செல்லும் வழியைக் காண்பதற்கு வசதியாக அமைக்கப்பட்டிருந்த மண்மேட்டின்மீது ஏறினார்கள். இங்கிருந்தபடியேதான் கிறிஸ்தியான் முதன் முதலாக தன் நண்பன் உண்மையானவனைக் கண்டான்.

அந்த மண்மேட்டின்மீது பயணிகள் சற்றுநேரம் அமர்ந்து இளைப்பாறினார்கள். பயங்கரமான எதிரியின் கையில் பிடிபடாமல் அவனை வெற்றிக்கொண்டு வந்திருந்த அவர்கள் மகிழ்ச்சியோடும், மனநிம்மதியோடும் உணவருந்தினார்கள்; உற்சாகமாக உரையாடிக் கொண்டிருந்தார்கள்.

அப்போது கிறிஸ்தீனாள் "போரில் உங்களுக்கு ஏதேனும் காயம் ஏற்பட்டிருக்கிறதா?'' என்று துணிவுள்ளவனை விசாரித்தாள்.

"பெரிய காயம் ஒன்றும் இல்லை. சதையில்தான் சிறிய காயம் ஏற்பட்டுள்ளது. அதில் ஆபத்து ஒன்றுமில்லை. என் எசமானர்கள்மீதும், உங்கள்மீதும் நான் கொண்டுள்ள அன்புக்கு நிரூபணமாக இருக்கிறது. கிருபையின்மூலமாக இறுதியில் நான் இதற்கான பலனைக் காண்பேன்'' என்று கூறினான் துணிவுள்ளவன்.

"அவன் தடியை எடுத்துக்கொண்டு வரும்போது நீங்கள் அவனைக்கண்டு பயப்படவில்லையா?'' என்று கேட்டாள் கிறிஸ்தீனாள்.

''என் சுயபலத்தின்மீது நம்பிக்கை வையாமல், சர்வ வல்லவரின்மீதே என் நம்பிக்கையை வைப்பது என் கடமையல்லவா?" என்று பதிலளித்தான் துணிவுள்ளவன்.

"அவன் முதல் அடியில் உங்களைத் தரையில் வீழ்த்திய போது என்ன நினைத்தீர்கள்?" என்று கேட்டாள் கிறிஸ்தீனாள்.

"எனது எசமானும் இத்தகைய பாடுகளைப் பட்டபின்னரும் அவர்தானே வெற்றிசிறந்தார் என்று எண்ணிக்கொண்டேன்" என்றான் துணிவுள்ளவன்.

"ஆண்டவர் அற்புதமான வகையில் நம்மைக் காத்து வருகிறார் என்பதே என் நம்பிக்கை. நம்மை அந்தப் பள்ளத்தாக்கின் அபாயங்களில் சிக்கிக்கொள்ளாமல் விடுபட்டு வரும்படியும், இதோ இந்த அரக்கனின் கையிலிருந்து நம்மை விடுவிக்கும்படியும் செய்தவர் அவரே! நாம் இனிமேலும் அவர்மீது அவநம்பிக்கை கொள்வதற்கு எந்த முகாந்தரமும் இல்லையென்றே நான் உறுதியாகக் கூறுகிறேன். இதோ இந்த இடத்திலும்கூட அவர் நம்மீது வைத்துள்ள அன்பு எப்படிப்பட்டது என்பதை அவர் வெளிப்படுத்தியுள்ளார்" என்று கூறினான் மத்தேயு.

சற்று நேரம் ஓய்வெடுத்தபிறகு அவர்கள் எழுந்து நடந்தார்கள்.

17. நேர்மையானவனைச் சந்தித்தல்

அவர்கள் செல்லும் வழியில் உயர்ந்து வளர்ந்த ஒரு கருவாலி மரம் நின்றது. வயதான ஒரு பயணி அதனடியில் படுத்து உறக்கத்தில் ஆழ்ந்திருப்பதை அவர்கள் கண்டார்கள். அவரது ஆடைகளைக் கொண்டும், கைத்தடி மற்றும் கச்சையைக் கொண்டும் அவர் ஒரு பயணி என்பதைக் கண்டறிய முடிந்தது.

துணிவுள்ளவன் அவனை எழுப்பினான். கண்களைத் திறந்துபார்த்த அந்த முதியவர், "யார் நீ? என்ன காரியம்? இங்கே ஏன் வந்தாய்?" என்று படபடப்புடன் கேட்டார்.

"கோபப்படாதீர்கள் ஐயா! நாங்களும் நண்பர்கள்தாம்" என்றான் துணிவுள்ளவன்.

அவரோ அவர்களோடு சண்டை போடப்போகிறவரைப் போல படபடப்புடன் எழுந்தார். "யார் நீங்கள்?" என்று கேட்டார்.

"என்னுடைய பெயர் துணிவுள்ளவன். இந்தப் பயணிகள் மோட்சத்தை நோக்கிச் சென்றுகொண்டிருக்கிறார்கள். நான் அவர்களுக்கு வழிகாட்டியாக வந்துள்ளேன்" என்றான் துணிவுள்ளவன்.

"தயவுசெய்து என்னை மன்னித்துகொள்ளுங்கள். சில காலத்துக்கும் முன்னர் அற்பவிசுவாசம் என்பவரிடமிருந்து

பணத்தைக் கொள்ளையடித்த கூட்டத்தைச் சேர்ந்தவர்கள் என்று நான் தவறாக நினைத்துவிட்டேன். நீங்கள் நேர்மையானவர்கள் போலவே காணப்படுகிறீர்கள்" என்றார் **நேர்மையானவன்.**

"நாங்கள் ஒருவேளை அந்தக் கொள்ளைக் கூட்டத்தைச் சேர்ந்தவர்களாக இருந்தால் நீங்கள் என்ன செய்திருப்பீர்கள்?" என்று கேட்டான் துணிவுள்ளவன்.

"என்ன செய்திருப்பேனா?" என்னால் முடிந்தவரை எதிர்த்துப் போராடியிருப்பேன். அப்படியே நான் இறந்துபோனாலும் நீங்கள் என்னை அழித்துவிடமுடியாது. ஒரு கிறிஸ்தவன் தானே தன்னைக் கீழ்ப்படுத்தினாலொழிய எவரும் அவனை வெற்றி கொள்ள முடியாது" என்றார் நேர்மையானவன்.

"சரியாகச் சொன்னீர் ஐயா, நீங்கள் இப்படிக் கூறியதிலிருந்து நீங்கள் சேவலிலும் சரியான சேவல் என்பதை நான் உணர்ந்து கொள்கிறேன்: ஏனென்றால் நீங்கள் சத்தியத்தையே கூறினீர்கள்" என்றான் துணிவுள்ளவன்.

"நீ இப்படிக் கூறியதிலிருந்து நானும்கூட நீ உண்மையான பயணத்தைப் பற்றி அறிந்திருக்கிறாய் என்பதைக் கண்டு கொண்டேன். ஏனென்றால் மற்றவர்கள் எல்லாரும் நம்மை வெகு சுலபமாக வீழ்த்திவிடலாம் என்று நினைத்துக் கொண்டிருக்கிறார்கள்" என்றார் நேர்மையானவன்.

"நாம் சந்தித்துக் கொண்டது எனக்கு மகிழ்ச்சியைத் தருகிறது. அது சரி, உங்கள் பெயர் என்ன? நீங்கள் எந்த இடத்திலிருந்து வருகிறீர்கள்?" என்று கேட்டான் துணிவுள்ளவன்.

"என் பெயரை நான் சொல்லப்போவதில்லை. ஆனால் நான் மடமை என்ற ஊரிலிருந்து வருகிறேன். அது அழி நகரத்திலிருந்து சற்றுத் தொலைவில் இருக்கிறது" என்றார் நேர்மையானவன்.

"அப்படியா? நீர் அந்த இடத்திலிருந்து வந்தவரா? நான் ஏற்கெனவே அப்படித்தான் நினைத்தேன். உமது பெயர் நேர்மையானவன் என்பதுதானே?'' என்று கேட்டான் துணிவுள்ளவன்.

துணிவுள்ளவன் இப்படிக் கூறியவுடன் நேர்மையானவனின் முகம் சிவந்தது. சற்றுநேரம் வழிகாட்டியையே பார்த்த அவர்:

"நான் நேர்மையானவன் என்று கூறவில்லை. என் பெயர் மட்டுமே நேர்மையானவன். என் பெயருக்கேற்ப என் குணாதிசயமும் இருந்தால் நலமாயிருக்கும் என்றுதான் நான் விரும்புகிறேன். அதுசரி, நான் அந்த இடத்திலிருந்து வந்தவன்

என்று கூறியவுடன் நான் இன்னார்தான் என்று சரியாகச் சொல்லிவிட்டாயே! அது எப்படி?" என்று கேட்டார்.

"என் எசமானர் ஏற்கெனவே உம்மைப்பற்றி என்னிடம் கூறியிருக்கிறார். இந்த உலகில் நடக்கும் அனைத்தையும் அறிந்தவர் அவர். ஆனால் உமது இடத்திலிருந்து எவராவது பயணம் புறப்பட்டு வரமுடியுமா என்று நான் வியப்படைந் திருக்கிறேன். ஏனென்றால் அழிநகரத்தைவிட உங்கள் இடம் மிகவும் மோசமாயிருக்கிறது" என்றான் துணிவுள்ளவன்.

"எங்களுடைய இடம் பூமத்தியரேகைக்கு வெகு தொலைவில் இருப்பதால், குளிர் நிறைந்த பகுதியாக இருக்கிறது. அங்குள்ளவர் களும் குளிர்ந்து போனவர்களும், உணர்வற்றவர்களுமாய் இருக்கிறார்கள். என்றாலும் ஒருவன் பனிக்கட்டி மலையுச்சியில் இருந்தாலும், நீதியின் சூரியன் அவன்மீது உதித்தால் உறைந்து போன அவனது இருதயமும் உருகும் அல்லவா? என் நிலையும் அப்படித்தான்" என்றார் நேர்மையானவன்.

"நான் இதை நம்புகிறேன். நேர்மையானவரே, நான் நம்புகிறேன்: ஏனென்றால் நீர் கூறிய காரியம் உண்மையானது என்பதை நானறிவேன்" என்றான் துணிவுள்ளவன்.

அதன்பிறகு அந்த முதியவர் அன்பின் பரிசுத்த முத்தத்தால் அவர்களை வாழ்த்தினார். அவர்களது பெயர்கள் என்ன வென்றும், பயணம் புறப்பட்டு வந்ததிலிருந்து அவர்களது அனுபவங்களை எவையெவை என்றும் கேட்டார்.

"என் பெயரை ஒருவேளை நீங்கள் கேள்விப்பட்டிருக்கலாம். கிறிஸ்தியான் எனது கணவர். இந்த நால்வரும் எங்கள் பிள்ளைகள்" என்றாள் கிறிஸ்தீனாள்.

அவள் தான் யார் என்று கூறியவுடன் வியப்படைந்து துள்ளிக் குதித்தார். நல்வார்த்தைகள் கூறி அவர்களை ஆசீர்வதித்தார்.

"நான் உனது கணவனைப்பற்றியும் அவன் பயணமாகச் சென்றபோது எதிர்நோக்கிய போர்களைப் பற்றியும் கேள்விப் பட்டுள்ளேன். உனது கணவனின் பெயர் இந்தப் பகுதியெங்கும் எதிரொலிக்கிறது. அவனது விசுவாசம், மனதிடம், சகிப்புத் தன்மை, சோதனைகளிலும் உண்மையாக இருக்கும் நிலை இவை அவனுடைய பெயரை நிலைநாட்டியுள்ளன" என்று கூறிய அவர் பையன்களிடம் திரும்பி அவர்களது பெயர்கள் என்னென்ன என்று கேட்டார். அவர்களும் தங்கள் பெயர்களைக் கூறினார்கள்.

“மத்தேயு, நீ ஆயக்காரனாகிய மத்தேயுவைப்போல தீமையை விட்டு நன்மையை நாடுகிறவனாக இருக்கவேண்டும். சாமுவேலே, விசுவாசத்திலும், ஜெபிப்பதிலும் முன்மாதிரியாக இருந்த சாமுவேல் தீர்க்கதரிசியைப்போல நீ விளங்க வேண்டும். யோசேப்புவே, போத்திபாரின் வீட்டிலிருந்தபோது யோசேப்பு எப்படி கற்புள்ளவனாகவும், சோதனைக்கு இடம் கொடுக்காமலும் இருந்தானோ அப்படி நீயும் இருக்க வேண்டும். யாக்கோபுவே, நீ நீதிமான் யாக்கோபுவைப்போலவும், நமது ஆண்டவரின் சகோதரனாகிய யாக்கோபுவைப் போலவும் இருக்க வேண்டும்” என்று நேர்மையானவன் அவர்களுக்கு அறிவுரை கூறினார்.

இரக்கம் எப்படி தனது ஊரையும் இனத்தாரையும் விட்டு, கிறிஸ்தீனாளுடனும், அவளது பையன்களுடன் புறப்பட்டு வந்தாள் என்றும் அவருக்குச் சொல்லப்பட்டது.

அவர் இரக்கத்தைத் திரும்பிப் பார்த்து, “உன் பெயர் இரக்கமாகவே இருக்கட்டும். நீ இரக்கத்தின் ஊற்றை மறைமுகமாக காணும்வரை, உனது பாதையில் எதிர்ப்படும் அனைத்து ஆபத்துக்களிலும் அவரது கிருபையே உன்னைத் தாங்கி வழிநடத்துவதாக” என்று வாழ்த்தினார்.

அவர் பேசிக் கொண்டிருப்பதைக் கேட்டு துணிவுள்ளவன் மகிழ்ச்சியடைந்து, தனக்குள்ளே புன்னகை செய்துகொண்டான்.

அவர்கள் ஒன்றாக நடந்து சென்றபோது துணிவுள்ளவன் நேர்மையானவனைத் திரும்பிப்பார்த்து, “உங்கள் பகுதியிலிருந்துப் பயணமாகப் புறப்பட்டுவந்த பயந்தாங்கொள்ளி என்பவனைப் பற்றி உமக்குத் தெரியுமா?” என்று கேட்டான்.

“தெரியுமே! அவனைப்பற்றி எனக்கு நன்றாகவே தெரியும். மோட்சத்தைப்பற்றிய வாஞ்சை மிகவும் கொண்டவன் அவன். ஆனால் என் வாழ்நாள்களில் அவனைப்போலத் தொல்லை கொடுக்கிற ஒரு பயணியை நான் பார்த்ததே கிடையாது” என்றார் நேர்மையானவன்.

“அவனது குணத்தைப்பற்றி நீர் சரியாகக் கூறியபடியால் அவனை நன்றாகவே அறிந்திருப்பீர் என்று நினைக்கிறேன்” என்றான் துணிவுள்ளவன்.

“நன்றாகவே அறிந்திருக்கிறேன்! அவனுக்குப் பெரும் துணையாக இருந்தவன் அல்லவா நான்? அவனது துவக்கம் முதல் முடிவுவரை நான் அவனை நன்றாக அறிவேன். வரவிருக்கும் காரியங்கள் பற்றி அவன் முதன் முதலாகச் சிந்திக்கத் துவங்கியபோதே நான் அவனுடன் இருந்தேன்” என்றார் நேர்மையானவன்.

“எனது எசமானரின் வீட்டிலிருந்து மோட்ச பட்டணத்தின் வாசல்வரை நான்தான் அவனுக்கு வழிகாட்டியாக இருந்தேன்” என்றான் துணிவுள்ளவன்.

“அப்படியானால் அவன் தொந்தரவு பிடித்தவன் என்பதை நீ அறிந்திருப்பாயே! என்றார் நேர்மையானவன்.

“நன்றாகவே அறிவேன், ஆனால் என்னால் அவனைச் சகித்துக்கொள்ள முடிந்தது. ஏனென்றால் என்னைப் போன்ற அழைப்பை பெற்றவர்கள் இப்படிப்பட்டவர்களை வழிநடத்தும் பொறுப்பை அடிக்கடி பெறுகின்றனர்'' என்றான் துணிவுள்ளவன்.

''அவனைப்பற்றியும், அவன் உன்னிடம் எவ்வாறு நடந்துகொண்டான் என்பதைப்பற்றியும் கூறுவாயா?” என்று கேட்டுக் கொண்டார் நேர்மையானவன்.

“அவன் எங்கே போய்ச் சேரவேண்டுமென்றிருந்தானோ, அந்த இடத்தைச் சென்றடைவேனோ என்ற பயத்தில்தான் எப்போதுமே இருந்தான். எவரேனும் தங்கள் கருத்தை வலியுறுத்த சற்றே குரலை உயர்த்திப் பேசினாலும் அவன் பயந்து நடுங்குவான். நம்பிக்கையிழப்பு சேற்றில் விழுந்து, அதைவிட்டு வெளியே வரமுடியாமல் ஒரு மாதமாக அங்கேயே தவித்துக் கொண்டிருந்தான் என்று நான் கேள்விப்பட்டிருக்கிறேன். அவனைத் தாண்டி பலர் கரையேறிக் கொண்டிருந்தார்கள். அவனுக்குக் கைகொடுத்துக் கரையில் தூக்கிவிட அநேகர் முன்வந்தபோதிலும், பயத்தால் அவன் அதற்கு இடம் கொடுக்கவில்லை. பின்வாங்கி தன்னுடைய ஊருக்குத் திரும்பிச் செல்லவும் அவன் விரும்பவில்லை. மோட்சப் பட்டணத்தைச் சென்றடையாவிட்டால் தான் இறந்துபோவேன் என்று அவன் சொல்லிக்கொண்டிருந்தான். ஆனால் ஒவ்வொரு கடினத்தைச் சந்தித்தபோதும் அவன் மனம்தளர்ந்துபோனான். அவனுடைய வழியில் எவரேனும் ஒரு வைக்கோல் துண்டைப் போட்டாலும் அவன் அதில் தடுக்கி விழுவான்! அவன் இவ்வாறு அநேக நாள்கள் அந்த அவநம்பிக்கைச் சேற்றில் உழன்று கொண்டிருந்தான். ஒரு நாள் சூரியன் பிரகாசமாக ஒளி வீசிக்கொண்டிருந்த காலை வேளையில், திடீரென்று மனத்துணிவைப் பெற்ற அவன் கரையேறிவிட்டான், கரையேறியபிறகு அவனால்கூட அதை நம்பமுடியவில்லை! அவன் உள்ளத்திலேயே அவநம்பிக்கைச் சேறு நிறைந்திருந்தது என்றுதான் நான் நினைக்கிறேன். எங்கும் அதைத் தூக்கிக்கொண்டுதான் அவன் திரிந்தான்! அதனால்தான் அவன் அப்படி நடந்துகொண்டான்.

"எப்படியோ நடந்துவந்த அவன் இந்தப் பாதையின் துவக்கத்திலிருக்கும் வாசலண்டை வந்து சேர்ந்தான். கதவைத் தட்டுவதற்கான மனத்துணிவைப் பெறுவதற்குக்கூட அவன் நீண்ட நேரம் காத்திருந்தான்! கதவு திறந்த பிறகும்கூட, தனக்கு உள்ளே நுழையத் தகுதியில்லை என்று கூறி, பின்னால் வந்தவர்களை முன்னால் செல்ல இடம்விட்டுக்கொண்டிருந்தான். மற்றவர்களை விட முன்னதாக கதவண்டை வந்துவிட்ட பின்னரும்கூட, அவர்கள் முன்னால் செல்லும்படி ஒதுங்கி நின்று கொண்டிருந்தான். அவன் கூனிக் குறுகி, நடுங்கியபடி நின்றுக் கொண்டிருப்பதைக் கண்ட மற்றவர்கள் அவன்மீது நிச்சயம் அனுதாபம் கொண்டிருப்பார்கள். அவன் திரும்பிச் செல்லவும் முன்வரவில்லை. இறுதியில் கொஞ்சம் துணிவைப் பெற்றவனாக கதவை ஓரிரு முறை தட்டினான். கதவு திறக்கப்பட்டவுடன் கூனிக் குறுகிப் பின்வாங்கினான். கதவைத் திறந்தவன் அவனருகே சென்று, 'நடுங்கிக் கொண்டிருப்பவனே, உனக்கு என்ன வேண்டும்?' என்று கேட்டான், அவ்வளவுதான்! பயந்து கீழே விழுந்துவிட்டான்! கேள்வி கேட்டவன் வியப்படைந்தான்! "கவலைப்படாதே. உனக்குச் சமாதானம் உண்டாகட்டும். உனக்காக நான் கதவைத் திறந்து வைத்திருக்கிறேன். உள்ளே வா. ஆசீர்வதிக்கப்பட்டவனே!' என்று அழைத்தான். மெதுவாக எழுந்து அவன் நடுங்கியபடியே உள்ளே நுழைந்தான். உள்ளே நுழைந்த பிறகும் தன் முகத்தைக் காட்ட வெட்கப்பட்டவனைப் போல தலைகுனிந்தபடியே நின்றுகொண்டிருந்தான். நீர் ஏற்கெனவே அறிந்துள்ளபடி அவன் சில காலம் அங்கே உபசரிக்கப்பட்டான். அவன் எந்தப் பாதையில் செல்ல வேண்டும் என்று அங்கே கூறப்பட்டது. அவன் வழியனுப்பி வைக்கப்பட்டான்.

"எங்களது மாளிகைவரை அவன் எப்படியோ நடந்து வந்துவிட்டான். வாசலண்டை தயங்கி நின்றதுபோல்வே எனது எசமானர் விளக்கம்கூறுபவரின் மாளிகைக் கதவண்டையிலிலும் தயங்கியபடியே நின்று கொண்டிருந்தான். குளிரிலேயே நீண்ட நேரம் நடுங்கியபடியே நின்று கொண்டிருந்தான். என்றாலும் திரும்பிச் செல்லவும் அவனுக்கு மனம் வரவில்லை அந்நாள்களில் இரவில் கடும்குளிர் நிலவியது. எனது எசமானருக்கு எழுதப்பட்ட ஒரு கடிதம் அவனிடம் இருந்தது. அவனை ஏற்றுக்கொண்டு, அந்த மாளிகையில் உபசரிக்கும் படியும், அவன் பயந்தவனாக இருந்தபடியால் துணிவுள்ள ஒரு வழிகாட்டியை அவனுக்குத் துணையாக அனுப்பும்படியும் அந்தக் கடிதத்தில் கேட்டுக் கொள்ளப்பட்டிருந்தது. என்ற போதிலும் அவன் கதவைத் தட்டப் பயந்தவனாக, பசியை அடக்கமுடியாமல் அங்குமிங்கும் உலாவிக்கொண்டிருந்தான்.

பின்னால் வந்த பலர் கதவைக் தட்டி உள்ளே சென்றபிறகும் அவன் மனத் துணிவைப் பெறவில்லை. தற்செயலாக சன்னல் வழியே வெளியே பார்த்த நான் அங்குமிங்கும் நடந்து திரிந்துகொண்டிருந்த அவனைக் கண்டேன். கதவைத் திறந்து வெளியே சென்ற நான் அவன் யாரென்று கேட்டேன். கண்கள் கலங்க பேசும் துணிவில்லாமல் அவன் நின்றுகொண்டிருந்தான். அவனது தேவை என்னவென்பதை என்னால் ஊகிக்க முடிந்தது. மாளிகையினுள் சென்ற நான் உள்ளே இருந்தவர்களிடம் அவனைப்பற்றிக் கூறினேன். எசமானரிடம் அவன் வந்திருப்பதை அறிவித்தோம். அவனை உள்ளே எப்படியும் அழைத்துவரும்படி அவர் என்னை அனுப்பினார். அப்பப்பா, அவனை உள்ளே கூட்டி வருவதே பெரும்பாடாகிவிட்டது!

“கடைசியாக அவன் எப்படியோ உள்ளே நுழைந்தான். எனது எசமானர் மிகுந்த அன்போடு அவனை வரவேற்றார். தனது சாப்பாட்டு மேசையிலிருந்துச் சுவை மிகுந்த உணவு வகைகளை எடுத்து ஒரு தட்டில் வைத்து அவன் அதைச் சாப்பிடும்படி அன்புடன் கேட்டுக் கொண்டார். அதன்பிறகே அவன் தன்னிடமிருந்த கடிதத்தை அவரிடம் கொடுத்தான். அதைப் படித்துப் பார்த்த எசமான் அவன் விருப்பப்படியே நடக்கும் என்று உறுதி கூறினார். சிறிது காலம் அங்கே தங்கி பிறகு அவன் சற்றே மனத் துணிவைப் பெற்றுள்ளதுபோலத் தோன்றியது. இவனைப்போன்று பயந்த சுபாவமுடையவர்களைப் பார்த்தால் எனது எசமான் மனம் உருகிவிடுவார். அவன் மனத் துணிவைப் பெற வேண்டும் என்பதற்காக அவனை அக்கறையுடன் நடத்தினார். அந்த இடத்தில் காட்சிகளைக் கண்டபிறகு, அவன் மோட்ச பட்டணத்துக்குப் புறப்பட ஆயத்தமானான். கிறிஸ்தியானுக்குக் கொடுத்ததுபோல, இவனுக்கும் என் எசமான் திராட்ச ரசத்தையும், வழியில் உட்கொள்ள உணவுவகைகளையும் அளித்து, என்னை அவனுக்கு வழிகாட்டியாக உடன் அனுப்பிவைத்தார். நான் அவனுக்கு முன்பாக நடந்துசென்றேன். அவன் பெரும்பாலும் ஒன்றும் பேசவில்லை. அவ்வப்போது பெருமூச்சு விடுவான். அவ்வளவுதான்!

“மூன்று பேர் தொங்கவிடப்பட்டிருந்த இடத்துக்கு அருகே வந்தபோது, தனக்கும் இந்த முடிவுதான் ஏற்படப்போகிறது என்று பயத்தில் உளறினான். சிலுவையையும், கல்லறையையும் கண்ட பின்னர்தான் அவன் முகம் கொஞ்சம் மலர்ந்தது. அந்த இடத்தில் மட்டுமே மேலும் சிறிதுநேரம் அவற்றைப் பார்த்தபடி நிற்க அவன் ஆசைப்பட்டான். அதன்பிறகு சிலகாலம் அவன் முகமலர்ச்சியோடு நடந்து வந்தான். கடின மலைக்கு வந்தபோது,

மிகச் சுலபமாக அவன் அந்த மலையின்மீது ஏறிவிட்டான். சிங்கங்களை கண்டும் அவன் பயப்படவில்லை. அவனது பயமெல்லாம் இறுதியில் தான் ஏற்றுக்கொள்ளப்படுவோமோ என்பதில்தான் இருந்தது.

''அலங்கார மாளிகைக்கு நாங்கள் வந்துசேர்ந்தோம். அப்பப்பா, அவனை உள்ளே அழைத்துச் செல்வதற்குள் நான் படாதபாடுபட்டுவிட்டேன். உள்ளே சென்றவுடன் அங்கிருந்த பெண்களுக்கு அவனை அறிமுகம் செய்து வைத்தேன், ஆனால் அவர்களோடு பேசவே அவன் கூச்சப்பட்டான். அவன் தனிமையில் இருப்பதற்கு விருப்பப்பட்டாலும், மற்றவர்களின் நல்ல உரையாடல்களைக் கேட்பதிலும் அவனுக்கு ஆர்வம் இருந்தது; திரை மறைவில் நின்றபடி மற்றவர்களின் பேச்சை அவன் கேட்டுக்கொண்டிருப்பான். பழங்காலப் பொருள்களைப் பார்ப்பதிலும், அவற்றைப்பற்றிச் சிந்திப்பதிலும் அவனுக்கு விருப்பம் இருந்தது. பிறகு அவன் இதைப்பற்றி என்னிடம் கூறியபோது, வாசலண்டை இருந்த மாளிகையிலும், இந்த மாளிகையிலும் இருக்கும்போதுதான் அவனுக்கு மகிழ்ச்சியாக இருந்தது என்றும், ஆனால் கேள்வி கேட்க அவனுக்குத் துணிவு வரவில்லை என்றும் கூறினான்.

''அந்த மாளிகையைவிட்டு, மலைச்சரிவில் இறங்கி, தாழ்மையின் பள்ளத்தாக்கை அடைவது அவனுக்கு மிகவும் எளிதாக இருந்தது. அவ்வளவு சுலபமாக இறங்கிய ஒருவனை நான் அதுவரை பார்க்கவில்லை. எவ்வளவு தூரம் தன்னைத் தாழ்த்தவேண்டியிருந்தாலும் சரி, இறுதியில் தான் விரும்பிய இடத்துக்குச் செல்ல வேண்டும் என்பதே அவன் நோக்கமாக இருந்தது. அந்தப் பள்ளத்தாக்கிற்கும், அவன் குணாதிசயத்திற்கும் ஏதோ பொருத்தம் இருந்தது என்றுதான் கூறவேண்டும்; ஏனென்றால் இந்தப் பள்ளத்தாக்கில் இருந்தபோது மகிழ்ச்சியாக இருந்ததுபோல, வேறு எந்த இடத்திலும் அவன் அப்படிக் காணப்படவில்லை.

''இந்தப் பள்ளத்தாக்கில் அவன் தரையில் படுத்துப் புரளுவான். பள்ளத்தாக்கின் மலர்களை முத்தமிடுவான். ஒவ்வொரு நாள் விடியும் வேளையில் எழுந்து பள்ளத்தாக்கில் அங்குமிங்கும் சுற்றித் திரிவான்.

"ஆனால் மரண இருளின் பள்ளத்தாக்கைச் சென்றடைந்த போது அவன் முற்றிலும் மாறிவிட்டான். அவன் அவ்வளவுதான் என்றுகூட நான் நினைத்தேன். அவன் திரும்பிப்போய்விடுவான் என்பதினாலல்ல! பின்வாங்கிச் செல்வதை அவன் முற்றிலுமாக வெறுத்தான். ஆனால் பிசாசுகள் தன்னைப் பிடித்து விழுங்கி

விடுமோ என்ற பயத்தில் அவன் அலறிக்கொண்டே இருந்தான். என்னால் அவனை ஆறுதல்படுத்த முடியவேயில்லை! அவன் போட்ட சத்தத்தில் பிசாசுகள் துணிவுகொண்டு எங்களை வீழ்த்த ஓடிவரும் என்றுகூட நான் நினைத்தேன்.

"ஆனால் ஒரு காரியத்தை நான் கவனித்தேன். நாங்கள் இருவரும் அந்தப் பள்ளத்தாக்கைக் கடந்தபோது, இன்றும் என்றும் இல்லாத வகையில் எங்கும் அமைதி நிலவியது! ஒருவேளை, அந்தப் பயந்தவன் பள்ளத்தாக்கைக் கடந்து செல்லும்வரை, பிசாசுகள் குறுக்கிடக்கூடாது என்று நமது ஆண்டவர் கட்டளையிட்டிருந்தாரோ என்றுகூடத் தோன்றியது.

"அனைத்தையும் சொல்லவேண்டுமானால் நமக்கு நேரம் இருக்காது. எனவே ஓரிரு காரியங்களை மட்டும் நான் கூறுகிறேன். மாயாபுரிச் சந்தைக்கு நாங்கள் சென்றபோது, அங்கிருந்த அனைவரோடும் சண்டை ஏற்பட்டுவிடும் என்றுதான் நான் நினைத்தேன். அவ்வளவுதான் அந்த முட்டாள்களைப்பற்றி அவன் வெறுப்பாகப் பேசிக்கொண்டு வந்தான். அங்கிருந்தவர்கள் எங்கள் தலையில் ஒரே போடாகப்போட்டு வீழ்த்திவிடுவார்கள் என்றுகூட நான் நினைத்தேன். ஆனால் நல்லவேளையாக அப்படி ஒன்றும் நடக்கவில்லை! மயக்க பூமியில் அவன் விழிப்புடன் இருந்து தப்பிக்கொண்டான். கடப்பதற்குப் பாலமே இல்லாத ஆற்றின் கரையில் வந்தபோது, மீண்டும் அவன் பயந்து நடுங்கினான். அவ்வளவுதான்! இனி நான் இதில் மூழ்கி ஒரேயடியாக அழிந்துவிடுவேன்; பார்க்கவேண்டுமென்று வந்த அந்த முகத்தைப் பார்க்கமுடியாது போலிருக்கிறது என்று அவன் அங்கலாய்க்கத் துவங்கிவிட்டான்.

"இங்கேயும் ஒரு விந்தையை நான் கவனித்தேன். இதுவரை என் வாழ்க்கையில் நான் என்றுமே பார்த்திராத வகையில் அன்று ஆற்று நீர் மிகவும் தாழ்வாக ஓடிக்கொண்டிருந்தது. அவனது கணுக்காலின் அளவே நீர் ஓடிக்கொண்டிருந்தபடியால் அவன் வெகு சுலபமாக அந்த ஆற்றைக் கடந்துவிட்டான். இறுதி வாசலின் படிகளில் அவன் ஏறியபோது, அங்கே அவன் ஏற்றுக்கொள்ளப்படக்கடவன் என்று வாழ்த்துக் கூறி, நான் அவனிடம் விடைபெற்றேன். 'ஆமாம், ஆமாம், நான் ஏற்றுக் கொள்ளப்படுவேன்' என்றான் அவன். நான் திரும்பிவிட்டேன். அதன்பிறகு நான் அவனைப் பார்க்கவில்லை'' என்றான் துணிவுள்ளவன்.

"அப்படியானால் இறுதியில் அவன் காரியம் நலமாக முடிந்தது போலிருக்கிறதே!" என்றார் நேர்மையானவன்.

“ஆமாம், அதில் எந்தவித ஐயமுமில்லை. எவரும் விரும்பும் படியான ஒரு குணாதிசயம் அவனிடம் இருந்தது என்பதை நாம் ஒப்புக்கொள்ளத்தான் வேண்டும். அவன் மிகவும் தாழ்வான நிலையில் வைக்கப்பட்டிருந்தபடியால் அவனது வாழ்க்கை சிலவேளைகளில் அவனுக்கே பாரமாக இருந்திருக்கிறது; மற்றவர்களுக்கும் தொல்லையளிக்கக் கூடியதாகக் காணப்பட்டது. மற்றவர்களைப்போல பாவம் செய்வதிலும் அவனுக்கு விருப்பம் இருந்ததில்லை. எங்கே மற்றவர்களுக்குத் தான் தீங்கு விளைவித்து விடுவோமோ என்ற அச்சத்தில் மற்றவர்களை எதிர்க்கக் கூடாது என்று நியாயமான காரியங்களைக்கூட செய்யாமல் விட்டு விடுவான்” என்றான் துணிவுள்ளவன்.

“இப்படிப்பட்ட ஒருவன் தனது வாழ்நாள் முழுவதும் இப்படி பயந்து செத்து இருளடைந்து போயிருந்ததின் காரணம்தான் என்ன?” என்று கேட்டார் நேர்மையானவன்.

“இதற்கு இரண்டு வகை காரணங்களை நாம் கூறலாம். ஞானமுள்ள ஆண்டவரின் சித்தம் அவன் அப்படியிருப்பதாக இருக்கலாம். சிலர் குழலூதுபவர்களாகவும், சிலர் புலம்புகிறவர் களாகவும் (மத். 11:16, 17) இருக்கிறார்கள் என்பதை நாம் அறிவோம். பயந்தவன் இப்படி அழுது புலம்புகிறவர்களின் கூட்டத்தைச் சேர்ந்தவன்போலும்! அவனுக்கும் அவனது கூட்டத்தாருக்கும் சோக இசையை இசைத்து ஒப்பாரி வைக்கத்தான் தெரியும். சிலர் இந்தத் தாழ்ந்த சுருதியே இசையின் அஸ்திவாரம் என்றுகூடக் கூறுகிறார்கள். ஆனால் என்னைப் பொருத்தமட்டில் இருதயத்தின் ஆழத்திலிருந்து தோன்றாத எதையும் உண்மையானது என்று நான் ஏற்றுக்கொள்வதில்லை. ஓர் இசைக் கலைஞன் தனது இசைக் கருவியில் சுருதி சேர்க்கும்போது முதலில் அவல ஒலியை எழுப்பும் நரம்பையே தட்டிப் பார்ப்பான். ஆண்டவரும் இந்த நரம்பையே முதலில் தொடுகிறார். இவ்வாறு ஆத்துமாவைத் தமக்கு இசைவாக பதப்படுத்துகிறார். ஆனால் பயந்தவனைப் பொருத்த வரையில் அவனிடம் ஒரு பெரிய குறை இருந்தது. அவன் வெறும் தாழ்ந்த இசையெழுப்புகிறவனாகவே தன்னை உருவாக்கிக்கொண்டு விட்டான். இசையின் மற்ற பரிமாணங்களை வெளிப்படுத்தும் வகையில் வளர்ச்சி பெறாமல் இறுதிவரை அவல ஒலி எழுப்புகிறவனாகவே இருந்துவிட்டான்” என்றான் துணிவுள்ளவன்.

(இந்த நூலை எழுதியவனாகிய நான் இதை வாசிக்கும் இளம்பருவத்தினர் உவமையின்மூலம் காரண காரியங்களை அறியும் திறனைப் பெறவேண்டும் என்பதற்காகவே ஆத்துமா தூண்டப்படுவதை, நான் இசைக் கருவி இசைக்கப்படுவதோடு

ஒப்பிட்டுக் கூறியிருக்கிறேன். அதுமட்டுமன்றி வெளிப்படுத்தின விசேஷத்தில் மீட்கப்பட்டவர்கள் ஆண்டவரின் சிங்காசனத்தின் முன்னால் நின்று சுரமண்டலங்களை இசைத்துப் பாடிக் கொண்டிருப்பவர்களோடு ஒப்பிட்டுக் கூறப்பட்டிருப்பதாலும் நான் இங்கே இசைக் கருவியைப்பற்றிய உவமையைக் கையாண்டுள்ளேன்)

"நீ இதுவரை அவனைப்பற்றிக் கூறியுள்ளதைப் பார்த்தால் அவன் மிகவும் வைராக்கியமுள்ளவன் என்றுதான் தோன்றுகிறது. சங்கடங்களையோ, சிங்கங்களையோ அல்லது மாயாபுரிச் சந்தையையோ கண்டு அவன் பயப்படவில்லை. பாவம், மரணம், நரகம் இவற்றைப்பற்றியே அவன் பயந்து நடுங்கினான். மோட்சப் பட்டணத்தைச் சென்றடைய வேண்டும் என்று அவன் கொண்டிருந்த அளவற்ற வாஞ்சையினால்தான் அதற்கு இடையூறாக எதுவும் வந்துவிடக்கூடாது என்று பயந்து நடுங்கியிருக்கிறான்" என்றார் நேர்மையானவன்.

"நீர் கூறுவது சரியானதுதான். அவனைப் பயப்படுத்தியவை இந்தக் காரியங்கள்தான். ஆனால் உள்ளத்தின் பலவீனமே அவனது இந்தப் பயத்துக்குத் காரணம் மற்றபடி அவன் ஆவியில் பலவீனமற்றவனாக இருந்தபடியால்தான் பயணத்தில் வெற்றிகொள்ள முடிந்தது. பழமொழியில் கூறப்படுவதுபோல அவன் தனக்கு எதிர்ப்பட்டு வரும் நெருப்பில் பாய்ந்துவிடுவான் என்றெல்லாம் கூறினாலும் அவனைப் பொருத்தவரையில் அது சரியாகாது. அவன் எதிர்நோக்கிய கடினங்களை எந்த மனிதனாலும் அவ்வளவு சுலபமாகச் சமாளித்துவிட முடியாது" என்றான் துணிவுள்ளவன்.

"பயந்தவனைப் பற்றிய இந்தச் செய்திகள் எனக்கு மிகவும் பயனளிப்பவையாக உள்ளது. என்னைப்போல ஒருவருமே கிடையாது என்றுதான் நான் எண்ணிக்கொண்டிருந்தேன். இந்த நல்ல மனிதனுக்கும் எனக்குமிடையே சில ஒற்றுமைகள் காணப்படுகின்றன. இரண்டே இரண்டு காரியங்களில்தான் நாங்கள் வேறுபடுகிறோம். அவனுக்குள்ளேயிருந்த பயம் அடக்க முடியாமல் வெளிப்பட்டது; ஆனால் எனது பயத்தை நான் உள்ளுக்குள்ளேயே அடக்கிக் கொண்டேன். அவன் பயம் அவனை அழுத்தியபடியால் அவன் கதவைத் தட்டத் துணிவில்லாமல் தயங்கிக் கொண்டிருந்தான். நானோ பயத்தின் மிகுதியால் இன்னும் அதிக படபடப்புடன் பலமாக கதவைத் தட்டினேன்" என்றாள் கிறிஸ்தீனாள்.

"என்னிடம்கூட அவனைப்போன்ற ஒரு குணாதிசயம் காணப்படுகிறது என்பதை நானும் ஒப்புக்கொள்ளத்தான்

வேண்டும். வேறு எதையேனும் இழந்துவிடுவேனோ என்ற பயத்தைவிட, பரலோகத்தில் இடம் கிடைக்காமல் போய்விடுமோ என்ற பயமும், ஏரியில் மூழ்கிவிடுவோமோ என்ற பயமும்தான் அதிகமாக இருக்கிறது. பரலோகத்தில் எனக்கு மேலான பாக்கியம் கிடைக்கவேண்டும்! அதற்காக இந்தப் பூலோகம் அனைத்தையும் இழந்துவிடவும் நான் சித்தமாயிருக்கிறேன்" என்றாள் இரக்கம்.

"எனக்குள் பயம் இருப்பதால் எனக்கு மீட்பே கிடைக்காது என்ற சந்தேகத்தை அது தூண்டிவிட்டுவிட்டது. அந்த நல்ல மனிதன் பயந்த சுபாவமுடையவனாக இருந்தபோதிலும் இறுதியில் அவனுக்கு பரலோக பாக்கியம் கிடைத்தது என்பதால் அது எனக்கும் நலமாகத்தானே இருக்கவேண்டும்?" என்றான் மத்தேயு.

"பயமற்று வாழ்ந்தால் கிருபையைப் பெற்றுக்கொள்ள முடியாது. நரகத்தைப்பற்றிய பயம் இருக்குமிடத்திலெல்லாம் கிருபை கிட்டும் என்று கூறமுடியாவிட்டாலும், ஆண்டவரைப் பற்றிய பயம் இல்லாதவர்களுக்குக் கிருபை கிடைக்காது என்பது உறுதி" என்றான் யாக்கோபு.

"நன்றாகச் சொன்னாய் யாக்கோபு. ஏனென்றால் கர்த்தருக்குப் பயப்படுவதே ஞானத்தின் ஆரம்பம். இந்த ஆரம்பம் இல்லாதவர்கள் ஞானத்தின் இடைப்பகுதியையோ முடிவையோ கண்டடையமாட்டார்கள். சரி, பயந்தவனைப்பற்றிய இந்த வாழ்த்துப் பாடலைப்பாடி அவனைப்பற்றிய பேச்சை இதோடு முடித்துக்கொள்வோம்" என்றான் துணிவுள்ளவன்.

பயந்தவனே, பயந்தவனே, நீ
கர்த்தருக்குப் பயந்து வாழ்ந்தாய்!
மறுதலிக்கும் எதையும்செய்ய நீ
பயந்தாய் இவ்வுலகில்!
பயந்தாய் நீயும் பாதாளம் கண்டு!
பயப்படட்டும் எல்லாரும் அப்படியே!
உன்னைப்போன்ற ஞானிகள் பயம்போக்க
உலக இன்பம் விடுவரே!

18. சுயவிருப்பம் என்பவனைப்பற்றிய செய்திகள்

அவர்கள் தொடர்ந்து பேசிக்கொண்டிருப்பதை நான் கண்டேன். பயந்தவனைப்பற்றி துணிவுள்ளவன் கூறி முடித்தவுடன், நேர்மையானவன் சுயவிருப்பம் என்பவனைப்பற்றிப் பேசத்துவங்கினார்.

"அவன் தானும் ஒரு பயணி என்று நடித்து வந்தான்.

ஆனாலும் இந்த அரசபாதையின் துவக்கத்தில் இருக்கும் குறுகிய வாசலில்கூட அவன் நுழையவில்லை" என்றார் நேர்மையானவன்.

"இதைப்பற்றி அவனிடம் நீர் எப்போதாவது பேசியிருக்கிறீரா?" என்று கேட்டான் துணிவுள்ளவன்.

"ஓரிரு தடவைகளுக்கும் அதிகமாய் பேசியிருக்கிறேன். ஆனால் அவன் எப்போதுமே சுயவிருப்பத்தின்படியே நடந்தான். மனிதனைப்பற்றிய அக்கறை அவனுக்குக் கிடையாது. விவாதங்களைப்பற்றியோ, முன்மாதிரிகளைப்பற்றியோ அவன் அக்கறைப்படவும் இல்லை. அவன் மனதில் அவனுக்குத் தோன்றியது எதுவோ அதை செய்துவந்தான். அதற்கு விரோதமாக அவன் எதையும் செய்யமாட்டான்" என்றார் நேர்மையானவன்.

"அவன் எந்தக் கொள்கைகளை பின்பற்றினான் என்று உமக்குத் தெரியுமே! அதைச் சொல்லுமேன்!" என்று கேட்டுக்கொண்டான் துணிவுள்ளவன்.

"மோட்சப் பயணிகள் நன்னடத்தையை ஒருவன் பின்பற்றுவதுபோல துர்நடத்தையையும் பின்பற்றலாம். ஒருவன் இந்த இரண்டையும் பின்பற்றினாலும்கூட அவன் மீட்கப்படுவான் என்பதே அவனது கொள்கையாக இருந்தது" என்றார் நேர்மையானவன்.

"அதெப்படி? பயணிகளின் நற்குணங்களோடுகூட நல்ல மனிதர்கள் தவறுகளும் செய்யக்கூடும் என்று அவன் கூறியிருந்தால் அது சரிதான். நம்மில் எவரும் தவறு செய்யமுடியாத அளவு பரிபூரணமாக இல்லை என்பது உண்மைதான். நாம் விழிப்புள்ளவர்களாக விசுவாச வழியைப் பின்பற்ற வேண்டும் என்றுதான் கூறப்பட்டிருக்கிறது. ஆனால் அவனோ நாம் தவறு செய்யலாம் என்று அனுமதிக்கப்பட்டுள்ளதுபோல எண்ணிக்கொண்டிருக்கிறான் என்றுதான் நான் நினைக்கிறேன்" என்றான் துணிவுள்ளவன்.

"ஆமாம், அவன் அப்படியே நம்பி அதன்படியேதான் நடந்தான்" என்றார் நேர்மையானவன்.

"ஆனால் இப்படி அவன் கூறுவதற்கு ஆதாரம் என்ன?" என்று கேட்டான் துணிவுள்ளவன்.

"வேத வசனங்களில் அதற்கு ஆதாரம் இருக்கிறது என்று அவன் சொல்லிக் கொண்டிருந்தான்" என்றார் நேர்மையானவன்.

"புரியவில்லையே! தெளிவாகக் கூறும்!" என்று கேட்டுக்கொண்டான் துணிவுள்ளவன்.

"சொல்கிறேன் கேள். தாவீது பிறனுடைய மனைவியைக் கொண்டிருந்தான். ஆண்டவருக்குப் பிரியமான அவனே இப்படிச் செய்தபோது நாமும் அப்படிச் செய்வதில் தவறில்லை என்று அவன் கூறுவான். சாலொமோன் ஒன்றுக்கு மேற்பட்ட மனைவியரைக் கொண்டிருந்தான். அதனால் அவனும் அப்படி நடந்துகொள்ள முடியும் என்று சொல்லுவான். சாராளும், பக்தியுள்ள எகிப்திய மருத்துவச்சிகளும் மட்டுமன்றி, ராகாபும்கூட பொய் கூறியதால் அவனும் பொய் கூறலாம் என்று சொல்லிக் கொள்வான். தங்கள் ஆண்டவரின் கட்டளைக்குக் கீழ்ப்படிந்து சீடர்கள் அந்நியனுடைய கழுதையை அவிழ்த்து வந்ததுபோல் நாமும் பிறருடைய பொருள்களை அபகரிக்கலாம் என்று அவன் சொல்லிக் கொண்டான். யாக்கோபு தனது தந்தையை ஏமாற்றி ஆசீர்வாதத்தைப் பெற்றுக்கொண்டதுபோல நாமும் பிறரை ஏமாற்றலாம் என்பதே அவனுடைய கொள்கை" என்றார் நேர்மையானவன்.

"எவ்வளவு மடத்தனமான கொள்கைகள்! அவன் இவற்றை நம்பினான் என்று நீர் நினைக்கிறீரா?" என்று கேட்டான் துணிவுள்ளவன்.

"அவன் நம்பியது மட்டுமா? வேத வசனங்களை அதற்கு ஆதாரமாக எடுத்துக்கொண்டு விவாதம்கூடப் புரிவான்!" என்றார் நேர்மையானவன்.

"இத்தகைய கொள்கைகள் உலகில் பரப்பப்படுவதற்குச் சற்றும் தகுதியற்ற கொள்கைகள் அல்லவா?" என்று வியந்தான் துணிவுள்ளவன்.

"நான் கூறுவதை நீ சரியாகப் புரிந்துகொள்ள வேண்டும். எந்த மனிதனும் இவற்றைச் செய்யலாம் என்று அவன் கூறவில்லை. இந்தக் காரியங்களைச் செய்த முன்மாதிரியானவர்கள் கொண்டிருந்த நற்குணங்களைப் பெற்றுள்ளவர்கள் அதோடுகூட இந்தச் செயல்களையும் பின்பற்றலாம் என்றுதான் அவன் கூறினான்" என்றார் நேர்மையானவன்.

"இவ்வாறு அவனாகவே ஒரு முடிவுக்கு வருவது எவ்வளவு தவறானது! நல்ல மனிதர்கள் தவறு செய்திருக்கிறார்கள் என்பதினால் நாமும் துணிந்து தவறுகளைச் செய்யலாம் என்பது எவ்வளவு மடத்தனமானது! ஒரு சிறு குழந்தை கால்தவறி சகதியில் விழுந்து தன்னை அசுத்தப்படுத்திக் கொண்டால் நாமும் ஒரு பன்றியைப்போல நாமாகவே சேற்றில் விழுந்து நம்மை அசுத்தப்படுத்திக்கொள்ளலாமா? இப்படி இச்சையின் மிகுதியால் தானே தன்னைக் குருடாக்கிக் கொள்கிறவனாக

இருக்கலாமா? வேதாகமத்தில் கூறப்பட்டுள்ளது உண்மைதான்; 'அவர்கள் திருவசனத்துக்குக் கீழ்ப்படியாதவர்களாயிருந்து இடறுகிறார்கள்; அதற்கென்றே நியமிக்கப்பட்டவர்களாயும் இருக்கிறார்கள்' (1 பேதுரு 2:8). இப்படி தீய செயல்களுக்குத் தம்மை அடிமைப்படுத்திக் கொண்டவர்கள் பரிசுத்தவான்களின் நற்குணங்களையும் பெற்றிருப்பார்கள் என்று எதிர்பார்ப்பதும் மடமையே! தேவனுடைய ஜனத்தின் பாவங்களைத் தின்று அவர்களுடைய அக்கிரமத்தின் பேரில் பசிதாகமாயிருக்கிறார்கள் (ஓசியா 4:8) என்பதினால் அவர்கள் தேவனுடைய ஜனத்தாரின் நற்குணங்களையும் பெற்றிருக்கிறார்கள் என்று கூறிவிட முடியாதே! இப்படிப்பட்ட எண்ணம் கொண்டிருப்பவனிடம் அன்பும், விசுவாசமும் காணப்படும் என்று எதிர்பார்க்க முடியுமா? நீர் நிச்சயமாக அவன் தவறுகளைச் சுட்டிக்காட்டி அவனிடம் கூறியிருப்பீர் அல்லவா? அவன் வேறு ஏதாவது கூறினானா? என்று கேட்டான் துணிவுள்ளவன்.

"இப்படிப்பட்ட கொள்கையை மனதில் வைத்துக் கொண்டு, இவ்வித தீய செயல்களைச் செய்கிறவன், இந்தக் கொள்கைகளுக்கு விரோதமான எண்ணம் கொண்டவனாக இருந்தும் அதே தீய செயல்களைச் செய்கிறவனைவிட மேலானவன் என்றே எனக்குத் தோன்றுகிறது" என்றார் நேர்மையானவன்.

"பதிலே மோசமான பதிலாக இருக்கிறது நாமோ மாம்ச இச்சைப்படி நடக்கக் கூடாது என்ற தீர்மானம் கொண்டவர் களாக இருந்துகொண்டு தீய செயல்களைச் செய்வதே பாவம். அதிலும் தீய செயல்களைச் செய்து கொண்டு அவற்றை நியாயப்படுத்தி வாதிடுவது எவ்வளவு மோசமானது! ஒருவன் தற்செயலாக இடறி விழுகிறான்! மற்றவன் தானாகவே முன்வந்து இடறிவிழுகிறான்!" என்றான் துணிவுள்ளவன்.

"இவனைப்போல வாதிடுபவர்கள் அநேகர் இல்லாவிட்டாலும், இவனைப்போல நடப்பவர்கள் அநேகர் இருக்கிறார்கள். அதனால்தான் மோட்சப் பயணம் செய்வது அவ்வளவு மதிப்பாக எண்ணப்படுவதில்லை" என்றார் நேர்மையானவன்.

"நீர் உண்மையைக் கூறினீர்! இது கவலையளிக்கக் கூடிய காரியம்தான்! ஆனால் உண்மையிலேயே பரதீசின் அரசர்மீது பயம் உள்ளவன் இவற்றைவிட்டு விலகி வருவான்" என்றான் துணிவுள்ளவன்.

"இந்த உலகில் பல்வேறு கருத்துக்கள் நிலவுவதை நானறிவேன். மரிக்கும் தருவாயில் மனந்திரும்பிக் கொள்ளலாம் என்று சொல்லுபவர்களும் உண்டு" என்று கூறினாள் கிறிஸ்தீனாள்.

"இது ஞானமுள்ள கருத்தல்ல. ஒருவன் உயிர் பிழைக்க ஒரு வாரத்திற்குள் இருபது மைல் ஓடவேண்டும் என்றிருக்க வாரத்தின் கடைசி மணி நேரத்தில் அதை ஓடி முடிப்பேன் என்று அவன் கூறுவதைப்போல இருக்கிறது இது!" என்றான் துணிவுள்ளவன்.

"சரியான பதில்! ஆனால் தங்களைப் பயணிகள் என்று கூறிக்கொள்பவர்களில் அநேகர் இவ்வாறுதான் நடந்து கொள்கிறார்கள். வயோதிபனாகிய நான் அநேக காலமாக இந்தப் பாதையில் பயணம் செய்து வருகிறேன். அநேக காரியங்களை நான் கவனித்திருக்கிறேன்.

"சிலர் இந்த உலகம் முழுவதையும் தங்களுக்கு முன்பாக விரட்டிவிடுபவர்களைப்போலப் புறப்பட்டு, வாக்குத்தத்தம் பண்ணப்பட்ட நாட்டைக் காணாமலேயே, சில நாள்களுக் குள்ளாக வனாந்தரத்தில் மரித்துப் போயிருக்கிறார்கள். சிலர் பயணம் புறப்படும்போது, அவர்கள் ஒருநாள்கூட தாக்குப்பிடிக்க மாட்டார்கள் என்று நினைக்கப்பட்டாலும், இறுதியில் வெற்றிகரமாக பயணத்தை முடித்திருக்கிறார்கள். வேகமாக ஓடிச் செல்லும் சிலர், சிலநாள்களுக்குள்ளாக அதே வேகத்தில் திரும்பி ஓடி வருவதையும் நான் கண்டிருக்கிறேன். சிலர் துவக்கத்தில் மோட்சப் பயணத்தைப்பற்றி மேன்மையாகப் பேசினாலும் சிலகாலம் கழித்து அதற்கு விரோதமாகப் பேசுவதையும் கேட்டிருக்கிறேன். வேறு சிலர் மோட்சம் என்ற இடம் நிச்சயமாக இருக்கிறது என்று கூறிவிட்டுப் புறப்பட்டிருந்தாலும், மோட்சத்தை நெருங்கும் வேளையில் பின்வாங்கிப்போய், அப்படி ஓர் இடமே இல்லை என்று கூறித் திரும்புவதையும் கண்டிருக்கிறேன். சிலர் எதிர்ப்பு வந்தால் என்ன செய்வோம் என்று வாய் கிழியப் பேசிவிட்டு புறப்பட்டாலும், ஆபத்து வருகிறது என்ற தவறான எதிர்பார்ப்பிலேயே, விசுவாசத்தையும், மோட்சப் பாதையையும், எல்லாவற்றையும் விட்டுவிட்டு ஓடுவதையும் நான் பார்த்திருக்கிறேன்" என்றார் நேர்மையானவன்.

அவர்கள் இவ்வாறு பேசிக்கொண்டே நடந்த வேளையில் ஒருவன் அலறிப் புடைத்துக்கொண்டு எதிரே ஓடி வந்தான்.

"ஐயா, பெரியவர்களே, பலவீனமான பெண்மணிகளே, உயிர்மீது வாஞ்சையிருந்தால் திரும்பி ஓடுங்கள். கொள்ளைக் காரர்கள் முன்னால் இருக்கிறார்கள்" என்று கத்தினான் அவன்.

"சில காலத்துக்கு முன்பு அற்ப விசுவாசியைத் தாக்கிய மூவராகத்தான் இருக்கவேண்டும். அவர்களைச் சந்திக்க நாங்கள் ஆயத்தமாகவே இருக்கிறோம்" என்றான் துணிவுள்ளவன்.

பயணிகள் நிற்காமல் பயணத்தைத் தொடர்ந்தார்கள்.

ஒவ்வொரு திருப்பத்திலும் அந்தத் தீயவர்கள் ஒளிந்திருக்கிறார்களா என்று கவனமாகப் பார்த்தவாறே சென்றார்கள். ஆனால் அத்தீயவர்கள் துணிவுள்ளவன் வருவதைப்பற்றிக் கேள்விப்பட்டிருந்தார்களோ அல்லது வேறு கொள்ளையில் ஈடுபட்டிருந்தார்களோ என்னவோ பயணிகளுக்கு முன்னால் வரவில்லை.

அவர்கள் களைப்படைந்து போயிருந்தபடியால், ஒரு விடுதியில் தங்கி இளைப்பாறிச் சென்றால் நலமாயிருக்கும் என்று கூறினாள் கிறிஸ்தீனாள்.

"சற்றுமுன்னால் ஒரு விடுதி இருக்கிறது. மதிப்புக்குரிய சீடன் **காயு** என்பவன் அங்கே வசிக்கிறான்" என்றார் நேர்மையானவன்.

அந்த வயோதிபர் காயுவைப்பற்றி உயர்வாகக் கூறிய படியால் அங்கே தங்கிவிட்டுச் செல்லலாம் என்று அனைவரும் தீர்மானித்தார்கள்.

19. காயுவின் விடுதியை அடைதல்

பயணிகள் விடுதியின் வாசலில் வந்தபோது கதவைத் தட்டாமலே உள்ளே நுழைந்தார்கள். ஏனெனில் பயணிகள் விடுதிக் கதவைத் தட்டுவது வழக்கமில்லை. விடுதித்தலைவரை அவர்கள் அழைத்தார்கள்.

அங்கே வந்த விடுதித் தலைவரிடம், "இன்று இரவு இங்கே தங்கிச் செல்லலாமா?" என்று கேட்டார்கள்.

"நீங்கள் உண்மையான பயணிகள் என்றால் இங்கே தங்கிச் செல்லலாம். பயணிகளுக்கு மட்டுமே இங்கே இடம் உண்டு" என்றார் காயு.

அந்த விடுதித் தலைவர் பயணிகளை நேசிப்பவராக இருப்பதைக் கண்டு கிறிஸ்தீனாளும், இரக்கமும், பிள்ளைகளும் மகிழ்ச்சியடைந்தார்கள்.

விடுதித் தலைவர் பெண்களுக்கும், பையன்களுக்கும் ஓர் அறையையும், துணிவுள்ளவனுக்கும், நேர்மையானவனுக்கும் ஓர் அறையையும் ஒதுக்கிக் கொடுத்தார்.

"நல்லது காயுவே! இரவு உணவுக்கு என்ன இருக்கிறது? பயணிகள் இன்று முழுவதும் வெகு தூரம் நடந்து களைத்துப் போயிருக்கிறார்கள்" என்றான் துணிவுள்ளவன்.

"இரவு நேரமாகிவிட்டது. வெளியே சென்று உணவுப் பொருள்களை வாங்கி வரவும் முடியாது. தற்போது இங்கே

இருப்பவற்றைக் கொண்டு திருப்தியடைய முடியுமானால் நலமாயிருக்கும்'' என்றார் காயு.

''இங்கே இருப்பதே எங்களுக்குப் போதுமானது பயணிகளுக்கு அத்தியாவசியத் தேவையான உணவுப் பொருள்கள் உம்மிடம் நிச்சயம் இருக்கும் என்பதை நான் அறிந்திருக்கிறேன்'' என்றான் துணிவுள்ளவன்.

அப்போது காயு விடுதியின் சமையல்காரனாகிய **நற்சுவை** என்பவனை அழைத்து பயணிகளுக்கான இரவு உணவைத் தயாரிக்கும்படி கட்டளையிட்டார்.

அதன் பிறகு மீண்டும் பயணிகளிடம் வந்த அவர், "வாருங்கள் என் நண்பர்களே, உங்களை உபசரிக்க எனக்கு கிடைத்த வாய்ப்புக்காக நான் மகிழ்ச்சியடைகிறேன். இரவு உணவு தயாராகும் வேளையில் நாம் ஒருவரோடொருவர் பேசிக் கொண்டிருக்கலாம்'' என்று அவர்களை அழைத்தார். அவர்களும் அதற்குச் சம்மதித்தார்கள்.

"இந்தப் பெண்மணி யாருடைய மனைவி? இந்த இளம் பெண் யாருடைய மனைவி?" என்று கேட்டார் காயு.

"இந்தப் பெண்மணி முன்பு பயணம் புறப்பட்டு வந்த கிறிஸ்தியானின் மனைவி. இவர்கள் அவனுடைய நான்கு பையன்கள். இந்த இளம்பெண் இவளுடைய அண்டை வீட்டுக்காரி. இவளுடைய வற்புறுத்தலின்பேரில் அவளும் பயணம் புறப்பட்டு வந்திருக்கிறாள். இந்தப் பையன்கள் தங்கள் தகப்பனாரைப் பின்பற்றி மோட்சப் பட்டணத்தை சென்றடைய மிகவும் ஆவலாக இருக்கிறார்கள். கிறிஸ்தியான் காலடி வைத்துச் சென்ற இடத்தில் தாங்கள் நடந்து செல்லும்போதும், அவன் தங்கிய இடத்தில், தாங்களும் தங்கும்போதும் பெருமகிழ்ச்சி யடைகிறார்கள்'' என்று அறிமுகம் செய்தான் துணிவுள்ளவன்.

"இவள் கிறிஸ்தியானின் மனைவியா? இவர்கள் அவளுடைய பையன்களா? நான் உன் கணவனின் தகப்பனையும், ஏன், அவனுடைய தகப்பனின் தகப்பனையும்கூட அறிவேன். இந்தக் குடும்பத்தைச் சேர்ந்த அநேகர் பக்திமான்களாக இருந்தார்கள். இவர்களது முற்பிதாக்கள் முதலில் அந்தியோகியா என்ற இடத்தில் வசித்தார்கள். உனது கணவன் எப்படியும் தனது மூதாதையர்களைப்பற்றி உன்னிடம் கூறியிருப்பான். அவர்கள் நற்பெயர் பெற்ற பக்திமான்களாக இருந்தார்கள். அவர்கள் அனைவரும் பயணிகளின் ஆண்டவர்மீதும், அவரது வழிகளின் மீதும், அவரை நேசிப்பவர்கள் மீதும் நானறிந்த பலரையும்விட அளவுகடந்த நாட்டமும், மனத்துணிவும் கொண்டவர்களாக

இருந்தார்கள். சத்தியத்துக்காக அனைத்துச் சோதனைகளையும் எதிர்த்து நின்றவர்களில் உனது கணவனின் இனத்தாரும் அநேகர் என்று நான் கேள்விப்பட்டிருக்கிறேன். உனது கணவனின் குடும்பத்தைச் சேர்ந்த முற்பிதாக்களில் ஒருவரான ஸ்தேவான் *(அப். 7:59, 60)* தனது விசுவாசத்திற்காகக் கல்லெறியுண்டு மாண்டார். அதே பரம்பரையைச் சேர்ந்த யாக்கோபு *(அப். 12:2)* என்பவர் பட்டயத்தினால் வீழ்த்தப் பட்டார். உனது கணவனின் குடும்பத்தைச் சேர்ந்த பவுல், பேதுரு இவர்களைப்பற்றிக் கூறவேண்டுமானால் அநேக காரியங்களைக் கூறலாம். இக்னேஷியஸ் என்பவர் சிங்கங்களுக்கு இரையாக்கப்பட்டார்; ரோமானஸ் என்பவரின் உடலிலிருந்து சதைகள் நார் நாராக கிழித்தெறியப்பட்டன; பாலிகார்ப் என்பவர் நெருப்பில் கொளுத்தப்பட்டார். ஒருவனை குளவிகளுக்கு இரையாகும்படி ஒரு கூடையில் வைத்து வெயிலில் தொங்கவிட்டனர்; மற்றொருவன் கோணியில் வைத்துக் கட்டப்பட்டு கடலில் எறியப்பட்டான். மோட்சப் பயணம் மேற்கொண்டபடியால் அவனது குடும்பத்தைச் சேர்ந்த அநேகர் இவ்வாறு துன்புறுத்தப்பட்டார்கள். இரத்தச் சாட்சிகளாகக் கொலை செய்யப்பட்டார்கள். உனது கணவன் தனக்குப் பின்னால் பயணிகளாக வரும்படி நான்கு பையன்களை விட்டுச் சென்றிருப்பதைக் கண்டு மகிழ்ச்சியடைகிறேன். அவர்கள் தங்கள் தகப்பனின் அடிச்சுவடிகளில் நடந்து, அவனைப்போல வெற்றியைப் பெற்று, அவன் பெயரைக் காத்துக்கொள்வார்கள் என்று நம்புகிறேன்'' என்றார் காயு.

“அவர்கள் அப்படிப்பட்டவர்களே! தனது தகப்பனாரின் வழிகளை ஒவ்வொரு பையனும் விரும்பியே தெரிந்து கொண்டிருக்கிறான்'' என்று உறுதி கூறினான் துணிவுள்ளவன்.

''அதைத்தான் நானும் சொல்லுகிறேன். அதனால் கிறிஸ்தியானின் குடும்பம் மேலும் பூமியெங்கும் தனது பெயரைப் பரப்பும்; உலகெங்கும் இன்னும் அநேகர் அந்தக் குடும்பத்தைச் சேர்ந்தவர்களாவர். இதனால் இவள் தனது பையன்களுக்குப் பொருத்தமான பெண்களைத் தெரிந்தெடுத்து மணம் செய்து வைப்பாளாக. அவர்களது தகப்பன் மற்றும் இனத்தாரின் பெயர் உலகில் எங்கும் பரவ வைப்பார்களாக'' என்றார் காயு.

''இந்தக் குடும்பம் பூண்டோடு அழிந்துபோனால் பரிதாபமாக இருக்குமே!'' என்றார் நேர்மையானவன்.

“பூண்டோடு அழிந்து போகுமா? நிச்சயம் அப்படி ஆகாது. கிறிஸ்தீனாள் என்னுடைய ஆலோசனைப்படி நடந்து கொண்டால், இந்தக் குடும்பம் தழைக்க வழியுண்டு'' என்று

கூறிய காயு, கிறிஸ்தீனாளைத் திரும்பிப் பார்த்து, கிறிஸ்தீனாளே, நீயும் உன் தோழி இரக்கத்தையும் இங்கே பார்ப்பதில் நான் மகிழ்ச்சியடைகிறேன். இரக்கத்தை நீ உன் உறவுக்காரப் பெண்ணாக்கிக் கொள்ளக் கூடாதா? அவளுக்குச் சம்மதமானால் அவளை உன் மூத்த மகன் மத்தேயுவுக்கு மணம்செய்து கொடு. இந்த உலகில் உன் குடும்பம் தழைக்க இதுவே வழி" என்று ஆலோசனை கூறினார்.

(இந்த உறவு நிச்சயம் பண்ணப்பட்டு, விரைவிலேயே திருமணமும் நடைபெற்றது. இதைப்பற்றிப் பின்னர் நான் விரிவாகக் கூறுகிறேன்).

காயு தொடர்ந்து பேசத் துவங்கினார்: "பெண்களுக்கு ஏற்பட்டுள்ள அவதூறு நீங்கும்படி இப்போது நான் அவர்கள் சார்பாகப் பேசுகிறேன். ஒரு பெண்ணின் மூலமாக இந்த உலகத்திற்கு மரணமும் சாபமும் வந்தது போல (ஆதி. அதி. 3), ஜீவனும் ஆரோக்கியமும்கூட பெண்ணின்மூலமே வந்திருக்கிறது. தேவன் தம்முடைய குமாரன் ஒரு ஸ்திரீயினிடத்தில் பிறக்கும்படி செய்தார் (கலா. 4:5). பெண்கள் தங்கள் ஆதித் தாயின் பாவத்தைக் குறித்து எவ்வளவு வெறுப்புக்கொண்டிருந்தார்கள் என்பது பழைய ஏற்பாட்டுப் பெண்கள் தங்கள் கர்ப்பத்தின் கனியைக்குறித்து எவ்வளவு எதிர்பார்ப்பு கொண்டிருந்தார்கள் என்பதிலிருந்து தெரிகிறது. உலக மீட்பராகிய மேசியாவின் தாயாகும் பாக்கியம் யாருக்குக் கிடைக்கும் என்று எதிர் பார்த்திருந்தார்கள். மீட்பர் பிறந்த போது ஆண்களோ அல்லது தேவதூதர்களோ மகிழ் கொண்டாடுவதற்கு முன்னர் பெண்களே அவரது வரவைக் குறித்து மகிழ்ச்சியடைந்தார்கள். (லூக்கா 1:42-46). கிறிஸ்து இந்த உலகத்தில் வாழ்ந்தபோது, பெண்கள் அவருடனே சென்று அவருக்குப் பணிவிடை செய்தார்கள். தங்கள் சொத்துக்களால்கூட அவருக்கு ஊழியம் செய்தார்கள். தனது கண்ணீரால் அவரது பாதத்தைக் கழுவியது ஒரு பெண்ணே (லூக்கா 7:37-50)! அவர் அடக்கம் பண்ணப்பட்ட போது வாசனைத் தைலங்களால் அபிஷேகம் செய்ததும் ஒரு பெண்ணே! அவர் சிலுவை சுமந்து சென்றபோது கண்ணீர் வடித்தபடி அவரைப்பின் தொடர்ந்து சென்றவர்கள் பெண்களே! சிலுவையில் அவர் மரித்தபின்னர் அவர் அடக்கம் பண்ணப்படும்படி எடுத்துச் செல்லப்பட்டபோதும் அவரைத் தொடர்ந்து சென்றவர்கள் பெண்களே! அடக்கம் பண்ணப் பட்ட பின்னரும் கல்லறையின் அருகே காத்திருந்தார்கள். அவர் உயிர்த்தெழுந்த நாளன்று காலையில் அவரை முதல் முதலாகச் சந்தித்ததும் பெண்களே! அவர் மரித்தோரிலிருந்து உயிர்த்தெழுந்த நற்செய்தியைச் சீடர்களுக்கு முதன் முதலில் அறிவிக்கச்

சென்றவர்களும் பெண்களே! இவை எல்லாமே பெண்கள் மேலான சிலாக்கியங்களைப் பெற்றவர்களாக இருக்கிறார்கள் என்பதற்கு அத்தாட்சிகளாக இருக்கின்றன. நித்திய ஜீவனில் அவர்களுக்கும் பங்குண்டு என்பதில் எந்தவித ஐயமும் இல்லை" என்றார் காயு.

இரவு உணவு ஆயத்தமாகிவிட்டது என்று சமையல்காரரிடமிருந்து அறிவிப்பு வந்தது. சாப்பாட்டு மேசையை ஒருவன் ஆயத்தம்பண்ணினான்.

"இவ்வாறு சாப்பாட்டு மேசையை ஆயத்தம்பண்ணுவதே என் பசியை இன்னும் அதிகமாக்குகிறது" என்றான் மத்தேயு.

"இதைப்போலவே இந்த உலகத்தில் உனது ஆத்துமாவுக்கு உணவாக அளிக்கப்படும் உபதேசங்கள் இராஜாவின் அரசில் அவரது சாப்பாட்டு மேசையில் பங்குகொள்ளும் உனது வாஞ்சையை அதிகரிப்பதாக. நாம் அவருடைய வீட்டைச் சென்றடையும்போது அவர் நமக்காக ஆயத்தம்பண்ணும் விருந்தோடு வழிமுறைகளும் வெறும் விருந்துக்கான ஆயத்தங்கள் மட்டுமே என்றுதான் கூறவேண்டும்" என்றார் காயு.

இறுதியில் இரவு உணவு கொண்டுவந்து வைக்கப்பட்டது. அனலுள்ள ஜெபத்திற்கும், நன்றி கூறுதலுக்கும் அடையாளமான முன்னந்தொடைக் கறியும், அசைவாட்டப்பட்ட மார்க்கண்டமும் மேசையின்மீது கொண்டு வந்து வைக்கப்பட்டன. அவர்கள் தங்கள் உணவை ஜெபத்தோடும், துதியோடும் துவங்க வேண்டும் என்பதை இவை முன்னறிவித்தன. தாவீது தன் தேவனாகிய ஆண்டவருக்கு முன்பாக தன் இருதயத்தை உயர்த்தி ஏறெடுத்ததின் அடையாளமான முன்னந்தொடையும், அவன் கின்னரம் வாசித்துத் துதிப்பதற்கும் ஆதாரமாக அவன் உள்ளத்திலிருந்த நம்பிக்கைக்கு அடையாளமான அசைவாட்டின மார்க்கண்டமுமே கொண்டுவந்து வைக்கப்பட்டிருந்தன (லேவி. 7:32; 10:14, 15; சங். 25:1 எபி. 13:13) இவை சுவையான வகையில் சமைக்கப்பட்டு சுடசுடப் பரிமாறப்பட்டபடியால் பயணிகள் அவற்றைச் சுவைத்துச் சாப்பிட்டார்கள்.

அடுத்து இரத்த வண்ணமாயிருந்த திராட்ச ரசம் கொண்டுவரப்பட்டது. இது கிறிஸ்துவின் இரத்தத்தினால் அருளப்படும் ஆசீர்வாதத்திற்கு அடையாளமாக இருக்கிறது. "தாராளமாகக் குடியுங்கள். இது மெய்யான திராட்சச் செடியின் இரசமாக இருக்கிறது. இது ஆண்டவருடைய இருதயத்தையும், மனிதருடைய இருதயத்தையும் மகிழ்ச்சியடையச் செய்யும்" என்று அவர்களை உபசரித்தார் காயு. அவர்கள் அந்த இரசத்தையும் பருகி மகிழ்ச்சியடைந்தார்கள்.

அப்புறம் ஆடை உறைந்த தண்ணீர் கலக்காத பால் கொண்டுவந்து வைக்கப்பட்டது. இது தெளிவான வேத வசனப்பாலைக் குறிக்கிறது. "இந்த வாலிபர் இதைப் பருகி வளர்ச்சிப் பெறட்டும்" என்றார் காயு.

அதன் பிறகு வெண்ணையும், தேனும் கலந்து கொண்டு வரப்பட்டது. இவை மெய்யான பக்தி வைராக்கியத்தையும், மறுமையின் மகிமைக்குரிய நம்பிக்கையையும் குறிக்கின்றன. "இவற்றைத் தாரளமாக அருந்துங்கள். இவை உங்களுக்கு உற்சாகமூட்டி, உங்கள் அறிவுத் திறனையும், நியாயந்தீர்க்கும் திறனையும் பலப்படுத்தும். தமது ஆண்டவர் சிறு பையனாக இருந்தபோது இவற்றையே சாப்பிட்டார். "தீமையை வெறுத்து அறியும் வயதுமட்டும் அவர் வெண்ணையையும் தேனையும் சாப்பிடுவார்" *(ஏசாயா 7:15)* என்று கூறப்பட்டுள்ளது என்றார் காயு.

இதற்குப் பிறகு ஒரு தட்டு நிறைய பழங்கள் கொண்டுவரப் பட்டன.

"நாம் இந்தப் பழங்களைச் சாப்பிடலாமா? இந்தப் பழத்தின் காரணமாகத் தானே சர்ப்பம் ஆதித் தாயை ஏமாற்றியது?" என்று கேட்டான் மத்தேயு.

அப்போது காயு ஒரு பாடல் வடிவில் அவனுக்குப் பதிலளித்தார்.

பாவக் கறைக்கு உட்படுத்தியது பழமோ
ஆனால் பழமல்ல,
பாவமே நம்மைக் கறைப்படுத்தியது!
மறுக்கப்பட்ட பழம் இரத்தத்திற்கு கறையே
ஆனால் மறுக்கப்படாத
பழமோ இரத்தத்திற்கு என்றும் நலமே!
திருச்சபையே அவரின் அன்புப் புறாவே!
அன்புக்காய் ஏங்குகிறாயே!
அவர்தரும் பழத்தை உண்பது பலமே!

என்று அவர் பாடினார்.

"ஒருமுறை நான் பழத்தைத் தின்று சுகவீனமுற்றதினால்தான் அவ்வாறு கேட்டேன்" என்றான் மத்தேயு.

"மறுக்கப்பட்ட பழம் நிச்சயம் உன்னை சுகவீனமடையும் படி செய்யும். ஆனால் ஆண்டவர் அனுமதிக்கும் பழங்கள் உனக்கு நலத்தையே தரும்" என்றார் காயு.

அவர்கள் இவ்வாறு பேசிக்கொண்டிருந்தபோது வாதுமைக் கொட்டைகள் நிறைந்த தட்டு ஒன்று கொண்டுவரப்பட்டது. அனுபவம் பெற்ற கிறிஸ்தவர்கள் மட்டுமே புரிந்துகொள்ளக் கூடிய கடினமான சத்தியங்களை இந்தக் கடினமான கொட்டைகள் சுட்டிக்காட்டுகின்றன.

"கொட்டைகள் பற்களைப் பாதிக்கின்றன. குறிப்பாக சிறுவர்களின் பற்கள் இதனால் பாதிக்கப்படுகின்றன" என்று ஒருவர் கூறினார்.

இதைக் கேட்ட காயு

கடின வசனங்கள்
கொட்டை போன்றவையே!
கொட்டையின் மேற்பகுதி
கடினமென்பது உண்மையே!
கொட்டையை உடைத்தால்
பருப்பைத் தின்னலாமே!
உடைத்து உண்ணப்
பழகுவது நலமே!

என்று பாடினார்.

பின்னர் அவர்கள் சாப்பாட்டு மேசையிலேயே அமர்ந்து பல்வேறு காரியங்களைப்பற்றிப் பேசிக் கொண்டிருந்தார்கள்.

"அன்பான விடுதித் தலைவரே, நாங்கள் நீர் அளித்த கொட்டைகளை உடைத்துக் கொண்டிருக்கும்போது நீர் இந்த விடுகதைக்குப் பதிலைக் கூறுமேன்!" என்று ஒருவர் கேட்டுக் கொண்டார். விடுகதை இதோ:

இருந்தான் ஒரு மனிதன்
பித்தனவன் என்றனர் சிலர்
கொடுத்தான் அவன் அதிகம்
எடுத்தான் அவ்வளவு அதிகம்.

காயு என்ன பதில் கூறப்போகிறார் என்பதற்காக அனைவரும் காத்திருந்தார்கள். சற்றுநேரம் யோசித்த பின்னர் அவர் இவ்வாறு பதில் கூறினார்:

"ஏழைகளுக்குக் கொடுத்தவன் என்றுமே
திரும்பப் பெறுவானே பத்துமடங்காய்!"

"நீர் இவ்வளவு விரைவாகப் பதிலைக் கண்டுபிடித்து விடுவீர் என்று நான் நினைக்கவில்லை" என்று வியப்புடன் கூறினான் யோசேப்பு.

"இந்தக் காரியத்தில் நான் எத்தனை காலமாக பயிற்சி பெற்றிருக்கிறேன்! அனுபவத்தைவிடச் சிறந்த ஆசிரியர் யார்? எனது ஆண்டவர் காருணியம் மிக்கவராக இருந்தார் என்பதை நான் அறிந்து அவரைப் பின்பற்றினேன். அநேக ஆசீர்வாதங்களை இதன்மூலம் பெறுகிறோம் என்பதை அனுபவபூர்வமாக உணர்ந்திருக்கிறேன். வாரி கொடுத்தும் வளமை பெறுவோரும் உண்டு; சேர்த்து வைத்து சொத்தோடு அழிபவரும் உண்டு. தன்னைச் செல்வந்தராக ஆக்கிக் கொண்டும் ஒன்றுமில்லாதவர்களாக இருப்பவரும் உண்டு. தங்களை வறியவர்களாக ஆக்கிக் கொண்டும் மேலான செல்வத்தை பெற்றவர்களும் உண்டு" என்று கூறினார் காயு.

அப்போது சாமுவேல் கிறிஸ்தீனாளிடம் தனியாக, "அம்மா இந்த விடுதி ஒரு நல்ல மனிதருடைய விடுதி. நாம் சில காலம் இங்கே தங்கிவிட்டுச் செல்லலாம். நாம் தொடர்ந்து செல்லு முன்னர் அண்ணன் மத்தேயுவுக்கு இரக்கத்தை மணம்செய்து வைத்துவிடுங்கள்" என்று கிசுகிசுத்த குரலில் கூறினான்.

இதைக் கேட்டுக்கொண்டிருந்த காயு, "எவ்வளவு காலம் வேண்டுமானாலும் இங்கே இருந்துவிட்டுச் செல்லுங்கள்" என்று முழுமனதுடன் கூறினார்.

அவர்கள் அங்கே ஒரு மாத காலத்துக்கும் மேலாகத் தங்கினார்கள். இரக்கம் மத்தேயுவுக்கு மனைவியாக மணமுடித்து வைக்கப்பட்டாள். இரக்கம் தனது வழக்கத்தின்படியே ஆடைகளைத் தைத்து ஏழைகளுக்குக் கொடுத்து வந்தாள். இதனால் பயணிகள் மத்தியில் அவளுக்கு நல்ல பெயர் கிடைத்தது.

இதற்கிடையே நடந்தது என்னவென்று பார்ப்போம். இரவு உணவருந்திய பின்னர் பயணத்தினால் களைப்படைந்து போயிருந்த பையன்கள் படுத்து உறங்க விரும்பினார்கள். அவர்களுடைய அறைக்கு காயு அவர்களை அழைத்துச் சென்றார். இரக்கம் அவர்களுக்குப் படுக்கையை ஆயத்தம் பண்ணினாள். பையன்கள் ஆழ்ந்த உறக்கத்தில் ஆழ்ந்தார்கள்.

ஆனால் மற்றவர்கள் இரவு முழுவதும் பேசியபடியே பொழுதைக் கழித்தார்கள். காயு அவர்களுடன் உற்சாகமாகப் பேசிக் கொண்டிருந்தபடியால் விடைபெற்று உறங்கிச் செல்ல அவர்களுக்கு மனமில்லை.

ஆண்டவரைப்பற்றியும், தங்களைப்பற்றியும், தங்கள் பயணத்தைப்பற்றியும் அவர்கள் நீண்ட நேரம் பேசிக் கொண்டிருந்தார்கள். அப்போது நேர்மையானவன் உறக்கத்தில் கண்களை மூடத் துவங்கினார்.

“என்ன ஐயா, உறங்கி விழுகிறீர்கள்? கண்களைக் கசக்கிக் கொள்ளுங்கள். நான் ஒரு விடுகதை கூறுகிறேன். அதற்குப் பதில் சொல்லுங்கள் பார்ப்போம்” என்றார் துணிவுள்ளவன்.

“எங்கே சொல்லு பார்ப்போம்” என்றார் நேர்மையானவன்.

“கொல்லக் கூடியவன் முதலில் கொல்லப்பட வேண்டும்
வெளியே வாழ்பவன் முதலில் வீட்டில் சாக வேண்டும்”

என்றான் துணிவுள்ளவன்.

“இது கடினமான விடுகதைதான். பதில் கூறுவது கடினம் என்பதோடு அதைச் செயல்படுத்துவது மேலும் கடினம்” என்று கூறிய நேர்மையானவன் விடுதித்தலைவரிடம் திரும்பி, “எனது பொறுப்பை நீங்கள் ஏற்றுக்கொள்ளுங்களேன். நீங்கள் இந்த விடுகதைக்கு என்ன பொருள் கூறுகிறீர்கள் என்று கேட்க ஆவலாயிருக்கிறேன்” என்றார்.

‘‘இல்லை, கேள்வி உங்களிடம்தான் கேட்கப்பட்டது. நீங்கள்தான் அதற்குப் பதில் கூறவேண்டும்’’ என்று சொல்லிவிட்டார் காயு.

உடனே அந்த முதியவர்.

“கிருபையினால் மேற்கொள்ளப்பட்டவன்
கொல்லும் பாவத்தைக் கொல்வான்
நித்திய வாழ்வைப் பெறுவன்
முதலில் தன்பாவத்துக்குச் சாக வேண்டும்”

என்று பதில் கூறினார்.

‘‘சரியான பதில் நல்ல கோட்பாடும், அனுபவமும் இதையேதான் போதிக்கின்றன. கிருபை தன்னை வெளிப்படுத்தி, தனது மகிமையால் ஆத்துமாவை மேற்கொள்ளும்போதுதான், பாவத்தை எதிர்க்கும் வல்லமையை ஆத்துமா பெறுகிறது. பாவம் என்பது சாத்தானின் கயிறாக இருக்கும்போது ஆத்துமா அந்தக் கயிற்றினால் கட்டப்பட்டிருக்கும்போது இந்தத் தளையிலிருந்து விடுவிக்கப்படாத வரையில் அது எப்படி எதிர்த்து நிற்க முடியும்? இரண்டாவதாக, பகுத்தறிவையோ அல்லது கிருபையையோ அறிந்தவன், தனது சொந்தப் பாவத்திற்கு அடிமைப்பட்டவன் கிருபைக்கு ஒரு வாழும் அடையாளமாக விளங்கமுடியாது என்பதையும் அறிந்திருக்கிறான். நமக்குப் பயனளிக்கக்கூடிய ஒரு கதை என் நினைவுக்கு வருகிறது. இரண்டு மனிதர்கள் மோட்சப் பயணம் சென்றார்கள். அவர்களில் ஒருவன் தன் இளவயதிலும் மற்றவன் தன் முதிர்வயதிலும் பயணத்தைத் துவங்கினார்கள்.

அந்த வாலிபன் களைந்து போடவேண்டிய பாவத்தளைகள் அதிகமாக இருந்தாலும் முதிர்வயதானவனான மற்றவன் நடந்த அதே வேகத்தில் நடந்தான். இருவரும் ஒன்றுபோல நடந்தாலும் யாரிடம் கிருபை தெளிவாகப் பிரகாசிக்கிறது?" என்று கேட்டார் காயு.

"அந்த வாலிபனுடையது என்றுதான் கூறவேண்டும். அவனது தளைகளை அறுத்து அவனைப் பயணம் செய்ய வைத்த கிருபை வல்லமை உள்ளதாகத்தானே இருக்க வேண்டும்? குறிப்பாக வயதான காலப் பயணத்தில், எந்தவிதத் தளையுமற்ற பருவத்தில், ஒருவன் எப்படி நடக்கிறானோ, அப்படியே தளைகளுள்ள வாலிப பருவத்தில் ஒருவன் நடக்கிறான் என்றால் அவனுக்குள் இருக்கும் கிருபை அதிக வல்லமையாகச் செயல்படுகிறது என்றுதான் கூறவேண்டும். அநேக முதியவர்கள் ஒரு தவறான எண்ணத்தைக் கொண்டிருக்கிறார்கள் என்பதை நான் அறிவேன். சரீரத்தின் உணர்வுகள் மங்கிப்போன முதிர்வயதில் பயணத்தை மேற்கொண்டுவிட்டு, கிருபையினால் பாவங்களை மேற்கொண்டு விட்டோம் என்று கூறிக்கொள்கிறார்கள். இதனால் அவர்கள் தங்களைத் தாங்களே கறைப்படுத்திக்கொள்வதற்கு ஏதுவிருக்கிறது. உண்மையில் கிருபை மிகுந்த முதியவர்களால் இளவயதினருக்கு நல்ல ஆலோசனைகளைக் கொடுக்க முடிகிறது; ஏனென்றால் உடமைகளில் வெறுமையை அவர்கள் அனுபவபூர்வமாக அறிந்திருக்கிறார்கள். ஆனாலும்கூட ஒரு முதியவரும், வாலிபனும் ஒன்றாகப் பயணம் புறப்படும்போது, ஏற்கெனவே சரீர உணர்வுகள் அற்றுப்போயிருப்பதால் அந்த முதியவர் கிருபையின் வல்லமையை உணருவதைவிட, மாம்ச உணர்வுகளை வெல்ல வேண்டிய நிலையிலுள்ள வாலிபன் கிருபையின் வல்லமையை அதிகமாக உணருவான்" என்றார் நேர்மையானவன்.

இவ்வாறு அவர்கள் விடியும் வரையிலும் பேசிக் கொண்டிருந்தார்கள்.

இதற்குள் பையன் விழித்தெழுந்துவிட்டபடியால், கிறிஸ்தீனாள் யாக்கோபுவிடம் வேதாகமத்திலிருந்து ஒரு பகுதியை வாசிக்கும்படி கூறினாள். அவன் ஏசாயா 53ஆம் அதிகாரத்தை வாசித்தான்.

அப்போது முதியவரான நேர்மையானவன். "நமது இரட்சகர் வறண்ட நிலத்திலிருந்து துளிர்விடுகிற வேரைப்போல எழும்புவார் என்றும், அவருக்கு அழகுமில்லை சௌந்தரியமுமில்லை என்றும் ஏன் கூறப்பட்டுள்ளது?" என்று கேட்டார்.

"இந்த இரண்டுக்கும் நான் பதில் கூறுகிறேன்" என்று துணிவுள்ளவன் பேசத் துவங்கினான்.

"முதலாவதாக, கிறிஸ்து தோன்றிய யூதச் சபையானது தனது பக்தி வைராக்கியத்தின் ஆவியும் சாறமற்ற நிலையில் இருந்தது. இரண்டாவது பகுதி அவிசுவாசிகளுடைய எண்ணத்தைப் பற்றிக் குறிப்பிடுகிறது. நமது இளவரசரின் உள்ளிருதயத்தை அவர்கள் காண முடியாததால், அவரது வெளித் தோற்றத்தைத் கண்டு அவரை எடைபோடுகிறார்கள். விலையுயர்ந்த கற்கள்கூட பட்டை தீட்டப்படுமுன்னர் மண்படிந்து சாதாரண கற்கள் போலக் காணப்படுமே! விஷயம் தெரிந்தவர்கள் அவற்றை வெறும் கற்கள் என்று எறிந்துவிடுவதைப்போலவே இதுவும் இருக்கிறது" என்றான் அவன்.

"துணிவுள்ளவன் தனது ஆயுதங்களைப் பிரயோகிப்பதில் வல்லவன் என்று நான் அறிந்திருப்பதாலும், நீங்கள் அனைவரும் இங்கே வந்திருப்பதாலும், உணவருந்திய பிறகு உங்களுக்கு நான் ஒரு பொறுப்பைக் கொடுக்கப்போகிறேன். இங்கிருந்து ஒரு மைல் தொலைவில் **நன்மை கொல்லி** என்ற பெயருடைய அரக்கன் வசித்துவருகிறான். இந்தப் பகுதியில் வரும் பயணிகளுக்கு அவன் அதிகமாக தொந்தரவு கொடுத்து வருகிறான். பல கொள்ளையர் கூட்டத்திற்கு அவனே தலைவனாக இருக்கிறான். அவன் இருக்குமிடம் எனக்குத் தெரியும். அவனை அழித்துவிட்டால் இந்தப் பகுதி பாதுகாப்பாக இருக்கும்" என்றார் காயு.

பயணிகளும் அதற்குச் சம்மதித்து உடன் சென்றார்கள். துணிவுள்ளவன் தலைக் கவசமும், கேடயமும் அணிந்தவனாக பட்டயத்தை எடுத்துக்கொண்டு புறப்பட்டான். மற்றவர்கள் ஈட்டிகளையும், தடிகளையும் எடுத்துக்கொண்டார்கள்.

அவர்கள் அந்த அரக்கன் இருக்குமிடத்தை அடைந்தபோது அவனது ஆள்கள் **மென்னெஞ்சன்** என்பவனைப் பிடித்து அவனிடம் கொண்டு வந்திருந்தார்கள். அந்த மென்னெஞ்சனின் எலும்புகளை முறித்து அவன் மாம்சத்தைத் தின்ன அந்த அரக்கன் முயன்று கொண்டிருந்தான்.

துணிவுள்ளவனும் அவன் நண்பர்களும் கைகளில் ஆயுதம் ஏந்தியவர்களாக குகை வாயிலில் வந்து நிற்பதைக் கண்ட அவன்.

"உங்களுக்கு என்ன வேண்டும்?" என்று உறுமினான்.

"நீதான் எங்களுக்கு வேண்டும். நீ அநேக பயணிகளை இராஜாவின் பாதையிலிருந்து இழுத்து அவர்களை கொன்று போட்டிருக்கிறாய். அதற்குப் பழிவாங்கவே நாங்கள் வந்திருக்கிறோம். குகையைவிட்டு வெளியே வா" என்று கத்தினான் துணிவுள்ளவன்.

அரக்கன் ஆயுதம் ஏந்தியவனாக வெளியே வந்தான். இருவரும் ஒரு மணி நேரத்திற்குமேல் போரிட்டார்கள். பிறகு சற்று நேரம் இளைப்பாறினார்கள்.

"நீ ஏன் என் இடத்திற்கு வந்திருக்கிறாய்?" என்று உறுமினான் அந்த அரக்கன்.

"நான் ஏற்கெனவே கூறியபடி பயணிகளின் சிந்தப்பட்ட இரத்தத்திற்குப் பழிவாங்கவே வந்திருக்கிறேன்'' என்றான் துணிவுள்ளவன்.

அவர்கள் மீண்டும் போரிடத் துவங்கினார்கள். அரக்கன் அடித்த அடியில் துணிவுள்ளவன் பின்வாங்கினான். பிறகு முழுபலத்தையும் பயன்படுத்தி அவனைத் தாக்கிப் காயப்படுத்தினான். அரக்கனின் ஆயுதம் அவன் கையிலிருந்து கைநழுவிக் கீழே விழுந்தது. துணிவுள்ளவன் அவனை வீழ்த்திக் கொன்று பட்டயத்தினால் அவன் தலையை வெட்டிக் கையில் எடுத்துக்கொண்டான். அரக்கனின் தலையை விடுதிக்கு எடுத்து வந்தான். அவன் அரக்கனின் கையில் பிடிபட்ட மென்னெஞ்சனையும் விடுதிக்கு அழைத்து வந்தான்.

அவர்கள் விடுதிக்கு திரும்பியவுடன் மற்றவர்களிடம் அரக்கனின் தலையைக் காட்டினார்கள். பயணிகளுக்கு இடையூறு செய்பவர்களின் கதி இதுதான் என்பதைச் சுட்டிக்காட்டும்படி அவன் தலையையும் ஒரு கழுவில் ஏற்றி வைத்தார்கள்.

மென்னெஞ்சனிடம் அவன் எப்படி அரக்கனின் கையில் பிடிப்பட்டான் என்று கேட்டார்கள்.

"நீங்களே பார்க்கிறீர்கள் அல்லவா? நான் ஒரு நோயாளி, எந்த நாளிலும் எனக்கு மரணம் நேரிடலாம் என்றிருந்தபடியால் வீட்டிலேயே இருப்பது எனக்கு நல்லதல்ல என்று நினைத்தேன். எனவே நான் பயணியின் வாழ்க்கையை மேற்கொண்டேன். எனது தகப்பனாரும், நானும் பிறந்த **நிச்சயமற்றநகர்** என்ற இடத்திலிருந்து பயணம் புறப்பட்டேன். எனது சரீரத்தில் எந்தவித பலமும் இல்லை. மனபலமும் இல்லையென்றாலும் ஊர்ந்து சென்றாவது பயணத்தை முடிக்கவேண்டுமென்று முயன்றேன். இந்தப் பாதையின் துவக்கத்தில் இருக்கும் வாசலண்டை நான் வந்தபோது, அந்த இடத்தில் ஆண்டவர் தாராளமாக என்னை உபசரித்தார். எனது பலவீனமான சரீரத்தைப்பற்றியோ, எனது பலவீனமான மனதைப்பற்றியோ அசட்டை செய்து குறைகூறவில்லை. மாறாக எனது பயணத்துக்கு அவசியமான பொருள்களைக் கொடுத்து, இறுதிவரை நான் நம்பிக்கையோடு செல்லவேண்டுமென்று வாழ்த்தி அனுப்பி வைத்தார்.

“விளக்கம் கூறுபவரின் இடத்துக்கு நான் வந்தபோது, அங்கேயும் அன்போடு வரவேற்கப்பட்டேன். கடினமலையில் ஏறிச்செல்ல என்னால் இயலாது என்பதால், அவரது ஊழியக்காரர்களில் ஒருவன் என்னைத் தூக்கிச் சென்றான். சகபயணிகள்மூலம் நான் அதிக ஆறுதல் பெற்று வந்தேன். நான் என் பெலவீனத்தின் காரணமாக மெதுவாக நடந்துசெல்ல வேண்டியிருந்ததால் மற்றவர்கள் என்னை முந்திக்கொண்டு முன்னால் சென்றுவிடுவார்கள். என்றாலும் அவர்கள் என்னைச் சந்திக்கும்போது, என்னை வாழ்த்திச் செல்பவர்கள். பலவீனமான மனதை உடையவர்களுக்கு ஆறுதல் கூறுவது ஆண்டவருடைய சித்தம் என்று கூறி என்னைக் கடந்து செல்வார்கள்.

“தாக்கும் சந்து என்ற இடத்தின் அருகே வந்தபோது அந்த அரக்கன் எனக்கு எதிராக வந்தான். என்னைச் சண்டைக்கு அழைத்தான். ஆனால் பாவம் பலவீனனாகிய என்னால் அவனை எதிர்த்து நிற்க முடியுமா? அரக்கன் என்னைப் பிடித்துக் கொண்டான். அவன் என்னைக் கொல்லமாட்டான் என்று நான் நினைத்திருந்தேன். அவன் எனது விருப்பத்திற்கு விரோதமாக என்னைத் தனது குகைக்குக் கொண்டு சென்றபடியால், நான் உயிரோடு திரும்புவேன் என்ற நம்பிக்கை எனக்கு இருந்தது. ஏனென்றால் பிடிப்பட்ட எந்தப் பயணியும் தன் முழு இருதயத்தோடும் ஆண்டவருக்குப் பிரியமானவனாக இருந்தால் அவன் விரோதியின் கையில் மரணமடையமாட்டான் என்ற நம்பிக்கை நிலவி வந்தது. பார்த்தீர்களா? அவன் என்னைக் கொள்ளையடித்திருந்தபோதிலும், நான் உயிர் பிழைத்து விட்டேன் அல்லவா? என்னை உம்மூலம் காப்பாற்றிய ஆண்டவருக்கு நான் நன்றிகூறுகிறேன். இன்னும் பல சோதனை களையும் நான் சந்திக்கவேண்டியிருக்கலாம். என்றாலும் என்னால் முடிந்தவரை ஓடிச்செல்லவும், ஓடமுடியாத வேளையில் நடந்து செல்லவும், நடக்கவும் கூடாத வேளையில் ஊர்ந்து செல்லவும் நான் வைராக்கியம் கொண்டுள்ளேன். என்னை நேசிக்கும் அவரை நான் தோத்தரிக்கிறேன். எனது பாதை எனக்கு முன்பாக இருக்கிறது. நான் பெலவீனமான மனதை உடையவனாக இருந்தாலும், பாவமேயற்ற ஆற்றின் மறுகரையையே என் உள்ளம் வாஞ்சிக்கிறது” என்றான் மென்னெஞ்சன்.

“சில காலத்திற்கு முன்னர் நீ **பயந்தவன்** என்ற பயணியை அறிந்திருந்தாய் அல்லவா?” என்று கேட்டார் நேர்மையானவன்.

“அறிந்தது மட்டுமா?” அவனோடு பழக்கமும் உண்டு. அவன் **மடமை** என்ற இடத்திலிருந்து வந்தான். அந்த இடம்

அழிநகரத்திற்கு வடக்கே இருக்கிறது. அவன் எனது தகப்பனாரின் தம்பியாக இருந்தபடியால் எனக்கு அவனோடு நல்ல பழக்கம் உண்டு. இருவரும் கிட்டத்தட்ட ஒரே குணத்தை உடையவர்களாக இருந்தோம். இருவரும் முகச் சாயலில் கிட்டத்தட்ட ஒன்றுபோலவே இருந்தாலும் அவன் என்னைவிடக் கொஞ்சம் குள்ளமாக இருப்பான்" என்றான் மென்னெஞ்சன்.

"நீ அவனை அறிந்திருப்பாய் என்றும் ஒருவேளை அவனுக்கு உறவினனாக இருப்பாய் என்றும் நான் நினைத்தேன். ஏனென்றால் உன் முகமும் அவனது முகத்தைப்போலவே வெளிறிப் போயிருக்கிறது. கண் ஜாடையும், குரலும்கூட ஒத்துப் போயிருக்கின்றன" என்றார் நேர்மையானவன்.

"எங்களைப் பார்க்கும் எல்லாரும் அப்படித்தான் கூறுவார்கள். அவரிடம் நான் கண்ட குணாதிசயங்கள் என்னிடமும் காணப்படுவதை அறிந்து நான் வியப்படைந்திருக்கி றேன் என்றான் மென்னெஞ்சன்.

"வாரும் நான் உம்மை மனமார வரவேற்கிறேன். இந்த விடுதியில் உபசரிப்பை நீர் தாராளமாக அனுபவிக்கலாம். என்ன தேவையோ அதைக் கூச்சப்படாமல் கேளுங்களேன். உமது தேவைகளை எனது ஊழியக்காரர்கள் கவனித்துக்கொள்வார்கள்" என்றார் காயு.

"இருண்ட மேகத்ினூடே சூரியன் ஒளிவீசுவது போல இது நான் சற்றும் எதிர்பார்க்காத வரவேற்பாக இருக்கிறது. நன்மைகொல்லி என்ற அரக்கன் என்னைத் தடுத்து பயணத்தைத் தொடர முடியாமல் செய்தபோது இந்த வரவேற்பை நான் பெறவேண்டுமென்று நினைத்திருந்தானோ? அவன் என் உடமைகளைக் கொள்ளையடித்த பிறகு நான் காயுவின் உபசரிப்பைப் பெற வேண்டுமென்று நினைத்திருந்தானோ? இப்படியெல்லாம் அவன் நினையாதிருந்தாலும் இந்தப் பாக்கியங்களெல்லாம் எனக்குக் கிடைத்திருக்கின்றன" என்றான் மென்னெஞ்சன்.

மென்னெஞ்சனும், காயுவும் இவ்வாறு பேசிக்கொண்டிருந்த போது, ஒருவன் ஓடிவந்து கதவைத் தட்டினான். கதவு திறக்கப்பட்டது.

"ஐயா, ஐயா, இங்கேயிருந்து ஒன்றரை மைல் தொலைவில் சரியில்லாதவன் என்பவன் இடியால் தாக்கப்பட்டு இறந்து கிடக்கிறான்" என்று பதறியபடியே கூறினான் வந்தவன்.

"அவனா? அவனா இறந்துபோய்விட்டான்? சில நாள்களுக்கு

முன்பு அவன் என்னை முந்திக்கொண்டு இங்கே ஓடிவந்தான். நானும் அவனோடு சேர்ந்து நடக்கலாம் என்றல்லவா நினைத்திருந்தேன்? நன்மை கொல்லி என்ற அரக்கன் என்னைப் பிடித்தபோது அவனும் என்னுடன்தான் இருந்தான். ஆனால் ஓடித் தப்பிவிட்டான். ஆனால் அவன் மரிப்பதற்காகத் தப்பி யோடியதுபோலவும், நான் பிழைப்பதற்காகப் பிடிபட்டது போலவும் அல்லவா இருக்கிறது?"

உயிரை இழப்போமோ என்று கலங்க
உயிரைக் காப்பாரே ஆண்டவர்
நாசம் வருமோ என்று திகைக்க,
நாசம் போக்குவாரே ஆண்டவர்!
பிடிபட்டேன் அரக்கனிடம் நானும்!
ஓடிப் பிழைத்தான் அவனுமே!
ஆண்டவர் கரத்தால் பிழைத்தேன் நான்
பிழைத்த அவனோ மரித்தான்"

என்றெல்லாம் புலம்பினான் மென்னெஞ்சன்.

இந்த வேளையில் மத்தேயுவுக்கும் இரக்கத்திற்கும் திருமணம் நடைபெற்றது. காயு தன் மகள் **பெபேயாளை** யாக்கோபுவுக்குத் திருமணம் செய்துவைத்தார். இதன் பிறகு பயணிகள் களித்திருப்பதுபோல மேலும் பத்து நாள்கள் அவர்கள் அங்கே தங்கினார்கள்.

அவர்கள் புறப்படும் வேளையில் காயு அவர்களுக்கு ஒரு விருந்தை ஆயத்தம்பண்ணினார். அவர்கள் உண்டு, குடித்து மகிழ்ச்சியடைந்தார்கள்.

புறப்படும் நேரத்தில் துணிவுள்ளவன் "ஐயா, எங்களுக்கான கட்டணத்தைக் கூறினால் அதைக் கட்டி விடுகிறோம்" என்று சத்திரத் தலைவரிடம் கேட்டுக்கொண்டான்.

"பயணிகள் தங்கள் உபசரிப்புக்காக கட்டணம் செலுத்த வேண்டிய இடமல்ல இது! தங்கிச் செல்லும் பயணிகளுக்காக ஒரு வருடம் முழுவதும் ஆகும் செலவையெல்லாம், ஆண்டுக்கு ஒருமுறை நல்ல சமாரியன் திரும்பி வரும்போது, தானே தருவதாக வாக்களித்திருக்கிறார் (லூக்கா 10:34; 53). அவரிடமே நான் வாங்கிக்கொள்வேன்" என்றார் காயு.

அன்பானவரே, நீர் உண்மையுடன் ஊழியம் செய்கிறீர். நீர் சகோதரர்களுக்கும் அந்நியருக்கும் காட்டிவரும் கருணையால் உமது பெயர் திருச்சபையில் விளங்குகிறது. உமது உபசரிப்பைப் பெற்றவர்கள் திருச்சபைக்கு முன்பாகச் சாட்சி கூறுகிறார்கள்.

தேவனுக்கு முன்பாகப் பாத்திரமானபடி அவர்களை நீர் வழிவிட்டனுப்பினால் நலமாயிருக்கும் (3 யோவான் 6) என்று கேட்டுக் கொண்டான் துணிவுள்ளவன்.

காயு அவர்களையும், மென்னெஞ்சனையும் வழியனுப்பி வைத்தார். வழியில் அவர்கள் குடிப்பதற்கு ஒரு பானத்தையும் கொடுத்தனுப்பினார்.

20 பயணிகள் காயுவின் விடுதியைவிட்டுச் செல்லுதல்

அவர்கள் வாசலைவிட்டு வெளியேறும் வேளையில் மென்னெஞ்சன் தயங்கி நிற்பதைப்போலத் தோன்றியது.

இதைக்கண்ட துணிவுள்ளவன், "மென்னெஞ்சனே வா. நீயும் எங்களுடன் வரவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். மற்றவர்களோடுகூட நான் உன்னையும் வழிநடத்திக்கொண்டு செல்வேன்" என்று அவனை அழைத்தான்.

"எனக்கு பொருத்தமான ஒரு துணையையே நான் தேடுகிறேன். நீங்கள் எல்லாருமே சுறுசுறுப்பானவர்கள், பலசாலிகள், நானோ பெலவீனமானவன். எனவே நான் பின்தங்கி வரவே விரும்புகிறேன். என் பெலவீனத்தினால் நான் உங்களுக்குப் பாரமாக இருக்கக்கூடாது அல்லவா? நான் பெலவீனமான மனதையுடையவன். மற்றவர்களால் தாங்கிக் கொள்ளக் கூடியதை என்னால் தாங்கிக்கொள்ள முடியாது. எனக்காக நீங்களும் பின்தங்க வேண்டி நேரிட்டால் மனகசப்புதான் ஏற்படும். சிரிப்பதோ, பயனற்ற வளவளவென்ற பேச்சோ எனக்குப் பிடிக்காது. நல்ல உடை அணியும் எனக்கு விருப்பமில்லை. மற்றவர்கள் தங்கள் விருப்பப்படி அனுபவிக்கும் எந்தக் களிப்பும் எனக்குப் பிடிக்காது. அனைத்துச் சத்தியங்களையும் நான் அறிந்தவனுமல்ல; ஒன்றும் அறியாத கிறிஸ்தவனாகவே இருக்கிறேன். சிலவேளைகளில் எவரேனும் கர்த்தருக்குள் களிப்படைவதுகூட எனக்குக் கவலையை அளிக்கிறது; ஏனென்றால் என்னால் அப்படிச் செய்ய முடியாது. உடல்நலம் பெற்றவர்கள் நடுவில் ஒரு நோயாளி இருப்பதுபோல, பலசாலிகள் நடுவில் பெலவீனனாக நான் இருக்கிறேன். எரிந்து பிரகாசிக்க முடியாத ஒரு விளக்கை வெறுப்பதுபோல நான் வெறுக்கப்படுகிறேன். என்ன செய்வதென்றே எனக்குத் தெரியவில்லை. 'ஆபத்துக்குள்ளானவன் சுகமாயிருக்கிறவனுடைய நினைவில் இகழ்ச்சியடைகிறான்' (யோபு 1:25) என்று கூறப்பட்டுள்ளதே? என்றான் மென்னெஞ்சன்.

"சகோதரனே, நான் பெலவீனமான மனதையுடையவர் களுக்கு ஆறுதலளிக்கவும், பெலவீனர்களைத் தாங்கவுமே

அழைக்கப்பட்டிருக்கிறேன். நீ எங்களுடன் வந்துதான் ஆகவேண்டும். நாங்களும் உனக்காகக் காத்திருப்போம்; எங்கள் உதவியை உனக்கு அளிப்போம். உனக்காக நாங்கள் சில காரியங்களை விட்டுக்கொடுப்போம்; உனக்கு முன்பாக வேண்டாத காரியங்களைப்பற்றி பேச மாட்டோம். உன்னைப் பின்னால் விட்டுவிட்டுப் போவதற்குப் பதிலாக, நாங்களும் உன்னைப்போல ஆகிவிடுவோம்'' என்று உறுதி கூறினான் துணிவுள்ளவன்.

இவ்வாறு இருவரும் அந்த விடுதியின் வாசலண்டையில் நின்றபடி பேசிக்கொண்டிருந்தபோது, கம்பை ஊன்றியவனாக ஊனன் என்றவன் வந்துசேர்ந்தான். அவனும் பயணம் மேற்கொண்டிருந்தான்.

"நீ எப்படி இங்கே வந்தாய்? எனக்குப் பொருத்தமான துணை இல்லையே என்று நான் கவலைப்பட்டிருக்கும் வேளையில் என் விருப்பத்தை நிறைவேற்றும் வகையில் நீ வந்திருக்கிறாய். வா, வா, ஊனனே! நீயும் நானும் ஒருவருக்கொருவர் உதவியாக இருப்போம்'' என்றான் மென்னெஞ்சன்.

''உனக்குத் துணையாக வருவதில் நானும் மகிழ்ச்சி யடைகிறேன்'' என்றான் ஊனன்.

தனது தடிகளில் ஒன்றை மென்னெஞ்சனிடம் நீட்டிய அவன், "இதோ, இதை உனக்கு ஆதாரமாக வைத்துக்கொள். நாம் சேர்ந்தே பயணம் செல்வோம்'' என்றான்.

"உனது நல்ல எண்ணத்துக்காக நன்றி. என் கால் ஒடிந்து நான் முடவனாக ஆகும்வரை எனக்கு ஆதாரம் தேவையில்லை. என்றாலும் இந்தத் தடி நாய்களை விரட்ட உதவும்'' என்றான் மென்னெஞ்சன்.

''நானோ அல்லது எனது தடியோ உனக்கு உதவக் கூடுமானால் நான் பெருத்த மகிழ்ச்சியடைவேன்'' என்றான் ஊனன்.

அவர்கள் மகிழ்ச்சியுடன் பயணத்தைத் தொடர்ந்தார்கள். துணிவுள்ளவனும், நேர்மையானவனும் முன்னால் செல்ல, கிறிஸ்தீனாளும், அவள் பையன்களும் அடுத்துச் செல்ல, மென்னெஞ்சனும், கம்பூன்றி நடந்த ஊனனும் பின்னால் சென்றார்கள்.

"எங்களுக்கு முன்னால் பயணம் சென்றவர்களைப் பற்றிய பயனுள்ள செய்தி ஏதேனும் இருக்குமானால் கூறும்'' என்று துணிவுள்ளவனிடம் கேட்டான் மென்னெஞ்சன்.

21. முன்பு பயணம் சென்றவர்களைப்பற்றிய உரையாடல்

“முன்பு பயணம் சென்றவர்களைப்பற்றிக் கூறுவதில் நான் மிகவும் மகிழ்ச்சியடைகிறேன். முன்பு பயணம் சென்ற கிறிஸ்தியான் தாழ்மையின் பள்ளத்தாக்கில் அப்பொல்லியோனுடன் போரிட்டதைப்பற்றியும், அவன் மரண இருளின் பள்ளத்தாக்கைக் கடினத்துடன் கடந்ததைப்பற்றியும் நீங்கள் கேள்விப்பட்டிருப்பீர்கள். உண்மையானவன் எப்படி **காமக்கன்னி, முதலாம் ஆதாம், திருப்தியின்மை, இழிவு** இவர்களால் சோதனைக்குள்ளாக்கப்பட்டான் என்பதையும் அறிந்திருப்பீர்கள். பயணம் செய்பவர்களுக்கு வழியில் தொல்லை கொடுப்பதில் இந்த நால்வரும் சூரர்கள்” என்றான் துணிவுள்ளவன்.

‘‘இவற்றைப்பற்றியெல்லாம் நான் ஏற்கெனவே கேள்விப்பட்டிருக்கிறேன். இழிவு என்பவன் உண்மையானவனை அதிகமாகச் சோதித்திருக்கிறான். ஆனால் உண்மையானவன் கொஞ்சமும் மனந்தளரவில்லை’’ என்றார் முதியவர் நேர்மையானவன்.

‘‘உண்மையானவன் இழிவு என்பவனைப்பற்றி சொன்னதுபோல அவன் வெட்கங்கெட்டு நடப்பதினால் தனது குணத்துக்குப் பொருத்தமில்லாத பெயரைத்தான் வைத்திருக்கிறான்” என்றான் துணிவுள்ளவன்.

“கிறிஸ்தியானும், உண்மையானவனும் எந்த இடத்தில் வாயாடி என்பவனைச் சந்தித்தார்கள்? அவனும் சாதாரண மானவனல்ல” என்றார் நேர்மையானவன்.

‘‘அவன் தன்னம்பிக்கையுள்ள முட்டாள். என்றாலும் அநேகர் அவன் வழியைப் பின்பற்றுகிறார்கள்’’ என்றான் துணிவுள்ளவன்.

‘‘அவன் உண்மையானவனை ஏமாற்றப் பார்த்தான் அல்லவா?’’ என்று கேட்டார் நேர்மையானவன்.

“ஆனால் கிறிஸ்தியானோ அவன் யார் என்பதை வெகு விரைவிலேயே கண்டுபிடித்துவிட்டான் அல்லவா?’’ என்று களிப்புடன் கூறினான் துணிவுள்ளவன்.

இவ்வாறு பேசிக்கொண்டே நடந்த அவர்கள் கிறிஸ்தியானையும், உண்மையானவனையும் நற்செய்தியாளர் சந்தித்து அவர்களுக்கு மாயாபுரி சந்தையின் ஆபத்துக்களைக் குறித்து எச்சரித்த இடத்துக்கு வந்து சேர்ந்தார்கள்.

‘‘இங்கேதான் கிறிஸ்தியானும் உண்மையானவனும் நற்செய்தியாளரை மீண்டும் சந்தித்தார்கள். அவர்கள் மாயாபுரி

சந்தையில் என்னென்ன சோதனைகளைச் சந்திப்பார்களென்று அவர் தீர்க்கதரிசனமாக உரைத்தார்" என்றான் துணிவுள்ளவன்.

"அது இந்த இடம்தானா? அவர் கூறிய தீர்க்கதரிசனங்கள் அவர்களுக்கு மனக்கவலையை ஊட்டியிருக்குமே!" என்றார் நேர்மையானவன்.

"அவர்கள் கவலைப்பட்டது உண்மைதான். ஆனால் அவர் அவர்களுக்கு தைரியமூட்டினார். அவர்களை நாங்கள் எப்படிக் குறிப்பிடுகிறோம் தெரியுமா? அவர்கள் சிங்கத்தைப்போன்ற உறுதியான மனிதர்கள். திடமான சித்தம் கொண்டவர்கள். மாயாபுரி நீதிபதி, நன்மையை வெறுப்பவன்முன்னர் கொண்டுவரப்பட்டபோது அவர்கள் எவ்வளவு மனத் துணிவுடன் நின்றார்கள் தெரியுமா?" என்று கூறினான் துணிவுள்ளவன்.

"ஆம், உண்மையானவன் எவ்வளவு துணிவுடன் பாடுகளைச் சகித்துக்கொண்டான்!" என்று வியந்தார் நேர்மையானவன்.

"அதுமட்டுமா? அவன் காட்டிய மனத்துணிவு மற்றவர்களுக்கும் ஊக்கமூட்டியது. அவன் உறுதியுடன் மரணத்தைச் சந்தித்ததைக் கண்டு நன்னம்பிக்கையும் இன்னும் பலரும் மனம் மாறினார்கள்" என்றான் துணிவுள்ளவன்.

"இந்தக் காரியங்களைப்பற்றி உமக்கு அதிகம் தெரியுமல்லவா? தொடர்ந்து சொல்லும்?" என்று தூண்டினார் நேர்மையானவன்.

"கிறிஸ்தியான் மாயாபுரியைவிட்டு வெளியேறியபிறகு அவனைச் சந்தித்து எதிரிகளில் மிக மோசமான **கட்சிமாறி நாயகர்** என்பவனாகத்தான் இருக்க வேண்டும்" என்றான் துணிவுள்ளவன்.

"கட்சிமாறி நாயகரா? அவன் யார்?" என்று ஆவலுடன் கேட்டார் நேர்மையானவன்.

"பயங்கரமான தந்திரசாலி அவன்! பெரிய மாய்மாலக்காரன்! உலகத்தாருக்கு ஏற்றபடி தன் நம்பிக்கையை மாற்றிக்கொள்வதில் திறமைசாலி அதற்காக எதையும் இழக்கவோ, துன்பம் அனுபவிக்கவோ நேரிடாத தந்திரமாக தன்னை மாற்றிக் கொள்வான். காலத்துக்கேற்றபடி நடந்துகொள்வதில் அவன் மட்டுமல்ல, அவன் மனைவியும் திறமைசாலிதான்! வேளைக்கேற்றபடி தன் கொள்கையை மாற்றிக்கொண்டு அதுவே நியாயம் என்று வாதிடவும் தயங்க மாட்டான். ஆனால் அவனது குறுக்கு வழியின்மூலம் அவன் பரிதாபகரமான

முடிவையே அடைந்தான் என்று நான் கேள்விப்பட்டேன். கர்த்தருக்குப் பயப்படுகிறவர்கள் அவன் பிள்ளைகளை மதித்ததாகவும் நானறியேன்" என்றான் துணிவுள்ளவன்.

22. மாயாபுரியைச் சேர்ந்து மினாசோனின் வீட்டை அடைதல்

இவ்வாறு அவர்கள் பேசியபடியே நடந்து வந்தபோது மாயாபுரிக்கு அருகே வந்து சேர்ந்தார்கள். இங்கேதான் மாயாபுரி சந்தை நடைபெறுகிறது. நகரை நெருங்கியவுடன், அந்த நகரை எவ்வாறு கடந்து செல்வதென்று ஒருவரோடொருவர் ஆலோசனை செய்தார்கள். ஒவ்வொருவரும் ஒவ்வொரு வகை யோசனை கூறினார்கள்.

''நீங்கள் ஏற்கெனவே அறிந்திருக்கிறபடி நான் இந்த நகரத்தின் வழியாக அநேக பயணிகளை வழிநடத்திச் சென்றிருக்கிறேன். இங்கே **மினாசோன்** என்பவரை எனக்கு நன்றாகத் தெரியும். அவர் சீப்புரு தீவைச் சேர்ந்த ஒரு பழைய சீடர் (அப். 21:16). அவருடைய வீட்டில் நாம் தங்கிச் செல்லலாம் என்று எனக்குத் தோன்றுகிறது. இது நலமென்று நீங்கள் கண்டால் அதன்படியே செய்யலாம்" என்றான் துணிவுள்ளவன்.

நேர்மையானவன், கிறிஸ்தீனாள், மென்னெஞ்சன் மற்றும் அனைவருமே தங்களுக்கு ஆட்சேபணையில்லை என்று கூறினார்கள்.

அவர்கள் அந்த நகரத்திற்கு வந்து சேர்ந்தபோது வெளிச்சம் பரவத் துவங்கியிருந்தது. அந்தச் சீடரின் வீட்டுக்குச் செல்லும் வழியை அறிந்த துணிவுள்ளவன் வெகு சுலபமாக அவர்களை அங்கே அழைத்துச் சென்றான்.

வீட்டை அடைந்தவுடன் துணிவுள்ளவன் அவர் பெயரைச் சொல்லி அழைத்தான். அவன் குரலை அறிந்திருந்த மினாசோன் கதவைத் திறந்து அவர்களை உள்ளே அழைத்தார்.

"இன்று எவ்வளவு தூரம் பயணம் செய்து வந்தீர்கள்?" என்று கேட்டார் மினாசோன்.

''நமது நண்பர் காயுவின் வீட்டிலிருந்துப் புறப்பட்டு வருகிறோம்" என்றான் பயணிகள்.

"அப்படியா? நீண்ட தொலைவுதான் நடந்து வந்திருக்கிறீர்கள். அமர்ந்து இளைப்பாறுங்கள்" என்று கேட்டுக் கொண்டார் மினாசோன்.

பயணிகள் ஓய்வெடுக்கும்படி அமர்ந்தார்கள்.

பயணிகளைப் பார்த்துத் துணிவுள்ளவன், "இங்கே வந்து சேர்ந்ததில் பெருமகிழ்ச்சியடைந்திருப்பீர்கள் என்று நம்புகிறேன் என் நண்பரும் உங்களைக் கண்டு மகிழ்ச்சியடைந்திருப்பார்" என்றான்.

"நிச்சயமாக! நான் உங்கள் அனைவரையும் அன்போடு வரவேற்கிறேன். உங்களுக்கு என்ன தேவையோ அதைத் தயங்காமல் கேளுங்கள். அதைப் பெற்றுத்தர என்னால் முடிந்ததைச் செய்கிறேன்" என்றார் மினாசோன்.

"தங்குவதற்கு ஓரிடமும், பேசிமகிழ ஒரு தோழனும் எங்களுக்குத் தேவைப்பட்டன. இரண்டுமே எங்களுக்குக் கிடைத்துவிட்டது" என்று திருப்தியுடன் கூறினார் நேர்மையானவன்.

"தங்குவதற்கு இது நல்ல இடம்தான். தோழன் எத்தகையவன் என்பதைப் பேசித்தான் தெரிந்துகொள்ள வேண்டும்" என்று புன்சிரிப்புடன் பதில் கூறினார் மினாசோன்.

"சரி ஐயா" என்று கூறிய துணிவுள்ளவன், "இவர்கள் தங்கும் அறைகளைக் காட்டுங்களேன்!" என்று கேட்டுக் கொண்டான்.

மினாசோன் பயணிகளை அழைத்துச் சென்று அவர்கள் இளைப்பாறுவதற்கான அறைகளைக் காட்டினார். பிறகு ஓர் அழகான சாப்பாட்டு அறைக்கு அவர்களைக் கூட்டிக் கொண்டுபோய் காட்டினார்.

பயணிகள் அனைவரும் சற்று நேரம் அமர்ந்து ஓய்வெடுத்த பிறகு, நேர்மையானவன் மினாசோனைப் பார்த்து, "இந்த நகரில் இன்னும் யாராவது நல்ல மனிதர் இருக்கிறார்களா?" என்று கேட்டார்.

"ஒரு சிலர் இருக்கிறார்கள். ஆனால் ஊரிலுள்ள கெட்ட மனிதர்களோடு ஒப்பிடும்போது, இவர்கள் மிகமிகக் குறைந்த எண்ணிக்கையில் இருக்கிறார்கள்" என்றான் மினாசோன்.

"அவர்களில் சிலரைச் சந்தித்துப் பேசினால் நலமாயிருக்குமே! கடலில் பயணமாகச் செல்பவர்கள் நிலவையும், நட்சத்திரங்களையும் பார்க்கும்போது எவ்வளவு மகிழ்ச்சியடைவார்களோ, அப்படியே மோட்சப் பயணம் செல்பவர்களைக் கண்டு இவர்களும் மகிழ்ச்சியடைவார்கள் அல்லவா?" என்றார் நேர்மையானவன்.

அப்போது மினாசோன் தன் காலினால் தரையை தட்டினார். கிருபை என்ற பெயருடைய அவரது மகள் அங்கே வந்தாள்.

கிருபை, நீ உடனடியாகச் சென்று என் நண்பர்களான **நொறுங்குண்ட இதயன், பரிசுத்தவான், தூயர்நேசன், பொய் சொல்லத் துணியான், மெய்மனஸ்தாபன்** இவர்களிடம் நமது வீட்டுக்கு வந்துள்ள ஓரிரு நண்பர்கள் சாயந்தரம் அவர்களோடு அளவளாவ விரும்புகிறார்கள் என்று சொல்" என்று மினாசோன் அவளிடம் கட்டளையிட்டார். அவள் அவர்களிடம் இதன்படியே கூறியதால், மினாசோனின் நண்பர்கள் விருந்து அறையில் ஒன்றாகக் கூடி வந்தார்கள்.

"எனது அண்டை வீட்டாரே, இதோ நீங்கள் முன்பின் அறியாத சிலர் என் வீட்டுக்கு வந்திருப்பதைக் காண்கிறீர்கள். இவர்கள் மோட்சப் பயணிகள். வெகு தொலைவிலிருந்து வந்திருக்கிறீர்கள். சீயோன் மலையை நோக்கிச் செல்லுகிறார்கள்" என்று கூறிய மினாசோன் கிறிஸ்தீனாளைச் சுட்டிக்காட்டி, "இவள் யார் தெரியுமா? நமது நகரில் அவமானப்படுத்தப் பட்டார்களே, கிறிஸ்தியான், உண்மையானவன் என்ற இருவர், நினைவிருக்கிறதா? இவள்தான் கிறிஸ்தியானின் மனைவியாகிய கிறிஸ்தினாள்" என்று அவளை அறிமுகம்பண்ணினார்.

அவரது நண்பர்கள் அனைவரும் எழுந்து வியப்புடன் அவளை வாழ்த்தினார்கள்.

"கிருபை வந்து எங்களை அழைத்தபோது, நாங்கள் கிறிஸ்தீனாளைச் சந்திப்போம் என்று கொஞ்சமும் எதிர்பார்க்க வில்லை. இது எங்களுக்குப் பெரிய ஆறுதலையளிக்கும் பிரமிப்பாக இருக்கிறது" என்று கூறிய அவர்கள் அவளிடம் அவளது உடல் நலத்தைப்பற்றி விசாரித்தார்கள்; அந்த வாலிப மக்கள் கிறிஸ்தியானின் பிள்ளைகள்தானா என்று கேட்டார்கள்.

ஆமாம் என்று அவள் கூறினாள். "நீங்கள் நேசித்து அடிபணியும் அரசர் உங்களையும் உங்கள் தகப்பனைப் போன்று உத்தமராக்கி, அவர் இருக்கும் இடத்தில் உங்களையும் சமாதானத்தோடு சேர்ப்பாராக!" என்று அவர்கள் அவளது பிள்ளைகளை வாழ்த்தினார்கள்.

அவர்கள் அனைவரும் அமர்ந்தபிறகு, நொறுங்குண்ட நெஞ்சனையும், மற்றவர்களையும் பார்த்து, நேர்மையானவன், "உங்கள் நகரத்தின் நிலைமை இப்போது எப்படியிருக்கிறது" என்று கேட்டார்.

"சந்தை நடைபெறும் வேளையில் நாங்கள் மிகுந்த பரபரப்புடனிருப்போம் என்பதை நீர் அறிவீர். இத்தகைய சோதனையான நாள்களில் எங்கள் இருதயத்தையும், ஆவியையும் நல்ல நிலையில் வைத்திருப்பது கடினமாகவே இருக்கிறது.

இத்தகைய ஓரிடத்தில் வசிப்பவன். இந்த அமளிகளுக்கிடையே காலந்தள்ளுபவன், ஒவ்வொரு நிமிடமும் விழிப்போடு இருக்கும் வகையில் அவனுக்கு எச்சரிப்பூட்ட ஒரு தூண்டுகோல் மிகவும் அவசியமாக இருக்கிறது" என்றார் நொறுங்குண்ட இதயன்.

"இப்போது எப்படி? உங்கள் அண்டை வீட்டார் அமைதியாக இருக்கிறார்களா?" என்று கேட்டார் நேர்மையானவன்.

"முன்பிருந்ததைவிட இப்போது கொஞ்சம் பரவாயில்லை. கிறிஸ்தியானும், உண்மையானவனும் எவ்வாறெல்லாம் துன்பத்துக்குள்ளாக்கப்பட்டார்கள் என்பதை நீங்கள் அறிவீர்கள் அல்லவா? இப்போது அவ்வளவு கொடூரங்களைக் காணமுடியவில்லை. இன்றுவரை உண்மையானவனின் இரத்தப்பழி அவர்களது உள்ளத்தை உறுத்தி வருகிறது என்று நான் நினைக்கிறேன்; ஏனென்றால் அவனுக்குப் பிறகு அவர்கள் வேறு எவரையும் நெருப்பில் சுட்டெரிக்கவில்லை. அந்த நாள்களில் தெருக்களில் நடக்கவே நாங்கள் பயந்துபோயிருந்தோம். இப்போது வெளியே தலைகாட்ட முடிகிறது. அந்நாள்களில் கிறிஸ்தவன் என்ற பெயரே இழிவாக எண்ணப்பட்டது. ஆனால் தற்போது இந்தப் பெரிய நகரின் சில பகுதிகளில் சமய நம்பிக்கை கொண்டிருப்பது மரியாதைக்குரியதாய் கருதப்படுகிறது'' என்று கூறிய நொறுங்குண்ட இதயன். "அதுசரி, உங்கள் பயணம் எப்படியிருக்கிறது? நாட்டிலுள்ளவர்கள் உங்களை எவ்வாறு ஏற்றுக்கொள்கிறார்கள்?" என்று கேட்டார்.

"மற்ற பயணிகள் பெற்ற அனுபவங்களையே நாங்களும் பெற்றுள்ளோம். சில வேளைகளில் எங்கள் பாதை சுமுகமாக இருக்கிறது, சில வேளைகளில் மகாமோசம்! சில இடங்களில் மலையேறிச் செல்ல வேண்டியிருக்கிறது. சில இடங்களில் இறக்கம்! காற்று எப்போதுமே எங்களுக்குச் சாதகமாக வீசுகிறது என்றும் கூறமுடியாது; வழியில் சந்திக்கும் அனைவருமே நண்பர் என்றும் கூறிவிட முடியாது. ஏற்கெனவே சில பயங்கரமான சோதனைகளுக்கு ஆளாகியிருக்கிறோம்; இனியும் எப்படியிருக்கும் என்று எங்களுக்குத் தெரியாது. ஆனால் அநேக இடங்களில் 'நல்லவன் தொல்லை சகிக்கவேண்டும்' என்று கூறப்பட்ட பழமொழி உண்மைதான் என்பதைக் கண்டு வருகிறோம்'' என்றார் நேர்மையானவன்.

''சோதனைகள் என்று கூறினீர்களே! எத்தகைய சோதனைகளைச் சந்தித்தீர்கள்?" என்று கேட்டார் நொறுங்குண்ட நெஞ்சன்.

"எமது வழிகாட்டியான துணிவுள்ளவனைக் கேளுங்கள். அவர் விவரமாகக் கூறுவார்" என்றார் நேர்மையானவன்.

“ஏற்கெனவே மூன்று அல்லது நான்கு முறை பெரிய ஆபத்துக்களில் சிக்கியிருக்கிறோம். முதலாவதாக, கிறிஸ்தீனாளும், அவளது மக்களும் இரக்கமும் இரண்டு முரடர்களால் தாக்கப்பட்டு, உயிரிழக்க நேரிடுமோ என்ற பீதிக்குள்ளாக்கப் பட்டார்கள். பிறகு இரத்த வெறியன், அழிம்பன், நன்மை கொல்லி என்ற அரக்கர்களால் நாங்கள் தாக்கப்பட்டோம். எப்படியென்று சொல்கிறேன் கேளுங்கள். காயு என்பவரின் விடுதியில் சில காலம் தங்கியிருந்த பிறகு, பயணிகளுக்கு இடையூறாக இருக்கும் ஒருவன் அருகேயிருப்பதாகக் கேள்விப்பட்டு ஆயுதம் ஏந்தியவர்களாக அவனை எதிர்த்துச் சென்றோம். அவனுடைய இருப்பிடத்தை அறிந்த காயு எங்களை அங்கே இட்டுச் சென்றார். அவனது குகையைக் கண்டவுடன் நாங்கள் புத்துணர்வு பெற்றவர்களாக முன்னேறினோம். அங்கே அவன் இதோ இந்த எளியவரான மென்னெஞ்சனைப் பிடித்து அவரைக் கொன்று தின்ன முயன்றுகொண்டிருந்தான். எங்களைக் கண்டவுடன் மேலும் இரை கிடைத்தது என்ற எண்ணத்தில் மென்னெஞ்சனை அப்படியே குகையில் விட்டுவிட்டு எங்களை நோக்கி வந்தான். அவனோடு நாங்கள் கடுமையாகப் போரிட்டோம். இறுதியில் அவன் கீழே தள்ளப்பட்டான். அவன் தலை வெட்டப்பட்டு இவ்வாறு பயங்கர நடவடிக்கைகளில் ஈடுபட்டுள்ளவர்களுக்கு எச்சரிப்பாக கம்பத்தில் தொங்க விடப்பட்டுள்ளது. நான் உண்மையைச் சொல்கிறேன் என்பதற்கு இதோ இந்த எளிய மனிதனே சாட்சி. இவரே சிங்கத்தின் வாயிலிருந்து மீட்கப்பட்ட ஆட்டுக்குட்டி” என்றான் துணிவுள்ளவன்.

“இது உண்மைதான். எந்த நிமிடமும் அவன் எனது எலும்புகளை முறித்துப் போடுவானோ என்று பயந்து கொண்டிருந்தேன். அப்போது துணிவுள்ளவனும் அவரது நண்பர்களும் ஆயுதம் ஏந்தியவர்களாக வந்து, அழிவிலிருந்து என்னைக் காப்பாற்றினார்கள்” என்று சாட்சி கூறினான் மென்னெஞ்சன்.

“மோட்சப் பயணம் செல்பவர்கள் இரண்டு காரியங்களைப் பெற்றிருப்பது அவசியமாயிருக்கிறது. அவர்கள் மனத் துணிவு பெற்றவர்களாகவும் பாவக்கறையற்ற வாழ்க்கை வாழுகிறவர்களாகவும் இருக்க வேண்டும். அவர்களிடம் துணிவு இல்லையென்றால் வழியில் எதிர்ப்படும் சோதனைகளைச் சமாளிக்க முடியாது. அவர்கள் விருப்பப்படி வாழ்கிறவர்களாக இருந்தால் பயணிகளின் நற்பெயருக்கே இழுக்கு ஏற்படுத்துகிறார்கள்” என்றார் பரிசுத்தவான்.

“நான் கொடுக்கும் எச்சரிப்பு ஒருவேளை உங்களுக்கு தேவையில்லாமல் இருக்கலாம். ஆனால் இவ்வாறு பயணமாகச் செல்பவர்களில் அநேகர் தாங்கள் இந்த உலகத்திற்கு அந்நியர்களும், பரதேசிகளுமாக இருக்கிறார்கள் என்பதை தங்கள் சாட்சி வாழ்க்கையின் மூலம் வெளிப்படுத்துவதற்குப் பதிலாக தாங்கள் இந்தப் பயணத்துக்கே அந்நியர்கள் என்பதைத்தான் தங்கள் நடவடிக்கைகளின்மூலம் வெளிப்படுத்துகிறார்கள்” என்றார் தூயர்நேசன்.

“அது உண்மைதான். அவர்களில் பயணிகளுக்குரிய குணநலன்கள் காணப்படுவதில்லை. பயணிகளுக்குத் தேவையான மனத்துணிவும் அவர்களிடம் இல்லை. நேர்கொண்ட நடையில்லாமல் தாறுமாறாக நடக்கிறார்கள். அவர்கள் ஆண்டவரை வெட்கப்படுத்தும்படி கிழிச்சலும், கந்தையுமான ஆடையணிந்தவர்களாகக் காணப்படுகிறார்கள்” என்றார் பொய்சொல்லத் துணியான்.

“இத்தகைய காரியங்களைக் குறித்து அவர்கள் நிச்சயம் மனம் வருந்த வேண்டும். இந்தக் கறைகள், அசுத்தங்களிலிருந்து அவர்களது பாதை சுத்திகரிக்கப்பட்டாலன்றி, பயணிகளுக்கு அருளப்படும் கிருபையை அவர்கள் பெறவும் முடியாது; அவர்களது மோட்சப் பயண வாஞ்சை நிறைவேறாது” என்று கூறினார் மெய்மனஸ்தாபன்.

இரவு உணவு வரும்வரை அவர்கள் இவ்வாறு பேசியபடியே நேரத்தைக் கழித்தார்கள். திருப்திகரமாக உணவைச் சாப்பிட்ட பிறகு, உடற்களைப்பு தீர ஓய்வெடுக்கச் சென்றார்கள்.

பயணிகள் நீண்ட நாள்களாக மினாசோனின் வீட்டில் தங்கியிருந்தவர்கள். அவர் தனது மகள் கிருபையைக் கிறிஸ்தீனாளின் மகனான சாமுவேலுக்கும், மற்றொரு மகள் மார்த்தாளை யோசேப்புக்கும் மணமுடித்து வைத்தார்.

முன்பு காணப்பட்டதுபோன்ற அமளிகளற்று ஓர் அமைதியான பட்டணமாக மாயாபுரி விளங்கியதால் பயணிகளால் நீண்ட காலம் அங்கே தங்க முடிந்தது! அந்த நகரிலிருந்த அநேக நல்ல மனிதர்களோடு பயணிகளுக்குப் பழக்கம் ஏற்பட்டது. தங்களால் முடிந்த ஊழியத்தை அவர்களுக்குச் செய்தார்கள். தனது குணத்துக்கேற்றபடி இரக்கம் ஏழைகளுக்காக கடினமாக உழைத்தாள்; பசி தீர்ந்த அவர்களின் வயிறும், குளிர் தீர்ந்த முதுகும் அவளை வாழ்த்திப் போற்றின. ஊழியத்திற்கே ஓர் அணிகலனாக அவள் விளங்கினாள். இவள் மட்டுமன்றி கிருபை, பெபேயாள், மார்த்தாள் இவர்களும்

நற்குணசாலிகளாக விளங்கினார்கள். அவர்களும் இந்த இடத்தில் சிறந்த ஊழியங்களைச் செய்தார்கள். அவர்கள் அனைவரும் கனிதரக்கூடியவர்களாக இருந்தபடியால், கிறிஸ்தியானின் பெயர் இன்னுமதிகமாகப் பரவத் துவங்கியது.

23. வலுசர்ப்பம் அளித்த தொல்லை!

பயணிகள் இவ்வாறு அந்த நகரில் தங்கிவந்த நாள்களில், அருகிலிருந்த காட்டிலிருந்து தீய மிருகம் ஒன்று நகரத்தினுள் நுழைந்து அநேகரைக் கொன்றுபோட்டது. அது குழந்தைகளைத் தூக்கிச்சென்று தன் குட்டிகள் சாப்பிடும் தீய பாலை இவர்களும் சாப்பிடும்படி பழக்குவித்தது! இந்தத் தீய மிருகம் வரும் ஓசையைக் கேட்டாலே நகர மக்கள் அனைவரும் ஓடி ஒளிந்துகொண்டபடியால், எவராலும் அதை எதிர்த்து நிற்க முடியாமல் போயிற்று.

இந்தப் பூமியில் காணப்படும் எந்த மிருகத்தின் தோற்றத்தையும் அந்தத் தீய மிருகம் பெற்றிருக்கவில்லை. வலுசர்ப்பத்தின் உடல் அதற்கு இருந்தது. ஏழு தலைகளும், பத்து கொம்புகளும் அதற்கு இருந்தது. அது சிறு பிள்ளைகளைக் கெடுத்து வந்தாலும் அது ஒரு பெண்ணின் (வெளி. 17:3) ஆளுகையின்கீழ் இருந்தது. இந்தத் தீய மிருகம் மனிதர்களுக்கு அநேக நிபந்தனைகளை விதித்தது. தங்கள் ஆத்துமாவைவிட தங்கள் ஜீவனை அதிகமாக நேசித்தவர்கள் இந்த நிபந்தனைகளை ஏற்றுக்கொண்டார்கள். அவனுடைய ஆளுகைக்கு உட்பட்டார்கள்.

இந்த வலுசர்ப்பத்தின் பிடியிலிருந்து நகர மக்களைக் காப்பாற்றுவதற்கு என்ன செய்யலாம் என்று துணிவுள்ளவனும் மினாசோனின் வீட்டில் பயணிகளைச் சந்திக்க வந்தவர்களும் ஒன்றுகூடி ஆலோசித்து, ஓர் உடன்படிக்கை பண்ணிக் கொண்டார்கள்.

துணிவுள்ளவன், நொறுங்குண்டநெஞ்சன், பரிசுத்தவான், பொய்யறியான், மெய்மனஸ்தாபன் இவர்கள் தங்கள் ஆயுதங்களை ஏந்தியவர்களாக அந்த மிருகத்தைத் தேடிச் சென்றார்கள். இவர்களைக் கண்டவுடன் அந்தத் தீய மிருகம் கடுங்கோபம் கொண்டது; அவர்களை அலட்சியமாகப் பார்த்தது. ஆனால் அவர்கள் போரில் வல்லவர்களாக இருந்தபடியால், துணிவோடு அந்த மிருகத்தைத்தாக்கி, அதைப் பின்வாங்கச் செய்தார்கள். படுகாயமுற்ற அந்த மிருகம் தன் ஒளிப்பிடத்தில் போய் பதுங்கிக்கொண்டது. அவர்கள் மீண்டும் மினாசோனின் வீட்டுக்கு வந்துசேர்ந்தார்கள்.

சில குறிப்பிட்ட பருவங்களில் மட்டும் இந்த மிருகம் வெளியே வந்து பிள்ளைகளைத் தூக்கிச் செல்லும் வழக்கம் உண்டு. இந்தப் பருவங்களில் நமது வீரர்கள் விழிப்புடனிருந்து, அதைத் தாக்கி ஓடச்செய்வார்கள். இத்தகைய தாக்குதல்களில் அந்த மிருகம் முடமாகிவிட்டது. முன்புபோல அந்த மிருகத்தால் நகரத்தின் பிள்ளைகளைத் தூக்கிச் செல்ல முடியவில்லை; தான் பெற்ற காயங்களினால் அந்த மிருகம் இறந்துவிடும் என்று பலரும் எதிர்பார்த்தார்கள்.

இதனால் துணிவுள்ளவன் மற்றும் அவரது உடன் ஊழியர்களின் புகழ் நகரமெங்கும் பரவியது! நகரைச் சேர்ந்த அநேகர் தங்கள் நடத்தைகளை மாற்ற முன்வராவிட்டாலும்கூட, இவர்களை மதித்து வந்தார்கள். எனவே இந்த நகரத்தில் பயணிகள் அதிகமாகத் துன்புறுத்தப்படவில்லை. தீய மனிதர் சிலரும் இருக்கத்தான் செய்தார்கள்; இவர்கள் அறிவற்ற மிருகம்போலவே காணப்பட்டார்கள். இவர்களை மோட்சப் பயணிகள் மதிக்கவுமில்லை; அவர்களது தீரச் செயல்களைப் பற்றி அக்கறை காட்டவுமில்லை.

பயணிகள் தங்கள் மோட்சப் பயணத்தைத் தொடரும் வேளையும் வந்தது; அவர்கள் அதற்கான ஆயத்தத்தைத் செய்தார்கள். தங்கள் நண்பர்களை அழைத்து அவர்களோடு அளவளாவினார்கள். தங்களை அரசரின் பாதுகாப்புக்குள் முழுமையாக ஒப்படைக்கும்படி ஜெபித்தார்கள். பெலவீனருக்கும், பலமுள்ளவர்களுக்கும், பெண்களுக்கும், ஆண்களுக்கும் தேவையான உணவு வகைகளை அவர்கள் சேகரித்துக் கொண்டார்கள்.

இவ்வாறு அவர்கள் மீண்டும் தங்கள் பயணத்தைத் தொடர்ந்தார்கள். தங்களால் முடிந்த தூரம்வரை அவர்களது நண்பர்கள் பயணிகளுக்குத் துணையாகச் சென்றார்கள். மறுபடியும் அவர்களை அரசரின் பாதுகாப்பில் ஒப்படைத்து விட்டுத் திரும்பிச் சென்றார்கள்.

24. மாயாபுரியைவிட்டுப் பயணம் செல்லுதல்

துணிவுள்ளவன் முன்னால் செல்ல பயணிகள் அவரைப் பின்பற்றிச் சென்றார்கள். பெண்களும், பையன்களும் பெலவீனர்களாக இருந்தபடியால், தங்களால் முடிந்தமட்டும் நடந்துசென்றார்கள். அவர்களால் துரிதமாக நடக்க முடியாததைக் கண்டு மென்னெஞ்சனும், ஊனனும்கூட அவர்கள்மேல் அனுதாபப்பட்டார்கள்.

அவர்களது நகரத்து நண்பர்கள் அவர்களை வாழ்த்தி விடைபெற்றுச் சென்ற பின்னர், வெகு விரைவிலேயே உண்மையானவன் கொல்லப்பட்ட இடத்துக்கு வந்து சேர்ந்தார்கள். இங்கே அவர்கள் சற்று நேரம் நின்று, உண்மை யானவன் தனது சிலுவைடைச் சுமக்க அவனுக்கு வல்லமை யளித்த ஆண்டவரைத் துதித்தார்கள். அவன் இவ்வாறு தனது விசுவாசத்திற்காக துன்பங்களைச் சகித்ததினால் அந்த நகரத்தில் அநேக நன்மைகள் உண்டாகியிருந்தது என்பதை அவர்கள் உணர்ந்திருந்தார்கள்.

அவர்கள் கிறிஸ்தியான், உண்மையானவன் இவர்களைப் பற்றியும், உண்மையானவன் மரித்தபிறகு நன்னம்பிக்கை எவ்வாறு கிறிஸ்தியானைச் சேர்ந்து கொண்டான் என்பதைப்பற்றியும் பேசியபடியே அவர்கள் தொடர்ந்து நடந்து சென்றார்கள்.

அவர்கள் **செல்வமலை** என்ற இடத்துக்கு வந்து சேர்ந்தார்கள். இங்கேதான் தேமாசைத் தன் பயணத்தைக் கைவிடச் செய்த **வெள்ளிக்கேணி** உள்ளது. சிலர் நினைத்ததுபோல **பக்கவழி** என்பவன் விழுந்து மரித்ததும் அந்தச் சுரங்கம்தான் என்று கூறப்படுகிறது. இவர்கள் அதைப்பற்றித் தியானித்தபடி சற்று நேரம் நின்றுகொண்டிருந்தார்கள் செல்வமலைக்கு எதிராக, சோதோமுக்கும் அதன் பாழான கடலுக்கும் முன்பாக நின்றுகொண்டிருந்த உப்புத் தூணுக்கு அருகே வந்தவுடன், கிறிஸ்தியான் முன்னர் வியப்படைந்து நின்றது போலவே, அறிவிற் சிறந்த ஞானிகள் பலரும்கூட இந்த இடத்தில் பண ஆசையால் பின்வாங்கிப் போகிறார்களே என்று நினைத்து, வியப்படைந்து நின்றார்கள். ஆனாலும்கூட தங்கள் மடத்தனமான கண்களினால் இந்த எச்சரிப்பைக் கண்கூடாகக் கண்டும் பலர் மற்றவர்களுக்கு நேர்ந்த அழிவைக் கண்ட பின்னரும் இதன் ஆபத்தை உணர்ந்து கொள்ளாமல் இருக்கிறார்களே என்றும் நினைத்தார்கள்.

25. பயணிகள் தேவநதியின் அருகில் வந்துசேருதல்

மகிழ்ச்சி மலையின் இந்தப் புறத்திலிருந்து ஆற்றங்கரையில் பயணிகள் வந்துசேருவதை நான் என் கனவில் கண்டேன். இந்த ஆற்றின் இரு கரையிலும் அற்புதமான மரங்கள் வளர்ந்து நின்றன. இந்த மரத்தின் இலைகளை உட்கொள்ளுவது உடலுக்கு மிகவும் நல்லது. ஆண்டு முழுவதும் பச்சைப் பசேலென்ற புல்வெளிகள் காணப்படும் பகுதி அது. இங்கே எவரும் மகிழ்ச்சியுடன் இளைப்பாற முடியும்.

இந்த நதியின் கரையிலிருந்து பசும் புல்வெளியில் ஆடுகள் தங்கும் கொட்டில்கள் கட்டப்பட்டிருந்தன. பயணமாகச்

செல்லும் பெண்களின் குழந்தைகளாகிய ஆட்டுக்குட்டிகள் தங்கி இளைப்பாறுவதற்கான கொட்டில்களும் காணப்பட்டன. ஆட்டுக்குட்டிகளின்மேல் அன்பு காட்டி, அவர்களைத் தோளின்மேல்தூக்கி, அரவணைத்து வழிநடத்தும் ஒருவரின் பொறுப்பில் அவர்கள் விடப்படுகின்றனர். தனது மருமக்கள்மார் தங்கள் சிறுபிள்ளைகளை இங்கே ஒப்படைத்து, அவர்கள் எவரும் பின்னிட்டுப் போகாதபடி இங்கேயே தங்கி ஆவிக்குரிய உணவைப் பெறுவதற்காக விடும்படி கிறிஸ்தீனாள் கூறினாள். இவர்களில் எவரேனும் வழிதவறிவிட்டாலும், அந்த அன்பான நபர் அவர்களை மீட்டுக் கொண்டு வருவார். அவர் காணாமற் போனதைத் தேடி, துரத்துண்டதைத் திரும்பக் கொண்டுவந்து எலும்பு முறிந்ததைக் காயங்கட்டி, நசல்கொண்டதைத் திடப்படுத்துவார் (எசே. 34:16) இங்கே அவர்களுக்கு உணவுக்கோ, நீருக்கோ, உடைக்கோ எந்தவிதக் குறையும் இருக்காது.

இங்கே அவர்கள் திருடர்களிடமிருந்தும், கொள்ளைக்காரர்களிடமிருந்தும் காக்கப்படுவார்கள். தனது பொறுப்பில் விடப்பட்ட எவரேனும் அழியக்கூடுமானால், தன் உயிரைக் கொடுத்தும் அவர்களைக் காப்பாற்றுவதற்கு அந்த அன்பான நபர் சித்தமுள்ளவராக இருக்கிறார். இங்கே அவர்கள் நல்ல போஷிப்புடனும், கண்டிப்புடனும் வளர்க்கப்படுவார்கள் என்பதில் ஐயமில்லை. இவர்கள் சரியான பாதையில் நடக்கும்படி வழிநடத்தப்படுவார்கள். இப்படிப்பட்ட வழிநடத்துதலை எளிதாகப் பெற முடியாது என்பதை நாம் அறிவோம் அல்லவா? இங்கே இனிமையான நீரோடைகளும், பசும்புல்வெளிகளும், வண்ணவண்ண மலர்களும், பல்வேறு மரங்களும், இனிமையான பழங்களும் காணப்படுவதை நாம் அறிவோம்.

இந்தப் பழங்கள் மத்தேயு தின்று உடல்நலக் குறைவுற்ற பெயல்செபூலின் தோட்டத்துப் பழங்களைப் போன்றவை அல்ல; இந்தப் பழங்கள் உடல்நலமற்றவர்களுக்கு ஆரோக்கியத்தையும், உடல் நலத்தோடிருப்பவர்களுக்கு மேலும் அதிக பலத்தையும் கொடுக்கக்கூடியவை. எனவே அவர்கள் தங்கள் பிள்ளைகளை அங்கே ஒப்படைத்துவிட்டுச் செல்லச் சம்மதித்தார்கள். இளம் சிறுவர்களுக்கும், அனாதைச் சிறுவர்களுக்குமான மருத்துவமனை ஒன்றும் அங்கே நடத்தப்பட்டு வந்தது. இதற்கான செலவு முழுவதும் அரசரால் சந்திக்கப்பட்டு வந்தபடியாலும், அவர்கள் முழுமனதோடு இதற்குச் சம்மதித்தார்கள்.

பயணிகள் மேலும் தொடர்ந்து சென்றார்கள். புல்வெளிப் பாதை என்ற இடத்துக்கு வந்து சேர்ந்தார்கள். இங்கேதான் கிறிஸ்தியானும், நன்னம்பிக்கையும் தவறான பாதையில் காலடி

எடுத்துவைத்து, வீண்நம்பிக்கை என்ற அரக்கனின் கைகளில் பிடிபட்டு, பின்னர் சந்தேகக் கோட்டைச் சிறையில் அடைக்கப் பட்டார்கள்.

பயணிகள் இங்கே அமர்ந்து என்னசெய்வதென்று ஆலோசித்தார்கள். அவர்கள் இப்போது முழுபலத்தைப் பெற்றவர்களாக இருந்தபடியாலும், துணிவுள்ளவன் அவர்களுக்கு வழிகாட்டியாக உடன் வந்திருக்கிறபடியாலும், அவர்கள் ஏன் சந்தேகக் கோட்டைக்குச் சென்று அரக்கனை அழித்து, எவரேனும் சிறைப்பட்டிருந்தால் அவர்களை விடுதலை செய்யக்கூடாதா என்று ஆலோசித்தார்கள்.

26. வீண்நம்பிக்கை என்ற அரக்கனோடு போரிடுதல்

பயணிகள் ஒவ்வொருவரும் ஒவ்வொருவித யோசனையைக் கூறினார்கள். பரிசுத்தமற்ற பூமியில் கால்வைப்பது நல்லதுதானா என்று ஒருவன் கேள்வியெழுப்பினான். நோக்கம் நல்ல நோக்கமென்றால் அப்படிச் செல்வதில் தவறில்லை என்று மற்றொருவன் வாதிட்டான்.

அப்போது துணிவுள்ளவன், "உங்களுடைய விவாதத்தில் எது சரியானது என்ற முடிவுக்கு வர நான் விரும்பாவிட்டாலும், பாவத்தை எதிர்ப்பதும், தீங்கை மேற்கொள்ளுவதும், விசுவாசத்திற்காக நல்ல போராட்டத்தைப் போராடுவதும் என்னுடைய பொறுப்பு என்று கூறப்பட்டுள்ளதே? வீண் நம்பிக்கை என்ற இந்த அரக்கனோடு போரிடுவதும் என் கடமைதானே? எனவே நான் இந்த அரக்கனை அழித்து, அவனுடைய கோட்டையைத் தகர்க்கப் போகிறேன். யார் என்னுடன் வரப்போகிறீர்கள்?" என்று கேட்டான்.

"நான் வருகிறேன்" என்று கூறினார் நேர்மையானவன். கிறிஸ்தீனாளின் நான்கு மக்களான மத்தேயு, சாமுவேல், யாக்கோபு, யோசேப்பு இவர்களும் முன்வந்தார்கள். இவர்கள் பலசாலியான வாலிபர்களாக இருந்தார்கள்.

எனவே அவர்கள் பெண்களைச் சாலையோரத்திலேயே விட்டுச் சென்றார்கள். பெண்களுக்குப் பாதுகாப்பாக மென்னெஞ்சனும், ஊனனும் அங்கேயே இருந்தார்கள். வீண்நம்பிக்கை அரசருடைய பாதையிலேயே இருப்பதால் ஒரு சிறுபையன்கூட அவர்களை வழிநடத்திச் செல்லமுடியும்.

துணிவுள்ளவனும், நேர்மையானவனும், அந்த நான்கு வாலிபர்களும் வீண்நம்பிக்கை என்ற அரக்கனைத் தேடி சந்தேகக் கோட்டைக்குச் சென்றார்கள். கோட்டைக் கதவுக்கு அருகே வந்தவுடன், அவர்கள் கதவைப் படபடவென்று

தட்டினார்கள். அரக்கன் கதவருகே வந்தான்; அவன் மனைவி அவிசுவாசம் அவனுக்குப் பின்னால் வந்தாள்.

"யார் அது? வீண்நம்பிக்கை என்ற இந்த அரக்கனைப்பற்றிக் கொஞ்சமும் பயப்படாமல் கதவைத் தட்டுவது யார்? என்று அவன் கோபமாகக் கேட்டான்.

"நான்தான் துணிவுள்ளவன். பரலோக நாட்டு அரசருக்காக, பயணிகளை அவருடைய இடத்துக்கு வழி நடத்திச்செல்லுபவன். உடனடியாகக் கதவைத் திறக்கும்படி நான் கட்டளையிடுகிறேன். நான் உன் தலையைக் கொய்து, இந்தச் சந்தேகக் கோட்டையைத் தரைமட்டமாக்கவே வந்திருக்கிறேன். என்னோடு போர்புரியத் தயாராகு" என்று கத்தினான் துணிவுள்ளவன்.

வீண்நம்பிக்கை ஓர் அரக்கனானபடியால், எந்த மனிதனும் தன்னை மேற்கொள்ள முடியாது என்று நினைத்திருந்தான்.

"தேவதூதர்களைக்கூட வென்றவன் நான்? என்னை இந்த துணிவுள்ளவன் என்ன செய்துவிடமுடியும்?" என்று எண்ணிய வீண்நம்பிக்கை ஆயுதம் தாங்கியவனாக வெளியே வந்தான். அவன் தலையில் இரும்புக் கவசம் அணிந்திருந்தான்; அக்கினி மார்ப்பதக்கத்தை மாட்டியிருந்தான்; இரும்பாலான காலணிகளை அணிந்திருந்தான்; கையில் ஒரு பெரிய இரும்புத்தடியைப் பிடித்திருந்தான்.

உடனடியாக அந்த ஆறு மனிதர்களும் அவனைச் சூழ்ந்து கொண்டார்கள். முன்னும் பின்னுமாக அவனைத் தாக்கினார்கள். அவனுக்கு உதவியாக அவிசுவாசம் ஓடி வந்தான். நேர்மையானவன் ஒரே அடியில் அவனை வெட்டி வீழ்த்தினான்.

தங்கள் உயிரைப்பற்றிக் கவலைப்படாமல் அந்த ஆறு பேரும் போரிட்டார்கள். அரக்கனைத் தரையில் வீழ்த்தினார்கள். ஆனால் அவனது உயிர் உடனடியாகப் பிரிவதுபோலத் தோன்றவில்லை. பூனையைப்போல அவன் பல உயிர் கொண்டவனாக இருந்தான் என்று கூடக் கூறலாம். ஆனால் துணிவுள்ளவனோ அவனை விடவில்லை. இறுதியில் அவன் அந்த அரக்கனின் தலையைத் துண்டித்துவிட்டான்.

அதன்பிறகு அவர்கள் சந்தேகக் கோட்டையைத் தகர்க்கும் பணியில் ஈடுபட்டார்கள். அரக்கன் மடிந்துபோய்விட்டபடியால் அவர்களைத் தடுப்பதற்கு ஒருவருமில்லை. அந்தக் கோட்டையைத் தகர்த்து முடிக்க ஏழு நாள்கள் ஆயின! அங்கே சிறை வைக்கப்பட்டிருந்த பயணிகளாகிய **நம்பிக்கையிழந்தவன்** என்பவரும் அவரது மகளாகிய **பயந்தவளும்** விடுவிக்கப் பட்டார்கள். நம்பிக்கையிழந்தவன் பசிக் கொடுமையால்

கிட்டத்தட்ட மரிக்கும் நிலையிலிருந்தார். இவர்கள் இருவர் மட்டுமே அங்கே உயிர் பிழைத்த நிலையில் இருந்தார்கள். மற்றபடி நிறைய சடலங்கள் முற்றத்திலும், மூலை முடுக்குகளிலும் இறைந்துகிடந்தன. பாதாளச் சிறையில் மரித்தவர்களின் எலும்புக்கூடுகள் காணப்பட்டன.

சந்தேகக் கோட்டையைத் தகர்த்து முடித்தவுடன், துணிவுள்ளவனும் மற்றவர்களும் நம்பிக்கையிழந்தவனையும், பயந்தவளையும் தங்கள் பாதுகாப்பில் ஏற்றுக்கொண்டார்கள். அவர்கள் சந்தேகக் கோட்டையில் அரக்கன் வீண்நம்பிக்கையால் சிறைவைக்கப்பட்டிருந்தாலும் நேர்மையுள்ளவர்களாக இருந்தார்கள். நமது வீரர்கள் அந்த அரக்கனின் உடலின்மீது கற்களைக் குவித்துவைத்து, அவன் தலையை மட்டும் கையில் எடுத்துக்கொண்டுவந்து தாங்கள் வெற்றி பெற்றுவிட்டோம் என்பதற்கு அடையாளமாக அதை மற்ற பயணிகளிடம் காட்டினார்கள். அது அரக்கன் வீண்நம்பிக்கையின் தலை என்பதைக் கண்டவுடன் மென்னெஞ்சனும், ஊனனும் மகிழ்ச்சிக் கூத்தாடினார்கள். அப்போது கிறிஸ்தீனாள் கின்னரத்தை இசைத்தாள்; அவளது மருமகள் நாதசுவரத்தை இசைத்தாள், இவர்களது இசைக்கேற்ப ஊனன் நடனமாடினான். நம்பிக்கையிழந்தவனின் மகளாகிய பயந்தவளின் கையைப் பிடித்தவாறு, நடனமாடியபடியே அவன் நடந்து சென்றான். ஒரு கையில் ஊன்றுகோலை ஏந்தியபடியே நடந்துசெல்லும் அவனால் முழுமையாக நடனமாட முடியவில்லையென்றாலும், ஒற்றைக்காலால் அவன் நன்றாக நடனமாடினான் என்றுதான் கூறவேண்டும். பயந்தவளும் இசைக்கேற்றபடி நன்றாகவே நடனமாடினாள்.

ஆனால் நம்பிக்கையிழந்தவனுக்கோ இசையில் நாட்டம் செல்லவில்லை. அவன் பசியால் வாடியபடியால் உணவு கிடைக்குமா என்றுதான் ஏங்கிக்கொண்டிருந்தான். எனவே அவன் உடனடியாகக் குடிப்பதற்காக கொஞ்சம் திராட்ச ரசத்தைக் கொடுத்த கிறிஸ்தீனாள் அவனுக்கு உணவை ஆயத்தம் பண்ணினாள். உணவருந்தியபின் அந்த வயோதிபன் களைப்பு நீங்கி உற்சாகம் கொண்டான்.

இந்த காரியங்கள் முடிந்தவுடன் துணிவுள்ளவன் அரக்கனின் தலையைச் சாலையோரத்தில் ஓர் உயர்ந்த கம்பத்தில் ஏற்றிவைப்பதை நான் என் கனவில் கண்டேன். இந்த இடத்துக்கு அருகேதான் பயணிகள் இந்தப் பகுதியில் நுழைய வேண்டாம் என்ற எச்சரிப்புடன் கிறிஸ்தியான் எழுப்பியிருந்த தூணும் காணப்பட்டது.

அரக்கனின் தலையைக் கழுவேற்றியபின் கம்பத்தினடியில் ஒரு பளிங்குக் கல்லில் துணிவுள்ளவன் இவ்வாறு எழுதி வைத்தான்:

பண்டைப் பயணிகள் பயந்த
அரக்கனின் தலைதான் இது!
விழுந்தது அவன் கோட்டை
வீழ்ந்தாள் மனைவி அவிசுவாசம்
வீழ்த்திய வீரன் துணிவுள்ளவன்
காப்பாற்றினான் அவன்தானுமே
நம்பிக்கையிழந்தவன் அவன் பெண்
பயந்தவள் இருவரையுமே
சந்தேகப்படும் பயணி எவனும்
கண்டு ஐயம் நீங்கவே-
அரக்கன் ஒழிந்தான் எனவே
பயமின்றி தொடர்ந்து செல்க!

இவ்வாறு இந்தப் பயணிகள் வீரத்தீரத்துடன் சந்தேகக் கோட்டையைத் தகர்த்து, அரக்கன் வீண்நம்பிக்கையையும் அழித்தபிறகு, தங்கள் பயணத்தைத் தொடர்ந்தார்கள். கிறிஸ்தியானும் நன்னம்பிக்கையும் தங்கிக் களித்திருந்த மகிழ்ச்சி மலைக்கு வந்து சேர்ந்தார்கள்.

27. மகிழ்ச்சி மலையில் பயணிகள்

பயணிகள் அந்த இடத்தை அடைந்தபோது, அங்குள்ள மேய்ப்பர்கள் முன்பு கிறிஸ்தியானை வரவேற்றதுபோல, இப்போது இவர்களையும் வரவேற்றார்கள்.

மேய்ப்பர்கள் துணிவுள்ளவனை ஏற்கெனவே அறிந்திருந்தார்கள். அவனுக்குப் பின்னால் நிறையப் பேர் வருவதைக் கண்ட அவர்கள், "ஐயா, அநேக பரிசுத்தவான்கள் உடன்வருவதுபோலத் தெரிகிறதே! எங்கேயிருந்து அவர்களை அழைத்து வருகிறீர்கள்?" என்று அவனிடம் கேட்டார்கள்.

உடனே துணிவுள்ளவன் இவ்வாறு பதில் கூறினான்:

"முதலில் இதோ-
கிறிஸ்தீனாளும் அவள் கூட்டமும்
அவள் மகன்கள்,
மகன்களின் மனைவிகள்!
பாவத்தைவிட்டு
கிருபையை நோக்கிச் செல்கின்றனர்!

அடுத்து இதோ-
முதியவர் நேர்மையானவன்!
வந்தான் மென்னெஞ்சனும்
துணிவுடன் - துணையாகவே
ஊனனும் வந்தான்
விடாமல் அழைத்து வந்தேனே!
உயிர்பிழைத்த நம்பிக்கையிழந்தோன்
அவன் மகள் பயந்தவள்
இட்டுவந்தேன் இவர்களையுமே
இருக்க இடமுண்டா அன்பர்களே?"

என்று கேட்டான் துணிவுள்ளவன்.

"எங்களுக்கு மிகவும் விருப்பமான கூட்டத்தாரைத்தான் கூட்டிவந்திருக்கிறீர்கள். பெலவீனருக்கு மட்டுமன்றி பலவான்களுக்கும் தேவையானவற்றை நாங்கள் அளிப்போம். இவர்களில் எளியவர்கள்மீது எங்கள் இளவரசர் அக்கறையுள்ளவராக இருக்கிறார். எனவே சிறியவன் (மத். 25:40) என்று எவரையும் நாங்கள் கைவிடுவதில்லை" என்று கூறிய அவர்கள் முன்னால் சென்று மகிழ்ச்சி மலை அரண்மனையின் கதவுகளைத் திறந்தார்கள்.

"வாரும் மென்னெஞ்சனே, உள்ளே வாரும். ஊனனே, கவனமாய் உள்ளே வாரும். நம்பிக்கையிழந்தவரே, அவரின் அன்பு மகள் பயந்தவளே, தயங்காமல் உள்ளே வாருங்கள்" என்று அவர்களை வரவேற்ற மேய்ப்பர்கள் துணிவுள்ளவனைத் திரும்பிப்பார்த்து, "இவர்கள் பின்வாங்கிச் செல்லக்கூடியவர்களாகையால் இவர்களைப் பெயர்சொல்லி அழைத்தோம். ஆனால் நீரும் மற்றவர்களும் பலமுள்ளவர்களாக இருக்கிறீர்கள். நீங்கள் துணிவோடு உள்ளே நுழையுங்கள்" என்று அழைத்தார்கள்.

"இன்று உங்கள் திருமுகங்களில் கிருபை பிரகாசிப்பதைக் காண்கிறேன். நீங்கள் மெய்யாகவே என் ஆண்டவரின் மேய்ப்பர்கள் தாம்! ஏனெனில் நீங்கள் இந்தப் பெலவீனர்களைப் புறக்கணித்துத் தள்ளவில்லை. மாறாக மலர்கொண்டு அவர்களை மணிமண்டபத்துக்குள் சேர்த்துக் கொண்டுள்ளீர்கள்!" என்று உணர்ச்சி பொங்கக் கூறினான் துணிவுள்ளவன்.

இவ்வாறு எளியவர்களும், பெலவீனர்களும் முன்னால் செல்ல, துணிவுள்ளவனும் மற்றவர்களும் பின்தொடர்ந்து அரண்மனையினுள் நுழைந்தார்கள்.

அவர்கள் எல்லாருமே வசதியாக அமர்ந்தவுடன், மேய்ப்பர்கள் பெலவீனமானவர்களிடம், "உங்களுக்குத்

தேவையானவை எவையெவை?'' என்று கேட்டார்கள். ஏனெனில் இந்த இடத்தில் பெலவீனர்களைப் பலப்படுத்தவும், ஒழுங்கற்றவர்களைச் சீர்படுத்தவும் அனைத்து முயற்சிகளும் எடுக்கப்பட்டு வந்தன. செரிப்பதற்கு எளிதான, அதே வேளையில் நாவுக்குச் சுவையும், உடலுக்கு பலமளிப்பதுமான உணவைத் தயாரித்து விருந்து படைத்தார்கள். உணவுண்டபின்னர் அவரவர்களுக்கு ஒதுக்கப்பட்ட இடத்தில் படுத்து ஓய்வெடுக்கும் படி சென்றார்கள்.

மறுநாள் காலை பயணிகள் புத்துணர்வு பெற்றவர்களாக எழுந்தார்கள். பயணிகள் மீண்டும் புறப்பட்டுச் செல்லுமுன்னர் அவர்களுக்கு அரிய பல காரியங்களைக் காட்டுவது மேய்ப்பர்களின் வழக்கமாக இருந்தது. அன்று மூடுபனியின்றி தெளிவாக இருந்தபடியால், பயணிகள் காலை உணவை உண்டு முடித்தபின்னர், பயணிகள் உயர்ந்த மலைமீது நின்றபடி பல காரியங்களையும் பார்க்கும்படி, மேய்ப்பர்கள் அவர்களை அழைத்துச் சென்றார்கள். முன்பு கிறிஸ்தியானுக்குச் சுட்டிக்காட்டிய பல காரியங்களையும் இவர்களுக்கும் காட்டினார்கள்.

பிறகு சில புதிய இடங்களுக்கும் இவர்களை அழைத்துச் சென்றார்கள். முதலில் பயணிகளை அற்புதமலைக்கு அழைத்துச் சென்றார்கள். அங்கே ஒருவன் தன் வாயின் வார்த்தைகளால் பெரிய மலைகளையும் புரட்டிப் போடுகிறதைக் கண்டார்கள்.

''இதற்குப் பொருள் என்ன?'' என்று பயணிகள் மேய்ப்பர்களிடம் கேட்டார்கள்.

"அவன்தான் **மகாகிருபை** என்பவரின் மகன். அவனது தகப்பனாரைப்பற்றி மோட்சப் பயண முதல் பாகத்தின் பதிவேடுகளில் படித்திருப்பீர்களே? எவ்வாறு விசுவாசத்தின் மூலம் தங்கள் சோதனைகளிலிருந்து விடுபடுவது என்பதுபற்றியும், விசுவாசத்தினால் எந்தவித கடினங்களைச் சந்திக்க வேண்டியிருக்கும் என்பது பற்றியும் பயணிகளுக்குப் போதனைகளைக் கொடுக்கவே அவன் இங்கேயிருக்கிறான்'' என்றார்கள் மேய்ப்பர்கள். அவன் இட்ட சத்தம், மலைகள் மேலும் கீழும் மாறிவிடுமோ என்று நினைக்க வைத்தது.

"ஆம், அவனை நான் அறிவேன். அவன் அநேகரிலும் மேலானவன்!" என்றான் துணிவுள்ளவன்.

அதன் பிறகு மேய்ப்பர்கள் பயணிகளை நிர்மலமலை என்ற இடத்துக்கு அழைத்துச் சென்றார்கள். இங்கே ஒருவன் தூய வெள்ளையாடை தரித்தவனாக நிற்பதையும் எதிராளி, துர்மனம்

என்ற இருவர் இடைவிடாமல் அவன் மீது அழுக்கை வாரியிறைப்பதையும் கண்டார்கள். ஆனால் அந்த அழுக்கு முதலாமவனின் ஆடைமீது ஒட்டாமல் கீழே விழுந்தது; அவனது ஆடையின் தூய்மை சற்றும் கெடவில்லை!

"இதன் பொருள் என்ன?" என்று பயணிகள் மேய்ப்பர்களிடம் கேட்டார்கள்.

"இவன் பெயர் **மாசில்லாமணி.** இவனது ஆடை இவனது பழுதில்லா வாழ்க்கையைச் சுட்டிக்காட்டுகிறது. அவனது நற்குணத்தை விரும்பாமல் பொறாமைப்படுகிறவர்கள் அவன்மீது அழுக்கை வாரியிறைக்கிறார்கள். ஆனால் அழுக்கு அவன் ஆடைமீது ஒட்டவில்லை. இந்த உலகில் மெய்யாகவே நிர்மலமான மனதுடன் வாழுபவர்களை எந்த அழுக்கும் பாதிக்காது" என்று விளக்கிக் கூறினான் ஒரு மேய்ப்பன்.

"இப்படிப்பட்டவர்களை அசுத்தப்படுத்தும்படி எவர் முயன்றாலும் அவர்களது முயற்சி வீணாகிவிடும். ஏனெனில் கொஞ்ச காலத்துக்குள் இத்தகைய தூயவர்களின் நீதியை வெளிச்சத்தைப் போலவும், அவர்களது நியாயத்தைப் பட்டப்பகலைப் போலவும் பிரகாசிக்கச் செய்வார்" என்று மேலும் கூறினான் அவன்.

அதன்பிறகு மேய்ப்பர்கள் பயணிகளைக் காருண்ய மலை என்ற இடத்துக்கு அழைத்துச் சென்றார்கள். அங்கே ஒருவனின் முன்னால் ஒரு பெரிய துணி மூட்டை வைக்கப்பட்டிருந்தது. அவன் அந்தத் துணிகளைக் கொண்டு சட்டை முதலிய உடுப்புக்கு என்று கிழித்து தனக்கு முன்னால் நின்றவர்களிடம் கொடுத்துக் கொண்டிருந்தான். என்றாலும் அவன் முன்னாலிருந்த துணி மூட்டையின் அளவு குறையவில்லை.

"இது எப்படி?" என்று பயணிகள் மேய்ப்பர்களிடம் கேட்டார்கள்.

"தனது உழைப்பின் பலனை ஏழைகளுக்குக் கொடுத்துதவுபவனுக்கு ஒருநாளும் குறைவு உண்டாகாது. எவன் தண்ணீர் பாய்ச்சுகிறானோ அவனுக்குத் தண்ணீர் பாய்ச்சப்படும். தீர்க்கதரிசிக்கு அந்த விதவை உணவு கொடுத்ததினாலே அவளுக்கு ஒருநாளும் பானையின் மாவு குறைந்து போகவில்லை அல்லவா?" என்றான் மேய்ப்பன்.

மேய்ப்பர்கள் அவர்களை வேறொரு இடத்துக்கு அழைத்துச் சென்றார்கள். அங்கே பித்தம் பிடித்தவன் என்பவனும் பைத்தியக்காரன் என்பவனும் ஓர் எத்தியோப்பியனை

எப்படியாவது வெண்மையாக்கிவிடவேண்டுமென்று, தேய்த்துக் குளிப்பாட்டிக் கொண்டிருப்பதைக் கண்டார்கள். எவ்வளவுதான் கழுவினாலும் அவன் கறுப்பு நிறம் மாறவில்லை.

''என்ன இது?'' என்று பயணிகள் மேய்ப்பர்களைக் கேட்டார்கள்.

"தீய மனிதர்களின் நிலைமை இதுதான். நற்பெயரைப் பெறவேண்டுமென்று அவர்கள் எவ்வளவுதான் முயன்றாலும் பின்னிலைமை முன்னிலும் மோசமாகத்தான் இருக்கும். பரிசேயர் மாய்மாலக்காரரின் நிலைமை இப்படித்தான்!" என்று கூறினார்கள் மேய்ப்பர்கள்.

அப்போது இரக்கம் கிறிஸ்தீனாளிடம் தனியாகச் சென்று, "அம்மா, நரகத்துக்குச் செல்லும் ஒற்றையடிப்பாதை என்று சொல்லப்படும் அந்த மலையிலுள்ள கெபியை நான் பார்க்க விரும்புகிறேன்" என்று மெதுவாகக் கூறினாள். கிறிஸ்தீனாள் அவளது விருப்பத்தை மேய்ப்பர்களிடம் தெரிவித்தாள்.

மேய்ப்பர்கள் பயணிகளை மலையின் பக்கத்திலிருந்த அந்த இடத்துக்கு அழைத்துச் சென்றார்கள். அந்தத் துவாரத்தின் கதவைத் திறந்துவிட்டு, நன்றாகக் கவனிக்கும்படி இரக்கத்திடம் கூறினார்கள்.

அப்போது உள்ளே ஒருவன் புலம்பிக் கொண்டிருந்தது அவள் காதில் விழுந்தது.

"என் தகப்பனுக்கு ஐயோ! சமாதானமும், ஜீவனுமுள்ள வழியை நான் தெரிந்துகொள்ளாமல் அவன் என் கால்களைத் தடுத்துப் போட்டானே!" என்று அவன் புலம்பினான்.

"எனது ஜீவனைக் காத்துக்கொள்வதற்காக நான் நார்நாராகக் கிழிக்கப்பட்டிருந்தாலும் நலமாயிருந்திருக்குமே! இப்போது நான் என் ஆத்துமாவை இழந்து விட்டேனே!" என்று மற்றொருவன் புலம்பினான்!

''எனக்கு மீண்டும் ஒருமுறை வாழ்வதற்கு வாய்ப்புக் கிடைக்குமானால் நான் இந்த இடத்திற்கு வருவதற்குப் பதிலாக, என்னையே ஒறுத்து வாழ்வேனே'' என்று மற்றொருவன் புலம்புவதைக் கேட்டாள் இரக்கம்.

இந்தப் பெண்ணின் காலடியில் தரையே நடுங்கிக் குலுங்குவதுபோலக் காணப்பட்டது. கிருபையும் பயத்தால் முகம் வெளிறினாள். நடுங்கியபடியே பயணிகளின் அருகே ஓடிவந்த அவள், ''இந்த இடத்திற்கு வராமல் மீட்கப்பட்டவர்கள்

உண்மையிலேயே ஆசீர்வதிக்கப்பட்டவர்கள்'' என்று முழு மனதுடன் கூறினாள்.

இந்தக் காட்சிகளையெல்லாம் சுட்டிக்காட்டிய பிறகு, மேய்ப்பர்கள் பயணிகளை மீண்டும் அரண்மனைக்கு அழைத்து வந்தார்கள். வீட்டில் உள்ளவற்றைக் கொண்டு விருந்து படைத்தார்கள்.

அங்கே தான் கண்ட ஒன்றைப் பெறவேண்டுமென்று இரக்கம் மிகவும் வாஞ்சித்தபடியால் அவள் சிந்தனை வயப்பட்டவளாக காணப்பட்டாள். அதைக் கேட்டுப் பெறவும் அவள் தயங்கினாள்.

"ஏனம்மா சோர்ந்துபோய்க் காணப்படுகிறாய்?'' என்று அவளுடைய மாமியார் அவளிடம் கேட்டாள்.

''சாப்பாட்டு அறையில் ஒரு கண்ணாடி மாட்டப் பட்டுள்ளது. அது எனக்குக் கிடைக்குமா என்று நான் மிகவும் விரும்புகிறேன். கிடைக்காவிட்டால் மனம் உடைந்துபோகும்'' என்றாள் இரக்கம்.

"நான் உன் விருப்பத்தை மேய்ப்பர்களிடம் தெரிவிக்கிறேன். அவர்கள் அதை உனக்குக் கொடுக்க மறுக்க மாட்டார்கள்'' என்று கூறினாள் கிறிஸ்தீனாள்.

''இப்படியெல்லாம் நான் ஆசைப்படுகிறேனே என்று அவர்கள் நினைத்துவிட்டால் என்ன ஆகிறது என்று நான் வெட்கப்படுகிறேன்'' என்று தயங்கினாள் இரக்கம்.

"இல்லை மகளே, இல்லை. இது வெட்கப்படக்கூடிய ஒரு காரியம் அல்ல. இத்தகைய ஒரு பொருளுக்காக வாஞ்சைப்படுவது நல்ல காரியம்தான்'' என்று கூறினாள் கிறிஸ்தீனாள்.

''அப்படியானால் அம்மா அந்த மேய்ப்பர்கள் அதை விற்பார்களா என்று கேட்டுப் பாருங்கள்'' என்றாள் இரக்கம்.

அந்தக் கண்ணாடி தனிச்சிறப்பு பெற்ற ஒரு கண்ணாடியாகும். அதில் நேரில் பார்க்கும்போது, பார்ப்பவனின் உருவத்தை அது தெளிவாகக் காட்டும். அந்தக் கண்ணாடியைச் சற்றுச் சாய்வாகப் பார்த்தால் பயணிகளின் இளவரசருடைய சாயலை அது காட்டும். இந்தக் கண்ணாடியில் பார்க்கும்போது, முள்முடி தரித்தவராக அவரைப் பார்த்திருப்பதாக சிலர் கூறியிருக்கிறார்கள். அதுமட்டுமன்றி, அவரது கரங்களிலும், கால்களிலும், விலாவிலும் உள்ள காயங்களின் தழும்புகளையும் அவர்கள் கண்டிருக்கிறார்கள். அவரைப் பார்க்கவேண்டுமென்று

எவர் விரும்பினாலும் அவரை அப்படியே தரிசிக்கலாம். அவரை ஜீவனுள்ளவராகவோ அல்லது சிலுவையில் மரித்தவராகவோ, அவரைப் பூமியில் இருப்பவராகவோ அல்லது பரலோகத்தில் இருப்பவராகவோ, அவரைத் தாழ்த்தப்பட்டவராகவோ அல்லது மேன்மையில் உயர்த்தப்பட்டவராகவோ, துன்பங்களைச் செய்ய வருகிறவராகவோ அல்லது ஆளுகைசெய்ய வருகிறவராகவோ இப்படி எந்த நிலையிலும் அவரைக் கண்டு மகிழலாம்.

அறிவு, அனுபவம், விழிப்பு மற்றும் உண்மை என்ற பெயர்களையுடைய அந்த மேய்ப்பர்களிடம் சென்ற கிறிஸ்தீனாள், "எனது மருமகள்மாரில் ஒரு பெண் மிகவும் சிந்தனைவயப்பட்டவள். இந்த வீட்டில் தான் கண்ட ஒரு பொருளைத் தான் பெறவேண்டுமென்று அவள் விரும்புகிறாள். நீங்கள் அதைக் கொடுக்க மறுத்தால் அவள் மனமுடைந்து போவாள்" என்றாள்.

"அவளைக் கூப்பிடு. உடனே கூப்பிடு. எங்களால் அவளுக்கு உதவக்கூடுமானால் நிச்சயம் உதவுவோம்" என்று கூறினான் **அனுபவம்** என்ற மேய்ப்பன்.

இரக்கம் அங்கே வரவழைக்கப்பட்டாள்.

"என்னம்மா இரக்கம் உனக்கு என்ன வேண்டும்?" என்று அவளிடம் கேட்டார்கள்!

நாணிக்கோணியபடியே இரக்கம் பேசத் துவங்கினாள்.

"சாப்பாட்டு அறையிலுள்ள அந்தப் பெரிய கண்ணாடியையே நான் பெற விரும்புகிறேன்" என்று தயங்கியபடியே கூறினாள் அவள்.

ஓடிச்சென்ற **உண்மை** அந்தக் கண்ணாடியை எடுத்துக்கொண்டு வந்தான். முழுமனதோடு மேய்ப்பர்கள் அந்தக் கண்ணாடியை இரக்கத்திடம் கொடுத்தார்கள்.

தலைகுனிந்து வணங்கியபடியே அதைப் பெற்றுக் கொண்ட இரக்கம் அவர்களுக்கு நன்றி கூறினாள். "உங்கள் தயவை நான் பெற்றுள்ளேன் என்பதற்கு இதுவே அத்தாட்சி" என்று முழுநெஞ்சத்துடன் கூறினாள்.

மேய்ப்பர்கள் மற்ற பெண்கள் விரும்பியவற்றையும் அவர்களுக்குக் கொடுத்தார்கள். அவர்களது கணவன்மார்கள் வீண் நம்பிக்கை என்ற அரக்கனை அழிப்பதற்கும், சந்தேகக் கோட்டையைத் தகர்ப்பதற்கும் துணிவுள்ளவனுக்கு உதவி செய்தபடியால், அவர்களைப் புகழ்ந்து பாராட்டினார்கள்.

மேய்ப்பர்கள் கிறிஸ்தீனாளும் அவளது நான்கு மருமகள் மாரும் கழுத்தில் அணிந்துகொள்ளும்படி பொன் சங்கிலிகளைக் கொடுத்தார்கள். காதுகளில் கம்மல்களையும், நெற்றிச் சுட்டிகளையும் அணிவித்தார்கள்.

பயணிகள் அந்த இடத்தைவிட்டு மறுபடியும் புறப்பட ஆயத்தமானபோது, முன்பு கிறிஸ்தியானுக்கும் அவன் துணைவனுக்கும் எச்சரிப்பு வார்த்தைகளைக் கூறியதுபோல இவர்களுக்கு ஒன்றும் கூறாமல், சமாதானத்தோடு போய்வாருங்கள் என்று மட்டும் கூறி வழியனுப்பிவைத்தார்கள். அவர்கள் துணிவுள்ளவனை வழிகாட்டியாகப் பெற்றிருந்ததே இதற்குக் காரணம். ஏனென்றால் துணிவுள்ளவன் அனைத்துக் காரியங்களையும் அறிந்திருந்தவன்; ஆபத்து நெருங்கிவரும் வேளையிலும்கூட ஆலோசனை கூறி அவர்களைத் தப்புவிக்க வல்லவன், மேய்ப்பர்கள் ஏற்கெனவே கூறியிருந்த எச்சரிப்புகளை பெரும்பாலும் பிரச்சினை எதிர்நோக்கும் வேளைகளில் கிறிஸ்தியானும், அவன் தோழனும் மறந்துபோயிருந்தார்கள். அதனால்தான் மேய்ப்பர்கள் முன்கூட்டியே எச்சரிப்பு ஒன்றையும் சொல்லி அனுப்பவில்லை. துணிவுள்ளவன் ஏற்ற வேளையில் பயணிகளுக்கு எச்சரிப்புக் கொடுப்பான் என்ற நம்பிக்கை அவர்களுக்கு இருந்தது.

அவர்கள் பாடியபடியே நடந்து சென்றார்கள்:

பயணிகளுக்கு ஆறுதல் அளிக்க
ஏற்ற இடம் இது!
நயமான வார்த்தை பேசி
நன்கு கவனிப்பவர் இவர்கள்!
பயணிகள் மனம் கனித்திருக்க
விருப்பம்போல கொடுக்கின்றனர்!
அயலார் என்று மறுப்பதில்லை
பயணம் சிறக்க வாழ்த்துகிறாய்!

என்று பாடியபடியே பயணிகள் மகிழ்ச்சிமலை அரண்மனையைவிட்டுச் சென்றார்கள்.

மேய்ப்பர்களிடம் விடைபெற்றுச் சற்றுத்தூரம் சென்ற பிறகு, தவறான கொள்கை என்ற பட்டணத்தைச் சேர்ந்த மறுதலிப்போன் என்பவன் கிறிஸ்தியானைச் சந்தித்த இடத்துக்கு வந்து சேர்ந்தார்கள்.

துணிவுள்ளவன் ஏற்கெனவே மறுதலிப்போனைப்பற்றி அவர்களுக்கு எச்சரிக்கை செய்திருந்தான்.

"இந்த இடத்தில்தான் கிறிஸ்தியான் மறுதலிப்போன் என்பவனைச் சந்தித்திருந்தான். அவன் தன் முறுமுறுப்பைத் தோளில் சுமந்தவனாகச் சென்றான். இந்த மறுதலிப்போன் என்பவன் எவருடைய ஆலோசனைக்கும் செவிசாய்க்கமாட்டான். ஒருமுறை வீழ்ந்த பிறகும்கூட அவனுக்குப் புத்தி வராது. எந்தவித வற்புறுத்தலுக்கும் அவன் பணியாமல் தன் விருப்பப்படியே செல்வான். சிலுவையும், கல்லறையும் காணப்பட்ட இடத்துக்கு அவன் வந்தபோது, சிலுவையை நோக்கிப் பார் என்று அவனிடம் கூறப்பட்டது. ஆனால் அவனோ சிலுவையை நோக்கிப் பாராமல், தன் பற்களை நறநறவென்று கடித்துக் கொண்டு, கால்களைத் தரையில் உதைத்து, தான் மறுபடியும் தன் ஊருக்குத் திரும்பிச் செல்லத் தீர்மானித்துள்ளதாகக் கூறினான். அவன் திரும்பி வாசலண்டை வருவதற்கு முன்பாக நற்செய்தியாளர் அவனைச் சந்தித்து, அவனை மீண்டும் மோட்சப் பயணத்தைத் தொடரும்படி செய்ய முயன்றார். ஆனால் மறுதலிப்போனோ அவரது பேச்சை மறுத்து, அவரை அவமானப்படுத்திவிட்டு சுவர் ஏறிக் குதித்து ஓடிவிட்டான்" என்று அவனைப் பற்றிக் கூறினான் வழிகாட்டி துணிவுள்ளவன்.

28. பயணிகள் சத்தியவீரனைச் சந்தித்தல்

பயணிகள் தொடர்ந்து நடந்துசென்று, அற்ப விசுவாசம் என்பவன் முன்பு கொள்ளையடிக்கப்பட்ட இடத்துக்கு வந்துசேர்ந்தார்கள்.

அந்த இடத்தில் ஒருவன் கையில் பட்டயத்தை ஏந்தியவனாக, முகமெங்கும் இரத்தக் கறையுடன் நின்று கொண்டிருந்தான்.

"யார் நீ?" என்று துணிவுள்ளவன் அவனைப்பார்த்து படபடப்புடன் கேட்டான்.

நான் தான் **சத்தியவீரன்.** மோட்சப் பட்டணத்துக்குப் பயணமாகச் சென்றுகொண்டிருக்கிறேன். நான் என் வழியில் சென்றபோது மூவர் என்னை வழிமறித்து, மூன்று காரியங்களைக்குறித்து என்னிடம் கேட்டார்கள். நான் அவர்களில் ஒருவனாக மாறுவதற்குச் சம்மதமா அல்லது நான் புறப்பட்ட இடத்துக்குச் செல்வேனா அல்லது இந்த இரண்டில் ஒன்றைச் செய்யத் தவறினால் இந்த இடத்திலேயே மரிப்பதற்குச் சம்மதமா என்று என்னிடம் கேட்டார்கள். ஒவ்வொரு கேள்விக்கும் நான் வரிசையாகப் பதில் கூறினேன். முதல் கேள்விக்கு நானளித்த பதில், இதோ! நான் நீண்டகாலமாக ஒரு நல்லவனாக வாழ்ந்து வந்திருக்கிறேன். இனியும் அவர்களைப்போன்ற கள்ளர்களுடன் சேருவேன் என்று எப்படி எதிர்பார்க்க முடியும் என்று கூறினேன்.

இரண்டாவது கேள்விக்குப் பதிலளிக்குமாறு என்னை வற்புறுத்தினார்கள். நான் புறப்பட்ட இடம் எனக்கு விருப்பமான இடமாக இருந்திருந்தால் நான் அதைப் புறக்கணித்திருக்க மாட்டேன். அது எனக்குச் சற்றும் பொருத்தமில்லாத இடமாகவும், பயனளிக்காத இடமாகவும் இருந்தபடியால் நான் அந்த இடத்தைவிட்டு வந்துவிட்டேன். இனியும் அங்கே திரும்பிச் செல்லப் போவதில்லை என்றேன். மூன்றாவது கேள்விக்கு என்ன பதில் கூறுவேனென்று மிரட்டினார்கள். எனது ஜீவனை வெறுமனே அவர்கள் கையில் கொடுத்து விடுமளவுக்கு அது மதிப்பற்ற ஒன்றல்ல என்று தீரத்துடன் கூறினேன். அதுமட்டுமன்றி, நீ அதைச் செய்வாயா, இதைச் செய்வாயா என்று கேட்குமளவுக்கு அவர்களுக்கு என்ன உரிமை இருக்கிறது, என் காரியத்தில் தலையிட்டால் அழிவு அவர்களுக்குத்தான் என்று எச்சரித்தேன். உடனே **துஷ்டன், திடீர்பேர்வழி, வெடுக்கன்** என்ற அந்த மூவரும் என்னைத் தாக்கினார்கள். நானும் பட்டயத்தினால் அவர்களைத் திருப்பித் தாக்கினேன். இவ்வாறு மூன்று மணிநேரத்துக்கும் மேலாக ஒருவனாகவே அந்த மூவரையும் எதிர்த்துப் போரிட்டேன். அவர்கள் என் உடலில் விட்டுச்சென்ற காயங்களைத்தான் இதோ பார்க்கிறீர்களே! நானும் அவர்களைக் காயப்படுத்தியுள்ளேன். இப்போதுதான் அவர்கள் ஓடிப்போனார்கள். நீங்கள் வரும் காலடியோசை கேட்டுத்தான் அவர்கள் ஓடிவிட்டார்கள் போலிருக்கிறது!" என்றான் சத்தியவீரன்.

"ஒருவனுக்கு விரோதமாக மூவர் போரிட்டார்களா?" என்று வியப்புடன் கேட்டான் துணிவுள்ளவன்.

"உண்மைதான். ஆனால் சத்தியத்தைத் தன் பக்கம் கொண்டுள்ளவன் ஒருவரோ அல்லது பலரோ எதிர்த்து வந்தாலும் அஞ்சமாட்டான். எனக்கு விரோதமாக ஒரு பாளயமிறங்கினாலும், என் இருதயம் பயப்படாது; என் மேல் யுத்தம் எழும்பினாலும், இதிலே நான் நம்பிக்கையாயிருப்பேன் *(சங். 27:3)* என்று ஒரு பக்தன் கூறியிருக்கிறாரே! இதுமட்டுமா? ஒரு தனி மனிதன் ஒரு பெரிய படையையே எதிர்த்துப் போரிட்டிருப்பதைப்பற்றி நான் படித்திருக்கிறேனே! ஒரு கழுதையின் தாடையெலும்பைக் கொண்டு சிம்சோன் எத்தனை பேரை வீழ்த்தினான் என்பதை மறந்துவிட முடியுமா?" என்றான் சத்தியவீரன்.

"நீ குரல் எழுப்பியிருந்தால் எவராவது உனக்கு உதவிசெய்ய வந்திருக்க மாட்டார்களா?" என்று கேட்டார் துணிவுள்ளவன்.

"நான் என் அரசரை நோக்கி முறையிட்டேன். அவர் எனது

குரலைக் கேட்டு, கண்ணுக்குத் தெரியாத வகையில் எனக்கு உதவுவார் என்பதை நான் அறிவேன். அதுவே எனக்குப் போதும்" என்றான் சத்தியவீரன்.

"நீ வெகு தீரமாக அவர்களை எதிர்த்துப் போராடியிருக்கிறாய்!" என்று அவனைப் பாராட்டிய துணிவுள்ளவன், எங்கே உன் பட்டயத்தைக் காட்டு பார்ப்போம்!" என்று கேட்டான்.

சத்தியவீரன் தன் பட்டயத்தை அவனிடம் காட்டினான். அதைக் கையில் வாங்கி திருப்பிப் பார்த்தான் துணிவுள்ளவன்.

"ஆகா, இது உண்மையிலேயே எருசலேம் பட்டயம்தான்!"[1] என்று வியந்தான் துணிவுள்ளவன்.

ஆமாம். இது எருசலேம் பட்டயம்தான். பட்டயத்தைக் கையில் பிடித்து, அதைப் பயன்படுத்தத் தெரிந்த ஒருவனின் கையில் இந்த வாள் இருக்குமானால், இருளின் தூதர்களையும் எதிர்த்துப் போரிடலாமே! பயன்படுத்தும் விதம் தெரிந்தால் எப்படி கையில் பிடிப்பது என்ற முறைபற்றிக்கூடக் கவலைப்பட வேண்டியதில்லை. இதன் ஓரங்கள் ஒருபோதும் மழுங்கிப்போகா! சதையை மட்டுமன்றி, எலும்பையும், ஆத்துமாவையும் ஆவியையும் கூட வெட்டிப் போடும்!" என்று அந்தப் பட்டயத்தின் பெருமையைப்பற்றிக் கூறினான் சத்தியவீரன்.

"நீ நீண்ட நேரம் போரிட்டிருக்கிறாயே! களைப்படையவில்லையா?" என்று வியப்புடன் கேட்டான் துணிவுள்ளவன்.

"பட்டயம் என் கையோடு கையாக ஒட்டிக்கொள்ளும்வரை நான் போரிட்டேன். கையும் பட்டயமும் இணைந்து, என் கையே ஒரு பட்டயமாக வளர்ந்தது போலிருந்தது. என் விரல்களின் வழியாக இரத்தம் வழிவதைக் கண்டவுடன் இன்னும் அதிக வீராவேசத்துடன் போரிட்டேன்" என்றான் சத்தியவீரன்.

நீ நன்றாகவே போரிட்டிருக்கிறாய்! பாவத்திற்கு விரோதமாக இரத்தம் சிந்தும்வரை எதிர்த்து நின்றிருக்கிறாயே! நீயும் எங்களுடன் சேர்ந்து வா, ஒன்றாகவே பயணம் செல்லலாம். நாங்கள் உனது தோழர்கள்" என்று கூறினான் துணிவுள்ளவன்.

பயணிகள் சத்தியவீரனை அழைத்துச் சென்று, அவன்

---

1. எருசலேம் பட்டயம்-சிலுவைப் போரின்போது கானான் பூமியைத் துருக்கியரின் ஆளுகையிலிருந்து விடுவிக்க ஐரோப்பிய வீரர்கள் போரிட்டுச் சென்றார்கள். அவர்கள் பயன்படுத்திய முதல்தரமான வாள் எருசலேம் பட்டயம் என்று அழைக்கப்பட்டது.

காயங்களைக் கழுவி, அவனுக்குப் புத்துணர்வூட்டும்படி தங்களிடம் இருந்தவற்றைக் கொடுத்தார்கள். பிறகு அனைவரும் ஒன்றாகவே பயணத்தைத் தொடர்ந்தார்கள்.

சத்தியவீரனைத் தன்னுடன் அழைத்துச் செல்வது துணிவுள்ளவனுக்குப் பெருமகிழ்ச்சியைத் தந்தது. தன்னைப் போன்றே வீரமுள்ள ஒருவன் பெலவீனரான பயணிகளுக்குத் துணையாக வருவது அவனுக்கு உதவியாகவும் இருந்தது. வழிப்பயணத்தின்போது அவன் சத்தியவீரனிடம் பல கேள்விகளைக் கேட்டான்.

"நீ எந்த இடத்திலிருந்து வருகிறாய் அப்பா?" என்று முதலில் கேட்டான்.

"நான் **இருண்டபூமி** என்ற இடத்திலிருந்துப் புறப்பட்டு வருகிறேன். அங்கேதான் நான் பிறந்தேன். என் தாயாரும், தகப்பனாரும் இன்னும் அங்கேதான் இருக்கிறார்கள்" என்றான் சத்தியவீரன்.

"இருண்ட பூமியா? அது அழிநகரம் இருக்கும் அதே கடற்கரைப் பகுதியில்தானே இருக்கிறது?" என்று கேட்டான் துணிவுள்ளவன்.

"ஆமாம், அதே கரையில்தான் இருக்கிறது. நான் ஏன் பயணம் புறப்பட்டேன் என்பதைப்பற்றி இப்போது கூறுகிறேன். எங்கள் பகுதியில் **சத்தியச்செல்வன்** என்பவர் வந்து அழிநகரத்திலிருந்து புறப்பட்டுச் சென்ற கிறிஸ்தியானைப் பற்றிக் கூறியபோது, அவன் தனது மனைவியையும், பிள்ளைகளையும் விட்டுவிட்டு பயணிகள் வாழ்க்கையைப் பின்பற்றியதைக் கேள்விப்பட்டேன். அவனது பயணத்தின்போது அவனைத் தடுக்கவந்த ஒரு சர்ப்பத்தை அவன் மேற்கொண்டான் என்றும், எவ்வாறு தான் செல்லவிரும்பிய இடத்தைச் சென்றடைந்தான் என்றும் அவர் விரிவாகக் கூறினார். அவன் மோட்சப் பட்டணத்தின் வாசலண்டை வந்து சேர்ந்த, ஆண்டவரின் வாசஸ்தலத்தில் அவன் எவ்வாறு வரவேற்கப்பட்டான் என்பதையும் நான் அறிந்து கொண்டேன். அங்கே அவன் ஒளிமயமானவர்களால், எக்காள ஒலி தொனிக்க, அழைத்துச் செல்லப்பட்டானாமே! அவனது வரவின் மகிழ்ச்சியை அறிவிக்கும் வண்ணமாக மோட்சப் பட்டணத்தின் மணிகளெல்லாம் ஒலித்தனவாம்! அவனுக்குப் பொன்மயமான ஆடைகள் அளிக்கப்பட்டனவாம்! இன்னும் அநேக அற்புதமான காரியங்களைபற்றி சத்தியசொல்லன் கூறினார். அவர் இவ்வாறு கிறிஸ்தியானைப்பற்றியும் அவனது பயணத்தைப்பற்றியும்

கூறுவதைக் கேட்கக் கேட்க, அவனைப்போல நானும் பயணத்தைத் தொடர வேண்டுமென்ற வாஞ்சை எனக்குள் கொழுந்துவிட்டெரிந்தது. எனது தாயாராலும், தகப்பனாராலும் என்னைத் தடுத்து நிறுத்த முடியவில்லை. நான் இதுவரையிலும் வந்துவிட்டேன்" என்று கூறினான் சத்தியவீரன்.

"நீ குறுகிய வாசல் வழியாகத்தானே வந்தாய்?" என்று கேட்டான் துணிவுள்ளவன்.

"ஆமாம், ஆமாம். அந்த வழியாக நான் என் பயணத்தைத் துவங்கிவிட்டால் பயன் ஒன்றுமில்லை என்று சத்தியசொல்லன் கூறியிருக்கிறார்" என்றான் சத்தியவீரன்.

கிறிஸ்தீனாளைத் திரும்பிப்பார்த்த துணிவுள்ளவன், "பார்த்தாயா? உன் கணவரின் பயணத்தைப்பற்றிய செய்தி இங்கும் எங்கும் பரவியுள்ளது" என்றான்.

"யார் இவள்? கிறிஸ்தியானின் மனைவியா?" என்று வியப்புடன் கேட்டான் சத்தியவீரன்.

"ஆமாம், இதோ இந்த நால்வரும் அவனுடைய குமாரர்கள்" என்று அறிமுகம் செய்தான் துணிவுள்ளவன்.

"என்ன, இவர்களும் பயணம் செல்கிறார்களா?" என்று கேட்டான் சத்தியவீரன்.

"ஆமாம், கிறிஸ்தியானைப் பின்பற்றி செல்கிறார்கள்" என்றான் துணிவுள்ளவன்.

"இதைக் கேட்பது எனக்கு அளவுகடந்த மகிழ்ச்சியை அளிக்கிறது. அவனோடுகூடச் செல்ல முடியாதவர்கள் அவனைப் பின்பற்றியாவது மோட்சப் பயணத்திற்குள் நுழையும்போது, அவன் அதைக் கண்டு எவ்வளவு மகிழ்ச்சி யடைவான்!" என்றான் சத்தியவீரன்.

"நிச்சயமாக அது அவனுக்கு ஆறுதலை அளிக்கும். தான் அங்கிருப்பதினால் அவன் பெறும் மகிழ்ச்சியைவிட, தன் மனைவியும், பிள்ளைகளும்கூட அங்கே வந்திருப்பதைக் கண்டு பெறும் மகிழ்ச்சி அதிகமாகவே இருக்கும்!" என்றான் துணிவுள்ளவன்.

"இப்போது நாம் இதைப்பற்றிப் பேசிக் கொண்டிருக்கிற படியால் நான் உம்மிடம் ஒரு கேள்வியைக் கேட்க விரும்புகிறேன். நாம் அங்கே இருக்கும்போது ஒருவரையொருவர் அறியக்கூடுமோ என்பதுதான் அந்தக் கேள்வி!" என்றான் சத்தியவீரன்.

"பரலோகத்தைச் சென்றடைந்தவர்கள் எப்படியும் தங்களைத் தாங்களே அறிந்துகொள்வார்கள் அல்லவா? அங்குள்ள ஆனந்தத்தைத் தாங்கள் பெற்றுள்ளோம் என்று கண்டு மகிழ்ச்சியடைவார்கள் அல்லவா? அவர்கள் இதைச் செய்ய அறிந்திருக்கும்போது, ஏன் மற்றவர்களையும் இனம்கண்டு கொண்டு அவர்கள் நலனைக் கண்டு மகிழ்ச்சியடைய முடியாது? உறவுமுறை அற்றுப் போனாலும், நமக்கு வேண்டியவர்கள் அங்கே இல்லாதிருப்பதைக் காணுவதைவிட அவர்களும் பேரின்பத்தை அனுபவிக்கிறார்கள் என்பதை அறியும்போது நிச்சயம் மகிழ்ச்சியடைவார்கள் என்று எதிர்பார்ப்பதில் தவறேதும் இல்லையே? என்றான் துணிவுள்ளவன்.

"இதைப்பற்றி நீர் என்ன நினைக்கிறீர் என்பதை இப்போது நான் அறிந்துகொண்டேன். அதுசரி என் பயணத்தின் துவக்கத்தைப்பற்றி வேறு ஏதாவது கேள்வி கேட்க வேண்டுமா?" என்று கேட்டான் சத்தியவீரன்.

''நீ பயணம் புறப்பட்டு வருவதற்கு உன் தாயாரும், தந்தையாரும் சம்மதித்தார்களா?'' என்று மீண்டும் தனது கேள்விகளைத் துவக்கினான் துணிவுள்ளவன்.

''இல்லை. என்னை வீட்டிலேயே வைத்துக்கொள்ள எவ்வளவோ முயற்சிகளைச் செய்தார்கள்'' என்றான் சத்தியவீரன்.

''ஏன், பயணத்துக்கு விரோதமாக அவர்கள் என்ன கூறினார்கள்?" என்று கேட்டான் துணிவுள்ளவன்.

"பயணிகள் சோம்பேறித்தனமான வாழ்க்கை வாழுகிறார்கள். ஆனால் நீயோ சோம்பியிருக்கமாட்டாய். அதனால் பயணிகளின் வாழ்க்கை உனக்கு ஒத்துப்போகாது என்று அவர்கள் வாதிட்டார்கள்" என்றான் சத்தியவீரன்.

"அவர்கள் வேறு என்ன கூறினார்கள்?" என்று கேட்டான் துணிவுள்ளவன்.

''பயணிகள் செல்லும் பாதையே இந்த உலகத்திலேயே மிகவும் அபாயகரமான பாதை என்று கூறிய என்னைத் தடுக்க முயன்றார்கள்.''

"எப்படி இது அபாயகரமான பாதை என்று விளக்கிக் கூறினார்களா?" என்று கேட்டான் துணிவுள்ளவன்.

"ஆமாம், அநேக விளக்கங்களைக் கூறினார்கள்" என்றான் சத்தியவீரன்.

“எங்கே, சிலவற்றைக் கூறு பார்ப்போம்” என்று கேட்டான் துணிவுள்ளவன்.

“கிறிஸ்தியான் கிட்டத்தட்ட அமிழ்ந்துபோன நம்பிக்கையிழப்பு சேற்றைப்பற்றிக் கூறினார்கள். குறுகிய வாசல் வழியாக நுழைவதற்காகக் கதவைத் தட்டுபவர்களின்மீது அம்பெய்து அவர்களை வீழ்த்துவதற்காக பெயல்செபூலன் கோட்டையில் அநேகர் வில்லும் கையுமாக நிற்கிறார்கள் என்று கூறினார்கள். அடர்ந்த காடுகள், இருண்ட மலைகளைப்பற்றியும், கடினமலைப் பற்றியும், சிங்கங்களைப்பற்றியும், இரத்த வெறியன், அழிம்பன், நன்மைகொல்லி என்ற மூன்று அரக்கர்களைப்பற்றியும் கூறினார்கள். தாழ்மையின் பள்ளத்தாக்கில் கொடூரமான ஒருவன் சுற்றித் திரிகிறான் என்றும், கிறிஸ்தியான் அநேகமாக அவன் கைகளில் விழுந்திருப்பான் என்றும் கூறினார்கள். பிசாசுகள் எவனை விழுங்கலாமோ என்று சுற்றித்திரியும், இருண்ட கண்ணிகளும், குழிகளும் நிறைந்த மரண இருளின் பள்ளத்தாக்கின் வழியே செல்லவேண்டியிருக்கும் என்றும் எச்சரித்தார்கள். வீண் நம்பிக்கை என்ற அரக்கனைப்பற்றியும், அவனுடைய சந்தேகக் கோட்டையைப்பற்றியும் கூறி பயணிகள் அங்கே எவ்வாறு அழிவைச் சந்திக்கிறார்கள் என்றும் விளக்கி கூறினார்கள். அதுமட்டுமா? மயக்கபூமி வழியாகச் செல்வது ஆபத்தானது என்று பயம் காட்டினார்கள். அனைத்தையும் கடந்து சென்றாலும் கூட, கடக்கப் பாலம் இல்லாத நதியொன்று குறுக்கே வரும். உனக்கும் மோட்சப் பட்டணத்துக்கும் நடுவே ஓடும் அந்த ஆற்றை உன்னால் கடக்க முடியாது என்றெல்லாம் கூறினார்கள்” என்றான் சத்தியவீரன்.

“இவ்வளவுதான் கூறினார்களா?” என்று கேட்டான் துணிவுள்ளவன்.

“இவை மட்டுமா? மோட்சப் பாதையில் செல்லும் நல்ல பயணிகளைத் திசைதிருப்புவதற்காக ஏமாற்றுக்காரர்கள் வழியெங்கும் காணப்படுகிறார்கள் என்றும் கூறினார்கள்” என்றான் சத்தியவீரன்.

“அவர்கள் எவ்வாறு ஏமாற்றுவார்கள் என்று கூறினார்களா?” என்று கேட்டான் துணிவுள்ளவன்.

“உலகஞானி என்ற ஒருவன் நம்மை ஏமாற்றுவதற்குக் காத்திருக்கிறான் என்று அவர்கள் கூறினார்கள். வெளிவேஷம், மாய்மாலம் என்ற இருவரும்கூட இந்தப் பாதையில் தொடர்ந்து சுற்றிக்கொண்டிருக்கிறார்களாம். அதுமட்டுமா? பக்கவழி, வீண்பேச்சன், தேமாஸ் என்பவர்கள் என்னைப் பிடிக்க காத்திருக்கிறார்கள் என்றும் கூறினார்கள். முகத்துதி தன்

வலையில் என்னைச் சிக்கவைக்கக்கூடும். அப்படியும் தப்பி நான் தொடர்ந்து சென்றால் மலைச்சரிவிலுள்ள பக்கவழியாய் நகரத்தினுள் தள்ளப்படலாம் என்றும் அவர்கள் பயமுறுத்தினார்கள்'' என்றான் சத்தியவீரன்.

''இதுவே நீ ஊக்கமிழப்பதற்குப் போதுமானதாக இருந்திருக்குமே! அவர்கள் வேறு ஏதாவது கூறினார்களா?'' என்று மேலும் கேட்டான் துணிவுள்ளவன்.

"கொஞ்சம் பொறும். மேலும் அவர்கள் சொன்னதைக் கூறுகிறேன். முன்பு இந்தப் பாதையில் செல்ல தீர்மானம் செய்து வெகுதூரம் வந்தபின்னரும்கூட, அநேகர் காலாகாலமாக கூறுவதுபோல இங்கே ஏதாவது மகிமை காணப்படுமா என்று தேடி ஏமாற்றமுற்று, இவ்வாறு புறப்பட்டுவந்தது தங்கள் முட்டாள்தனம் என்று தங்களைத் தாங்களே நொந்துகொண்டு, திரும்பி வந்தவர்களைப்பற்றியும் அவர்கள் கூறினார்கள். பிடிவாதக்காரன், மென்னெஞ்சன், சந்தேகக்காரன், பயந்தவன், மறுதலிப்பவன், நாத்திகன் இவர்கள் அவர்களில் சிலர் என்று குறிப்பிட்டார்கள். இப்படிப் பயணம் செல்வதில் ஏதேனும் ஆதாயம் இருக்கிறதா என்று அவர்கள் தேடித் தேடி ஒன்றும் காணோம் என்று சோர்ந்து போய்த் திரும்பிவிட்டார்கள் என்றும் கூறினார்கள்'' என்றான் சத்தியவீரன்.

"உன்னை ஊக்கமிழக்கச் செய்வதற்காக இன்னும் ஏதாவது கூறினார்களா?'' என்று கேட்டான் துணிவுள்ளவன்.

"கூறினார்களே! பயந்தாங்கொல்லி என்ற பயணியைப்பற்றிக் கூறினார்கள். அவன் இந்தப் பாதையில் தனிமையாகச் செல்ல நேரிட்டபடியால், எந்தவித ஆதரவுமின்றி சோர்துபோனானாம்! நம்பிக்கையிழந்தவன் என்பவன் பசியும் பட்டினியுமாகக் கிடந்து தவித்துப்போய் விட்டானாம்! அவர்கள் கூறிய மற்றொன்றை நான் மறந்தே போய்விட்டேனே! இப்போது கிறிஸ்தியானைப் பற்றி வெகுவாக புகழ்ந்து பேசுகிறார்களே, அவன் இறுதியில் ஆற்றைக் கடக்கமுடியாமல் அதிலேயே அமிழ்ந்துபோய் விட்டானாம். ஆற்றைக் கடந்து மறுகரையில் கால் வைக்கவேயில்லையாம்! அவனது இனத்தார் இந்தச் செய்தியை அப்படியே மூடி மறைத்துவிட்டார்கள் என்றும் அவர்கள் கூறினார்கள்'' என்றான் சத்தியவீரன்.

''இவற்றையெல்லாம் கேட்டபிறகும் நீ ஊக்கமிழந்து போகவில்லையா?'' என்று கேட்டான் துணிவுள்ளவன்.

"அவர்கள் சொல்லியவையெல்லாம் வெறும் குப்பையாகவே எனக்குத் தோன்றியது'' என்றான் சத்தியவீரன்.

''ஏன் அப்படி?'' என்று ஆவலுடன் கேட்டான் துணிவுள்ளவன்.

''நான் சத்தியசொல்லன் கூறியதைத் தொடர்ந்து நம்பி வந்ததுதான் இதற்குக் காரணம். அந்த விசுவாசமே என்னை இதுவரை வழிநடத்தி வந்தது'' என்றான் சத்தியவீரன்.

''உனது விசுவாசமே உனக்கு வெற்றியாக ஆகிவிட்டது என்றுதான் சொல்ல வேண்டும்'' என்று மகிழ்ச்சியுடன் கூறினான் துணிவுள்ளவன்.

''ஆம், அது உண்மைதான். நான் விசுவாசித்தேன். அதனால் ஊரைவிட்டுப் புறப்பட்டு இந்தப் பாதையில் காலடி எடுத்து வைத்தேன். எனக்கு விரோதமாக வந்தவர்களைப் போரிட்டு வென்று இதுவரை வந்திருக்கிறேன். விசுவாசமே இதற்குக் காரணம்'' என்றான் சத்தியவீரன்.

வீரதீரம் காண விரும்புவோர்
வருக வருக உடன் வருக!
புயலோ, பெரு மழையோ
அஞ்சாநெஞ்சன் இவன்
பயணம் செல்கிறானே–
இவன்தான் சத்தியவீரன்!

கதைகதையாய்க் கூறினராம்
அதை நம்பவில்லை அவனுமே!
சிங்கமோ, அரக்கனோ
பயப்படாது போரிட்டவன்
பயணம் செல்கிறானே–
இவன்தான் சத்தியவீரன்!

பிசாசோ தீயஆவியோ
அழிக்க முடியவில்லை அவனையுமே!
மோட்சத்தின்மேல் கண்வைத்தான்
மனிதர் பேச்சில் பயப்படான்
பயணம் செல்கிறானே–
இவன்தான் சத்தியவீரன்!

29. பயணிகள் உறக்க பூமியைச் சென்றடைதல்

இதற்குள் பயணிகள் உறக்க பூமியைச் சென்றடைந்தார்கள். அங்கு வீசும் காற்று எவரையும் மங்க வைக்கக் கூடியது. அந்தப் பூமியெங்கும் முட்செடிகளும், களைகளும் முளைத்திருந்தன. நடுநடுவே பயணிகள் தங்கி இளைப்பாறும்படி பந்தல்கள்

காணப்பட்டன. இந்தப் பந்தல் ஒன்றின்கீழ் அமர்ந்து ஒருவன் உறங்கிவிட்டால் அவன் இந்த உலகில் மறுபடியும் விழித்தெழமாட்டான் என்று கூறப்பட்டது.

இத்தகைய அபாயகரமான காட்டின் வழியாக பயணிகள் மிகவும் கவனத்துடன் நடந்துசென்றார்கள். வழிகாட்டியாகிய துணிவுள்ளவன் முன்னால் சென்றான். ஏதேனும் பூதமோ, வலுசர்ப்பமோ, அரக்கனோ, கள்வனோ, பின்னாலிருந்து தாக்கக்கூடாது என்பதற்காக சத்தியவீரன் பயணிகளுக்குப் பின்னால் நடந்து சென்றான். அந்த இடம் அபாயகரமான இடமானபடியால் ஒவ்வொருவரும் பட்டயத்தைக் கையில் ஏந்தியவர்களாக நடந்துசென்றார்கள். இயன்றவரை ஒருவரையொருவர் உற்சாகப்படுத்தும்படியே சென்றார்கள். மென்னெஞ்சனைத் தனக்குப் பின்னால் வரும்படி கூறினான் துணிவுள்ளவன். நம்பிக்கையிழந்தவன் சத்தியவீரனின் பொறுப்பில் அழைத்து செல்லப்பட்டான்.

இவ்வாறு அவர்கள் சிறிது தூரம் செல்வதற்குள்ளாக எங்கும் மூடுபனி பரவி இருள் சூழ்ந்தது. வெகுநேரமாய் அவர்களால் ஒருவர் முகத்தை ஒருவர் பார்க்கக்கூட முடியாமல் போய்விட்டது! ஒருவர் மற்றவரைப் பெயர் சொல்லி அழைத்தபடியேதான் செல்ல வேண்டியிருந்தது. எப்படிப்பட்ட மனபலம் உள்ளவர்களும் இந்த இடத்தில் தளர்ந்துதான் போவார்கள். அப்படியிருக்க, பெண்கள் மற்றும் பையன்களின் நிலைமைப்பற்றி நாம் கூறவும் வேண்டுமோ? ஆனால் முன்னடத்திச் சென்ற துணிவுள்ளவன் மற்றும் பின்னால் பாதுகாப்பாகச் சென்ற சத்தியவீரன் இவர்களின்' ஊக்கமளிக்கும் வார்த்தைகளினால் கொஞ்சம் பயம் தெளிந்த அவர்கள் தொடர்ந்து நடந்து சென்றார்கள்.

அவர்கள் சேறும், வழுக்கலுமான பாதையில் நடந்து செல்ல வேண்டியிருந்ததால் நடப்பதும் கடினமாகவேயிருந்தது. சோர்வுற்றவர்கள் உணவருந்தி உற்சாகம் பெறும் வகையில் அந்தப் பாதையில் எந்தவொரு விடுதியும் காணப்படவில்லை. அவர்கள் முக்கி, முனகிப் பெரு மூச்சு விட்டபடியே நடந்து சென்றார்கள். ஒருவன் ஒரு புதரில் தடுக்கி விழுந்து எழுந்து நடந்தான். மற்றொருவன் சேற்றில் சிக்கி நடக்கவே முடியாத நிலையில் ஊர்ந்துசெல்ல நேரிட்டது. வாலிப மக்கள் சேற்றில் தங்கள் காலணிகளை இழந்துப் போனார்கள். ஒருவன் "நான் தடுக்கி விழுந்து விட்டேன்" என்று அலற, மற்றொருவன் "நீங்கள் எங்கே இருக்கிறீர்கள்?" என்று குரல் எழுப்ப, இன்னொருவன் "நான் புதரில் சிக்கிக்கொண்டு விட்டேன், அதிலிருந்து விடுபட முடியவில்லை" என்று பதறினான்.

இப்படியெல்லாம் பல தொல்லைகளையும், சோதனைகளையும் கடந்து அவர்கள் ஒரு நந்தவனத்துக்கு வந்து சேர்ந்தார்கள். களைத்துப்போன பயணிகளுக்கு அது புத்துணர்வு அளிப்பதுபோலத் தோற்றமளித்தது. பச்சைப் பசேரென்ற கொடிகளும், கிளைகளும் நிழலைத் தந்தன. சோர்ந்து போனவர்கள் சாய்ந்து படுப்பதற்காக மென்மையான இருக்கை ஒன்றும் போடப்பட்டிருந்தது. கடினமான பாதையில் நடந்துவந்த பயணிகளைச் சோதனைக்கு உட்படப்பண்ணும்படியாகவே இவையனைத்தும் வைக்கப்பட்டிருந்தன. ஆனால் பயணிகள் எவருமே அங்கே நிற்கக்கூட இல்லை! வழிகாட்டியின் எச்சரிப்புக்கு அவர்கள் செவிகொடுத்தே இவ்வாறு நடந்துகொண்டார்கள் என்பதை என்னால் அறிய முடிந்தது. இவ்வாறு ஆபத்துக்கள் எதிர்நோக்கும் போது, அவர்கள் மாம்ச இச்சைக்கு இடம்கொடாமல் ஒருவருக்கொருவர் துணிவை ஊட்டிக்கொண்டார்கள். அந்த நந்தவனம் சோம்பேறிகளின் நண்பன் என்றழைக்கப்பட்டது. களைப்படையும் பயணிகள் அங்கே தங்கி இளைப்பாறும் சோதனைக்கு உள்ளாகி, அழியும்படியே அது அங்கே உருவாக்கப்பட்டிருக்கிறது.

இவ்வாறு நடந்துவந்த பயணிகள், திறமைசாலியும் கூட வழிதப்பிவிடக் கூடிய ஓரிடத்துக்கு வந்து சேர்ந்ததை நான் என் கனவில் கண்டேன். அந்த இடம் வெளிச்சமாக இருந்திருந்தால், வழி தவறிவிடாமல் எப்படிச் செல்வது என்று வழிகாட்டி சுலபமாக அவர்களை வழிநடத்திச் சென்றிருப்பான். ஆனால் இருள் பரவியிருந்தபடியால் அவனே திகைத்து நின்றுவிட்டான்! ஆனால் அவனது பையில் மோட்சப் பட்டணத்துக்குச் செல்லும் மற்றும் அங்கிருந்து வரும் அனைத்துப் பாதைகளையும் பற்றிய வரைபடம் இருந்தது. தான் எப்போதுமே தன்னுடன் கொண்டுசெல்லும் சிக்கிமுக்கிக் கற்களை எடுத்து அவற்றைத் தட்டி நெருப்பை உண்டாக்கினான். ஒரு பந்தத்தைக் கொளுத்திக் கொண்டு அந்த வரைபடத்தை உற்றுக் கவனித்தான். அதன் மூலம் அவர்கள் நின்ற இடத்திலிருந்து வலப்புறமாகத் திரும்பி கவனத்துடன் செல்ல வேண்டும் என்பதைத் தெரிந்து கொண்டான். அவன் அந்த வேளையில் வரைபடத்தை எடுத்துப் பார்க்காமல் நேராகச் சென்றிருந்தால் அனைவருமே சேற்றில் சிக்கிக்கொண்டிருப்பார்கள். ஏனென்றால் அவர்கள் சென்ற பாதை திடமான பாதையாக இருந்தாலும்கூட, அந்தப் பாதையின் முடிவில் சேறு நிறைந்த பள்ளம் இருந்தது; அதன் ஆழம் என்னவென்று இதுவரை எவருமே கண்டறிந்ததில்லை! விழிப்பற்ற பயணிகளை விழத்தள்ளவே அந்தப் பள்ளம் ஏற்படுத்தப்பட்டிருந்தது.

இவ்வேளையில் நான், 'எந்தப் பாதையில் செல்வது என்றறியாது திகைத்து நிற்கும்போது, இவ்வாறு வழியைக் கண்டறிய உதவும் வரைபடம் இல்லாமல் எந்தப் பயணியும் பயணம் செல்ல முடியுமா?' என்று என்னையே கேட்டுக் கொண்டேன்.

பயணிகள் இவ்வாறு நடந்துசென்று உறக்க நிலத்தைக் கடந்துகொண்டிருந்தபோது அரசரின் பாதையினருகில் மற்றொரு நந்தவனத்தைக் கண்டார்கள். அங்கே இரண்டு நபர்கள் படுத்து உறங்கிக் கொண்டிருந்தார்கள், **அசட்டை, வீம்புக்காரன்** என்பவைகளே அவர்களது பெயர்கள்! அவர்கள் இருவரும் இவ்வளவு தூரம் பயணம் செய்து வந்திருந்தார்கள். ஆனால் களைப்பு மிகுதியால் சோர்ந்துபோய் அமர்ந்த அவர்கள், அப்படியேபடுத்து ஆழ்ந்த உறக்கத்தில் ஆழ்ந்துவிட்டார்கள். பயணிகள் அவர்களைக் கண்டவுடன் அனுதாபப்பட்டு நின்றார்கள்; ஏனென்றால் இப்படி உறங்குபவர்களின் நிலை பரிதாபகரமானது என்பதை அவர்கள் அறிந்திருந்தார்கள். அவர்களை இப்படியே உறங்கும்படி விட்டு விட்டுச் செல்வதா அல்லது அவர்களை விழிப்படையச் செய்யும்படி முயலுவதா என்று ஆலோசித்தார்கள். இறுதியில் முடிந்தால் அவர்களை எழுப்புவது என்று முடிவு செய்தார்கள். ஆனால் தங்களில் எவரும் அமர்ந்து, அந்த நந்தவனத்தின் சுகங்களுக்கு அடிமையாகிவிடாமல் விழிப்பாக இருக்கவேண்டுமென்று தீர்மானித்துக் கொண்டார்கள்.

வழிகாட்டி அவர்களது பெயர்களை அறிந்திருந்தபடியால், பயணிகள் அருகே சென்று அவர்களைப் பெயர் சொல்லி அழைத்தார்கள். ஆனால் எந்தப் பதிலும் கிடைக்கவில்லை! துணிவுள்ளவன் அவர்களைத் தட்டியெழுப்ப முயன்றான். ''எனக்குப் பணம் கிடைக்கும்போது உன் பாக்கியைத் தீர்த்துவிடுகிறேன்'' என்றான் ஒருவன். அடடா என்று தன் தலையை அசைத்துக் கொண்டார் துணிவுள்ளவன்.

"என் கையில் பட்டயம் இருக்கும்வரை நான் தொடர்ந்து போரிடுவேன்" என்றான் மற்றவன். இதைக் கேட்டு வாலிபர்களில் ஒருவன் சிரித்துவிட்டான்.

"இதென்ன?'' என்று வியப்புடன் கேட்டாள் கிறிஸ்தீனாள்.

"இவர்கள் உறக்கத்தில் பிதற்றுகிறார்கள். நீங்கள் அவர்களை அடித்தாலும், உதைத்தாலும், வேறு என்ன செய்தாலும் இப்படி எதையாவது உளறிக் கொண்டிருப்பார்கள். 'நீ நடுக்கடலிலே சயனித்திருக்கிறவனைப்போலும், பாய் மரத்தட்டிலே படுத்திருக்கிற

வனைப்போலும் இருப்பாய். என்னை அடித்தார்கள், எனக்கு நோகவில்லை; என்னை அறைந்தார்கள். எனக்குச் சுரணையில்லை; நான் அதைப் பின்னும் தொடர்ந்து தேட எப்பொழுது விழிப்பேன் என்பாய் (நீதி. 23:34, 35) என்று ஏற்கெனவே ஒருவர் கூறியிருக்கிறார் அல்லவா? ஒரு நபர் உறக்கத்தில் பேசும்போது, எதையாவது உளறுகிறான் என்பதை நீ அறிவாய் அல்லவா? பகுத்தறிவினாலோ அல்லது விசுவாசத்தினாலோ அவர்கள் பேசுவதில்லை! இவர்கள் பயணம் புறப்பட்டதற்கும், இப்படி இங்கே வந்து உறங்கிப் போனதற்கும் ஒத்துப் போகாததுபோல, இப்போது அவர்களது வார்த்தைகளும் பொருளற்றுப் போய்விட்டன. இதுதான் இதிலுள்ள தீங்கு! அசட்டையாகப் பயணம் புறப்படுபவர்களில் இருவரில் ஒருவராவது இந்த ஆபத்திலிருந்து தப்புவது அபூர்வம்! பயணிகளை வீழ்த்த எதிரி வைத்திருக்கும் கடைசி வலைகளில் ஒன்றுதான் இந்த உறக்கபூமி. கிட்டத்தட்ட நமது கடுமையான பயணத்தின் இறுதியில் எதிரி இந்த இளைப்பாறும் இடத்தைக் கட்டி வைத்திருக்கிறான். எப்படியும் பயணத்தின் இறுதி வேளையில் பயணிகள் களைத்துப் போயிருப்பார்கள் அல்லவா? அந்த வேளையில் எளிதாக அவர்களைச் சோதனைக்கு உட்படுத்தி விடலாம் என்பதே எதிரியின் திட்டம்! எனவேதான் ஓட்டத்தின் முடிவில் ஆனந்த நாட்டிற்குச் சற்று முன்னர் உறக்கபூமி என்ற இந்த சோதனை வைக்கப்பட்டிருக்கிறது. இதோ எவருமே எழுப்பமுடியாத வகையில் உறங்கிக்கிடக்கிறார்களே, இதைப்போன்ற ஆபத்தில் சிக்கிவிடாமல் பயணிகள் விழிப்பாக இருக்க வேண்டும்" என்றான் துணிவுள்ளவன்.

பயணிகள் நடுக்கத்துடன் அங்கிருந்துப் போய்விட வேண்டுமென்று அவசரப்பட்டார்கள். இருளை விரட்ட ஒரு விளக்கைக் கொளுத்திக்கொண்டு மீதி வழியைக் கடக்க வேண்டுமென்று வழிகாட்டியிடம் கேட்டுக் கொண்டார்கள். அவனும் அவ்வாறே விளக்கொன்றை (2 பேதுரு 1:19) கொளுத்தினான். காரிருள் நடுவே அந்த ஒளியின் துணையால் பயணிகள் நடந்து சென்றார்கள். வாலிபர்கள் நடக்கமுடியாமல் சோர்ந்து போயிருந்தார்கள். "பயணிகளின் நேசரே, எங்கள் பாதையை எளிதாக்கும்" என்று அவர்கள் கண்ணீரோடு வேண்டிக் கொண்டார்கள். எனவே, அவர்களை மேலும் சற்றுதூரம் செல்வதற்கு முன்பாக காற்று வீசி மூடுபனியை விரட்டியது; பாதை கொஞ்சம் தெளிவாகியது. என்றாலும் அவர்கள் இன்னும் உறக்கபூமியைக் கடந்து செல்லவில்லை. ஒருவரை ஒருவர் தெளிவாகப் பார்க்கவும், பாதையைக் காணவும் மட்டுமே அவர்களால் முடிந்தது.

அவர்கள் இந்தப் பூமியின் இறுதியை நெருங்கும்போது, எவரோ மனவேதனையில் முனகும் குரல் கேட்டது. அவர்கள் சுற்றுமுற்றும் பார்த்தார்கள். அங்கே ஒருவன் முழங்காற்படியிட்ட வனாக, கைகளை மேலே உயர்த்தி, மேலே இருக்கும் நபரோடு மன்றாடிக் கொண்டிருப்பதைக் கண்டார்கள். பயணிகள் அருகே நெருங்கினார்கள்; என்றாலும் அவன் என்ன கூறுகிறான் என்பதைக் கேட்கமுடியவில்லை. எனவே அவன் பேசி முடிக்கட்டும் என்று மெதுவாக நடந்துசென்றார்கள்.

அவன் பேசி முடித்தவுடன் எழுந்து, மோட்சப் பட்டணத்தை நோக்கி வேகமாக ஓடுவதைக் கண்டார்கள்.

“நில் நண்பனே, நீ மோட்சப் பட்டணத்துக்குச் செல்கிறாய் என்றாலும், நாங்களும் உன்னுடன் வருகிறோம்” என்று அவனை அழைத்தான் துணிவுள்ளவன்.

அந்த மனிதன் அப்படியே நின்றுவிட்டான். பயணிகள் அவனை நெருங்கினார்கள்.

அவனை அருகே கண்டவுடன் நேர்மையானவன், “இவனை எனக்குத் தெரியும்” என்றார்.

“அப்படியா? யார் இவன்?” என்று கேட்டான் சத்தியவீரன்.

“எங்கள் பகுதியிலிருந்துதான் இவனும் வருகிறான். இவன் பெயர் **நிலைநிற்பவன்** என்பதாகும். இவன் உண்மையிலேயே ஒரு நல்ல பயணி” என்றார் நேர்மையானவன்.

அவர்கள் ஒருவரையொருவர் நெருங்கினார்கள்.

நேர்மையானவனைக் கண்ட நிலைநிற்பவன் “ஐயா, நீரும் இங்கேதான் இருக்கிறீரா?” என்று ஆவலுடன் கேட்டான்.

“நீ இங்கேயிருப்பது எவ்வளவு நிச்சயமோ அப்படியே நான் இங்கேயிருப்பது உண்மைதான்” என்றார் நேர்மையானவன்.

“இந்தப் பாதையில் உம்மைப் பார்த்தது எனக்கு மிகுந்த மகிழ்ச்சியைத் தருகிறது” என்றான் நிலை நிற்பவன்.

“எனக்கும் மகிழ்ச்சிதான். நீ முழங்காற்படியிட்டிருந்ததை நாங்கள் பார்த்தோமே!” என்றார் நேர்மையானவன்.

இதைக் கேட்டவுடன் நிலைநிற்பவன் வெட்கப்பட்டான்.

“என்ன என்னைப் பார்த்தீரா?” என்று கேட்டான்.

“ஆமாம் பார்த்தேன். அந்தக் காட்சியைக் கண்டு என் உள்ளம் மகிழ்கிறது” என்றார் நேர்மையானவன்.

''என்னைக் கண்டவுடன் என்ன நினைத்தீர்?'' என்று கேட்டான் நிலைநிற்பவன்

"என்ன நினைத்தேனா? இதோ ஒரு நேர்மையான மனிதன் பயணம் செல்கிறான். நாமும் அவனுடன் நடந்து சென்றால் நலமாயிருக்குமே என்றுதான் நினைத்தேன்'' என்றார் நேர்மையானவன்.

''நல்லவேளை, என்னைப்பற்றி நீர் தவறாக ஒன்றும் நினைக்கவில்லையென்றால் எனக்கு மகிழ்ச்சிதான். நான் எப்படி இருக்க வேண்டுமோ அப்படி நான் இருக்கவில்லையென்றால் அந்தப் பழியை நானேதான் சுமக்க வேண்டும்'' என்றான் நிலைநிற்பவன்.

"நீ சொல்லுவது சரிதான். உன்னில் காணப்படும் இந்தத் தேவபயமே பயணிகளின் இளவரசருக்கும், உனது ஆத்துமாவுக்குமிடையே எல்லாம் சரியாக இருக்கிறது என்பதை உறுதிப்படுத்துகிறது. ஏனென்றால் பயந்தவன் பாக்கியவான் என்று அவரே சொல்லியிருக்கிறாரே!" என்றார் நேர்மையானவன்.

"அன்பு சகோதரனே, நீ இவ்வளவு நேரமாக முழங்காலில் நின்றாயே, அதற்குக் காரணம் என்னவென்று சொல்வாயா? ஏதேனும் சிறப்பான கருணையை நீ வேண்டிக் கொண்டாயா?'' என்று நிலைநிற்பவனிடம் கேட்டான் சத்தியவீரன்.

"நாம் உறக்க பூமியில் இருக்கிறோம் என்பதை நீர் அறிவீர் அல்லவா?" நான் நடந்து வந்தபோது, இந்தப் பாதை எவ்வளவு அபாயகரமான பாதை என்பதைப்பற்றிச் சிந்தித்துக் கொண்டிருந்தேன். இவ்வளவு தூரம் பயணமாக வந்தவர்களிலும் கூட அநேகர் இந்த இடத்தில் அழிக்கப்பட்டிருக்கிறார்களே என்று நினைத்தேன். இந்த இடத்தில் அவர்கள் எவ்வாறு மரணத்தைச் சந்திக்கிறார்கள் என்பதைப்பற்றியும் நான் யோசித்துப் பார்த்தேன். இங்கே மரிப்பவர்கள் போரிட்டு மரிப்பதில்லை. மரணவேளை அவர்களைக் கவலைக்கு உள்ளாக்குவதுமில்லை. ஏனெனில் அவன் விரும்பியேதான் உறக்கத்தில் ஆழ்கிறான்; இந்த மகிழ்ச்சியில் அவன் மரணத்தை நோக்கி அழைத்துச் செல்லப்படுகிறான். எந்தவித எதிர்ப்புமின்றி தாமாகவே மரணத்தை ஏற்றுக்கொள்ளச் செய்வதுதான் இந்த இடத்தின் நோயாக இருக்கிறதே என்றுதான் சிந்தித்துக் கொண்டிருந்தேன்" என்றான் நிலைநிற்பவன்.

''நந்தவனத்தில் இருவர் உறக்கத்தில் ஆழ்ந்திருப்பதை நீ பார்த்தாயா?'' என்று அவனை இடைமறித்துக் கேட்டார் நேர்மையானவன்.

“ஆமாம், அசட்டையையும், வீம்புக்காரனையும் பார்த்தேன். அவர்கள் சிதைந்து அழியும்வரை அங்கேதான் கிடப்பார்கள் என்பதையும் நான் அறிவேன். நான் தொடர்ந்து என் கதையைக் கூறுகிறேன், கேளும். முன்பு கூறியபடி நான் சிந்தித்துக் கொண்டிருந்தபோது அழகான ஆடையணிந்த ஒரு பெண் என்முன்னால் வந்து நின்றாள். அவள் மூன்று காரியங்களை எனக்குக் கொடுப்பதாக வாக்களித்தாள். தன் உடலையும், தன் பணத்தையும், தன் படுக்கையையும் எனக்குத் தருவதாக சற்று வயதுசென்ற அந்தப் பெண் கூறினாள். உண்மையைக் கூறப்போனால் அப்போது களைப்போடும் தூக்கக் கலக்கத்திலும் காணப்பட்டேன். என் கையிலும் பணம் எதுவுமில்லை என்பதையும் அந்தத் தீய பெண் அறிந்திருக்கலாம். நான் மீண்டும் மீண்டும் அவளை உதறித் தள்ளினேன். அவளோ அதைப்பற்றிக் கவலைப்படாமல் பல்லைக் காட்டினாள். எனக்குக் கடுமையான கோபம் வந்தது; அவள் அதையும் சட்டைபண்ண வில்லை. அவள் என்னை ஆளுகைசெய்ய நான் இடம் கொடுத்தால், என்னைப் பெரியவனாக்குவதாகவும், எனக்கு மகிழ்ச்சியைக் கொடுப்பதாகவும் ஆசைக்காட்டினாள்; ‘நானே இந்த உலகத்தின் ராணி, அனைத்து மனிதரும் என்னால் ஆனந்தமடைகிறார்கள்’ என்றாள் அவள். அவள் பெயரென்ன என்று நான் அவளிடம் கேட்டேன். **நீர்க்குமிழி** என்றாள் அவள். இதைக் கேட்டவுடன் நான் அவளை விட்டுத் தூர விலகினேன்; அப்படியும் அவள் ஆசைக்காட்டியபடியே பின்தொடர்ந்தாள். அப்போது நான், நீங்கள் பார்த்தபடியே, முழங்காற்படியிட்டு, என் கைகளை மேலே உயர்த்தி, ஆபத்துக் காலத்தில் உதவுவதாக வாக்களித்துள்ளவரை நோக்கி ஜெபித்தேன். நீங்கள் வருகிற சத்தம் கேட்டவுடன் அந்தத் தீய பெண் தன்வழியே சென்று விட்டாள். இவ்வளவு பெரிய ஆபத்திலிருந்து என்னை விடுவித்ததற்காக நான் தொடர்ந்து அவருக்கு நன்றி கூறினேன். ஏனெனில் பயணத்தை நான் தொடரக்கூடாது என்பதே அவளுடைய நோக்கமாக இருந்தது” என்றான் நிலைநிற்பவன்.

“அவள் நோக்கம் மோசமானது என்பதில் எந்தவித ஐயமில்லை. இப்போது நீ அவளைப் பற்றிக்கூறினாயே, அவளை எனக்குத் தெரியுமென்று நினைக்கிறேன். அல்லது அவளைப் பற்றிப் படித்திருக்கிறேன் என்றுதான் தோன்றுகிறது!” என்றார் நேர்மையானவன்.

“ஒருவேளை நீர் அவளைப் பார்த்தும் அறிந்திருக்கலாம்” என்றான் நிலைநிற்பவன்.

“கொஞ்சம் பொறு நீர்க்குமிழி என்றா கூறினாய்? அவள் உயரமாக, அழகாக, மஞ்சள் நிறத்தவளாக இருந்தாளா?” என்று கேட்டார் நேர்மையானவன்.

"ஆமாம் அவளேதான்!" படபடவென்று கூறினான் நிலைநிற்பவன்.

"கவர்ச்சிகரமாகப் பேசுவதில் அவள் திறமைசாலியாயிற்றே! ஒவ்வொரு வார்த்தையைப் பேசி முடித்தவுடன் புன்னகை செய்வாளே!" என்றார் நேர்மையானவன்.

"ஆமாம், சரியாகச் சொன்னீர்!" என்றான் நிலைநிற்பவன்.

"அவள் இடுப்பில் ஒரு பணப்பை செருகப்பட்டிருக்குமே! எப்போதுமே அதை எடுத்து அவள் இன்பமே அதுதான் என்ற நினைப்பில் பணத்தை எண்ணிக்கொண்டிருப்பாள். அவள்தானே?" என்று மீண்டும் கேட்டார் நேர்மையானவன்.

"நீர் கூறுவது அவளையேதான். அவள் இப்போது இங்கே நின்றுகொண்டிருந்தாலும்கூட இவ்வளவு சரியாக அவளைப்பற்றி விவரித்திருக்கமாட்டீர்!" என்று வியப்புடன் கூறினான் நிலைநிற்பவன்.

"அப்படியானால் அவளது படத்தை வரைந்த ஓவியன் திறமைசாலிதான். அவளைப்பற்றி எழுதியவன் உண்மையிலேயே எழுதியிருக்கிறான்" என்றார் நேர்மையானவன்.

"அவள் ஒரு சூனியக்காரி. அவள் வைத்த சூனியத்தினால் தான் இந்த இடம் உறக்க பூமியாயிருக்கிறது. அவள் மடியில் தலைவைத்துப் படுப்பதற்குப் பதிலாக, கோடாரி விழும் இடத்தில் படுத்திருப்பதே மேலானது என்றுதான் கூறவேண்டும். அவள் அழகினால் கவரப்படுபவர்கள் நமது ஆண்டவரின் விரோதிகளாகவே கருதப்படுகிறார்கள். பயணிக்கு விரோதியாக இருப்பவர்களை இவள்தான் பராமரித்து வருகிறாள். பயணிகள் பாதையிலிருந்து அநேகரைப் பின்வாங்கச் செய்பவளும் இவள்தான். இவள் இனிக்க இனிக்கப் பேசுவதில் வல்லவள். இவளும், இவளது குமாரத்திகளும் ஒரு பயணியையும் விடாமல், அவர்களுக்குப் பின்னால் சென்று அந்த வாழ்க்கை மேலானது ஆனந்தமானது என்று கூறி அவர்களை வீழ்த்த முயலுகிறார்கள். அவள் கொஞ்சமும் நாணமோ, வெட்கமோ இல்லாத பெண். எவனுடனும் அவள் பேசத் தயங்கமாட்டாள். எளிய பயணிகளை ஏளனமாகப் பேசும் அவள் செல்வந்தர்களைப் புகழ்ந்து பேசுவாள். தந்திரத்தால் கொள்ளையடிக்கும் ஒருவனைப் பற்றி வீடுவீடாகச் சென்று உயர்வாகப் பேசுவாள். விருந்தும், கேளிக்கைகளுமென்றால் அவளுக்கு மிகவும் விருப்பம், விருந்து மேசைகளில் தவறாது ஆஜராகிவிடுவாள்.

சில இடங்களில் அவள் தன்னை ஒரு தேவதை என்று

கூறியிருக்கிறபடியால் சிலர் அவளை வணங்கவும் செய்கின்றனர். நேரத்துக்கும், இடத்துக்கும் ஏற்றபடி அவள் எவரையும் ஏமாற்றிவிடுவாள். இந்தச் செயலில் தன்னைவிடத் திறமைசாலி எவரும் கிடையாது என்று பெருமையடித்துக்கொள்வாள். தன்னை நேசித்து அடிபணிபவர்களின் வீட்டில் வாழையடி வாழையாகத்தான் இருப்பதாக ஆசைக்காட்டுவாள். சிலருக்கு மட்டும், சில இடங்களில் அவள் தனது தங்க நாணயங்களை வாரியிறைப்பாள். அவளை எவரும் நாடி வருவதும், அவளைப் புகழ்ந்து பேசுவதும் அவளுக்கு விருப்பமான காரியங்கள். ஆண்களின் மார்பில் சாய்ந்து கிடப்பதையே அவள் விரும்புவாள். தனது உடமைகளைப்பற்றிப் பெருமையடித்துக் கொள்வதில் அவள் சோர்வடைவதேயில்லை; அவளைப்பற்றிப் பெருமையாக நினைப்பவர்களை அவள் அதிகமாக நேசிக்கிறாள். தனது ஆலோசனைகளைக் கேட்பவர்களுக்கு கிரீடங்களைப் பெற்றுத் தருவதாகவும், இராஜ்யங்களைக் கொடுப்பதாகவும் வாக்களிப்பாள். ஆனால் நடப்பது என்ன? அவள் அநேகரைத் தூக்குமரத்துக்கும், பல்லாயிரக்கணக்கானோரை நரகத்துக்கும் தான் அனுப்பியிருக்கிறாள்" என்றான் துணிவுள்ளவன்.

"நான் அவளை எதிர்த்து நின்றது எவ்வளவு நல்லது! இல்லாவிட்டால் என்னை எங்கே கொண்டு போய்ச் சேர்த்திருப்பாளோ?" என்று பெருமூச்சுவிட்டான் நிலைநிற்பவன்.

"எங்கேயா? எங்கே என்பதை ஆண்டவர் ஒருவர் மட்டுமே அறிவார். பொதுவாக அவள் உன்னை அநேக மடத்தனமான மற்றும் ஊறுவிளைவிக்கக்கூடிய இச்சைகளில் இழுத்து விட்டிருப்பாள். இந்த இச்சைகள் மனிதனை அழிவுக்கும், நாசத்துக்குமே இட்டுச் செல்லும் *(1 தீமோ. 6:9)* அப்சலோமை அவள் தகப்பனுக்கு விரோதமாகவும், யெரோபெயாமைத் தன் எசமானுக்கு விரோதமாகவும் எழுப்பும்படி தூண்டிவிட்டவள் இவள்தான். தனது ஆண்டவரையே விற்றுப்போடும்படி யூதாசை ஏவிவிட்டவளும் இவள்தான். பயணம் செல்வதிலிருந்துத் தேமாசைத் தடுத்ததும் இவள்தான். அவள் செய்யும் தீங்குகளைப்பற்றி எவரும் முழுமையாகக் கூற முடியாது. ஆளுபவர்களுக்கும் ஆளப்படுகிறவர்களுக்கும் இடையே விரோதங்களைத் தூண்டிவிடுபவள் இவள்தான். பெற்றோருக்கும் பிள்ளைகளுக்கும் இடையேயும், அண்டைவீட்டாருக்கு நடுவிலும் ஏற்படும் சச்சரவுகளுக்குக் காரணமும் இவள்தான். அதுமட்டுமா? கணவனுக்கும் மனைவிக்கும் இடையிலும், ஒரு மனிதனுக்குள்ளேயும், இருதயத்திற்கும் மாம்சத்திற்கும் இடையிலும் பிரச்சனைகளை உருவாக்குகிறவளும் இவள்தான். எனவே, நீ உன் பெயருக்கேற்ப அவளை எதிர்ப்பதில் உறுதியாக

நிலைத்து நின்றபடியால் வெற்றியைப் பெற்றிருக்கிறாய்" என்று நிலைநிற்பவனைப் பாராட்டினான் துணிவுள்ளவன்.

இந்தக் காரியங்களைக் கேட்டபோது, அவற்றின் பயங்கரங்களை உணர்ந்து பயணிகள் நடுங்கினாலும், பின்னர் காப்பாற்றப்பட்டவர்களை நினைத்து மகிழ்ச்சியடைந்தார்கள்.

பின்னர் இவ்வாறு பாடினார்கள்:

பயணிகளுக்குத்தான்
எவ்வளவு ஆபத்துக்கள்!
விரோதிகளும் கொஞ்சமா?
பாவங்கள் - எத்தனை வகைப்
பாவங்கள்!
பலரும் விழுகின்றனரே இவற்றில்!
குழியில் விழுந்தார் சிலர்
சேற்றில் புரண்டார் சிலர்!
வழிதவறி வீழ்ந்தோரும் உண்டே!
எண்ணவும் முடியுமோ?

30. பயணிகள் ஆனந்த நாடு வந்துசேருதல்

இரவும், பகலும் சூரிய ஒளி பிரகாசிக்கும் ஆனந்த நாட்டுக்குப் பயணிகள் வந்து சேருவதை நான் என் கனவில் கண்டேன். அவர்கள் களைப்படைந்து போயிருந்தபடியால் சற்றுநேரம் ஓய்வெடுத்துவிட்டுச் செல்ல விரும்பினார்கள். இந்த இடம் பயணிகள் பெரும்பாலும் வந்து இளைப்பாறும் இடமாக இருந்தது. இங்கிருந்த பழத் தோட்டங்களும், திராட்சத் தோட்டங்களும் மோட்சப் பட்டணத்து அரசருக்குச் சொந்த மானவையாக இருந்தபடியால், பயணிகள் தாங்கள் விரும்பு மட்டும் அவற்றை அனுபவிக்க அனுமதி பெற்றிருந்தார்கள். பயணிகளின் களைப்பு வெகுவிரைவிலேயே மறைந்து விட்டது! மணிகளும், எக்காளங்களும் தொடர்ந்து இனிமையான ஓசையெழுப்பிக் கொண்டிருந்தபடியால் அவர்களால் உறங்க முடியவில்லை. என்றாலும் நீண்ட நேரம் உறங்கி எழுந்தவர் களைப்போல புத்துணர்வு பெற்றிருந்தார்கள். மோட்சப் பட்டணத்தின் இசை மட்டுமன்றி, அங்கே தெருவில் நடப்பவர்கள் பேசும் குரலும் இவர்களுக்குத் தெளிவாகக் கேட்டது. "ஆகா இன்று அநேக பயணிகள் பட்டணத்திற்கு வந்திருக்கிறார்கள்!" என்று ஒருவன் உற்சாகக் குரல் எழுப்புவான். "இன்று பலரும் ஆற்றைக் கடந்து பொன்மயமான வாசலில் நுழைந்திருக்கிறார்கள்" என்று மற்றொருவன் கூறுவான். "இன்று ஒளிமயமானவர்கள் திரளாக வந்திருக்கிறார்கள். இதன்மூலம்

அநேக பயணிகள் பாதையில் வந்துகொண்டிருக்கிறார்கள் என்று தெரிகிறது. ஏனென்றால் அவர்களை வரவேற்கவும், சோதனைகளைத் தாண்டி வரும் அவர்களை ஆறுதல்படுத்தவுமே இவர்கள் முன்னால் வந்திருக்கிறார்கள்" என்று இன்னுமொருவன் களிப்புடன் கூறுவான்.

இளைப்பாறியபின் எழுந்த பயணிகள் அங்குமிங்கும் உலாவிக்கொண்டிருந்தார்கள். பரலோக தொனிகளைக் கேட்பதில் செவிக்கு இன்பம்! மோட்சலோக மகிமையைக் காண்பதில் கண்ணுக்கு ஆறுதல்! இங்கே அவர்கள் வயிற்றுக்கோ அல்லது உள்ளத்துக்கோ ஊறுவிளைவிக்கக்கூடிய எதையும் கேட்கவில்லை; எதையும் பார்க்கவில்லை; எதையும் உணரவில்லை; எதையும் முகரவில்லை; எதையும் சுவைக்கவில்லை! அவர்கள் இனிமேல் கடக்கவேண்டிய ஆற்று நீரை அள்ளிப் பருகியபோதுதான், அது கசப்பாக இருப்பதுபோல உணர்ந்தார்கள்; ஆனால் உள்ளே சென்றபின் அதுவும் இனிப்பாகவே இருந்தது.

முன்பு பயணமாகச் சென்றவர்களின் பெயர்களும், அவர்களது தீரச் செயல்களும் ஒரு பதிவேட்டில் குறித்து வைக்கப்பட்டிருந்தன.

சிலர் ஆற்றைக் கடந்து செல்லும்போது நீர் தாழ்வாக ஓடுவதற்கும், வேறு சிலர் செல்லும்போது வெள்ளம் கரை புரண்டு ஓடுவதற்கும் காரணம் என்னவென்று இங்கே விவாதிக்கப்பட்டது. சிலர் செல்லும்போது மட்டும் நீர் அநேகமாக வற்றிப்போயிருக்கும்.

இந்தப் பட்டணத்தைச் சேர்ந்த இளம் சிறார்கள் அரசரின் நந்தவனங்களிலிருந்து வண்ண மலர்களைக் கொய்து, அவற்றைச் செண்டாக்கி பயணிகளிடம் கொடுப்பார்கள். இங்கே கற்பூரம், நளதம், மருக்கொழுந்து போன்ற வாசனைப் பொருள்கள் காணப்படுகின்றன. ஐவ்வாது மற்றும் சந்தனம் போன்ற மரங்களும் வளருகின்றன. இந்த வாசனைப் பொருள்களால் பயணிகள் தங்கியிருந்த அறைகள் வாசனையூட்டப்பட்டிருந்தன. அதுமட்டுமன்றி பயணிகள் எப்போது கட்டளை வருமோ அப்போது ஆற்றைத் தாண்டிச் செல்ல ஆயத்தம் பெறும்படி பயணிகளின் சரீரத்தில் வாசனைத் தைலங்கள் பூசப்படும்.

31. கிறிஸ்தீனாள் மோட்சம் சேருதல்

அவர்கள் இவ்வாறு தங்கள் வேளைக்காகக் காத்திருக்கும் போது, மோட்சப் பட்டணத்திலிருந்துக் கடிதம் வந்திருப்பதாக எங்கும் செய்தி பரவியது. கிறிஸ்தியானின் மனைவியாகிய

கிறிஸ்தீனாள் என்பவளுக்குத்தான் கடிதம் வந்திருக்கிறது என்று அனைவரும் அறிந்துகொண்டார்கள்.

கிறிஸ்தீனாளைப்பற்றி விசாரித்துச் சென்ற தபால்காரன் தங்கியிருந்த வீட்டை அடைந்தான். அவளிடம் அந்தக் கடிதத்தைக் கொடுத்தான். "நற்பெண்ணே, நீ வாழ்க! எசமானர் உன்னை அழைக்கிறார் என்ற நல்ல செய்தியை நான் உனக்கு அறிவிக்கிறேன். இன்னும் பத்து நாள்களுக்குள்ளாக நீ அழிவில்லாத அங்கி தரித்தவளாக அவரது பிரசன்னத்தில் நிற்கவேண்டுமென்று எதிர்பார்க்கப்படுகிறது" என்று அந்தக் கடிதத்தில் எழுதப்பட்டிருந்தது.

இந்தக் கடிதத்தை கிறிஸ்தீனாளுக்கு வாசித்துக் காட்டிய அவன் தான் மெய்யான தூதுவன் என்பதற்கும், அவள் துரிதமாகப் புறப்படும்படி அழைக்கவே அனுப்பப்பட்டிருக்கிறான் என்பதற்கும் அடையாளமாக அம்பொன்றை எய்தான். அம்பினால் கூர்மையாக்கப்பட்ட அந்த அம்பு கிறிஸ்தீனாளின் இருதயத்தில் தைத்தது. கடிதத்தில் கண்டபடி பத்து நாள்களுக்குள் அவள் தனது ஆண்டவரைச் சென்றடையும்படி யான வாஞ்சையை அந்த அம்பு அவளுக்குள் படிப்படியாக உருவாக்கிற்று.

தனது வேளை வந்துவிட்டதையும், சேர்ந்து வந்த பயணிகளில் அவளே முதலாகச் செல்லும்படி அழைக்கப் பட்டுள்ளதையும் கிறிஸ்தீனாள் அறிந்தபோது, அவள் தனது வழிகாட்டியாகிய துணிவுள்ளவனை அழைத்து, அனைத்துக் காரியங்களையும் அவனிடம் கூறினாள். இந்தச் செய்தியைக் கேட்கும்போது தான் மிகவும் மகிழ்ச்சியடைவதாகவும், தனக்கு இந்த அழைப்பு வந்திருந்தால் மேலும் அதிகமாக மகிழ்ச்சி யடைந்திருப்பான் என்றும் துணிவுள்ளவன் கூறினான். அவளது பயணத்துக்காக எப்படி ஆயத்தம் செய்வது என்று அவள் அவனிடம் ஆலோசனை கேட்டாள். எப்படியெல்லாம் அவன் ஆயத்தங்களைச் செய்வதென்று அவன் கூறினான். அது மட்டுமன்றி, மற்ற பயணிகள் ஆற்றின் கரைவரை அவளுடன் வருவதாகவும் கூறினான்.

அதன்பிறகு அவள் தனது பிள்ளைகளைத் தன்னருகே அழைத்தாள். அவர்கள் ஒவ்வொருவரையும் ஆசீர்வதித்தாள். அவர்களது நெற்றியிலுள்ள முத்திரைகள் இன்னமும் மங்காமல் இருப்பதற்காகவும், அவர்கள் தங்கள் ஆடைகளை தூய்மையாக வைத்திருப்பதற்காகவும் அவர்களைப் பாராட்டினாள். அவளோடுகூட அவர்களும் மோட்சப் பட்டணத்துக்கு வந்து சேர்ந்தால் நலமாயிருக்கும் என்றும் கூறினாள்.

தன்னிடம் எஞ்சியுள்ள எளிய உடமைகளை ஏழை எளியவர்களுக்கு எழுதிவைத்தாள் கிறிஸ்தீனாள். தனது மகன்களும், மருமகள்மாரும் அவர்களுக்கு அழைப்பு வரும் வேளையில் ஆயத்தமாக இருக்கவேண்டுமென்று எச்சரிக்கை செய்தாள்.

தனது வழிகாட்டியிடமும், பிள்ளைகளிடமும் பேசிய பிறகு, அவள் சத்தியவீரனைத் தன்னருகே அழைத்தாள்.

"ஐயா, நீர் மெய்யான வாஞ்சையுள்ள இருதயத்தைக் கொண்டவர் என்று எல்லா இடங்களிலும் நிரூபித்துள்ளீர். இறுதிவரை நீர் உண்மையுள்ளவராக இருந்தால், எனது அரசர் உமக்கு ஜீவகிரீடத்தைக் கொடுப்பார். எனது பிள்ளைகளைக் கவனித்துக்கொள்ளும்படி நான் உம்மிடம் வேண்டுகிறேன். அவர்கள் சோர்வடைவதைக் கண்டால் சில வார்த்தைகள் ஆறுதலாக அவர்களுடன் பேசும். எனது மருமகள்மார் உண்மையுள்ளவர்களாக இருக்கிறார்கள். அவர்கள் இறுதியில் வாக்குத்தத்தத்தின் நிறைவைக் காண்பார்கள்'' என்றாள் கிறிஸ்தீனாள். நிலைநிற்பவனுக்கு அவள் ஒரு மோதிரத்தைக் கொடுத்தாள்!

பிறகு அவள் நேர்மையானவரை அருகே அழைத்தாள். ''இதோ, கபடற்ற உத்தம இஸ்ரவேலன்'' (யோவான் 1:47) என்றாள் அவள்.

"நீ சீயோன் மலைக்குப் புறப்படும் நாள் பிரகாசமான நாளாக இருப்பதாக! நீ கால் நனையாமல் ஆற்றைக் கடந்து செல்லக்கூடுமானால் நான் மிகவும் மகிழ்ச்சியடைவேன்'' என்றார் நேர்மையானவன்.

"ஆற்றில் வெள்ளம் ஓடுமோ! அல்லது வற்றிவிடுமோ! நான் அதைக் கடந்து செல்லவே வாஞ்சிக்கிறேன். ஏனெனில் கடந்து சென்றபிறகு அமர்ந்து இளைப்பாறவும், நனைந்த ஆடைகளை உலர்த்தவும் போதுமான காலமிருக்கிறது" என்றாள் கிறிஸ்தீனாள்.

அப்போது ஊனன் அவளைப் பார்க்க வந்தான். "இதுவரை நீர் மிகவும் கடினத்துடன்தான் நடந்து வந்தீர். அதனால் இந்த இளைப்பாறும் காலம் உமக்கு இனிமையானதாகவே இருக்கும். ஆனால் விழிப்போடும், ஆயத்தத்தோடும் இரும். ஏனெனில் நீர் நினையாத வேளையில் உமக்கு அழைப்பு வரலாம்" என்றாள் கிறிஸ்தீனாள்.

அதன்பிறகு நம்பிக்கையிழந்தவரும், அவரது மகள் பயந்தவளும் அவளைக் காணவந்தார்கள்.

"நீங்கள் வீண்நம்பிக்கை என்ற அரக்கனின் பிடியிலிருந்தும், சந்தேக கோட்டையிலிருந்தும் காப்பாற்றப்பட்டதை எப்போதுமே நன்றியறிதலுடன் நினைவுகூறவேண்டும். அந்தக் கருணையின் காரணமாகவே நீங்கள் இதுவரை பாதுகாப்புடன் கொண்டுவரப் பட்டுள்ளீர்கள். பயத்தை விரட்டிவிட்டு, விழிப்புள்ளவர்களாக இருங்கள். இறுதிவரை தெளிந்த புத்தியும், நம்பிக்கையும் உள்ளவர்களாக இருங்கள்" என்று அவர்களுக்கு ஆலோசனை கூறினாள் கிறிஸ்தீனாள்.

பிறகு அவள் மென்னெஞ்சனை அழைத்து அவனிடம். "நீ உன் அரசரைக் காணும்படியாகவும், ஜீவ ஒளியில் என்றும் வாசம்பண்ணும்படியாகவும் நன்மைகொல்லி என்ற அரக்கனின் வாயிலிருந்துக் காப்பாற்றப்பட்டிருக்கிறாய். பயப்படுவது மற்றும் அவர் அருளும் நன்மையைக் குறித்து சந்தேகப்படுவது போன்ற பாவங்களிலிருந்து, அவர் உனக்கு அழைப்பு விடுவதற்குமுன்னரே நீ மனந்திரும்ப வேண்டுமென்று நான் விரும்புகிறேன். ஏனெனில் அவர் வரும்போது, இந்தத் தவறுகளுக்காக அவருக்கு முன்னால் வெட்கப்பட்டு நிற்கக்கூடாதல்லவா?" என்று ஆலோசனை கூறினாள்.

கிறிஸ்தீனாள் மோட்சம் செல்லவேண்டிய நாளும் வந்தது. அவள் செல்வதைக் காண அநேகர் சாலை நெடுகிலும் கூடி வந்தார்கள். இதோ, அவளைப் பட்டணத்து வாசலுக்கு அழைத்துச் செல்லும்படி ஆற்றின் மறுகரையில் குதிரைகள் பூட்டிய இரதங்கள் வந்திறங்கியிருந்தன.

ஆற்றின் கரைவரை அவளை வழியனுப்ப வந்த பயணிகளிடம் விடைபெற்று கிறிஸ்தீனாள் ஆற்றில் தால் வைத்தாள்.

"ஆண்டவரே, உம்மோடு இருக்கவும் உம்மைத் துதிக்கவும் இதோ வருகிறேன்" என்பதே அவள் இவ்வுலகில் பேசிய கடைசி வார்த்தை!

கிறிஸ்தீனாளுக்காக மறுகரையில் காத்திருந்தவர்கள், அவர்களது கண்ணுக்கு எட்டாத தொலைவில் அவளைத் தூக்கிக்கொண்டு சென்றுவிட்டபடியால், அவளது மக்களும் மற்றவர்களும் தங்கள் இருப்பிடங்களுக்குத் திரும்பிவந்தார்கள்.

பரலோக பட்டணத்தின் கதவருகே சென்ற கிறிஸ்தீனாள், முன்பு அவளது கணவன் கிறிஸ்தியான் ஏற்றுக்கொள்ளப்பட்டது போல, மகிழ்ச்சி ஆரவாரத்துடன் உள்ளே ஏற்றுக்கொள்ளப் பட்டாள். அவள் சென்றவுடன் அவளது மக்கள் கண்ணீர் வடித்தார்கள். ஆனால் துணிவுள்ளவனும், சத்தியவீரனுமோ

கின்னரங்களையும், வீணைகளையும், வாசித்து ஆண்டவரைத் துதித்தார்கள். இது மக்களுக்கு ஆறுதலைத் தந்தது.

32. மற்றப் பயணிகளின் முடிவு

இது நடந்து சில காலத்துக்குள்ளாக ஊனனைத் தேடி தபால்காரன் வந்தான்.

ஊனனைத் தேடிக் கண்டுபிடித்த தபால்காரன் அவனிடம், "ஐயா, நீர் ஊனமுற்று இருந்தபோதிலும் எவரை நேசித்து அவரைப் பின்பற்றினீரோ அந்த ஆண்டவரின் நாமத்தில் நான் உம்மிடம் வந்துள்ளேன். ஈஸ்டர் திருநாளுக்கு மறுநாளன்று நீர் அவரது இராஜ்யத்தில் அவரோடுகூட போஜனபானம்பண்ண வேண்டுமென்று அவர் எதிர்பார்க்கிறார். எனவே இந்தப் பயணத்துக்காக உம்மை ஆயத்தப்படுத்திக்கொள்ளும்" என்று கூறினான். தான் ஆண்டவரின் தூதுவன் என்பதற்கு அடையாளமாக 'நான் உன் பொற் கிண்ணியை நசுக்கி, உன் வெள்ளிக் கயிற்றைக் கட்டிவிடச் செய்திருக்கிறேன்" என்று கூறி அடையாளச் சின்னத்தை அவனிடம் கொடுத்தான்.

அதன்பிறகு ஊனன் தன் சக பயணிகளை அழைத்து, "எனக்கு அழைப்பு வந்திருக்கிறது. ஆண்டவர் நிச்சயம் உங்களையும் சந்திப்பார்" என்று கூறினான். தனது உயிலைத் தயாரிக்கும்படி அவன் சத்தியவீரனைக் கேட்டுக் கொண்டான். தனது ஊன்றுகோல்களையும், நல் வாழ்த்துக்களையும் தவிர வேறெதுவும் அவனிடம் எஞ்சியிராதபடியால் "இந்த ஊன்றுகோல்களை நான் என் மகனுக்கு விட்டுச் செல்கிறேன். அவனும் என் காலடிச்சுவடுகளைத் தொடருவான். அவன் என்னைவிட சிறப்பாக பயணத்தை முடிக்க வேண்டுமென்று ஆயிரம் நல்வாழ்த்துக்களைக் கூறுகிறேன்" என்றான் அவன். தன்னை அதுவரை அன்போடு வழிநடத்தி வந்ததற்காக அவன் துணிவுள்ளவனுக்கு நன்றி கூறினான்.

ஆற்றின் கரையருகே வந்த அவன், "இனி இந்த ஊன்றுகோல்களின் தேவை எனக்கில்லை. அதோ மறுகரையில் குதிரைகளும், இரதங்களும் எனக்காகக் காத்திருக்கின்றனவே!" என்று கூறி கட்டைகளை எறிந்து விட்டு ஆற்றில் இறங்கினான். "ஜீவனே வா" என்று கூறியபடி அவன் ஆற்றைக் கடந்து மறுகரையை அடைந்தான்.

அடுத்தபடியாக மென்னெஞ்சனுக்கு அழைப்பு வந்தது. அவனது வீட்டின் கதவைத் தட்டியபடி உள்ளே நுழைந்த தபால்காரன் "எனது எசமானருக்கு நீர் தேவைப்படுகிறீர் என்பதைக் கூறவே நான் வந்துள்ளேன். வெகு விரைவிலேயே

நீர் அவரது பிரகாசமான முகத்தைத் தரிசிக்க வேண்டும்" என்று கூறிவிட்டு, இது மெய் என்பதற்கு அடையாளம் "பலகணி வழியாய்ப் பார்க்கிறவைகள் இருண்டுபோகும் *(பிர. 12:3)*" என்றான்.

மென்னெஞ்சன் தன் நண்பர்களை அழைத்து இதைப்பற்றிக் கூறினான். இந்தச் செய்தி உண்மையானது என்பதற்கு அடையாளமாக தூதுவன் கூறிய வசனத்தையும் எடுத்துச் சொன்னான்.

"மற்றவர்களுக்குக் கொடுப்பதற்கு எதுவும் என்னிடம் இல்லாதபடியால் நான் ஏன் உயில் எழுதவேண்டும்? என்னுடைய மென்மையான இருதயத்தை நான் எனக்குப் பின்னால் விட்டுச்செல்கிறேன். ஏனென்றால் நான் போகும் இடத்தில் அதற்குத் தேவையேயில்லை. அது மட்டுமன்றி, பின் வரும் பயணிகளுக்கு அந்த இருதயத்தைக் கொடுப்பதும் நல்லதில்லை. எனவே நான் சென்ற பிறகு, சத்தியவீரனே, நீர் அதைக் குப்பையில் புதைத்துவிட வேண்டுமென்று நான் விரும்புகிறேன்" என்று கூறினான் அவன்.

மென்னெஞ்சன் புறப்படும் வேளை வந்தது. முன் சென்றவர்களைப்போல அவனும் ஆற்றில் இறங்கினான் 'விசுவாசத்திலும் பொறுமையிலும் நிலைத்திருங்கள்' என்ற இறுதி வார்த்தையுடன் அவன் இறங்கி மறுகரைக்குச் சென்றான்.

இவ்வாறு சிலர் சென்று வெகு நாள்களான பின்னர் நம்பிக்கையிழந்தவனுக்கு அழைப்பு வந்தது. தபால்காரன் கொண்டுவந்த செய்தி இதோ: "பயந்து நடுங்கும் மனிதரே, அடுத்த ஓய்வுநாளன்று அரசருடன் இருக்கும்படியான ஆயத்தத்தை நீர் செய்வதற்கான அழைப்பு இது: உனது சந்தேகங்களிலிருந்து நீர் விடுவிக்கப்பட்டுள்ளதற்காக மகிமையில் களிகூறும்படியே நீர் அழைக்கப்பட்டுள்ளீர்" இந்த அழைப்பைக் கொண்டுவந்த தூதுவன் அது மெய்யானது என்பதற்கு அடையாளமாக "வெட்டுக்கிளியும் உனக்கு பாரமாக இருக்கிறது" *(பிர. 12:5)* என்று கூறினான்.

இதைப்பற்றிக் கேள்விப்பட்டவுடன் நம்பிக்கையிழந்தவனின் மகள் பயந்தவள் தானும் அவருடன் செல்ல வேண்டுமென்று கூறினாள்.

நம்பிக்கையிழந்தவன் தன் நண்பர்களிடம், "நானும் எனது மகளும் எப்படிப்பட்ட நிலையில் இருந்தோம் என்றும் உடன் வந்தவர்களுக்கு எவ்வளவு தொல்லை கொடுத்தோம் என்றும் நீங்கள் அறிவீர்கள். நாங்கள் விட்டுச் செல்லும் நம்பிக்கை

யிழப்பையும், பயத்தையும் எந்தப் பயணியும் பெற்றுக் கொள்ளக்கூடாது என்பதே நாங்கள் எழுதும் உயிலாக இருக்கிறது. ஏனென்றால் நாங்கள் சென்றபிறகு அவை வேறு எவரையும் பிடித்துக்கொள்ளலாம். உண்மையைக் கூறப்போனால், நாங்கள் பயணம் புறப்பட்டபோது இந்த இரண்டு பேய்களும் எங்களைப் பிடித்துக் கொண்டன; அதன்பிறகு அவற்றை விரட்டியடிக்க எங்களால் முடியவில்லை. நாங்கள் சென்ற பிறகு அவை மற்ற பயணிகளைப் பிடித்துக்கொள்ளாமல் அவைகளுக்கு உங்கள் கதவை அடைத்துக்கொள்ளுங்கள்" என்று கூறினான்.

அவர்கள் புறப்படும் வேளை வந்தபோது ஆற்றங்கரையை அடைந்தார்கள். "இரவே போ, பகலே வா!" என்பதே நம்பிக்கையிழந்தவன் கூறிய கடைசி வார்த்தையாக இருந்தது. பயந்தவள் பாடியபடியே ஆற்றில் இறங்கினாள். ஆனால் அவளது பாடலின் வரிகளை எவரும் தெளிவாகப் புரிந்து கொள்ள முடியவில்லை.

மேலும் சில காலம் கழித்து, அந்த இடத்துக்கு வந்த தபால்காரன் நேர்மையானவனைத் தேடினான். அவரது வீட்டுக்குச் சென்ற தூதுவன் அவரிடம் இந்த அழைப்பைக் கொடுத்தான்: "இன்றைக்கு ஏழாவது நாள். நீர் நமது ஆண்டவரை அவரது பிதாவானவரின் வீட்டில் தரிசிக்க வேண்டும்." தான் கொண்டுவந்த அழைப்பு உண்மையானது என்பதற்கு அடையாளமாக தூதுவன் "கீதவாத்தியக் கன்னிகைகளெல்லாம் அடங்கிப்போகும் *(பிர. 12:4)*" என்று கூறினான்.

தனது நண்பர்களை அருகே அழைத்த நேர்மையானவன் அவர்களிடம் "நான் மரிக்கப் போகிறேன் என்றாலும் எந்த உயிலும் எழுதப்போவதில்லை. எனது நேர்மையை நான் என்னுடன் எடுத்துச் செல்கிறேன். எனக்குப் பின்வருபவர்களிடம் இதைக் கூறி விடுங்கள்" என்று கூறினார்.

அவர் புறப்படும் வேளை வந்தபோது, ஆற்றங்கரையை அடைந்தார். அப்போது ஆற்று நீர் சில இடங்களில் கரைபுரண்டு ஓடிக்கொண்டிருந்தது. ஆனால் நேர்மையானவன் தன் வாழ்நாளில் ஏற்கெனவே ஆற்றைக் கடக்கும்போது உதவும்படி நல்மனச்சாட்சி என்பவரிடம் வேண்டிக் கொண்டிருந்தார். அந்த வேளையில் அவர் நேர்மையானவனுக்கு உதவியாக வந்து கரம்பிடித்துச் சென்று, அவரை அக்கரையில் சேர்த்தார். "கிருபை ஆட்சி செலுத்துகிறது!" என்ற கடைசி வார்த்தையுடன் அவர் இந்த உலகத்தை விட்டுச் சென்றார்.

இந்த நாளுக்குப் பிறகு ஒரு நாளில் மற்றவர்களைப் போல சத்தியவீரனுக்கும் அழைப்பு வந்திருக்கிறது என்றும், "ஊற்றின் அருகே சால் உடைந்துபோம்" (பிர. 12:6) என்ற வசனம் அடையாளமாகக் கொடுக்கப்பட்டிருக்கிறது என்றும் அந்த இடத்தில் செய்தி பரவியது என்றும் அழைப்பை அறிந்து கொண்ட பிறகு எஞ்சியுள்ள தன் நண்பர்களைக் கூப்பிட்டு அவர்களிடம் அவன் இதைப்பற்றிக் கூறினான்.

"நான் என் பிதாவானவரின் இடத்துக்கு எவ்வளவோ கடினங்களின் மத்தியில் வந்து சேர்ந்திருந்தாலும், இதுவரை நான் பட்ட துன்பங்களுக்காக மனவருத்தம் அடையப் போவதில்லை. நான் இந்தப் பட்டயத்தை விட்டுச் செல்கிறேன். அதைப் பெறுபவன் என் மனத் துணிவையும், என் தீரத்தையும் பெற்றுக்கொள்வான். எனக்கு இப்போது பலன் அளிக்கப் போகிறாரே அவருக்காக நான் சந்தித்த போர்களின் அடையாளங்களையும், தழும்புகளையும் என்னுடன் எடுத்துச் செல்கிறேன்" என்று கூறினான்.

சத்தியவீரன் புறப்பட்டுச் செல்லும் நாள் வந்தபோது அநேகர் அவனுடன் ஆற்றங்கரைக்குச் சென்றார்கள். "மரணமே, உன் கூர் எங்கே?" என்ற வார்த்தைகளுடன் அவன் ஆற்றில் இறங்கினான். ஆழமான பகுதியில் சென்றபோது, "பாதாளமே, உன் ஜெயம் எங்கே? என்று கூறியபடியே ஆற்றின் மறுகரையை அடைந்தான். எக்காளத்தொனியுடன் அவன் வரவேற்கப்பட்டான்.

அதன் பிறகு நிலைநிற்பவனுக்கு அழைப்பு வந்தது. இவன் உறக்கபூமியில் முழங்காற்படியிட்டு ஜெபித்துக் கொண்டிருந்த போது, பயணிகள் அவனைக் கண்ட நிகழ்ச்சி நமது நினைவில் இருக்கிறது அல்லவா?

தனது கையில் அந்தக் கடிதத்தைப் பிரித்துப் பிடித்தபடியே தபால்காரன் வந்தான். நிலைநிற்பவன் தனது வாழ்க்கையில் ஏற்படவிருக்கும் ஒரு மாற்றத்துக்காக தன்னை ஆயத்தப்படுத்திக் கொள்ள வேண்டும் என்றும், இனியும் அவன் தம்மைவிட்டு தூரமாக இருப்பதை அவனது எசமானர் விரும்பவில்லை என்றும் அதில் எழுதப்பட்டிருந்தது. கடிதத்தைப் படித்த நிலைநிற்பவன் திகைத்து நின்றான்.

"ஏனப்பா, நீ இந்தச் செய்தி உண்மையா என்று ஐயம்கொள்ள வேண்டியதில்லை. இதோ இது உண்மை என்பதற்கு அடையாளமாக 'துரவண்டையிலே உருளை நொறுங்கிப் போகும்' (பிர. 12:6) என்ற வசனத்தைக் கூறுகிறேன்" என்றான் தூதுவன்.

நிலைநிற்பவன் வழிகாட்டியாகிய துணிவுள்ளவனை அருகே அழைத்து, “எனது பயணத்தின் அநேக நாள்களில் உம்முடன் இருக்கும் பாக்கியம் எனக்குக் கிடைக்காவிட்டாலும், உம்மை நான் அறிந்த நாள் முதலாக, நீர் எனக்குப் பெரிய உதவியாக இருந்திருக்கிறீர். நான் வீட்டைவிட்டுப் புறப்படும்போது என் மனைவியையும், ஐந்து சிறு குழந்தைகளையும் விட்டுவிட்டு வந்தேன். நீர் மேலும் பல பயணிகளுக்கு வழிகாட்டியாக இருக்கும்படி உமது எசமானரிடம் திரும்பிச் செல்வீர் என்று நான் நம்புகிறேன். நீர் அப்படிச் செல்லும்போது எனது குடும்பத்தாருக்கு எனக்கு நேர்ந்தவைப்பற்றிய செய்திகளை அனுப்புமாறு கேட்டுக்கொள்கிறேன். நான் எவ்வளவு மகிழ்ச்சியோடு இந்த இடத்துக்கு வந்தேன் என்பதையும், இப்போது எவ்வாறு ஆசீர்வதிக்கப்பட்டுள்ளேன் என்பதையும் அவர்களுக்குத் தெரிவியுங்கள். அது மட்டுமன்றி, கிறிஸ்தியானைப் பற்றியும், எவ்வாறு அவன் மனைவி கிறிஸ்தீனாளும் அவன் மக்களும் அவனைப் பின்பற்றி வந்தார்கள் என்றும் கூறுங்கள். அவள் இப்போது எங்கே இருக்கிறாள் என்பது பற்றியும் சொல்லுங்கள். எனது குடும்பத்தாருக்கு அனுப்பிவைக்க என்னிடம் ஒன்றுமில்லை; அவர்களுக்காக ஜெபிக்கவும், கண்ணீர் வடிக்கவும் மட்டுமே என்னால் முடியும். அவர்களும் மனந்திரும்பி, மோட்சப் பயணிகள் ஆவார்கள் என்ற நம்பிக்கை எனக்கு இருக்கிறது” என்று கூறினான்.

நிலைநிற்பவன் இவ்வாறு தனது காரியங்களை ஒழுங்கு படுத்திய பிறகு, அவன் புறப்படும் வேளை வந்தது. அவன் ஆற்றங்கரைக்குச் சென்றான்.

அவன் ஆற்றைக் கடக்கும்போது, வியப்படையும் வண்ணமாக ஆறு அமைதலாக இருந்தது.

பாதி வழியில் ஆற்றின் நடுவே நின்ற அவன் இக்கரையில் காத்துக்கொண்டிருந்த தன் நண்பர்களைப் பார்த்து,

“இந்த ஆறு அநேகரைப் பயமுறுத்தியிருக்கிறது. இதைப்பற்றி நினைக்கும்போதே நான் பயந்து போயிருக்கிறேன். ஆனால் இப்போதோ மிக எளிதாக இதன் நடுவில் நின்று கொண்டிருக்கிறேன். இஸ்ரவேல் மக்கள் இந்த யோர்தான் நதியைக் கடந்துசென்றபோது, உடன்படிக்கைப் பெட்டியைச் சுமந்த ஆசாரியர்கள் கால்பதித்து நின்ற இடத்தில் இப்போது நான் நின்றுகொண்டிருக்கிறேன் (யோசுவா 3:17). இதன் நீர் வாய்க்குக் கசப்பாகவும், வயிற்றுக்குக் குளிர்ச்சியாகவும் இருக்கிறது என்றாலும் நான் எங்கே செல்லப்போகிறேன், அங்கே எனக்கு எத்தகைய மகிழ்ச்சி காத்திருக்கிறது என்பதை

எண்ணும்போது அது என் இருதயத்தில் அனல் மூட்டுகிறது. எனது பயணத்தின் இறுதியில் நான் நிற்கிறேன்; எனது சோதனை நாள்கள் முடிவுற்றன. எனக்காக முள்முடி சூட்டப்பட்ட சிரசையும், துப்பப்பட்ட முகத்தையும் நான் காணப்போகிறேன். இதுவரை விசுவாசத்தினால், கேள்வி ஞானத்தினால் வாழ்ந்து வந்தேன்; இனியோ கண்டு ஜீவிக்கும் இடத்துக்குச் செல்லப் போகிறேன். எனக்கு ஆனந்தத்தை அளிக்கும் அவரது ஐக்கியத்தில் வாழ்வேன். என்னுடைய ஆண்டவரைப் பற்றி நான் கேள்விப்பட்ட சத்தியங்களில் நான் மகிழ்ச்சியடைந்திருந்தேன்; அவருடைய அடிச்சுவட்டில் காலடி வைத்துச் செல்வதைப் பாக்கியமாகக் கருதியிருந்தேன். அவரது திருநாமம் சகல வாசனைகளிலும் மேலான நற்கந்தமாக எனக்கு இருந்தது. அவரது குரல் தேனிலும் இனிய மதுரமாகக் காணப்பட்டது. சூரிய ஒளியை ஒருவன் எவ்வாறு விரும்புகிறானோ அதற்கும் பன்மடங்கு மேலாக அவரது திருச்சாயலை நான் வாஞ்சித்தேன். அவரது வசனங்கள் பசிக்கு உணவாகவும், பிணிக்கு மருந்தாகவும் இருந்தன. அவர் என்னைத் தாங்கினார்; எனது மீறுதல்களிலிருந்து நான் என்னைக் காத்துக்கொண்டேன்; அவரது பாதையில் அவர் எனது நடையை உறுதிப்படுத்தினார்'' என்று துதிகளுடன் கூறினான்.

இப்படி அவன் பேசிக்கொண்டிருக்கும்போதே அவன் முகச்சாயல் வேறுபட்டது. அவரது பலசாலி அவருக்குள் தாழ்ந்தான் *(பிர. 12:3).*

"நான் உம்மிடம் வருகிறேன். என்னை எடுத்துக்கொள்ளும்!" என்று அவன் கூறுகையில் தன் நண்பர்களின் கண்பார்வையிலிருந்து மறைந்தான்.

பயணிகள் ஒருவர்பின் ஒருவராக மோட்ச வாயிலை அடையும்போது, குதிரைகள் பூட்டிய இரதங்களின் காட்சி காண்பவரின் உள்ளத்தைக் கொள்ளை கொள்ளும்! எக்காள இசை தொனிப்பவர்களும், குழலூதுபவர்களும், வீணை மீட்டுபவர்களும், பாடுபவர்களும் அவர்களை வரவேற்று மோட்ச பட்டணத்திற்குள் அவர்களை மகிமையாய் அழைத்துச் செல்வர்.

கிறிஸ்தீனாளுடன் புறப்பட்டு வந்த நான்கு மக்களும், அவர்களது மனைவிமாரும், பிள்ளைகளும் மோட்சப் பட்டணத்தைச் சென்றடையும்வரை நான் அங்கே காத்திருக்கவில்லை. நான் திரும்பி வந்தபோது அவர்கள் இன்னும் உயிர் வாழ்ந்து கொண்டிருக்கிறார்களென்றும் அவ்விடத்தில் திருச்சபை

வளர அவர்கள் காரணமாக இருப்பர் என்றும் ஒருவர் கூறக்கேட்டு மகிழ்ந்தேன்.

மீண்டும் ஒருமுறை அவ்வழியாகச் செல்லும் வாய்ப்பு எனக்குக் கிடைத்தால், இதுவரை சொல்லாமல் விட்டிருப்ப வற்றை அறிய வாஞ்சிப்போருக்கு அவற்றைக் கூறுவேன். அதுவரை, வாசகரிடமிருந்து விடைபெறுகிறேன்.

வாழ்த்துக்கள் !!!

சுவிசேஷ ஊழிய நூல் நிலையம் (ELS) வெளியிட்டுள்ள மிஷனரிகளின் வாழ்க்கை வரலாறுகள், வேத ஆராய்ச்சி நூல்கள், தின தியானங்கள், ஆவிக்குரிய வளர்ச்சிக்கேற்ற நூல்கள், பிரசங்கக் குறிப்புகள் மற்றும் சிறுவர் நூல்கள் அதன் தலைமையகத்திலும் மற்றும் கீழ்காணும் கிளைகளிலும் கிடைக்கும். (முழுவிலைப்பட்டியலைப் பெற்றுக்கொள்ள எழுதுங்கள்)

கிளைகள்

EVANGELICAL LITERATURE SERVICE
69/3, Mookathal Street,
(Next to CSI Missionary Chapel)
Purasawalkam, Chennai-600 007,
Tamil Nadu.
Tel. : 044-2642 2722 / 2661 0888

EVANGELICAL LITERATURE SERVICE
55, Anna Salai, Chennai - 600 002
Tamil Nadu.
Tel. : 044-2851 4403

EVANGELICAL LITERATURE SERVICE
C.M.C. Hospital Compound,
Vellore - 632 004, Tamil Nadu
Tel. : 0416-222 4808, 222 5808

EVANGELICAL LITERATURE SERVICE
Vasavi Complex,
1250, Big Bazaar Street,
Coimbatore - 641 001, Tamil Nadu.
Tel. : 0422-239 0694

EVANGELICAL LITERATURE SERVICE
Jeevan Complex,
84, 100 Feet Road, Gandhipuram,
Coimbatore - 641 012, Tamil Nadu.
Tel.: 0422-249 4434

EVANGELICAL LITERATURE SERVICE
G4, Ground Floor, Ashoka Enclave,
12, Nethaji Road, Frazer Town,
Bangalore - 560 005, Karnataka,
Tel.: 080-2547 3388/2547 8833

EVANGELICAL LITERATURE SERVICE
582, Oil Mill Road, Aravind Nagar,
Bangalore - 560 084, Karnataka,
Tel.: 080-2546 7014

EVANGELICAL LITERATURE SERVICE
694/A, Gokula, 1st Stage, 1st Phase,
HMT Main Road, Mathikere Bus Stop,
Bangalore - 560 054, Karnataka.
Tel.:080-2337 8087

EVANGELICAL LITERATURE SERVICE
Bangalore Baptist Hospital Compound,
Bellary Road, Hebbal,
Bangalore - 560 024, Karnataka.
Tel. : 080-2355 4455

EVANGELICAL LITERATURE SERVICE
Kesavadasapuram, Pattom P.O.,
Trivandrum - 695 004, Kerala.
Tel. : 0471-244 8916

EVANGELICAL LITERATURE SERVICE
Shop No.430-A3, Ascension Square,
Railway Station Road, Collectorate P.O.,
Kottayam - 686 002, Kerala.
Tel. : 0481-230 4790

EVANGELICAL LITERATURE SERVICE
F-II, Dadar Manish Market,
Senapati Bapat Marg, Dadar (W),
Mumbai - 400 028, Maharashtra,
Tel.: 022-2437 9572

EVANGELICAL LITERATURE SERVICE
C.M.C. Hospital Compound,
Ludhiana - 141 008, Punjab,
Tel. : 0161-222 1052

EVANGELICAL LITERATURE SERVICE
7A/4I, W.E.A. Western Chambers,
Channa Market, Karol Bagh,
New Delhi - 110 005.
Tel.: 011-2575 9431

EVANGELICAL LITERATURE SERVICE
CISHR Compound, 4th Mile,
Dimapur - 797 115, Nagaland
Tel.: 03862-243 222

EVANGELICAL LITERATURE SERVICE
New No.35-71/2(Old No.35-73/1), G.K.Colony
(Near Naredmet Cross Road,) Sainikpuri,
Secunderabad-500094, Andhra Pradesh
Tel.: 040-2711 5533

EVANGELICAL LITERATURE SERVICE
No.50-50-32, Church Street,
T.P.T. Colony, (Near Gurudwara),
Visakhapatnam - 530 013, Andhra Pradesh
Tel.: 0891-279 9588

EVANGELICAL LITERATURE SERVICE
PIMS Campus, Ganapathichettikulam, Kalapet,
Pondicherry - 605 014.
Tel. : 0413-265 5330

EVANGELICAL LITERATURE SERVICE
C.S.I. Holy Trinity Church,
Commissioner's Road, Ooty - 643 001,
Tamil Nadu, Tel. : 0423-244 6055

EVANGELICAL LITERATURE SERVICE
Scudder Memorial Hospital Compound,
Ranipet-632 401, Vellore Dt., Tamil Nadu
Tel.: 04172-27 1733

E.mail : <elshq@elsindia.org> Website : www.elsindia.org
Online Store : www.christianbooksindia.com

Pub. No. 309 - TAMIL

பரிசுத்த வேதாகமத்திற்கு அடுத்தபடியாக அதிகப் புகழ் பெற்ற, மிகவும் சிறந்த நூல் 'மோட்சப் பயணம்' ஆகும். தனது மாபெரும் விசுவாசத்திற்காக இப்புத்தக ஆக்கியோன் ஜாண் பனியன் அவர்கள் சிறையில் அடைக்கப்பட்டார். பன்னிரண்டு ஆண்டுகள் கைதியாய் இருந்த அவரின் இதயம், மேய்ப்பனில்லா ஆடுகளாய் அலைந்து திரிந்த மக்களுக்காகவே துடித்துக்கொண்டிருந்தது. அவர் அன்று, தனது அமைதி நேரத்தை அர்த்தமுள்ளதாய் பயன்படுத்த முற்பட்டதால், இன்று இந் நூல் நம் கைகளில் கிடைத்துள்ளது.

தேவனது நேரத்தைத் தேவனுடைய மக்களுக்காகச் செலவிட வேண்டுமென்பதில் ஜாண் பனியன் கருத்தாய் இருந்தார். ஒரு குகையில் தலை சாய்த்து படுத்தவர் தன் அயர்ந்த நித்திரையில் கனவு ஒன்றைக் காண்கின்றார். அக் கனவு நிழலல்ல, நிஜ வாழ்வின் தத்துவம்; நீர்க்குமிழியல்ல, நிலையான வாழ்வின் நிரூபணம். பயணத்தின் துவக்கம் மாயையான கனவு, ஆனால் முடிவோ நிரந்தர வாழ்வான மோட்சம்.

மோட்சத்தை நோக்கி பயணிக்கும் நம் ஒவ்வொருவருடைய வாழ்க்கைக்கும் இந் நூல் வழிகாட்டும் வெளிச்சமாகும். நம்மை, நம் கிறிஸ்தவ வாழ்வில் பலப்படுத்தி, மோட்சப் பாதையில் சீராக வழி நடத்திச் செல்ல இந்த அற்புதமான நூல் நமக்குப் பெரிதும் துணை புரியும்.

PILGRIM'S PROGRESS

JOHN BUNYAN

விலை ரூ. 220.00

DIOCESAN BOOK DEPOT
10190
RS:220/-

ELS INDIA
EVANGELICAL LITERATURE SERVICE
95A, Vepery High Road, Chennai - 600 007.
Tel. 044-25323231, 26420173, 26420743
E-mail: elshq@elsindia.org, Website: www.elsindia.org
Online Store: www.christianbooksindia.com